புறத்திணை வாழ்வியல்

சோ.ந.கந்தசாமி

எட்டாம் உலகத் தமிழ்மாநாடு

பதிப்புச் சுழல்நிதி வெளியீடு

G5281

07E05

.5281

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

புறத்திணை வாழ்வியல்

முனைவர் சோ. ந. கந்தசாமி,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப். மொழியியல், டிப். வடமொழி

பேராசிரியர் & தலைவர்,
இலக்கியத்துறை

..javur

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

1994

ISBN : 81 - 7090 - 223 - [illegible]

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுப் பதிப்புச் சுழல்நிதி எண் : 18

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு எண் : 175

திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை; திசம்பர் 1994

ஆசிரியர் : முனைவர் சோ. ந. கந்தசாமி

நூல் : **புறத்திணை வாழ்வியல்**

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரு. 70/-

அச்சு : மீரா அச்சகம், புதுக்கோட்டை-622 001

பொருளடக்கம்

இயல் எண்		பக்கம்
	அணிந்துரை	
	முன்னுரை	
1.	புறத்திணை இலக்கண நூல்கள்	1—36
	பொருளிலக்கணம்—தனிச்சிறப்பு	1—2
1)	தொல்காப்பியம்—புறத்திணையியல்	2—6
	புறத்திணை மரபு	2—3
	அகமும் புறமும்—இயைபு	3—4
	உணர்த்தியமுறை	4—5
2)	பன்னிருபடலம்	5—23
	ஆசிரியர் பன்னிருவர்	5—6
	புறத்திணையியலும் வெட்சிப்படலமும்	7—9
	பன்னிருபடலத்தின் காலம்	9—12
	பன்னிருபடலத்தின் தாக்கம்	15—15
	பன்னிருபடல நூற்பாக்கள்	15—21
	பன்னிருபடலமும் பன்னிருபாட்டியலும்	21—23

இயல் எண்		பக்கம்
	3) புறப்பொருள் வெண்பாமாலை	23—25
	ஆசிரியர் காலம்	23
	நூலின் அமைப்பு	24—25
	4) யாப்பருங்கல விருத்தி சுட்டும் புறப்பொருள் நூல்கள்	25—36
	5) வீரசோழியம்	26—28
	6) இலக்கண விளக்கம்	28—31
	7) தொன்னூல் விளக்கம்	31—32
	8) சுவாமிநாதம்	32—33
	9) முத்துவீரியம்	33—34
	10) அறுவகை இலக்கணம்	34—36
2.	பொருட்பாகுபாடு	37—49
	பல்வகைப்பாகுபாடு	37
	1) அகப்புறம்	37—39
	2) அகம், அகப்புறம், புறம்	39—42
	3) அகம், அகப்புறம், புறம், புறப்புறம்	42—46
	திணையும் உறுதிப்பொருளும்	46—47
	ஆய்வின் முடிபுகள்	47—49
3.	வெட்சித்திணை	50—68
	1) திணை விளக்கம்	50—51
	2) குறிஞ்சிக்குப்புறம் வெட்சி	51—52

இயல் எண்	பக்கம்

3) வெட்சித்திணைக்குரிய துறைகள்	53—59
கூடுதல் துறைகள்	59—60
ஒப்பாய்வு	
தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்	61—62
தொல்காப்பியமும் வீரசோழியமும்	62—63
தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்	63—64
தொல்காப்பியமும் முத்துவீரியமும்	64—65
தொல்காப்பியமும் சுவாமிநாதமும்	65
ஆய்வின் முடிபுகள்	66—68
4. கரந்தைத்திணை	69—98
தனித்திணையா?	69—70
நூற்பா நுதலும்திணை	70—74
துறைகள்—விளக்கம்	74—81
சங்க இலக்கியத்தில் நடுகல் பற்றிய குறிப்புக்கள்	81—83
சிலம்பில் வெட்சியும் கரந்தையும்	83—86
சிந்தாமணியில் வெட்சியும் கரந்தையும்	86—87
கல்வெட்டுக்களில் வெட்சியும் கரந்தையும்	87—89
ஒப்பாய்வு	90—95
தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்	91—93
தொல்காப்பியமும் வீரசோழியமும்	93—94
தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்	94—95
தொல்காப்பியமும் சுவாமிநாதமும்	95
ஆய்வின் முடிபுகள்	95—98

இயல் எண்		பக்கம்
5.	வஞ்சித்திணை	99—122
1)	திணை விளக்கம்	99—100
2)	முல்லைக்குப்புறம் வஞ்சி	100—101
3)	வஞ்சித்திணைக்குரிய துறைகள்	101—106
4)	ஒப்பாய்வு	106—122
1)	தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்	106—116
2)	தொல்காப்பியமும் வீரசோழியமும்	116—118
3)	பு. வெ. மாலையும் இலக்கண விளக்கமும்	118—119
4)	இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும்	120—121
	ஆய்வின் முடிபுகள்	121—122
6.	காஞ்சித்திணை	122—161
1)	காஞ்சித்திணையின் தேவை	122—124
2)	காஞ்சி—நிலையாமைப்பொருள்	124—127
3)	புறநானூற்றில் காஞ்சி	127—132
4)	சிலப்பதிகாரத்தில் காஞ்சித்திணை	132—134
5)	திவாகரத்தில் காஞ்சித்திணை	134—135
6)	பெருந்திணைக்குப்புறம் காஞ்சி	136—138
7)	பல்வகை நிலையாமை	138—139
8)	வாகைக்குப்பின் காஞ்சி	139—140
9)	பொதுச் சிந்தனை	140
10)	காஞ்சித்திணை—துறை விளக்கம்	140—149

இயல் எண் பக்கம்

11) ஒப்பாய்வு 149—161

அ) தொல்காப்பியமும் பு. வெ. மாலையும் 149—155

ஆ) தொல்காப்பியமும் வீரசோழியமும் 155—158

இ) தொல்காப்பியமும் இலக்கணவிளக்கமும் 158—159

ஈ) இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் 159—160

ஆய்வின் முடிபுகள் 160—161

7. நொச்சியும் உழிஞையும் 162—196

1) திணைவிளக்கம் 162—164

2) மதிலின் மாண்பு 164—167

3) மருதத்தின்புறம் உழிஞை 167—169

4) நொச்சிக்குப்பின் உழிஞை 169—171

5) உழிஞைக்குப்பின் நொச்சி 171

6) நொச்சித்திணை—துறைவிளக்கம் 172—174

7) பு. வெ. மாலையில் கூடுதல் துறைகள் 174—176

8) உழிஞைத்திணை—துறைவிளக்கம் 176—189

9) பு. வெ. மாலையில் மிகுந்த துறைகள் 189—191

10) தொல்காப்பியமும் வீரசோழியமும் 191—193

11) தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் 193—194

12) தொல்காப்பியமும் சுவாமிநாதமும் 194

ஆய்வின் முடிபுகள் 194—196

இயல் எண்		பக்கம்
8.	தும்பைத்திணை	197—213
	1) தும்பை—பொருள்விளக்கம்	197—198
	2) நெய்தலின் புறம் தும்பை	198—200
	3) தும்பைத் திணையின் சிறப்பியல்பு	200
	4) மூவகைத்தும்பை	201
	5) துறைவிளக்கமும் ஒப்பீடும்	201—207
	6) பு. வெ. மாலையில் புதிய துறைகள்	207—209
	7) தொல்காப்பியமும் வீரசோழியமும்	210—211
	8) தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்	211
	9) தொல்காப்பியமும் சுவாமிநாதமும்	211—212
	ஆய்வின் முடிபுகள்	212—213
9)	வாகைத்திணை	214—251
	1) வாகை—பொருள் விளக்கம்	214—215
	2) இருவகை வெற்றி	215—216
	3) பாலையின் புறம் வாகை	216—218
	4) துறைவிளக்கமும் ஒப்பீடும்	219—245
	5) விடுபட்டவை	245
	6) தொல்காப்பியமும் வீரசோழியமும்	246—248
	7) தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்	248—249
	8) தொல்காப்பியமும் சுவாமிநாதமும்	249
	ஆய்வின் முடிபுகள்	249—251

இயல் எண்		பக்கம்
10)	பாடாண்திணை	252—299
	1) பாடாண்—பொருள்விளக்கம்	252—254
	2) கைக்கிளைக்குப்புறம் பாடாண்	254—256
	3) பாடாண்வகை	256—270
	4) கடவுள் வாழ்த்தொடு வருவன	270—275
	5) கொற்றவள்ளை —இருவகை	276—277
	6) பாடாண்திணைத்துறை விளக்கம்	277—293
	7) ஒப்பாய்வு	293—297
	அ) தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்	293—296
	ஆ) தொல்காப்பியமும் பின்னூல்களும்	296—297
	ஆய்வின் முடிபுகள்	297—299
11.	கைக்கிளையும் பெருந்திணையும்	300—328
	1) அகமா? புறமா?	300—301
	2) கைக்கிளை—விளக்கம்	301—302
	3) பெருந்திணை—விளக்கம்	303—305
	4) கைக்கிளை, பெருந்திணைக்குரிய தலைமக்கள்	305—307
	5) பெயர் சுட்டுதல்	307
	6) ஏனைய இயல்களில்	308—309
	7) புறநானூற்றில் கைக்கிளையும் பெருந்திணையும்	309—312
	8) கலித்தொகையில் கைக்கிளை, பெருந்திணை	312—317

இயல் எண்	பக்கம்

9) பரிபாடலில் கைக்கிளையும் பெருந்திணையும் 317—319
கைக்கிளைப்படலம் 319—320
10) பெருந்திணைப்படலம் 320—325
11) வீரசோழியத்தில் 322—32ζ
12) இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் 325—327
ஆய்வின் முடிபுகள் 327—328

12. பொதுவியலும் ஒழிபும் 329—350
பொதுவியல் 329—330
1) தொல்காப்பியமும் பொதுவியலும் 330—333
2) புறநானூறும் பொதுவியலும் 333—335
3) பு. வெ. மாலையும் பொதுவியலும் 335—340
4) பின்னூல்களில் பொதுவியல் 340—344
ஆ) ஒழிபு 344—348
ஆய்வின் முடிபுகள் 348—350
முடிவுரை 351—352
மேற்கோள் நூல்கள் 353—356

முனைவர் ஔவை நடராசன், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி., தஞ்சாவூர்
துணைவேந்தர் நாள் : 14—12—1994

அணிந்துரை

தமிழிலக்கியக் கோட்பாடுகளில் திணைக்கோட்பாடு தனிச் சிறப்பு வாய்ந்தது. படைப்பிலக்கியத்தையும் மக்களின் வாழ்விய லையும் இணைத்துக்காண எண்ணிய தமிழ்ச் சான்றோர்கள் திணைக்கோட்பாட்டினை உருவாக்கினர். திணை என்ற சொல் நிலம், ஒழுக்கம் முதலிய பொருண்மை பயப்பது. நிலவியல் நோக்கில் உலகினை நால்வகையாகப் பகுத்து இவ்வுலகையே நானிலம் என்று அழைத்தனர். அவ்வந்நிலமாந்தரிடம் பயின்ற ஒழுகலாறுகளை அகம், புறம் என்று இருபெரும் பிரிவுகளுக்குள் அடைவுசெய்து இலக்கணம் படைத்தனர். வாழ்வியற் கூறுகள் யாவுமே அகத்திணை புறத்திணை என்ற இரண்டனுள் அமைவன என்பது ஆன்றோர் துணிபு. மாதவச் சிவஞான முனிவர் தொல் காப்பியப் பாயிர விருத்தியில் அகம், புறம் என்ற திணைப்பாகுபாடு வடமொழிக்கட் காணப்படாமையினையும் தமிழ் மொழிக்கே உரிமையாதலையும் ஒப்பாய்ந்து உறுதி செய்திருத்தல் இங்குச் சுட்டத்தக்கது.

இன்பியல் வாழ்வியலை அகம் என்றும் போரியல் பொருளியல் சார்ந்த வாழ்வியலைப் புறம் என்றும் தமிழ் இலக்கணர் கண்டனர். அகம், புறம் என்ற இருபால் கோட்பாடுதான் இந்தியத் திருநாட்டின் மிகத்தொன்மை சான்ற இலக்கிய மரபு. அகத்தினை இன்பம் என்றும் புறத்தினை அறம் பொருள் என்றும் அமைத்துக் கொண்ட முப்பால் அல்லது திரிவருக்கக் கோட்பாடும் அறம், பொருள், இன்பம், வீடு எனக் கண்ட நாற்பால் அல்லது சதுர் வருக்கக் கோட்பாடும் தமிழ்ச் சான்றோர்களாலும் வடமொழி அறிஞர்களாலும் காலப்போக்கில் விரிவுபடுத்திக் கொண்ட நெறி களாகக் கருதற்பாலன.

அகத்திணை பற்றிய ஆய்வுகள் பற்பல எழுந்துள்ளன. எனின், புறத்திணை பற்றிய ஆய்வு சிலவே தோன்றின. இந்நிலையில், ''புறத்திணை வாழ்வியல்'' என்ற பொருண்மை குறித்துத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் சோ. ந. கந்தசாமி அவர்கள் எழுதியுள்ள ஆய்வுநூல் சிறப்பாகச் சுட்டுதற்கு உரியது. தமிழ்ப்புலவர் உலகில் தலைமை சான்ற சிறப்புக்குரியவராக அறிஞர் சோ. ந. கந்தசாமி அவர்களை ஆய்வுலகம் பாராட்டுவதை அனைவரும் நன்கறிவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் மலேயாப் பல்கலைக் கழகத்திலும் பல்லாண்டுகள் தமிழிலக்கிய, இலக்கணங்களை ஆய்வுநோக்கில் மாணாக்கர்க்குக் கற்பித்த பட்டறிவும் பல்துறைப் புலமையும் ஆய்வுத்திறமும் விளங்க உணர்த்தும் ஆற்றலும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பேராசிரியர் அவர்கள் இந்நூலில் பன்னிரண்டு இயல்களில் புறத்திணை பற்றிய ஆய்வினைத் திட்பமும் நுட்பமும் செறிய நிகழ்த்தியுள்ளார்.

தொல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங்கல விருத்தி சுட்டும் புறப்பொருள் நூல்கள், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் முதலிய மூல நூல்களையும் அவற்றின் உரைகளையும் துருவி ஆராய்ந்து தொகுத்த தரவுகளின் அடிப் படையில் இந்நூலாய்வு அமைந்திருத்தல் பாராட்டத்தக்கது. தொல்காப்பியர்க்கு முற்பட்ட புறத்திணை மரபுகள், தொல்காப்பி யர் காலத்தில் வரையறை பெற்ற மரபுகள், சங்க இலக்கியப் புறத்திணை நெறிகள், பன்னிருபடலம் சுட்டும் புதுநெறிகள் ஆகிய வற்றை விரிவாக ஆராய்ந்துள்ளார். பன்னிருபடலத்தின் ஆசிரியர் தொல்காப்பியச் சிந்தனைப் பள்ளியினின்றும் வேறுபட்ட

குழுவிற்கு உரியவர் என்பதும் அவர் சுட்டியுள்ள புதுநெறிகள் மக்கள் வாழ்வியலில் விளைந்த மாற்றங்களைக் கருத்தில் கொண்டு உருவாக்கப் பெற்றவை என்பதும் இந்நூலில் தெளிவுறுத்தப் பெற்றன. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றில் பொதிந்துள்ள புறத்திணை வாழ்வியல் மரபுகள் எவ்வளவில் தொல்காப்பியம் பன்னிருபடலம் ஆகிய இலக்கண நூல்கள் வரையறுத்துக் கூறும் விதிகளுடன் ஒத்தும் உறழ்ந்தும் செல்வன என்னும் பாங்கினை இந்நூல் ஆராய்ந்து உணர்த்துதல் அறியத் தக்கது.

பின்னர்த் தோன்றிய புறத்திணை இலக்கணங்களில் புறப்பொருள் வெண்பா மாலை தலைமை சான்றது. இதனைச் சார்ந்து காலந்தொறும் உருப்பெற்ற வீரசோழியம் முதல் முத்துவீரியம் முடியவுள்ள இலக்கண நூல்கள் தொல்காப்பியம், பன்னிருபடலம் முதலிய பழைய பனுவல்கள் பகர்ந்துள்ள நெறிகளுக்கு ஒப்புதல் அளித்தும், ஒரோ சில இடங்களில் புதுமை கண்டும் மக்கள் வாழ்வியலைச் சொல்லிச் செல்லும் பாங்கினையும் இந்நூல் விரிவாக ஆராய்ந்துள்ளது. ஒவ்வோரியலின் இறுதியிலும் ஆய்வின் விளைவாகக் கண்டறியப் பெற்ற உண்மைகள் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளன. விளக்கவியல், ஒப்பியல் நோக்கில் உருப்பெற்றுள்ள இவ்வாய்வு நூல் தமிழர்தம் புறத்திணை வாழ்வியலை அறிய விழைவார்க்குப் பெரும்பயன் விளைக்கும் என்று நம்புகிறேன். பேராசிரியர் தமக்கே வாய்ந்த புலமைவீறு பொலியும் வண்ணம் படைத்துள்ள இந்நன்னூல் தஞ்சையில் எட்டாம் உலகத்தமிழ் மாநாடு நிகழும் நல்வேளையில் வெளிவருவது தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். இந்நூலினைத் தமிழுலகம் இருகரம் நீட்டி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

(ஒம்)....................

தஞ்சாவூர் (ஔவை நடராசன்)

முன்னுரை

தமிழர்தம் வாழ்வியலை அகம், புறம் என்று இரு பகுதியாகப் பாகுபடுத்திக் கூறுதல் பண்டையோர் கண்ட நெறி. காதல் தொடர்பான ஒழுகலாறுகளை அகம் என்றும், போர் தொடர்பான ஒழுகலாறுகளைப் புறம் என்றும் எண்ணினர். மிகப் பழைய நாகரிக மக்களின் வாழ்வியல் காதல், போர் என்ற இரண்டினையும் மையமாகக் கொண்டு அமைதலை உலக வரலாறு உணர்த்துகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இவ்விருவகை ஒழுகலாறுகளையும் வரையறை செய்து இலக்கணம் வகுத்துச் சான்றோர் நெறிப்படுத்திய உண்மையினை ஆராய்ச்சியாளர் நிலை நாட்டியுள்ளனர். சமுதாய நிகழ்ச்சிகளைக் கவனத்தில் கொண்டு தான் இத்தகைய வாழ்முறைகள் உருப்பெற்றுள்ளன. இவற்றை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு மக்களின் வாழ்வியல் அமைந்தது. அன்றியும், இலக்கியம் படைக்க முற்பட்ட படைப்பாசிரியர் களாகிய பாவலர்களுக்கும் இவை மேல்வரிச்சட்டமாக அமைந்தன. ஒரு புறம் இலக்கியங்களும் மறுபுறம் அவற்றை ஒழுங்குபடுத்தும் இலக்கணங்களும் தமிழில் தொன்றுதொட்டுத் தோன்றி வந்துள்ளன. தொடக்கத்தில் எழுத்து, சொல், பொருள் என்று மூன்றாகவே தமிழிலக்கணம் பாகுபாடு செய்யப்பெற்றது. இவற்றில் முன்னிரண்டும் தமிழ் மொழியின் அமைப்பிற்கும், அழகிற்கும் இலக்கணம் கூறுவன. மூன்றாவது வாழ்நிலை இலக்கணம் உரைப்பது. காலப்போக்கில் அகப்பொருளுக்கென்று தனி இலக்கண நூல்களும், புறப்பொருளுக்கென்று தனி இலக்கண நூல்களும் அறிஞர்களால் எழுதப்பெற்றன. பொருளிலக்கணத்தின் பகுதியாக விளங்கிய அணி அமைப்பும், யாப்பும் தனித்தனிப் பிரிவாக வளர்ச்சி பெற்றன.

புறத்திணை குறித்துப் பல்வேறு மரபுகள் தோன்றின. திணை என்பது ஒழுக்கம். புறத்திணை என்பது புறவொழுக்கங்கள் அனைத்தையும் சுட்டும் ஒரு பொதுக்குறியீடு. ஒத்த வாழ்வியற் கூறுகள் பலவற்றின் தொகுதி திணையாகும். அவற்றில் ஒரு கூறு மட்டும் துறை என்று கூறப்படும். துறையெனினும், நெறியெனினும் ஒன்றேயாகும். இவ்விரண்டையும் ஓர் உவமையின் வாயிலாக விளங்கிக் கொள்ளுதல் எளிது. திணை என்பது பலாப் பழம் எனின், துறை என்பது அதிலுள்ள ஒரு சுளையாகும். திணை துறை ஆகியவற்றை வகுத்துப் புறப்பொருள் வாழ்வியலைத் தெளிவும், வரையறையும் பெறச்செய்த சான்றோர் பலரையும் தொல்காப்பியர் குறித்துள்ளார். அவருக்குப் பின்னர், பல்வேறு இலக்கண அறிஞர்கள் தோன்றிச் சிறிதும் பெரிதுமான மாற்றங் களைச் செய்துள்ளனர். இம்மாற்றங்களினால் அவ்வக் காலங் களில் மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட மறக்கமுடியாத நிகழ்ச்சி கள் பலவற்றை அறிந்துகொள்கிறோம்.

''புறத்திணை வாழ்வியல்'' என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூல் பன்னிரண்டு இயல்களைக் கொண்டது. முதல் இயல் புறத்திணை மரபு, அகத்திற்கும் புறத்ிற்கும் உள்ள இயைபு, புறப்பொருளை உணர்த்திய பல்வேறு இலக்கண நூல்கள், அவற்றிற்கு உரை வகுத்த அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் ஆகியவற்றைக் காலக் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்துள்ளது இரண்டாவது இயல் பல்வகைப் பொருட்பாகுபாடு பற்றிய வரலாற்றையும், பொருளிலக்கணத்திற்கும் உறுதிப்பொருளுக்கும் உள்ள தொடர்பையும் ஆராய்தல் காணலாம். பின்னர் வரும் இயல்களில் வெட்சி முதல் பொதுவியல் முடிய பன்னிரு திணை களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பெற்றுள்ளது. ஒவ்வொரு திணை பற்றிய விளக்கமும், அஃது எந்த அகத்திணைக் குப் புறமாக அமைகிறது என்ற கருத்தும் உரையாசிரியர்களின் வழிநின்று தெளியப்பெற்றுள்ளன. ஒவ்வொரு திணைக்குரிய துறைகள் பற்றிய விளக்கமும், அவை தொல்காப்பியர் காலம் முதல் தோன்றியுள்ள புறத்திணை நூல்களில் எவ்வாறு ஒத்தும் வேறுபட்டும் காணப்படுகின்றன என்ற வரலாறும் விரிவாக ஆராயப் பெற்றுள்ளன. தொல்காப்பிய மரபும், பன்னிருபடல மரபும் காலந்தோறும் எழுந்த புறத்திணை நூல்களில் எந்த அளவில் வழிமொழியப்பெற்றன என்ற விளக்கமும் போதிய அளவு தரப்பெற்றுள்ளது. உரையாசிரியர்கள் வழங்கியுள்ள தெளிவும் நுண்ணிய கருத்துக்களும் சுட்டப் பெற்றுள்ளன. கருத்து வேறுபாடுகள் அலசி ஆராயப்பெற்றுள்ளன.

ஐரோப்பியர் வருகைக்குப்பின்னர் எழுந்தபுறத்திணை நூல்கள் புதிய போர் முறைகளைச் சுட்டாது பழைய காலத்துப் போர் முறைகளையே குறிப்பதால் அவை பழைமை பேணும் பாங்கின என்ற உண்மையும் நம் ஆய்வில் புலனாகிறது. இந்த ஆய்வினால் தமிழ் மக்களின் புறவுலக வாழ்வியல் தெளிவாகப் போதரும். வேறு பல கோணங்களில் வாழ்வியலை ஆராய விழைவார்க்கு இந்நூலில் கொடுக்கப்பெற்றுள்ள கருத்துக்களும், செய்திகளும் உறுதுணையாகவும், ஆவணங்களாகவும் பயன்பெறுதற்குரியன.

இந்நூலிற்கு அணிந்துரை அளித்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மதிப்பிற்குரிய துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்துகிறேன். தனியார்வம் காட்டி இந்நூலினைச் செப்பமுற அச்சிட்டுதவிய புதுக்கோட்டை மீரா அச்சக உரிமையாளர் திருமிகு மீரா சுந்தர் அவர்கட்கும் அச்சகப் பணியாளர்களுக்கும் என் உளம்கனிந்த நன்றி உரியது.

தஞ்சாவூர், சோ. ந. கந்தசாமி

15—12—1994.

---

1. புறத்திணை இலக்கண நூல்கள்

தமிழ்மொழியின் அமைப்பிற்கு விரிவான இலக்கணம் வரையறுத்து வழங்கிய பண்டைத்தமிழ்ச் சான்றோர்கள் மக்கள் வாழ்க்கைக்குரிய இலக்கணத்தையும் தெளிவாகவும் விளக்க மாகவும் வரையறை செய்துள்ளனர், அக்காலத்து மாந்தரின் நடைமுறைகளையும் ஒழுகலாறுகளையும் மையமாகக்கொண்டு பொருள் இலக்கணம் வகுக்கப்பெற்றது. இவற்றை இலக்கியத் திற்குரிய பாடுபொருளாக (Substance) வரையறை செய்த பொழுது நடப்பியல் மட்டுமன்றிப் புனைவியலும் பொருந்த இலக்கணம் செய்தனர். காலப்போக்கில் பல்வேறு மொழிகளைப் பேசுவோரின் குடியேற்றத்தாலும். பண்பாட்டுப் பரிமாற்றத்தாலும் பழக்க வழக்கங்களில் ஒரு சில மாறுபாடுகள் தோன்றுதல் இயல்பு. இவற்றையும் கருத்திற்கொண்டு இலக்கண அமைப்பில் சில புதிய கூறுகள் இடம் பெற்றிருத்தலை இனம் காண்பது இயலும்.

பொருளிலக்கணம்—தனிச்சிறப்பு

தமிழ் மொழியின் கட்டமைப்பினையும் வடமொழியின் கட்டுக்-கோப்பினையும் ஒப்பாய்வு செய்த முதல் அறிஞர் மாதவச் சிவஞான முனிவர் ஆவர். பல நிலைகளில் வட மொழியினின்றும் தமிழ்மொழி தனித்து நிற்கும் தகைமையினைத் தெளிவுறுத்திக் கூறிய சிறப்பும் இவருக்கு உண்டு. தமிழ்மொழிக்குரிய உயர்திணை, அஃறிணை என்ற சொற்பாகுபாடும், அகம், புறம் என்ற பொருட்பாகுபாடும், வெண்பா, ஆசிரியம் முதலிய யாப்புப் பாகுபாடும் இன்னோரன்ன பிறவும் வடமொழியில் காணப்பெற

வில்லை என்பது அவர்தம் ஆராய்ச்சி முடிபு என்பதைத் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் காணலாம். எனவே தமிழ்மக்களின் இன்ப வாழ்க்கையின் இலக்கணமாக அமையும் அகத்திணை மரபுகளும், வீரவாழ்க்கையின் விளக்கமாக அமையும் புறத்திணை மரபுகளும் தமிழ் மொழியில் மட்டுமே வரையறையும் செப்பமும் பொருந்த விரித்துக் கூறப்பெற்றன என்பது அறிஞர் பலர்க்கும் ஒப்பமுடிந்த கருத்தாகும்.

பொருள் இலக்கணத்தின் ஒரு பிரிவாகிய புறத்திணை மரபு களைத் தொகுத்தும் வகுத்தும் கூறக்கூடிய நூல்கள் காலந்தொறும் தோன்றியுள்ளன. இந்த நூல்களைப் பற்றிய அடிப்படையான சில கருத்துக்களை அறிந்துகொள்ளுதல் நாம் மேற்கொள்ள இருக்கும் ஒப்பாய்வுக்குப் பெரிதும் உதவும். முதலில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் புறத்திணை இயலைக் குறித்து ஒரு சில கருத்துக்களைக் காண்பது ஏற்புடையது.

I. தொல்காப்பியம்—புறத்திணையியல்

புறத்திணை மரபு

தமிழ்மொழியின் அமைப்பினையும் மக்கள் வாழ்வியலையும் இலக்கிய இயல்புகளையும் விளக்கும் நோக்கில் உருப்பெற்ற தொல்காப்பியத்தின் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு என்பது அறிஞர் பலரின் முடிபாகும். இந்நூலின் ஆசிரியர் ஆகிய தொல்காப்பியரை ''முந்நூல் கண்டு முறைப்பட எண்ணிப், புலந்தொகுத்தோன்'' என்று பாயிரம் பகர்வதால், ஏனைய இயல்களைப் போலவே புறப்பொருள் பற்றிய இயலை எழுதும் பொழுதும் ஆசிரியர் தமக்கு முற்பட்ட நூல்களில் குறிக்கப்பெற்ற கருத்துக்களைப் போதிய அளவு பயின்று, எடுத்தாண்டனர் என்று கருதலாம். இவ்வியலில் உள்ள 30 நூற்பாக்களில் 11 இடங்களில் முந்துநூலாசிரியர்களைக் குறித்துள்ளார். அப்பகுதிகளை இங்குச் சுட்டுதல் தகும்.

1) உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப. (நூ. 8)

2) ... ... வகைநான் மூன்றே துறையென மொழிப (நூ. 11)

3) தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்கும் சிறப்பிற் றென்ப (நூ. 12)

4) வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப. (நூ. 15)

5) ... ... தொகைநிலை பெற்றது என்மனார் புலவர் (நூ. 16)

6) காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் (நூ. 23)

7) ... ... ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப (நூ. 21)

8) ... . முன்னோர் கூறிய குறிப்பினும் (நூ. 22)

9) ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப (நூ. 25)

10) மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே (நூ. 26)

11) ... ... தொக்க நான்கும் உளவென மொழிப (நூ. 29)

இங்குக் காட்டப்பெற்ற பகுதிகளில், 'என்ப', 'மொழிப', 'என்மனார்' புலவர்' என்றுவரும் சொற்கள் ஆசிரியர்க்கு முற்பட்டவர்களையும் சமகாலத்தவர்களையும் குறிப்பன. எனின், ''முன்னோர் கூறிய குறிப்பினும்'' என்ற பகுதி இவருக்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட புறத்திணை இலக்கண ஆசிரியர் களையும் அறிஞர்களையும் சுட்டுதல் தெளிவு. இங்ஙனம் கூறும் மரபினை யாப்பருங்கலவிருத்தி உரையாசிரியர் தொல்புலவர், தொன்னூற் கவிஞர், தொல்லாசிரியர் என்று சுட்டும் மரபுடன் இணைத்துப் பார்த்தல் வேண்டும். இலக்கணம் கூறும் வகையில் நெடுங்காலமாக ஒப்புக்கொள்ளப்பெற்றுவரும் மரபுகளை மாற்ற மின்றிப் பேணிக்காக்கும் போக்கினை இத்தகைய தொடர்கள் காட்டுகின்றன. காலத்திற்கு ஏற்பப் புதுவன சேர்த்தலும் இலக்கண ஆசிரியர்கள் இயல்பு.

அகமும் புறமும்—இயைபு

தொல்காப்பியர் அகத்திணை மரபுகளை உணர்ந்தவர்கள்தாம் புறத்திணை மரபுகளைத் திறம்படக் கூற முடியும் என்ற

குறிப்பினை இவ்வியலின் தொடக்க நூற்பாவில் சுட்டியுள்ளார். அகத்திணையினை ஏழென்று வகுத்ததற்கு ஏற்பப் புறத்திணையும் ஏழென்று வகுத்துக் கூறும் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தவர் தொல்காப்பியர். முன்னதை ஐந்தென்றும், பின்னதைப் பன்னிரண்டென்றும் கூறும் குழுவினின்றும் இவர் வேறுபட்டவர் என்பதை இந்த முதல் நூற்பாவின் தொடக்கமே காட்டிவிடுகிறது. அகம், புறம் ஆகிய இரண்டிற்கும் ஒரு தொடர்பினையும் இயைபினையும் காண்பவர் இவர்.

வெட்சி முதல் பாடாண் ஈறாகக் கூறப்பெறும் புறத்திணைகள் ஏழும், குறிஞ்சி முதல் கைக்கிளைவரை எண்ணப்பெறும் அகத்திணை ஏழற்கும் புறமாகக் கொள்ளப்பெறுதல் வேண்டும் என்பதைத் தம் கருத்தாகவே ஆசிரியர் கூறியிருக்கிறார்.

உணர்த்திய முறை

ஒவ்வொரு திணைக்குரிய இலக்கணத்தையும் இவர் கூறும் முறை தனிச் சிறப்பு வாய்ந்தது. முதலில் இன்னதற்கு இது புறம் என்று குறிப்பார். பின்னர், அத்திணைக்குரிய பொருளை விளக்குவார் (Definition). பிறகுதான், அத்திணைக்குரிய துறைகளை வகுத்தும் தொகுத்தும் வழங்குவார். துறைத்தொகை கூறும் நூற்பாக்களைச் சார்ந்து விடுபட்ட துறைகள் ஒன்றிரண் டினைத் தனியே எடுத்துக் கூறும் நூற்பாக்களை அமைப்பார். இந்த உதிரி நூற்பாக்கள் தொடர்புடைய எந்தவொரு கருத்தும் விடுபடக் கூடாது என்ற நோக்கில் எழுதப்பட்டவை எனலாம். துறையினை அடையின்றி வரும் சொல்லாலும் குறிப்பார்; இங்ஙனம் கூறுதல் சிறுபான்மை. அந்தத் துறையினை விளக்கும் வகையில் அடையுடன் கூடிய தொடர்களினாலும் சுட்டுவார்; இங்ஙனம் கூறுதல் பெரும்பான்மை. முதல்வகைக்கு ஊர்கொலை, ஆகோள், பூசல் மாற்று என்பனவற்றைக் குறிக்கலாம். இரண்டாம் வகைக்கு, மறங்கடைக் கூட்டிய குடிநிலை, மாபெருந் தானையர் மலைந்தபூ, வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமை எனவரும் துறைகளைக் கூறலாம்.

ஒவ்வொரு திணையும் இவ்வளவு துறைகளை உடையது என்று எண்ணிக்கூறும் இயல்பும் தொல்காப்பியரிடம் காணப்படும். பெரும்பாலும் கவிதையைப் படிப்பதுபோலவே அவர்தம் நூற்பாக்கள் அமைந்துள்ளன.

புறத்திணை இயலுக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய அறிஞர் பெருமக்கள் எழுதிய உரை திணை, துறைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதற்குப் பெரிதும் உதவும். இருவரும் எடுத்துக்காட்டும் இலக்கிய மேற்கோள்கள் புறப்பொருள் மரபு இலக்கண அளவில் நில்லாது, சமுதாய அங்கீகாரம் பெற்று இலக்கியத்திலும் இடம் பெற்றன என்ற உண்மையினை உணர்த்துவன. புறத்திணை இலக்கணம் கூறும் வகையில் தொல்காப்பியத்திற்கு முரண்பட்டெழுந்த கருத்துக்களையும் அவற்றின் பொருத்தம் இன்மையினையும் சுட்டிக்காட்டும் வகையில் உரையாசிரியர் இருவரும் கருத்து ஒத்தவர்கள். எனின் பன்னிருபடலத்தின் வழிவந்த புறப்பொருள் வெண்பாமாலை கூறிய வெண்பாக்களைக் கூடுதலாக எடுத்துக் காட்டும் போக்கினை இளம்பூரணரிடம் காண்கிறோம். இவர் காலத்தில் இந்த நூல் மிகுதியாகப் பயிலப்பெற்றது என்பதற்கும், தரமான புறப்பொருள் நூல் என்ற மதிப்பினைப் பெற்றது என்பதற்கும் இவர் எடுத்தாண்டிருப்பது ஒன்றே சான்றாக அமையும். பெரும் பொருள் விளக்கம், தகடூர் யாத்திரை போன்ற நூல்களைக் கூடுதலாக எடுத்தாளும் நச்சினார்க்கினியர்கூட ஒரு சில இடங் களில் பு. வெ. மா பாடல்களைப் பயின்றிருத்தல் நம் கருத்திற்கு அரணாகிறது. புறநானூறு பதிற்றுப்பத்து ஆகிய சங்கப் பாடல் களையும் சிலப்பதிகாரதததையும் இருவரும் மேற்கோள் காட்டி விளக்குதல் ஒரு பொதுப்பண்பாகும்.

இதுகாறும் கிடைத்துள்ள புறப்பொருள் பற்றிய முழுமையான இலக்கண நூல்களில் தொல்காப்பியரின் புறத்திணையியல் முதலில் குறிப்பிடத்தக்கது. இதற்கு நிகராக எண்ணப்பெறும் பன்னிரு படலம் என்ற நூல் மறைந்துவிட்டிருப்பினும், இந்நூலிற்குரிய ஒரு சில நூற்பாக்கள் உரைமேற்கோளாக ஆளப்பெற்றுள்ளன. அன்றியும் இந்நூலிற்குரியனவாக ஒரு சில கருத்துக்கள் உரைகளில் சுட்டப்பெற்றன. அவற்றை ஆராய்ந்தால் புறப் பொருள் நூல் வரிசையில் பன்னிருபடலத்தின் நிலையினை ஒருவாறு உணர்ந்துகொள்ளக்கூடும்.

பன்னிருபடலம்

புறத்திணை இலக்கணம் கூறுவதற்கென்றே தோன்றிய தனி நூல்களில் பன்னிருபடலம் பழமை மிக்கது. இந்நூலில் ஒவ்வொரு இயலும் ஒவ்வொரு திணைக்கு இலக்கணம் கூறுவது. தொல்காப்பியர் புறத்திணையினை ஏழாக எண்ணியவர். எனினும்

பன்னிருபடலத்தார் பன்னிரு திணைகளாகப் புறப்பொருளை வகுத்து இலக்கணம் கூறியுள்ளார். பன்னிருபடலம் மறைந்து போய்விடினும், அதனை முதநூலாகக் கொண்டு கி. பி. 8 ஆம் நூற்றாண்டளவில் ஐயனாரிதனார் என்பவரால் எழுதப்பெற்ற புறப்பொருள் வெண்பாமாலையும் அதன் பாயிரமும் அந்நூலைப் பற்றிய செய்திகளை அறிவதற்கு ஆதாரமாக உள்ளன. அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரால் பாடப்பெற்றது பன்னிருபடலம் என்பது பு. வெ. மா. பாயிரம் வழங்கும் செய்தியாகும். இப்பன்னிருவர் பெயர்களும் வருமாறு:

1)	தொல்காப்பியர்	7)	பனம்பாரன்
2)	அதங்கோட்டாசான்	8)	கழாரம்பன்
3)	துராலிங்கன்	9)	அவிநயன்
4)	செம்பூட்சேஎய்	10)	காக்கைபாடினி
5)	வையார்பிகன்	11)	நத்தத்தன்
6)	வாய்ப்பியன்	12)	வாமனன்

இவர்கள் முறையே வெட்சித்திணை முதலாகப் பெருந்திணை முடிய ஆளுக்கொரு திணையாகப் பன்னிரு திணைகளுக்கு இலக்கணம் வகுத்தனர். இவர்களால் பாடப்பெற்ற இலக்கணத் தொகைநூலே பன்னிருபடலம் என்பர்.

சிலப்பதிகார உரைப்பாயிரத்தினால் இசை நுணுக்கம் என்ற நூலினை யாத்த சிகண்டி என்பவரும் அகத்தியர் மாணாக்கர் என்பது புலனாகும். முற்சுட்டப்பெற்ற பன்னிருவருள் ஒருவரின் மாற்றுப்பெயரினராக இவரை மதிக்கலாம். இவருள் துராலிங்கன், வையாபிகன், கழாரம்பன், வாமனன் என்பார் செய்த நூல்களோ, நூற்பாக்களோ அறியப்படவில்லை. எஞ்சிய எண்மருள் அதங்கோட்டாசான், பனம்பாரன் என்போர் தொல்காப்பியரின் ஒருசாலைத் தோழர்கள் என்பது தொல்காப்பியப் பாயிரத்தினால் அறியப்படுகிறது. ஆயினும், இப்பட்டியலில் காணப்பெறும் அவிநயன், காக்கைபாடினி, நத்தத்தன் என்போர் தொல்காப்பியர்க்கு மிகவும் பிற்பட்ட காலத்தவர் என்பது அவர்தம் யாப்பியல் நூற்பாக்களை ஒப்பிட்டாராய்வார்க்குப் புலனாகும். ஆகவே, முதலிற் சுட்டப்பெறும் தொல்காப்பியர், அதங்கோட்டாசான், பனம்பாரன் என்போரும் பழைய தொல்காப்பியர் காலத்தவர் அல்லர் என்பதும், அவர்க்கு மிகவும் பிந்திய காலத்தவர் என்பதும்

உய்த்துணரப்படும். தொல்காப்பிய அகத்தியம் உடையார் என்ற ஆசிரியர் ஒருவரையும் யாப்பருங்கலவிருத்தி உரை குறிப்பிடுகிறது இவர் வாகை, பாடாண். பொதுவியல் ஆகிய மூன்று திணைகளையும் புறப்புறம் என்று பாகுபாடு செய்தவர் (யா. வி. ப. 571). இக்கருத்து தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை; பன்னிருபடல மரபாகக் காணப்படுகிறது. எனவே இவர் தொல்காப்பியரின் வேறானவர். ஆதலின், தொல்காப்பியர்க்குப் பின்னர் அகத்தியர் என்ற பெயரில் இலக்கணப் புலவர் ஒருவர் இருந்திருக்கக்கூடும். இவர் சங்கம் மருவிய காலத்தவராதல் வேண்டும். இவர் மாணாக்கரே முன்பு கூறப்பெற்ற பன்னிருவரும் ஆவர். அவருள் தலைமை சான்றவரைத் தொல்காப்பியர் என்று வைத்துக் கொண்டால் குழப்பம் குறையும், தீரும். இந்த இரண்டாம் தொல்காப்பியர்தான் பன்னிருபடலத்தின் முதற்பகுதியாகிய வெட்சிப்படலத்தின் ஆசிரியராதல் வேண்டும். இப்படலக் கருத்திற்கும் தொல்காப்பியப் புறத்திணையியல் கருத்திற்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை முதன் முதல் தெளிவாக இனம்கண்டு விளங்க உணர்த்திய பெருமை இளம்பூரணருக்கு உண்டு. அவற்றைப் பின்வருமாறு உறழ்ந்து காட்டலாம்.

புறத்திணையியல் (தொல்காப்பியம்)	வெட்சிப்படலம் (பன்னிருபடலம்)
1) புறத்திணை வெட்சி முதல் பாடாண் வரை எழுவகைப்படும்	1) புறத்திணை வெட்சி முதல் பெருந்திணை முடியப் பன்னிரு வகைப்படும்
(தொல். பொருள். இளம். ப. 73)	
2) புறம் எனப்படுவது அறம் குறித்துவரும்	2) புறம் எனப்படுவது பொருள் குறித்து வரும் ("3.ப. 7.")
3) வேந்துறு தொழிலாக வெட்சிப்போர் நிகழும்	3) தன்னுறு தொழிலாகவும் நிகழும் (ப. 75)
4) காஞ்சித்திணை நிலையாமை குறித்துவரும்	4) எதிரூன்றிப் பொருதல் காஞ்சி (ப. 103)
5) புண்ணொடு வருதல் எனும்துறை கூறப்படவில்லை	5) கரந்தைக்கண் புண்ணொடு வருதல் எனும் துறை உண்டு (ப. 87)

இவற்றைச் சரிபார்க்க இன்று பன்னிருபடலம் முழுப்பனுவலாக நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், இதனை முதனூலாகக் கொண்டு இயற்றப்பெற்ற புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைகள் பன்னிரண்டினையும் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்று வரிசைப்படுத்திக் கூறுதல் மேற்சுட்டிய முதற்கருத்தின் பொருத்தத்தினை உறுதிப்படுத்துகிறது. தொல்காப்பியர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்று வரிசைப்படுத்தியவர் என்பதும் காணத்தக்கது.

பொதுவாகப் பழைய உரையாசிரியர்களிடையே பெயரொப்புமை கொண்டு இருவேறு ஆசிரியர்களையும் ஒருவராகக் கருதும் போக்கு காணப்பெற்றது. எனினும், சிலர் இப்போக்கிற்கு விலக்காகக் காணப்பட்டனர். புறத்திணையியலின் ஆசிரியராகிய தொல்காப்பியரையும் வெட்சிப்படலத்தின் ஆசிரியராகிய தொல்காப்பியரையும் ஒருவராக எண்ணிய காரணத்தினால்தான்,

> ''பன்னிரு படலத்தின் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினார் என்றால் பொருந்தாது''. (ப. 75)

என்று இளம்பூரணர் ஆராய்ச்சி உணர்வுடன் துணிந்து எழுதியிருத்தல் பாராட்டத்தக்கது. இவ்வாறே காக்கைபாடினியார் என்ற பெயரில் இருவர் இருந்தனர் என்பதும் எண்ணற்பாலது. தொல்காப்பியரின் சம காலத்தவரான காக்கைப்பாடினியார் அவரைப்போலவே தளையினைச் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாகக் கருதவில்லை. அவர்க்குக் காலத்தால் பிற்பட்ட (இளையரான) காக்கைபாடினியாரே அதனை ஓர் உறுப்பாகக் கொண்டவர் என்பது பேராசிரியரின் செய்யுளியல் உரையினால் உணரலாம்.

எனவே, தொல்காப்பியரின் புறத்திணை மரபு தொன்மை மிக்கது என்பதும், பன்னிரு படலம் சுட்டும் இலக்கண மரபு பிற்பட்டது என்பதும் தெளிதற்குரியன.

இனி, பன்னிருபடலம் எக்காலத்தில் எழுதப்பட்டது என்பதைப் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

பன்னிருப்படலத்தின் காலம்

பன்னிருபடலத்தின் ஆசிரியர்கள் சங்ககாலத்தினர் அல்லர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. பன்னிருவருள் செப்பூட்சேஎய் என்பவர் இயற்றிய கூற்றியல் என்ற நூலினை இறையனார் களவியலுரை சுட்டுகிறது (நூ. 56). இந்நூல் புறப்பொருள் பற்றியதாகத் தெரியவில்லை. அவிநயன், காக்கைபாடினி(யார்), நத்தத்தன் என்போரின் நூற்பாக்கள் யா. வி. உரையில் மேற் கோளாக எடுத்தாளப் பெறுகின்றன. இவர்கள் பெரும்பாலும் யாப்பிலக்கணமே செய்தவர்கள். வாய்ப்பியனார் என்பவர் பாக்களுக்கும் பாவினத்திற்கும் நால்வகை வருணம் கூறியவர் (யா. வி. ப. 219, 358). தொல்காப்பியர் காலத்தில் பாவினம் தோன்றவில்லை; பாக்களுக்குச்சாதி கூறும் பழக்கமும் எழவில்லை வாய்ப்பினார் தோதிறம், பஞ்சுரம், சாதாரி, பியந்தை முதலிய தேவார காலத்துப்பண்களைக் குறித்துள்ளார் (யா. வி. பா. 567). இவர் கூடுதலாகப் பொருள் இலக்கணமும் செய்திருக்கலாம்.

யா. விருத்தி,

''மதுவிரி வாகையும் பாடாண் பாட்டும்
பொதுவியற் படலமும் புறமா கும்மே.''

என்ற வாய்ப்பியனார் நூற்பாவினை மேற்கோள் காட்டியது. எனின், பன்னிருபடலத்துள் எந்தத்திணைக்குரிய படலத்தை இவர் பாடினார் என்று தெரியவில்லை. அவிநயனார், காக்கை பாடினியார், நத்தத்தனார் என்பாரும் பாவினங்களுக்கு இலக் கணம் கூறியிருப்பதால் இவர்கள் தொல்காப்பிய ஆசிரியர்க்குச் சமகாலத்தவர் அல்லர் என்பது தெளிவு. பிற்காலத்தவர்களாகிய இவர்களே புறத்திணைக்குரிய படலங்களையும் பாடினராதல் கூடும்.

கி. பி. 10, 11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் பன்னிருபடலத்தையும், இதன்வழித தோன்றிய புறப்பொருள் வெண்பா மாலையினையும் சுட்டியுள்ளார்

''...இவை ஆமாறு. வெண்பா மாலையுள்ளும் பன்னிருபடலத் துள்ளும் காண்க'' (யா. வி. ப. 571).

இதனுள் காலமுறைப்படி இந்த நூல்கள் சுட்டப்பெறவில்லை. பன்னிருபடலமே வெண்பா மாலைக்கு முதல்நூல் ஆகும். இதனை,

''மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட
வாங்குவில் தடக்கை வானவர் மருமான்
ஐய னாரிதன் அகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க
வெண்பா மாலை எனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையின் தெரிந்தே ''

எனவரும் பு. வெ. மா. பாயிரம் தெளிவுறுத்துகிறது. ஐயனாரி தனார் காலம் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு என்பது தமிழிலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் கருத்தாகும். இதே காலத்தில் எழுத்துருப் பெற்ற இறையனார் களவியல் உரை,

''அளவாற் பெயர் பெற்றது பன்னிருபடலம்''

என்று சுட்டுவதால், கி. பி. 8ஆம் நூற்றாண்டிற்கும் பன்னிருபடலம் முற்பட்டது என்பது புலனாகும்.

புறத்திணை ஒழுகலாறுகளில் நிரைமீட்டலாகிய கரந்தை யினையும், எயில் காத்தலாகிய நொச்சியினையும் தொல்காப்பியர் தனித்தனித் திணைகளாகக் கருதவில்லை. இவற்றை முறையே வெட்சியிலும் உழிஞையிலும் அடக்கி இலக்கணம் ஓதினார். எனின், சங்க இலக்கியமாகிய புறநானூறு தொகுக்கப்பெற்ற காலத்தில் வெட்சி, உழிஞை ஆகியவற்றின் வேறுபட்டனவாகக் கரந்தைத் திணையும் நொச்சித்திணையும் எண்ணப்பட்டன. புறப்பொருள் செய்திகளை விரித்துப்பாடும் இப்பழைய இலக்கியத்தில் 259, 260, 261, 263-5, 270, 286, 287, 290-1, 298 ஆகிய பாடல்கள் கரந்தைத்திணைக்கு உரியுவை என்றும்; 109, 110, 111, 271, 299 முதலிய பாடல்கள் நொச்சித் திணைக்கு உரியவை என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. உழிஞை பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன.

இவ்வாறே நக்கண்ணையாரின் கைக்கிளையும், பேகனின் பெருந்திணையும், பொதுவியல் திணையும் கொண்ட பாடல்களைப் புறநானூற்றில் பார்க்கிறோம். சுருங்கக் கூறின் புறப்பொருளுக்குரியவாகப் பன்னிருபடலம் கூறும் திணைகள் அனைத்திற்கும் உரிய பாடல்களின் தொகுதியாகப் புறநானூறு திகழ்கிறது எனலாம். புறநானூற்றின் பழைய உரையாசிரியர், பு. வெ. மாலையினை ஆதாரமாகக் கொண்டுதான் திணை, துறைகளுக்கு விளக்கம் கூறியிருப்பதால், இவர் காலத்திலேயே பன்னிருபடலம் மறைந்து போயிற்றுப் போலும். எவ்வாறாயினும், புறநானூற்றுப் புலவர்கள் கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பு. வெ. மாலையினைப் பின்பற்றிப் பாடியிருத்தல் இயலாது என்பது தெளிவு. ஆகவே, அவர்கள் இந்நூலிற்கு முதனூலாகிய பன்னிருபடலத்தையே மேல்வரிச் சட்டமாகக் கொண்டு பாடியிருத்தல் கூடும். அங்ஙனம் கொள்ளின், பன்னிருபடலம் தொல்காப்பியத்திற்குப் பின்னரும், புறநானூற்றுக்கு முன்னரும் பாடப்பெற்றிருத்தல் வேண்டும். அல்லாக்கால், புறநானூற்றுப் பாடல்களைப் பயின்றவர், அதனுள் காணப்படும் புதிய புறப்பொருள் மரபுகளைத் தொகை வகை செய்து பன்னிருபடலத்தை எழுதியிருத்தல் வேண்டும். ஆகலின், கி. பி. 3 ஆம் நூற்றாண்டளவில் பன்னிருபடலம் தோன்றியிருத்தல் கூடும்.

சங்கம் மருவிய இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தில் சுட்டப்பெறும் புறப்பொருள் மரபுகள் பலவும் பன்னிருபடலத்திற்கும் உரியவையாகக் கொள்ளத்தக்கவை. சான்றாக ஒன்றிரண்டினைக் கூறலாம். மன்னுறு தொழிலேயன்றித் தன்னுறு தொழிலையும் வெட்சித்திணைக்கு உரியதாகப் பன்னிரு படலம் பகரும். வேட்டுவர்கள் ஆநிரைகளைக் கவர்தலைக் குறித்தலின், இளங்கோவடிகட்குத் தன்னுறு தொழில் உடன்பாடே எனலாம். பன்னிருபடலம் வஞ்சித்திணைக்கு மறுதலையாக எதிரூன்றுதலாகிய காஞ்சித் திணையினைச் சுட்டியது. இக்கருத்து சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்திலும் இடம்பெற்றது. இப்பொதுமைகளிலிருந்து பின்வரும் வினாக்கள் எழுகின்றன:

1) பன்னிருபடலத்தைப் படித்து இளங்கோவடிகள் புறப்பொருள் மரபுகளைப் பாடினாரா?

2) சிலப்பதிகாரத்தில் பொதிந்துள்ள புறப்பொருள் மரபுகளைக் கவனமாகத் தொகுத்துப் பன்னிருபடல ஆசிரியர் இலக்கணம் செய்தாரா?

இக்கேள்விகட்குத் திட்டவட்டமாக விடை கூறுதல் இயலாது. ஆதலின், பன்னிருபடலம் புறநானூற்றிற்கும் சிலப்பதிகாரத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். அல்லது, இவ்விருபெரும் இலக்கியங்கட்கும் பின்னர் எழுந்திருத்தலும் கூடும். பன்னிருபடலத்தின் காலம் கி. பி. 300—600 என்று ஒருவாறு அனுமானிக்கலாம்.

உரையாசிரியர்கள் பலரும் பன்னிருபடலத்தை ஒரு பிரமாண நூலாக ஒப்புக்கொண்டு மேற்கோள் காட்டியிருப்பதால் அதன் அருமையும் பெருமையும் அறியப்படும்.

பன்னிருபடலத்தின் தாக்கம்

பன்னிருபடலத்தின் வெட்சிப்படலத்தைத் தொல்காப்பியர் இயற்றவில்லை என்ற கருத்துடைய இளம்பூரணர், பன்னிரு படலத்தை நன்கு கற்றவர் என்பதும், ஏற்புழி இந்நூலின் கருத்துக் களை எடுத்தாண்டவர் என்பதும் ஆராய்ச்சியினாற் புலனாகிறது. ஒரு சில இடங்களைக் காண்போம்.

ஒவ்வொரு திணைக்குரிய துறைகளை விரித்துக் கூறும் பகுதியைப் படலம் என்ற பெயரினால் சுட்டுதல் பன்னிருபடலம் தோன்றிய பின்னர் எழுந்த இலக்கண மரபாகும். உழிஞைத் திணைக்குரிய நூற்பாவைச் சுட்டுமிடத்து இளம்பூரணர்,

''இஃது உழிஞைப் படலத்துக் கூறப்பட்டதாயினும்
மண்ணுநீராடுதலின் இதற்கும் துறையாயிற்று'' (ப. 151)

என்று குறிப்பிடுதல் இம்மரபினைப் பின்பற்றியே எனலாம்.

வாகைத்திணை உணர்த்தும் நூற்பாவில், ''மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்தேயமும்'' என்ற பகுதியில் சுட்டப் பெறும் அறிவன் தேயமும் பன்னிருபடலம் சுட்டும் கணிவன் முல்லையும் ஒன்றையே குறிப்பன என்றார். அறிவன் என்றது கணியனை என்றும் தெளிந்தார் இளம்பூரணர் (ப. 114). இவர் கருத்து பொருத்தம் உடையதா? என்பது பற்றி வினா இல்லை. அவர் பன்னிருபடலத்தை மதித்துள்ளார் என்பதே நாம் கருது வதற்கு உரியது. இதன் வழிவந்த பு. வெ. மாலையில், அறிவன் வாகையினின்றும் வேறுபட்டதாகக் கணிவன் முல்லை சுட்டப் பெற்றது.

மேலும்,

''கழிபெருஞ் சிறப்பின்'' என்றமையின், பேரரசர் துணையாக வந்த குறுநில மன்னரும் தாமும்

பொலிவெய்திப் பாசறைநிலை உரைத்தலும் பிறவும்கொள்க. இவை பற்றியன துணைவஞ்சி'' என்று பன்னிரு படல மரபினைப் பின்பற்றி எழுதியிருத்தல் காணலாம்.

இலக்கண விளக்க உரையிலும் இளம்பூரணர் உரைப்பகுதி யுடன் அவர் மேற்கோள் காட்டிய பன்னிருபடல நூற்பாக்களும் எடுத்தாளப்பெற்றன. அன்றியும், இந்நூல் சுட்டும் புண்ணொடு வருதல் என்ற கரந்தைக்குரிய துறையினை இ. வி. (பொருள். நூ. 604) வழிமொழிதல் குறிப்பிடத்தக்கது.

2. நச்சினார்க்கினியர்

இனி, நச்சினார்க்கினியர் பன்னிருபடல மரபினைப் போற்றிய பாங்கினை நோக்குவோம். இந்நூல் நூற்பாவும் ஒத்தும் உடையது என்பர். பன்னிரு ஒத்துகளே பன்னிரு படலம் என்பது இவர் கருத்து.

அரசன் ஆணைவழியே வெட்சி வீரர் நிரை கவர்தற்குச் செல்வர் என்பது தொல்காப்பிய விதி. எனின், ''வேந்துவிடு வினைஞர்'' என்னாது முனைஞர் என்றதனானே முனைப்புலங் காத்திருந்தோர் தாமே சென்று நிரை கோடலும், குறுநிலமன்னர் நிரைகோடலும், ஏனை மறவர் முதலியோர் நிரைகோடலுமாகிய வேத்தியல் அல்லாத பொதுவியலும் கொள்க'', என்று நச்சினார்க்கினியர் குறிப்பது பன்னிருபடல மரபினையே எனலாம்.

'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்' என்று நூற்பா பொதுவியலுக்குரிய துறைகளை உணர்த்துவதாக நச்சினார்க்கினி யர் கருதினார். ஆதலின், பொதுவியல் என்ற ஒரு திணையினை யும் பன்னிருபடல மரபினை ஒட்டி ஏற்றுக்கொண்டவர் என்பது புலனாகும். மற்றும் ஓரிடத்தில், 'இதனை முதுமொழி வஞ்சி என்ப' என்று சுட்டுதல் பன்னிரு படலத்தின் வழிவந்த பு. வெ. மாலையிற் (48) காணப்படுவதைக் கருத்திற் கொண்டே எனலாம்.

தொல்காப்பியர் தும்பைக்குரியதாகத் தானை நிலை, குதிரைநிலை என்னும் துறைகளை வகுத்தார். எனின் நச்சினார்க்கினியர்.

"இனி இவை தாமே கருவுகொண்டு பொருவுழித் தானைமறம், யானைமறம், குதிரைமறம் என்று வெவ்வேறு பெயர்பெறும் என்று கொள்க", என்று விளக்கவுரை எழுதும் பகுதி எண்ணத்தக்கது. இம்மூன்றும் பன்னிருபடலப்புறப் பொருள் மரபாகக் கருதத்தக்கது. இவை பு. வெ. மாலையில் தும்பைப் படலத்தில் இம்முறையே கூறப்பெற்றிருத்தல் காணலாம்.

மேலும், தானைநிலை என்னும் ஒருதுறைக்கண் அடங்குமாறு தாயர் கூறுவனவாகிய மூதின் முல்லையினையும் மனைவியர் கூறுவனவாகிய இல்லாண் முல்லையினையும், கண்டோர் கூறுவன வாகிய வல்லாண் முல்லையினையும் பாணர் கூறும் பாண்பாட்டை யும் நச்சினார்க்கினியர் தொகுத்துக் கூறியுள்ளார். இங்குச் சுட்டப் பெற்ற துறைகள்யாவும் பன்னிருபடல மரபாகப் பு.வெ.மாலையில் இடம் பெற்றவையாகும்.

மேற்சுட்டிய உரைப்பகுதிகளினால் பன்னிருபடலத்தை நச்சினார்க்கினியர் ஏற்புழி யறிந்து எடுத்துக்காட்டினார் என்பது புலனாகும்.

இனி, சிவஞான முனிவர் இந்நூலினை முழுமையாக ஆதரித்துக் கூறும் பகுதியைப் பார்ப்போம்.

8. சிவஞானமுனிவர்

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலியோர் பொருள் பகுதியை அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்று பாகுபடுத்தும் மரபினை மறுப்பவர்கள். இவர்தம் கருத்தினை உடன்படாத சிவஞான முனிவர்,

"அகம், புறம் எனப்பகுத்தவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காகப் பகுத்தலும் வெட்சித்திணை உழிஞைத் திணைகளின் மறுதலை வினையை வீற்றுவினை யாதலும் வேற்றுப் பூச்சூடுதலும் ஆகிய வேறுபாடுபற்றி வேறுதிணையாக வைத்தெண்ணுதலும் இன்னோரன்னவை பிறவும் திரிபுடையவாயினும் மரபு நிலை

திரியாதன ... இவ்வுண்மை உணராதார் பன்னிருபடலம் முதலிய நூல்களை வழி இயின் என்றிகழ்ந்து தமக்கு வேண்டிய வாறே கூறுப''.

என்று தெளிவுறுத்துதல் எண்ணத்தக்கது. மரபுநிலை திரியாது கூறப்பட்ட பொருள் விகற்பங்களைப் பன்னிருபடலம் முதலிய நூல்கள் விரித்துரைப்பன என்பதும் அவையும் ஏற்பதற்குரியன என்பதும் முனிவரின் கருத்தாகும்.

மேலே கூறப்பெற்ற உரையாசிரியர்களேயன்றி, அடியார்க்கு நல்லார், பெருந்தேவனார், மாறனலங்கார உரையாசிரியர் முதலியோரும் பன்னிருபடல மரபினை மதித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இனி, பன்னிருபடலத்திற்குரியனவாக உரைகளில் எடுத்தாளப் பெறும் நூற்பாக்களைத் தொகுத்துக் கூறுதல் வேண்டும்.

பன்னிருபடலம் நூற்பாக்கள்

யா. வி. இளம்பூரணர் உரை முதலியவற்றில் மேற்கோளாக ஆட்சிபெற்ற ப.ப. நூற்பாக்களைத் தொகுத்து இங்குக்காண்போம்

யாப்பருங்கல விருத்தி உரை மேற்கோள்

1. புறப்பொருள் பற்றிய வஞ்சிப்பாவினுள் ஆசிரியம் மயங்குதல் உண்டு. எனின், அகப்பொருள் பற்றிய வஞ்சிப்பாவி னுள் ஆசிரியம் மயங்குதல் கூடாது.

''அகத்தினை மருங்கின் அளவு மயங்கி
விதப்ப மற்றவை வேறா வேண்டி
வஞ்சி அடியின் யாத்தனர் வஞ்சி
அகத்திணை மருங்கின் அணையு மாறே''

என்பது பன்னிருபடலத்துட் பெருந்திணைப் படலத்துச் சூத்திரம் (யா. வி. ப. 128). தொல்காப்பியர் காலத்தில் அகப்பொருட் குரியதாகக் கலிப்பா பேசப்பெறுதல் இங்கு எண்ணத்தக்கது.

2. இனி, அகப்புறம் ஆவன காந்தள், வள்ளி, சுரநடை, முதுபாலை, தாபதம், தபுதாரம், குற்றிசை, குறுங்கலி, பாசறை முல்லை, இல்லாண்முல்லை என்ற இவை பத்தும்; கைக்கிளை, பெருந்திணை என்ற இவை இரண்டும் என்க,

''ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
காந்தள் ... ... — ...
அமர்த்தூ ரைந்தும் அகத்தின் புறமே''

''கைக்கிளை என்றா பெருந்திணை என்றாங்கு
அத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே.''

இவை பன்னிருபடலம். (யா. வி. ப. 570).

3. ''அவற்றுட் கைக்கிளையாவது காட்சி முதலாம்
கை காமம். என்ன?

''கைக்கிளை தானே கூறுங்காலைக்
கூட்டமில் கிளவிக் கைக்கிளை அகப்புறம்''.

''பெருந்திணைப் பொருளே பொருந்தக் கூறின்
அறத்தின் இயன்ற அகத்தொடு புணராத்
திறத்த தென்ப திறனறிந் தோரே.''

''நிலையா அன்பின் நீடா இன்பத்து
உலகமலை வெல்லாம் பெருந்திணை அகப்புறம்.''

என்றாராகலின் (யா. வி. ப. 570).

இனிப்புறமாவது,

''வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை என்றாங்கு
இத்திறம் ஏழும் புறம்என மொழிப''.

''வெட்சி முதலா தும்பை யீறாச்
செப்பிய ஏழும் புறப்பொருள் ஆகும்.''

எனக்கொள்க (யா. வி. ப. 571).

மேற்சுட்டப்பெற்ற நூற்பாக்களும் முன்பின் இயைபு நோக்கிப் பன்னிருபடலத்திற்கு உரியனவாதல் கூடும் என்று எண்ணுதற்குரியவை ஆகும்.

4. அ) வெட்சி ஆ கவர்தலானும், கரந்தை உட்குவரச் சென்று விடுத்தலானும்,

''வெட்சியும் கரந்தையும் தம்முள் மாறே''

—பன்னிருபடலம்.

ஆ) வஞ்சி மேற்செல்லலானும் காஞ்சி அஞ்சாது எதிர்சென்று ஊன்றலானும்,
''வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே''
—பன்னிருபடலம்

இ) உழிஞை ஆரெயில் முற்றலானும், நொச்சி விழுமிதின் அவ்வெயில் காத்தலானும்,
''உழிஞையும் நொச்சியும் தம்முள் மாறே''
—பன்னிருபடலம்

ஈ) ''பொருதல் தும்பை புணர்வ தென்ப''

இவற்றின் விகற்பமெல்லாம் பன்னிருபடலத்துட் காண்க.

5. புறப்புறம் ஆவன வாகையும் பாடாண்பாட்டும் பொதுவியல் திணையும் எனக்கொள்க ... ...

இவை ஆமாறு வெண்பா மாலையுள்ளும் பன்னிருபடலத்துள்ளும் காண்க. (யா. பி. ப. 571).

மேற்காட்டிய நூற்பாக்கள் யாவும் பன்னிருபடலத்திற்குரியவை என்பது தெளிவு. யா. வி உரையாசிரியர் பன்னிரு படலத்தின் வழி வந்ததே பு. வெ. மாலை என்ற கருத்தினர் எனினும், மாலையை முன்னரும் படலத்தைப் பின்னரும் குறித்துள்ளனர். கால உணர்வோடு இப்பகுதி எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. உரையில் ஏடெழுதுவோரால் இங்ஙனம் முன்பின்னாக எழுதப்பட்டிருத்தற்கும் இடம் உண்டு.

இனி, இளம்பூரணர் உரையில் காணப்பெறும் பன்னிரு படலத்திற்கு உரிய நூற்பாக்களை இங்குத் தொகுத்து காண்போம்.

இளம்பூரணர் உரைமேற்கோள்

1. புறத்திணை இயலின் தொடக்கப் பகுதியில் புறப்பொருள் அறமும் இன்பமும் அகலாதாகி வரும் என்று பன்னிருபடலம் சுட்டுவதாக பின்வரும் நூற்பாவினை இளம்பூரணர் எடுத்தாண்டுள்ளார்.

''ஆன்ற சிறப்பின் அறம்பொருள் இன்பமென
மூன்றுவகை நுதலிய துலகம்; அவற்றுள்
அறமும் இன்பமும் அகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே.'' (ப 73)

2. இந்நூற்பாவிற்குப் பின்னர் மேலும் இரண்டு நூற்பாக்களைப் பன்னிருபடலத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார். இவை புறப்பொருளைப் பன்னிரு திணைகளாகப் பாகுபடுத்திக் கூறும் ஒரு மரபினைச் சுட்டுவன:

அ. ''ஆங்ஙனம் உரைப்பின் அவற்றது வகையால்
பாங்குறக் கிளந்தனர் என்ப; அவைதாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குவரு சிறப்பின் உழிஞை நொச்சி
முரண்மிகு சிறப்பின் தும்பையுள் விட்ட
மறனுடை மரபின் ஏழே; ஏனை
அமர்கொள் மரபின் வாகையும் சிறந்த
பாடாண் பாட்டொரு பொதுவியல் என்ப.''

ஆ. ''கைக்கிளை ஏனைப் பெருந்திணை என்றாங்கு
அத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே'' (ப.73)

இவற்றுள் இரண்டாம் நூற்பாவில் இடம் பெற்றுள்ள 'ஏனை' என்ற சொல்லிற்குப் பதிலாக 'என்றா' என்ற பாடமும் ஏனைய இலக்கண உரை மேற்கோள்களில் காணப்படுகின்றன.

இளம்பூரணர் தொல்காப்பியரின் புறத்திணைக் கோட்பாட்டில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்; எழுதிணையே புறத்திற்குரியவை என்பதற்கு மாறாகப் பன்னிரு திணைக் கோட்பாட்டினை விரித்துக்கூறும் பன்னிருபடலத்தின் கருத்தினை உடன்படவில்லை. அகத்திணையினை ஏழாகப் பகுத்த தொல்காப்பியர் அதற்குத்தகப் புறத்திணையினையும் ஏழாகவே பகுத்தார். மாறாகப் பன்னிரண்டாகப் பிரித்து இலக்கணம் கூறுதல் முதனூல் கருத்துடன் முரண்படும் என்பது இவர் எண்ணம்.

3. மேலும் ஒரு நூற்பாவினையும் இளம்பூரணர் பன்னிரு படலத்திலிருந்து தொடர்ந்து எடுத்துக் காட்டியுள்ளார்:

''பல்லமர் செய்து படையுள் தப்பிய
நல்லாண் மாக்கள் எல்லாரும் பெறுதலின்
திறப்பட மொழிந்து தெரிய விரித்து
முதற்பட எண்ணிய எழுதிணைக்கும் எரித்தே'' (ப. 73)

பொதுவியல் என்பது ஒரு தனித்திணையாகக் கருதுதற்கு இல்லை. மறத்துறைகளாக எண்ணப்பெறும் வெட்சி முதலிய ஏழற்கும்

பொதுப்பட வருதலின், பொதுவியல் ஆமிற்று என்று நிறுவுகிறார். புறத்திணையினை ஏழென்றே கொள்ளுதல் வேண்டும் என்பதற்கு இவர் கூறும் ஏதுக்களை இந்நூலின் வேறொரு பகுதியில் விரிவாகக் காணலாம்.

இளம்பூரணர் காலத்தில் பன்னிருபடலம் பயிலப்பெற்று வழக்கில் இருந்தது என்பதற்கு மேலும் சில சான்றுகள் இவர்தம் உரையில் காணப்படுகின்றன.

4. நாட்டுத்தலைவன் ஆகிய அரசன் ஏவிய வழியே போர்த் தொழில் புரியவேண்டும் என்பது புறப்பொருள் இலக்கணம் செய்த அறிஞர்களின் கருத்தாகும். எனின், சில சூழ்நிலைகளில் அரசன் ஏவாத நிலையிலும் போர்கள் நடைபெற்று வந்தன. எனவே, நடைமுறைக்கும் இடம்கொடுத்து ஒரு சாரார் புறத்திணை இலக்கணம் வகுத்தனர். அவருள் பன்னிருபடலத்தாரை உரையாசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

''பன்னிரு படலத்துள், ''தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்று, அன்ன இருவகைத்தே வெட்சி'' என இரண்டு கூறுபடக் கூறினாராயினும்'' (ப. 75) என்ற உரைப்பகுதி ஊன்றி நோக்கத்தக்கது. இக்கருத்தினையும் இவர் ஏற்கவில்லை. தொல்காப்பியச் சட்டத்திற்குப் புறம்பாக யார் இலக்கணம் செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளாத ஒரு உறுதிப்பாடு இவரிடமும் ஏனைய உரையாசிரியர்கள் பலரிடமும் காணப்படு கிறது. வெட்சிக்கு மாத்திரம் தன்னுறு தொழில், மன்னுறு தொழில் என்று இருவகைப் போர்த்தொழில் குறித்ததால், எஞ்சிய வஞ்சி, உழிஞை, தும்பை ஆகியவற்றுக்கும் அவ்வாறு இரண்டி ரண்டு போர்த்தொழில்கள் சொல்லப்பெறுதல் வேண்டும். அங்ஙனம் எந்நூலினும் இயம்பப்பெறாமையின் பன்னிருபடலம் பகரும் இருவகை வெட்சிப்போர்முறை இலக்கணமும் ஏற்பதற்கு இல்லை என்பது இளம்பூரணரின் உள்ளக்கிடக்கை ஆகும்.

எனினும், பன்னிருபடலத்தைக் கண்மூடித்தனமாகத் தாக்கும் நோக்கம் இளம்பூரணர்க்கு இல்லை என்பதும் அறியத்தக்கது. வாகைத்திணை குறித்து வரும் தொல்காப்பிய நூற்பாவில்,

''மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்''

என்ற பகுதியில் இடம்பெறும் மூவகைக் காலம் என்பதன் பொருள் பற்றிச் சிந்திக்கிறார் உரையாசிரியர். இத்தொடர் இறந்தகாலம் முதலிய மூன்று காலத்தையும் குறிக்கும் என்று பொருள் கொள்வதை இவர் ஒத்துக்கொள்ளவில்லை. அங்ஙனம் முக்காலத்தையும் அறிதல் என்பது முழுதுணர்ந்தோர்க்குத்தான் முடியும் என்று சொல்லி, இங்கு சுட்டப்பெற்ற மூவகைக் காலம் என்பது மழையும் பனியும் வெயிலும் ஆகிய மூவகைக் காலத்தையும் குறிக்கும் என்றும், இவற்றை தம் ஒழுக்கநெறியின் உரத்தினால் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் அறிவார்கள் என்றும் பொருள் கொண்டார். இங்ஙனம் கொள்வதற்குப் பன்னிரு படலத்தின் நூற்பா அரண்செய்கிறது:

பன்னிருபடலத்துள்,

"பனியும் வெயிலும் கூதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு நோன்மை எய்திய
தணிவுற்று அறிந்த கணிவன் முல்லை".

எனவும் ஓதுதலின் மேலதே பொருளாகக் கொள்க". (ப. 114) என்று எழுதியிருத்தல் எண்ணற்பாலது. துறவிகளுக்குப் பொறுமையே வாகை என்பதைத் தொல்காப்பியர் கருதியதாக இளம்பூரணர் எண்ணுதற்குச் சான்றுகள் இல்லாமல் இல்லை. மணிமேகலையில்,

"கதிர்சுடும் அமையத்துப் பனிமதி முகத்தோன்" (5 60)

"வெயிலென முனியாது புயலென மடியாது" (11.111)

எனவரும் பகுதிகள் ஒப்புநோக்கத்தக்கன.

இனி, பன்னிருபடலம் பற்றிப் பேராசிரியர் உரையில் காணப் பெறும் செய்தியையும் இயைபு நோக்கி இங்குச் சுட்டுல் தகும்.

பேராசிரியர் உரைமேற்கோள்

தொல்காப்பிய மரபியல் உரைப்பகுதியில் பன்னிருபடலத்திற் குரிய பாயிரப் பகுதியைப் பேராசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்:

"வீங்குகடல் உடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ்

ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதல உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும் "

என்பதனால் அகத்தியர் செய்த அகத்தியத்தினை முதனூல் எனவும்,... அவராற் செய்யப்பட்ட முதனூல் பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோருள் தலைவராயினார் தொல்காப்பியனார் எனவும், பன்னிருபடலத்துப் புனைந்துரைவகையாற் பாயிரச் சூத்திரத்துள் உரைக்கப்பட்டது (கழகம். ப. 481-2) என்று குறித்துள்ளார். மேலும், ''மன்னிய சிறப்பின்'' எனத்தொடங்கும் பு. வெ. மாலையின் பாயிரப் பகுதியையும் எடுத்துக் காட்டித் தொல்காப்பியத்தின் ஆசிரியராகிய தொல்காப்பியரை அகத்தியர் மாணவர் பன்னிருவருள் முதல்வர் என்ற கருத்தினைச் சுட்டினார். இதன் பொருந்தாமையினை முன்னர்க் கண்டோம்.

பேராசிரியர் இளம்பூரணரைப் போலப் புறத்திணை இயலுக்கு உரை வரைந்திருப்பின், பன்னிருபடலத்தின பொருண்மையும் புறத்திணை இயலின் பொருண்மையும் வேறுவேறு மரபின என்பதை நுனித்துணர்ந்து கூறியிருப்பார். பிற்காலத்து வழங்கிய செவிவழிச் செய்தியை நம்பியே தொல்காப்பியரை அகத்தியர் மாணவர் என்றும் அவரைப் பன்னிருபடலத்துடன் தொடர்பு படுத்தியும் கருதினார்.

எனவே, உரையாசிரியர் காலங்களில் பன்னிருபடலம் வழக்கில் இருந்த நூல் என்பது புலனாகும்.

இனி, பன்னிருபடலத்துடன் பெயரளவில் தொடர்புடையதாகத் திகழும் பன்னிருபாட்டியலைப் பற்றிச் சிறிது கூறுதல் வேண்டும்.

பன்னிருபடலமும் பன்னிருபாட்டியலும்

பன்னிரண்டு என்ற எண்ணிக்கை தமிழ் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. அகத்தியர் மாணாக்கர் பன்னிருவர் என்பர். பின்னாளில் சிவஞான முனிவரின் மாணாக்கரும் பன்னிருவரே. பன்னிரு திருமுறைகள். ஆழ்வார் பன்னிருவர், சிவஞானபோதச் சூத்திரங்கள் பன்னிரண்டு, பன்னிரு திங்கள் என்று வழங்குதல் காணலாம். ''பன்னிரு கையும் பாற்பட இயற்றி'' என்பது திருமுருகாற்றுப்படை.

பன்னிரு புலவர் ஆளுக்கொரு திணையாகப் பாடித் தொகுத்த நூல் பன்னிருபடலம் என்று பார்த்தோம். அவ்வாறே பன்னிரு பாட்டியல் என்ற நூலும் பிரபந்தவகைகள், அவற்றின் இலக்கணங்கள் பற்றிப் பன்னிருவரால் பாடித் தொகுக்கப்பெற்ற பனுவல் என்று எண்ணத் தோன்றுகிறது. பாட்டியல் என்பது பாட்டிற்கு இலக்கணம் கூறுவது அன்று, பாட்டு என்பது பனுவலைக் குறித்தது. இப்போது வழங்கிவரும் பன்னிருபாட்டியல் என்னும் நூலின் இடையிடையே பதினைந்து புலவர்களின் நூற்பாக்கள் காணப்படுகின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் 1951இல் வெளியிட்ட பன்னிருபாட்டியல் பதிப்புரையில் திரு. கி. இராமாநுச ஐயங்கார் இப்புலவர் நிரலைத் தந்துள்ளார்:

1) அகத்தியர்	9) சேந்தம்பூதனார்
2) அவிநயனார்	10) நற்றத்தனார்
3) இந்திரகாவியார்	11) பரணர்
4) கபிலர்	12) பல்காயனார்
5) கல்லாடர்	13) பெருங்குன்றூர்கிழார்
6) கோவூர்கிழார்	14) பொய்கையார்
7) சீத்தலையார்	15) மாபூதனார்.
8) செயிற்றியனார்	

இவர்களில் பலர் சங்கப்புலவர் பெயர்களைத் தாங்கியவர்கள். அகத்தியர் அவிநயனார், செயிற்றியனார், நற்றத்தனார், பல்காயனார் முதலியவர்கள் யாப்பிலக்கணமும் செய்தவர்கள் என்பது யா.வி. உரையில் எடுத்தாளப்பெறும். இவர்தம் நூற்பாக்களினால் அறியலாம். இவருள் அவிநயனார் பன்னிருபடலத்தின் ஆசிரியருள் ஒருவராகவும் காணப்படுகிறார்.

பன்னிருவரால் பாடப்பெற்று வழங்கிவந்த பாட்டியல் மரபுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வந்தோர் ஒருவர் படைத்ததாகவே பன்னிருபாட்டியல் கொள்ளத்தக்கது. இடையிடையே ஏனையோர் நூற்பாக்களும் பொன்னேபோல் இந்நூலில் பேணப் பெற்றன எனலாம்.

இந்நூலில் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்று மூன்றியல்களும் 360 நூற்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு நூற்பா மட்டும் நேரிசை வெண்பா (204); பிறயாவும்

நூற்பாயாப்பு. இந்நூலிற் சுட்டப்பெறும் பிரபந்த வகைகளை நுணுகி நோக்கின், இந்நூல் கி. பி. 600—900 என்ற கால எல்லையில் உருப்பெற்றதாதல் வேண்டும் என்பது புலனாகும். இந்நூலிற்குப் பெரும்புலவர் கா. ர. கோ. பதிப்பும் உண்டு. இதில் செயிற்றியனார், நற்றத்தனார், பெயர்கள் விடுபட்டன. எஞ்சிய பதின்மூவருள் ஒருவர் மிகையாக எண்ணப்பெறின், பன்னிருவரால் பாடப்பெற்றது மூல பன்னிருபடலம் என்று கருதலாம்.

பன்னிரண்டு என்ற பொதுமையினால் பன்னிருபடலத்தையும் பன்னிருபாட்டியலையும் ஒன்றென்று அபேதமாகக் கருதிவிடக் கூடாது. அப்படிக் கருதிய பேராசிரியரும் உளர் என்பதற்காகவே இரு நூல்களின் அமைப்பும் ஆசிரியர்களும் குறித்து விரித்துக் கூற வேண்டியதாயிற்று.

3. புறப்பொருள் வெண்பா மாலை

இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார் இந்நூலின் பாயிரத்தில் ''வாங்குவில் தடக்கை வானவர் மருமான்'' என்று சுட்டப்பெறுவ தால், இவர் சேரர் பரம்பரையினர் என்று தெளியலாம். இந்நூலின் தொடக்கத்தில் விநாயகர்க்கும் சிவனுக்கும் காப்புச் செய்யுட்கள் பாடப் பெற்றமையின் இவர் சைவ நெறியினர் ஆவர். நூலிற்குள் முருகனையும் திருமாலையும் பரவும் பாடல்கள் உள்ளன. இந்நூல் கி. பி. 800—900 என்ற காலப்பகுதிக்கு உரியது என்பதை முன்னரே சுட்டியுள்ளனர். இதற்கு முதனூல் பன்னிருபடலம் என்பதை முன்பே கூறியுள்ளோம்.

புறத்திணை பற்றிய இலக்கணச் சூத்திரங்களும், ஒவ்வொரு துறைக்கும் உதாரண வெண்பாக்களும், அவ் வெண்பாக்களின் சாரத்தைத் தாங்கி அவற்றிற்கு முன்னர் நிற்கும் கொளுக்களும் கொண்டு இந்நூல் உருவாக்கப்பெற்றது. கொளுவைச் சூத்திரம் என்று இந்நூலின் உரையாசிரியர் மாறனலங்கார உரை யாசிரியரும் சுட்டியுள்ளார்.

இந்நூலின் உரையாசிரியர் சாமுண்டி தேவநாயகர். இவர் தொண்டை நாட்டவர். இவர் காலம் கி. பி. 15ஆம் நூற்றாண்டு என்பர். இவர் பெரும்பாலும் பதசாரமாகவே உரைவரைந்துள்ளார் தெளிவும் விளக்கமும் கொண்ட இவர் உரை மூலநூலினைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவும்.

நூலின் அமைப்பு

முதலில் மூத்தபிள்ளையார்க்கும் அடுத்து சிவபிரானுக்கும் கடவுள் வாழ்த்துக்கள் கூறப்பெற்றன. இவை நேரிசை வெண்பாக்கள். அடுத்து இடம்பெறும் சிறப்புப் பாயிரம் நூலின் வரலாற்றைச் சுருக்கி நூற்பா யாப்பியல் கூறுகிறது. இது நிலை மண்டில ஆசிரியமாக உள்ளது. பன்னிருபடலத்தை முழுமையாகக் கற்றுப் புறப்பொருள் இலக்கணத்தைப் பண்புற மொழிந்தவர் ஐயனாரிதனார் என்பது பாயிரச் செய்தி.

வெட்சி முதல் பெருந்திணை முடிய பன்னிருதிணைகளுக்கும் விரிவாகவும் விளக்கமாகவும் இலக்கணம் கூறப்பெற்றது. ஒவ்வொரு திணைப் பொருளை விரித்துரைக்கும் நூற்பகுதியும் படலம் என்று பெயர் பெறுகிறது. இம்மரபு இதன் முதனூலில் காணப்பெற்றதைப் பின்பற்றியதென்று கருதுதல் தக்கது.

ஒவ்வொரு படலத்தின் தொடக்கத்திலும் குறிப்பிட்ட திணைக்குரிய துறைகளைத் தொகுத்துக் கூறும் நூற்பா இடம்பெற்றது. இது நிலைமண்டில ஆசிரிய யாப்பாகக் கொள்ளுதற்குரியது. பின்னர் ஒவ்வொரு துறையினையும் விளக்கும் கொளு நூற்பா காணப்படுகிறது. கொளுக்கள் பெரும்பாலும் அளவடி இரண்டினால் பாடப்பெற்றவை. குறளடி இரண்டினால் அமைந்த கொளுக்களும் உள்ளன. இலக்கியப் பாக்கள் யாவும் நேரிசை வெண்பாக்கள். இந்நூலிற்குரிய மொத்தப் பாக்கள் 361. சிவஞான பேதத்தில் இடம்பெறும் வெண்பாக்கள் இங்கு எண்ணத்தகுவன. இலக்கணத்தை விளக்கவும் மெய்ப்பொருளை விளக்கவும் நேரிசை வெண்பாக்கள் பொருத்தமும் வலிமையும் மிக்க புலப்பாட்டு யாப்பாகப் பயன்பட்டன எனலாம்.

எனின், பு. வெ. மாலையில், கைக்கிளைப் படலத்தில் மட்டும் மருட்பாக்கள் இடம் பெற்றன. கைக்கிளையினை மருட்பாவினால் பாடுதல் வேண்டும் என்ற இலக்கிய மரபிற்காக இவ்வாறு எழுதப் பெற்றன எனலாம். எனவே, நூலிற்குப் புறப்பொருள் வெண்பா மாலை என்ற பெயர் பெரும்பான்மை யாப்பு நோக்கிச் சூட்டப் பெற்றது என்றறிதல் வேண்டும்.

நூலின் ஆசிரியர் தொல்காப்பிய நூற்பா மரபுகளை நன்றாக அறிந்தவர். என்ப, என்மனார், மொழிப என்ற சொல்லாட்சி இந்நூலிலும் காணப்பெறும். எண்ணுப் பொருளில் வரும் என்றா என்ற தொல்காப்பிய ஆட்சியும் பொதுவியற்படல நூற்பாவில்

(நூ.13) இடம் பெற்றது. தொகைச் சொல்லினைச் சுட்டுமிடத்து, ''மூன்று தலையிட்ட மூவிரைந்தும்'' (நூ. 8) என்று ஐயனாரித னார் வழங்கும் குறியீடு தொல்காப்பியரைப் பின்பற்றிக் கூறப் பட்டதாகவே தெரிகிறது. ஒருவேளை பன்னிருபடலத்திலும் இத்தகைய தொடரமைப்புக்கள் இருந்திருக்கக்கூடும். துறைகளை கூறும் வகையிலும் பன்னிரு படலத்தின் வழிவந்த இந்நூலில் தொல்காப்பியத்தின் செல்வாக்கு காணப்படுகிறது.

முதல் ஒன்பது படலங்களிலும் ஒவ்வொரு திணையினையும் விவரிக்க ஒரு நூற்பாவே பாடிய ஆசிரியர், பொதுவியற் படலம் முதலாக உள்ள பகுதிகளில் பொருள் நிலைக்கேற்ப ஒன்றின் மிக்க நூற்பாக்களை யாத்தனர். பன்னிரு படலங்களுக்குப்பின்னர் இடம் பெறும் 'ஒழிபு' என்ற பகுதி மூலநூலில் இடம் பெற்றிருக்குமா என்பதில் ஐயம் எழுகிறது இப்படலத்தில் கொளு என்ற பகுதி இல்லை. எனின், இலக்கண விளக்கமும் இந்நூலின் வழியே 'ஒழிபு' கூறியிருத்தலின் இப்பகுதி வைத்தியநாத நாவலர் காலத் திற்கு முன்பே மூல நூலில் பிற்சேர்க்கையாக ஒட்டப்பெற்றிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது. அதற்குப் பின்னரும், புறத்திணை ஏழு, புறப்புறத்திணை மூன்று எனக் கூறும் தொகை நூற்பா இரண்டாவது பிற்சேர்க்கையாக நூலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இத்திறங்கள் பற்றி பின்னர் விரித்துக் கூறப்பெறும்.

கி. பி. 800—900 என்ற காலப் பகுதிக்குப் பின்னர் எழுந்த யா. வி. உரையில் பன்னிருபடல மரபினைப் பின்பற்றிய ஒரு சில புறப்பொருள் நூற்பாக்கள் காணப்படுகின்றன. இவை பன்னிரு படலம் தோன்றிய பொழுது அல்லது அந்நூலினை ஒட்டி எழுந்தவை என்று எண்ணுதற்கு இடம் உண்டு.

4. யா. வி. சுட்டும் புறப்பொருள் நூல்கள்

யாப்பருங்கலத்தின் ஒழிபியல் இறுதி நூற்பா (96) ''எண்ணிய திணையும்'' என்று திணைகளைச் சுட்டுகிறது. இந்நூலின் விருத்தியுரையாசிரியர் கி. பி. 10, 11ஆம் நூற்றாண்டினர். இவர் திணைகளை 1) அகத்திணை 2) அகப்புறத்திணை 3) புறத்திணை 4) புறப்புறத்திணை என்று நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார். (யா. வி. ப. 569) ஆதலின், இவர் தொல்காப்பிய மரபின் வேறுபட்ட பன்னிருபடலம், பு. வெ. மா. மரபினைப் போற்றியவர் என்பது தெளிவு. தம் கருத்திற்கு அரணாகப் பன்னிரு படல நூற்பாக்களை மேற்கோள் காட்டிய

திறத்தினை முன்னர்க் கண்டோம். மேலும் தொல்காப்பிய அகத்தியம் உடையார் என்ற ஆசிரியரும், வாய்ப்பியனாரும் வாகை, பாடாண், பொதுவியல் திணைகளை முறையே புறப்புறம் என்றும் புறம் என்றும் எண்ணிய முறையினையும் அவர் நூற்பாக் களை மேற்கோள் காட்டியிருத்தலால் புலனாகும் (யா. வி.ப. 571). இவர் மேற்கோள் காட்டிய,

''மதுவிரி வாகையும் பாடாண் பாட்டும்
பொதுவியற் படலமும் புறமாகும்மே''

என்ற வாய்ப்பியனார் நூற்பாவின் கடைசிப் பகுதியால், புறப்புறம் என்ற பாகுபாட்டினை இவர் புறம் என்பதன் கண் அடக்கி ஓதியவர் என்க. ''இவை ஆமாறு வெண்பா மாலையுள்ளும் பன்னிரு படலத்துள்ளும் காணக்'' என்று இவர் எழுதியிருத்தலின் (யா. வி. ப. 571) இவ்விரு நூல்களையும் இவர் நன்கு கற்றவர் என்பது தெளிவு. எனின், பன்னிரு படலத்தை இரண்டாவதாகக் கூறுதல் அவர் காலத்திலேயே இந்நூல் முழுவடிவில் பயிலப் பெறாமையினால் என்று தெரிகிறது. இவரே,

''இனி, ஒருசாரார், அகத்திணை, புறத்திணை,
அகப்புறத்திணை என மூன்றாய் அடங்கும் என்ப.
ஆமாறு அவிநயத்துட் காண்க'' (யா. வி. ப. 573)

என்று குறித்துள்ளார். ஆதலின், அவிநயனார், புறப்புறம் என்ற பொருட் பாகுபாட்டினையும் இவர் புறம் என்ற ஒன்றின்கண் அடக்கினார் எனலாம். இவர் சுட்டியுள்ள பொருள் மரபுகள் யாவும் பாவின மரபுகள்போல் பல்லவர் கால இலக்கியப் படைப்புக் களில் இடம் பெற்றவை என்று எண்ணுதல் சாலும்.

யா. வி. காலத்தை அடுத்துப் புறப்பொருள் பற்றிய இலக்கண மரபுகளை அறிதற்குக் கருவிநூலாகக் கிடைப்பது வீரசோழியம்.

5. வீரசோழியம்

இந்நூலின் ஆசிரியர் சிற்றரசர். பொன்பற்றி என்ற தஞ்சைப் பகுதியின் தலைவர் வீரராசேந்திரனுக்கு அடங்கி ஆட்சி செய்தவர் இருமொழிப் பெரும் புலமை மிக்கவர். பௌத்தர் இவர் காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு. முதன் முதல் ஐந்திலக்கண நூல் செய்தவர். தம் வேந்தனின் பெயர் விளங்க இந்நூலினை அவன்

பெயரிட்டு அழைத்தவர். கட்டளைக் கலித்துறை என்னும் காரிகை யாப்பினால் வீரசோழியத்தை யாத்தவர். இவ்வகை யாப்பினால் இலக்கணம் இயற்றுதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் யாப்பருங்கலக் காரிகை பாடிய அமிதசாகரர்.

இவர் வடமொழி மரபுகளை நன்கு அறிந்தவர். வடமொழி வழித்தமிழாசிரியர். கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் பிரயோக விவேகம் செய்த சுப்பிரமணிய தீட்சிதர்க்கு முன்னோடியாகத் தமிழ் இலக்கணக் கருத்துக்களை வடமொழிக் கலைச் சொற்களினால் விளக்க முற்ப டவர். எழுத்து, சொல், யாப்பு, அணி என்ற நாற்பகுதிகளிலும் வடமொழி மரபுகளைப் புகுத்த முற்பட்ட இவர் பொருளிலக்கணம் கூறும் பகுதியில் தமிழ் மரபினையே பேசினார். வடமொழியில் பொருளிலக்கணம் வழங்கியிருக்குமேல் இவர் அதனை எடுத்துக் காட்டத் தயங்கியிருக்கமாட்டார். இந்நூலின் பொருளதிகாரத்தில் காரிகை 84—104 வரை அகம், புறம் ஆகிய இருவகைப் பொருள்களைப் பற்றிய இலக்கண மரபுகளைச் சுட்டியுள்ளார்.

இவர் பொருள் பகுதிகளை, 1. அகம், 2. புறம், 3. அகப்புறம், 4. புறப்புறம் என்று நான்காகப் பகுத்தவர்.

''ஆற்றும் அகமே புறமே அகப்புறம் அன்றிவென்றி
போற்றும் புறப்புறம் என்றாம் பொருள்'' (கா. 84)

அளப்பவன், அளவை, அளக்கப்படும் பொருள் என்று மூவகைப் படுத்தும் தருக்க நெறியாரின் அளவை மரபினையும் சுட்டியுள்ளார் பற்பல வகைகளில் பொருளாராய்ச்சி புரிவோரைப்பற்றி,

''... ...... இவையுமன்றிச்
சாற்றும் புலவரும் எண்ணறந் தாரென்பர் தாழ்குரலே''

என்று குறிப்பிடுகிறார்.

பொருளைப் பாகுபடுத்தும் பாங்கில்,

....
முல்லை குறிஞ்சி மருதத் தொடுமுது பாலைநெய்தல்
சொல்லிய காஞ்சி சுரநடை கைக்கிளை பாலைதும்பை
இல்லவள் முல்லை துபுதாரம தாபதம் ஏய்ந்தவள்ளி
அல்லது காந்தள் குறிங்கலி வெட்சி அடல் வஞ்சியே.
(கா. 85)

குற்றிவச வாகை கரந்தை பெருந்திணை கொற்றநொச்சி
பற்றிய பாசறை முல்லை உழிஞை எனப்பகர்ந்த
மற்றிவை ஐயைந்தும் அம்பொருள் நான்கினும் வண்புகட்சி
பற்றிய பாடாண் பொதுவிய லாதியும் பார்த்தறியே

(கா. 86)

என்று தொகுத்துக் கூறினார். திணைகளைக் கூறுமிடத்து ஒரு சில துறைகளையும் கூட ஒருங்கோதியுள்ளார்.

இவர் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டினையும் அகப்புறம் என்றும் (கா. 95); வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என்ற எழுதிணைகளையும் புறம் என்றும்; வாகை, பொதுவியல், பாடாண என்ற மூன்றையும் புறப்புறம் என்றும் கொண்டனர். (கா. 96). ''இவற்றை... உரவோர் உரைப்படி ஓர்ந்தறியே'' என்று குறிப்பதால், தமக்கு முற்பட்ட பன்னிருபடலத்தார், வெண்பா மாலையார் கூறிய புறப் பொருள் மரபுகளை வழிமொழிந்தவர் என்பது புலனாகும். நொச்சித் திணைக்கும், பொதுவியல் திணைக்கும் இவர் கூறிய நூற்பாக் காரிகைகள் இப்போது கிடைக்கவில்லை என்றே கருத வேண்டும். நொச்சிக்குப் பின் உழிஞை கூறும் பு. வெ. மா. மரபு இவர் கூறும் திணைவரிசையில் முன் பின்னாக மாற்றம் பெற்றது. எனின், தொல்காப்பியப் புறத்திணை மரபுகளையும் இவர் பெரிதும் பின்பற்றியுள்ளமை குறித்துத் திணை துறை பற்றிய ஆய்வுப் பகுதியில் காணலாம்.

இந்நூலின் உரையாசிரியர் பெருந்தேவனார். தெளிவும் விளக்கமும் மேற்கோளும் இவர் உரையின் தனிச் சிறப்புக்கள். ஏழாவது காரிகை உரையில்,

''எல்லா உலகும் தன்வெண்கொற்றக்குடை நிழல்கீழ்
ஆளா நின்ற
வீரசோழி மகாராசாவினுடைய''

என்று நிகழ்காலத்தில் குறிப்பதால், இவர் புத்தமித்திரனாரின் சம காலத்தவராகவும், அவர்தம் மாணாக்கராகவும் கருதுவதற் குரியவர்.

இலக்கண விளக்கம்

இந்த நூலின் ஆசிரியர் வைத்தியநாத நாவலர். இவர் திருவாரூரினர். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு. சைவர்.

ஐந்நிலக்கணம் கூறும் நூலாக விளங்கும் இலக்கண விளக்கத்தைக் குட்டித் தொல்காப்பியம் என்பர். நூலாசிரியரே இதற்கு உரையும் வரைந்துள்ளார். இந்நூலின் மூன்றாம் பகுதியாகிய பொருளதிகாரத்தின் இரண்டாம் இயல் புறப் பொருள் இலக்கணங்களை விரித்துக் கூறுதலின், புறத்திணையியல் என்னும் பெயர் பெற்றது.

பெரும்பாலும் தொல்காப்பியப் புறத்திணையியலையும் புறப்பொருள் வெண்பா மாலையினையும் பின்பற்றியே புறத்திணையியலை யாத்துள்ளார். இவ்வியலில் உள்ள 21 நூற்பாக்களில் இவ்விரு நூல்களின் சாரத்தைப் பிழிந்து கொடுத்துள்ளார். புறப்பொருள் என்பது, உறுதிப்பொருள்கள் மூன்றினுள் அறம், பொருள் ஆகிய இரண்டையும் குறித்து வருவது என்று வரையறை கூறுகிறார் (நூ. 599). வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழுமே புறத்திணைகள் என்று எண்ணுகிறார் (நூ. 600). இதற்கு இது புறன் என இயைபு படுத்தும் மரபும் காணப்படுகிறது. இம்மரபு தொல்காப்பியப் புறத்திணையியலிற் காணப்பெற்றதாகும். கரந்தை, நொச்சி ஆகியவற்றையும் தனிச்சிறப்பு தந்து,

''வெட்சியும் உழிஞையும் வேற்றுவினை யுடைமையின்
உட்குவரு கரந்தையும் நொச்சியும் சூடுதல்
அவ்வினை மருங்கின் அமைந்ததொல் வழக்கே''

என்று போற்றியுள்ளார். எனின், வெட்சிக்கண் கரந்தையினை அடக்கி,

''வெட்சி தானே குறிஞ்சியது புறனே ... ...
வேந்து விடு முனைஞா வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பலும் அந்நிரை மீட்டலும்
எனஇரு பாற்றே அஃதென மொழிப'' (602)

என்று இலக்கணம் கூறினார். இவ்வாறே உழிஞைத்திணைக்கண் நொச்சியை இணைத்து,

''உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் காத்தலும்
எனஇரு வகையது அதுவென மொழிப'' (நூ. 607)

என்று இயம்பினர். இங்ஙனமே, வஞ்சிக்கு மறுதலைப்பட்ட எதிருன்றுதலாகிய காஞ்சியையும் நிலையாமைப் பொருண்மையில் வரும் காஞ்சியினையும் ஒருங்கே ஓதினார் (நூ. 615).

ஆதலின், புறப்பொருளுக்குரிய எழுதிணைகளைப் பொறுத்த மட்டில் தொல்காப்பிய மரபினையும் பு. வெ. மா. மரபினையும் இணைத்துக் கூறுதல் இந்நூலார் மேற்கொண்ட நெறி எனலாம். பல இடங்களில் தொல்காப்பிய நூற்பாக்களையும் தொடர்களையும் அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

சான்றாக,

''வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே'
(நூ. 605)

''வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப' (நூ. 612)

''காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே'' (நூ. 614)

எனவரும் நூற்பாக்களைக் கூறலாம்.

பு.வெ. மாலை புகலும் பொருள் மரபுகளையும் தொல்காப்பிய மரபுகளுடன் இணைத்துப் பேசும் இயல்பிற்கு இரண்டொரு சான்றுகள் கூறுதல் நேரிது.

பு. வெ. மா. கரந்தைத் திணைக்கு ஓதிய துறைகளை வெட்சியின் இரண்டாம் பகுதிக்குரிய துறைகளாக எண்ணினார் (நூ 604). உழிஞையின் இரண்டாம் பகுதிக்குரிய துறைகளாகப் பு. வெ. மா. கூறிய நொச்சித் திணையின் துறைகளைத் தொகுத்துக் கூறுதல் காணத்தக்கது (நூ. 609). காஞ்சித் துறைகள் கூறும் 615 ஆம் நூற்பாவில் பு. வெ. மா. சுட்டிய எதிருன்றுதலாகிய காஞ்சியின் துறைகளை எடுத்தோதி இலக்கணம் கூறினார். மேலும், பு. வெ. மாலையில் ஒரு துறைக்கு இரண்டு வெண்பாக்கள் கூறப்பெறின், இரண்டாவதனை முதலிற் கூறிய துறையின் பக்கம் என்று எண்ணுதலும் இலக்கண விளக்கத்தார் மரபாகும். சான்றாக, வஞ்சிப்படலத்தில் பேராண் வஞ்சி என்ற துறைக்கு விளக்கமாக இருவெண்பாக்கள் தரப்பட்டன (பு. வெ. மா. 44, 45). இவற்றுள் முன்னதைப் பேராண் வஞ்சி என்றும் பின்னதைப்பேராண் வஞ்சியின் பக்கம் என்றும் வைத்தியநாத நாவலர் எண்ணி இலக்கணம் கூறியுள்ளார்.

பு. வெ. மாலையில் இறுதியில் காணப்பெறும் ஒழிபியலைப் பின்பற்றியே இவரும் ஒழிபு கூறிய திறத்தினை முன்னர்க் கூறியுள்ளோம். இரண்டு ஒழிபுகட்கும் வேறுபாடுண்டு. இதனைப் பின்னர் எடுத்துப் பேசுவோம்.

இனி, 18 ஆம் நூற்றாண்டில் எழுந்த தொன்னூல் விளக்கம் என்ற நூலில் புறப்பொருள் இலக்கணம் இயம்பப் பெறும் இயல்பினை எண்ணிப் பார்ப்போம்.

6. தொன்னூல் விளக்கம்

இந்நூலின் ஆசிரியர் வீரமா முனிவர். பெஸ்கி என்பது இவர் இயற்பெயர். இவர் இத்தாலி தேசத்தவர். கிறித்தவநெறியைப் பரப்பும் நோக்கில் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னாட்டிற்கு வந்தவர். சுப்பிரதிபக் கவிராயரிடம் முறையாகத் தமிழ் கற்றவர். இந்த நூலைக்கூட முனிவர் பெயரில் கவிராயரே எழுதினார் என்பர்.

ஐந்திலக்கணம் கூறும் இந்நூலின் மூன்றாம் பகுதி பொருளதிகாரம் ஆகும். இதனுள் பொருள் இலக்கணம் கூறப்பட்டது. உறுதிப்பொருள் நான்களுள், "பொருள்நூல் தந்த செந்தமிழ் உணர்ந்தோர். மற்றையாவுமொழிய அகப்பொருளெனச் சிற்றின்பம் ஒன்றையும், புறப்பொருளெனப் படைச்சேவகம் ஒன்றையும் விரித்துரைத்தார்" (தொ. வி. ப. 99) என்று குறித்துள்ளார். இவ்வதிகாரத்தில் பல்வேறு செய்திகளை ஆசிரியர் கூறியிருப்பினும் புறப்பொருள் தொடர்பான செய்திகளை மட்டும் இங்கு நோக்குதல் வேண்டும். சொல்லுரிமை என்னும் பகுதியில் அகம், புறம் பற்றிய பொதுக் கருத்துக்கள் தொகுத்துரைக்கப்பெற்றன. முனிவர் அகம் புறம் எனப் பொருள் இரண்டே என்ற கருத்தினர் (நூ. 199), புறப்பொருளை,

"...............
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பைஏழ் புறத்திணை
பகைநிரை யோட்டல் தன்னிரை மீட்டல்
பகைமேற் செல்லப் பகைக்கெதி ரூன்றல்
தன்னெயிற் காத்தல் பகைக்கெற் கொள்ளல்
போர்வெல்லல் எனமுறை புறப்பொருள் திணையே"

(நூ. 199)

என்று தொகுத்து எண்ணினார். கரந்தை, தொச்சி என்பன வற்றையும் இவர் தனித்திணைகளாக எண்ணியதால் பு. வெ. மா. நெறியினைப் பின்பற்றியவர் எனலாம். உழிஞை என்ற சொல் பின்னோக்கி இயைதல் (Regressive Assimilation) என்னும் ஒலிவிதி பற்றி உழுஞை என்று முனிவரால் ஒலிக்கப்பெற்றது போலும்! அல்லது அச்சுப்பிழை ஆகலாம். ஒவ்வொரு திணைக்கும் உரிய போர்த்தொழிலை நிரல் நிலையே எண்ணிக் கூறுதல் ஒரு சிறப்பு. எனின், தும்பைத்திணை என்பதற்குப் போர் வெல்லல் எனப் பொருள் விரித்தல் பொருந்துமாறில்லை. தும்பை பெரும் போல் விளைத்தல் ஆகும். வாகைத்திணைதான் போர்வெல்லல் என்னும் நிகழ்ச்சியைக் குறிப்பது. போர்த்தொழில்களைச் சேவகம் என்று இந்நூல் உரை சுட்டியது. ஏனைய உரைகளில் மேற் கோளாகக் காட்டப்பெறும், "வெட்சி நிரைகவர்தல்" என்ற பாடலை இதன் உரையிலும் காணலாம். இது திவாகரநிகண்டில் முதன்முதல் இடம் பெற்றது.

வெட்சித்திணை முதல் தும்பைத்திணையீறாக வரும் ஏழு திணைகளுக்கும் இந்நூலில் துறைகள் கூறப்படவில்லை. ஆதலின், உரையாசிரியர் இவற்றுக்குப் பு. வெ. மாலையில் கூறப்பெற்ற துறை விளக்க நூற்பாக்களை எடுத்துக் காட்டியுள்ளார். இதே நூலில் ஒழிபுக்குப் பின்னர் காணப்பெறும், 'வெட்சி கரந்தை...... மொழிப'', ''வாகை பாடாண் பொதுவியல், புறப்புறம் ஆகும்'' என்ற இரு நூற்பாக்களையும்கூட தொ.வி.உரை உடுத்தாண்டது.

புறப்பொருள் இலக்கணம் பற்றிய பழைய செய்திகளையே இந்நூல் பெரிதும் பேணியது. தம் காலத்துப் போர் மரபுகளை முனிவர் கூறாமை சுட்டத்தக்கது.

7. சுவாமிநாதம்

இந்நூலின் ஆசிரியர் சுவாமி கவிராயர். கல்லிடையூர் இவர் பிறந்த இடம். காலம் கி. பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்பர். இதுவும் ஐந்திலக்கண நூலே ஆகும் இதற்கு விருத்தி உரை உண்டு. விநாயகர்க்கு காப்பு உரைப்பதால் இந்நூலாசிரியர் சைவராவர். இந்நூல் எண்சீர் விருத்தத்தினால் இயற்றப்பெற்றது; அந்தாதித் தொடையினால் அமைந்தது.

இந்நூலின் பொருளதிகாரத்தில் புறத்திணை மரபு நூ. 129—151 வரை 23 எண்சீர் விருத்த நூற்பாக்களில் கூறப்பெற்றது.

'அதற்கு இது புறம்' என்று கூறும் வகையிலும், வெட்சி முதல் பாடாண் வரை புறத்திணை ஏழே என்று எண்ணிய முறையிலும் இந்நூலார் தொல்காப்பியரையும் வைத்தியநாத நாவலரையும் அடியொற்றிச் சென்றுள்ளார். ஊன்றி நோக்கின், வெட்சியின் இரண்டாம் பகுதியில் கரந்தைக்குரிய துறைகளையும், உழிஞையின் இரண்டாம் பகுதியில் நொச்சிக்குரிய துறைகளையும், நிலையாமைப்பொருள் கூறும் காஞ்சித்திணையின்கீழ் எதிரூன்றுதலாகிய காஞ்சிக்குரிய துறைகளையும் சாமிகவிராயர் அடக்கி ஓதியுள்ளார். இங்ஙனம் இலக்கணம் கூறிய வகையில் இவர் இலக்கணம் விளக்கம் செய்த வைத்தியநாத நாவலர்க்குப் பெரிதும் கடன் பட்டவர் என்பதில் ஐயமில்லை. மகடூஉ முன்னிலை அமைத்துப் பாடுதல் இவர் இயல்பு.

நூ. 129இல் 'நிரைகவர் கொன்றுரைத்தல்' என்பது 'நிரைகவர் கென்றுரைத்தல்' என்றும், நூ. 132இல் 'வஞ்சி ஆடல்'என்பது 'வஞ்சி சூடல்'என்றும், நூ. 134இல் 'அதிகுழிஞை' என்பது அதிருழிஞை என்றும் இருத்தல் வேண்டும். இவ்வாறு இந்நூலின் மூலப்பாடங்களை ஒழுங்கு செய்ய வேண்டிய பல இடங்கள் உள்ளன.

இவர் பொதுவியல் என்ற திணைக்குரிய துறைகளையும் தொகுத்துக் கூறியுள்ளார் (நூ. 147—151). இவ்வரிசையில் சிறு பிரபந்தங்கள் உறுப்புக்களும் எண்ணப்பெற்றிருத்தல் சிறப்பாகக் குறிப்பதற்கு உரியது.

8. முத்து வீரியம்

இந்நூலும் ஐந்திலக்கணம் கூறுவதே. இதன் ஆசிரியர் முத்துவீர உபாத்தியாயர். இந்நூல் ஆசிரியரால் பெயர் பெற்றது இவர் கி. பி. 19ஆம் நூற்றாண்டினர். உறையூரினர். இரு மொழியிலும் வல்லவர். சிறந்த போதகாசிரியர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ்க்குச் சிறப்பு பாயிரம் செய்தவர். பெரும்பாலும் பழைய நூல்களின் கருத்துக்களையே நூற்பாயாப்பில் வழங்கியவர் இந்நூலின் உரையாசிரியர் திருப்பாற்கடல்நாதன் கவிராயர்; திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.

முத்துவீரியத்தின் மூன்றாவது பகுதியாகிய பொருளதிகாரத்தில் 819—828 முடியவுள்ள பத்து நூற்பாக்களில் புறப்பொருள் இலக்கணம் சுருக்க விளக்கமாகக் கூறப்பெற்றது.

தொல்காப்பிய நெறியை அடியொற்றி,

''புறத்திணை அகத்திணைப் புறம்ஆகும்மே'' (நூ. 819)

என்று இலக்கணம் கூறினார். புறத்திணைகளை,

''அதுதான்,
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை வாகை
எச்சப் படலமோ டிவையென மொழிப'' (நூ. 820)

என்று எண்ணினார். கரந்தை, காஞ்சி (எதிருன்றுதல்), நொச்சி ஆகியவற்றைத் தனித் திணைகளாகக் கொண்டமையின் இவர் பு.வெ.மாலையினைப் பின்பற்றியவர் என்பது தெளிவு. எச்சப்படம் என்பது பொதுவியல் அல்லது ஒழிபியலைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஒவ்வொரு திணையை விளக்கத் தனித்தனி நூற் பாக்களைத் தந்திருக்கிறார். (நூ. 821—828). எனின், அவற்றுக் குரிய துறைகளைத் தொகுத்துக் கூறவில்லை. இதே நிலை தொன்னூல் விளக்கத்திலும் காணப்பட்டது. ஐரோப்பியர் வருகைக்குப்பின்னர் நவீன போர் முறைகள் அறிமுகம் ஆயின. அவற்றுக்கு இலக்கணம் கூறவேண்டிய கடப்பாடு இருந்தும், பழமைப் பிடிப்பிலிருந்து முற்றிலும் விடுபடா நிலையில், திணை களின் பெயர்களைக் கூறும் அளவில் மட்டுமே புறப்பொருள் இலக்கணத்தைக் கூறினார் எனலாம். பழங்கல்விப் பயிற்சியின் வெளிப்பாடே (Academic exercise) இத்தகைய முயற்சி.

இந்நூலிற்குரிய பொருளதிகாரத்தின் தொடக்கத்திலுள்ள கடவுள் வாழ்த்தும் தொன்னூல் விளக்கத்தின் பொருளதிகாரத்தின் கடவுள் வாழ்த்தும் ஒன்றாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது.

9. அறுவகை இலக்கணம்

முருகதாசர் என்று அழைக்கப்பெறும் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் இந்நூலின் ஆசிரியர் ஆவர். கௌமார நெறியினர். இவரும் கி. பி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரே (கி. பி. 1839—1898). இவர் கூறும் பொருளிலக்கணம் மரபுவழி யாக வருவதனின்றும் வேறுபட்டது. தம் நூலின் மூன்றாவது பாகத்தில்,

''அகப்பொருள் புறப்பொருள் அகப்புறப் பொருள்என
முப்பொருள் கூறுதும் முறைப்படி உணர்ந்தே''.

என்று தொடங்குகிறார். அகப்பொருள் பற்றிப் பேசுமிடத்தில் ஐந்திணைகளைச் சுட்டினார். இவர்கூறும் புறப்பொருள் முற்றிலும் வேறானது :

''புறப்பொருள் பகுதியில் பொருவில் ஐவகை
நிலத்தியல் புரைக்குதும் நிகழ்ந்த வாறே''

பின்னர் 'நிலத்தியல்பு' என்ற தலைப்பில், ஐந்திணையின் கருப்பொருள்கள் கூறப்பெற்றன.

''உழி இயல்பு'' என்ற பகுதியில் அருந்தவர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோர் வாழும் இடங்களின் வளங்களும், போர்க்களத்தின் புனைவும் பேசப்பட்டன. தெய்வப்புலவரின் இயல்பும் கூறினார்.

'வேற்றுயிர் இயல்பு' என்ற தலைப்பில் சரபம், யாளி, சிம்மம், யானை முதலிய விலங்குகள், அன்னம், மயில், குயில் முதலிய பறவைகளின் தன்மைகள் கூறப்பட்டன.

'கருவியல்பு' என்ற பகுதியில் பல்வேறு படைக்கருவிகள், உழுபடைக் கருவிகள் சொல்லப்பட்டன.

'தொகுப்பியல்பு' என்ற தலைப்பில் 'கதிர், மதி, உடு, முகில், பிறமொழித்தேயம், அண்டகோளங்கள் யாவும் புறப்பொருள் எனப் புகலப்பெற்றன.

மேலும் 'புறம்' என்பதற்கு,

''பிறவா வீடே பெறமுயன் றிருப்பார்க்கு
உடம்பும் புறம்என உரைத்தனர் உயர்ந்தோர்''

என்று விளக்கம் தந்தனர்.

அகப்புறப்பொருள் என்பதைத் தண்டபாணி சுவாமிகள் விளக்கும் விதமே வேறு. அகம் ஒருகண்; புறம் ஒருகண்; அகப்புறம் என்பது நெற்றிக்கண் என்றார்.

எனவே நாம் கருதும் புறத்திணைப் பொருண்மைக்கு அப்பாற் பட்டதாகவும் சமயப் பொருள்களைப் பேசுவதாகவும் இந்நூல் திகழ்கிறது.

முடிவுரை

தொகுத்து நோக்குமிடத்து, தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் ஆகிய இரண்டும் துறைகளைப் பற்றிக் கூறாமையின் நம் ஒப்பாய்வுக்கு அப்பால் நிற்பன. அறுவகை இலக்கணம் என்ற நூல் சமயப்பொருள் பேசுதலின், இப்போது மேற்கொண்டுள்ள ஆய்வுக்கு வேண்டப்படுவதன்று. எஞ்சிய நூல்களில் தொல் காப்பியமும் பு. வெ. மாலையுமே இருவேறு புறப்பொருள் மரபு களை அறிந்து கொள்ளுதற்குக் கருவியாகக் கிடைக்கும் முழுமை நூல்கள் ஆகும். வீரசோழியம் காரிகையாப்பில் முழுமையாகச் செய்திகளைக் கூற முடியாவிடினும் ஒப்பாய்வுக்கு உதவுவது. இலக்கண விளக்கம் முதலிரு நூல்களையும் தழுவிச் செல்வது. சுவாமிநாதம் நூற்றுக்கு நூறு இலக்கண விளக்கத்தை எடுத்துக் கூறுவது. ஆதலின் இங்கு மேற்கொள்ளப்பெறும் ஒப்பீட்டாய்வுக்கு தொல்காப்பியம், பு. வெ. மாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம் என்பனவே பெரிதும் முதன்மை ஆதாரங்களாக மேற்கொள்ளுதற்கு உரியவை ஆகும். இவற்றின் உரைகளும் நம் ஆய்வுக்கு உதவுவன என்பதையும் இங்குக் குறித்தல் நல்லது.

---

2. பொருட் பாகுபாடு

உலகின் உள்ளடக்கமாகவே பல்வேறு பொருள்கள் குறித்த ஆராய்ச்சி காலந்தோறும் நடைபெற்று வருகிறது. மெய்ப் பொருளியலார், அளவை இயலார், அறிவியலார், சமூகவியலார் ஆகிய பல்துறை அறிஞர்களும் தத்தம் அணுகு நிலைகளுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்பப் பொருள்களைப் பற்றிய ஆய்வும் பாகுபாடும் செய்துள்ளனர். இலக்கண நூலார் மொழிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்புகளைப் பல வகைகளில் சிந்தித்து ஆராய்ந்துள்ளார். பொருள் இலக்கணம் கண்ட தமிழ்ப்பெருமக்கள் வாழ்வியலை ஆதாரமாகக்கொண்டு பொருளாராய்ச்சி செய்துள்ள னர். இங்குத் தமிழ் இலக்கணத்தார் நிகழ்த்திய ஆய்வின் விளைவாக உருப்பெற்ற பொருட்பாகுபாடு பற்றிச் சிந்திப்போம்.

பல்வகைப் பாகுபாடு

பொருள்கள் யாவும் காட்சிப்பொருள், கருத்துப்பொருள் என்ற இரண்டில் அடங்கும். இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் என்றொரு பாகுபாட்டினைத் தொல்காப்பியர் சுட்டுதலைக் கிளவி யாக்கத்தில் காணலாம். முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என்ற முப்பொருள் குறித்துப் பொருளதிகாரத்தின் தொடக்கத்தில் பேசுவதைக் காண்கிறோம். மனிதர்களின் செயல் கள், ஒழுகலாறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அகம், புறம் என்றதொரு பொருட்பாகுபாட்டினை மிகவும் விரிவாகப் பொரு ளதிகாரம் எடுத்து விளக்குவதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

I. அகப்புறம்

மனிதர்கள் வாழ்வதற்கு நிலைக்களமாக விளங்கும் நிலம் பற்றிய பாகுபாடும், செயல்களின் நிலையினை அறுதியிட்டுக்

காட்டும் காலம் பற்றிய பாகுபாடும் முதற்பொருள் என்ற பகுப்பில் அடங்குவன. நிலத்தின் தரத்திற்குத்தக்க ஒவ்வொரு பருவ காலத்திலும் கருக்கொள்ளும் உயிரினங்கள், உணவு வகைகள், தொழில்கள் கட்டிடங்கள், மனித முயற்சிகள் முதலிய அனைத்துமே கருப்பொருள் என்ற பகுப்பில் அடங்குவன. உரிப்பொருள் என்பது உணர்வுப்பொருள். காதல் தொடர்பான உணர்வுகள் அனைத்துமே இப்பகுப்பில் அடங்கும். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன ஐந்தும் அவற்றின் நிமித்தமும் உரிப்பொருள் ஆகும். இந்நிகழ்ச்சிகள் அஃறிணை உயிர்களாகிய பறவை, விலங்குகளிடத்தில் காணப்பெறினும், உயர்திணை உயிர்களாகிய தலைமக்களிடமே வீறுபெற்று விளங்கு தலின், அவற்றிற்கு முதன்மைதந்து இலக்கணம் செய்தனர். எனின், இறைச்சிப்பொருள் அமைத்துப் பாடுமிடத்துப் பறவை, விலங்குகளிடையே காணப்பெறும் நேயத்தினைப் புலவர்கள் சிறப்பாகப் போற்றிப் புனைதல் உண்டு. அவற்றைக் கண்டேனும் பிரிந்திருக்கும் தலைவனுக்கு வீட்டு நினைவு வரும் என்ற எண்ணமும் அங்ஙனம் பாடுதற்கு ஓர் அடிப்படை எனலாம்.

புணர்தல், பிரிதல் முதலிய ஐவகை ஒழுகலாற்றிற்கும் முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற குறியீடுகளை வழங்குவதும் தொல்காப்பியர் கண்ட இலக்கண நெறி ஆகும். இவை தாவர விசேடத்தால் பெற்ற பெயர். அவ்வவ்வொழுக்கலாற்றிற்கும் அவ்வந் நிலத்திற்கும் ஒருவகைத் தொடர்பும் இயைபும் உண்டென்று கண்டனர். ஒருதலைக் காமம் ஆகிய கைக்கிளையும் ஒவ்வாக் கூட்டம் ஆகிய பெருந்திணையும் இலட்சியக் காதலாக எண்ணப் பெறாமையால் தாவர விசேடத்தால் அழைக்கப்பெறுவதில்லை. எனினும், கைக்கிளை யில் கூட மனத்தின் அளவில் புணர்தல் முதலியன நிகழ்தல் கூடும். பெருந்திணையிலும் புணர்தல் முதலியன நடைபெறாமல் இல்லை. அங்ஙனமாயினும், அன்பின் ஐந்திணைக்கு மட்டுமே மேற்சுட்டப் பெற்ற ஐவகை உரிப்பொருள்களும் உரியன என்று செவ்வியல் இலக்கணத்தால் வரையறை செய்தனர்.

எனின், வாழ்வியற் பொருளை இரண்டிற்குள் அடக்க முயன்ற அறிஞர்கள் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன வற்றை அகத்திணை ஏழென்று எண்ணினர். இன்பத்தை மையமாக வைத்து, வீடு என்ற எல்லைக்குள் நடைபெறும் காதல் வாழ்விற்கு ஒப்பாக வீரம், புகழ், கடமை என்பனவற்றை மையமாகக்கொண்டு இல்லம் என்ற குறுகிய எல்லையின் நீங்கிச்

சமுதாயம், நாடு என்ற பேரெல்லைக்குள் நடைபெறும் வீரவாழ்வினைப் புறம் என்றனர். அகத்திற்குப் புறத்தே நிகழும் போர் வினைகள், அவற்றில் பெறும் வெற்றி, பல்வகைத் தொழில் களினால் அடையும் மேம்பாடு, நிலையாமை உணர்வு, தக்கோரால் மதிக்கப்பெறும் புகழ் முதலிய பல்வகைப் பொருள் களையும் வெட்சி முதல் பாடாண் வரை எண்ணப்பெறும் எழுவகைப் புறத்திணைக்குள் அடைவு செய்தனர்.

எனவே, அகம் புறம் என்ற பாகுபாட்டிற்குள் மனித குலத்தின் வரலாறு அனைத்தும் அடங்கிவிடும் என்று கருதலாம். இப்பாகுபாடு மிகவும் தொன்மை சான்றது. இப்பாகுபாட்டின் முழுமையான சிறப்புக்களையும் அறிந்து கொள்வதற்கு இப்போது கிடைக்கும் முதல் நூல் தொல்காப்பியமே ஆகும். பிற்காலத்துத் தோன்றிய நூல்களில் இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் இப்பாகு பாட்டினை ஆதரிப்பன.

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் பொருட்பாகுபாடு செய்யும் முறையில் சிற்சில மாற்றங்கள் தோன்றின. பொருளி யல்புகளை நுனித்தறிந்து, தனித்தன்மை கண்டு பொருட்பாகுபாடு செய்தற்கு எழுந்த முயற்சியின் விளைவாக அகம், புறம், அகப்புறம் என்ற பாகுபாடும், அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்ற பாகுபாடும் செய்யப்பெற்றன. இவற்றுள் அகம், அகப்புறம், புறம் என்ற பாகுபாடு குறித்து முதலில் நோக்குவோம்

2. அகம், அகப்புறம், புறம்

அகத்திணை ஏழனுள், நுணுகிநோக்கின் இரு மருங்கும் வழங்கும் அன்பமர் காதல் ஐந்திணைக்கு உரியது. ஆதலின் எஞ்சிய கைக்கிளை, பெருந்திணைகளை ஐந்திணைக்கு நிகரான அகம் என்று கொள்ளத் தயங்கினர் ஒரு சார் ஆசிரியர்கள். அவற்றைப் புறம் என்று தள்ளவும் அவர்களால் முடியவில்லை. ஏதோ ஒரு வகையில் இவ்விரு திணைகளிலும் அன்பு ஊசலாடு வதை அறிந்த அவர்கள், இவ்விரண்டினையும் அகப்புறம் என்று பாகுபடுத்தினர். இப்பாகுபாட்டிற்கு அடிப்படை தொல்காப்பியத் திலேயே காணப்படுகிறது (பொருள். நூ. 25). களவியற் காரிகை என்னும் நூலின் 24 ஆம் நூற்பா உரையில் ''இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், ஒருதலைக் காமம் என்னும் அகப்புறம் உணர்த்துதல் நுதலிற்று'' என்று குறித்தல் காணத்தக்கது.

எனவே, அகத்திணை ஏழனுள் நடுநின்ற ஐந்திணையும் அகம் என்றும் முதலும் முடிவுமாய் நின்ற கைக்கிளை பெருந்திணை என்ற இரண்டினையும் அகப்புறம் என்றும் பாகுபடுத்தினர். புறத்திணை பற்றி இவர்கள் பழைய கருத்தினையே ஏற்றுக் கொண்டனர் எனலாம். இங்ஙனம் மூன்றுவகையாகப் பொருள் களைப் பாகுபடுத்தும் மரபினை,

''இனி, ஒருசாரார், 'அகத்திணை, புறத்திணை,
அகப்புறத்திணை
என மூன்றாய் அடங்கும்'' என்ப.
ஆமாறு அபிநயத்துடன் காண்க''

என்று யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் தெரிந்து கூறுதல் கூர்ந்து நோக்கத்தக்கது. (யா. வி. ப. 573).

அபிநயனார் செய்த நூல் அபிநயம் எனப்பெயர் பெற்றது. இந்நூல் ஐந்திலக்கண நூலாதல் வேண்டும். முழுமை உருவில் இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. இவர் சங்கம் மருவிய பல்லவர் காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். எழுத்து, சொல் ஆகிய இரண்டிற்கும் இவர் செய்துள்ள இலக்கண நூற்பாக்கள் உரைமேற்கோளாக வழங்கி வருகின்றது. இவர் யாப்பிற்கும் இலக்கணம் செய்துள்ளார். பொருள் இலக்கணமும் செய்தவர் என்பதற்கு மேற்சுட்டிய யா. வி. உரைப்பகுதி சான்றாகக் கருதத்தக்கது.

யா. வி. உரையாசிரியரை நன்றாக அறிந்தவர் வீரசோழிய உரையாசிரியர். பொருளை மூன்று வகையாகப் பாகுபடுத்துவோர் கருத்தினை இவரும் குறித்துள்ளார்.

''இனி ஒருசாரார் சொல்லுமாறு :
....
அகப்பொருளும் புறப்பொருளும் அகப்புறப்பொருளும் என்று
மூன்று வகைப்படுத்தும் மொழிவர்'' (வீ. சோ. ப. 117)

இக்கருத்து முற்சுட்டிய அவிநயனார் சிந்தனைப்பள்ளிக்கு உரியது. இக் கருத்தினை விளக்கும் நூற்பாக்கள் சிலவற்றையும் தம் உரையில் தந்துள்ளார். அகப்பொருளை விளக்கும் 'களவும் கற்பும்' என்ற நூற்பா யா. வி. உரையிலும் முன்பே பயிலப் பெற்றது. புறப்பொருள் பற்றிய விளக்கமாக,

''அறத்தினும் பொருளினும் அன்பினும் மறத்திறம்
வரைத்த நோக்கத்துப் புறத்திணை யாகும்''

''அவைதாம்,
வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி,
நொச்சி, உழிஞை, தும்பை, வாகை,
எச்சப் படலமோ டிவையென மொழிப''

எனவரும் நூற்பாக்களை மேற்கோள் காட்டினர். அறம், பொருள், மறம் என்ற பொருள் குறித்துவரும் புறத்திணை என்பதும், வெட்சி முதல் எச்சப்படலம் வரை கூறப்பெற்ற ஒன்பதும் புறத் திணை என்பதும் நோக்கத் தக்கன. பின்னூலாருள் முத்துவீரிய ஆசிரியர் இதே நூற்பாவினை எடுத்துக்காட்டி ஒன்பது புறத்திணை கொண்டனர். (நூ. 820). 'அவைதாம்' என்ற சொற்சீர்க்குப் பதிலாக, 'அதுதான்' என்று இவர் பயின்றனர். எச்சப்படலம் என்பது பொதுவியலைக் குறித்தது.

இனி, புறத்திணையினை எட்டாக எண்ணிய இலக்கணரும் இருந்தனர். இவர்கள் வெட்சி முதல் வாகைவரை ஏற்றுக் கொண்டு, பாடாண் திணை பொதுவியல் முதலியவற்றை விடுத்தனர்.

வீரசோழிய உரையாசிரியர் அகப்புறத்திணைக்குத் தரும் விளக்கம் ஏனைய ஆசிரியர்கள் தருவதிலிருந்து வேறுபட்டது. அகப்புறப்பொருளை, 1. அறம், 2. வாட்கை, 3. ஒருதலைக் காமம், 4. பொதுவியல், 5. பாடாண்பாட்டு, 6. கூத்தமார்க்கம் என்று ஆறாகப் பாகுபடுத்தினர். தம்கருத்திற்கு மேற்கோளாக,

''அறனும் வாட்கையும் ஒருதலைக் காமமும்
பொதுவியல் பாடாண் நயநிலைப் படலமென்
றிவைகள் அனைத்தும் அகப்புறம் ஆகும்'',

என்ற நூற்பாவை வழங்கினர். இஃது எந்நூலில் உள்ளது என்று தெரியவில்லை. ஒருவேளை இவரே எழுதிக்காட்டியிருத்தல் கூடும். இவர் சுட்டும் அறுவகைப் பொருளில் ஒருதலைக் காமம் ஆகிய கைக்கிளை ஒன்றுதான் ஏனையோர் புறப்புறமாகக் கொள்ளப்பெற்றன. எஞ்சிய மூன்றனுள் அறம் என்பது இல்லறம் துறவறம் ஆகிய இரண்டினையும் சுட்டும். இவ்விரண்டும் எங்ஙனம் அகப்புறம் ஆயின என்பது புரியவில்லை. இல்லறம் என்பது அகத் திணைக்குரிய கற்பு என்னும் கைகோளில் அடக்குவது. துறவறம்

சிறிதும் அகத்தொடர்பற்றது. புறப்புறம் ஆகிய பொதுவியல், வாகை ஆகியவற்றில் அடங்குதற்கு உரியது. வாட்கை என்பது வீரசோழியத்தமிழில் மட்டுமே வருவது. வாழ்க்கை என்பதன் மறு வடிவம். இதனை விளக்குதற்கு,

''அறுவகைத் தொழிலிலும் ஐந்துவகைப் பொருளிலும்
உறுபுகழ் மன்னவர் உறவொடு நிலவ
மறுகில் வாட்கை வாட்சி யாகும்''

என்றொரு நூற்பாவினைத் தருகிறார். வாழ்ச்சி என்பது வாட்சி என வந்தது. இதில் கூறப்பட்ட பொருள் வாகைத்திணைக்கு உரியதாகக்கொள்ளத் தக்கது.

இனி, நயநிலைப்படலம் என்பது நாடகத்தைக் குறிக்கும் என்றும் கூத்தமார்க்கம் என்றும் உரைத்தனர்.

அது பெரியோரைத் தலைமக்கள் ஒளி மேவச் செயல்பட்ட மெய்ப்பொருள் பற்றி வருதல். சிறியோரைத் தலைமக்களாக்கி ஒளியும் விருத்தியும் சாதியும் சந்தியும் சுவையும் முதலாகப் பல விகற்பத்தானும் வரும்''. இவ்விளக்கம் கூத்த நூலுடன் தொடர்புடையதே தவிர அகப்புறம் என்னும் பொருட்பாகுபாட்டுடன் எந்த அளவில் ஒத்துவரும் என்பது தெளிதற்கில்லை. அவர் காலத்தில் வழங்கிவந்த பொருட்பாகுபாடு பற்றிய ஏதோ ஒரு மரபினை இங்குக் குறித்துள்ளார் என்றே எண்ணுதல் வேண்டும்.

இனி, பொருளை நான்குவகையாகப் பாகுபாடு செய்த இலக்கண நூலார் கருத்துக்களைக் காண்போம்.

3. அகம், அகப்புறம், புறம், புறப்புறம்

யாப்பருங்கலத்தின் ஒழிபியல் நூற்பாவில் (96) ''எண்ணிய திணையும்'' என்று குறிக்கப்பெற்றது. அறிவுக்கடலாக விளங்கும் விருத்தியுரையாசிரியர், பல்வேறு இலக்கண நூல்களில் திணைகள் எவ்வெவ்வாறு எண்ணப்பெற்றன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தம் காலத்தில் (கி.பி. 10 நூ) நான்குவகையாக எண்ணிய மரபினைச் சுட்டுகிறார்.

''இனி, திணையாவன நான்குவகைய:
அகத்திணை, அகப்புறத்திணை,
புறத்திணை, புறப்புறத்திணை என''(யா. வி. ப. 569)

இக்கருத்தை வலியுறுத்தும் வகையில்,

''அகமே அகப்புறம் புறமே புறப்புறம்
எனநான் கென்ப திணையின் பகுதி''

என்றொரு நூற்பாவின் மேற்கோள் தந்துள்ளார். அகத்திணையினை விளக்குவதற்கு இப்போது வழக்கொழிந்த ஒரு நூலினின்றும் சில நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளார். அகப்புறம் என்பதை விளக்கவும் அவ்வாறே மேற்கோள்காட்டுகிறார். இவை வீரசோழிய உரையிலும் வந்துள்ளன. காந்தள், வள்ளி, சுரநடை, முதுபாலை, தாபதம்ம, தபுதாரம், குற்றிசை. குறுங்கலி பாசறை முல்லை, இல்லாள்முல்லை என்ற பத்தும் கைக்கிளை பெருந்திணை என்ற இரண்டும் அகப்புறம் என்கிறார். இவற்றுள் முதலிற் சொல்லப்பெற்ற பத்தினையும் பிற்சொல்லப்பெற்ற இரண்டிற்குள் ஒருவாறு அடக்கிக்கூறுதல் கூடுமாதலின், அகப்புறம் என்பன கைக்கிளை பெருந்திணை என்ற இரண்டே எனச் சுருக்கமாகக் கொள்ளலாம். இவ்விரண்டிற்கும் தொல்காப்பிய நூற்பாக்கள் இருப்பவும் வேறு சிலவற்றை எடுத்துக் காட்டுகிறார். அவற்றை இங்குக் காண்போம்.

1) கைக்கிளை தானே கூறுங் காலைக்
கூட்டமில் கிளவிக் கைக்கிளை அகப்புறம்''

2) ''பெருந்திணைப் பொருளே பொருந்தக் கூறின்
அறத்தின் இயன்ற அகத்தொரு புணராத்
திறத்த தென்ப திறனறிந் தோரே''

3) ''நிலையா அன்பின் நீடா இன்பத்
துலகமலை வெல்லாம் பெருந்திணை அகப்புறம்''

இதன் நூற்பாக்கள் இவ்வுரையாசிரியர்காலத்தில் பொருளிலக்கண நூல் ஒன்றில் இடம் பெற்றனவாதல் வேண்டும். தொல்காப்பியர் கைக்கிளைக்குக் கூறிய ''காமம் சாலா இளமையோள்வயின்'' என்ற நூற்பாவின் பொருண்மையும், பெருந்திணைக்குக் கூறிய ''ஏறிய மடல்திறம்'' என்ற நூற்பாவின் பொருண்மையும் மேற்சுட்டியவற்றில் காணப்பெறாமை கருதத்தக்கது. இவ்விரண்டையும் தொல்காப்பியர் அகத்திணைக்குள் அடக்கிக் கூறியவர். மேலே காட்டிய நூற்பாக்களின் ஆசிரியர் அகப்புறத்திணைக்குள் அடக்கிக் கூறியவர். ஆதலின் இவ்விரண்டும் அகப்புறம் என்று கொண்ட பொருள் இலக்கணத்தார் கருத்தினைக் கூற வேண்டிய இடத்தில்

யா. வி. ஆசிரியர் தொல்காப்பிய மேற்கோள் தரவில்லை என்று கருத வேண்டும்.

பொருளை நான்காகப் பாகுபாடு செய்தவர்கள் புறத்திணையினை ஏழென்று எண்ணினர். தொல்காப்பியரும் ஏழென்றுதான் எண்ணியுள்ளார். ஆயினும், நாற்பொருள் கொள்கையர் எண்ணியவை தொன்னூலார் எண்ணியவற்றின்றும் வேறுபடுதல் சுட்டுதற்கு உரியது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை என்பன ஏழும் புறத்திணை என்றனர்;

''வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை என்றாங்கு
இத்திறம் ஏழும் புறன்என மொழிப''

''வெட்சி முதலாத் தும்பை ஈறாச்
செப்பிய ஏழும் புறப்பொருள் ஆகும்''

என்ற நூற்பாக்களை யா.வி.ஆசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். (ப. 571) தொன்னூல் விளக்கமும் இக்கருத்தினை வழிமொழிதல் சுட்டத்தக்கது (நூ. 199) புறப்பொருளைச் சேவகம் என்று இந்நூல் குறித்தது. இவை அனைத்தும் போர்த் தொடர்புடைய மறத் திணைகள் ஆகும்.

எனின், தொல்காப்பியர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழும் புறத்திணை என்றார். இவ்விரு பட்டியல்களையும் உறழ்ந்து நோக்கின், வாகை, பாடாண் என்பன முற்சுட்டியவரால் புறமாகக் கொள்ளப் பெறவில்லை என்பதும், கரந்தை, நொச்சி முதலியன தொன்னூலாரால் தனித் திணைகளாக எண்ணப்பெறவில்லை என்பதும் தெளிவு. இவற்றை தனித்திணையாக எண்ணிய இலக்கண ஆசிரியர்கள் யா. வி. காலத்திற்கு முன்பு இருந்துள்ளனர். அவருள் பன்னிருபடலம் செய்தவர்கள் அவரால் குறிக்கப் பெற்றார்.

அகப்புறம் என்பது நேராக அகத்துடன் முழுநிலையில் தொடர்பு பெறாதது போல், புறப்புறம் என்ற பாகுபாடும் நேராக புறத்துடன் முழுநிலையில் தொடர்பு பெறுவதில்லை. அகத்திற்குப் புறமாகக் கைக்கிளை பெருந்திணை கருதப்பெற்றதுபோல், புறத்திற்குப் புறமாக வாகை, பாடாண், பொதுவியல் என்ற மூன்று திணைகளும் எண்ணப்பெற்றன. யா. வி. உரையாசிரியர்,

''புறப்புறம் ஆவன: வாகையும், பாடாண் பாட்டும்,
பொதுவியல் திணையும் எனக்கொள்க'',

என்று எழுதியுள்ளார். இவற்றுள் பாடாண் பாட்டும் என்று காணப் பெறினும் பாடாண் திணையும் என்றே கொள்ளுதல் வேண்டும். பாட்டுவேறு, திணைவேறு ஆதலின், தம் கருத்திற்கு தரும் வகையில் தொல்காப்பிய அகத்தியமுடையார், வாய்ப்பியனார் என்பார் செய்துள்ள நூற்பாக்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்விருவரும் சங்கம் மருவிய பிற்காலத்தவர்களாகத் தோன்று கின்றனர்.

புறப்பொருளைப் புறம் 7, புறப்புறம் 3, அகப்புறம் 2ஆகப் பன்னிரண்டு என்று எண்ணி இலக்கணம் கூறிய நூல்களில் புறப் பொருள்வெண்பா மாலையினையும், அதற்கு முதனூலாகிய பன்னிருபடலத்தையும் மேற்கோளாகக் குறிப்பிடுதல் காணலாம் (ப. 571). இதனால், இவர் காலத்தில் இவ்விரு நூல்களும் சுட்டுதற் குரிய அளவில் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தன என்று தெளியலாம்.

கி. பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புத்த மித்திரனார் இப்பின்னூல்களின் கருத்தையே ஏற்றுக்கொண்டனர். வீரசோழியத்தில்,

''ஆற்றும் அகமே புறமே அகப்புறம் அன்றிவெற்றி
போற்றும் புறப்புறம் என்றாம் பொருள்; அளப்பான் அளவை
ஏற்றும் பிரமேயம் என்றும் வகுப்பர்; இவையுமன்றிச்
சாற்றும் புலவரும் எண்ணிறந் தார்என்பர் தாழ்குழலே''
(கா. 84)

என்று இயம்பப்பெறுதல் எண்ணற்பாலது. பொருளைப் பல்வேறு வகைகளில் பாகுபாடு செய்யும் போக்கினை இக்காரிகையின் பிற்பகுதி தெளிவுறுத்துகிறது.

பொருளிலக்கணத்தாருள் தொல்காப்பிய நெறியை ஏற்றுக் கொண்டவர்கள் பன்னிருபடலத்தார் நெறியை உடன்படவில்லை என்பதும் இங்குச் சுட்டுதற்கு உரியது. அகங்கை இரண்டுடை யார்க்குப் புறங்கையும் இரண்டாக அமையுமே அன்றி நான்காக ஆகாதவாறுபோல, அகத்திணை ஏழற்கும் புறத்திணையும் ஏழாக அமைவதே சரி என்றும், பன்னிரண்டாக எண்ணுதல் சரியன்று என்றும் நச்சினார்க்கினியர் துணிந்து கூறினர். அகங்கை, புறங்கை என்ற உவமையின் ஆற்றலினால், அகம், புறம் ஆகிய இரண்டிற்கும்

உள்ள நெருக்கமான இயைபும் தொடர்பும் தெற்றெனப் புலனாகும். இவற்றை நாணயத்தின் இருபக்கம் என்றும் மதிக்கலாம்.

பொருள்கள் ஒன்றிற்கு ஒன்று இருக்கும் நெருக்கநிலைக்கு ஏற்ப அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்று பாகுபடுத்துதல் பொருள் இலக்கணத்தில் மட்டுமன்றிப் புணர்ச்சி இலக்கணத்திலும் பார்க்கிறோம். அகக்கருவி, அகப்புறக்கருவி, புறக்கருவி, புறப்புறக் கருவி என்றும், அகச்செய்கை, அகப்புறச்செய்கை, புறச்செய்கை, புறப்புறச் செய்கை என்றும் பாகுபடுத்திப்புணர்ச்சி இலக்கணத்தை தொல்காப்பிய உரையாசிரியர்கள் விளக்கினர். சமயங்களையும், அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என்று பாகுபடுத்தும் முறையினை இங்குச் சுட்டுதல் வேண்டும்.

திணையும் உறுதிப்பொருளும்

வாழ்வியற் பொருளைத் தமிழர்கள் அகம், புறம் என்று எண்ணினர். வடமொழிவாணர் புருஷார்த்தம் எனப்படும் உறுதிப் பொருள்களாகக் கணித்தனர், இதனைத் தருமம், அருத்தம், காமம் என்று மூன்றாக எண்ணுதல் வடமொழி நூல்களில் காணப் படும் பழைய முறை என்பது கல்ப சூத்திரங்களினால் அறியப் படுகிறது. இம்மூன்றினையும் திரிவர்க்கம் என்பர். இதனைப் புறநானூற்றுப் புலவர் கூறும் ஊதியம் என்ற குறியீட்டுடன் தொடர்பு படுத்தலாம். அறம், பொருள், இன்பம் என்றும் முப்பொருள் என்றும் முப்பால் என்றும் சுட்டுதல் தமிழ் மரபு. வீடு பேற்றினையும் (மோட்சம்) சேர்த்துச் சதுர்வர்க்கம் என்று எண்ணு தல் வடமொழி வழக்கில் பிற்காலத்து எழுந்தது. இதனைத் தமிழில் நாற்பால் என்பர்.

திரிவர்க்கம் எனப்படும் முப்பால் கோட்பாட்டினையும் அகம், புறம் என்னும் திணைக் கொள்கையினையும் ஒப்பிட்டாராய்ந்த வர்கள் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட இளம்பூரணரும் நச்சினார்க்கினியருமே ஆவர். இவர்கள் கருத்தின்படி இன்பம் என்ற உறுதிப்பொருள் அகத்திணையின்கண்ணும், அறம், பொருள் என்பன இரண்டும் புறத்திணையின் கண்ணும் அடங்குவனவாகும். திரிவர்க்கம் தோன்றுவதற்கு முன்பே அகம், புறம் என்னும் துவி வர்க்கக் கோட்பாடு தோன்றியிருத்தல் வேண்டும் என்பதும் இதுவே இந்திய மண்ணின் பழைய மரபு என்பதும் உய்த்து உணர்வார்க்குப் புலனாகும். அகம். புறம் ஆகிய இருபெரும் வாழ்வியல் நெறிகளை மண்வாசனையுடன் விளக்கிக் கூறும்

பொருட்டே தொல்காப்பியர் பொருளதிகாரத்தை வரைந்துள்ளார். பொருளதிகாரம் என்ற பெயரிலுள்ள பொருள் என்ற சொல் செய்யுளில் பாடுதற்கு உரிய பாடுபொருளாகத் திகழும் மக்களின் வாழ்வியலாகிய அகம், புறம் ஆகிய இரு பொருள்களையே சுட்டுகிறது எனலாம். எனினும், தொல்காப்பியர், 'இன்பமும் பொருளும் அறனும்' (பொருள் நூ. 89) என்றும், அந்நிலை மருங்கின் அறமுதலாகிய 'மும்முதற் பொருட்கும்' (நூ. 411) என்றும் உறுதிப்பொருள்களையும் எண்ணியுள்ளார். என்றாலும், அவர் காலத்திற்கு மிகவும் முற்பட்ட தமிழ்ச் சான்றோர்கள் அகம், புறம் என்றே வாழ்வியலுக்குரிய பொருளை ஆராய்ந்து உணர்த்தினார்கள் என்று தோன்றுகிறது. அவர் காலத்தில், அல்லது அவருக்குச் சற்று முன்பு முப்பால் கொள்கை முளைத்திருத்தல் வேண்டும். சங்க மரபுகளிலும் அகம், புறம் என்ற பாகுபாடே தலைமை பெற்றுள்ளது.

வீரசோழிய உரையாசிரியர் பொருட்படல உரையில்,

> ''இனி ஒருசாரார் சொல்லுமாறு: அறமும் அறக்காரணமும்,
> பொருளும் பொருட்காரணமும்
> இன்பமும் இன்பக் காரணமும் என்றிவ்வகைப் படுத்தும்......
> மொழிவர்'' (ப. 117)

என்று கூறுதல் நோக்கத் தக்கது. தொல்காப்பிய உரையாசிரியர்களை ஓரளவு பின்பற்றி உறுதிப்பொருள் பற்றிய தம் கருத்தினைப் பொருள் இலக்கணம் கூறும்பகுதியில் பெருந்தேவனார் பொறித்துள்ளார் எனலாம். இத்தகைய பொருட் பாகுபாடு நீதி நூலார் நெறிநின்று வகுத்துக் கூறப் பெற்றதாகக் கொள்ளுதல் வேண்டும்.

திருக்குறள் கூறும் உறுதிப்பொருள் என்ற நம் நூலில் இத்திறம் எல்லாம் விரிவாக விளக்கப் பெற்றிருத்தல் இயைபு கருதி இங்குச் சுட்டுதல் தகும்.

ஆய்வின் முடிபுகள்

இவ்வியலிற் கண்டறிந்த உண்மைகளை இங்குத் தொகுத்துக் கூறுதல் தகும்.

1) வாழ்வியல் பொருட் கூறுகளை அகம், புறம் என்று பகுத்துக் காணும் கோட்பாடு தமிழ் நூல்களில் மட்டுமே காணப்படுகிறது.

2) காலப்போக்கில் அகம், அகப்புறம், புறம் என்றும், அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்றும் பொருட் பாகுபாடு செய்யும் மரபு தோன்றியது.

3) பொருளை நான்கு வகையாகப் பாகுசெய்தவர்கள் அடிச்சுவட்டில், எழுத்திலக்கணத்தை அகக்கருவி, அகப்புறக் கருவி, புறக்கருவி, புறப்புறக் கருவி என்று நான்காகவும், சமய தத்துவங்களை அகச்சமயம், அகப்புறச் சமயம், புறச்சமயம், புறப்புறச் சமயம் என்று நான்காகவும் பாகுபாடு செய்யும் மரபு தோன்றியிருத்தல் வேண்டும்.

4) அகத்திற்கும் புறத்திற்கும் தொடர்பும் இயைபும் கற்பிப்பதன் வாயிலாகத் தொல்காப்பியரும் உரையாசிரியர்களும் வாழ்வியல் முழுமையிலும் ஊடுருவி நிற்கும் ஒருவகை ஒத்திசைவினை உள்ளுணர்வினால் உணர்ந்து, உணர்த்த முயன்றுள்ளனர் என்று எண்ணலாம்.

5) திணைக்கோட்பாடு வரலாற்றுப் போக்கில் உறுதிப் பொருள் பற்றிய கொள்கை வளர்ச்சி பெறுதற்கு அடிப் படையாக விளங்கியது எனலாம்.

6) வடமொழி நூல்களில் கூறப்பெறும் புருஷார்த்தம், திரிவர்க்கம், சதுர்வர்க்கம் என்பன, பழந்தமிழ் நூல்களில் வழங்கப்பெறும் ஊதியம், முப்பால், நாற்பால் என்பன வற்றுடன் ஒருபுடை ஒப்புமை உடையன.

7) தமிழர்கள் வரையறை செய்துகொண்ட அறம், பொருள், இன்பம் என்ற கொள்கைக்கும் வடமொழியாளர் வகுத் துரைத்த தருமம், அருத்தம், காமம் என்ற கொள் கைக்கும் அடிப்படையில் வேறுபாடுகள் காணப்பெறு கின்றன. இவை அவ்வம் மக்களின் கலை, பண்பாடு, சமூகச்சூழல்கள் முதலியவற்றைப் பொறுத்து அமைந்தன எனலாம்.

8) இன்பத்தை முதலாக வைத்து எண்ணும் மரபு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. இதனால், உலகியல் இன்பத்திற்குப் பண்டைத் தமிழர் வழங்கிய முதன்மை புலப்படும். அறம் முதலாக எண்ணும் மரபினைச் செய்யுளியலில் காணலாம்.

9) திரிவர்க்கம் தோன்றுவதற்கு முன்பே அகம், புறம் என்ற துவிவர்க்கம் தோன்றியிருத்தல் வேண்டும் என்பதும், இதுவே இந்திய மண்ணின் பழைய மரபு என்பதும் அறியத்தக்கவை.

10) புறப்பொருள் கூறுபாடுகளை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்று எழுதிணையாக அடைவு செய்யும் மரபு தொல்காப்பியத்தில் காணப் பெறுவதால், அதுவே பழமை வாய்ந்த புறப்பொருள் மரபாகத் தோன்றுகிறது.

11) வெட்சியின்கண் கரந்தையினையும், உழிஞைக்குள் நொச்சியையும் அடக்கிய தொல்காப்பியர், வஞ்சியின் கீழ்க் காஞ்சியினை அடக்கிக் கூறவில்லை. எனவேதான், அதனிடத்தில் தும்பைத்திணை கூறப்பட்டதாக இளம்பூரணர் எண்ணினர்.

12) புறப்பொருள் இலக்கணத்தாருள் ஒருசாரார், வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை என்பன ஏழுமே புறத்திணை என்று எண்ணியுள்ளனர்.

---

3. வெட்சித்திணை

1. திணைவிளக்கம்

தொல்காப்பியர் முதலிற் சுட்டுவது வெட்சித்திணை ஆகும். இத்திணைக்கு விளக்கம் கூறும் வகையில்,

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்" (நூ. 60)

எனவரும் வரையறை நூற்பாவினை அமைத்துள்ளார். பண்டைக் காலத்தில் ஒரு நாட்டின் செல்வம் ஆநிரைகளாக அமைந்தன, ஆதலின், பகைவர் நாட்டின் ஆநிரைகளைக் கவர்ந்து கொள்வதன் வாயிலாகத் தனது நாட்டின் செல்வத்தைப் பெருக்க முடியும் என்று பண்டைய வேந்தர்கள் எண்ணினர். எனவே, பொருளாதாரத்தைப் பெருக்கும் நோக்கில் வெட்சிப்போரினை வேந்தர் நாடினர். அன்றியும், ஒரு நாட்டில் போர் தொடுக்குங்கால், அந்நாட்டிற் குரிய வலிமை குன்றியவர்கள் பாதுகாப்பிற்குரிய இடத்தை அடையுமாறு முரசறைவித்தல் அக்காலத்துப் போர் மரபாகும் என்பது புறநானூற்றுப் பாடலினால் தெளிவாகும். (9). இவ்வரிசையில் முதலில் ஆக்கள் சுட்டப் பெறுகின்றன. அரசர் ஏவிய வழியே வெட்சிவீரர்கள் பகைவேந்தரின் நிலத்திலும் மலைப்பகுதிகளிலும் மேய்ந்து கொண்டிருக்கும் ஆநிரைகளைக் கவர்ந்து கொண்டுவந்து அவற்றை மீளவிடாமல் பாதுகாத்தல் வேண்டும். இதுவே வெட்சிப்போரின் இலக்கணம் ஆகும். 'ஆதந்து ஓம்பல்' என்றதால் அவற்றுக்குப் போதிய தீவனம் அளித்துக் காத்தல் கடமை என்பதும் புலனாகும். இந்த வீரர்கள் தாம் மேற்கொள்ளும் போர்ச் செயலுக்கு அடையாளமாக

வெட்சிப்பூ அணிதல் மரபு. அகவாழ்விலும் புறவாழ்விலும் மலர்க்குச் சிறப்பிடம் வழங்கியிருத்தல் சுட்டுதற்குரியது.

அரசன் ஏவிய பொழுதான் மறவர்கள் ஆநிரைகளைக் கவரச் செல்லுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் குறிப்பிடும் போர் மரபு ஆகும். இதனை, ''வேந்து விடு முனைஞர்'' என்ற தொடர் விளக்குகின்றது. அரசன் ஆணையின்றி மறவரோ மக்களோ மாற்றார்க்கு உரிய ஆநிரைகளைப் பிடித்து வருதல் அராஜகச் செயல் என்பது கருத்து. அரசன் ஏவலின்றியும் இந்நிகழ்ச்சி நடைபெற்றதைப் பன்னிருபடலம் சுட்டியதை முன்னர்க் கண்டோம். அரசு என்ற நிறுவனம் நன்கு வேரூன்றா நிலையில், அரசின் ஆணையை எதிர்பாராது, மறவர் கூட்டம் செயற்பட்டதை இந்த நூல் குறிப்பாக உணர்த்துகிறது. அன்றியும் அரசு நிலைபெற்றபின்னரும்கூட, வலிமைமிக்க தலைவர்களின் செயலாகவும் தன்னுறு தொழிலைக் கருதலாம்.

2. குறிஞ்சிக்குப் புறம் வெட்சி

தொல்காப்பியர் அகத்திணை ஏழற்கும் புறனாக வெட்சி முதலிய திணைகளை இயைபுபடுத்திக் கூறியுள்ளார். அகம், புறம் என்பன நாணயத்தின் இரு பக்கம்போல் அமைவன என்ற கருத்தினை இத்தகைய இயைபு புலப்படுத்துகிறது. ஆசிரியர், ''வெட்சி தானே குறிஞ்சியது புறனே'' என்று குறித்தாரேயன்றி, அதற்குரிய காரணங்களைக் குறித்திலர். அவற்றை மரபுவழி வந்த உரையாசிரியர்கள் தம் கூர்த்த அறிவினால் எடுத்துக் கூறியிருத்தல் காணத்தக்கது.

இளம்பூரணர்,

''வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயது எவ்வாறெனின், நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின் கண் நிகழ்தலானும் ... ... பிறநாட்டு ஆனிரையைக் களவிற் கோடல் ஒருபுடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும், அதற்கு அது புறனாயிற்று என்க.

சூடும் பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்''

என்று காரணம் கூறுதல் கருதற்பாலது. நச்சினார்க்கினியர்,

''களவொழுக்கமும் தங்குற் காலமும் காவலர் கடுகினும் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீடலும் போல்வன ஒத்தலின் வெட்சி குறிஞ்சிக்குப் புறன் என்றார்''

என்று விளக்கம் தந்தனர். களவு என்பது குறிஞ்சிக்குரிய அகவொழுக்கம் ஆதல்போல, ''வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல்' வெட்சிக்குரிய புறவொழுக்கம் ஆகும். இரண்டும் இரவில் நிகழ்வன; களவாக அமைவன இருவகை ஒழுக்கங்களிலும் காவல்களைத் தப்பவேண்டிய திறமையும் ஆற்றலும் தேவைப் படுகின்றன.

புறத்திணையியலுக்குப் புதியவுரை வகுத்த நாவலர்

ச. சோ. பாரதியார்

''காதல் கண்ணிய அனைத்தகவொழுக்கங்களுக்கும் குறிஞ்சி முதலாதல்போல, அமர்கொள் மரபின்' புறத்திணைகள் எல்லாம் வெட்சியைக் கொண்டு துவங்கிதலானும், குறிஞ்சியும் வெட்சியும் ஒருங்கே களவில் நிகழ்வ ஆதலானும், ஒழுக்க முறையால் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று. இனி, நிரைமேயும் மலைச்சார்பு களவிற் கூடும் குறிஞ்சிக்கும் களவில் ஆதந்து ஓம்பும் வெட்சிக்கும் சிறந்துரியதாகவும், நள்ளிரா இவ்வீரொழுக்கங்களுக்கும் ஏற்புடைத் தாகலும், இடத்தானும் காலத்தானும் இவற்றிடை ஒருபுடை இயைபுடைமை எய்து வித்தலானும் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாய் அமையும்'',

என்று பழைய உரையாசிரியர்களின் கருத்தினை மேலும் தெளிவுறுத்தினார். பண்டைக் காலத்தில் போர் முறைகளில் முதலில் வெட்சிப்போர் நடைபெறும் என்பதும், பின்னரே வஞ்சி, உழிஞை, தும்பை முதலியன நிகழும் என்பதும் புலநெறி வழக்காகக் கொள்ளுதற்குரியன. கோட்டை கொத்தளங்கள் அமையாத பழங்காலத்தில் உழிஞைப் போர் நிகழ்ச்சிக்கு இடம் இல்லை. மேலும், வெட்சிப்போர் இன்றியும் ஏனைய போர்கள் தனித்தோ, தொடர்ந்தோ நடைபெறுதல் உண்டு. எனின், இவற்றினூடே ஒரியைபு காண்பதற்கு உரையாசிரியர்கள் முயன்றனர் எனலாம்.

இனி, வெட்சி ஒழுகலாற்றிற்குத் தொல்காப்பியர் வகுத்துக் கூறியுள்ள துறைகள் பற்றிக் காண்போம்.

3. வெட்சித்திணைக்குரிய துறைகள்

வெட்சிக்குரியவை என்று ஆசிரியர் விதந்தெடுத்துக் கூறிய துறைகள் பதினான்காகும். இதனை, ''உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே'' (நூ. 59) என்ற பகுதி சுட்டுகிறது. இந்தத் துறைகளைப் 'பலபொருட்பகுதி' என்பர் நச்சினார்க்கினியர். இவை அச்சத்தை விளைவிப்பன என்பதை 'உட்குவரத் தோன்றும்' என்ற தொடர் குறிக்கிறது. போர்ப்பயிற்சி இல்லாத ஆயர்களும் அயலாரும் வெட்சி வீரர்தம் செயல்கண்டு அஞ்சுவர் என்பதை ஆசிரியர், ''உட்குவரத் தோன்றும்'' என்று குறித்தனர் எனப் பாரதியார் விளக்குதல் அறியத்தக்கது.

வெட்சிக்குரிய துறைகளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

1. படையியங்கு அரவம்

இதுவே போர் நிகழ்ச்சி அன்று. வெட்சிப்போர் தொடங்கு வதற்கு முன்னர் அது தொடர்பாக விளையும் நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. கள்வில் ஆநிரை கவர்ந்தற்காகச் செல்லும் வெட்சி வீரர்கள் அரவமின்றிச் செல்லுவதே அவர் மேற்கொண்ட தொழிலுக்கு ஏற்றது. ஆயினும், அஞ்சாமையும் மதமும் காரணமாக அணிவகுத்துச் செல்லும் வீரர்களின் இயக்கம் அரவத்திற்கு ஏதுவாகும்.

நிரைகவர்தலை வெட்சி என்றும், நிரை மீட்டுச் செல்லுதலைக் கரந்தை என்றும் வேறு பிரித்தல் பன்னிருபடலத்தார் கொள்கையாகும். இவ்விரண்டையும் வெட்சி என்ற ஒரு திணைக்குள் அடக்கி கூறுதல் தொல்காப்பியர் கருத்து என்பதை விளங்கிக் கொண்டவர் நச்சினார்க்கினியர். எனவேதான், இங்குக் கூறப்பெறும் 14 துறைகளையும் வெட்சிக்கும் கரந்தைக்கும் பொருந்துமாறு விளக்கம் கூறியுள்ளார். ''இது முன் ஈரேழாம் என்ற துறை இருவகைப்பட்டு இருபத்தெட்டாம் என்கின்றது.'' என்று எழுதியிருத்தல் எண்ணத்தக்கது.

படையியங்கும் அரவம் என்பது வெட்சி வீரர்க்கும் கரந்தை வீரர்க்கும் உரியது என்ற வகையில் பொருள் காண்கிறார் நச்சி. ''நிரைகோடற்கு எழுந்த படை பாடிப்புறத்துப் பொருந்தும் அரவமும், நிரை மீட்டற்கு எழுந்தபடை விரைந்து செல்லும் அரவமும்'' என்பது அவர் உரைப்பகுதி.

''நிரைகவரப் படை நடக்கும் ஆர்ப்பு'' என்பர் நாவலர் பாரதியார்.

2. பாக்கத்து விரிச்சி

விரிச்சி என்பது நற்சொல் கேட்டல். பாக்கம்—படைசெல்லும் பகுதி. இது அக்காலத்து மக்களிடையே நிலவிய ஒரு நம்பிக்கை. ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தொடங்குவோர், அதன் முடிபினை முற்கூட்டியே தெரிந்துகொள்ளும் பொருட்டு இயல்பாக அக்கம்பக்கத்தில் எழுப்பும் சொற்களை ஆராய்தல் இத்துறையின் பாற்படும். பாமர மக்களிடம் மட்டுமன்றிப் படை மறவர்களிடத்தும் இப்பழக்கம் இருந்தது. விரிச்சி சாதகமாக இருந்தால்தான் வெட்சி மறவர் வினைமேற்கொள்வார் என்பது கருத்து.

நிரை கவர்வதற்குப் புறப்பட்ட வெட்சி வீரர் தாம் இரவில் செல்லும் பகுதியில் நல்வாய்ப்புட் கேட்டலும், நிரை மீட்டற்கு எழுந்த கரந்தை வீரர் வழியில் புறப்போந்தோர் கூறியவற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டலும் பாக்கத்து விரிச்சி எனப்படும் என்பர் நச்சி. புள்நிமித்தத்தைப் போலவே, வாய்சொல் நிமித்தமும் கொள்ளப்படுதலின், பின்னது வாய்ப்புள் என்று கூறப்பெற்றது. எனின், பாரதியார், 'புள்ளொலியால் நல்லதறிதல்' என்று குறித்தனர். கூகை கூவுதல், மயில் அகவுதல், காகம் கரைதல் முதலியனவற்றை இவர் குறிப்பு சுட்டுகிறது. ஆயினும், புள்ளின் அரவமே அன்றி, வலமிருந்து இடமும், இடமிருந்து வலமும் புள்ளினம், ஊர்வன முதலியன போதலின் நிமித்தமாகக் கொள்ளுதல் பழைய நம்பிக்கை ஆகும். விரிவை நிமித்த நூல்களிற் காண்க.

3. புடைகெடப் போகிய செலவு

இளம்பூரணர், 'பக்கம் கெடல் போகிய செலவு' என்றார். பக்கம் என்பது ஒற்றரைக் குறித்தது. இவர்கள் பக்கத்தில் உள்ளவர்கள். இவர்கள் மாற்றரசர் பக்கத்தாராகித் தம் நிலத்தில் நிற்பவர்கள். இவர்க்குத் தெரியாமல் வெட்சி வீரர்கள் செல்ல வேண்டும் என்பதை இத்துறை சுட்டுகிறது என்பது இளம்பூரணர் கருத்து.

வெட்சி வீரரும், கரந்தை வீரரும் தத்தம் மாற்றார்க்குரிய ஒற்றர் உணராமல் நிரைகவர்தற்கும் மீட்டற்கும் செல்லுதல்

'புடைகெடப்போகிய செலவு' என்ற துறைக்குரிய பொருள் என்பர் நச்சி.

பக்கத்து இடம் இல்லையாம்படி படை பரந்து செல்லுதல் என்பர் நாவலர் பாரதியார். இதுவே பொருத்தமாகத் தெரிகிறது. படையியங்கு அரவம் குறித்த தொல்காப்பியர், ஒற்றர்க்குத் தெரியாமல் வெட்சி வீரர்கள் செல்வதைக் கருதியிருப்பாரா ஆயின். உழை, பக்கம் போன்ற சொற்கள் அரசர்க்கு உழையராயும் அணுக்கராயும் விளங்கிப் பணிபுரியும் நம்பிக்கைக் குரியோருள் ஒற்றரும் இடம்பெறுதலின், அம்மரபு நோக்கிப் பழைய உரையாசிரியர்கள் இருவரும் கருதியபொருளிலும் உண்மை உண்டு. இதற்கு அரண்தரும் வகையில் அடுத்துவரும் துறைப்பொருண்மை அமைந்துள்ளது.

4. புடைகெட ஒற்றின் ஆகியவேய்

வேய் என்ற சொல் வேயப்படுவது, மூடுவது, மறைவு என்ற பொருள் தருதலின், ஒற்றுதலைக் குறிக்கும். உளவு என்று பொருள்கண்டார் நாவலர் பாரதியார். மாற்றரசர் பக்கத்தில் உள்ளவர்கள் அறியாதபடி ஒற்றரால் ஆகிய ஒற்றுதலை இத்துறை சுட்டியது என்பது இளம். எல்லாப் போர் முறைகளுக்கும் ஒற்றாடல் ஒற்றறிதல் தேவைப்படும். ஆதலின், இவ்வியலின் தொடக்கத்தில் வெட்சிப்போர் கூறும் பகுதியில் ஒற்றினை வைத்தனர் என்பது இவர் கருத்து.

> ''ஒற்று என்பது எவ்விடத்தும் வேண்டுமாயினும், ஆதிவிளக்காக இவ்வோத்தின் முதற்கண் வைத்தார் என்று கொள்க'' (ப. 76).

என்பது அவர் உரைப்பகுதி. திருவள்ளுவர் பொருட்பாலின் ''ஒற்று'' என்று தனியதிகாரம் வகுத்தமையும் இங்கு இயைபு கருதி எண்ணுதல் தகும். இச்சொல் மையினை ஒற்றி எடுக்கும் உறிஞ்சுதாள்போல், ஒற்றர்கள் மாற்றாரின் உண்மையினை ஒற்றி எடுப்பர். இத்துறைக்கு, ''வேற்றுப்புலத்து இருதிறத்தும் ஒற்றறிய இடம் இல்லையாம்படி ஒற்றரால் அறிந்த உளவு'' என்பர் பாரதியார்.

எனின். வேய் - குறளைச் சொல் எனப் பொருள் கண்டார் நச்சி. '' நிரைகோடற்கு எழுந்தோர் பகைப்பிலத்து ஒற்றர் உணராமற் சென்று ஒற்றி, அவ்வொற்று வகையான் அவர் உணர்த்திய குறளைச் சொல்லும்; நிரைமீட்டற்கு எழுந்தோர்

அங்ஙனம் ஒற்றிய ஒற்றுவகையான் வந்து ஓதிய குறளைச் சொல்லும்'' வேய் எனப்படும் என்றார். குறளை என்பது புறஞ்சொல் சொற்குற்றங்கள் நான்கினுள் ஒன்றாகிய குறளுக்குள் இஃது அடங்குதல் இல்லை. இஃது அரசக்கடமை.

5. வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்து இறை

இறை என்பது இருக்கை; வேய் என்பது ஆகுபெயரால் வேய்க்கப்பட்ட இடத்தினைக் குறிக்கும் என்றார் இளம். வேய்ப் புறம், ஒற்றியறியப்பட்ட இடம்; முற்றுதல்—சூழ்தல், வளைத்தல் என்பர் திருமுறைச்செல்வர் க. வெள்ளைவாரணனார். நிரைகவர் தற்குரிய இடத்தை வளைத்துப் புறத்தே தங்கியிருத்தலை இத்துறைக்குரிய செயலாகக் கொள்ளலாம்.

நச்சி. கூறும் பொருள் சற்று வேறுபட்டது. 'நிரைகவர்தற்கு எழுந்த வெட்சி வீரர், உளவு கூறியவர்களுக்குச் சிறப்புச் செய்து முடிந்த பின்னர்' என்ற பொருளில் ''வேய்ப்புறம் முற்றின் ஆகிய' என்ற பகுதி உணர்த்துவதாகக் கொண்டார். ஒற்றர்க்குச் சிறப்புச் செய்தபின் நிரைகள் இருப்பிடத்திற்குப் புறத்தே வெட்சியர் செவ்விபார்த்து ஒடுங்கியிருக்கும் இருக்கைப் பகுதியையும் நிரை மீட்கச் சென்றோர் தமது நிரைப்புறத்துச் சென்று விரைவொழிந்து இருக்கும் இருக்கைப் பகுதியையும் 'புறத்து இறை' சுட்டும் என்றார்.

பாரதியார், 'உளவறிந்த சூழலை வளைத்து அற்றம் நோக்கி அடங்கியிருத்தலை'க் குறிக்கும் என்றார். இஃது இளம்பூரணர் கருத்திற்கு விளக்கமாக அமைந்தது.

6. முற்றிய ஊர்கொலை

வெட்சிவீரர் நிரைகவர்தற் பொருட்டு முற்றுகையிட்டிருக்கும் ஊரை அழித்தல் என்பர் இளம். வெட்சியர் நிரைகாவலரைக் கொன்று பகையறுத்தலையும், கரந்தையர் பகைவர் ஊரிற் சென்று நிரைமீட்டுங்கால் எதிரிடுவோரைக் கொலை புரிதலையும் இத்துறைக்குரிய செயலாகக் குறிப்பர் நச்சி. ஊர் என்பது ஊரில் உள்ளாரைப் பொதுப்படக் குறிக்குமேனும், ஈண்டு அவருள் நிரைகாப்போரை மட்டுமே வரைந்து சுட்டியதாகக் கொண்டனர் நச்சி.

பாரதியார், வளைந்துகொண்டு நிரைமீட்கப் பொருவோரைக் கொல்லுதலைக் குறிக்கும் என்றார். ஊர்-மீட்கப்பொரும் ஊர்வர்க்கு ஆகுபெயர் என்பது அவர் கருத்து.

7. ஆகோள்

நிரை காப்போரை வீழ்த்தி, நிரையினைக் கைப்பற்றுதல் இத்துறையாகும் என்பர் இளம். எதிர் விலக்குவோர் இலராக வெட்சியர் நிரையினைப் பிடித்துக் கொண்டுவருதலும்; கரந்தையர் தமது நிரையினை அற்றமின்றி மீட்டுவருதலும் என்பர் நச்சி.

ஆனிரை கொள்ளுதல் என்பர் பாரதி.

8. பூசல் மாற்று

பூசல்-போர். ஆநிரை கவர்ந்து வரும் வெட்சியாரை மீட்டற் பொருட்டுப் பின் தொடர்ந்து வந்து கரந்தையார் புரியும் போரினை விலக்கி, வெற்றிகரமாகத் திரும்புதல் பூசல் மாற்று எனப்படும். மீட்க வந்த கரந்தையார் பூசலை வெட்சியார் மாற்று தலும் மீட்டுச்சென்ற வெட்சியார் பூசலைக் கரந்தையார் மாற்று தலும் என்று பொருள்காண்பர் நச்சி. மாற்றுதல் என்பது விலக்குதல்.

போரின் முன் நிகழும் ஆர்ப்பு பூசல் எனப்படும். போராய் வளருமுன் அதனைத் தடுத்து விலக்கல் வெட்சியார் வினையாதல் பூசல்மாற்று எனப்பட்டது என்பர் பாரதியார். போர் இன்றி நிரை கொள்வதே வெட்சியார் நோக்கம் ஆதலின் போர் என்னாது பூசல் என்றார் என்பர்.

9. நோயின்றுய்த்தல்

கவர்ந்த ஆநிரையினை வருத்தமின்றிக் கொண்டுவருதல் வெட்சித் திணைக்குரிய மற்றொரு துறையாகும். கவர்வாரும் மீட்பாரும் ஆநிரையின் நலம்காத்துக் கொண்டு போதலைச் சுட்டும் என்பர் நச்சி. போர் புரிவாரிடத்தும் உயிரிரக்கம் உண்டு என்பதை இத்துறை சுட்டியது.

10. நுவல்வழித் தோற்றம்

தம் சுற்றத்தார், வெட்சிவீரர் வந்துவிடுவார் என்று சொல்லியவழி ஆநிரையுடன் வந்து நிற்றலைக் குறிக்குந்துறை.

இதுவும் வெட்சியார், கரந்தையார் இருவர்க்கும் பொது என்பர் நச்சி. பாடிவீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைகொண்டோர் வரவும், ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரை மீட்டோர் வரவும் என்று பொருள் கண்டார். 'நுவலுழித்தோற்றம்' என்பது இவர் பயின்ற பாடம் என்பது சுட்டுதற்குரியது.

தம்மவர் புகழும்படி நிரைகொண்டார் மீளும் பொலிவு என்பர் பாரதியார்.

11. தந்துநிறை

கொள்ளப்பட்ட நிரையினைத் தம் ஊரகத்துக் கொணர்ந்து நிறுத்தல் என்றார் இளம். அரசன் ஏவிச்சென்ற வெட்சியார், அரசனுக்குரிய அரண்மனை வளாகத்தில் நிறுத்தாது, பொதுவிடத்தில் நிறுத்துதலில் ஒரு பொருள் உண்டு. அதனை அடுத்த துறை விளக்கும்.

எனின், வெட்சியர் கவர்ந்த நிரையைத் தம் ஊர்ப்புறத்துத் தந்து நிறுத்தலும், நிறைமீட்டோர் மீட்ட நிரையைத் தமக்குரிய இடத்தில் நிறுத்தலும் என்று பொருள் கொண்டனர் நச்சி.

12. பாதீடு

அந்நிறையினைக் கூறிடுதல் என்றார் இளம். கூறிட்டு வெட்சி வீரர்களுக்கு மட்டுமன்றிப் புள்வாய்ப்புறச் சொல்லிய கணியர்க்கும் ஒற்றர்க்கும் பங்கிட்டுத் தருதல் ஆகும. எனின், வேறு விளக்கம் கூறினார் நச்சி.

''பாதீடு—ஈத்தலும் ஈதலும் போல, பாத்தலும் பாதலும் ஒன்றாதலிற் பாதிடாயிற்று''. வேந்தன் ஏவலால் தாம் கொண்ட நிரையை வெட்சி வீரர் பகுத்துக் கொள்ளுதலும்; மீட்ட நிரையைக் கரந்தையர் உரியவர்க்கு வழங்குதலும் பாதீடு என்று விரைத்துரைத்தார்.

எனின், பாரதியார் இளம்பூரணர் கருத்தையே தழுவிக் கூறினார்.

13. உண்டாட்டு

நிரைபகுத்த மறவர் வெற்றிப் பெருமிதத்தால் உண்டு களித்து மகிழ்ந்தாடுதல் உண்டாட்டு எனப்படும். இது வெற்றியைக் கொண்டாடும் விருந்து நிகழ்ச்சியாகும்.

வெட்சியார் நிரைகவர்ந்த மகிழ்ச்சியால் சுற்றத்தோடு கள்ளுண்டு மகிழ்தலையும், கரந்தையார் நிரைமீட்ட மகிழ்ச்சியால் அவ்வாறே மகிழ்தலையும் இத்துறை சுட்டும் என்பர் நச்சி. இக் காலத்து நடைபெறும் ('party') விருந்து விழாவுடன் இத்துறை ஒப்பிட்டுப் பார்த்தற்கு உரியது.

14. கொடை

முற்சுட்டியவர்களுக்கு அன்றி (12) இரவலர் யாவர்க்கும் வரையாது வழங்கி மகிழ்தல் கொடை எனப்படும். இத்துறை ஒன்றுதான் இதற்கு முற்பட்ட துறைகள் அனைத்தையும் சேர்த்து வெட்சித் திணைக்குரிய நிலையினை விளக்கும். ஏன் எனின், நிரைகவர்ந்தவர் வழங்குவதற்குத்தான் கொடை என்ற பெயரே தவிர, நிரைமீட்டர் தமது உடைமை வழங்கிய செய்தி காணப்பட வில்லை. எனின், வழக்கம்போல் இரு திறத்தார்க்கும் ஏற்ப உரைசெய்தர் நச்சி.

மேற்சுட்டிய துறைகளில் 5 முதல் 9 வரை உள்ளனவே வெட்சிப்போரின் மைய நிகழ்ச்சிகள். 1—4 வரை வருவன ஆயத்த நிலை. 10—14 வரை உள்ளவை பின் விளைவுகள்.

கூடுதல் துறைகள்

அடுத்துவரும் நூற்பாவில் (62) குடிநிலை, கொற்றவைநிலை என்பன இரண்டையும் வெட்சிக்குரிய துறைகள் என்றார் தொல்காப்பியர். இவ்விரண்டையும் சேர்க்க 16 துறைகள் வெட்சிக் குரியனவாகும்.

1. குடிநிலை

மறக்குடியில் பிறந்த மைந்தர், மகளிர்தம் வீரக்குடியின் விழுப்பத்தைப் போற்றிக் கூறுதல் குடிநிலை எனப்படும் என்பது இளம்பூரணர் கருத்து. வீரமைந்தரைப் பற்றி வருவது இல்லாண் முல்லை என்றும், வீரப் பெண்டிரைப் பற்றி வருவது மூதின்முல்லை என்றும் இவரே விளக்கினார். இவ்விரண்டும் வாகைத்திணைக்கு உரியனவாகப் புறப்பொருள் வெண்பா மாலையில் காணப்பெறும். இல்லாண் முல்லை என்பது வல்லாண் முல்லை என்றும் பின்னூலில் பேசப்பட்டது.

சூடிநிலை என்பதற்குப் பதிலாகத் துடிநிலை என்று காணப் பெறும் பாடம் பு.வெ.மாலையிலும் நச்சினார்க்கினியர் உரையிலும் கொள்ளப்பெற்றது. வெட்சிப்போரில் துடிக்கொட்டுவோனின் நிலையைக் கூறுவது துடிநிலை என்னும் துறையாகும். போரில் துடிகொட்டுதல் உண்டாதலின், இதுவே தொல்காப்பியர் கொண்ட பாடமாதல் கூடும். கொடிநிலை எனப் பாடம் கொண்டார் பாரதியார். கொடியெடுப்பு போர்த்தொடக்கத்தில் நடைபெறுவது என்றார். இது புதுப்பாடமே தவிர முன்னர் ஒருவரும் இதனைச் சுட்டவில்லை. வேத்தியலில் வழுவித் தன்னுறு தொழிலாய் வரும் பொதுத்துறைகளை இந்நூற்பா சுட்டுதலின், இவற்றைப் பொது வியலாகக் கொள்ளுதல் வேண்டும் என்பர் நச்சி. இவையும் வெட்சி வகைகளுக்குரிய துறைகளே என்பர் பாரதியார்.

வெற்றிதரும் கொற்றவையின் சிறப்புரைக்கும் கொற்றவை நிலை என்ற துறை வெட்சித்திணையில் இடம்பெற்றதற்குரிய ஏதுவை இளம்பூரணர் திறம்படச் சுட்டியுள்ளார். குறிஞ்சித் திணைக்கு முருகவேளேயன்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது அவர் அளிக்கும் விளக்கமாகும். திருமுருகாற்றுப்படையில்,

''வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ''

என்று நக்கீரர் போற்றுதல் இங்கு எண்ணிப் பார்த்தற்குரியது.

மேலும், ''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்'' எனத் தொடரும் நூற்பாவில் 21 துறைகள் தொகுத்துக் கூறப்பெற்றன. வெட்சிக்கு மாறாகிய கரந்தைத் திணையினைச் சுட்டியது இந் நூற்பா (63) என்றும்; அத்திணையும் ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின்கண் நிகழ்வதாகலின், வெட்சிப் பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனாயிற்று என்றும் இளம்பூரணர் எண்ணினர். வேத்தியலின், இவற்றைப் பொதுவியலாகக் கொள்ளுதல் வேண்டும் என்பர் நச்சி, இவையும் வெட்சி வகைகளுச்குரிய துறைகளே என்பர் பாரதியார்.

இந்த இரண்டாவது நூற்பாவின் பொருண்மை குறித்துக் கரந்தைத்திணை, பொதுவியல் திணைபற்றி ஆராயும் பகுதிகளில் பின்னர்க் காண்போம். முதல் நூற்பாவில் கூறப்பெற்ற வெட்சித் திணைக்குரிய 14 துறைகளும் பு. வெ. மாலையில் அத்திணைக்குக் கூறப்பெற்ற துறைகளுடன் எந்த அளவில் ஒத்து வருகின்றன என்பது பற்றி ஆராய்வோம்.

I. தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்

ஐயனாரிதனார் வெட்சி முதல் வெறியாட்டு ஈறாக இருபது பகுதிகளை வெட்சித்திணையும் துறையுமாகக் குறித்துள்ளார். (நூ. 1). இவற்றுள் தன்னுறு தொழில் இவரால் கொள்ளப் பெற்றது (2). இவர் சுட்டும் மன்னுறு தொழில் (1) தொல் காப்பியர் கருத்துடன் ஒத்ததே. தொல் சுட்டிய படையியங்கு அரவம், நோயின்று உய்த்தல், நுவல்வழித் தோற்றம் என்ற துறைகள் முறையே வெட்சி அரவம், சுரத்துய்த்தல், தலைத் தோற்றம் என்ற குறியீடுகளினால் பு. வெ. மாலை சுட்டியது. முன்னூல் குறித்துள்ள பாக்கத்து விரிச்சி, புடைகெடப்போகிய செலவு, புடைகெட ஒற்றின் ஆகிய வேய், வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை என்பன முறையே விரிச்சி, செலவு, வேய், புறத்திறை என்று சுருக்கக் குறியீடுகளாகப் பின்னூலில் வழங்கப் பெற்றன.

ஊர்கொலை, ஆகோள், பூசல்மாற்று, தந்துநிறை, பாதிடு, உண்டாட்டு, கொடை என்ற ஏழு துறைகளில் இருநூல்களிலும் அப்படியே காணப்படுகின்றன. ஆதலின், இரு நூலார்க்கும் ஒரு பொதுமூலம் இருந்திருத்தல் கூடும் என்று எண்ண இடம் ஏற்படு கிறது. அல்லது, பு. வெ. மாலைக்குப் பன்னிருபடலம் முதனூல் என்றால், அதனுள் இவை இவ்வுருவில் வழங்கியிருத்தல் கூடும். அன்றியும், பு. வெ. மா. ஆசிரியர் பன்னிருபடலத்துடன் தொல் காப்பியத்தையும் பயின்று இலக்கணம் கூறியவர் என்று கருதவும் வாய்ப்பு உள்ளது.

பு. வெ. மாலையில் சுட்டப்பெறும் புலனறி சிறப்பு (17), விள்ளைவழக்கு (18) என்ற துறைகள் தொல்காப்பியத்தில் கூறப் படவில்லை. இவற்றுள், முன்னது ஒற்றின் வேறாகக் கூறப் பட்டது. இத்துறை வேற்றுப்புலத்தின் நிலைமையினை அறிந்து வந்து சரியான தகவல் கூறியவர்க்குச் செய்யப்பெறும் பெருஞ் சிறப்புப் பற்றிக் கூறுவது. பின்னது, புள்நிமித்தம் சொல்லிய கணியர்க்குப் பொருள் வழங்குதலைச் சுட்டுகிறது. இத்துறை முன்பு கூறப்பெற்ற விரிச்சியின் வேறுபட்டது. பிள்ளை என்பது கரிக்குருவியைக் குறித்தது. சிலப்பதிகாரத்தில், ''கட்சியுள் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்'' என்று புள்நிமித்தம் கூறப்பெற்றது. காரி என்பதும் கருங்குருவியைத்தான்.

"வால்நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடமானால்
கால்நடையாய்ச் சென்றவரும் கனகதண்டி ஏறுவரே''

எனவரும் நிமித்த நூல் பாடலும் அறியத்தக்கது.

வெட்சித்திணைக்குரியனவாகத் தனி நூற்பாவில் (62) சுட்டப் பெற்ற துடிநிலை, கொற்றவை என்ற இரண்டினையும் பு.வெ.மா. வெட்சித் துறைகளைத் தொகுத்துரைக்கும் நூற்பாவில் ஒருங் கோதியது (19, 20).

ஐயனாரிதனார் கூடுதலாகக் கூறிய வெறியாட்டு (21) என்ற துறை, தொல்காப்பியர் வெட்சித் திணை பற்றிக் கூறும் இரண்டாவது பெரிய நூற்பாவில்(63) சுட்டப்பெற்ற 'வெறியாட்ட யர்ந்த காந்தள்' என்ற துறையுடன் இயைபுடையது.

இனி, வீரசோழியம் கூறும் வெட்சித் துறைகளைத் தொல் காப்பியத்துடன் ஒப்பிட்டுக் காண்போம்.

2. தொல்காப்பியமும் வீரசோழியமும்

முன்னூலைப்பின்பற்றிய இப்பின்னூல் வெட்சித் திணைக்குரிய துறைகளைக் குறித்தது. எனினும் துறைகளுக்கு வழங்கிய பெயர் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல். சுட்டிய சடையியங்கு அரவம் என்ற பழைய பெயர் வீரசோழியத்தில் ஒருப்பாடு என்று உரைக்கப்பெற்றது. நிரை கவர்தற்பொருட்டு வெட்சி வீரர்கள் ஒருப்படுதலை இச்சொல் சுட்டுகிறது.

விரிச்சியை நற்சொல் என்றும், வேய் என்பதை ஒற்றுரைப்பு என்றும், பூசல்மாற்றினை நிரைகொண்டவரைத் தடுத்தல் என்றும் வீ. சோ. விளம்பும். இவ்வாறே ஊர்கொலை, ஆகோள் என்னும் துறைகள் முறையே பொருதல், நிரைகவர்தல்என்று இப்பின்னூலில் பேசப்பட்டன. உண்டாட்டு என்பது பருப்பாடு என்று எட்டப் பெற்றது. இச்சொல் பருப்புச் சோறுண்டலைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

வீ. சோ. வில் கூறப்பெறாமல் விடுபட்ட துறைகள் குடி(துடி?) நிலையும் கொற்றவை நிலையும் ஆகும்.

அரிய கட்டளைக் கலித்துறை யாப்பில் புறத்திணைச் செய்தி களைச் செறிவாகக் கூறும் இந்நூலாசிரியரின் ஆற்றல் போற்றுதற் குரியது. இவர் மாணவராகிய உரையாசிரியர் பெருந்தேவனார்

பெரும்பாலும் தொல். தொடர்களையே எடுத்தாண்டு உரை விளக்கம் தருதல் அறியத்தக்கது.

இனி இலக்கண விளக்கம் வெட்சித்திணை பற்றிக் கூறும் கருத்துக்களை ஒப்பிட்டுக் காண்போம்.

3 தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்

வெட்சித்திணைக்கு வரையறை விளக்கம்கூறும் வைத்தியநாத நாவலர் தொல்காப்பிய இலக்கணத் தொடரைப் பெரிதும் போற்றி புகன்றனர். ஆநிரை கவர்தல் மட்டுமே வெட்சி என்ற தொல் காப்பியர் வரையறையினையும், கவரப்பட்ட ஆநிரையினை மீட்டலும் வெட்சி என்ற புதிய வரையறையினையும் சேர்த்து இலக்கணம் செய்துள்ளார். இவர் மீட்டலைக் கரந்தை என்று பு. வெ. மாலையினைப் பின்பற்றிக் கூறாமை நோக்கத்தக்கது. கவர்தல், மீட்டல் இரண்டுமே வெட்சி என்பது ஒரு புதுமையே. தொல்காப்பியத்தைத் தழுவியும் பு. வெ. மாலையினை ஒருவாறு உடன்பட்டும் சென்ற போக்கு பின்வரும் இவர் நூற்பாவினால் அறியப்படுகிறது.

> ''அவற்றுள்,
> வெட்சி தானே குறிஞ்சியது புறனே
> உட்குவரப் பொருபோர் உறுமுறை தொடங்கிய
> வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
> ஆதந்து ஓம்பலும் அந்நிரை மீட்டலும்
> எனஇரு பாற்றே அஃதென மொழிப.'' (இ. வி. 602)

இந்த நூற்பா, உழிஞைத்திணைக்குத் தொல்காப்பியர் இயற்றிய நூற்பா அமைப்பினை ஒட்டி அமைந்தது. உழிஞைத் திணை யினின்றும் வேறுபட்டதாக நொச்சித்திணையினை தொல்காப்பியம் கூறவில்லை. 'முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும், அனை நெறி மரபிற்றாகும் என்ப என்று உழிஞை. நொச்சி ஆகிய இரண்டின் தொழிலையும் உழிஞை என்ற ஒன்றின்கண் ஆசிரியர் அடக்கி ஓதினார். அதுபோலவே. இலககண விளக்கத்தார், ''ஆதந்து ஓம்பலும் அந்நிரை மீட்டலும்'' என்ற இரு தொழிலை யும் வெட்சி என்ற ஒன்றின்கண் அடக்கிக் கூறினார்.

வெட்சிக்குரிய துறைகளை 603, 604ஆகிய இரு நூற்பாக்களில் இ. வி. தொகுத்துக் கூறுதல் காணலாம். நூ. 603இல் 22 துறை

களும், நூ. 604இல் 27 துறைகளும் சொல்லப்பட்டன. இங்கு நம் ஒப்பாய்விற்குத் தொல்காப்பியர் கூறிய ''படையியங்கு அரவம்'' என்ற நூற்பாவில் சுட்டப்பெற்ற துறைகளும் இ. வி, ஆசிரியர் நூ. 603இல் கூறிய துறைகளும் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

இ. வி. சுட்டும் தருகெனப் பணித்தல்; பணிதலைக்கோடல் என்ற துறைகள் தொல்காப்பியத்தில் சுட்டப்பெறவில்லை. 'பாக்கத்து விரிச்சி', 'செலவு' என்ற தொல். துறைகள், இந்நூலில் விரிச்சி ஓர்த்தல், வழியிடைச்சேறல் என்று காணப்படுகின்றன. புறத்திறை முதல் கொடை முடிய உள்ளவை அப்படியே இந்நூலில் எடுத்துக்கொள்ளப்பட்டன. புலனறி சிறப்பு, பிள்ளை வழக்கு, வெறியாட்டு என்பன மூன்றும் பு. வெ. மாலையினை ஒட்டி இந்நூலார் எடுத்துக் கூறினார். துடிநிலை என்ற துறை முன்னிரு நூல்களிலும் உள்ளதுவே. இவர் கூறும் ஒரே புதிய துறை 'வேண்டா வீரம்' என்பதுவே. நிமித்தம், விரிச்சி முதலிய சகுனம் பார்க்காமலேயே நெஞ்சுரம் மிக்க வெட்சிவீரர்கள் ஆநிரை கவர்தற்குத் துணிதலை இத்துறை சுட்டியது. புறநானூற்றில்,

''காலனும் காலம் பார்க்கும்; பாராது
வேலிண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே'' (41: 1-3)

என்று கிள்ளிவளவனைக் கோவூர் கிழார் பாடுதல் இங்குக் கருதற்பாலது. மேலும், வைத்தியநாத நாவலர், நச்சினார்க்கினியர் உரையில் 'வேண்டாவீரம்' என்ற இத்துறை சுட்டப்படுவதை நன்கு அறிந்தவராதல் வேண்டும். தகடூர் யாத்திரை என்னும் தொடர்நிலைச் செய்யுளில்,

''நாளும் புள்ளும் கேளா ஊக்கமொடு
எங்கோன் ஏயினன் ஆதலின் யாமத்துச்
செங்கால் வெட்சியும் தினையும் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுகள் அவிப்ப
விரிச்சி ஓர்த்தல் வேண்டா
எயிற்புறம் தருதும்யாம் பகைப்புல நிறையே.''

எனவரும் பாடலை இத்துறைக்கு நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

4. தொல்காப்பியமும் முத்துவீரியமும்

முத்துவீரியம் வெட்சிவேறு, கரந்தைவேறு என்று பு. வெ. மாலையைப் பின்பற்றி இலக்கணம் கூறியது. வெட்சித் திணையின் பொதுப்பொருண்மையினை,

''போகிப் பகைவர்ஊர்ப் புக்கவர் நிரையைக்
கவர்தல் வெட்சியாம் காணுங் காலே'' (நூ. 821)

என்று தெளிவுறுத்தக் காணலாம். எனின், வெட்சித்திணைக்குரிய துறைகளை இந்நூல் கூறவில்லை. இவர் வாழ்ந்த சென்ற நூற்றாண்டில் பழைய போர் முறைகள் மறைந்து விட்டன. ஐரோப்பிய வருகையால் வெடிகுண்டுப்போர் முறைகள் வந்து விட்டன. இதனாற்போலும் பழைய போர்த் துறைகளை முத்துவீரிய ஆசிரியர் மொழியாது போயினார்.

ஏனைய திணைகளுக்கும் இவர் துறைகள் கூறாமையினால் இதனைப் பின்னரும் ஒப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

5 தொல்காப்பியமும் சுவாமிநாதமும்

சுவாமிநாதம் எழுதிய சாமிகவிராயரும் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவரே. எனினும், இவர் இலக்கண விளக்கத்தைப் பெரிதும் பேணிப் புறப்பொருள் இலக்கணம் கூறியவர். எனவேதான் அந்நூல் வெட்சித்திணைக்குச் சுட்டும் 22 துறைகளையும் மாறாது கூறினார். இவர் ''குறிஞ்சிப்புறம் வெட்சி'' என்று கூறும்பகுதி தொல்காப்பியத் தொடரை நினைவூட்டுகிறது. இந்நூலில் குறிப் பிடத்தக்க புதிய செய்திகள் இடம்பெறவில்லை. பழைய இலக்கணத்தை எளிமைப்படுத்தி, மாணவர் விளங்கிக் கொள்ளும் வகையில் இந்நூலைச் செய்துள்ளார்.

இதுகாறும் வெட்சித்திணையும் அதற்குரிய துறைகளும் குறித்துத் தொல்காப்பியம் முதலிய நூல்களில் நுவலப்பெற்ற கருத்துக்களை ஒப்பு நோக்கிக் கண்டோம்.

ஆய்வுகள் முடிபுகள்

இவ்வியலில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக அறியப் பெற்ற முடிவுகளையும் விளக்கங்களையும் இங்குத் தொகுத்துக் கூறுதல் வேண்டும்.

1) ஆநிரைகள் ஒரு நாட்டின் செல்வமாக விளங்கிய புராதன காலத்தில் அவற்றைக் கவர்ந்து கொள்வதன் வாயிலாகத் தனது நாட்டின் செல்வத்தைப் பெருக்க முடியும் என்று பண்டைய வேந்தர்கள் எண்ணினர்.

2) மன்னுறு தொழிலை மட்டுமே வெட்சிப் போராகத் தொல்காப்பியர் வரையறுப்பதால், தன்னுறு தொழிலை அராசகச் செயலாக எண்ணியுள்ளார் என்று கருத இடம் உண்டு.

3) தன்னுறு தொழில் என்பது வெட்சித்திணையிற் கூறப் பெற்றதுபோல், வஞ்சித்திணை, உழிஞைத்திணை முதலியவற்றிற்கும் உரியதாகப் புறப்பொருள் வெண்பா மாலையில் கூட சுட்டப்பெறவில்லை.

4) அரசு என்ற நிறுவனம் நன்கு வேரூன்றுவதற்கு முன்பு குறுநிலத்தலைவர்கள், மறவர்கள் முதலியோர் அயலார்க்குரிய ஆநிரைகளைக் கவர்ந்தனர் என்பதும், இப்பழக்கம் அரசு நிலைபெற்ற பின்னரும் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதும், இதுவே தன்னுறு தொழில் என்று பன்னிருபடலத்தாரால் சுட்டப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் அறியத்தக்கவை.

5) போர் மறவர்கள் நிமித்தம், விரிச்சி முதலியவற்றில் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதற்கு ''பாக்கத்து விரிச்சி'' முதலிய துறைகள் சான்றாகும். எனின், அவற்றில் நம்பிக்கை கொள்ளாத மனத்திட்பம் படைத்த மறவர்களும் இருந்தனர் என்பதற்கு, ''வேண்டா வீரம்'' என்று நச்சினார்க்கினியரும் வைத்தியநாத நாவலரும் சுட்டும் துறை ஆதாரமாக அமைகிறது.

6) போரில் பெற்ற வளத்தைப் பலர்க்கும் பங்கிட்டுக் கொடுக்கும் அருள் உள்ளமும் படை மறவர்க்கு உண்டு என்பதற்குப் பாதீடு, கொடை முதலிய துறைகள் சான்றாகும்.

7) வீரமைந்தனின் வீறு கூறும் இல்லரண்முல்லை என்ற துறை பின்னூலில் வல்லரண்முல்லை என்று சுட்டப் பெற்றது.

8) இளம்பூரணர் கொண்ட குடிநிலை என்ற பாடத்தைவிட, நச்சினார்க்கினியர் கொண்ட துடிநிலை என்ற பாடம் பொருத்தம் மிக்கது வெட்சிப்படலத்தில் துடிநிலையினை ஒரு துறையாக எண்ணியவர் ஐயனாரிதனார்.

9) முருகவேளேயன்றிக் கொற்றவையும் குறிஞ்சித்திணைக் குரிய தெய்வம் என்று இளம்பூரணர் குறித்தல் ஏற்புடைய கருத்தே.

10) தொல்காப்பியர் சுட்டிய ஊர்கொலை, ஆகோள், பூசல்மாற்று, தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை என்ற ஏழுதுறைகளும் பு. வெ. மாலையிலும் அப்படியே வழங்கப் பெறுகின்றன. இவை பு. வெ. மாலைக்கு முதனூலாகிய பன்னிருபடலத்திலும் வழங்கி யிருத்தல் வேண்டும்.

11) தொல்காப்பியர் சுட்டிய படையியங்கு அரவம், விரிச்சி, வேய், பூசல்மாற்று, ஊர்கொலை, ஆகோள், உண்டாட்டு என்ற துறைகளை முறையே ஒருப்பாடு, நற்சொல், ஒற்றுரைப்பு, நிரைகொண்டவரைத் தடுத்தல், பொருதல், நிரைகவர்தல், பருப்பாடு என்ற குறியீடு களினால் புத்தமித்திரனார் குறித்துள்ளார்.

12) தொல்காப்பியரைப் பின்பற்றும் போக்குடைய வைத்தியநாத நாவலர், ஐயனாரிதனார் கூறிய இலக்கணத்தையும் தழுவிய புறப்பொருள் இலக்கணம் செய்துள்ளார். ஆதலின், ஆநிரை கவர்தல், மீட்டல் என்பன இரண்டுமே வெட்சித்திணை என்று வரையறுத்தனர்.

13) பு. வெ. மா. ஒரு துறைக்கே ஒன்றிற்கு மேற்பட்ட வெண்பாக்களை உதாரணமாக வழங்கியிருப்பின், மிக்கவற்றை அத்துறையின் பக்கம் என்று எண்ணும் இயல்பினை இலக்கண விளக்கத்தாரிடம் காண்கிறோம்.

14) இசுலாமியர், ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் போர் இலக்கணம் செய்த தமிழறிஞர்கள் நவீனப் போர் முறைகளுக்கு இலக்கணம் கூறாது, வார்ப்படமான பழைய போர் மரபுகளைக் கூறுதற்குப் பழமைப் பிடிப்பும் பற்றும் காரணம் எனலாம். இத்தகு இயல்பினை விதிமுறைத் திறனாய்விலும் காணலாம்.

15) பழைய இலக்கணத்தை எளிமைப் படுத்தி, மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் புறப்பொருள் இலக்கணம் கூறுதல் பிற்காலத்தவரின் போக்காகத் தோன்றுகிறது.

4. கரந்தைத்திணை

தனித்திணையா?

ஆநிரை மீட்கும் வீரர்கள் கரந்தைப்பூச் சூடிப் போர் புரிதலைப் பன்னிருபடலத்தின் வழிவந்த நூல்கள் தெளிவுறுத்துகின்றன. புறநானூற்றிலும் கரந்தைத் திணைக்குரிய பல பாடல்கள் காணப் படுகின்றன என்பதை முன்னர்க் கூறியுள்ளோம். ஆவூர் மூலங்கிழார்,

''நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவண் தந்து நடுகல் ஆகிய
வென்வேல் விடலை (161: 13-16)

என்று நிரைமீட்போர் கரந்தைப்பூச் சூடுதலைப் பாடினர். இப்பூவின் வடிவமும் கூறினர். இப்பாடல் கரந்தைத் திணைக்கு உரியது.

எனின், தொல்காப்பியர் கரந்தைப்போரினை அறியாதவர் அல்லர். வெட்சித்திணைக்குரிய இலக்கணம் கூறும் இரண்டாவது பெரிய நூற்பாவில் (63)

''அனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்''

என்ற பகுதியில், கரந்தை என்ற குறியீட்டினைப் பயன்படுத்தி யுள்ளார். இந்நூற்பாவில் இடம்பெறும் துறைகள் இருபத்தொன்று ஆகும். இவற்றுள்,

1) ஆரமர் ஓட்டல்

2) ஆபெயர்த்துத் தருதல்

3) சீர்சார் வேந்தன் சிறப்பெடுத்துரைத்தல்

4) தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல்

5) வருதார் தாங்கல்

6) வாள் வாய்த்துக்கவிழ்தல்

7) பிள்ளையாட்டு

என்ற துறைகள் ஏழும் நிரைமீட்சித்துறைகள் ஆகும். இவற்றுக்கு ஒரு பொதுப் பெயராகத்தான்,

''அனைக்குரி மரபினது கரந்தை''

என்பது சுட்டப்பெற்றது. நச்சினார்க்கினியர்,

''ஆரமரோட்டல் முதலிய ஏழு துறைக்கும் உரிய
மரபினையுடைய கரந்தையும்''

என்று உரைவரைதலின், நூற்பாவில் 'பிள்ளையாட்டும்' என்ற தொடர்க்குப் பின்னர், 'அனைக்குரி மரபினது கரந்தை' என்ற பகுதி இருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.

நூற்பா நுதலும் திணை

இந்நூற்பா (63) புறத்திணை ஏழற்கும் பொதுவான துறைகளைக் குறித்தலின் பொதுவியல் (திணையினைச்) சுட்டும் என்று நச்சினார்க்கினியர் எண்ணினார். ''இக்கூறப்பட்ட பொதுவியல் இருபத்தொரு துறையினையுடையது. என்று ''நூற்பா இறுதி உரைப்பகுதியிலும் எழுதியுள்ளார். இவை வேத்தியலின் வழுவித்தன்னுறு தொழிலாய் வருவன வாதலின் வழுவாயின என்றும் குறித்தனர். ஒவ்வொரு துறையினையும் விளக்கும் பகுதியில் அது தன்னுறு தொழிலைத் குறித்த திறத்தினை இவர் சுட்டினார். சான்றாக இரண்டொரு இடங்களைக் கூறலாம்.

எடுத்துக்காட்டு :

1) ....இன்ன அரசன் படையாளர் வென்றார் என்றற்கு அவரவர் பூச்சூடி ஆடுவர் என்பதூஉம், அக்கூத்தும் வேத்தியற் கூத்தின் வழீஇயின கருங்கூத்தென்பதூஉம்,

அது தன்னுறு தொழில் என்பதூஉம் உணர்த்தியதாம் இதனை இங்ஙனம் தன்னுறு தொழிலாக்காமல் வேந்துறு தொழிலாக்கின் அது தும்பையாம். புகழ்ந்து கூறிற் றெனின் பாடாண் திணையாம்........ இவை தன்னுறு தொழிலாயவாறு காண்க. (ப.144-5)

2) இது மறவன் ஆரமரோட்டல் கூறியது
இவை தன்னுறு தொழில் கூறியன. (ப, 149)

3) வருதார் தாங்கல் முதலியன ..... வேந்தன் குடிப்பிறந் தோரும் அவன் படைத்தலைவருமாகிய இளைய செய்யினும் தன்னுறு தொழிலாதலிற் கரந்தையாம்......
இவை தன்னுறு தொழில் (ப 154)

இந்நூற்பாவிற் கூறப்பெற்ற துறைகள் வழுவற்றவை என்பதும், மன்னுறு தொழிலாகவும் வருபவை என்பதும் நுணுகி நோக்கு வார்க்குப் புலப்படும்.

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் கூறும் திணை விளக்கம் காண்போம். இந்நூற்பாவின் கொளுவில்,

''வேலன் முதலாக வெட்சித்திணைக்குரிய துறை கூறினார். இனி அதற்கு மாறாகிய கரந்தைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. அதுவும் ஆநிரை மீட்டல் காரண மாக அந்நிலத்தின்கண் நிகழ்வதாகலின், வெட்சிப் பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனாயிற்று''.

என்று காணப்படுகிறது. இதனை இளம்பூரணர் எழுதியிருத்தல் வேண்டும். ஏன் எனின், நச்சினார்க்கினியர் உரையில் அவர் கருத்தைத் தெளிவுறுத்தும் வேறு கொளு காணப்படுதலின் என்க, எனவே, 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்' என்ற நூற்பா (63) வெட்சித்திணைக்கு மாறாகிய கரந்தைத் திணையைத்தான் விளக்குகிறது; ஆநிரை கவர்தலைப் போலவே, மீட்டல் தொழிலும் வெட்சிக்குரிய குறிஞ்சி நிலத்தில்தான் நடைபெறுகிறது. ஆதலின், வெட்சித்திணைக்குரிய துறைகளாகவே இவற்றை அடக்கிக் கூறினார் ஆசிரியர் என்பது அவர் கருத்து.

என்றாலும், உரையிறுதியில் இவை இவை கரந்தைக்கு உரிய துறைகள் என்பதையும் இளம்பூரணர் மறவாது குறித்துள்ளார். அப்பகுதியை இங்குக் காண்போம்:

1) ''இவையெல்லாம் கரந்தைக்கு உரித்தாக ஓதப்பட்டன.'' (ப. 86). இத்தொடரில் 'இவையெல்லாம்' என்பது இதற்கு முன்னர் வரும் காட்சி. கல்கோள், நீர்ப்படை நடுதல் பெரும்படை, வாழ்த்து என்ற துறைகளைக் குறித்ததாகக் கொள்ளுதல் வேண்டும். இவை கரந்தைக்கு மட்டுமன்றி, மறத்துறை ஏழற்கும் கொள்ளப்படும் என்றார். கரந்தைத் திணைக்குரிய வீரர்க்கு மட்டுமன்றி ஏனைய வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய திணைக்குரிய மறவர்க்கும் நடுகல் அமைத்து வழிபடுதல் உண்டு என்பது அவர் கருத்து. கற்பறம் காத்த வீரபத்தினிக்கும் இத்தகு வழிபாடு நிகழ்ந்தமை இத்துறைகளின் பெயர் தாங்கிய சிலப்பதிகாரக் காதைகளினால் அறியலாம்.

2) ''ஈண்டு ஓதப்பட்ட இருபத்தொரு துறையினும் நிரைமீட்டற் பொருண்மைத்தாகிக் கரந்தையென ஓதப்பட்டன ஏழாயின.'' (ப. 87)

இந்த ஏழுதுறைகளை முன்பக்கத்தில் கூறியுள்ளோம்.

நுணுகி நோக்கின், இந்நூற்பா, முழுதுமே கரந்தைக்குரியது என்ற கருத்தும் இளம்பூரணர் உரையில் உணரக் கிடக்கிறது. ஆரமர் ஓட்டல் முதலிய ஏழுதுறைகளும் தெளிவாகக் கரந்தைக்கு மட்டுமே உரியவை. தொடர்ந்து வரும் உரைப்பகுதியில், வெறியாட்டு, வள்ளிக்கூத்து என்பன இரண்டும் மலை சார்ந்த இடத்து நிகழ்தலின், அந்நிலத்து நிகழும் கரந்தைத்திணைக்கு உரியன என்றார். பூவைநிலையும் அந்நிலத்தின் கருப்பொருள் என்றார். இது மேலும் ஆய்வதற்கு உரியது. இப்பூ முல்லை நிலத்திற்கு உரியது. 'மாயோன்' என்று அந்நிலத்தின் தெய்வமும் கூறப்பெற்றது.

''கற்கோள் நிலை ஆறும் உன்ன நிலையும் முடியுடை வேந்தர்சூடும் பூவும் கழல்நிலையும் ஏனையவற்றிற்கும் பொதுவாகலான் (எனவே இவைகரந்தைக்கும் உரியவை), எடுத்துக்கொண்ட கண்ணே கூறுதல் இலக்கணம் ஆதலின் ஈண்டு ஓதப்பட்டதென உணர்க.''

என்று உரையாசிரியர் வரைதலின், இருபத்தொரு துறைகளுமே கரந்தைத் திணைக்கு இலக்கணமாகக் கூறப்பெற்றவை என்பது கருத்து.

எனின், இளம்பூரணர் ஒவ்வொரு துறைக்கும் மேற்கோள் காட்டியிருக்கும் பு.வெ. மாலைக்குரிய பாடல்கள் விவரம் வருமாறு

1) பொதுவியல் திணைக்கு உரியவை 9 பாடல்கள்
2) கரந்தைத் திணைக்கு உரியவை 7 பாடல்கள்
3) பாடாண் திணைக்கு உரியது 1 பாடல்
4) பெருந்திணைக்கு உரியது 1 பாடல்

ஆக 18 பாடல்கள் ஆகும். எஞ்சிய மூன்று துறைகளுக்கும் முத்தொள்ளாயிரத்தினின்றும் இரு பாடல்களும், புறநானூற்றினின்றும் ஒரு பாடலும் (259) மேற்கோளாக வந்தன.

இப்புறப்பாடலும் (259) கரந்தைத் திணைக்கு உரியது

இப்பட்டியலைக் கூறுங்கால், கரந்தைக்குரிய துறைகள் 10 என்பதும், பொதுவியலுக்குரிய 9 துறைகளும் பொதுமை காரணத்தால் கரந்தைக்கும் உரியவை என்பதும், வெட்சிப்பாடாண், வஞ்சிப்பாடாண்போலக் கரந்தைப் பாடாணும் கொள்ளப்பெறுதலின் மேற்சுட்டிய பாடாணுக்குரிய துறையினைக் கரந்தைக்கும் பொருந்தியதாகக் கொள்ளலாம் என்பதும் துணியப்படும். எஞ்சிய பெருந்திணைப் பாடல், 'வெறியாட்டயர்ந்த காந்தளை' விளக்க வந்தது.

தொகுத்து நோக்கின், இந்த நூற்பா (63) கரந்தைத்திணையின் இலக்கணம் கூறுவது என்று இளம்பூரணர் தொடக்கத்தில் கூறிய கருத்து வலிமையுடையது எனலாம். இந்நூற்பாவில், 'கரந்தை' என்ற இலக்கணக் கலைச்சொல்லும் பயிலப்பெறுதல் இக்கருத்தினை மேலும் உறுதிப்படுத்தும். இவ்வளவு தெளிவாக இருப்பினும், தொல்காப்பியர் புறத்திணையினை ஏழென்று வகுத்துக் கொண்டமையின், கூடுதலாகக் காணப்பெறும் கரந்தையினை அதனுடன் தொடர்புடைய வெட்சியில் அடக்கிக்கொள்வது தவிர வேறு வழியில்லை.

முரண் தீர்த்து அமைதி கூறுவதில் வல்லவர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார். அவர் தரும் விளக்கம் காண்போம்.

"நிரைகோடலும் நிரை மீட்டலும் இருவேறு வினைகள். ஆயினும் ஒத்த அன்பினராகிய ஒருவனும் ஒருத்தியும் களவில் ஒருங்கூடி நிகழ்த்தும் குறிஞ்சித்திணை ஒழுகலாறு போல, ஒத்த தறுகண்மையாளராகிய வெட்சிமறவர், கரந்தை மறவர் என்னும் இருதிறத்தாரும் ஒரு காலத்து

ஒருங்கு கூடி நிகழ்த்தும் போர்ச்செயலாதலின், இவற்றை வெட்சித் திணையென ஒரு திணையாகவே கொள்ளுதல் வேண்டும். இதுவே தமக்கு முற்பட்ட தமிழியல் நூலோர் துணிபு. ஆதலின், நிரைகவர்தலும் நிரைமீட்டலும் ஆக உடனிகழும் இப்போர்ச்செயல்கள் இரண்டினையும் வெட்சி என ஒரு திணையாகவே கொண்டார் தொல்காப்பியனார்'' (ப. 85)

எனவே, 'படையியங்கு அரவம்' (நூ. 61) வெட்சித்திணைக்குரிய துறைகளையும் 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்' (நூ. 63) கரந்தைத்திணைக்குரிய துறைகளையும் தொகுத்துரைப்பன எனத் தெளியலாம்.

இனி, ஒவ்வொரு துறைக்கும் உரையாசிரியர் கூறும் விளக்கத்தினைப் பார்ப்போம்.

துறைகள் — விளக்கம்

I. வேலன் வெறியாட்டயர்ந்த காந்தள்

தன் வேந்தனுக்கு வென்றிவேண்டி வேலன் காந்தள்பூச்சூடி வெறியாடுதலை குறித்தது இத்துறை. மடலேறுதற்குப் பெயராகவும் காந்தளைக் கூறுவர். காம வேட்கையினால் ஆற்றாமை மேலிடுதலான் பெண்மாட்டு நிகழும் வெறியும் காந்தள் எனப் படும். எனவே, காமவேட்கையின் ஆற்றாளாகிய பெண்பாற் பக்கமாகிய வெறியும், அந்நிலத்துள்ளார் (—குறிஞ்சிநிலத்தார்) வென்றிவேண்டி ஆடும்வெறியும் இத்துறையினால் குறிக்கப்பெறும் என்றார் இளம்பூரணர். இவ்விருவகை வெறியாட்டில், மடலேறும் மங்கை ஆடிய வெறிக்கு மட்டுமே பு.வெ. மாலையிலிருந்து பெருந் திணைக்குரிய பாடலை மேற்கோள் காட்டினார். 'வென்றிவேண்டி யாடுதற்குச் செய்யுள் சிலப்பதிகாரத்துள் வேட்டுவவரியுட் கண்டு கொள்க' என்றார். 'வேலன் தானே ஆடியதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க' என்றும் குறித்தனர்.

குறிஞ்சிநிலத்தெய்வம் ஆகிய செவ்வேளுக்குரிய வேலைத்தான் ஏந்தி நிற்றலின் வேலன் என்றுபூசாரி குறிக்கப்பெற்றான். இவனே அப்பெருமானுக்கு உரிய காந்தள் மலரைச்சூடி வெறியாடுவான். வெறிக்கூத்தினை ஆடும் பெண்ணிற்குக் கணிகாரி என்று பெயர் என்பர் நச்சினார்க்கினியர்.

2. 3. 4. மாபெருந்தானையர் மலைந்தபூ

மிக்க பகைவேந்தன் போர்புரிபவர் இன்னவர் என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாகத் தமிழ்நாட்டு நிலவேந்தர் (—மாபெருந்தானையர்) சூடிய பனை, வேம்பு ஆத்தி என்ற பூக்கள் பற்றிய துறைகள் என்பர் இளம்.

மாபெருந்தானையர் என்ற தொடரின் முன்னும் பின்னும் கிடந்த சொற்களைத் தமக்கே உரிய வகையில் மாற்றியமைத்து, ''மாவரும் புகழ் ஏந்தும் பெருந்தானையர்'' என்று கொண்டார் நச்சி மாமுதலியவற்றால் தமக்குவரும் புகழைத்தாங்கும் மூவேந்தருடைய பெரும்படையாளர் என்று பொருள் கண்டார் நச்சி. இன்னவேந்தன் படையாளர் வென்றார் என்பதற்கு ஓர் அறிகுறியாக முற்குறித்த பூக்கள் சூடப்பெறும் என்பது இவர் கருத்து. தானையர் என்ற சொல் படையாளரைக் குறிக்கும். எனின், வேந்தரும் தானையை நடத்திச் செல்லுதலின் அவரைக் குறித்ததாக இளம்பூரணர் உரை செய்தனர் எனலாம். கரந்தைத் திணைக்கண் வேந்திரின் பூக்கள் இடம் பெற்றமைக்கு இவர் கூறும் காரணம் இதுவே.

''நிரைகோள் கேட்டவழி நெடுநிலவேந்தரும்
கதுமென எழுவராதலின்,
நிரைமீட்டலின்கண் பூப்புகழப்பட்டது'' (ப. 82)

5. வாடாவள்ளி

பறவாப்பூவை என்பதுபோல வாடா வள்ளி என்பது வெளிப் படை. வள்ளி என்பது ஒரு கூத்து. வாடும் வள்ளியினின்றும் ஆடும் கூத்தினை வேறுபடுத்திக் காட்டினார். வெற்றிவேண்டி முருகனைப் பரவிப் பாடிப் பெண்டிர் ஆடும்கூத்து வள்ளி எனப்படும் என்றார் பாரதி. இது குறிஞ்சி நிலத்தில் நிகழ்வது என்பர் இளம்.

6. கழல் நிலை

'வயவர் ஏத்திய ஓடாக்கழல் நிலை' என்பது துறையின் பொருளை விளக்கும் தொடர். மழலைப்பருவத்தான் ஒருவன் போர்க்களத்தில் மாற்றாரைக் கண்டு ஓடாது மதுகையுடன் நின்றமைகண்டு அவன் காலிற்கட்டிய வீரக்கழலை மறவர்கள் புனைந்துபோற்றுதலைக் குறிப்பது இத்துறை. இதனைக்

கழனிலைக் கூத்து என்பர் நச்சி. இத்துறை வள்ளிக்குப் பின்வருதலின் இருபாலரும் ஆடுதல் உண்டு என்றார்.

7. உன்னநிலை

உன்னம் என்பது ஒருவகை மரம். அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும், வாராதகாலம் குழைந்தும் நிற்கும் என்பர் இளம். அம்மரத்தின் நிலையினைப்பாடும் துறை இங்குச் சுட்டப்பெற்றது. புறநானூற்றில்,

''திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை'' (3:22—23)

என வருதல் காணத்தக்கது.

மக்களின் பல்வேறு நம்பிக்கைகளில் உன்னநிலை அறிதலும் ஒன்று. வேந்தனின் படைமறவன், தம்வேந்தற்கு ஆக்கம் வேண்டி தழைக்க என்றும், பகைவேந்தற்குக் கேடு வேண்டிப்படுக என்றும் உன்ன மரத்தைப் பார்த்துப் பரவுதல் உண்டு. ஆக்கம் உளதெனின் தழைத்தலும், அழிவுண்டெனில் வாடுதலும் உண்டென்றும் குறித்தனர் நச்சி. மரங்களில் வருவது காட்டும் தெய்வத்தன்மை காணும் தொல்பழம் நம்பிக்கையினை இத்துறை சுட்டியது எனலாம்.

8. பூவைநிலை

மாயோனுக்குரியது பூவைப்பூ. இது காயாம்பூவினைச்சுட்டும். இப்பூவின் மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப் புகழ்தல் என்பர் இளம். நாடெல்லை காடாதலின், அக்காட்டிடைச் செல்வோர் அம்மலரைக் கண்டு கூறுவர். உன்னம்கண்டு கூறுதல் போல் இதுவும் ஒரு வழக்கு என்று விளக்குவர் இளம்.

எனின், இவரே வேறொரு கருத்தையும் குறித்துள்ளார்:

''இஃது உரையன்று என்பார், மாயோன் முதலாகிய
தேவர்களோடு உவமித்தலே பூவைநிலை என்ப''

மாயோன், காக்கும் கடவுள், மன்னனும் காத்தல் தொழிலினன். காத்தல் ஒப்புமையான் மன்னனை மாயோனுடன் ஒப்பிட்டுப் பரவுதல் பூவை நிலை என்பதே பெருவழக்கு. கல் வெட்டுக் களிலும் வேந்தனைத் திருமால் அவதாரமாகக் கூறும் மரபு இங்குக்

எண்ணுதற்குரியது. அரசனைப் பொருளாகக் கொண்ட பரணி, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களிலும் மன்னனை மாலின் மறுபிறவியாக மதித்துத் துதிக்கும் மாண்பு காணப்படுகிறது. முருகன் முதலிய ஏனைய கடவுளருடனும் ஒப்பிடலாம் என்பர் நச்சி. புறநானூறு முதலிய இலக்கியங்களில் அவ்வாறு வந்திருத்தலே இங்ஙனம் உரை காண்பதற்கு அடிப்படைஎனலாம். வேந்தரேயன்றிக் குறுநில மன்னரும் இங்ஙனம் கூறுதற்கு உரியர் என்றார் நச்சி. எனின், குறிஞ்சிக்குரிய கரந்தையில் முல்லைக்கு உரிய மாயோன் பேசப்படுதல் பொருந்துமா என்ற வினா எழும். இந்நூற்பா பொதுவியலாகவும் கொள்ளுதற்கு உரியதாகலின், இவ்வாறு ஆசிரியர் துறைப்படுத்தினார் என்று அமைதி காணலாம். அன்றியும், மலையடிவாரத்தைச் சார்ந்து முல்லை இருக்கும் அணிமை நோக்கியும் கூறியிருத்தல் கூடும்.

9. ஆரமர் ஓட்டல்

அரிய அமரைப்போக்குதல் என்றார் இளம். நிரைமீட்கும் போது தடுப்போர் யாவரே யாயினும் அவரைத் தோற்றோடச் செய்தல் இத்துறைக்குரிய பொருளாகும்.

குறுநிலமன்னரும் காட்டகத்து வாழும் மறவரும் போர்த் தொழில் வேந்தரைப்பொருது புறங்காண்டலைக் குறிக்கும் என்றார் நச்சி. இதனால், வேந்தரைக் காட்டிலும் சிறுநிலம் ஆண்டோரும் படைத்தலைவர்களும், தனி மறவர்களும் வன்மை மிக்கவராதலும் உண்டு என்பது புலனாகும்.

10. ஆபெயர்த்துத்தருதல்

இத்துறை நிரைமீட்டலைக் குறித்தலின் தெளிவாகக் கரந்தைத்திணைக்கு உரியது எனலாம். நிரை மீட்டல் தொழிலைக் குறுநில மன்னர் அல்லது காட்டகத்து வாழும் மறவர் புரிவர் என்பர் நச்சி. இதற்குப் புறம் 259 ஆம் பாடலைச் சான்று கூறினார். 'தருதல்' என்ற மிகையானே, நிரையல்லாத கோடலும் இத்துறையின்பாற் படும் என்று கூறி யானைக் கன்றைக் கவர்ந்து வந்தமைக்கு அகநானூற்றுச் சான்று (83) காட்டினர்.

11. வேந்தன் சிறப்புரைத்தல்

சீரும் சிறப்பும் பொருந்திய வேந்தனின் மிகுதிப் பண்புகளைப் பாராட்டுதல் இத்துறைக்குரிய பொருளாகும். இது மற்றுள்ள

திணைகளுக்கும் பொது என்பர் இளம். குறிப்பிட்ட ஒரு திணைக்கு இலக்கணம் கூறக்கூடிய நூற்பாவில் இங்ஙனம் ஓரிரு துறைகள் விரவி வருதல் தவிர்க்க ஒண்ணாது. எனவேதான், இந்நூற்பா பொதுவியல் பற்றியது என்றுசிலர் எண்ணுதற்கு முற்பட்டனர்.

12. நெடுமொழி கூறுதல்

தன்னிடம் பொருந்திய ஆற்றல் மிகுதியால் வஞ்சினம் கூறுதல் இதன் பாற்படும். இங்ஙனம் நெடுமொழி கூறுதல் கரந்தைக்கு மட்டுமன்றி ஏனைய போர்த்திணைகளுக்கும் பொதுவாகும் என்பதை உணர்ந்து சுட்டியவர் இளம்.

13. 14. பிள்ளைநிலை

பிள்ளை என்ற சொல் மரபியலில் பறவையின் குஞ்சுகளையும்; ஊர்வனவற்றின் குட்டிகளையும்; பன்றி, புலி, முயல், நரி, குரங்கு என்ற ஐந்தின் குட்டிகளையும் குறிக்கும் என்று இலக்கணம் செய்தார் தொல்காப்பியர் (நூ. 548—558). எனின், இங்குப் புறத்திணையியலில், ''பிள்ளைநிலை'' என்ற துறையினைக் கரந்தைக்கு உரியதாகக் குறித்தனர். ஈண்டு, பிள்ளை என்ற சொல் மறவரைக் குறித்தது என்பர் நச்சி. எனவே, தொல்காப்பியர் காலத்தில் ஒரேசொல் உயர்திணைக்கும். அஃறிணைக்கும் பெயராக வழங்கியது எனலாம். அன்றியும் உருவத்தால் ஒன்றாயினும் பொருள் நோக்கால் இரு சொல்லாக எண்ணுதலும் ஏற்றது. கருவூர்க்கதப்பிள்ளை சாத்தனார் என்று சங்கப் புலவர் பெயர் காணப்படுதலின், இச்சொல் உயர்திணையாக வழங்கப்பெற்றமை உறுதியாகிறது.

பிள்ளைநிலை என்ற மறத்துறை இருவகைப்படும்:

1) வருதார் தாங்கல்

2) வாள்வாய்த்துக் கவிழ்தல்

இவற்றுள் முன்னது, எதிர்த்துவரும் பகைப்படையின் முன்னணியாகிய தூசிப்படையினைத் (—தார்) தான் ஒருவனாகவே தடுத்து நிறுத்தலைக் குறிப்பது. இத்துறைக்கு இணையாக வஞ்சித்திணை காண்.

''வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை''

என்ற துறையும்; தும்பைத் திணைக்கண்,

''ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய பெருமை''

என்ற துறையும் எண்ணிப் பார்த்தற்குரியவை. ஆதலின், தனிமறவனின் ஆண்மை இத்துறைக்குரிய பொருளாகும்.

இரண்டாவது துறை, வாளினால் மாற்றாரைக் கொன்று தானும் வீரமரணம் அடைதலைக் குறித்தது. இதுவும் தனியாண்மை சுட்டியது.

15. பிள்ளையாட்டு

வாளால் மாறுபட்டு எழுந்தவனை மகிழ்ந்து பறைஒலிப்ப, அவற்குத் துறக்கம் ஆகிய நாட்டை வழங்குதல் இத்துறைக் குரியது என்பர் இளம். வாளாற் பொருதுயர்ந்த அரசிளங் குமரனை, அந்நாட்டவர் கொண்டுவந்து பறை ஒலிக்கும்படி அவனுக்கு அரசு கொடுத்த பிள்ளைப் பருவத்தோனைக் கொண்டாடுதல் என்று துறைவிளக்கம் செய்தனர் நச்சி. இத்துறையும் பிள்ளைப்பருவத்திலேயே வீரம் முற்றிய இளமறவனின் சிறப்பினைக் குறித்தது. சென்ற துறையில் பிள்ளை என்ற சொல் மறமக்களைக் குறித்தது. இங்கு, அவர்கள் ஆண்டில் இளையர் என்ற வகையில் பாலப்பருவம் சுட்டியது என்பது நச்சி உரையினால் அறியப்படும்.

ச. சோ. பாரதியார், 'நாடு' என்ற சொல்லிற்கு இளம்பூரனர் கொண்டதுபோல் துறக்கம் என்ற பொருளைக் கொள்ளவில்லை. வெற்றிதந்த வீரனுக்கு நாடுதவிப்பாராட்டும் நன்றிக்கடனைச் சுட்டும் என்றார்.

16. 21. காட்சி முதல் வாழ்த்துரை

போர்க்களத்தில் வீழ்ந்த வீரரைக் கல்நிறுத்தற்பொருட்டுக் கற்காண்டலும் (—காட்சி) அதனைத் தேர்ந்துகோடலும் (—கல்கோள்) பின்னர், அதனை நீராட்டுதலும் (—நீர்ப்படை) நடுதலும், நாட்டிய கல்லிற்குக் கோட்டம் அமைத்தலும் (—பெரும்படை) அதனைத் தெய்வமாகப் போற்றுதலும்

(—வாழ்த்து) என்ற ஆறும் கரந்தைக்கு உரியவை. எனினும், இவை மறத்துறை ஏழற்கும் பொதுவாகக் கொள்ளப்படும் என்று குறித்தனர் இளம்பூரணர் என்பதை முன்னர்ப் பார்த்தோம். எனவே, இவை பொதுவியலிற்குரியவை என்று கருதினார் நச்சி.

மேலும், காட்சி முதலிய ஒவ்வொரு துறைக்கும் உரிய பல பகுதிகளையும் விளக்கவியல் (Descriptive Method) முறைப்படி இவர் எண்ணிக்காட்டியிருத்தல் நோக்கத்தக்கது. காட்சி என்ற ஒருதுறைக்குள் கற்காணச்சேறல் இடைப்புலத்துச் சொல்லுவன கண்டுழி இரங்குவன, கையறுநிலை, பாணர் கூத்தர் முதலிய யோர்க்கு உரைப்பன, அவர் தமக்கு உரைப்பன முதலியவை அடங்கும் என்றார். இவர் 'கல்கோள்' என்பதைக் 'கால்கோள்' என்று பாடங்கொண்டார். இத்துறைக்கண் பலகூறுகள் பொருந்துவன. கால் கொள்ளும் காலத்து, மாலையும் மலரும் மதுவும் சாந்தும் முதலியன கொடுத்தல், அத்தன்மையர்க்கு இத்தன்மையால் தகும் என்றல், தமர் தமர்பரிந்திரங்கல் என்பன இவர் சுட்டுவன. அண்மையில் ஐதராபாத்தில் உசன்சாகர் ஏரியில் ஆந்திர அரசு வைகாசி விசாக நன்னாளில் மாபெரும் புத்தர் சிலையினை நிறுவுவதற்குத் தகுதி வாய்ந்த கல்லினைத் தெரிவு செய்தற்கு மாபலிபுரத்துச் சிற்பக்கல்லூரி முதல்வராகிய தமிழ்ப் பெருமகனார் கணபதி ஸ்தபதியை நியமித்து, அன்னார் ஆந்திர மாநிலம் முழுதும் பயணம் சென்று நால்கொண்டாவில் இராய கிரிக்கு அருகில் உள்ள மலையில் கல்தெரிவு செய்ததும் இங்கு எண்ணுற்தகுரியவை.

எடுத்த கல்லை நீர்ப்படை செய்யும்பொழுது ஈர்த்துக் கொண்டொழுகல் ஏற்றிய சகடத்தினின்று கீழே இறக்கிய வழி ஆரவாரம் செய்தல் அவர் (—மறைந்தவர்) தாயங்கூறல் என்ப நீர்ப்படையின் பகுதியாகும். நடுதற்கண் மடையும் மலரும் மதுவும் முதலியன கொடுத்துப் பீலித்தொடையலும் மாலையும் நாற்றிப் பல்லியம் இயப்ப விழவுச் செய்யும் சிறப்பெல்லாம் நடுதல் என்ற துறைக்குரியவை. பெயரும் பீடும் எழுதுங்காலும் இப்பகுதிகள் கொள்ளப்படும். இக்குறிப்புகள் சங்க இலக்கியச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இவரால் தொகுத்துக் கூறப்பட்டன. பழைய வீரக்கல் (—நடுகல்) வழிபாடு பற்றிய விவரம் இங்கு அறியப்படுகிறது.

நாட்டப்படும் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புகளும் படைத்தல் பெரும்படைப்பகுதியாய்

அடங்கும். நடுகல் பின்னர் கோயிலாக வளர்ச்சி பெற்றுப் பிரதிட்டை செய்யப்பெற்ற வரலாறு இதனால் புலனாகும். பள்ளிப்படைவிடுகள் பல பிற்காலச் சோழர்காலத்தில் எழுந்தமை இங்கு எண்ணற்பாலது.

வாழ்த்தல் என்னும் துறை, இதுதான் (—நடுகல்) நெடிது வாழ்க என்ப எனவும் இதன்கண்ணே (—இந்த நடுகல்லில்) அவன் (—மறைந்தமறவன்) நின்று நிலாவுக எனவும், பிறவும் கூறுவனவும் எல்லாம் சுட்டும் என்றார்.

கரந்தை வீரர்க்கு நடுகல் எடுத்து வழிபடுதல் தொன்மை நிகழ்ச்சி என்பதும் வெட்சி, வஞ்சி முதலிய ஏனைய மறத்துறை மாண்பினர்க்கும் இவ்வாறு வழிபாடாற்றுதல் உண்டு என்பதால், மேலே சுட்டப்பெற்ற துறைகள் மறத்துறை ஏழற்கும் பொதுவானவை என்பதும் தெளியத்தக்கன.

இனி, சங்க இலக்கியத்தில் காணப்பெறும் நடுகல் பற்றிய செய்திகளை ஒருவாறு தொகுத்து நோக்குவோம். புறப்பொருள் பற்றி மிகுதியாகப் பேசும் புறநானூற்றினை மையமாகக் கொண்டு ஆராயலாம்.

சங்க இலக்கியத்தில் நடுகல் பற்றிய குறிப்புக்கள்

பொதுவாக நிரை மீட்டு வீர மரணம் அடைந்த மறவனுக்கு நினைவுச் சின்னமாக நடுகல் நிறுவுதல் அக்காலத்து மரபாகக் காணப்படுகிறது. எனினும் களிறு மீட்ட வீரர்க்குக்கூட நடுகல் நாட்டப்பெற்ற செய்தி புறநானூற்றில் குறிக்கப்பெற்றுள்ளது (335:9-12). பெரும்பாலும் ஊர்ப்புறத்தே இத்தகைய நடுகற்கள் நாட்டப்பெற்றன. (புறம். 260, 264, 329). கரந்தை வீரர்கள் வேட்டுவர்களாக விலங்குதலின், அவர்கள் வாழிடமாகிய பாலைப் பகுதிகளில் நடுகற்கள் எடுக்கப்பெற்றன (அகம். 67:8-10, 131:10-11). மறைந்த மறவனின் உருவமும், பெயரும், சிறப்புக்களும் இக்கல்லில் பொறிக்கப்பெறுதல் உண்டு. (அகம். 67:8-10. புறம். 264:1-4). இத்தகைய நடுகற்களுக்குச் செந்நிற மாலைகளும் மயிற்பீலியும் சூட்டப்பெறுதல் மரபாகும் (புறம், 232, 260, 264). இடுகாடு, சுடுகாடு போல நடுகற்கள் இருக்கும் ஒதுக்குப் புறத்தைப் பறந்தலை என்ற பெயரினால் புறநானூறு சுட்டியது (314-3). நடுகற்களைத் தொழுது பரவும் மரபும் காணப்படுகிறது. நடுகல்லைத் தெய்வமாக மதித்துப் போற்றிய வீர வழிபாட்டினைச் சங்க இலக்கியங்கள் சிறப்பாகக் குறித்

துள்ளன. நடுகல்லிற்குத் தெளிந்த கள்ளினை வைத்துப் படைக்கும் வழக்கமும் காணப்படுகிறது (புறம். 232:3-6). பெரும்பாலும் புடவையால் செய்யப்பட்ட பந்தர்க்கீழ் இக்கற்கள் நாட்டப்பெறும் (புறம். 260:15-28). நெல் தூவிப் பரவும் வழக்கமும் சுட்டப் பெற்றது (புறம். 35). நடுகல்லைத் தவிர வேறு பரவுவதற்குரிய கடவுள் இல்லை என்ற மிகத்தொன்மையான வீரவணக்கத்தை மாங்குடிகிழார் குறித்துள்ளார் (335:9-12). பெரும்பாலும் விடியற்காலையில் நடுகற்களுக்கு நன்னீராட்டி, நாட்பலி கொடுத்து, நறும்புகை எடுத்து வழிபடுதல் சிறப்பாகச் சுட்டப் பெற்றது (புறம். 329).

நடுகல் பெற்ற வீரர்கள் சிலரைப் பற்றிய குறிப்புக்களை இங்குக் காண்போம்.

கரந்தை வீரர்

பாம்பின் வாயினின்றும் திங்களை மீட்பது போல் மறவர் கையினின்றும் ஆனிரைகளை மீட்டுப் பட்ட வீரனுக்கு எழுப்பிய நடுகற் சிறப்பினை வடமோதங்கிழார் பொறித்துள்ளசர் (புறம். 260).

ஆவூர்மூலங்கிழார்,

''நாகு முலையன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மறைவிற் சூட்ட
நிரையிவண் தந்து நடுகல் லாகிய
வெண்வேல் விடலை'' (புறம். 261)

என்று கரந்தை வீரன் நடுகல்லாகிய செய்தியைச் சுட்டியுள்ளார்.

மற்றும் ஒரு புலவன் இரவலனை நோக்கிச் செல்லும் வழியில் ஊன்றப்பெற்ற நடுகல்லைத் தொழாமல் போகற்க என்று நெறிப் படுத்தக் காண்கின்றோம் (புறம். 263).

வேந்தர், வேளிர் நடுகற்கள்

கோப்பெருஞ்சோழன் மாபெரும் மன்னன். பிசிராந்தையாரின் கெழுதகை நண்பன். இறுதிக் காலத்தில் வடக்கிருந்து உயிர் துறந்தபின் அவனுக்கு நடுகல் நிறுவப்பெற்றது. இதனைப் பொத்தியார் என்னும் புலவர்,

''கெடுவில் நல்லிசை சூடி
நடுகல் ஆயினன் புரவலன் எனவே''
(புறம். 221:12-13)

என்று பரவுகிறார். அவன் நடுகல் ஆகிய பிறகு அவனைத் தேடி வந்து உடன் வடக்கிருக்க விரும்பிய பொத்தியார்க்கு அந்நடுகல் அகன்று இடம் கொடுத்த செய்தியையும் அப்புலவர் குறித்துள்ளார் (223:3-4). இதனால், சங்க காலத்தே பௌராணிக மரபு வந்து விட்டது எனலாம்.

வேந்தரே அல்லாமல் வேளிர்களும், வள்ளல்களும் இறந்த பின்னர் நடுகல் உருவில் வணங்கப்பெறுதலையும் பண்டை இலக்கியங்களில் காண்கிறோம்.

நாடு முழுவதும் கொடுப்பவும் கொள்ளாதவனாகிய நெடுமான் அஞ்சியின் நடுகல்லிற்குச் சிறிய கலத்தினால் முகந்து ஊற்றும் தேறலைக் கொள்ளுவானோ, கொள்ளானோ என்று வியந்து பாடுகிறார் ஔவையார் (புறம். 232).

இங்ஙனம் நடுகல் வழிபாட்டினை நுணுகி ஆராயின் ஓர் உண்மை புலனாகிறது. தொடக்கத்தில் ஆனிரை மீட்ட கரந்தை வீரனுக்கு மட்டுமே நடுகல் நிறுவும் மரபு தோன்றியிருத்தல் வேண்டும். இத்தொன் மரபு தொல்காப்பியத்தில் சுட்டப்பெற்றது. பின்னர், வீர மரணம் அடைந்த மறவர் யாவர்க்கும் நடுகல் நிறுவும் பழக்கமும் தோன்றியது. காலப்போக்கில் வடக்கிருந்து உயிர் துறக்கும் மன்னனுக்கும் மற்றவர்க்கும் நடுகல் எடுக்கும் மரபும் பின்னர், இறந்த பெரியவர் யாவர்க்கும் நினைவுச்சின்ன மாகக் கல்லெடுத்துப் பரவும் மரபும் தோன்றியிருத்தல் வேண்டும். இவ்வகையில் கண்ணகியின் வழிபாடும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இக்காலத்தும் தமிழ் மக்கள் யாவர் இறப்பினும் இம் மரபினை ஒட்டிக் கல் சாத்திக் கடனிறுக்கும் சடங்கினைச் செய்தல் சுட்டத்தக்கது.

இனி, காப்பியங்களில் காணப்பெறும் வெட்சி, கரந்தை பற்றிய குறிப்புக்களை ஆராய்வோம்.

சிலம்பில் வெட்சியும் கரந்தையும்

இளங்கோவடிகள் தாம் வாழ்ந்த காலத்து நிலவிய போர் முறைகளை மறவாது தம் காப்பியத்தில் ஏற்ற பெற்றி நோக்கி

இயம்பி வைத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் புறத் திணை பற்றிய குறிப்புக்களை அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் போதிய அளவு விளக்கியுள்ளனர். ஊர்காண் காதையில்,

''மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும் (14.12) எனவரும் பகுதிக்கு அடியார்க்கு நல்லார், 'மறமும் அதன் துறைகளும் விளங்குதற்குக் காரணம் ஆகிய மன்னவனது கோயிலும்' என்று பொருள் கூறி மேலும் விளக்கம் தருகிறார்.

''அதன் (-மறத்தின்) துறையாவன எழுவகைய. அவை:
வெட்சி, கரந்தை, வஞ்சி, நொச்சி, உழிஞை,
தும்பை என இவை. இனி விரிப்பின் அகலும்.
'தொகை மறவரது தறுகண்' என்பதனான் இவையும் இவற்றின் துறைகளும் வந்தவழிக் கண்டுகொள்க''. (ப. 367)

இவ்விளக்கத்தினால் இவர் பன்னிருபடல மரபினைப் பின்பற்று பவர் என்பது புலனாகும். தொல்காப்பியரால் தனித்திணைகளாக எண்ணப்பெறாத கரந்தை, நொச்சி, காஞ்சி (-எதிருன்றுதல்) என்பனவற்றை இவர் மறச்சார்புடையனவாக எண்ணியிருத்தல் நோக்கத்தக்கது. இவை ஏழுமே நேரிடையாகச் சுட்டத்தகும் போர் பற்றிய திணைகள் என்பதை முன்னரும் கூறியுள்ளோம். மறம் என்ற சொல்லிற்குப் புறம் என்ற பொருள் வழங்கியிருத்தல் போற்றத்தக்கது.

எனினும், தொல்காப்பியர் சொல்லிவைத்த மிகப்பழைய புறப்பொருள் மரபுகளையும் அடியார்க்கு நல்லார் மதிப்பவர். பதிகப்பகுதியில் அகம், புறம் எனத் திணை இரண்டு என்றும், அவற்றின் பகுதி பதினான்கு என்றும் கூறி, கைக்கிளை முதல் பெருந்திணை இறுவாய் நின்ற ஏழும் அகம் என்றும், வெட்சி முதல் பாடாண் இறுதிவரை எண்ணப்பெற்ற ஏழும் புறம் என்றும் குறித்துள்ளமை இங்குச் சுட்டுதற்குரியது (ப. 14). புறத்திணை களின் முடிபாக இருப்பது பாடாண். அதுவே வாழ்வின் குறிக்கோள். எனவேதான்,

''தோடார் போந்தை தும்பையொடு முடித்துப்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்'' (27:45-6)

என்று இளங்கோ பாடினர்.

அடிகள் காலத்தில் வெட்சியின் வேறுபட்டதாகக் கரந்தைப் போர் கருதப்பெற்றது என்பதற்குப் பல சான்றுகள் காணப் படுகின்றன. அன்றியும், மன்னர் ஏவலின்றி மறவர்தாமே ஆநிரை கவர்தலாகிய தன்னுறு தொழிலும் வேட்டுவ வரியில் சுட்டப் பெற்றது. கொற்றவை நிலை என்னும் துறையினைத் தொல்காப்பியர் வெட்சித்திணைக்கு உரியதாகக் குறித்தனர். வேட்டுவ வரியில் கொற்றவை மறவரின் குலதெய்வமாகக் கொண்டாடப் பெறுகிறாள். கொற்றவைக்குப் பூசை போடாமையால் கரந்தை வீரர்களின் ஊர்களில் ஆநிரைகள் வளமாக உள்ளன என்றும் மறக்குடி வீரம் மங்கி அறக்குடி போல் அவிந்துவிட்டது என்றும் தெய்வ ஆவேசம் கொண்ட முழுங்குவாய்ச் சாலினியின் மொழியாக இளங்கோ குறித்திருத்தல் எண்ணத் தக்கது. 'கல்லென் பேரூர்' (12. 12) என்பதற்குக் 'கரந்தையார் ஊர்கள்' என்று அரும்பத உரையாசிரியர் உரை வரைந்தனர். தன்னுறு தொழில் சுட்டப்பெறினும், மன்னன் குறிப்பறிந்தே, அது நடைபெறும் என்ற கருத்திற்கு,

''மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர் நாட்டுக்
கட்சியும் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய்யோனே'' (12. 24)

என்று வேட்டுவ வரியின் இறுதியில் இடம்பெறும் அரசவாழ்த்து அரணாக அமைகிறது.

கொற்றவையினைப் பரவி வெட்சி மலர் புனைந்து, புள் நிமித்தம் நோக்கி வீரர்கள் நிரைகவரச் செல்லும் மரபினை இளங்கோ குறித்துள்ளார் (12. 13). தன்னுறு தொழிலை வெட்சிப் புறநடை என்று கூறும் மரபு காணப்படுகிறது (12. 14).

வெட்சி வீரர்கள் கவர்ந்த ஆநிரைகளைக் கரந்தை வீரர்கள் மீட்டுச் செல்ல, அவர்களை மடக்கி அலறும்படித்தாக்கி அவற்றை மீட்டு வரும் வெட்சியரின் மறச்செயலைக்,

''கரந்தை அலறக் கவர்ந்த இனநிரைகள்'' (12. 16, 2)

என்ற பகுதி தெளிவுறுத்துகிறது. கரந்தை என்ற சொல்லிற்கு அரும்பத உரையாசிரியர் 'மீட்குந்தொழில்' (12. 24) என்று பொருள் கூறுதல் சிறப்பாக உள்ளது.

புறநானூற்றிலும் வெட்சி வீரர் மன்னன் ஏவலின்றி நிரை கவரச் சென்ற செயல்கள் குறிக்கப்பெற்றுள்ளன. புராதனமான சமுதாயத்தில் அரசு என்னும் நிறுவனம் பலமாக வேரூன்றாத நிலையில் வீரர்கூட்டம் தாமே போர்ச்செயல்களில் ஈடுபட்டிருத்தல் இயல்பே. புறநானூற்றுப் பாடல்களின் காலம் தெளிவாக ஆராய்ந்து முடிபு செய்யப் பெற்றால்தான், கால வரிசைப்படி கருத்துக்களின் தோற்ற மாற்றங்களைக் கணித்துக் கூறுதல் கூடும்.

தன்னுறு தொழிலைச் சிறந்த போர் முறையாக ஒத்துக் கொள்ளாத இளம்பூரணர் கூட, தொல்காப்பியர் வெட்சித் திணைக்கு வகுத்துக் கூறிய கொடை என்ற துறையினை விளக்குவதற்கு மேற்கோளாகத், தன்னுறு தொழிலால் பெற்ற ஆநிரைகளை வேட்டுவர்கள் பங்கிட்டு வழங்கும் கொடைச் செயல் குறித்த வேட்டுவ வரிப்பாடல்களையே எடுத்துக் காட்டியுள்ளார். மன்னுறு தொழிலரின் கொடைச் செயல்பற்றிய பாடல்கள் அவர்க்குக் கிடைக்கவில்லை போலும்.

இனி, இயைபு நோக்கிச் சீவக சிந்தாமணியில் இடம் பெறும் தன்னுறு தொழில் பற்றிய செய்திகளைக் காண்போம்.

சிந்தாமணியில் வெட்சியும் கரந்தையும்

சீவக சிந்தாமணியில் கோவிந்தையார் இலம்பகத்தில் ஆநிரை கவர்தல், மீட்டல் பற்றிய செய்திகள் விரிவாகப் பேசப்பெற்றன. சச்சந்தன் ஆகிய தரணி காவலனைக் கொன்று ஏமாங்கத நாட்டின் தலைவனாக விளங்குகிறான் கட்டியங்காரன். அரசுக்குச் சொந்தமான ஆநிரைகள் அனைத்தும் நந்தகோன் என்ற இடையர் தலைவன் பொறுப்பில் உள்ளன. மலைப்புறம் மேய்ந்த ஆநிரைகளை வேடர்கள் கவர்தல் தன்னுறு தொழிலாகும்.

விண்ணிடத்தை நிரப்பி ஒளிவீசும் உடுக்களைப் போலக் கானகம் எங்கும் ஆநிரைகள் மேய்கின்றன. அவற்றைக் காத்து நிற்கும் ஆயர்கள் அஞ்சும்படி வெந்தொழில் வேடர்கள் மழைபோல் அம்புகளைச் சொரிகின்றனர். எதிர்த்து நிற்க இயலாது சிதறி ஆடும் ஆயர்களுக்கு மத்தினால் கடையப்பெறும் தயிரின் சிதறல் உவமை கூறப்பட்டது. திருத்தக்கதேவர் அவரவர் மரபறிந்து உவமை கூறுவதில் சிறந்தவர் என்பதை இக்கற்பனை காட்டுகிறது. அப்பாடல் இதுவே :

''காய மீன்எனக் கலந்து கானிரை
மேய வெந்தொழில் வேடர் ஆர்த்துடன்

பாய மாரிபோற் பகழி சிந்தினார்
ஆயர் மத்தெறி தயிரின் ஆயினார்'' (421)

நடந்த நிகழ்ச்சியை நந்தகோன் நாட்டுத் தலைமைப் பொறுப்பில் உள்ள கட்டியங்காரனிடம் கூறுகிறான். அவன் தன்மக்கள் நூற்று வரையும் ஏவி நிரைகளை மீட்குமாறு பணிக்கிறான். அவர்களால் முடியவில்லை. இந்நிலையில், நந்தகோன் நிரையை மீட்டுக் கொடுப்பவனுக்குத் தன்மகள் கோவிந்தையை மணம் செய்து கொடுப்பதாக ஒரு விந்தையான அறிவிப்பினை விளம்பரம் செய் கிறான். நண்பர்கள் புடைசூழச் சீவகன் வேடர்கள் ஐம்பத்தாயிர வரை அம்பு முனையில் அடக்கி, ஆநிரைகளை மீட்டுத்தந்து, குலம் ஒவ்வாமையால் தான் மணவாது, நண்பன் பதுமுகனுக்குக் கோவிந்தையை மணம் முடிக்கிறான். இந்நிகழ்ச்சிகளை ஊன்றி நோக்கின், நிரைகவர்தல் தன்னுறு தொழிலாக இருப்பினும், மீட்டல் தன்னுறு தொழிலும் மன்னுறு தொழிலும் அன்றி, ஆயர் தலைவன் ஏவியவழி சீவகன் செயலாக அமைந்தது.

எனவே, தொல்காப்பியம் கூறியுள்ள போர் முறைகள் செவ்வியல் சார்பாகவும் பன்னிருபடலம்கூறியவை நடப்பியலையும் உள்ளடக்கியதாகவும் கொள்ளுதற்கு உரியவை என்பதும், இலக்கியம் படைத்தவர்களும் இவ்விரு சிந்தனைப்பள்ளிகளையும் அறிந்து தேவையான அளவு தம்படைப்புக்களில் பேணிக் காத்தவர் கள் என்பதும் அறியத்தக்கவை எணலாம்.

புலவர்கள் புனைந்துபாடிய படைப்பிலக்கியங்களேயன்றி மக்களின் நடைமுறைகளைப் பொறித்து வைத்த கல்வெட்டுக் களிலும் வெட்சியும் கரந்தையும் தனித்திணைகளாகக் கொள்ளப் பெற்றன என்பதும் காணத்தக்கது.

கல்வெட்டுக்களில் வெட்சியும் கரந்தையும்

பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்கள் பலவற்றில் (கி.பி. 600—900) வெட்சி, கரந்தை வீரர்களின் மறச்செயல்களும் வீரமரணமும் குறிக்கப் பெற்றுள்ளன. இவர்தம் நடுகற்களும் அவற்றில் பொறிக்கப் பெற்ற செய்திகளும் புறத்திணை பற்றிய ஆய்வுக்குப் பெரிதும் பயன்நல்கும். இக்கல்வெட்டுக்கள் யாவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்றுப் போதிய விளக்கங்களுடன் பேராசிரியர் டி. வி. மகாலிங்கம் அவர்களால் "Inscriptions of the Pallavas, என்ற தொகுதியில் 1988இல் வெளியிடப்பெற்றவை ஆகும். இவை

உணர்த்தும் மறச்செயல்களை ஒவ்வொன்றாக இங்குக்காண்போம். இவை பெரும்பாலும் தன்னுறு தொழிலாகக் கருதுவதற்கு உரியவை.

1) நிருபதுங்கவர்மனின் இருபத்தாறாவது ஆட்சியாண்டில் (கி. பி. 895) வெட்டப்பெற்ற ஆம்பூர்க் கல்வெட்டில் (வ. ஆ. மாவட்டம்) வெட்சி, கரந்தைப் போர்க்குறிப்புக்கள் சில செதுக்கப் பெற்றுள்ளன. பிருதிகங்க அரையர் என்பவர்க்குச் சேவகரான அகலங்கத்துவராயர் மருகன் ஒரு வேடன். அவன் பெயர் கலியிராமன். நிரைமீட்கும் இவன் வீரச்செயலைக் கூறும் பகுதி சிதைந்துள்ளது. எனின், கல்வெட்டின் முற்பகுதியில், படுவூர்க் கோட்டத்து மேலடையாறு நாட்டுக்குரிய நிரைகளை நுளம்பன் படை வந்து கவர்ந்த செய்தி குறிக்கப்பெற்றது. இவன் ஒரு தலைவன் ஆதல் வேண்டும் (ப. 520).

2) கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்குரிய விசய நரசிங்க வர்மனின் கல்வெட்டு (எண்.254) தொறுமீட்ட செய்தி ஒன்றைச் சுட்டுகிறது. சண்மதுரரு என்பார் முக்குட்டூர்(வ.ஆ. மாவட்டம்) தொறுவினைக் (—ஆநிரையை) கவர்ந்து கொள்ள, அதனை மீட்பதற்குச் சென்று மீட்டபின்னர் உயிர்நீத்த அதிமத்தரர் முருகன் என்னும் கரந்தை வீரனின் அருஞ்செயல் இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றது. இவ் வீரன் பாக்கம் என்னும் பதியினன். தகடூர் நாட்டுத் தலைவன் வலிமதுரனின் சேவகன். இக்கல்வெட்டுச் சென்னை அருங்காட்சிய கத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இக்கல்வெட்டின்கீழ் ஒரு வீரனின் உருவமும் செதுக்கப்பெற்றுள்ளது.

3) கி. பி. 7ஆம் நூற்றாண்டில் மேலாண்மை செலுத்திய முதலாம் மகேந்திரவர்மனின் 18ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (எண். 279) நடுகல்லில் பொறிக்கப்பெற்றது. இதுவும் வ. ஆ. மாவட்டத்திற்கு உரியது; தண்டம்பட்டு என்ற ஊரில் உள்ளது. இதில் காணப்படும் செய்திகள் வருமாறு :

மேல்வேணாட்டு ஆந்தைப்பாடி என்னும் பகுதிக்குத் தலைவன் ஈசை பெரும்பாணரையன். இவன் மருமக்கள் பொற் செந்தியார் என்பவர்க்குச் சேவகர்கள். இவர்கள் கவர்ந்த ஆநிரையை வேணாட்டு நந்தியார் என்னும் தலைவன் மீட்டுப் பட்டான். அங்ஙனம் வீரமரணம் அடைந்த கரந்தை மறவனுக்கு

ஊன்றப்பட்ட நடுகல் அவ்வூர் வேடியப்பன் கோயிலில் விளங்குகிறது.

4) இதே கோயிலில் உள்ள மற்றொரு நடுகல் கல்வெட்டும் (எண். 280) சுட்டுதற்கு உரியது. இக்கல்வெட்டு கி. பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது; முதலாம் மகேந்திரவர்மனின் 32 ஆம் ஆட்சி ஆண்டில் செதுக்கப்பெற்றது. நிரைமீட்ட கரந்தை வீரன் அக்கந்தை கோடன் என்பவன் வீரசுவர்க்கம் புகுந்த செய்தியை இக்கல்வெட்டு சுட்டுகிறது. இவ்வீரன் பொன்மோதனார் என்பவனின் சேவகன்.

இந்த நடுகல்லில் ஒரு வீரனின் உருவம் பொறிக்கப் பெற்றுள்ளது. அவன் இடக்கையில் வில்லும், வலக்கையில் அம்பும் ஏந்தி நிற்கிறான். இடதுகாலின் அருகில் ஒரு குவளையும் வலக்காலின் அருகில் அம்பறாத்தூணியும் காணப் படுகின்றன.

பொன்மோதனாரின் மற்றொரு சேவகன் ஆன விற்றன்வடுகன் என்பவன் புலியுடன் போரிட்டு உயிர்நீத்த செய்தியை ஒரு நடுகல் உணர்த்துகிறது (எண். 281. ''புலிகுத்திப் பட்டான்கல்''). இவன் இடக்கை புலியின் வாயில் உள்ளது. வலக்கையில் ஈட்டி (dagger) ஏந்தியுள்ளான்.

5) முதலாம் மகேந்திரவர்மனின் 34 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (எண். 284) குறிப்பிடத்தக்கது. ஆநிரைகளே அன்றி எருமைகளைக் கவரும் செய்தி இக்கல்வெட்டினால் அறியப் படுகிறது. வாணகோவரையரின் மருமக்களில் இளையவன் கருந்தேவகத்தி என்னும வீரன், தன்எருமைகளைக் கள்வரிட மிருந்து காத்து உயிர்நீத்தான். இக்கல்வெட்டில், ''கோவிவன் என்னும்நாய் இரு கள்ளனைக் கடித்துக் காத்திருந்தவாறு'' என்று காணப்பெறுவதால், இறந்தவனின் வளர்ப்புநாயும் எருமை கவரவந்த மறவர்களைக் கடித்துக் குதறியசெய்தி புலனாகிறது. இதனால், நிரை கவர்தல் மட்டுமன்றி எருமை கவர்தலும் வெட்சியின்பாற்படும் எனலாம்.

6) முதலாம் மகேந்திரவர்மனின் மற்றொரு கல்வெட்டு (எண். 285) கரந்தை மறம் பற்றியது. பொன்னரம்பாணரின் சேவகன் கரகண்டி அண்ணாவன். வாணகோவரையரின் மருமக்கள் ஆகிய கந்தவிண்ணனர் கூடல் தொறுவைக் கொண்ட பொழுது, அதனை விடுவித்துப் பின் உயிர்நீத்த காகண்டியின்

வீரத்தைப் பாராட்டிக் கூடல் இளமக்கள் அவனுக்கு நடுகல் நிறுவிய செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது.

7) கி. பி. 7 ஆம் நூற்றாண்டிற்குரிய மற்றொரு கல்வெட்டு (எண். 288) வெட்சி வீரனாகிய குன்றக்கட்டி என்பவன் தொறுக் கொண்ட பொழுது கொல்லப்பட்டான். அவனுக்கு எடுத்த கல் இது.

8) இதே நூற்றாண்டிற்கு உரிய இன்னொரு கல்வெட்டு (எண். 295), 'தொறுகொண்ட ஞான்று தொறு மீட்டுப்பட்டான், ஒருவனைப் பற்றிப்பேசுகிறது. உணங்கையாரின் மகன் கோட்டையார். இவனுக்குப் பணியாள் அரோகவண்கர். இவனுக் குப் பணிமகன் கணிமாதனார். இவன் மேற்கோவலூர் நாட்டு அளையர்பாடியைச் சேர்ந்த கடிப்பகையார் வசமிருந்து தொறு இடுவித்து (—விடுவித்து) இறந்தான். இச்கரந்தை மறவனுக்கு நிறுவப்பெற்றது இந்நடுகல்.

9) கி. பி. 9 ஆம் நூற்றாண்டிற்குரிய கம்பபருமரின் கல்வெட்டு (எண். 310) கொங்கத்து நிகழ்ந்த வீரச்செயலைக் கூறுகிறது. கொங்கத்து எழுமாத்தூர் வாசி சாகாடச்சிற்றன். மீகொன்றைநாட்டுப் புளியூர் என்ற ஊரில் உள்ளவர்க்குரிய எருமைகளைப் பகைவர் கவர்ந்தனர். மேல் வேணாட்டு மணிக்கல வடவூர் என்னும் இடத்தில் வெட்சியருடன் பொருது எருமைத் தொறுவினை (—தொகுதியை, நிரையை) மீட்டுக் சாகாடச் சிற்றன் இறந்தான். இவனுக்கு எழுப்பப்பெற்ற நடுகல் வேடியப்பன் கோயிலில் உள்ளது.

மேற்சுட்டப்பெற்ற கல்வெட்டுக் குறிப்புக்களினால், சிறு சிறு தலைவர்கள், வேடர்கள், நிரைகவர்தலும் மீட்டலும் மேற்கொண்டனர் என்பதும், அவர்களுக்கு வீரக்கல் நாட்டுதல் மரபு என்பதும் அறியத்தக்கவை. தொல்காப்பியரும் கரந்தை பற்றிய நூற்பாவில் நடுகல் பற்றிய செய்திகளைக் கூறியிருத்தல் இங்கு எண்ணிப்பார்ப்பதற்கு உரியது.

இனி, கரந்தைத்திணைக்குரிய துறைகள் குறித்து ஏனைய இலக்கணத்தார் கொண்டுள்ள கருத்துக்களைத் தொல்காப்பியக் கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்வோம்.

தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்

தொல்காப்பியர் வெட்சிக்கு மட்டுமே படையியங்கு அரவம், புடைகெடப் போகிய செலவு என்ற துறைகளை அத்திணையின் தொடக்க நிகழ்ச்சிகளாகக் குறித்தனர். எனின், ஐயனாரிதனார், கரந்தைத் திணையின் தொடக்க நிகழ்ச்சிகளாகக் கரந்தையரவம், அதரிடைச்செலவு என்ற துறைகளைச் சுட்டினார்.

ஆரமர் ஓட்டல், ஆபெயர்த்துத ரதல், நெடுமொழி புணர்த்தல் என்பனவற்றை முறையே போர் மலைதல், நிரைமீட்டல் நெடுமொழி கூறல் என்று பு. வெ. மாலை சுட்டியது. வேந்தன் சிறப்புரைத்தலை வேத்தியல்மலிபு (34) என்றும் வருதார்தாங்கலை ஆளெறிபிள்ளை(28) என்றும் வாள்வாய்த்துக் கவிழ்தலைப்போர்க் களத்தொழில் (27) என்றும் பின்னூல் பேசியது தொன்னூலார் வெட்சித்திணைக்குக் கூறிய துடிநிலை என்பதற்குக் குடிநிலை என்ற பாடமும் காணப்படுகிறது. கரந்தைப்பகுதியில் குடிநிலை என்றதொரு துறையினைக் கூறினார் தொல். எனின், பின்னூலார் குடிநிலை (35) என்ற துறையினைக் குறித்தனர் மறக்குடியின் மாண்புரைப்பதாக அமையும் இத்துறைக்கு,

''பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலி நீர்—கையகலக்
கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி''

எனவரும் இனிய பாடல் சான்றாய் அமைந்தது.

இரு நூல்களிலும் பிள்ளைப்பாட்டு என்ற துறை மாற்றம் இன்றி வழங்குகிறது. தொன்னூல் சுட்டிய வள்ளிக்கூத்து என்பதனிடத்தில் பின்னூல் பிள்ளைத்தெளிவு என்னும் கூத்தினைக் குறித்தது (29). இரண்டும் வேறுவேறு கூத்தென்று அறிதல் வேண்டும். பகைவரைக் கொன்ற கரந்தைவீரன் பின், தன் தலைநீங்கிய குறைஉடலாகிய கவந்தம் வீரர்கள் முன்பாகத்துடி ஒலிக்கு ஏற்பக் கைவாளுடன் ஆடும் கூத்தினைப் பிள்ளைத் தெளிவு என்பர். பு. வெ. மாலையில் 'பிள்ளையன்' என்றே கரந்தை வீரன் குறிக்கப்பெற்றனன்.

பிள்ளைப் பெயர்ச்சி என்பதும் ஒரு புதிய துறை (33). பிள்ளை என்பது கரிக்குருவி. அது தீநிமித்தம் கூறவும் அதனைப் புறக்கணித்தமை 'பெயர்ச்சி' என்ற சொல்லினால் சுட்டப்

பெற்றது. அங்ஙனம் பெரு வீரத்துடனும் பேராண் மையுடனும் பொருது நிரைமீட்ட வீரனுக்கு மருதநிலத்தை இறையிலியாக வழங்கிச் சிறப்புச்செய்தல் இத்துறைக்குரிய பொருண்மையாகும். புறநானூற்றிலும் வீரர்க்குத் தண்ணடை (—மருதநிலம்) வழங்குதல் பாடப்பெற்றது.

வெறியாட்டு என்ற துறை தொன்னூலில் வெட்சிக்கரந்தையில் (63 நூ) இடம்பெற்றது. எனின், பின்னூலில், வெட்சித் திணையில் கூறப்பட்டதால் கரந்தைத் திணையில் சொல்லப்பட வில்லை.

கரந்தைப்பகுதியில் தொல் சுட்டிய மூவேந்தரின் பூவினைப் புகழ்தல் என்னும் துறை பு வெ. மாலையில் பொதுவியலில் புகலப்பட்டது. அவ்வாறே கழல்நிலை, உன்ன நிலை என்பன இரண்டும் பின்னூலில் பொதுவியலிலும், பூவைநிலை பாடாண் திணையிலும் கூறப்பட்டன.

புண்ணொடு வருதல் (26) என்பதும் ஒரு புதுத்துறை ஆகும் (26). கரந்தை மறவன் விழுப்புண் ஏற்றுவருதலை இத்துறை சுட்டியது. கையறுநிலை (31) என்பதும் தொல்காப் பியத்தில் கரந்தைத்துறை கூறும் பகுதியில் கூறப்படவில்லை. நிரைமீட்கச் சென்று களத்தில் மாண்ட மறவனின் மறைவிற்குக் பாணர் முதலியோர் கையற்றுக்கூறுதலாக இத்துறை அமைந்தது.

தொல்காப்பியத்தில் காணப்பெறாமல் பு. வெ. மாலையில் கூடுதலாகக் கூறப்பெற்ற துறைகள் முதனூலாகிய பன்னிருபடலத் தில் இடம்பெற்றவை என்று எண்ணுதல் தகும். இளம்பூரணர்

> ''பன்னிரு படலத்துள் கரந்தைக்கண் புண்ணொடு வருதல் முதலாக வேறுபடச் சிலதுறை கூறினாராதலின், புண்படுதல் மாற்றோர் செய்த மறத்துறை யாதலின், அஃது இவர்க்கு (—தொல்காப்பியர்க்கு) மாறாகக் கூறலும் மயங்கக் கூறலும் ஆம்'' (ப. 87)

என்று ஒப்பாய்வு நிகழ்த்திக் கூறும் பகுதி சிந்திக்கத்தக்கது.

தொல்காப்பியர் சுட்டிய காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்து என்ற துறைகள்சி லப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்தில் அவ்வண்ணமே இளங்கோவடிகளால் காதைத்தலைப்புக்களாக அமைக்கப்பெற்றிருத்தலை முன்னரும்

சுட்டினோம். இவற்றுடன் வரந்தருதல் என்ற புதிய துறைத் தலைப்பும் வழங்கி நிறைவு செய்தவர் அடிகள் ஆவர். கல்கோள் என்பது கால்கோள் என்று சிலம்பில் காணப்படுகிறது. இப்பாடமே நச்சினார்க்கினியர் உரையிலும் பயின்றுள்ளது. ஆதலின், தொல்காப்பிய மூலத்திலும் இதுவே பயிலப் பெற்றிருத்தல் கூடும்.

இவர் காலத்திற்குப் பின்னர்த்தோன்றிய பு. வெ. மாலையில் இத்துறைகள் முறையே கற்காண்டல், கற்கோள் நிலை, கல்நீர்ப் படுத்தல், கல்நடுதல், இற்கொண்டு புகுதல், குலமுறைப்பழிச்சல் என்ற பெயர்களுடன் காணப்பெறுதல் நோக்கத்தக்கது. இவை அனைத்தும் இப்பின்னூலில் பொதுவியலுக்கு உரியவை.

இனி, கரந்தைத்துறைகள் கூறும்வகையில் புத்த மித்திரனார் கொண்டிருந்த கொள்கையினைச் சிந்திப்போம்.

தொல்காப்பியமும் வீரசோழியமும்

புத்தமித்திரனார் நிரைகவர்தலாகிய வெட்சியின் வேறாகவே நிரை மீட்டலாகிய கரந்தையினைக் கருதினார். இத்திணைக்கு உரியனவாக எட்டுத்துறைகளைச் சுட்டினார். தொல்காப்பியர் கூறிய உருதார் தாங்கல், வேந்தன் சிறப்புரைத்தல், நெடுமொழி புணர்த்தல் என்னும் துறைகள் முறையே ஓடாப்படை ஆண்மை, மன்னர் வெற்றிக்கோடாத்திறம் கூறல், தன்திறம்கூறல் என்னும் குறியீடுகளினால் புத்தமித்திரனார் விளக்கினார். உன்னநிலை, ஆரமர் ஓட்டல் என்பன அப்படியே அமைந்தன, மூவேந்தரின் அடையாளப் பூக்களைப் பின்னூலார் கொற்றப்பெற்றார் சூடாப்பொலிகுதல்' என்று பொதுப்படச் சுட்டினார்.

தொல்காப்பியத்தில் காட்சி முதல் வாழ்த்து ஈறாகக் கூறப்பெற்ற ஆறு துறைகளையும், ''துகளுறுகல் தேடாப் பொறித்தல்'' என்று சுருங்கக்கூறினார் (நூ. 98). எனின். உரையாசிரியராகிய பெருந்தேவனார்,

> ''போருள் மடிந்தார் பெயர் பொறிக்கக் கல்தேடுதலும், பொறித்தகல்லு
> நீருட் குளிப்பித்தலும், கல்நடுதலுமாம் வாழ்த்தல் என்பது
> பலவாள்வினை செய்து பட்டார்தம் கற்களைப் பார்த்துப் புகழ்ச்சி செய்லல்''

என்று விளக்குதல் பழைய இலக்கண மரபினை நன்கு அறிந்தவர் என்பதற்குச் சான்றா சான்றாகிறது.

இனி, இலக்கண விளக்கம் கரந்தைத்திணைக்குக் கூறிய துறைகளைத் தொன்நூலுடன் ஒப்பிட்டு நோக்குவோம்.

தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்

வைத்திய நாவலர் வெட்சித்திணையினை இரண்டாகப் பிரித்துக்கொண்டு, முதல்வகைக்கு உரியதுறைகள் இருபத்திரண்டினையும்,

''மண்டமர்க்கு இவர்ந்தோன் மருவலர் நிரையினைத்
தண்டத் தலைவரைத் தருகெனப் பணித்தல்...'' (நூ.603)

என்ற நூற்பாவில் தொகுத்துக் கூறினார். இரண்டாம் வகைக் குரியனவாக 27 துறைகள்,

''நிரைகோள் கேட்டுக் குரைகழல் அரசன்
விரைசெயல் மறவரை மீட்கெனப் பணித்தல்'' (நூ. 604)

என்ற நூற்பாவில் தொகுத்துரைத்தார். இவற்றுள் முன்னது வெட்சிக்கும், பின்னது கரந்தைக்கும் உரியது. இந்நூலின் உரையில்,

''இவ்விருபத்தேழு துறைகளும் வெட்சியின் இரண்டாம் கூறாகிய கரந்தைப்பாலன''.

என்று சுட்டப்பெற்றது. மேலும், மனனுறு தொழிலால்தான் ஆநிரை கவர்தல் வேண்டும் என்ற வழக்கினை அடியொற்றி, அத்தொழிலாலேதான் நிரைமீட்டலும் நிகழ்தல் வேண்டும் என்று வைத்தியநாத நாவலர் எண்ணினார், இவர் தன்னுறு தொழிலை உடன்படாமையின், இவர் தொல்காப்பியச் சிந்தனைப் பள்ளியைப் பேணியவர் என்பது தெளிவு.

கரந்தைக்கு உரிய துறைகளை இவர் மூன்று மூலங்களிலிருந்து தொகுத்திருக்கிறார். அவையாவன :

1) தொல்காப்பியம்

2) நச்சினார்க்கினியர்

3) பு. வெ. மாலை. இவற்றை முறையே காண்போம்.

I. தொல்காப்பியத்திலிருந்து இரு துறைகள் இவரால் கொள்ளப்பெற்றன.

1) ஆபெயர்த்துத் தருதல் என்னும் துறை அப்படியே ஆளப்பெற்றது.

2) ஆரமர் ஓட்டல் என்ற துறை அருஞ்சமம் விலக்கல் என்று சிறிது மாற்றி அமைத்துக்கொள்ளப்பெற்றது.

II. பு. வெ. மாலையிலிருந்து இவர் எடுத்துத் தொகுத்தவை 14 துறைகள் ஆகும். இவற்றுள், புண்ணொடு வருதல் முதலாகக் குடிநிலை முடியச் சிறுமாற்றமும் செய்யாது அப்படி எடுத்தாண்டனர் (பு. வெ. மா. 26 முதல் 35 முடிய). மீட்க எனப் பணித்தல், படையியங்கு அரவம், நடைவயிற் சேறல், திறப்படப் பொருதல் என்பன நான்கும் பு. வெ. மாலையிற் கூறப்பெற்ற கரந்தை, கரந்தை அரவம், அதரிடைச்செலவு, போர் மலைதல் (22—25) என்ற துறைகளைத் தழுவிக் கூறப்பெற்றவை.

III. நச்சினார்க்கினியர் உரைக்குறிப்புக்களினின்றும் இவர் தொகுத்துக் கொண்டவை 11 துறைகள் ஆகும். அவையாவன.

1) பறவாப்புள் தெரிதல்
2) நன்கு உணர் உசா
3) புறத்து இறை
4) நலிவின்றுய்த்தல்
5) நண்ணுவழித்தோற்றம்
6) நிறைத்தல்
7) பாதிடு
8) உண்டாட்டு
9) கொடை
10) துடிநிலை
11) கொற்றவை நிலை

இவற்றுக்கு மேற்கோள் செய்யுட்களும் அவர் உரையிலிருந்து தரப்பட்டுள்ளன. அன்றியும், இவற்றுள் எண் 3—11 வரை உள்ள துறைகள் முன்பே தொல்காப்பியரால் வெட்சித்திணைக்கு உரியனவாக ஓதப்பெற்றவை. இவரும் வெட்சியின் முதற்கூற்றில் இவற்றை ஓதியுள்ளார். 'பறவாப்புள் தெரிதல்' என்பது வாய்ச்சொல் ஆகிய விரிச்சி கேட்டலைச் சுட்டுதலின், இதுவும் வெட்சித்திணைக்கு ஓதப்பெற்றதே கரந்தைக்கும் பொருந்துவதாய் மீண்டும் இவரால் எடுத்துரைக்கப்பெற்றது. தமக்குரிய ஆநிரைகள் கரந்தைவீரர்க்கு வந்துசேரவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சான்றோர் கூறும் ஆசியுரை 'நன்கு உணர்

உசா' என்று சுட்டப்பெற்றது. இதற்கு, 'நெடுநிலை ஆயத்து' என்ற தகடூர் யாத்திரைப்பாடலை மேற்கோளாக வழங்கினார்.

நுணுகி நோக்கின், பிற்காலத்து இலக்கணம் செய்தாருள், இந்த நாவலர் ஒருவரே பல்வேறு பரப்புகளிலிருந்து கருத்துக் களைத் திரட்டித் தொகுத்து இலக்கணம் கூறியவர் என்பதற்கு இத்தகைய நூற்பாவே சான்றாகும்.

முத்துவீரிய ஆசிரியர் துறைகள் கூறாமையின் சுவாமிநாத நூலினை நோக்குவோம்.

தொல்காப்பியமும் சுவாமிநாதமும

சாமிகவிராயர்,

''ஆன்மீட்சி கரந்தை, நிரைகோள் கோட்டோன் மறவரை மீட்கென்றல்'' என்று தொடங்கும்பொழுதே வைத்தியநாத நாவலரின் அடியொற்றிச் சென்றார். நாவலர் நூற்பா யாப்பில் கூறிய 27 துறைகளையும் கவிராயர் எண்சீர் யாப்பில் வழுவாது வழங்கினர். ஆன்மீட்சி முதலாகக் கொற்றவை நிலை ஈறாக இத்துறைகள் இயம்பப் பெற்றன. இருவரும் சைவர்கள் என்பதால் பின்னவர் முன்னவரைப் பின்பற்றினார் என்று எண்ணத் தோன்றுகிறது.

புதிய செய்தியாக ஒன்றும் இந்நூலில் சுட்டப்பெறவில்லை.

ஆய்வின் முடிபுகள்

இவ்வியலிற் கண்டறிந்த செய்திகளையும் உண்மைகளையும் ஒருவாறு இங்குத் தொகுத்துக் காண்போம்.

1) தொல்காப்பியர் கரந்தையினைத் தனித்திணையாக எண்ணாவிடினும், அதனை நன்கு அறிந்தவர்.

2) ஆரமரோட்டல் முதலிய ஏழுதுறைகளும் கரந்தைக் குரியவை என்பது தொல்காப்பியர் எண்ணம் என்பதை உரையாசிரியர்கள் தெளிவுறித்தியுள்ளார்.

3) ''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்'' என்ற நூற்பா சுட்டும் துறைகள் இருபத்தொன்றும் சிறப்பாக வெட்சிப்புறநடையாகிய கரந்தைத் திணைக்கு உரியவை என்று இளம்பூரணர் கருதினார்.

4) கரந்தைக்குரியனவாகக் கூறப்பெற்ற துறைகளில் பல பு. வெ. மாலையில் பொதுவியலுக்கு உரியனவாகக் காணப்படுகின்றன.

5) இளம்பூரணர் காட்டியுள்ள பு. வெ. மா. மேற்கோள்களிலிருந்து, இந்நூற்பா சுட்டும் 21 துறைகளில் 9 துறைகள் பொதுவியலுக்கும், 7 துறைகள் கரந்தைத் திணைக்கும் ஒவ்வொரு துறை பாடாண்திணைக்கும் பெருந்திணைக்கும் உரியன என்று தெளியலாம். இங்ஙனம் பல திணைகளுக்கும் உரிய துறைகளாக இவை இருத்தலின், இந்நூற்பா பொதுவியலைப் பற்றியது என்று உரையாசிரியர்கள் கருதியுள்ளனர்.

6) காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்து என்ற துறைகளைத் தழுவியே வஞ்சிக்காண்டத்தில் பத்தினித் தெய்வ வழிபாட்டிற்குரிய நிகழ்ச்சிகளைக் கூறும் காதைகளுக்கு இளங்கோ பெயர் சூட்டியுள்ளார் என்பதும், கூடுதலாக வருந்தருதல் என்ற பயன்தரு துறைக்குரிய காதையினையும் அமைத்துள்ளார் என்பதும் அறியத்தக்கவை.

7) தொல்காப்பியர் காலத்தில் பூவைநிலை என்ற துறை காக்கும் கடவுள் ஆகிய பூவைப்பூவண்ணனுடன் மன்னனை ஒப்பிட்டுப்போற்றும் பொருண்மை உடையது. பின்னர், முருகன் முதலிய கடவுளருடனும் மன்னனை ஒப்பிட்டுப் பரவினும் பூவைநிலை என்ற விரிபொருட்பேறு புறநானூறு எழுந்த காலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். இதனாலும், தொல்காப்பியத்தின் பழமை அறியப்படும்.

8) இளங்கோவடிகள் காலத்தில் வெட்சியும் கரந்தையும் தனித்தனி வீரத்திணைகளாக எண்ணப்பெற்றன.

9) இளங்கோவடிகள் தம் காலத்துச் சமுதாயத்தின் நடைமுறைகளை அனுசரித்தே தன்னுறு தொழிலையும் வெட்சிக்குரியதாக ஏற்றுப் பாடியுள்ளார். தன்னுறு தொழிலை வெட்சிப்புறநடை எனக்கூறும் மரபும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

10) திருத்தக்கதேவர் காலத்திலும் தன்னுறு தொழில் இலக்கியத்தில் இடம்பெறும் தகுதிபெற்றது.

11) பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களினால் வெட்சி, கரந்தை என்பன இரண்டும் தனித்தனிப் போர் முறைகளாக விளங்கிய உண்மை புலனாகிறது. ஆநிரைகளேயன்றி எருமைகளையும் கவர்ந்த செய்தி ஒரு சில கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றது. இனம் பற்றி யானை, குதிரை முதலியவற்றைக் கவர்தலும் வெட்சிக் குரியதாகக் கொள்ளுதற்குரியது.

12) பெரும்பாலும் கரந்தை வீரர்களுக்கு ஊன்றப்படும் நடுகல் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் மட்டுமன்றிக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

13) புண்ணொடு வருதல், கையறுநிலை என்பன தொல்காப்பியத்தில் சுட்டப்பெறவில்லை. இவை பு. வெ. மா. கரந்தைப்படலத்தில் இடம்பெற்ற துறைகள். இவை முதனூலாகிய பன்னிருபடலத்தில் வழங்கியவை என்பது இளம்பூரணர் உரையினால் தெளியலாம்.

14) புத்தமித்திரனால் கரந்தைத்திணைக்கு உரியனவாக எட்டுத்துறைகள் மட்டுமே கூறியிருப்பினும், பெருந்தேவனார் இலக்கணமரபினை நன்கறிந்தவராதலின் எஞ்சியவற்றையும் தம் உரையில் இட்டு நிரப்பியுள்ளார்.

15) வெட்சி, கரந்தை என்பன இரண்டையும் வெட்சியின் இரண்டாம்கூறு என்று பிரித்து வைத்தியநாதநாவலர், தொல்காப்பியம், பு. வெ. மா. கூறியதுறைகளை எல்லாம் இவ்விரு கூறுகளிலும் தொகுத்துக் கூறியுள்ளார்.

16) சாமிகவிராயர் இலக்கணவிளக்கத்தைப் பின்பற்றியே கரந்தைத்திணைக்குரிய இலக்கணத்தை கூறியுள்ளார்.

5. வஞ்சித்திணை

1. திணை விளக்கம்

ஒரு நாட்டின் செல்வமாகிய ஆநிரைகளைக் கவர்தலும் மீட்டலும் வெட்சிப் போரின் இருகூறுகள் எனக் கண்டோம். அவ்வளவில் நில்லாமல் தன்னுடைய நாட்டின் எல்லையை விரிவு படுத்திக் கொள்ளும் வேட்கையாகிய மண் ஆசை காரணமாக வேந்தன் ஒருவன் மாற்று வேந்தனின் நாட்டின்மேல் அஞ்சுமாறு படை எடுத்துச் செல்லுதல் வஞ்சித்திணையின் பாற்படும். இப் போரில் ஈடுபடுவோர் வஞ்சிப்பூ சூடுதல் மரபு. தொல்காப்பியர்,

''வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே'' (நூ.64)

என்று வரையறை செய்தல் காணத்தக்கன. படை எடுத்துவரும் மன்னனைத் தடுத்து நிறுத்தும்நோக்கில் மாற்றுமன்னன் போர் புரிதலைக் காஞ்சித்திணை என்பர் பன்னிருபடலத்தார். இதனையும் வஞ்சித்திணையின் கண்ணே அடக்கிக் கூறுதல் தொல்காப்பியரின் நோக்கம் என்பதை நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.

''ஒருவன் மண்ணசையான் மேற்சென்றால் அவனும் அம்மண் அழியாமற் காத்தற்கு எதிரேவருதலின், இருவர்க்கும் மண்ணசையான் பேற்சேறல் உறதாகலின் அவ்விருவரும் வஞ்சிவேந்தர் ஆவர் என்றுணர்க''.

போர்முறைகள் குறித்துத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறும் கருத்துக்களே முடிவானவை என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர் நச்சினார்க்கினியர், காஞ்சியைத் தனித்திணையாக

எண்ணும் பன்னிருபடலத்தாரின் கருத்தினை இவர் உடன்படாமையினை முன்னர்க் கண்டோம்,

2. முல்லைக்குப் புறம்வஞ்சி

அகம் (subjective), புறம் (objective) என்பன இரண்டும் ஒன்றற்கொன்று இயைபும் தொடர்பும் கொண்டிருத்தலை அறிந்து கூறியவர்கள் உரையாசிரியர்கள். முல்லைத் திணை என்னும் அகவொழுக்கத்திற்கு ஒத்ததாகத் திகழும் புறத்திணை வஞ்சித் திணையாகும். அதற்கு இது புறனாதற்குரிய காரணங்களை இவர்கள் நுனுகிநோக்கிக் கூறுதல் அறியத்தக்கது. இளம்பூரணர்,

''மாயோன்மேய காடுறை உலகமும், கார்காலமும் முல்லைக்கு முதற்பொருள் ஆதலானும், பகைவயிற் சேறலாகிய வஞ்சிக்கு நிழலும் நீருமுள்ள காலம் வேண்டுதலானும், பருமர்க்காடாகிய மலைசார்ந்த இடம் ஆகாமையானும் அதற்கு இது சிறந்த தென்க. அன்னதாதல் முல்லைப் பாட்டினுள்,

''கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப் புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி'' (24—28)

என்பதனானும் அறிக''.

என்று மேற்கோள் தந்து விளக்கியிருத்தல் கருதற்பாலது. இருத்தலாகிய அகவொழுக்கத்திற்கு முல்லைக்காடும் கார்காலமும் சிறந்தன. அவ்வாறே பகைவயிற் செறலாகிய வஞ்சியொழுகலாற்றிற்கும் அவ்விரண்டும் ஏற்றன என்பது அவர் கருத்து. முதற்பொருள் உரிப்பொருள்கூட இவ்விரண்டிற்கும் ஒத்தலைச் சுட்டினார் நச்சினார்க்கினியர்.

''முதலெனப்பட்ட காடுறையுலகமும் கார்காலமும் அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும் அரசன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்து இருத்தலும், அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயின் இருத்தலும், ஆகிய உரிப்பொருளும் ஒப்பச் சேறலின் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று.

வெஞ்சுடர் வெப்பம் நீங்கத் தண்பெயல் பெய்து நீரும் நிழலும் உணவும் பிறவும் உளவாகிற காட்டகத்துக் களிறு

முதலியவற்றோடு சென்றிருத்தல் வேண்டுதலின் வஞ்சிக்கும் அம்முதல் கருஉரியும் வந்தனவாம்''.

இங்ஙனம் இயைபுபடுத்திய இவர் இளம்பூரணர் மேற்கோள் காட்டிய முல்லைப்பாட்டின் பகுதியைத் தம் கருத்திற்கு அரணாகக் கூறினர்.

நாவலர் பாரதியார் உரிப்பொருள் அடிப்படையில் இரண்டிற் கும் உள்ள இயைபினைப் புலப்படுத்துவர்.

1) முல்லையொழுக்கத்தில் பொருள் அல்லது வினைவயிற் பிரிந்து தலைவன் செல்லுதல்போல், வஞ்சியொழுக்கத்தில் தலைவியைப் பிரிந்து பகைமேற் செல்வான்.

2) முல்லையிலும் வஞ்சியிலும் பிரிந்த தலைவியர் ஆற்றி யிருந்து கற்பறம் காத்தல் பொது ஒழுக்கமாகும்.

3) முல்லைத்தலைவர் பிரிந்து செலவும்மற்கொள்ளுதல் மனையறம் போலும் கடனிறுத்தற் பொருட்டாம். அது போலவே, வஞ்சித்தலைவர் போர்வயிற் பிரிதல் ஆண்மை யறம் பேணும் பொருட்டாம்.

இத்தகைய விளக்கங்கள் மக்களின் நடைமுறை ஒழுக்கங்களில் காணப்பெறும் ஒருவித ஒத்திசைவினையும் ஒழுங்கினையும் உறவினையும் தெளிவுறுத்துவன.

இனி, வஞ்சித்திணைக்கு உரியனவாகத் தொல்காப்பியர் கூறும் பதின்மூன்று துறைகளையும்அவற்றிற்கு உரையாசிரியர்கள் கூறும் தெளிந்த பொருளையும் காண்போம். இத்துறைகள் எடுத்துச் செலவாகிய வஞ்சிக்கும், தடுத்து நிறுத்தலாகிய வஞ்சிக்கும் (காஞ்சிக்கும் என்பது பின்னுலார் கருத்து) பொது வானவை என்பது நச்சினார்க்கினியர் கருத்து. வென்றோர் விளக்கம், தோற்றோர் தேய்வு, கொற்றவள்ளை என்பன மூன்றும் நீங்கலாக எஞ்சிய பத்தும் இரு திறத்தினர்க்கும் பொதுவாகும் என்ற தெளிவு இளம்பூரணர் உரையில் காணப்படும்.

3. வஞ்சித்திணைக்குரிய துறைகள்

1) இயங்குபடை அரவம்

இதனைப் படை இயங்கு அரவம் என அமைத்துக் கூறுவர் இளம்பூரணர். இத்துறை வஞ்சியரவம்என்ற பெயருடன் பின்னூலிற்

கூறப்பட்டது. வெட்சித்திணைக்குரிய முதல் துறையாகவும் இது கூறப்பட்டது.பின்வரும் உழிஞை,தும்பை முதலிய திணைகளுக்குத் தொல்காப்பியர் இத்துறையினைக் கூறவில்லை; எனின், பன்னிரு படலத்தின்வழி நூல் செய்த பு. வெ. மாலையார் கூறியிருத்தல் காணலாம். எவ்வகைப் போரின் தொடக்கத்திலும் படை மறவர் களின் புடை பெயர்ச்சியால் ஏற்படும் வீரமுழக்கம் பற்றிய செய்தி முதல்துறையாக அமையும்.

இயங்குபடை அரவம் என்றதால் இயங்காத வில் நாண் ஒலி முதலியனவும் கொள்ளப்படும் என்பர் நச்சி, மேலும், கொன்றவை நிலை, குடைநாட்கோள், வாணாட்கோள் முதலானவற்றையும் இத்துறைக்கண் அடக்கி கூறுவர்.

2) எரிபரந்தெடுத்தல்

பகைவரது நாட்டினை எரியூட்டுதல் இத்துறைக்குரிய பொருளாகும். படை எடுத்துச் செல்லும் வழியில் தடுக்கும் பகை வரின் ஊர்களை எரிகொளுவுதல் அக்காலத்துப் போர்மரபு. வேண்டாதார் வைக்கோற்போர், உடைமைகளுக்குத் தீயிடல் ஊர்ப்புறங்களில் ஒரே வழியி இன்றும் காணப்படுதல் இப்பழைய போர்க் குணத்தின் சொச்சமிச்சமாகும்.

இருவகைப்படையாளரும் இருவகைப் பகைப்புலத்துப் பரந்து சென்று எரியை எடுத்துச் சுடுதல் என்றார் நச்சி.

அரக்கர் வாலில் கொளுவிய அனலினால் இலங்கையினை எரியூட்டிய அனுமனின் வீரச்செயலும் அறியத்தக்கது.

3) வயங்கல் எய்தியபெருமை

போர்த்துணையாக உதவுவரும் நட்புவேந்தரால் வஞ்சி வேந்தர் பெறும் விளக்கமும் பெருமையும் பற்றியது இத்துறை என்பர் நச்சி. மேற்செல்வோர் வினைவிறல்களால் விளங்கிய சிறப்பு என்பர் பாரதியார்.

4) கொடுத்தல் எய்திய கொடைமை

போர் புரிவதற்குத் தேவையான படைக்கலன்களை மறவர்க்கு வழங்குதலும், பரிசிலர்க்கு வழங்குதலும் இத்துறையின்பாற்படும் என்பர் நச்சி. போர்வீரர்க்கு வரிசை நோக்கி மன்னர் வழங்கும் நாடு முதலிய பரிசுப்பொருள்களைக் குறித்தது என்பர் பாரதியா ர்

5) அடுத்தூர்ந்து அட்ட கொற்றம்

பகைவர் பலரையும் அடுத்து மேலிட்டுக் கொன்ற கொற்றம் என்றார் நச்சி.

எடுத்துச் சென்ற இருபெருவேந்தரின் படையாளர் வரவறியாமல் காவல் புரிந்தவரைக் கொல்லுதல் என்றார் நச்சி.

எதிர்ப்பாரை முன்னேறிப் பொருதழித்த கொற்றம் என்பர் பாரதியார். அடுத்தடுத்துவரும் மாற்றாரை அஞ்சாது மேற்சென்று அழித்துப்பெறும் வெற்றியின் பெற்றியை இத்துறை சுட்டியது.

6) மாராயம் பெற்ற நெடுமொழி

மாராயமாகிய உவகை பெற்ற நெடிமொழி என்பர் இளம்பூரணர். வேந்தரைச் சிறப்புப் பெற்றமையால் தானே ஆயினும், பிறரே ஆயினும் கூறும் மீக்கூற்றுச் சொல் (பாராட்டுரை) என்பர் நச்சி. மேலும், "சிறப்பாவன ஏனாதி, சாவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலுமாம்" என்றும் விரித்துரைத்தார் ஏனாதி சேனைத்தலைவனுக்கும் சாவிதி அமைச்சருட் சிறந்தார்க்கும் வழங்கும் விருதுகள். மாராயம் என்பது நன்மதிப்பு என்றும் நெடுமொழி என்பது பெருமிதத்தற் புகழ்ச்சி என்றும் கருதுவர் பாரதியார்.

'மாராயம்' என்பது மா ராயம் என்ற இருசொற்புணர்ப்பு; பின்னொட்டு ராசன் என்ற வடசொல்லின் தற்பவமாகத் தோன்றுகிறது. அங்ஙனமாயின், பெரிய அரசச்சிறப்பு என்று பொருள் கருதவேண்டும்.

இங்ஙனம் தொல்காப்பியத்தில் அருகி வழங்கும் வடசொற்கள் அரசு, சமுதாயம் ஆகியவற்றுடன் தொடர்புடையனவாகவும் ஒருசில இலக்கணக் கருத்துக்களுடன் இயைபுடையனவாகவும் விளங்குதல் நோக்கத்தக்கது.

7) பேராண்பக்கம்

பகைவரை ஒருபொருளாக மதியாது படையினைச் செலுத்தின பேராண்மைமிக்க திறம் என்பர் பழைய உரையாசிரியர்கள். இக்கருத்தினைப் புதிய உரையாளரும் ஏற்றார். நெடுஞ்செழியன் இருபெருவேந்தரையும் ஐம்பெருவேளிரையும் பொருட்படுத்தாது தலையாலங்கானத்துப் போரில் இளமைப்பருவத்தே தாக்கிப்

பொருது வென்றமை இத்துறைக்குரிய வீரச்செயலாகும். இத்திறம் புறநானூற்றில் இடைக்குன்றூர்கிழாரால் போற்றப்பட்டது. மதுரைக்காஞ்சியிலும் இடம்பெற்றது.

8) ஒருவன் தாங்கிய பெருமை

வேகமாக ஓடிவரும் வெள்ளத்தை கல்லணை தடுத்து நிறுத்தல் போல மீதூர்ந்துவரும் பெரும்படையினைத் தான் ஒருவனாக எதிர்த்துநின்று பொரும் பெருமைக்குரிய திறத்தினை இத்துறை சுட்டியது.

ஊன்றிநோக்கின், இத்துறை பின்னூலார் எண்ணிய காஞ்சித் திணைக்கு உரியதாகக் கொள்ளத்தகுவது என்பது புலனாகும்.

9) பெருஞ்சோற்றுநிலை

ஒவ்வொரு வீரர்க்கும் விரைந்து வழங்குதற்குரிய வகையில் பிண்டித்து வைக்கப்பெற்ற உண்டியைக் கொடுத்தல் பற்றியது இத்துறை. படையாளருடன் வேந்தன் தானும் உடன் உண்பான் போல்வதோர் முகமன் செய்தற்குப் பெருஞ்சோற்றைத் திரளை களாக உருட்டி வைத்தல் அக்காலத்துப் பழக்கம் என்பது நச்சி உரையினால் உணரப்படும். வஞ்சி சூடி வடவாரியருடன் பொருத செங்குட்டுவன் படைத்தலைவர்க்குப் பெருஞ்சோறு வழங்கிய செய்தி சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தன்படை மறவர்க்குப் பெருஞ்சோறு படைத்ததிறத்தினைப் பதிற்றுப்பத்து உணர்த்து கிறது.

10) வென்றோர் விளக்கம்

வெற்றிபெற்ற வஞ்சிவீரர்பால் தோன்றும் பொலிவினைப் பற்றியது இந்தத்துறை என்பர் இளம்.

பிண்டம் மேய இருபெருவேந்தருள் ஒருவர் ஒருவர் மிகைகண்டு அஞ்சி, கருமச் சூழ்ச்சியால் திறைகொடுப்ப அதனை வாங்கி னார்க்கு உளதாகிய விளக்கம் என்று விரித்துரைத்தார் நச்சி. வென்றவேந்தன் தோற்றவனிடமிருந்து கப்பம் பெறுதலால் உண்டாகும் பொலிவினைக் குறித்தார். 'திருஏற உறுஏறும்' என்ற பழமொழியும் இங்கு எண்ணுதற்கு உரியது.

11) தோற்றார் தேய்வு

தோற்ற வேந்தர் திறைகொடுத்துத் தேய்தலைச் சுட்டும் என்பர் நச்சி.

சுடப்பட்டார் மெலிவினைக் கூறுதல் என்பர் பாரதியார்.

வென்றவரின் விளக்கத்தையும் தோற்றவரின் தேய்வினையும் முரண் அணி தோன்றப் பாடப்பெற்ற பாடல்களைப் புறநானூற்றில் காணலாம். ஒருவரின் ஆக்கம் மாற்றாரின் அழிவுடன் தொடர்புடையது எனலாம்,

12) கொற்றவள்ளை

வள்ளை என்பது திறைக்கொடை என்பர் இளம். வள், வண்மை என்ற வேர்ச்சொல்லாக்கத்தால் இவர் இப்படி பொருள் கண்டார். இதற்கு இலக்கிய வழக்கு காட்டவில்லை. தோற்ற கொற்றவன் கொடுக்கும் திறைப்பொருளைப் பாடுவது இத்துறை என்று எண்ணினார் உரையாசிரியர். வள்ளை என்பது உரற்பாட்டு என்பர் நச்சி. இதுவே பொருத்தம் மிக்க பொருள். பகைவர் நாடழிதற்கு இரங்கித் தோற்றோனைப் பரிவுணர்ச்சியுடன் மகளிர் பாடும் உலக்கைப்பாட்டு என்று இவரைப் பின்பற்றி விளக்குவர் பாரதியார். அல்லது, வென்றவீரனின் வெற்றியைப் பாடியதாகவும் கருதலாம். எளிய பெண்டிர்க்கும் நாட்டுணர்வு இருந்தது என்பது இதனால் புலனாகும். உரலில் நெல்லைப் பெய்து உலக்கைகொண்டு இடிக்கும் பெண்கள் மன்னனின் வெற்றித்திறத்தைப் பொருளாகக் கொண்டு பாடும் பாங்கில் அமைவது இத்துறை எனலாம். கலித்தொகை, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களில் இங்ஙனம் பாடும் குறிப்புக்கள் உண்டு.

கொற்றவள்ளை என்ற துறை வஞ்சித்திணைக்குமட்டு மன்றிப் பாடாண் திணைக்கும் உரியதாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். 'புகழ்தல்' என்ற பொருளில் வருவது பாடாண் திணைக்கு உரியது என்பர் இளம். உழிஞை முதலிய மறஒழுக்கத்திற்கும் இத்துறை உரியது என்பது நச்சி, கருத்து.

13) தழிஞ்சி

மாற்றார் விடும் படைக்கருவிகளைத் தம்பால் தடுத்துப் புண்பட்டு வீழ்ந்த வீரரைப் பேணித்தழுவிக்கொள்ளும் பேராண்மை குறிப்பது இத்துறையாகும் என்பர் இளம். வீழ்ந்த பகைவீரரைத்

தழுவிக் கொள்வதே சிறப்பு; தம் வீரரைத் தாங்குதலும் உண்டு. நெடுநல் வாடையின் இறுதிப்பகுதியில், பாசறையில் புண்பட்டதன் மறவரைப் பாராட்டிப்பேணும் நெடுஞ்செழியனின் அன்புச் செயல் இங்குக் குறிக்கத்தக்கது.

இளம்பூரணர் முதுமொழிவஞ்சி, துணைவஞ்சி முதலிய துறைகளையும் பிறர்மதம் பற்றித் தம் உரையில் சுட்டினர். இவற்றுள் முன்னது பு. வெ. மா. வஞ்சிப் படலத்தில் சுட்டப்பெற்றது. புறநானூற்றுப்பாடல்கள் 45, 46 துணைவஞ்சிக்குரியவை என்று இந்நூலைத் தொகுத்தவர் அல்லது உரையாசிரியர் வகுத்துள்ளனர். எனினும் துணைவஞ்சி என்ற துறை தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்களில் சுட்டப்பெறவில்லை. இதனை வஞ்சித் திணைக்கு உரிய துறையாகக் கருதிய புறப்பொருள் பற்றிய இலக்கண நூல் பண்டு வழங்கியிருத்தல் வேண்டும் என்பது உய்த்துணரப்படும்.

தொல்காப்பியர் சுட்டிய வஞ்சித்திணைக்குரிய துறைகளைப் பு. வெ. மா. உள்ளிட்ட ஏனைய நூல்களில் கூறப்பெற்ற துறைகளுடன் ஒப்பிட்டு ஆராய்வோம்.

4. ஒப்பாய்வு

1) தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும்

ஐயனாரிதனார், வாடாவஞ்சி முதலாக நல்லிசை வஞ்சி முடியத் தொகுத்துக் கூறப்பெறும் இருபத்தொன்றும் வஞ்சித் திணையும் துறையும் ஆகும் என்று வரையறுத்துள்ளார். பகைவர் நாட்டின் மேல் படையெடுத்துச் செல்வோர் வஞ்சி மாலையைச் சூடிச் செல்வர் என்ற கருத்தினைத் தொல்காப்பியர் தெற்றெனக் கூறவில்லை. எனினும் பன்னிரு படலத்தின் வழி வந்த புறப் பொருள் வெண்பாமாலையார் வஞ்சி மாலையினைத் தலையிலே சூடி வஞ்சி மறவர்கள் மாற்றார் மண்மேல் படையெடுத்துச் செல்வதை வெளிப்படையாகக் குறித்தனர். பின்னர் வந்த வைத்தியநாதநாவலரும் சாமிகவிராயரும் பூச்சூடிப்போர் புரிதலை மறவாது சுட்டினர்.

இரு நூல்களிலும் காணப்பெறும் வஞ்சித்திணை பற்றிய ஒப்பும் முரணுமாகிய கருத்துக்களை உற்று நோக்குவோம். தொல்காப்பியர் வஞ்சி மறவர்கள் படையெடுத்துச் செல்லும்

பொழுது நிகழும் ஆர்ப்பினை இயங்குபடை அரவம் என்று குறித்தார். சிலப்பதிகாரத்திலும் இதே தொடர் காணப்பெறுகிறது (26. 92). எனின், செங்குட்டுவன் தன் ஆற்றலை வடபுலத் தரசர்க்குக் காட்டும் நோக்கில் படையெடுத்துச் செல்லுதலின், சிலம்பில் சுட்டப்பெறும் அரவம் தும்பை அரவமாகக் கொள்ளத் தக்கது. இங்ஙனமே உழிஞை அரவமும் புறநானூற்றுப் பாடல் களில் குறிக்கப்பெற்றுள்ளது. இவை புறத்திணை இலக்கண நூல்கள் சிலவற்றில், சுட்டப் பெறுதல் உண்டு. இயங்குபடை அரவத்தினை ஐயனாரிதனார் வஞ்சியரவம் என்று வழங்கினார். வீரமுரசு ஒழிக்க, வயக்களிறு முழங்க, வஞ்சி மறவர்கள் உருத் தெழுந்து செல்லுதலை இத்துறை குறித்தது (37).

பகைவரது நாட்டிற்கு எரியூட்டும் செயலைத் தொல்காப்பியர் எரிபரந்தெடுத்தல் என்ற துறையாகச் சுட்டுவார். இதனை ஐயனாரிதனார் உழபுல வஞ்சி(49), பெருவஞ்சி(57) என்ற துறை களில் விரித்துக் கூறுவர். தொல்காப்பியத்தில் 'சுட்டப்பெறும் 'வயங்கல் எய்திய பெருமை' என்ற துறை புறப்பொருள் வெண்பா மாலையில் சுட்டப்பெறவில்லை. இத்துறையினை, ''ஒருவர்மேல் ஒருவர் செல்லுங்கால் பிறவேந்தர் தத்தம் தானையொடு அவர்க்கு துணையாயவழி அவர் விளக்கமுற்ற பெருமை''என்று நச்சினார்க் கினியர் விளக்கினார். பு. வெ. மா. சுட்டும் பாசறை நிலை, நல்லிசை வஞ்சி ஆகிய இரு துறைகளையும் இவ்வுரையார், ,வயங்கல் எய்திய பெருமை' என்ற துறையின் கீழ் அடக்கியோது வார் (ப. 172). ஆயின், இளம்பூரணர் பாசறை நிலை முதலியன துணை வஞ்சியின் பாற்படும் என்று இயம்பினார் (ப.94). பாசறை நிலை என்பது வேந்தர் பலரும் மறம் துறந்து மதிக்குடைக்கீழ்த் தாழ்ந்து வழிமொழிந்து நிற்பவும் பாடிவீட்டினின்றும் பெயரா திருக்கும் வஞ்சி வேந்தனின் ஆற்றலைப் போற்றும் துறையாகும் (59). இத்துறையினை நச்சினார்க்கினியர் 'வயங்கலெய்திய பெருமை' என்ற துறையின்கண் கொண்டுவருதல் அத்துணைச் சிறப்புடையதன்று. சாமுண்டு தேவ நாயகர் இதனைத் தொல் காப்பியர் கூறிய வென்றோர் விளக்கம் என்ற துறையாகச் சுட்டி யிருத்தல் நோக்கத்தக்கது.

'கொடுத்தலெய்திய கொடைமை' என்ற வஞ்சித்துறை தத்தம் படையாளர்க்குப் படைக்கலம் முதலியன கொடுத்தலும் பரிசிலர்க்கு பொற்றாமரைப்பூ, தேர், யானை முதலிய பரிசில் பொருள்கள் கொடுத்தலும் ஆகிய வஞ்சி வேந்தனின் ஈகைத் திறத்தைக்

குறிக்கும் துறையாகும். இதனைப் பு. வெ. மா. கொடை வஞ்சி (51) என்ற பெயரினால் சுட்டியது.

'அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம்' என்ற துறை பகைவர் பலரையும் அடுத்து மேலிட்டுக்கொன்ற கொற்றத்தைக் குறிப்பது என்று நச்சினார்க்கினியருங்கூறிய திறத்தை முன்னர்க்கண்டோம். கடிமரம் தடிதலும், நீர்த்துறைகளில் படிந்திருக்கும் களிறும் மாவும் ஆகியவற்றைக் கொல்லுதலும், புறஞ்சேரியைச் சுடுதலும், இவை போன்ற பிறவும் இத்துறையின்கீழ் அடங்கும் என்பர் நச்சி(ப.173) நீர்நிலைகளில் நச்சு கலந்துவிடுதலும் இதன் பாற்படும். பு. வெ. மாலையில் கொற்றவஞ்சி என்று இத்துறை சுட்டப்பெற்றது. வெற்றிபெற்ற வேந்தனின் கொற்றத்தைப் போற்றிச் சொல்வது இத்துறையின் பாற்படும்.

மாராயம் பெற்ற நெடுமொழி என்ற வஞ்சித்துறையினை மாராயவஞ்சி என்றும் நெடுமொழி வஞ்சியென்றும் ஐயனாரிதனார் இரண்டு துறைகளாகப் பகுத்துக் கூறியுள்ளார். மாராயம் என்பது ஏனாதி, காவிதி என்பன போல மன்னனால் மாபெரும் வீரனுக்கு வழங்கப்பெறும் சிறப்பாகும் என்பதை முன்னர்க்கண்டோம். இத்தொடர் சிலப்பதிகாரத்திலும் பயிலப்பெற்றுள்ளது (25 : 142). இந்த விருதினைப் பெற்ற வீரன் உவகை மிக்க நிலையில் பேசும் மீக்கூற்றுச்சொல் இத்துறையின் பொருளாக அமையும். அல்லது ஏனையோர் அத்தகையோனைப் பாராட்டிக்கூறினும் இத்துறையாகக் கொள்ளுதல் வேண்டும். இந்த நெடுமொழி, வெட்சித் திணையில் தொல்காப்பியர் சுட்டிய, ''தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்'' என்ற துறையினின்றும் வேறுபட்டது என்பதை அறிதல் வேண்டும். இத்தகைய நெடுமொழிகள் பற்றிய குறிப்புக்களைச் சிலப்பதிகாரத்திலும் காண்கிறோம். வீரபத்தினியாகிய கண்ணகி நிகழ்த்திய நெடுமொழிகளை இளங்கோ பொறித்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் வஞ்சித்திணை

அகவாழ்வியல், புறவாழ்வியல் பகுதிகளைப் பெருங்காப்பியம் படைப்போர் பூரணமாகப் புலப்படுத்திக் காட்ட முயன்றுள்ளனர். அவருள் இளங்கோவடிகள் தலைசிறந்து விளங்குகிறார். வஞ்சி மாநகர் வேந்தனாகிய செங்குட்டுவன், மாபெரும் பத்தினிக்குச் சிலையெடுக்க வரவரசன் கல்தாரான் எனின், இதுசெய்வேன்

என்று சூள் உரைக்கும் பகுதியில், வஞ்சித்திணைக்குரிய துறைகள் பல இடம்பெற்றன. ஆதலின், அப்பகுதி இங்கே தரப்படுகிறது.

"..................................... பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவுள் எழுதவோர் கற்றா ரானெனின்...
குடைநிலை வஞ்சியும் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராய நிலைஇய வஞ்சியும்
வென்றோர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும்
பின்றாச் சிறப்பிற் பெருஞ் சோற்று வஞ்சியும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன்
புட்கைச் சேனை பொலியச் சூட்டிப்
பூவா வஞ்சிப் பொன்னகர் புறத்தென்
வாய்வாள் மலைந்த வஞ்சிசூ டுதும்என......"

(25:128-149)

இப்பகுதியையூன்றி நோக்கின் இளங்கோவடிகள் புறத்திணை மரபுகளை இலக்கண நெறி நின்று உணர்த்தியுள்ள உண்மை புலனாகும் அவர் காலத்தில் தொல்காப்பிய மரபும் பன்னிரு படலமரபும் கலந்து விட்டன என்பதை இப்பகுதி உணர்த்துகிறது. இப்பகுதியில் இடம் பெற்ற துறைகள் தொல்காப்பியத்திலும் பன்னிருபடலத்தின் வழி வந்த பு வெ மாலையிலும் கூறப்பெற்றவையுடன் எந்த அளவில் இயைந்து வருகின்றன என்பதைக் காண்போம்.

சிலப்பதிகாரம் (காட்சிக்காதை)	பு. வெ மாலை (வஞ்சிப்படலம்)	தொல்காப்பியம் (வஞ்சித்திணை, நூ. 65)
1. குடைநிலைவஞ்சி	38	——
2. கொற்ற வஞ்சி	42	அடுத்தூர்ந்தட்ட கொற்றம்
3. நெடுமாராயவஞ்சி	46	மாராயம்பெற்ற நெடுமொழி
4. வென்றோர்விளங்கிய வியன்பெரு வஞ்சி	57	வென்றோர் விளக்கம்
5. பெருஞ்சோற்றுவஞ்சி	58	பெருஞ்சோற்று நிலை
6. குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளை	43	குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளை
7. வஞ்சிசூடுதல் (25:145)	36	——

இப்பட்டியலைக் கூர்ந்து நோக்கின் சில உண்மைகள் புலனாகும். குடைநிலை வஞ்சி, வஞ்சி கூடுதல் என்பன இரண்டும் தொல்காப்பியத்தில் கூறப்பெறாதவை. வஞ்சி சூடுதலைப் பல இடங்களில் அடிகள் குறித்துள்ளார் (25:149; 26, 46, 50-1). எனின், குன்றாச்சிறப்பிற் கொற்றவள்ளை என்பது சிறிதும் மாற்றம் இன்றி அப்படியே தொல்காப்பியத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பெற்றது.

தொல்காப்பியர் வஞ்சித்திணையில் குடைநிலை, பாணிலை கூறவில்லை; உழிஞைத்திணைக்கே ஓதினார். எனின், இளங்கோவடிகள்,

''பிண்டம் உண்ணும் பெருங்களிற் றெருத்தின்
மறமிகு வாளும் மாலைவெண் குடையும்
புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்திப்
புரைநீர் வஞ்சிப் போந்தையிற்றொடுப்போன்''

(26:43-46)

என்று வஞ்சித்திணையுடன் தொடர்புடையனவாக வாள்நிலை, குடைநிலை என்பனவற்றைக் குறித்துள்ளார். இவை பு.வெ.மா. வஞ்சிப்படலத்தில் 39, 38 என்ற எண்ணிட்ட துறைகளாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

வடநாட்டில் போர் தொடுக்க விரும்பிய கரிகாலன் நல்ல நாளில், தனக்குரிய வாளும் குடையும் முரசும் அத்திசை நோக்கிப் புறவீடு செய்த செயலை இளங்கோ குறித்துள்ளார் (5.89-94). அடியார்க்கு நல்லார் பு. வெ. மா வஞ்சிப்படல வெண்பாக்களை மேற்கோள் காட்டி முதலிரு துறைகளையும் விளக்கியுள்ளார். எனின், முரசுநிலை என்ற துறை பு. வெ. மாலையில் காணப் பெறாமையின் புறநானூற்றுப் பாடல் ஒன்றினை (51) மேற்கோள் தந்தனர்.

இளங்கோ சேரமரபின். ஐயனாரிதனாரும் அம்மரபினர். அவர் காப்பியத்தையும் பன்னிருபடலத்தையும் நன்றாகப் பயின்று தம் இலக்கண நூலைச் செய்திருத்தல் வேண்டும் என்று கருதலாம்.

இயைபு நோக்கி மணிமேகலையில் இடம்பெறும் வஞ்சித்திணை பற்றிய ஒரு குறிப்பினை இங்குக் குறித்தல் தகும்.

சேர, பாண்டிய வேந்தர் மண்ணாசை காரணமாகச் சோழன் மாவண்கிள்ளியுடன் போர்தொடுத்துத் தோற்ற செய்தியைக் கூறும் சாத்தனார்,

''எஞ்சா மண்ணசைஇ கல்உளங் துரப்ப
வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி...'' (19:119-126)

எனக் கூறும் பகுதியில் தொல்காப்பிய வஞ்சித்திணை நூற்பாவின் (புறத். 64) சொல்லும் பொருளும் பொருந்தியிருத்தல் அறியத்தக்கது.

தமிழ் மரபு வழி நின்று காப்பியக் கவிஞர்கள் புறத்திணைச் செய்திகளைக் கூறியுள்ளார் என்பது தெளிவு.

தொல்காப்பியர் சுட்டிய 'பொருளின்றுய்த்த பேராண் பக்கம்' என்ற துறை பகைவரை ஒரு பொருளாகக் கருதாது (பொருட்படுத்தாது) செலுத்தின வீரத்தைச் சுட்டும் துறையாகும், பு. வெ. மாலையில் எண்ணப்பெறும் பேராண் வஞ்சி என்ற துறை இதனுடன் ஒப்பிடுதற்குரியது. எனின், அத்துறைக்கு ஐயனாரிதனார் கொடுத்துள்ள பொருள் வேறுபட்டது. வீரர்களுக்கு ஈகை புரிதலை இத்துறை சுட்டுகிறது. அன்றியும், பகைவர்களிடம் திறைபெற்று மீண்டுபோதலையும் இதே துறை குறித்தது (44, 45). தொல்காப்பியர் 'கொடுத்தலெய்திய கொடைமை' என்ற துறையினால் ஈகையினைச் சுட்டிவிட்டதால், பேராண் பக்கம் என்பதற்கு பகைவரைப் பொருட்படுத்தாத வஞ்சி வேந்தனின் பேராண்மையைச் சுட்டுவதாகத் தொல்காப்பிய உரை ஆசிரியர்கள் பொருள் கண்டது பொருத்தமாகவே தோன்றுகின்றது. திரைப்பெற்று மீளுதலைப் பேராண் வஞ்சியாகக் கூறிய பு.வெ.மா. கருத்து தொல்காப்பியத்தில் காணப்படவில்லை.

அடுத்து சுட்டுதற்குரியது ஒப்பற்ற வீரனின் ஆற்றலைக் குறிக்கும் 'ஒரு தனி நிலை' என்னும் துறையாகும் (பு.வெ மா. 54). இத்துறை தொல்காப்பியத்தில், ''வருவிசைப் புனலைக் கற்சிறைப்போல் ஒருவன் தாங்கிய பெருமை'' என்று உவமை நலம் தோன்ற உரைக்கப்பெற்றது. வேகமாக ஓடிவரும் வெள்ளத்தைக் கல்லணை தடுத்து நிறுத்துவது போலப் பாய்ந்து வரும் படை மறவர்களை ஒருவனே தடுத்து நிறுத்தும் தறுகண்மை இத்துறைக்குரிய பொருளாகும் என்பதை முன்னரும் சுட்டியுள்ளோம். இந்த உவமையினைப் பு. வெ. மாலையிலும் காண்கிறோம்.

தொல்காப்பியம் கூறிய பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை என்ற துறை பு. வெ. மாலையில் பெருஞ்சோற்று நிலை என்ற பெயரில் காணப் பெறுகிறது. பிண்டம் என்பது திரட்சியைக் குறிக்கும். படையெடுத்துச் செல்லும் முன்னர் வீரர்களுக்கு வெல்லும் பொருட்டுச் சோற்றுத் திரளை வழங்குதல் இத்துறைக் குரியபொருளாகும். இராவணன் கும்பகருணனுக்குப் பெருஞ்சோறு வழங்கியதை இராம காதையில் காணலாம். எனின், அங்குச் சுட்டப்பெறுவது தும்பைப் போர் என்று கருதுதல் வேண்டும்.

வென்றோர் விளக்கம், தோற்றோர் தேய்வு என்ற துறைகளும் வெற்றி பெற்றவருடைய பொலிவையும் பகைவரின் அழிவையும் சுட்டுவனவாகும். இப்பெயரினால் இவற்றைப் பு வெ. மாலை சுட்டவில்லை.

குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை என்ற துறைக்கு இரு வகையான பொருளை இளம்பூரணர் எழுதியுள்ளார் என்பதை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்கிறோம். குறையாத வென்றிச் சிறப்பினையுடைய கொற்றவள்ளை என்றும், தோற்ற கொற்றவன் அளிக்கும் திறைப்பொருள் என்றும் பொருள் கண்டார். ஆயினும் உதாரணம் வந்தவழி கண்டுகொள்க என்று எழுதிவிட்டார். இவர் உரையைச் சுட்டியுள்ள நச்சினார்க்கினியர் வேறொரு விளக்கமும் தந்திருக்கிறார். வேந்தனது குறையாத வெற்றிச் சிறப்பினால் பகைவர் நாடு அழிதற்கிரங்கித் தோற்றோனை விளக்கக்கூறும் வள்ளைப்பாட்டு என்று இவர் வழங்கும் பொருள் சிந்திக்கத்தக்கது. இது உரல்பாட்டைக் குறிக்கும். நாட்டுமக்கள் பகைப் புலத்தாரின் அழிவிற்கு இரங்கித் தமக்கேயுரிய இசையில் தம் மன்னனின் பெருமையையும் கலந்து பாடுவார் என்பது பொருத்தமான கருத்தாகத் தெரிகின்றது. இத்துறையினைப் பு. வெ. மா. சுட்டும் நல்லிசை வஞ்சி என்ற துறையின் இரண்டாவது கூறாக எடுத்துக் கொள்ளலாம். முதல் கூற்றினைத் தொல்காப்பியம் சுட்டிய வென்றோர் விளக்கமாக முன்பு குறித்துள்ளோம். தொல்காப்பி யத்தில் இறுதியாகக் கூறப்பெறும் அழிபடை தட்டோர் தழிஞ்சி என்றதுரை வீர வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஒரு துறையாகும். தழுவுதல் என்ற இச்சொல்லினடியாக இச்சொல் தோன்றியது. மாற்றார் விடுபடைக்கலன் முதலியனவற்றைத் தம்மாட்டு தடுத்து உடன் அழிந்தோரைப் பேணித்தழுவிக் கொள்ளுதல் இத்துறைக்குரிய பொருளாக இளம்பூரணர் குறித்தனர். எனின், நச்சினார்க்கினியர்,

''அங்ஙனம் வென்றும் தோற்றும்மீண்ட வேந்தர் தம் படையாளர் முன்பு போர் செய்துழிகணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக்கொண்டு அழிந்தவழி, தாம் சென்றும் பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக் கோடல்'' என்று பொருள் வரைந்தவர். போர்க்களத்தில் விழுப்புண் பட்டு விழுந்த வீரர்களையும் படைக்கலம் இழந்து நிற்கும் வீரர்களையும் கொல்லுதல் போர் அறம் அன்று. அவர்கள்பால் அன்பு காட்டுதல் சிறந்த வீரமாகச் சுட்டப்பெற்றது. இத்துறைக்கு,

''பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு''

எனவரும் திருக்குறள் சிறந்த விளக்கமாக அமைந்திருத்தலைப் பரிமேலழகர் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். அயோத்தி அண்ணல் ஆகிய இராமன் படைக்கலம் இழந்து நிற்கும் இலங்கை வேந்தனாகிய இராவணனை நோக்கி ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என்று கூறிய அருள் உரையினைத் தழிஞ்சித் துறைக்குச் சிறந்த உதாரணமாக எடுத்துக் காட்டியுள்ளார். இம் மேற்கோளுக்கு அடிப்படை கம்பராமாயணத்தில் இடம்பெறும் ''ஆளையா உனக்கமைந்தன''எனத் தொடங்கும் பாடலே ஆகும். இதனால், கம்பர் காலத்துக்கும் பரிமேலழகர் பிந்தியவர் என்பது புலனாகும். பு. வெ. மாலை,

''அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று''

என்று இத்துறையினைச் சுட்டுகின்றது. இதற்குக் காட்டப்பெறும் உதாரண வெண்பாவில் பகைவர் முதுகிடும்பொழுது அதன்மேல் வாள் ஓச்சாமையைத் தழிஞ்சி என்று சுட்டுதல் அத்துறையின் முழுமையான கருத்தினைப் புலப்படுத்தவில்லை. வாள் ஓச்சாமையோடு புண்பட்ட அவர்கட்கு மருந்து உணவு முதலியன கொடுத்து அன்புரை பகர்ந்து உதவுதலையும் இத்துறை சுட்டுவதாகக் கொள்ளுதல் வேண்டும். திருக்குறளில்தான் இத்துறையின் முழுமையான பொருண்மையும் பொதியப்பெற்றுள்ளது. மறத்திற்கும் அன்பே துணை என்பர் வள்ளுவர்.

தொல்காப்பியர் கூறாதவை

தொல்காப்பியர் வஞ்சித்திணைக்குரிய துறைகளை கூறாதவை சில பு. வெ. மாலையில் கூறப்பெற்றுள்ளன. அவற்றை இங்குத் தொகுத்து நோக்குவோம்.

1. குடைநிலை, வாள்நிலை

இவ்விரு துறைகளையும் பு. வெ. மா. சுட்டியது. நல்ல நாளில் வேந்தன் தனது வெண் கொற்றக் குடையினையும் கொற்ற வாளினையும் முன்னரே அனுப்பி வைப்பான். இச்செய்திகளைத் தான் இத்துறைகள் விளக்குவன. இவ்விரண்டையும் தொல் காப்பியர் வஞ்சித்திணைக்குரிய துறைகளின் வரிசையில் சுட்டா விடினும், உழிஞைத் திணைக்குரிய துறைகளைக் கூறும் இரண்டாவது நூற்பாவின் தொடக்கத்திலேயே சுட்டியிருக்கிறார். நச்சினார்க்கினியர்,

''நிரைகோடற்கு ஏவிய அரசருள் நிரைகொண்டோர்க்கும் நிரைகொள்ளப்பட்டோர்க்கும் விரைந்து ஏகவேண்டுதலின், குடை நாட்கோளும் வாள்நாட்கோளும் இன்றியமையாதன அன்மையின் ஈண்டுக் கூறாராயினார். அவை உழிஞைக்குக் கூறுப, அதற்கு இன்றியமையாமையின்'' என்று குறித்துள்ளார் (ப. 172).

இவ்வுரைப்பகுதில் வெட்சி வீரர்களே வஞசி வீரர்களாக மண் நசை வேந்தர்க்குப் படையெடுத்துச்செல்வர் என்ற கருத்தில் இவர் எழுதியிருப்பதாகக் கொள்ளுதல் வேண்டும். பு. வெ. மாலையில் வஞ்சித்திணைக்கு அல்லாமல் உழிஞைத் திணைக்கு குடைநிலை, வாள்நிலை என்பன கூறப்பெற்றன.

2. கொற்றவை நிலை

வெட்சிக்கு மட்டுமே தொல்காப்பியர் கொற்றவை நிலை என்ற ஒரு துணைத் துறையினைக் கூறினார். எனின், ஐயனாரித னார் வெட்சிக்கு மட்டுமன்றி வஞ்சித் திணைக்கும் கொற்றவை நிலையினை ஒரு துறையாகக் குறித்துள்ளார். வெற்றிக்குரிய தெய்வமாகக் கொற்றவை பரவப்பெறுதலின் இங்ஙனம் குறித்த தாகக் கொள்ளலாம்.

3. முதுமொழி வஞ்சி

பு. வெ. மாலையில் முதுமொழி வஞ்சி என்ற துறை காணப்படு கிறது. இத்துறை,

''தொன் மரபின் வாட்குடியின்
முன்னோனது நிலை கிளர்ந்தன்று''

என்று பு.வெ. மாலையில் விளக்கப்பெறுகிறது. எனின், நச்சினார்க்கினியர், ''புண்பட்டோரை முன்னர்ச் செய்த படைவலங் கூறி, அரசராயினும் உழையராயினும் புகழ்வனபோல்வனவும் தழிஞ்சிப் பாற்படும். இதனை முதுமொழி வஞ்சி என்பர்'' (ப. 173). என்று கூறும் பகுதி அறியத்தக்கது. பகைவனின் வாள் வெள்ளத்தைத் துகைத்துக் களிறு எறிந்து புண்ணொடு விழுப்புண்பட்டு வீழ்ந்தவன் மகனுக்கு வேந்தன் மருத நிலங்களைக் கொடுத்தல் இத்துறையின் பாற்படும் என்பர் ஐயனாரிதனார் (48).

தழிஞ்சியின் மற்றொரு வகை திருக்குறள் உரையிலும் காணக் கிடக்கிறது. படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில்,

''கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது''

எனவரும் குறள் தழிஞ்சித் துறைக்குரியது என்பர் பரிமேலழகர். குறுநிலத்தலைவனை வெல்வதைவிடப் பெருவேந்தனுடன் போரிட்டுத் தோற்றுப் போதல் மேம்பட்டது என்ற கருத்தினை இக்குறள் அணி நலம் தோன்ற அறிவுறுத்துகின்றது.

4. மழபுல வஞ்சி

இத்துறை தொல்காப்பிய வஞ்சித்திணையில் இடம்பெற வில்லை. பு. வெ. மாலையில் இடம்பெற்றது. பகைவர் நாட்டிற் சென்று வீடுகள் பாழ்ப்படும்படி பெரும்பொருள்களையும் நவமணிகளையும் கொள்ளையடித்து வருதலை இத்துறை சுட்டுகின்றது. புராதன காலத்தில் தொழிற்சாலைகள், வாணிபம் முதலியவற்றின் வாயிலாக ஒரு நாட்டிற்குப் போதிய வருவாய் கிடைக்காத நிலையில் இத்தகைய போர்ச்செயல்களின் மூலம் வரும் பொருள் அரசர்க்குரிய வருவாய்த் துறைகளில் ஒன்றாக எண்ணப்பெற்றது. இதனைத் திருவள்ளுவர்,

''ஒன்னார்த் தெறுபொருள்'' என்று குறித்துள்ளார்.

5. குறுவஞ்சி

இந்தத் துறையினைப் பு. வெ. மாலை,

''மடுத்தெழுந்த மறவேந்தர்க்குக்
கொடுத்தளித்துக் குடியோம்பின்று''

என்று குறித்தது. இது தொல்காப்பியத்தில் இடம்பெறாத ஒரு துறையாகும். படையெடுத்து வந்த ஆற்றல்மிக்க பெருவேந்தனின் முன்னர்த் தாக்குப்பிடிக்க முடியாத அரசன், அழிவினின்றும் தன் குடிமக்களை எங்ஙனமேனும் காக்க வேண்டும் என்ற அருள் உள்ளத்தினால் திறைப் பொருளைக் கொடுத்துத் தன் நாட்டினைக் காத்துக் கொள்ளும் நிகழ்ச்சியைக் குறுவஞ்சி என்னும் துறை சுட்டுகின்றது (52). யானை, குதிரை முதலியனவும் திறைப்பொருளில் அடங்கும். பாசறையின் அமைப்பினைக் கூறும் பகுதியும் இத் துறையின் ஒரு கூறாகக் கொள்ளப்பெற்றது (53).

துணைவேண்டாச் செருவென்றி என்ற ஒரு கருத்தினை நச்சினார்க்கினியர் நாடக வழக்கு என்று குறித்தனர். இது ஒரு தனி நிலையை உணர்த்துவது. பெரும்பாலும் உலகியலுக்கு ஒவ்வாதது. பெரும்படையினை ஒருவன் தடுத்து நிறுத்தல் கேட்பதற்கு இனியது. நடைமுறைக்கு ஒவ்வாதது. எனவேதான் "துணை வேண்டுதல் உலகியல் வழக்கு" என்றும் இவர் இயம்பினார்.

கொற்றவை நிலையைக் குறித்த பு. வெ. மா, வெண்பா ஒன்றில், வஞ்சி வேந்தன் முல்லைத்தார் சூடுதல் சுட்டப்பெற்றது. உரையாசிரியர், "வஞ்சிதானே முல்லையது புறனே" என்ற தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்கூறி வஞ்சி வீரர்கள் முல்லைத்தார் சூடுதல் மரபே என்பதை நிலைநாட்டினார். அகத்திணை ஏழிற்கும் புறத்திணை ஏழும் புறமாக வருவதைப் பன்னிரு படலத்தின் ஆசிரியரோ பு. வெ. மாலையாரோ உடன்படாவிடினும், சாமுண்டிதேவர் தொல்காப்பிய நெறியை முற்றிலும் மறந்துவிடாது இங்ஙனம் மேற்கோள் காட்டியிருத்தல் பாராட்டற்பாலது.

2) தொல்காப்பியமும் வீரசோழியமும்

வஞ்சித்திணைக்குரியனவாகப் புத்தமித்திரனார் 11 துறைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார் (நூ. 99). அவர் சுட்டுவன பெரும்பான்மையும் தொல்காப்பியத்தை ஒட்டியவையே எனலாம். தொல்காப்பியர் கூறிய இயங்குபடை அரவம், எரிபரந்தெடுத்தல், வயங்கல் எய்திய பெருமை, கொடுத்தல் எய்திய கொடைமை என்ற துறைகள் முறையே வீரசோழியத்தில் அரவம், எடுத்தல், வயங்கியல், ஈகை என்று சுருக்கமாகக் குறிக்கப்பெற்றன. பெருந்தேவனார் அரவம் என்பதற்குப் படையெழுச்சி என்றும், எடுத்தல் என்பதற்குப் படையெடுத்தல் என்றும் பொருள்

கண்டனர். ''வருவிசைப் புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமை'' என்ற தொல்காப்பிய வஞ்சித்திணைத்துறை வீரசோழியத்தில் ''தனிச்சேவகம்'' என்று சுட்டப்பெற்றது. சேவகம் என்பது வீரத்தைக் குறிக்கும். கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், திருப்புகழ் முதலிய இலக்கியங்களிலும் இச்சொல் இப்பொருளில் பயன்பெற்றது. வென்றி கூறல் என்று வீரசோழியம் சுட்டும் துறை, ஒருவன் வெற்றிபெறுதற்கு முன்னமே வாகை புனைவோன் என்ற உறுதிப் பாட்டினால் முழங்கும் வஞ்சின மொழியைக் குறிப்பதாகும். பெருந்தேவனார், ''பத்துத் தலையோனைக் கட்டி உன் பாதத்து மடமொழியை மீளேன் அல்லேன்'' என வருவது என்று இந்தத் துறையினை விளக்கியுள்ளார். இங்கு, இராமாயணக்கதையினை மையமாகக் கொண்டு இத்துறை விளக்கப் பெறுதல் காணலாம். தொல்காப்பியம் சுட்டிய. ''மாராயம் பெற்ற நெடுமொழி'' என்ற துறையின் ஒருவகையாக வென்றி கூறல் என்னும் துறையைக் கருதுதல் ஏற்புடையது.

தொல்காப்பியரைப் பின்பற்றியே புத்தமித்திரனாரும் வென்றோர் விளக்கம் என்ற துறையை வகுத்துள்ளார். இந்நூலில், ''நிரவும் வழிவொடு'' எனவரும் தொடர், நிரவும் அழிவொடு என்று இருத்தல் வேண்டும். அங்ஙனமாயின், அது தொல்காப்பியம் குறிப்பிடும் தோற்றார் தேய்வு என்ற துறையினைச் சுட்டியது எனலாம். இதன் உரையிலும், ''நிரவும் வழிகை'' என்று காணப்படுகிறது. இதுவும் 'நிரவும் அழிகை' என்றிருத்தல் வேண்டும்.

வீரசோழியம் சுட்டும் கொற்றவர் மெலிவு என்ற துறை தோற்றார் தேய்வின் ஒருவகையாகக் கொள்ளுதற்குரியது. தழிஞ்சி என்ற துறையினை, உடைந்த படைஞர்பின் செல்லாமை என்று பெருந்தேவனார் உரைகண்டார். எனின், அஞ்சியோடும் வீரர்களைத் துரத்திச் செல்லாமை மட்டுமே தழிஞ்சி ஆனது என்பதுடன், அவர்கள் புண்பட்டுக் கிடப்பின் உதவுதலும் தழிஞ்சி ஆகும் என்பதும் கருத்திற் கொள்ளுதற்குரியன.

புத்தமித்திரனார், விலக்கருமை என்ற ஒரு துறையினையும் வஞ்சித்திணைக்குரிய ஒரு துறையாகக் குறித்துள்ளார். விலக்கு தற்குரிய வீரனின் வென்றிமிகு செயலினை இது குறிப்பதாகப் பெருந்தேவனார் கருதினார். அங்ஙனமாயின், இத்துறை தொல்காப்பியம் சுட்டிய 'அடுத்தூர்ந்து அட்ட கொற்றம்' என்ற துறையின் ஒருவகை எனலாம்.

எஞ்சிய வஞ்சித்துறைகளை, ''இன்னவை'' என்ற சொல்லினால் ஆசிரியர் தழுவிக் கொண்டார்.

3) புறப்பொருள் வெண்பா மாலையும் இலக்கண விளக்கமும்

இலக்கண விளக்கத்தின் ஆசிரியர் வஞ்சித்திணைக்குரியனவாக 25 துறைகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறியுள்ளார். இவற்றுள் பு. வெ. மா. சுட்டிய 21 துறைகளும் இடம்பெற்றுள்ளன. எஞ்சிய நான்கும் கூட ஐயனாரிதனார் சுட்டிய ஒரு சில துறைகளின் விரிவாகவே விளங்குகின்றன.

பெரும்பாலும், தொல்காப்பியத்தையே அடியொற்றிச் செல்லும் இயல்புடைய வைத்தியநாத நாவலர், வஞ்சித் துறைகளைக் கூறுமிடத்து முற்றிலும் பு. வெ. மாலையாரையே பின்பற்றியிருத்தல் காணத்தக்கது. எனினும் வஞ்சித்திணைக்கு விளக்கம் கூறும் வரையறை நூற்பா,

> ''வஞ்சிதானே முல்லையது புறனே
> எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
> அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே''.

என்று அமைந்துள்ளது (நூ. 605). இது அப்படியே தொல்காப்பியத்திலிருந்து பொன்னேபோல் எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளது. இந்த ஒரு இடத்தைத் தவிர இந்நூல் வஞ்சித் துறைகளைப் பேசும் வேறிடங்களில் தொன்னூலை முழுமையாக எடுத்துக்கொள்ளவில்லை.

கூடுதலான் துறைகள்

வாடாவஞ்சி முதல் நல்லிசை வஞ்சி வரை ஐயனாரிதனார் கூறியுள்ள 21 துறைகளையும் இலக்கண விளக்கத்தார் மேற்கொண்டனர் என்று கூறினோம். இவர் கூடுதலாகக் கூறிய துறைகள் யாவை என்பதை எண்ணிப் பார்ப்போம்.

I. கொள்ளவை நிலைப்பக்கம்

பு. வெ. மா. சுட்டிய கொற்றவை நிலை என்ற ஒரு துறையினை இவர் கொற்றவை நிலை என்றும் கொற்றவை நிலைப்பக்கம் என்றும் இரண்டாக எண்ணினார். இதற்குக்

காரணம் இத்துறைக்கு உதாரண வெண்பாக்கள் இரண்டாகக் காணப்பெறுவதிலே எனலாம். இவற்றுள் முதலில் கூறப்பெற்ற துறை, பகைவர் அஞ்சுதற்குக் காரணமான கொற்றவைக்குத் தம் செயல் வெற்றி பெறுவதற்காக வஞ்சி வீரர் பலியிட்டு வழிபாடு நிகழ்த்துவதைச் சுட்டுவதாகக் குறித்தனர். இரண்டாவது துறை, வெற்றிதரும் வேலினைப் பகைவரின் மார்பில் உழுதலைச் செய்யும் வீரர்களின் போர்த்தொழிலைக் குறிக்கும் என்று வேறுபிரித்துக் கூறினார்.

2. பேராண் வஞ்சிப்பக்கம்

பு. வெ. மா. புகன்ற பேராண்வஞ்சி என்ற ஒரு துறையினை இவர் பேராண் வஞ்சி, பேராண்வஞ்சிப்பக்கம் என்று இரு துறைகளாகப் பாகுபடுத்திக் கொண்டனர். பு. வெ. மா. இத்துறைக்கும் இரு வெண்பாக்களை அமைத்துள்ளது. இவற்றுள் முதல் துறை, ''போரிடும் அறமுறை பிறழாது பகைவரொடு முன்பொருது வெற்றிகண்ட சிறந்த வீரருக்கு அரசன் மிகவும் அருள் சுரந்த செய்தியைக் கூறுதல்'' என்று எழுதினார். இரண்டாவது துறை, ''பகைவர் சிறந்த திறைப்பொருளைத் தருதலால் சினம் நீங்கி வஞ்சி வேந்தன் மீண்டு விடுதலைக் குறிக்கும்'' என்றியம்பினார்.

3. நல்லிசை வஞ்சிப்பக்கம்

பு. வெ. மா. சுட்டிய நல்லிசை வஞ்சி என்ற ஒரு துறைக்கு இரு வெண்பாக்கள் உதாரணம் கூறப்பெற்றிருத்தலைநோக்கி, இந்நூலார் நல்லிசை வஞ்சி என்றும் நல்லிசை வஞ்சிப்பக்கம் என்றும் வகுத்துக் கொண்டார். இவற்றுள் முதல் துறை, ''வெற்றிடம் இல்லையாம்படிப் பகைவரது போர் முனையைத் தன் படைகளால் அழித்த வஞ்சி வேந்தனின் பேராற்றலை மிகுத்துக் கூறுதல்' என்று உரைத்தனர். இக்கருத்து புறவெண்பா மாலையின் கொளுவில் (59) காணப்பட்டதே ஆகும். இதனை வென்றோர் விளக்கம் கூறுவது என்பர் சாமுண்டிதேவநாயகர். இரண்டாவது துறை, வஞ்சி வேந்தன் பாடி வீடு அமைத்துத் தங்கியதால் பகை மன்னனின் நாடு பாழாயின செய்தியை எண்ணிப் பார்த்துச் சான்றோர் இரங்கிக் கூறுதலைச் சுட்டுகிறது. இக்கருத்து பு. வெ. மா. சுட்டும் இரண்டாவது வெண்பாவில் (3. 25) கூறப்பெற்றிருத்தலுடன் ஒத்திருக்கக் காணலாம்.

4. இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும்

வைத்தியநாத நாவலருக்குச் சுமார் 200 ஆண்டுகள் பின்னர் வந்தவர் சாமிகவிராயர். இவர் பெரும்பாலும் இலக்கண விளக்கத்தை ஒட்டியே வஞ்சித் திணையின் துறைகளை வகுத்துக் கூறியிருத்தல் அறியத்தக்கது. இவரும் 25 துறைகளை வஞ்சித் திணைக்குரியனவாகச் சுட்டியுள்ளார். இவை யாவும் இலக்கண விளக்கத்தில் இடம்பெற்றவையே. ஒரு சில சொல் வழக்குகள் இந்நூலில் சிறு மாற்றம் பெற்றிருத்தல் சுட்டுதற்குரியது. வஞ்சி சூடல் என்பது வஞ்சியாடல் என்று காணப்படுகிறது. இது ஏடு எழுதுவோர் அல்லது பதிப்பித்தோரால் நடந்த பிழையாகத் தோன்றுகின்றது. இயங்குபடையரவம் என்ற பகுதி படையொலி என்று இந்நூலில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. வேந்தனிடம் வரிசை பெற்றோர் வண்மையைச் சொல்லுதல் மாராய வஞ்சி என்று இந்நூல் இயம்புகிறது (நூ. 132).

இலக்கண விளக்கம் சுட்டும் பேராண் வஞ்சிப்பக்கம் என்ற துறை, ''வல்லதிறை வாங்கி இறை பெயர்ந்த பக்கம்'' என்று விளக்கப்படுகின்றது. குறுவஞ்சிப் பக்கம் என்பதைக் கட்டூர் வகையுரைத்தல் என்று சாமிகவிராயர் சாற்றினார். பாசறையின் பெருஞ்சோற்றுநிலை என்பதைச் சோறு உதவுதல் கூறுபாட்டினைக் கூறுதல் இத்துறைக்குரிய பொருளாகும் என்றும் நல்லிசை வஞ்சி என்பதை இசைவஞ்சி என்றும் இவர் குறித்தனர். இலக்கண விளக்கம் சுட்டும் நல்லிசை வஞ்சிப்பக்கம் என்ற துறை நாடழிவுக்கிரங்கல் என்று சாமிகவிராயரால் சொல்லப்பட்டது. இந்நூலின் பதிப்பாசிரியர்,

''திறை வாங்கி இறை பெயர் பக்கம்''

என்பதைப் புறம்பொருள் வெண்பா மாலை கொற்றவை நிலையில் சேர்த்துக் கூற இவர் தனித்துறையாக்கிவிட்டார். (ப. 226), என்று கூறுதல் ஏற்புடையதன்று. இஃது உண்மையில் இலக்கண விளக்கம் சுட்டும் பேராண் வஞ்சிப்பக்கத்துக்கு உரியது என்பதை இரு நூல்களையும் ஒப்பிட்டு நோக்குவோர் எளிதில் உணர்ந்து கொள்வர்.

இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் பு. வெ. மாலையை அடியொற்றி வஞ்சித்திணைக்குரிய துறைகளை வகுத்துக்கூறியிருப்பினும், இந்தத் திணையை அடுத்து அந்த நூலைப் பின்பற்றி வஞ்சியின் மறுதலையாகிய காஞ்சியின் இலக்கணத்தைக் கூறாது,

தொல்காப்பியத்தைப் பின்பற்றி உழிஞைத்திணைக்கு இலக்கணம் கூறிச் செல்லுதல் உன்னிப்பாக உற்று நோக்கத்தக்கது. இவ்விரு நூலார்க்கும் தொல்காப்பியரை முற்றாகப் புறக்கணிக்காமலும், அதே வேளையில் பு. வெ. மாலையை ஒதுக்காமலும் புறப்பொருள் இலக்கணம்கூறும் ஒருவகைப் பொதுமைப் போக்கினைப் பின்பற்றி யிருத்தல் ஆராய்ச்சியினால் புலனாகிறது.

இதுகாறும் ஆய்ந்தவற்றால் கண்டறிந்த முடிபுகளையும் விளக்கங்களையும் பின்வருமாறு தொகுத்துக் கூறுதல் சாலும்.

ஆய்வின் முடிபுகள்

1) நாட்டின் எல்லையை விரிவுபடுத்தும் நோக்கத்தில் நிகழ்வது வஞ்சிப்போர் எனலாம்.

2) முதல், கரு, உரி ஆகிய மூன்றினையும் முல்லைக்குப் புறமாக வஞ்சி அமைந்துள்ளது.

3) மறவர்கள் வீழ்ந்த பகைவரிடத்து இரக்கம் காட்டும் அருள் உள்ளத்தினர் என்பது தழிஞ்சி என்ற துறையினால் அறியப்படுகிறது.

4) புறநானூற்றுக்குரிய 45,46ஆம் பாடல்கள் துணை வஞ்சிக் குரியவை. இத்துறையினை இளம்பூரணர் தம் உரையில் சுட்டியுள்ளார். ஆயினும் தொல்காப்பியம், பு. வெ. மா. முதலிய நூல்களில் இத்துறை சுட்டப்பெறவில்லை.

5) இளங்கோவடிகள் சுட்டும் வஞ்சித்துறைகள் பலவும் பன்னிருபடல மரபிற்கு உரியவை.

6) இளங்கோவடிகள் சுட்டும் முரசுநிலை என்ற துறை பன்னிருபடலத்தின் வழி வந்த பு.வெ. மாலையில் காணப் படவில்லை.

7) தொல்காப்பியரை அடியொற்றிச் சாத்தனார் வஞ்சித் திணையினைச் சுட்டியுள்ளார்.

8) பு. வெ. மா. சுட்டும் பாசறைநிலை என்ற துறையும் தொல்காப்பியர் சுட்டிய வென்றோர் விளக்கம் என்ற துறையும் ஒன்றே என்று சாமுண்டிதேவ நாயகர் கருதினார்.

9) 'பேராண்மை என்ப' என்ற திருக்குறள் தழிஞ்சித்துறைக் குரியது எனப் பரிமேலழகர் புறப்பொருள் மரபினை உணர்ந்து குறித்துள்ளார்.

10) குடைநிலை, வாள்நிலை, கொற்றவைநிலை, முதுமொழி வஞ்சி, மழபுலவஞ்சி, குறுவஞ்சி என்ற துறைகள் வஞ்சித் திணைக்குரியனவாகத் தொல்காப்பியத்தில் சுட்டப் பெறாது பு. வெ. மாலையில் சுட்டப்பெற்றன. இதனால் பு. வெ. மா. மேற்கொண்ட புறத்திணை இலக்கண மரபு தொன்னூல் மரபினின்றும் வேறுபட்டது எனலாம்.

11) சாமுண்டிதேவநாயகர் தொல்காப்பிய மரபினையும் மறவாது போற்றியவர் என்பதற்கு, 'வஞ்சிதானே முல்லையது புறனே' என்ற தொல்காப்பிய நூற்பாவை கேற்கோள் காட்டியிருத்தல் சான்றாகும்.

12) ஒருவன் தாங்கிய பெருமை என்ற துறை தனிச்சேவகம் என்று வீரசோழியத்தில் குறிக்கப்பெற்றது.

13) வஞ்சித்திணைக்குரிய தொல்காப்பிய நூற்பாவை இலக்கண விளக்கம் அப்படியே எடுத்தாண்டுள்ளது.

14) கொற்றவை நிலைப்பக்கம், பேராண் வஞ்சிப்பக்கம், நல்லிசை வஞ்சிப்பக்கம் என்பன பு. வெ. மாலையினை ஒட்டி இலக்கண விளக்கம் வகுத்துக்கூறிய புதுத்துறைகள் ஆகும்.

15) சுவாமிநாதம் முன்னூல்கள் கூறிய துறைகளே வேறு பெயர்களினால் சுட்டியுள்ளது.

6. காஞ்சித்திணை

புறப்பொருள் இலக்கணம் செய்த பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் காஞ்சி என்ற திணையினையும் புறத்திணைகளில் ஒன்றாக எண்ணியுள்ளனர். புறத்திணை ஏழென்று வரையறை செய்தவர்கள் காஞ்சி என்ற திணைக்கு நிலையாமைப் பொருள் கூறினர். புறத்திணை பன்னிரண்டு என்று விரிவுபடுத்தி இலக்கணம் செய்தவர்கள் 'காஞ்சி' என்ற திணை எதிருன்றுதல் அல்லது தடுத்து நிறுத்தலைக் குறிக்கும் என்று பொருள் கூறினர். தும்பை தவிர ஏனைய போர் நிகழ்ச்சிகளில் இரு கூறுகள் காணப்படுவன. ஒவ்வொரு கூறும் ஒரு தனிக்குறியீடு பெறுகிறது. இக்குறியீடு அவ்வப்படை மறவர் சூடும் பூவினால் அமைவது. நிரைகவர்தல், நிரைமீட்டல் என்பன முறையே வெட்சி, கரந்தை எனவும், மதில் அழித்தல், மதில் காத்தல் என்பன முறையே உழிஞை, நொச்சி எனவும் பெயர் பெறுதல் போல், மண்நசை காரணமாகத் தொடுக்கப்பெறும் போரினை வஞ்சி என்றும், அப்பகை வேந்தனை உதிருன்றித் தடுத்துப்போர் புரிதலைக் காஞ்சி என்றும் கூறுதல் ஒருசார் ஆசிரியர்கள் துணிபு.

நிரை கவர்தலுடன் போர் முடிந்திருப்பின் வெட்சி என்ற ஒரு திணையே போதும். மதிலழிப்புடன் போர் முடிந்திருப்பின் உழிஞை என்ற ஒரு திணையே போதும். எடுத்துச்செலவுடன் போர் முடிந்திருப்பின் வஞ்சி என்ற ஒரு திணையே போதும். ஆயின், பாதிக்கப்பட்ட வேந்தர்கள் கோழைகள் அல்லர்; மான உணர்வும் வீர உணர்வும் மிக்கவர்கள். வீரமரணம் அடைவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்த பண்டைத் தமிழகத்தில் முற்சுட்டிய மூவகைப் போர்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் முறையே கரந்தை, நொச்சி, காஞ்சி என்ற மூவகைப் போர்களும் நடைபெற்றன. இவ்வீரர்கள் கரந்தைப்பூ, நொச்சிப்பூ, காஞ்சிப்

பூச்சூடிப்போர் மலைந்தனர். எனவே, மறப்போர் ஆறு வகைகள் ஆயின. வலிமையைத் தீர்மானிக்க நிகழும் தும்பைப் போர் மறவர்கள் இரு சாராருமே தும்பைப்பூச் சூடிமலைதலின் திணை இரண்டாக எண்ணப்பெறாமல் ஒன்றாகவே எண்ணப்பெற்றது. ஆதலின், மறப்போர் குறித்துவரும் திணைகள் ஏழாக வகுக்கப் பெற்றன என்பதை முன்னரும் கூறினோம்.

எனின், கரந்தை, நொச்சி என்ற குறியீடுகளை அவ்வப் போர்க்குறிக்கப் பயன்படுத்தும் தொல்காப்பியர் வஞ்சிப் போர் நிகழ்ச்சிக்கு மறுதலையாகக் காஞ்சியைச் சுட்டவில்லை. எதிரூன்றுதல் என்ற நிலை அவர் காலத்துப் போர் முறைகளில் வளர்ச்சி பெறவில்லை என்று கூறுதல் பொருந்துமா? பிற்காலத்துப் பல்லவர் வரலாற்றில் பல்லவ வேந்தன் ஒருவன் மேலைச்சாளுக் கியப்படை எடுப்பினால் காஞ்சி மாநகர் கவின் அழியும் என்ற கவலையினால் பகை வேந்தனை வரவேற்றுப் போர்புரியாது அடங்கித் திறை செலுத்திய செய்தி காணப்படுகிறது. இவ்வாறே எல்லா வேந்தர்களும் இருந்திருக்க முடியுமா? போர் எனின் பேரழிவும், வெற்றிக்குப்பின் புதுப்பித்தலும் நிகழ்தல் வரலாறு காட்டும் வாய்மையாகும். எனவே, தொல்காப்பியர் காலத்து வேந்தர்கள் வஞ்சி வேந்தர்களை எதிரூன்றித் தடுக்கவில்லை என்று முடிபு செய்தல் ஒவ்வாது.

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் ஆகிய பனுவல்களில் காஞ்சி என்ற சொல் தொல்காப்பியர் கருதியதுபோல் நிலையாமைப் பொருளைக் குறிக்கவும், பன்னிருபடலத்தார் கருதியதுபோல் எதிரூன்றுதலைக் குறிக்கவும் வெவ்வேறு சூழல்களில் பயன்படுத்தப் பெற்றனவா என்பது பற்றி ஆராய்ந்து காண்போம்.

2. காஞ்சி நிலையாமைப்பொருள்

பாண்டியன் நெடுஞ்செழியன் இருபெருவேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் தலையாலங்கானம் என்ற இடத்தில் நடந்தபோரில் வென்று வாகை சூடினான். வெற்றிப்பெருமிதத்தால் மறுமைப் பேற்றினை மறந்து விடக்கூடாது என்ற விழுமிய நோக்கத்தால் நிலையாமையினை உணர்த்தி அறப்புரியத் தூண்டும் பாங்கில் மதுரைக்காஞ்சி என்ற மிக நீண்ட பாட்டினை (782அடி) யாத்தனர். இப்பாட்டு, ஒரு காவிய அமைப்புக் கொண்டது. பாண்டியன் நாட்டின் வளம், தலைநகராகிய மதுரையின் மாண்பு, மக்கள் வளம், இயற்கை எழில், கலைகள், சமய ஒழுக்காறுகள், நம்பிக்

கைகள், படைச்சிறப்பு, கொடைச்சிறப்பு முதலிய பல பொருள் களையும் பாட்டுடைத்தலைவனுடன் பொருத்தி மாங்குடிமருதனார் கவிச்சுவை பெருகப்பெருமித நடையில் பாடியுள்ளார்.

மதுரைக்காஞ்சி என்ற பெயரில் உள்ள 'காஞ்சி' என்ற சொல் உறுதியாக எதிரூன்றுதலாகிய பொருளைத் தரவில்லை. மதுரைக் கண் நிலையாமையினை நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்திய தாகவே கொள்ளுதல் வேண்டும். அப்பொருளே அச்சொல் பயந்தது. இப்பாட்டிற்குப் பேருரை கண்ட நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் காணத்தக்கது. தொன்னூல் பயிற்சி மிக்க இப்பேரறிஞர்,

> ''இப்பாட்டிற்கு மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சி என்று துறைப்பெயரானன்றித் திணைப்பெயராற் பெயர் கூறினார் இத்திணைப்பெயர் பன்னிருபடலம் முதலிய நூல்களாற் கூறிய திணைப் பெயரன்று, தொல்காப்பியர்கூறிய திணைப் பெயர்ப் பொருளே இப்பாட்டிற்குப்பொருளாகக் கோடலின், வஞ்சி மேற்செல்லலானும், காஞ்சி எஞ்சாது எதிர்சென் றூன்றலானும், ''வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே'' எனப்பன்னிருபடலத்திற் கூறிய திணைப்பெயர் இப்பாட் டிற்குப் பொருளண்மை உணர்க. அவர் முதுமொழிக்காஞ்சி முதலியவற்றைப் பொதுவியல் என்று ஒரு படலமாக்கிக் கூறலின், அவை திணைப்பெயர்ஆகாமை உணர்க'.

என்று வரைதல் எண்ணத்தக்கது. 'காஞ்சி' என்பது திணைப் பெயராகவும், முதுமொழிக் காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி போன்ற குறியீடுகளில் துறைப்பெயராகவும் பயிலப்பெறுதல் உண்டு. துறைப்பெயராக வரும்பொழுது இவை, பொதுவியலுக்கு உரியனவாகத் தொகுக்கப்பெற்றிருத்தல் காணலாம். இவற்றுள், மதுரைக் காஞ்சி என்ற பெயரில் வரும் 'காஞ்சி' என்ற சொல் துறைப்பெயராக வரவில்லை; நிலையாமை உணர்த்தும் திணைப் பெயராக வந்தது என்று தெளிவுறுத்துகிறார்.

பொதுவாகப் பழைய இலக்கியங்களுக்கு உரைவிளக்கம் காணுமிடத்து நச்சினார்க்கினியர் தொல்காப்பிய இலக்கண விதி களையே மேல்வரிச் சட்டமாகக் கொள்ளும் இயல்பினர் என்பதும் பிற்காலத்துத்தொல்காப்பிய தோன்றிய இலக்கணங்களை நிரம்பா இலக்கணத்தன என்று ஒதுக்கிவிடும் இயல்பினர் என்பதும் கருதற்பாலன. ஆயினும், 'மதுரைக்காஞ்சி' என்ற பாட்டு, பாண்டியன் நெடுஞ்செழியன் வெற்றிப் பெருமிதத்தால் இறுதி

உறுதிப் பொருளை எண்ணாமல் இருந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில், பல்வேறு நிலையாமைகளை நினைவுறுத்தி நல்லாற்றுப்படுத்த மாங்குடி மருதனார் மேற்கொண்ட முயற்சியின் விளைவு என்பது தெளிவு. எனவேதான் நச்சினார்க்கினியர்.

''இனி, மதுரைக்காஞ்சி என்றதற்கு மதுரையிடத்து அரசர்க்குக்கூறிய காஞ்சி என விரிக்க. ''காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'' என்பதனால் காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று. அது''பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்தே'' என்பதாம். இதன் பொருள்: பாங்கு அரும் சிறப்பின்-தனக்குத்துணையில்லாத வீடுபேறு நிமித்தமாக, அறம், பொருள், இன்பம் என்னும் பொருட்பகுதியானும், அவற்று உட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையும் முதலியவற்றானும் நிலைபேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து அக் காஞ்சி என்றவாறு.

எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை சான்றோரையும் குறிப்பினது காஞ்சித்திணை என்பது பொருளாயிற்று.

இச்செய்யுட் புலவர் இப்பொருளே கோடலின், யாம் இப் பொருளே தர உரை கூறுகின்றாம்.''(ப. 338) என்று குறித்தனர்.

புறத்திணையியலில், காஞ்சித்திணை நுதலிய நூற்பாவின் விளக்கவுரையில், ''விடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றும் குறிப்பினது காஞ்சியாயிற்று'' என்று இவரே சுட்டுதல் இங்குக் கூறத்தக்கது. தொடர்ந்து, ''வீடுபேறு நிமித்தமாகச் சான்றோர் பலவேறு நிலையாமையை அறைந்த மதுரைக்காஞ்சி இதற்கு உதாரணமாம்,'' என்று வலியுறுத்திக் கூறுதல் மதுரைக்காஞ்சி உரையில் கூறிய கருத்துடன் ஒத்துள்ளது.

எனவே, எழுவகைப் புறத்திணைகளில் காஞ்சி என்பது நிலையாமை உணர்த்துவது என்ற தொல்காப்பியர் கருத்லத மதுரைக்காஞ்சி என்ற சங்க இலக்கியம் கொண்டு நச்சினார்க்கினியர் உறுதிப்படுத்தினார் எனலாம்.

பதிற்றுப்பத்தில்,

''காஞ்சி சான்ற வயவர்'' (65, 90)
''காஞ்சி சான்ற செரு'' (84)

எனவரும் தொடர்களில் 'காஞ்சி' என்ற சொல்லிற்கு எதிரூன்றுதல் என்று பொருள் கூறப்படவில்லை. நிலையாமைக் குறிப்பினை உள்ளத்தில் எப்போதும் கொண்டு நிலைபேறுடைய புகழ் நோக்கத்தினால் போர்புரியும் மறச்செயலை இத்தொடர்கள் சுட்டின.

புறநானூற்றில்,

''பன்மாண்,
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டென உரைப்பரால் உணர்ந்திசி னோரே'' (365)

எனவரும் பகுதியிலும் 'காஞ்சி' நிலையாமைப் பொருளையே சுட்டியது.

சங்க இலக்கியத்தில் 'காஞ்சி' என்றசொல் எதிரூன்றுதல் என்ற பொருளில் பயிலப்பெறவில்லை என்பது தெளிவு.

எனின், புறநானூற்றுக்குத் திணை, துறை வகுத்தவர்கள் பன்னிருபடலத்தார் நெறிநின்று எதிரூன்றுதலாகிய காஞ்சித் திணைக்குரியவை என்று சில பாடல்களுக்குத் துறை வகுத்துள்ளனர். அவற்றைக் காண்போம்.

புறநானூற்றில் காஞ்சி

1) காஞ்சி - வஞ்சினக்காஞ்சித்துறை

புறநானூற்றில் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (71) பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் (72) சோழன் நலங்கிள்ளி (73) ஆகியோர் பாடிய வஞ்சினப் பொருளமைதி கொண்ட பாடல்களைக் காஞ்சித்திணைக்கு உரியவை என்று குறித்துள்ளனர். பு. வெ. மாலையில்,

''வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப
வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று'' (69)

வஞ்சினக் காஞ்சித்துறை எதிரூன்றுதலாகிய காஞ்சித் திணைக்குரியதாகக் கூறப்பட்டது. எனின், நிலையாமைப் பொருளில் தொல்காப்பியர் சுட்டிய காஞ்சித்திணைக்கும் இத்துறை உரியது என்பது.

''இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்'' (நூ.77)

எனவரும் தொல் நூற்பாவினால் உணரலாம்.

2) காஞ்சித்திணை - பேய்க்காஞ்சி

அரிசில்கிழாரின் 281 ஆம் பாடல் பு.வெ. மாலை சுட்டும் காஞ்சித்திணைக்குரிய பேய்க்காஞ்சித்துறைக் குரியதாகக் காணப் படுகிறது. எனின், தொல். சுட்டிய காஞ்சித்திணைக்கும் இத்துறை உரியதுதான். இதனைத் தொடா அக்காஞ்சி என்று தொல்காப்பியர் சுட்டினார்.

''இன்னகை மனைவி பேஎய் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்'' (நூ. 77)

இத்துறைக்கு மேற்சுட்டிய புறப்பாடலையே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மேற்கோள் காட்டியுள்ளனர். ஆதலின், இத்துறை பன்னிருபடலத்தார் மட்டுமே சுட்டியது எனக்கொள் வதற்கில்லை.

3) காஞ்சித்திணை — மகட்பாற்காஞ்சி

புறநானூற்றில் 20 பாடல்கள் காஞ்சித்திணையினை சார்ந்த மகட்பாற் காஞ்சித்துறைக்குரியவை என்று குறிக்கப்பெற்றுள்ளன (336-356). இவற்றைப் பாடியவர்கள் பரணர், கபிலர், குன்றூர்கிழார்மகனார், அரிசில்கிழார், அடைநெடுங்கல்வியார், அண்டர்மகன்குறுவழுதி, மதுரைநாகனார், காவிரிபூம்பட்டினத் துக் காரிக்கண்ணனார், தாயங்கள்ளனார் முதலியோர் ஆவர்.

எனின், மகட்பாற் காஞ்சி என்ற துறை நிலையாமைப்பொருள் உணர்த்தும் காஞ்சித்திணைக்கும் உரியது என்பது,

''நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்'' (நூ. 77)

எனவரும் தொல். நூற்பாவினால் துணியலாம். இங்குச்சுட்டப் பெறும் வேந்தன் எதிரூன்றுதலாகிய காஞ்சிவேந்தன் அல்லன் என்பது தொடர் ஆற்றலினால் புலனாகும். 'ஒத்து மாறுபட்டுத்தன் மேல் வந்தவேந்தன்' வஞ்சிவேந்தன் எனக்கொள்ள வேண்டுமே தவிர காஞ்சி வேந்தன் எனக் கொள்ளுதல் இயலாது. இத்துறைக்கு

உரியதாக மேற்சுட்டிய புறப்பாடல்களில் ஒன்றாகிய 349 ஆம் பாடலை இளம்பூரணர் எடுத்துக் காட்டினார். நச்சினார்க்கினியர் இப்பாடலையும் மேலே சுட்டிய புறம் 345ஆம் பாடலையும் மேற்கோள் காட்டினார்.

எனவே, பன்னிருபடலத்தின் நெறிவழி மேற்சுட்டிய பாடல்களுக்குத் துறைவகுத்தல் தேவையில்லை என்பது புலனாகும்.

4) காஞ்சித்திணை—பெருங்காஞ்சி

புறநானூற்றில் 357, 359, 360, 365, 366 என்ற பாடல்கள் பெருங்காஞ்சி என்ற துறைக்குரியவை.

பு. வெ. மாலையில் காஞ்சிப்படலத்தில் இத்துறை பேசப்படுகிறது (66). எதிர்வரும் படையினைத் தடுக்கும் திறம்மிக்க மறவர் தத்தம் ஆற்றலைப் பெரும்படையிடத்துத் தோற்றுவித்தல் பெருங்காஞ்சி என்று இந்நூலின்கொளு குறித்தது.

தொல்காப்பியரும் நிலையாமை சுட்டிய காஞ்சித்திணையில் இத்துறையினை முதலாவதாக எண்ணியுள்ளார் :

''மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை'' (நூ. 77)

இதற்கு யாராலும் விலக்கமுடியாத கூற்றம் வரும் எனச்சான்றோர் அறிவுறுத்திய பெருங்காஞ்சி என்று விளக்கம் கண்டனர் இளம், ந. இத்துறைக்கு முன்னவர் 'இருங்கடல் உடுத்த' (363) என்ற பாடலையும், பின்னவர், 'பல்சான்றீரே' (195) என்ற பாடலையும் மேற்கோள் தந்தனர். இவை இரண்டும் பொதுவியல் திணைக்குரியவை. எனின் முன்னது பெருங்காஞ்சித்துறை என்றும் பின்னது பொருண்மொழிக் காஞ்சித்துறை என்றும் காணப்படுகின்றன.

ஆயின், பு.வெ.மா. சுட்டிய பெருங்காஞ்சியும் தொல். சுட்டிய பெருங்காஞ்சியும் வேறுவேறு என்றறிதல் வேண்டும்.

மேலே பார்த்த புறப்பாடல்கள் ஐந்தும் தொல்காப்பியர் சுட்டிய நிலையாமைப் பொருண்மை குறித்த காஞ்சிப்பாடல்களே என்பது அவற்றை ஒருமுறை பயில்வாரும் உணர்வர். இவற்றுள் 365ஆம் பாடலின் ஆசிரியர் மார்க்கண்டேயனார்,

''நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டென உரைப்பரால் உணர்ந்திசி னோரே'' (365)

என்று நிலையாமையினைக் குறித்து நிலமகள் அழுத காஞ்சித் திணையினைச் சுவைபடச் சொல்லியுள்ளார் இவரே 'மார்க்கண் டேயனார் காஞ்சி' என்ற நூலையும் பாடியுள்ளார். இளம், வேறொரு இடத்தில் இதனை மேற்கோள் காட்டியுள்ளார்.

ஆதலின்,எதிரூன்றுதலாகிய காஞ்சிப் பொருண்மைக்கு அவை உரியவல்ல என்பது தெளிவு.

எனின், தொல்காப்பியத் துறைகளாகக் கொள்ள முடியாத ஒரு சில காஞ்சித் துறைகளுக்குரியவை என்று சில பாடல்கள் குறிக்கப் பெற்றன. அவற்றைக் காண்போம்.

1) காஞ்சித்திணை—பூக்கோட் காஞ்சி

நொச்சிநியமங்கிழார் பாடிய புறம் 293ஆம் பாடலுக்குப் பூக்கோட் காஞ்சி என்னும் துறையமைத்துள்ளனர். பு.வெ.மாலை யில் காஞ்சிப்படலம் சுட்டும் பூக்கோள் நிலை (70) என்னும் துறையும் இதுவும் ஒன்றென்பர். இலக்கண விளக்கமும் இத் துறையினைப் பு. வெ. மாலை வழி நின்று சுட்டியது. நகர்ப்புறத்து படையுடன் வந்து தங்கிய பகையரசன் (—வஞ்சியர்) தோற்றோடு மாறு மறவர் காஞ்சிப்பூச் சூடிய திறத்தினைப் பூக்கோள்நிலை என்ற துறையாக வகுத்தனர்.

எனின், புறநானூற்றுப் பாடல் மறவர்கள் காஞ்சிப்பூச் சூடிய செய்தியைக் கூறவில்லை. குறும்பர்கள் எனப்படும் குறுநிலத் தலை வர்கள் நகர்ப்புறத்துப்போரிடும் பொருட்டுத் தங்கினர். அவர்களை விரட்டும் பொருட்டு வள்ளுவன் காஞ்சிப்பூச் சூடுமாறு அந்நகரத் தின் மறவர்க்குத் தண்ணுமைப்பறை முழக்கினான். போர்முரசு ஒலித்ததுமே மறவர் புறப்படவேண்டும். பூக்கோட் பறை ஒலிக்கும் வரை காலம் தாழ்த்திய வீரர்கள் 'நாணுடைந்த மாக்கள்' என்று எள்ளப்பட்டனர். ஆதலின், மறவர் மனைகளுக்குச் சென்று பூவிற்கும் பெண்டு, மற்றவர் மனைகளுக்குச் செல்லுவாள் போலும் என்ற பொருளமைதி கொண்டது அப்புறப்பாடல்.

பு. வெ. மா. காஞ்சி என்ற முதல் துறையிலும் (61) வேற்று மன்னன் வந்துவிட, அரசன் (மறவர்கள்) காஞ்சிமலரைச் சூடுதலைக் குறித்தது. பூகோள் நிலை (70) என்ற துறையும் புறத்திறுத்த வஞ்சி மன்னன் கெடக் காஞ்சிப் பூச்சூடிய செயலைக் குறித்தது. இரண்டிற்கும் பெரிய வேறுபாடு காணப்படவில்லை.

எனின், மேலே பார்த்த புறப்பாடலில் மறவர்கள் காஞ்சிப்பூ சூடியிருப்பின் பூக்கோள் நிலை என்ற துறைக்குரியது அப்பாடல் என்று கருதலாம். அப்பாடல், பூவிற்கும் பெண் மறவர்மனை தவிர மற்றவர் இல்லங்களுக்குப் பூ விற்கச் சென்ற செயலைக் கூறியது. ஆதலின், பு. வெ. மா. சுட்டும் பூக்கோள் நிலை என்ற துறை இப்பாடலுக்குப் பொருந்தாது.

எனவே, பூவிற்கும் பெண்ணிடம் காஞ்சிப் பூ வாங்கிச் சூடும் ஒரு மரபினை இப்பாடல் சுட்டியது எனக்கருதலாம். 'பூக்கோளைப் பற்றிய காஞ்சித்துறை' என்று அறிதல் வேண்டும். இத்தகைய துறை இப்பெயரில் பன்னிருபடலம் அல்லது பிறிதொரு புறப் பொருள் இலக்கண நூலில் வழங்கியிருத்தல் வேண்டும்.

ஆனால், திணை துறைகளின் குறிப்பினைக் கொண்டுதான் இந்தப் பாடல் காஞ்சித்திணைக்கு உரியது என்று எண்ணுகிறோம். எந்தப்போர் நிகழ்வும் பூச்சூடுதலுடன் தொடர்புறுதலின், மற்ற மறத்திணைகளுக்கும்கூட இப்பாடல் துறையினைப் பொருத்திப் பார்க்கலாம்.

2) காஞ்சித்திணை — மனையறம் துறவறம்

வான்மீகியார் பாடிய 358ஆம் பாடலின் துறை மனையறம் துறவறம் என்று காணப்படுகிறது. இப்படி ஒரு துறை தொன்னூலிலும் பின்னூலிலும் காணப்படவில்லை. இல்லறத்தைவிடத் துறவறமே மேம்பட்டது என்று இப்பாடல் அறிவுறுத்துகிறது. இப் பாடலைக் காஞ்சித்திணையில் தொகுத்ததைவிடப் பொதுவியலில் பொருத்துதல் பொருத்தம் மிக்கது எனத் தோன்றுகிறது.

ஆய்வின் முடிபு

இதுகாறும் ஆராய்ந்தவற்றால், புறநானூற்றுப் பாடல்களில் எதிரூன்றுதலாகிய காஞ்சித்திணைக்கு உரியவை என்று குறிக்கப் பெற்ற வஞ்சினக்காஞ்சி, பேய்க்காஞ்சி (தொடாஅக் காஞ்சி) மகட் பாற்காஞ்சி, பெருங்காஞ்சி என்ற துறைகள் நான்கும் தொல் காப்பியர் சுட்டிய நிலையாமை பற்றிய காஞ்சித்திணைக்கீழ் ஓதப் பட்டவை என்பது புலனாகும்.

பூக்கோட்காஞ்சி என்ற துறை காஞ்சித்திணைக்கு மட்டுமே உரியதாகத் தோன்றவில்லை (293). இப்பாடலில் 'காஞ்சி' என்ற

சொல்லாட்சியும் காணப்படவில்லை. இதற்கு முன்னும் பின்னும் உள்ள பாடல்கள் முறையே வஞ்சித் திணைக்கும் தும்பைத் திணைக்கும் உரியவை.

மனையறம் துறவறம் என்ற துறைக்குரிய பாடலும் (358) நிலையாமைக் காஞ்சிக்கு உரியதே யன்றி எதிரூன்றுதலாகிய காஞ்சிக்கு உரியதன்று.

ஆதலின், புறநானூற்றுப் பாடல்களில் எதிரூன்றுதல் காஞ்சி என்ற திணையினைப்பன்னிருபடல மரபினை ஒட்டித் திணைதுறை வகுத்தோர் பொருத்த முற்பட்டிருப்பினும் அம்முயற்சி பொருத்தம் உடையதாகத் தெரியவில்லை.

இனி, பொதுவியல் என்ற திணைக்குரிய பொருண்மொழிக் காஞ்சியும் (185—195), முதுமொழிக் காஞ்சியும் (18, 27—9, 74) பெருங்காஞ்சியும் (194, 362—394) நிலையாமையினை உணர்த்தி உறுதி பயப்பனவற்றை அறிவுறுத்தின. இவையும் தொல். சுட்டிய காஞ்சித் திணைக்கு உரிய முதுகாஞ்சி, பெருங்காஞ்சி முதலிய துறைகளாக அமைவன எனலாம்.

எனவே, வஞ்சித்திணைக்கு மறுதலையாகப் பன்னிருபடலம் பகரும் காஞ்சித்திணை புறநானூற்றுப் பாடல்களில் தெளிவாக வேரூன்றவில்லை என்பது புலனாகும். காஞ்சித்திணைக்குரிய ஒரு சில பாடல் துறைகள் தொல்காப்பியரால் நிலையாமைக் காஞ்சிக்கு உரியனவாக ஓதியிருத்தலின், அவற்றைத் தொல் காப்பிய நெறிக்கேற்பவே கொள்ளலாம்.

மதுரைக்காஞ்சி, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இலக்கியங்களில் 'காஞ்சி' நிலையாமைப் பொருண்மை உணர்த்துவ தாகவே காணப்படுகிறது. அங்ஙனமாயின் 'எதிரூன்றுதல்' என்ற பொருண்மை எப்போது தோன்றியது என ஆராய்தல்வேண்டும்.

4. சிலப்பதிகாரத்தில் காஞ்சித்திணை

1) காஞ்சித்திணை

இளங்கோவடிகள் காலத்தில் பன்னிருபடல மரபுகள் இலக்கிய வழக்கில் இடம்பெற்றன. நிலையாமைக்காஞ்சிக்கு வேறுபட்டதாக

எதிருன்றுதல் காஞ்சி என்ற போரொழுக்கம் தனித்திணையாக எண்ணப்பட்டது.

செங்குட்டுவனின் வடநாட்டுப்போர் மண்ணசை காரண மாகவும் மைந்துநசை காரணமாகவும் எழுந்தது என்று கருதுதற்கு உரியது. அவன் வஞ்சியும் தும்பையும் சூடினான் என்ற குறிப்புக்கள் இங்ஙனம் எண்ணுதற்கு ஏதுவாயின (25. 149, 26. 50—6, 219—220) தான் சேரன் என்பதற்குரிய போந்தையும் சூடினான் (26, 219—20). வடவாரியரை வென்று வலிமையை நிலைநாட்டிய அவர்தலையில் கண்ணகி சிலைக்குரிய கல்லினைக் கொணர்ந்தான். வஞ்சி சூடியதற்கு ஏற்ப வென்ற வடபுலத்தைச் சேரநாட்டுடன் சேர்த்து ஆண்ட செய்தி கூறப்படவில்லை.

தன் படையினைத் தடுத்தூன்றும் நோக்கத்தில் அணிவகுத்து வந்த வடபுல வேந்தரின் படையினை,

''பல்வேன் மன்னர்,
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப''
(26:—190-1)

என்று இளங்கோ சுட்டியுள்ளார். செங்குட்டுவனின் படை வஞ்சித்தானை என்பதும் எதிருன்றும் வடவர்படை காஞ்சித்தானை என்பதும் தெளிவு. இங்குத் திட்டவட்டமாகப் பன்னிருபடலப் புறத்திணை மரபு காணப்படுகிறது.

2) எதிருன்றல்காஞ்சி

மாபெரும் பத்தினிக்குக்கடவுட் சிலை வடிக்க வடவேந்தன் கல் தரவில்லை எனின் இன்னவை நிகழும் என்று செங்குட்டுவன் கூறும் வஞ்சின உரைப்பகுதியில் மூவகைக் காஞ்சித் துறைகள் இடம்பெறுகின்றன (25;129—136). அவற்றுள் முதலிரண்டும் தொல்காப்பியர் சுட்டிய முதுகாஞ்சியும், மகட்பாற் காஞ்சியும் ஆகும். அப்பகுதிகள் வருமாறு :

1) கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும் (25:132). இத்தொடர் தொல்காப்பியத்தில்.

''கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்''
(நூ. 77:2)

எவவரும் தொடரைப் பின்பற்றிச் சொல்லியதாகும். இதற்கு முது காஞ்சி என்றே உரையாசிரியர் பொருள் கூறினர்.

முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதி முடிக் களித்த மகட்பாற் காஞ்சியும் (25:131-4)

இப்பகுதி தொல்காப்பியத்தில்,

''நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்'' (77:14-15)

என்ற பகுதியைத் தழுவிக் கூறியது.

இவையிரண்டும் நிலையாமைப் பொருண்மை பற்றிய காஞ்சித் திணைக்கு உரியவை. எனின், இவையும் எதிருன்றலாகிய காஞ்சிக்கு உரியனவாகப் பு. வெ. மாலையில் புகலப்பட்டன.

எடுத்துச் செலவுக்கு மாறாகத் தடுத்தூன்றலாகிய காஞ்சியை இளங்கோவடிகள்,

''தென்றிசை என்றன் வஞ்சியொடு வடதிசை
நின்றெதிர் ஊன்றிய நீள்பெருங் காஞ்சியும்''

(25:135-6)

என்று தெளிவாகப் பொறித்துள்ளார். இது தொல்காப்பியத்தில் சொல்லப்படாது. முன்பு பார்த்த 'காஞ்சித் தானையொடு' என்பதுடன் இதனையும் இணைத்துப் பார்த்தல் வேண்டும்.

நுணுகி நோக்கின், இளங்கோவடிகள் தொல்காப்பியம் சுட்டும் பழைய புறத்திணை மரபுகளுடன் பன்னிருபடலம் சுட்டும் புதிய மரபுகளையும் போதிய அளவு அறிந்த போர் நிகழ்ச்சிகளை விளக்க அவ்வக் குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ளார் என்பது தெளியப் படும். அல்லாக்கால், இளங்கோவடிகள் சுட்டிய புதிய மரபுகளைத் தொகுத்தல் பன்னிருபடலத்தார் புதிய புறப்பொருள் இலக்கணம் செய்தனர் என்று துணியவேண்டும். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறுதல் மரபாகலின் இவ்வாறு துணிதல் சாலும்.

5. திவாகரச் சான்று

சேந்தன் திவாதரம் என்னும் நிகண்டு நூல் கி.பி. 8,9 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது என்று இலக்கிய வரலாற்றாசிரியர்

முடிபு செய்துள்ளனர். இந்நூலில் இரண்டிடங்களில் 'காஞ்சி' என்ற சொல்லிற்கு எதிரூன்றிப் பொருதல் என்ற பொருள் சொல்லப்பட்டது. இதன்கண்,

1) ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி என்ற பகுதியில்,

> ''எதிரூன் றுதலும் நிலையின் மையுமாம்
> மணிமே கலையும் ஒருமரப் பெயரும்
> கருதும் காஞ்சி என்னும் கட்டுரை'' (நூ. 2442)

எனவரும் நூற்பா காஞ்சி என்ற சொல்லிற்கு நான்குவகைப் பொருளைக் கூறியது. அவற்றுள் முதன்முதல் 'எதிரூன்றுதல்' என்பதே சுட்டப்பெற்றது. எனவே, இந்த நிகண்டு தோன்றிய காலத்தில் வஞ்சித்திணைக்கு ஒத்ததாகக் காஞ்சித்திணை மறத் துறை பற்றியதாகக் கருதப்பெறும் எண்ணம் வலுப் பெற்றமை அறியப்படும். இதே நிகண்டில்,

2) பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி என்ற பகுதியில்,

> ''வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
> வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கார்
> எதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி
> அது வளைத்தல் ஆகுமுழி ஞை'' (2688)

எனவரும் வெண்பா, ''வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே'' என்ற பன்னிருபடலக் கருத்தினை வழிமொழிதல் காணலாம்.

இந்நிகண்டும் பு.வெ. மாலையும் பெரும்பாலும் ஒருகாலத்தில் தோன்றியவை எனலாம்.

எனவே, சங்க இலக்கியங்களில் எதிரூன்றுதல் காஞ்சி என்ற கருத்து தோன்றவில்லை என்பதும் சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில்தான் இக்கருத்து தெளிவாக இலக்கியத்தில் இடம் பெற்றது என்பதும் புலனாகும். சிலப்பதிகாரத்தை ஒட்டிப் பன்னிரு படலம் இதனை ஒரு தனித்திணையாகக் கொண்டு இலக்கணம் செய்தது என்றும், இதுவே திவாகரம், பு. வெ. மாலை ஆகிய வற்றில் நிலைபெற்றது என்றும் தெளியலாம்.

இனி, தொல்காப்பியரின் திட்டப்படி காஞ்சித்திணை பெருந் திணைக்குப் புறம் அதற்கு உரிய காரணங்களைக் காண்போம்.

6. பெருந்திணைக்குப்புறம் காஞ்சி

ஒவ்வோர் அகத்திணைக்கும் ஒத்ததொரு புறத்திணையினைக் கூறும் போக்கு ஒரு சிறப்பியல்பாகத் தொல்காப்பியரிடம் காணப் படுகிறது. அவ்வகையில்,

''காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'' (நூ. 18)

என்று குறித்தனர். அதற்கு இது புறன் ஆவதற்குரிய காரணங் களை உரையாசிரியர்கள் தம் நுண்ணிய மதித் திறத்தினால் சுட்டி யுள்ளனர். முதலில் இளம்பூரணர் கூறும் காரணங்களை உற்று நோக்குவோம்.

''ஏறிய மடற்றிறம்,இளமைதீர்திறம்,தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் என்று துன்பம் தருவனவாக எண்ணப்பட்ட பெருந்திணை, குறிஞ்சி முதலாகிய அன்பின் ஐந்திணைக்கும் புறம் ஆயிற்று. அதுபோல, நிலையாமை யாகிய துன்பியல் பற்றி வரும் காஞ்சித்திணையும், வெட்சி முதலாகிய ஐந்து திணைகட்கும் புறம் ஆயிற்று.''

இவர் உரைப்பகுதியால் அகத்திணையுள் ஒன்றாகப் பெருந்திணை எண்ணப்பெறினும், அன்பின் ஐந்திணையை நோக்கி, இஃது அகப்புறமாக வைக்கப்பெறும் என்பது புலனாகும். எனவே, பெருந் திணையை அகப்புறமாகப் பாகுபாடு செய்த பன்னிருபடலத்தாரின் கருத்தினை இளம்பூரணர் தெரிந்தோ தெரியாமலோ ஒத்துக் கொண்டார் என்பது தெளிவு. அடுத்து, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்பன நேரடியாகப் போர்ச் செயல்களைப் பற்றிய புறத் திணைகள். ஆனால், காஞ்சித் திணையில் போர் நிகழ்ச்சிகள் இல்லை; போர் நிகழ்ச்சிகளின் விளைவாக ஏற்படும் பல்வேறு நிலையாமைகள் பேசப்படுகின்றன. எனவே, வெட்சி முதலிய மறத்திணைகளுக்குக் காஞ்சித்திணை புறம் ஆயிற்று.

இனி, நச்சினார்க்கினியர் கூறும் ஏதுக்களை எண்ணிப் பார்ப்போம்.

1) மறையோர் சுட்டும் மன்றல் எட்டனுள் நான்குமணம் (பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம்) பெறுவது பெருந்திணை. அறம், பொருள், இன்பம், அறம் நிலையின்மை, பொருள் நிலையின்மை, இன்பம் நிலையின்மை என்ற ஆறனுள்ளும் பிற்கூறப்பெற்ற

நிலையின்மை மூன்றற்கும் உரியது காஞ்சித்திணை; எல்லாத் திணைகட்டும் ஒத்த மரபிற்றாய் வருவது.

2) பெருந்திணைக்கு உரிய நான்குவகை மணங்களையும் சான்றோர் அன்பின் ஐந்திணைமணம்போல் கருத மாட்டார்கள், இகழவே செய்வர். அதுபோல, அறம் முதலியவற்றது நிலையின்மையினை உணர்ந்து சான்றோர் அவற்றை இகழ்வர்.

3) பெருந்திணைக்குரிய ஏறிய மடற்றிறம் முதலிய நான்கும் தீய காமம் ஆயின. உலகியல் நோக்கி, காஞ்சித்திணைக் குரிய நிலையாமையும் நற்பொருள் அன்று.

4) அன்பின் ஐந்நிணைக்கு மட்டுமே உரிப்பொருள் உண்டு. பெருந்திணைக்கென்று தனி உரிப்பொருள் இல்லை, நிலம் இல்லை. அதுபோல, அறம், பொருள், இன்பம் பற்றியன்றிக் காஞ்சித்திணை தனக்கெனத் தனித்ததொரு நிலையாமை என்பதொரு பொருள் பெறவில்லை.

இந்நான்கு ஏதுக்களாலும் பெருந்திணைக்குக் காஞ்சி புறத்திணை யாயிற்று என்றார். இவற்றுள் மூன்றாவது காரணம் இளம்பூரணர் கூறியதை ஒட்டி அமைந்தது.

இனி, நாவலர் ச. சோ. பாரதியார் கூறும் காரணத்தைக் காண்போம் :

1) பொறியவிக்கும் உரனின்றி இன்பம் விழைந்து மேவன செய்வார் காமவகை பெருந்திணையாவதுபோல, முயற்சி மேற்கொள்ளும் உரனின்றி நிலையாமை சொல்லி நெஞ்சழிய மனமடிவதே காஞ்சி.

2) இவ்விரண்டுக்கும் இடம், பொழுது இரண்டும் வரையறை இல்லை.

பாரதியார் சுட்டும் காரணங்கள் இரண்டும் புதியவை. மெய்யுணர்தற் பொருட்டு நிலையாமை என்னும் அதிகாரம் வகுத்த வள்ளுவர், உலகியல் ஒழுங்குற நடைபெறுதற்பொருட்டு ஊக்கம் உடைமை, ஆள்வினை உடைமை, இடுக்கணழியாமை முதலிய அதிகாரங்களை வகுத்தனர். அவ்வாறே, நிலையாமையினைக் காஞ்சித் திணையாக வகுத்த தொல்காப்பியர்,

''நாளது சின்மையும் இளமைய தருமையும்
தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்''

(அகத். 44)

என்று உலகியல் மேர்பாட்டிற்குரிய கருத்துக்களையும் குறித்துள்ளார். ஒன்றும் நிலைபெறாது என்ற எண்ணத்தில் முயற்சியின்றிச் சோம்பிக்கிடத்தலைத் தொல்காப்பியர் உடன்பட வில்லை என்பது புலனாகும். இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, பாரதியார் கூறும் முதற்காரணம் பொருத்த மிக்கதாகத் தெரிகிறது. இரண்டாவது காரணமும் இயைபுடையதே. இருவகைத் திணைக்கும் இடம், காலம் என்ற வேறுபாடில்லை எவ்விடத்தும் எக்காலத்தும் நடைபெறும்.

இதுகாறும் பெருந்திணைக்கும் காஞ்சித்திணைக்கும் உரிய பொதுமைப் பண்புகளினால் அதற்கு இது புறனாகிய பாங்கினைக் கண்டோம். இனி நிலையாமை குறித்து உரையாசிரியர்கள் கூறிய வகைமையினை நோக்குவோம் :

7. பல்வகை நிலையாமை

எது தோன்றுமோ அது மறையும். எது பிறக்குமோ அஃது இறக்கும். இஃது உலகின் நியதி. 'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு' என்றார் சுந்தரர். சங்கப்புலவர்களுக்கும் இத்தகைய உலகியல் உண்மை நன்கு தெரிந்திருந்தது. 'நில்லா உலகத்து நிலைமை தூக்கின்' என்று பாடினர் (   ). தொல்காப்பியர்,

''பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே''

என்று காஞ்சிக்குரிய பொருண்மையினைக் குறித்தனர். இங்குப் ''பல்லாற்றானும்'' என்பதற்கு உரையாசிரியர்கள் பல வகைகளில் பொருள் கண்டனர். இளம்பூரணர், இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என்று நிலையாமை மூவகைப்படும் என்றார்.

நச்சினார்க்கினியர்,

''அறம் பொருள் இன்பம் ஆகிய பொருட்பகுதியானும் அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும்

இளமையும் முதலியவற்றானும் நிலைபேறில்லாத உலகியற் கையைப் பொருந்திய நன்னெறியை உடையது காஞ்சி'' என்றும் விளக்கம் செய்தனர்.

நூற்பாவில் 'பாங்கரும் சிறப்பின்' எனவரும் தொடர்க்கு உரையாசிரியர்கள் இருவரும் வேறுவேறு உரை செய்தனர். இளம்பூரணர்,

''பாங்கருமையாவது, ஒருவற்கு ஒருதுணை ஆகாமை''.

என்று வரைந்தனர். தான்செய்த செயல்கள் துணையாகுமே தவிர நிலையாமை ஒருவற்கும் துணையாகாது என்பது கருத்து.

நச்சினார்க்கினியர், 'சிறப்பு' என்ற சொல்லிற்கு வீடுபேறு என்று பொருள் கண்டார். இவ்வீடுபேற்றிற்கு இணையாக ஏதும் இன்மையின், 'பாங்கருஞ்சிறப்பின்' என்பதற்கு, 'தனக்குத் துணையில்லாத வீட்டின்பம் ஏதுவாக' என்று பொருள் கூறினார். இதனைச் 'சிறந்தது பயிற்றல்' (தொல். கற்பு. 51), 'சிறப்பென்னும் செம்பொருள்' (குறள்) முதலியவற்றுடன் இணைத்துப் பார்த்தல் வேண்டும். பாரதியாரும், 'மறுமை இன்பத்துக்கு' என்று எழுதினார்.

பல்லாற்றானும் நில்லா உலகம் என்பது இளமை, செல்வம், யாக்கை, உயிர் என்ற பல வழிகளில் பார்த்தாலும் நிலைபேறின் மையினை உடையது உலகம் என்ற கருத்தினை வலியுறுத்துகிறது நிலையாமையினைக் கணந்தோறும் கெடுவன, கற்பம்தோறும் கெடுவன எனப்பாகுபடுத்துவர் நச்சி.

எனின், உரையாசிரியர்கள் கூறும் இக்கருத்துக்கள், காஞ்சித் திணைக்குரிய துறைகளைத் தொகுத்துக் கூறும் நூற்பாவில் விரவிக் காணப்படுகின்றன என்பதை அறிதல் வேண்டும்.

8. வாகைக்குப்பின் காஞ்சி

வாகைக்குப்பின்னர் காஞ்சி கூறப்பட்டது வீறுபெற்ற மனிதனை நெறிப்படுத்தவே எனலாம். வெற்றிச்செறுக்கில் மறுமை கருதாது அயர்தல் கூடாது என்ற கருத்தில் மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சி பாடி பாண்டியன் நெடுஞ்செழியனை அறிவுறுத் தியதிறம் முன்னர்க்கண்டோம். வடவாரியரை வென்ற பெருமிதத் தில் 'அறம் மறவற்க' என்ற நோக்குடன் மாடலமறையோன் செங்குட்டுவனுக்கு உறுதி பயக்கும் உரைகள் பகர்தலைச் சிலப்பதி காரத்தில் காண்கிறோம். கலிங்கப்போரில் பல்லாயிரவர் பொருது

குருதிக்கடலில் மிதப்பதைக்கண்ட மாமன்னன் அசோகன் மறம் கடிந்து, புத்தர் போதனையில் சரண்புகுந்து அறம் பரப்ப முயன்ற வரலாற்றினை இங்கு எண்ணிப்பார்த்தல் தகும்.

எனவே, வேந்தர்க்கும் மாந்தர்கும் இறுதிக் குறிக்கோளினை எட்டுதற்குத் தூண்டும் வகையில் 'நிலையாமை' உணர்த்துதல் தொல்காப்பியரின் நோக்கம் என்பது தெளிவு.

9. பொதுச்சிந்தனை

'நிலையாமை' என்ற கோட்பாடு இலக்கியங்களிலும், அறநூல்களிலும் சமய நூல்களிலும் தனித்தனி கோணங்களிலிருந்து விரிவாகப் பேசப்படுகின்றன. இந்தியச் சிந்தனை நூல்கள் பல வற்றிலும் பேசப்படும் இக்கோட்பாட்டினை ஒரு குறிப்பிட்ட மெய்யியலார்க்கு உடைமைப் படுத்துதல் ஒவ்வாது. இத்தகைய பொதுச் சிந்தனைகளை அனைத்திந்தியச் சிந்தனை (Pan-Indian thought) என்று கூறுவர். எனின், நிலையாமைக்குக் 'காஞ்சி' என்று ஒரு குறியீடு கொடுத்த பெருமையும் சிறப்பும் தொல்காப்பி யர்க்கே உரியது என்பதைச் சொல்லுதல் வேண்டும்.

இனி, காஞ்சித்திணைக்கு உரியனவாகத் தொல்காப்பியர் கூறும் இருபது துறைகளைப் பற்றிய பொருண்மையினை ஒருவாறு நோக்குவோம். இவற்றுள் பெருங்காஞ்சி முதல்தலையொடுமுடிந்த நிலை முடியவுள்ள பத்துத் துறைகள் ஒரு தொகுதியாகும். பூசல் மயக்கம் முதல் காடு வாழ்த்து வரை உள்ளன பத்தும் மற்றொரு தொகுதியாகக் கூறப்பெற்றன. இவற்றுள் முதல் பத்தும் விழுப்ப வகை என்றும், அடுத்த பத்தும் விழுமவகை என்றும் ச. சோ. பாரதியார் கூறினார்.

10. துறைவிளக்கம்

(அ) முதல் பத்துத்துறைகள்

1) பெருங்காஞ்சி

'மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை' என்பது தொல்காப்பி யத்தொடர். யாவராலும் தடுத்து விலக்க முடியாத இயமனைக் கூற்றம் என்றார். உடம்புவேறு உயிர்வேறாகக் கூறுபோடுதலின் கூற்றம் காரணப்பெயர். யாவர்க்கும் முடிபுக்காலம் என்பது தவிர்க்க முடியாது வந்தே தீரும் என்று சான்றோர் அறிவுறித்திக் கூறும் பொருண்மை பெருங்காஞ்சி என்ற துறைக்கு உரியது.

பெருமை என்று தொல்காப்பியர் சுட்டியதைப் பின்னூலார் பெருங் காஞ்சி என்றனர். பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,

> ''நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
> பெருமை யுடைத்திங் வுலகு''

என்ற குறளில் வழங்கப்பெறும் 'பெருமை' என்ற சொல் 'பெருங்காஞ்சி' என்ற புறத்துறையினையே சுட்டியது என்று அறிந்து கூறுதல் தெரிந்து மகிழற்பாலது.

நச்சினார்க்கினியர்,

> ''கூற்றாவது, வாழ்நாள் இடையறாது செல்லும் காலத்தினைப்
> பொருள்வகையாற் கூறுபடுத்தும் கடவுள்''

என்று கூறிக் கூற்று, காலம் என்பன ஒரு பொருளைக் குறிக்கும் என்ற குறிப்பில் எழுதியிருத்தல் காணலாம்.

2) முதுகாஞ்சி

'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை' என்று தொல்காப்பியர் சுட்டினர். கழிதல் அறியாமையின் நீங்குதல். ஆதலின் கழிந்தோர் என்ற சொல் அறிவினால் மேன்மேல் உயர்ந் தோரைச் சுட்டும். ஒழிந்தோர் என்பது அல்லாதாரைக் குறித்தது. எனவே, அறிவினால் மிக்கவர் அல்லாதவர்க்கு எடுத்துக்காட்டுடன் அறிவுறுத்திக் கூறிய முதுகாஞ்சி என்னும் துறை இரண்டாவதாகச் சுட்டப்பெற்றது.

அறிவுரை சொல்லுவதற்கு அனுபவம் வேண்டும், வயது மூப்பு வேண்டும். ஆதலின், கழிந்தோர்-இளமைத் தன்மை கழிந்து அறிவு மிக்கோர் என்றும்; ஒழிந்தோர்-இளமை கழியாத அறிவின் மாக்கள் என்றும் பொருள்செய்தனர் நச்சி. முன்னவர் பின்னவர்க்கு நிலை யாமை சுட்டி அறிவுரை வழங்குதல் முதுகாஞ்சியாகும்.

3. மறக்காஞ்சி

வீரப்பண்பு மிகுதி காரணமாக விழுப்புண் தீர்ந்து வாழும் வாழ்க்கை நிலையின்மையினால், அதனை விரும்பாது புண்ணைக் கிழித்துக்கொண்டு இறப்பது மறக்காஞ்சி என்பர் நச்சி. இதனுடன் ஒருங்குவைத்து எண்ணத்தக்க மற்றொரு நிகழ்ச்சியும் சுட்டுதற்கு உரியது. தலையைக்கொய்து கொற்றவைக்குக் கொடுத்து இறத்

தலைப் பரணி நூல்களிலும் கோயிற் சிற்பங்களிலும் காணலாம், அதனையும் ஒராற்றால் இத்துறைக் கீழ்க்கொண்டு வரலாம்.

4) பேஎய்ப்பக்கம்

போர்க்களத்து விழுப்புண் பட்டு விழுந்து கிடக்கும் வீரனை ஓம்பும் சுற்றம் இன்மையின் புண்ணோனைப் பேய் ஓம்பிய பேய்ப் பக்கம் என்று இத்துறையினை விளக்குவர் இளம்.

காத்தற்குரிய 'ஏமம்' என்ற சொல்லிற்கு யாமம் என்று பொருள் கண்டார் நச்சி. கங்குலில் காத்தற்குரிய சுற்றம் இன்மை யின், அருகு வந்து புண்பட்டோனைப் பேய் காத்தலை இத்துறை குறித்தது என்றார். எனின், ஏமம்-காப்புமாம் என்றும் சுட்டினார். ஒம்புதலாவது அவன் உயிர் போகும் வரையும் ஓரியும் நரியும் வீழ்ந்து கிடந்தவனின் தசையைக் குதறிவிடாமல் பாதுகாத்தலைக் குறிக்கும் என்பது நச்சி தரும் விளக்கம்.

5) மன்னைக்காஞ்சி

'மன்' என்ற இடைச் சொல்லிற்கு இரக்கப் பொருண்மை உண்டு. இன்ன இன்ன நல்லியல்புகள் நற்செயல்கள் கொண்டவன் இறந்துவிட்டானே என்று மற்றவர் வருந்திக் கூறுதல் மன்னைக் காஞ்சி ஆகும். பெரும்பாலும் 'மன்' என்ற இடைச்சொல் இத்தகைய இரக்கம் உணர்த்தும் பாடல்களில் இடம்பெறும் என்றார் நச்சி. அதியமான் நெடுமான் அஞ்சி இறந்தபொழுது ஔவையார் பாடிய,

''சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே''

என்ற பாடலை எடுத்துக் காட்டினார். 'மன்'பெறாதும் வருதற்கு,

''பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே'' (புறம் 221)

என்ற பாடல் எடுத்துக்காட்டாயிற்று.

புலவர்கள் பாடுவதற்குரியது இத்துறை என்ற கருத்தில் இவர் இந்த மேற்கோள்களைக் காட்டினார் எனலாம்.

மன்னைக்காஞ்சி ஆண்பாற் கையறுநிலை எனவும் வழங்கப் பெறும். 'இன்னன்' என ஆண்பாலுக்குச் சொல்லப்பெறினும் பெண்பால் முதலியவற்றுக்கும் ஏற்புழி கொள்ளலாம்.

6) வஞ்சினக்காஞ்சி

இன்னவாறு செய்வது தவிர்வேனாயின் இன்னநிலையினை எய்தக் கடவேன் என்று கூறப்பெறும் சூளுரை வஞ்சினக்காஞ்சி ஆகும்.

'துன்னரும் சிறப்பு' என்ற நூற்பாத் தொடருக்கு, பெறுதற்கரிய வீடுபேறு அல்லது உலகியலிற் பெருஞ் சிறப்பு என்று பொருள் கூறினர் நச்சி. புறநானூற்றில் 71, 72, 73 ஆகிய பாடல்கள் வஞ்சினக் காஞ்சிக்கு உரியவை என்பதை முன்னர்க் கண்டோம்.

7) தொடாஅக் காஞ்சி

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு வீழ்ந்து கிடந்த கணவனைப் பேய் நெருங்கித் தொட்டுவிடாதபடி இன்னகை மனைவி காத்த செயல் தொடஅக் காஞ்சிக்கு உரியது. அவனைப்பேய் தீண்டுதலை நீக்கித்தானும் தீண்டாமை இதன்பாற்படும் என்றார் நச்சி. ''நகையாடும் காதல் உடையாள், அவனைக் காத்து விடிவளவும் சுற்றுதலன்றி முயங்குதற்கு உள்ளம் பிறவாதபடி அவன் நிலையாமையை எய்தினான்'' என்று பின்னரும் விளக்கினர்.

இதுவும் ஆண்பாற்காஞ்சி என்றார் நச்சி.

8) ஆஞ்சிக்காஞ்சி

போர்வயிற் பிரிந்து சென்ற கணவனது உயிரைப் போக்கிய வேலைக் கொண்டு அவன் மனைவி தனது உயிரைப் போக்கிடுதல் ஆஞ்சிக்காஞ்சி ஆகும்.

> ''உயிர் நீத்த கணவன் தன்னுறவை நீக்கின வேல்வடுவாலே
> மனைவி அஞ்சின ஆஞ்சிக்காஞ்சி''

என்பர் நச்சி. ''எஞ்ஞான்றும் இன்பம் செய்த கணவன் உடம்பு அறிகுறி தெரியாமல் புண்பட்டு அச்சு (அச்சம்) நிகழ்தலின், யாக்கை நிலையாமை கூறியதாம்... அஞ்சின, ஆஞ்சியென நின்றது'' என்றும் வரைந்தனர். எனின், மேலே சுட்டப்பெற்ற இளம்பூரணர் உரைக்கருத்தையும் இவர் ஏற்றுக் கொண்டுள்ளார். ''நகை அச்சாக'' என்ற பரிபாடலிலும் இச்சொல் இப்பொருள் தந்தது.

9) மகட்பாற்காஞ்சி

மாற்று வேந்தனின் மகளை மணம்செய்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் படை எடுத்து வந்த வேந்தனுக்கு மகட்

கொடை மறுத்தமை பற்றி வருவது மகட்பாற் காஞ்சி என்னும் துறையாகும். இத்துறை எங்ஙனம் நிலையாமை குறித்தது என்பதற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் வருமாறு :

''அம்முது குடிகள் தாம் பொருதுபடக் கருதுதலின் உயிரது நிலையாமை உணர்ந்த காஞ்சி ஆயிற்று''

எனவே, உயிரைத் துறந்தாலும் முதுகுடியினர் பகைவேந்தர்க்கு மகட்கொடை நேரார் என்பது கருத்து.

10) தலையொடு முடிதல்

போர்க்களத்து வீரமரணம் அடைந்த கணவனின் தலையொடு தன் முலைகளையும் முகத்தையும் பொருத்தி மனைவி உயிர் துறத்தல் இத்துறைக்குரிய பொருள் ஆகும். இத்துறையில் இருவரது நிலையாமையும் சுட்டப் பெற்றது.

''ஈரைந்தாகும் என்ப'' என்ற நூற்பா நிலைநோக்கி

இங்குச் சுட்டப்பெற்ற பத்துத் துறைக்கும் ஆண்பாற்குரியவை என்பர் நச்சி. எனின், பெண்பாற்கும் உரியன உள. இதனையும் அவர் உணர்த்துகிறார் :

''இவை ஒருவகையாற் பெண்பாற் கண்ணும் நிலையின்மை யுடைய வாயினும் இரண்டிடத்தும் ஓதிச்சூத்திரம் பல்காமல், சிறப்புடைய ஆண்மகற்கே ஓதிப் பெண்பாற் பகுதியும் தழீஇயினார் என்றுணர்க''.

இனிவரும் பத்துத்துறைகளும் பெண்பாற்கே உரியன என்றார். எனினும், ஆண்பாற்கும் கொள்ளத்தகுவன உள்ளன.

(ஆ) இரண்டாம்பத்து

1) பூசல்மயக்கம்

பெரும்புகழுடன் பேணி மாய்ந்த வீரனை (மகன்) சுற்றத்தார் சூழ்ந்துகொண்டு அவலித்து அழுத மயக்கநிலை பூசல் மயக்கம் எனப்படும். 'மாய்ந்தமகனை' என்புழி மகன் முறைப்பெயரன்று. ஆண்மகன், வீரன் என்ற பொருளில் வந்தது.

பெண்கிளைச் சுற்றம் அழுதலைக் குறிக்கும் என்றார் நச்சி. ஆண்கள் புலம்பார் என்பது அவர் கருத்து. 'மாய்ந்த பூசல்

மயக்கம்' எனப்பாடம் கொள்ளின், சுற்றம் ஒருங்குமாய்ந்தவழிப் பிறர் அழுத பூசல் மயக்கம் என்பது பொருள் என்றார்.

2) தாங்கரும்பையுள்

சிறைப்பட்டவர் தாம் உற்ற பொறுத்தற்கரிய துன்பத்தினைக் கூறும் கூற்று என்பர் இளம். தாம் உற்ற துன்பத்திற்குப் பிறர் துணை ஆகார்; தாமே தாங்குதல் வேண்டும் என்பது குறிப்பு. கணைக்காலிரும்பொறை அங்ஙனம் துயரப்பட்டமை புறப்பாடலி னால் அறியலாம் (74).

அச்சுற்றத்தார் யாரும் இன்றி மனைவியர் தாமே தத்தம் கொழுநரைத் தழுவி அழுதல், கண்டோர் பொறுத்தற்கரிய துன்பமாக அமைதலை இத்துறை குறிக்கும் என்பர் நச்சி.

இதனைத் துன்பக் காஞ்சி என்றார் ச. சோ பாரதியார்.

3) மூதானந்தம்

போர்க்களத்தில் புண்பட்டு வீரமரணம் உடைந்த கணவனொடு மனைவியும் உயிர்நீத்தலை நோக்கிச் செல்வோர் கூறுவது மூதானந்தம் எனப்படும். ஆனந்தம் என்பது வடசொல். தமிழுக்குரிய 'புறத்திணை மரபுகள் கூறும் பகுதியில் முன்பு 'மாராயம்' என்றசொல் வந்தது. இப்போது இச்சொல் காணப் படுகிறது. மகிழ்ச்சி என்ற பொருளில் இச்சொல் இங்குப் பயிலப்பட வில்லை. ஆனந்தம்—குற்றம் என்ற பொருளில் வருதற்கு எழுத்தா னந்தம், சொல்லானந்தம் முதலிய பிற்காலப்பாட்டியல் வழக்குகள் சான்று. ஒருவேளை, இறப்பாகிய அமங்கலத்தை ஆனந்தம் என்றது மங்கல வழக்காகக் கருதலாம்.

இத்துறையினை மூதானந்தக் காஞ்சி என்பர் ச. சோ. பாரதியார்.

கணவன் இறந்ததும் தானும் உயிர் நீத்தமையினைக்கண்ட சான்றோர் ஏனையோர்க்கு உணர்த்திய சாக்காடு என்றார் நச்சி. இவர் கருத்தின்படி ஆனந்தம்-சாக்காடு எனப் பொருள் தந்தது. ''முதுமை கூறினார், உழுவலன்பு பற்றி''. இப்படி இறத்தலின் இது யாக்கை நிலையாமை''—என்பது நச்சி. உரைப்பகுதி.

புறநானூற்றில் இத்துறைக்குரிய பாடல்கள் ஐந்து உள்ளன. எனின், அவை பொதுவியல் என்னும் திணைக்குரியனவாகத்

தொகுக்கப்பெற்றவை. துறை ஆனந்தப்பையுள் என்று சுட்டப் பெற்றது (228, 229, 246-7, 280). இப்பெயர் பு. வெ. மாலையில் காணப்படுவது (266).

தீப்பாயப்புகும் பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தன்னை விலக்கும் சான்றோரை விளித்துப் பேசியதாக அமையும் புறப்பாட்டு ஆனந்தப் பையுளாகத் தொகுக்கப்பெற்றது (246).

4) முதுபாலை

சுர (பாலை) வழியாகக் கணவனுடன் வருகிறாள் தலைவி. அவனை வழியில் இழக்கிறாள். (-திடீரென்று அவன் செத்து விடுகிறான்). இந்நிலையில் உறவினர் ஒருவருமின்றித் தனியளாய் இருந்து தலைவி வருந்துதல் முதுபாலை எனப்படும். முது—பெரிய, பாலை—பிரிவு. பெரும்பிரிவு என்பது இறப்பு. ''பாலை என்பது பிரிவாகலின், இது பெரும்பிறிதாகிய பிரிவாதல் நோக்கி முதுபாலை என்றார்'' என்பது நச்சி. குறிப்பு.

இத்துறையினை முதுபாலைக் காஞ்சி என்றார் பாரதியார்.

5) கையறுநிலை

கையறுதல்—செயலற்றநிலை. செத்தோர் மாட்டுச் சாவாதார் வருத்தமுற்றுப் புலம்புதலைக் கையறுநிலை என்பர். இத் துறையினை,

> ''கணவனொடு மனைவியர் கழிந்துழி அவர்கட்பட்ட அழிபொருள் எல்லாம் பிறர்க்கு அறிவுறுத்தித் தாம் இறந்துபடா தொழிந்த ஆயத்தாரும் பரிசில்பெறும் விறலியரும் தனிப்படர் உழந்த செயலறு நிலை''

என்று விளக்குவர் நச்சி.

6) தபுதார நிலை

தாரம் என்பது வடசொல், மனைவி எனப்பொருள்படும். தபுதல்—இறத்தல். காதலியை இழந்து புலம்பும் கணவனின் துயரத்தை இத்துறை சுட்டியது. 'காதலி இழந்த தபுதார நிலை' என்ற தொடரில் 'காதலி இழந்த நிலை' என்பதே போதும்; 'தபுதாரம்' என்பது மிகை என்ற வினாவை எழுப்பிக்கொண்டு நச்சி. நல்கும் விளக்கம் நோக்கற்பாலது.

"தன் காதலியை இழந்தபின் வழி முறைத்தாரம் வேண்டின், அது காஞ்சிக் குறிப்பன்று என்றற்கும், எஞ்ஞான்றும் மனைவியில்லாதானும் தபுதார நிலைக்கு உரியனாயினும் இது காஞ்சி ஆகாதென்றற்கும், தபுதார நிலை என்றே பெயர்பெறுதல் மரபு என்றற்கும் காதலி இழந்த நிலையும் என்றே ஒழியாது, பின்னும் தபுதார நிலையும் என்றார்".

7) தாபதநிலை

தாபதம்—தவம். காதலனை இழந்தவள் உடன் உயிர்விட முடியாத நிலையில் தவமேற்கொண்டு வாழ்நாளைக் கழித்தலை இத்துறை சுட்டியது.

புறநானூற்றில்,

"அளிய தாமே சிறுவெள் ளாம்பல்
இளைய மாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப்
பொழுதுமறுத்
தின்னா வைகல் உண்ணும்
அல்லிப் பருஉம் புல்லா யினவே". (248)

எனவரும் ஒக்கூர் மாசாத்தனார் பாடல் இத்துறைக்கு உரியது. எனின், திணை பொதுவியல் எனக் கொள்ளப்பட்டது.

8) மாலைநிலை

நல்லியல்புகளுடைய நங்கை கணவனொடு பெருந்தீப் புகும் நிலையில், தடுப்பாராகிய சான்றோரை நோக்கி மாலைக்காலத்துப் பேசும் மறுமொழி மாலை நிலை எனப்பட்டது. தீப்புகுதல் சதி என்று வடமொழியில் வழங்குவர். மறக்குடி மங்கையர் கணவர்பால் கொண்டிருந்த பெருங்காதல் அவர்தம் இறப்பிற்குப்பின் உயிர் வாழாது உடன் மடிதற்குக் காரணம் ஆயிற்று. முன்பு சுட்டிய கோப்பெரும் பெண்டின் புறப்பாடலை (246) இத்துறைக்கு எடுத்துக்காட்டினர் பண்டை உரை ஆசிரியர்கள்.

தீப்பாய்தல் வெப்பம் தணிந்த மாலைக்காலத்து நிகழ்வது என்பது உரையாசிரியர் குறிப்பினால் உணரலாம்.

'பாலைநிலை' எனப்பாடம் கொண்டார் நச்சி. இவர் தரும் விளக்கம் :''எல்லா நிலத்தும் உளதாகித் தனக்கு வேறு நிலனின்றி வருதலானும் நண்பகல்போல் வெங்கனலான் வெதுப்புதலானும் புறங்காட்டைப் பாலை என்றார். பாலைத்தன்மை எய்திற்று என்பதற்கு நிலை என்றார்''

பாரதியார் 'பாலைக்காஞ்சி' என்று இதனைச் சுட்டினார்.

9) தலைப்பெயல் நிலை

தலைப்பெயல்—சேர்தல். பெறுதற்கரிய சிறப்புடைய மகனைப் பெற்றெடுத்த பொழுதே, பிள்ளைப்பேற்றுச் சோர்வினால் தாய் இறக்கும்படியாக மகனை அடைந்தநிலை தலைப்பெயல் நிலை எனப்பட்டது என்ற கருத்தில் உரைவரைந்தனர் இளம்,

இதனை வேறு வகைகளில் விளக்குவர் நச்சி.

1) போர்க்களத்தில் தன்மகன் புறங்கொடுத்தான் என்பது கேட்டுத் தாய் சாவத்துணிந்து மகனைப் பார்க்கச் செல்லும் நிலை என்றும்;

2) தன்மகன் புகழீட்டி வீரமரணம் அடைந்தான் என்பது கேட்டுத் தாய் அவனொடு இறந்துபட வருதல் தாயது தலைப்பெயல் நிலைமை என்றும் கூறினார். இவ் விளக்கங்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடல் களின் ஆற்றலினால் கொள்ளப்பட்டன.

10) காடுவாழ்த்து

காடு—புறங்காடு. இது இடுகாடு சுடுகாடு என்று இருவகைப்படும். ஊருக்குப் புறத்ததாகலின் புறங்காடு எனப்பட்டது. மலர்தலை உலகின் மரபு நன்கு விளங்கப் பலரும் மாயத் தான் மாயாத புறங் காட்டினை வாழ்த்துதல் காஞ்சித்திணைக்கு உரிய துறையாகும்.

இத்துறைக்கு நச்சி. கூறும் விளக்கம் காணத்தக்கது. ''பிறந்தோரெல்லாம் இறந்துபோகவும் எஞ்ஞான்றும் இறப்பின்றி நிலைபெற்ற புறங்காட்டினை வாழ்த்துதல்'' என்றார். இத்துறைக் குரியதாக,

''களரி பரந்து கள்ளி போகிப்
பகலும் கூஉம் கூகையொடு பிறழ்வர
ஈம விளக்கிற் பேஎய் மகளிரோ

டஞ்சுவந் தன்றி மஞ்சுபடு முதுகாடு
நெஞ்சமர் காதலர் அழுத கண்ணீர்
என்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
எல்லாப் புறனும் தான்கண் டுலகத்து
மன்பதைக் கெல்லாம் தானாய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே'' (356)

எனவரும் புறநானூற்றுப் பாடலை மேற்கோள் காட்டியிருத்தல் மிக்க பொருத்தம் வாய்ந்தது. இங்ஙனம் புறத்துறைகளுக்குப் பொருந்திய செய்யுள்களை உதாரணம் காட்டுதலில் மற்றவர்களை நோக்க இவர் முதலில் விளங்குபவர் எனலாம்.

'பலர்செலச் செல்லாக் காடு' என்ற தொல். தொடர் ஆழ்பொருள்கொண்டது. அத்தகைய காட்டின்மிசை பேய்க்கணம் சூழ இறைவன் நடம் புரிதலைக் காரைக்காலம்மையார் அருளிச் செய்த திருவாலங்காட்டு மூத்த திரு பதிகங்கள் இரண்டும் உணர்த்துகின்றன. உலகப் பொருள்கள் யாவும் காலவயப்பட்டு மறையும் தன்மையின. இறைவன் ஒருவனே காலாதீதனாகத் திகழ்பவன் என்பது அம்மை பதிகங்களின் நுட்பக் குறிப்பு.

இதுகாறும் தொல்காப்பியர் சுட்டிய காஞ்சித்திணைக்குரிய இருபது துறைகளும் அவற்றுக்குரிய விளக்கமும் கண்டோம். இவற்றுள் வஞ்சினக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி என்ற இருதுறைகள் தவிர எஞ்சிய பதினெட்டும் நிலையாமைப் பொருண்மைக்கு முழுமையாக உரியவை என்பதும் சுட்டற்பாலது.

இனி தொல்காப்பியர் சுட்டிய காஞ்சித்திணைக்குரிய துறைகளை ஐயனாரிதனார் குறிப்பனவற்றுடன் ஒப்பாய்வு செய்வோம்.

II. ஒப்பாய்வு

(அ) தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்

தொல்காப்பியர் இருதொகுதிகளாகக் காஞ்சித்திணைக்குரிய 20 துறைகளைக் கூறியுள்ளார். ஐயனாரிதனார் ஒரு தொகுதியாக 22 துறைகளைக் கூறினார். இவற்றுள் தொல். சுட்டிய முதல் பத்துத் துறைகளில் ஒன்பது பு. வெ. மாலை காஞ்சித் திணையிற் கூறப்பெற்றனவற்றுள் காணப்படுகின்றன. அவை வருமாறு :

தொல்காப்பியம் (காஞ்சித்திணை)	பு.வெ. மாலை (காஞ்சிப்படலம்)
1) கூற்றம் சாற்றிய பெருமை	பெருங்காஞ்சி 66
2) புண்கிழித்து முடியும் மறம்	மறக்காஞ்சி 74, 75
3) புண்ணோசற் பேஎய் ஓம்பிய பேஎய்ப்பக்கம்	அ. பேய்நிலை 76 ஆ. பேய்க்காஞ்சி 77
4) இன்னன் என்றிரங்கிய மன்னை	மன்னைக்காஞ்சி 80
5) இன்னது பிழைப்பின் இது வாகியர் எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம்	வஞ்சினக்காஞ்சி 69
6) தொடாஅக்காஞ்சி	தொடாக்காஞ்சி 79
7) ஆஞ்சி	ஆஞ்சிக்காஞ்சி 82, 83
8) மகட்பால்	மகட்பாற்காஞ்சி 84
9) தலையொடு முடிதல்	தலையொடு முடிதல் 73

இங்ஙனம் தொல், துறைகள் பு.வெ. மாலையில் காணப் பெறினும், ஒரு சில துறைகளின் பொருண்மை வேறுபடுதல் நோக்கத்தக்கது. அவை வருமாறு :

1) பெருங்காஞ்சி

படைக்கலம் பெற்ற காஞ்சிவீரர்கள் தத்தம் ஆற்றலைப் புலப் படுத்துதல் இத்துறைக்குரிய பொருளாகும் (66). தொல். சுட்டிய பெருங்காஞ்சி இதனின் வேறுபட்டது என்பது முன்பு இதற்குப் பொருள் விளக்கம் கூறிய பகுதியுடன் ஒப்பிட்டு நோக்குவார்க்குப் புலப்படும்.

2) மறக்காஞ்சி

இத்துறையினைப் பு.வெ. மாலை இருவகையாக விரித்துரைக் கிறது. இவற்றுள் இரண்டாம் வெண்பாவில் சுட்டப்பெறும் பொருண்மையுடன் தொல். சுட்டும் மறக்காஞ்சி ஒத்தது (75) எனின், முதல் வெண்பாவில் சுட்டப்பெறும் பொருளுக்குரிய இத்துறைவகை தொல்காப்பியத்தில் இல்லை (74). இவ்வெண்பா வில் பகைவர் மாறுபாடு நீங்கக் காஞ்சித்தார் சூடிய வேந்தன் மறத்தொழிலைச் செலுத்துதல் சுட்டப்பெற்றது.

3) பேய்க்காஞ்சி

குருதிப்புனலில் வீழ்ந்து அழலநோக்கும் வீரனைப் பார்த்துப் பேய் அச்சுறுத்தலைக் கூறுவது இத்துறைப்பொருளாகும் (77). பேஎ என்ற சொல்லிற்கு அச்சம் என்பது பொருள். ஆதலின், அச்சுறுத்துதல் பேஎயின் இயல்பு எனலாம். இதனைத் தொல்காப்பியர் ஒரு துறையாக எண்ணவில்லை. எனின், அவர் சுட்டிய பேஎய்ப்பக்கமும் ஐயனாரிதனார் சுட்டிய பேய்நிலையும் (76) ஒருபொருள் பற்றியவை.

4) தொடாக்காஞ்சி

கொலையஞ்சாத நெடுந்தகையின் புண்ணினைத் தொடுவதற்கு அஞ்சி நடுங்கிப் பேய் பெயர்ந்து போவதைக் கூறுவது இத்துறையாகும் (79). ஆயின் இத்துறை தொல்காப்பியத்தில் சிறிது வேறுபாட்டுடன் கூறப்பட்டுள்ளது என்பதை முன்பு கூறிய துறை விளக்கம் நோக்கி உணரலாம்,

பேய்த்தொடர்பான காஞ்சித் துறைகள் பிற்காலத்தில் எழுந்த பரணி பொருட் கூறுகளுக்கு மூலமாக அமைந்தன எனலாம்.

5) ஆஞ்சிக்காஞ்சி

பு. வெ. மாலையில் இத்துறை இருவகையாக இயம்பப் பெற்றன. இத்துறையின் முதல் துறை: காதற்கணவனொடு கனைஎரி மூழ்கும் மாதர் தீப்பாய்தற் பொருட்டுத் தோழியரை விலகச் சொல்லுதலைக் குறித்தது (82). இது தொல். சுட்டிய மாலைநிலை என்ற துறைப்பொருண்மையுடன் ஒத்தது.

எனின், ஆஞ்சிக் காஞ்சியின் இரண்டாம் வகையும் (83) தொல். சுட்டிய ஆஞ்சியும் ஒத்தவை.

எனவே, இரு நூல்களிலும் துறையும் பொருளும் முழுதும் ஒத்து வருவன : மன்னைக்காஞ்சி, வஞ்சினக்காஞ்சி, மகட்பாற் காஞ்சி, தலையொடு முடிதல் என்பனவாகும்.

இவை நிலையாமைப் பொருண்மை பற்றி வந்தவை. எதிரூன்றுதல் கூறும் பு. வெ. மா. காஞ்சிப் படலத்தில் இவை விரவிக் கூறப்பட்டன. பெரும்பான்மையும் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவர்தம் நிலையாமை சுட்டப்பெறுதலின் காஞ்சிக்குரிய மறத்துறைகளுடன் இவை கலந்து வந்தன எனலாம்.

இனி, தொல்காப்பியர் சுட்டாது பு. வெ. மாலையில் காஞ்சிப் படலத்தில் கூறப்பட்ட பன்னிரு துறைகளையும் நோக்குவோம்.

புதிய துறைகள்

1) காஞ்சி

வேற்று மன்னன் தன்னாட்டின்மேல் படையெடுத்து வந்துவிட அவனை எதிர்த்துக் காஞ்சிமலர்களால் தொடுக்கப்பெற்ற மாலை சூடி வேந்தன் தன்படை வீரர்களுடன் காவலிடத்தைக் காக்க நினைத்தலைக் காஞ்சி என்றார் பு. வெ. மாலையார் (61).

2) காஞ்சி அதிர்வு

பகைவேந்தன் தனது நாட்டின் புற எல்லையைப் படைசூழத் தங்கியிருத்தலை ஒற்றரால் அறிந்த வேந்தன் துடியைக் கொட்டச் சொல்லிப் படை மறவர்களைத் திரட்டுதல் இத்துறைக்குரிய பொருளாகும் (62).

3) தழிஞ்சி

வஞ்சித்திணைக்குக் கூறப்பட்ட தழிஞ்சி என்னும் துறையினின்றும் இது வேறுபட்டது. பகைவர் படை தனது நாட்டின் எல்லைக்குள் நுழைந்துவிடாதபடி வழிகளைக் காத்து நிற்றல் காஞ்சித் தழிஞ்சி எனப்படும் (63).

4) படைவழக்கு

ஆற்றல்மிக்க காஞ்சி வீரர்களுக்கு வேந்தன் படைக்கலன்களை வழங்குதல் இத்துறைக்குரியது (64).

படை பெற்ற கழல்மறவன், மறவர் பலர் சூழ்ந்திருப்பினும், தனக்கு வீரவாளினை வழங்கிய தனிச்சிறப்பினை எண்ணிப் பாராட்டுவதும் இந்தத்துறையின் பாற்படும் (65).

5, 6) வாள்செலவும், குடைசெலவும்

வஞ்சிவேந்தன் நல்ல நாளும் கோளும் பார்த்துக் குடையையும் வாளையும் முன்னரே அனுப்பிவைக்கும் செய்தி முன்பு கூறப்பட்டது (38, 39). காஞ்சிவேந்தனும் நாள், கோள் பார்ப்பதில் நம்பிக்கை உள்ளவன். வஞ்சி வேந்தனை எதிரேற்றுப் போர்

புரிவதற்கு அவ்வாறே நல்ல வேளையில் தனது வாளையும் குடையையும் புறவீடு செய்தலைக் குறிக்கும் துறைகள் புதியவை(67,68) சிலப்பதிகாரத்தில் குடைசெலவு குறிக்கப்பட்டமை இங்குச் சுட்டுதற்கு உரியது (5 : 91).

7) பூக்கோள்நிலை

ஆரவாரம் பெருகப்போரை எதிர்கொள்ளும் பொருட்டு அரசன் கொடுத்த பூவினை வீரர்கள் சூடிக்கொள்ளுதலை இத்துறை சுட்டியது (70). இத்துறை, இப்படலத்தின் முதலிற் கூறப்பெற்ற காஞ்சி என்ற துறையுடன் ஒத்ததுதான். எனின், அங்கு வேந்தன் பூச்சூடுதலும், இங்கு மறவர் மலர் சூடுதலும் வேறுபாடாகக் கொள்ளற்பாலன.

8) தலைக்காஞ்சி

வஞ்சி வேந்தனின் தூசிப்படையினைத் தடுத்து வீழ்ந்த காஞ்சி வீரனின் தலையின் மதிப்பைப் போற்றுதல் இத்துறையின் பாற்படும் (71).

9) தலைமாராயம்

முன்பு வஞ்சித்திணைக்கு ஓதப்பட்ட மாராயத்தினின்றும் இது வேறுபட்டது. போர்க்களத்தில் பட்ட வீரனின் தலையைக் கொண்டு வந்தவனுக்குக் காஞ்சிவேந்தன் செல்வம் கொடுத்துச்சிறப்பித்தலை இத்துறை சுட்டியது (72). மாராயம்—பெருஞ்சிறப்பு.

10) தொட்ட காஞ்சி

இத்துறை வீழ்ந்து கிடக்கும் வீரனின் புண்ணினைப் பேய்மகள் தீண்டுதலைக் குறிர்ப்பது. அவள் தீண்டிய மாத்திரத்தில் அவன் உயிர்போதலையும் இத்துறை சுட்டுகிறது (78).

11) கட்காஞ்சி

வீரர்களை ஊக்குதற் பொருட்டு வேந்தன் கள்ளினை வழங்கிக் களிக்கச் செய்தல் கட்காஞ்சி எனப்படும் (81).

12) முனைகடி முன்னிருப்பு

தன்னாட்டின்மீது படைஎடுத்து வந்த மன்னர்கள் யாவரையும் போர் முனையை விட்டுப் பிறக்கிட்டு ஓடும்படியாகத் துரத்தும் பேராற்றல் இத்துறைக்குரிய பொருளாகும் (85).

இதுகாறும் கூறப்பெற்ற துறைகள் பன்னிரண்டும், தொல் காப்பியத்திலும் காணப்பெறுவனவாகக் காட்டப்பெற்ற வஞ்சினக் காஞ்சி, மகட்பாற்காஞ்சி என்ற துறைகள் இரண்டும், பெருங் காஞ்சியும் ஆகத்துறைகள் பதினைந்தும் மறச்சார்புடைய காஞ்சித் திணைக்கு உரிய துறைகளாக ஐயனாரிதனாரால் அறிந்து கூறப் பெற்றவை. இவைதாம் தடுத்தூன்றுதல், எதிரூன்றுதல் என்ற பொருண்மையினைக் காஞ்சித் திணைக்கு வழங்கியவை. பு. வெ. மாலைக்கு முதனூலாகிய பன்னிருபடலத்தில் இவை வழங்கப் பெற்றன வாதல் வேண்டும்.

இனி, தொல்காப்பியர் காஞ்சித் திணைக்குரியனவாகக் கூறிய துறைகளில் பு.வெ. மாலை.காஞ்சிப்படலத்தில் காணப்பெறாதவை பத்துத்துறைகள் ஆகும். இவற்றுள் ஒன்பது துறைகள் தொல் காப்பியரால் இரண்டாம் தொகுதியாகக் கூறப்பெற்றவை; ஒன்று (முதுமை) முதல் தொகுதிக்கு உரியது. மேலும் முன்பு சுட்டப் பெற்றனவற்றுள், பெருங்காஞ்சி என்ற துறை பொதுவியலிலும் எண்ணப் பெற்றதால் அதனையும் இங்குக் குறிக்க வேண்டிய தாயிற்று. இத்துறைகள் பு. வெ. மாலையில் காஞ்சிப்படலத்தில் இடம்பெறவில்லையே தவிர, பொதுவியற் படலத்தில் வருவன வற்றுடன் ஒத்துள்ளன. அவற்றை இங்கே சுட்டுதல் தகும்.

தொல்காப்பியம்-காஞ்சித்திணை (இரண்டாம் தொகுதித்துறைகள்)	பு. வெ. மாலை (பொதுவியற்படலம்)
1) முதுபாலை	முதுபாலை 254; சுரநடை 255
2) தபுதார நிலை	தபுதார நிலை 256
3) தாபதநிலை	தாபதநிலை 257
4) தலைப்பெயல்நிலை	தலைப்பெயல்நிலை 258
5) பூசல்மயக்கம்	பூசல்மயக்கு, 259; 260
6) மாலைநிலை (பாலைநிலை அன்று)	மாலைநிலை 261

7) முதானந்தம் — முதானந்தம் 262, 263

8) கையறுநிலை — கையறுநிலை 267 (இவை ஒன்பதும் சிறப்பிற் பொதுவியலுக்கு உரியவை. நூ. 11)

இனி, பு. வெ. மாலையில் காஞ்சிப் பொதுவியலுக்கு உரியவை (நூ. 12) தொல். சுட்டிய துறைகள் சிலவற்றுடன் ஒத்தவை. அவை வருமாறு:

9) முதுமை — முதுமொழிக்காஞ்சி 269
முதுகாஞ்சி 273

10) பெருமை — பெருங்காஞ்சி 270

11) காடுவாழ்த்து — காடுவாழ்த்து 274

இவற்றுள் விடுபட்ட தாங்கரும் பையுள் என்ற ஒரு துறை மட்டும் பு.வெ. மாலையில் காணப்படவில்லை. தொல்காப்பியர் கூறியுள்ள துறைகளின் வரிசை ஐயனாரிதனாரால் பின்பற்றப் படவில்லை. இதற்குக் காரணம் அவர் பன்னிருபடலத்தைப் பார்த்து நூல் செய்தமையே எனலாம்.

எனவே, தொல்காப்பியர் கூறிய காஞ்சித்திணைக்குரிய துறைகள் இருபதில் பதினெட்டு நிலையாமை குறிப்பது என்பதும் மீண்டும் நினைவு கூர்தற்குரியன. பு.வெ.மா. மறத்துறைகளைத் தொகுத்துரைக்கும் காஞ்சிப்படலத்தில் நிலையாமைப் பொருண்மைக்குரிய துறைகளையும் விரவிக் கூறியது என்பதும், தொல். சுட்டிய ஒரு சில துறைகள் பொதுவியல் திணையில் காணப்படுகின்றன என்பதும் தெளிவு. எனவே,தொல்காப்பியரின் சிந்தனைப் பள்ளியும் ஐயனாரிதனாரின் சிந்தனைப் பள்ளியும் வேறுவேறு என்பது புலனாகும்.

இனி, வீரசோழியம் கூறும் காஞ்சித்திணை பற்றிய துறைகளை ஒப்பிட்டு நோக்குவோம்.

(ஆ) தொல்காப்பியமும் வீரசோழியமும்

புத்தமித்திரனார் பெரும்பான்மையும் தொல்காப்பியரைப் பின்பற்றியே காஞ்சித்திணையின் இலக்கணத்தைக் கூறியுள்ளார் (கா. 100). வஞ்சித்திணையை அடுத்துக் காஞ்சித்திணையைக் கூறியவர், எதிரூன்றுதல் பொருண்மையைக் கூறாமை வியப்

பாகவேஉள்ளது. இவர் சுட்டிய துறைகளைத் தொல்காப்பியத் துறைகளுடன் இணைந்து நோக்குவோம்.

1) நிலையாமை

தொல்காப்பியர் சுட்டிய 'நில்லாவுலகம் புல்லிய நெறித்தே' என்பதைப் புத்தமித்திரனார் நிலையாமை என்ற துறையாக வகுத்துக் கொண்டார். நிலையாமையாவது அறம், பொருள், இன்பம், இளமை, யாக்கை, உயிராதி நிலையாமை என்றார் பெருந்தேவனார். இவரைப் பின்பற்றி நச்சினார்க்கினியர் நிலையாமையினை விளக்கினர் எனலாம்.

2) வாழ்த்து

பெருந்தேவனார் கடவுள் வாழ்த்து முதலாயின என்று பொருள் கண்டார். எனின், தொல்காப்பியர் சுட்டிய காடு வாழ்த்து என்பதை இத்துறை கருதியதாகக் கொள்ளலாம்.

3) மயக்கம்

தொல்காப்பியர் பூசல் மயக்கம் என்று சுட்டியதை இவர் மயக்கம் என்றார். பெரும்புகழ்ஈட்டி மாய்ந்தமைந்தனைச் சூழ்ந்து கொண்ட சுற்றத்தார் வருந்திப் புலம்புதலை இத்துறை சுட்டுகின்றது.

4) முதுமை

தவத்தின் கண் நின்றார்க்கு எடுத்துக் காட்டிய உவமைச் சொல் என்பர் பெருந்தேவனார். 'அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை' என்ற குறளை மேற்கோள் காட்டினார். தொல்காப்பியத்தில்,

''கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை''

என்று கூறப்பெற்ற முதுகாஞ்சியைத்தான் புத்தமித்திரானார் இங்ஙனம் முதுமை என்று சுட்டியுள்ளார்.புறநானூற்றில் அறிவுரை கூறும் பாடல்கள் பல இத்துறைக்கு உரியனவாக விளங்குகின்றன என்பதை முன்னர்க் கண்டோம்.

5) நிலை

நிலை என்று பொதுப்படச் சுட்டியது கையறு நிலை, தபுதார நிலை, தலைமைப்பெயல் நிலை (—இது தலைப்பெயல்நிலை

என்றிருத்தல் வேண்டும்) என்பன ஆகும் என்று உரையாசிரியர் தொல்காப்பியர் வழி நின்று பொருள் கண்டனர். தாபதநிலையினைத்தான் இவர் தாங்கிய நிலை என்றார்.

6) மகிழ்ச்சி

இதற்கு 'ஓர் உயிராவது அறிக உளம் கவர்ந்தார்க்கு' என்று பெருந்தேவனார் உரை கண்டனர். அனைத்துயிர்களையும் ஒப்ப வைக்கும் பக்குவத்தை இத்துறை சுட்டுகின்றது எனக் கருதலாம். இது தொல்காப்பியத்தில் சுட்டப்பெறவில்லை.

7) பெருமை

கூற்றம் வருவதற்குள் செயற்கரிய நல்லனவற்றைச் செய்தல் வேண்டும் என்று ஆன்றோரால் கூறப்பெற்ற சொற்பெருமை என்பர். ''மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை'' என்று தொல்காப்பியர் சுட்டிய நிலையாமைக் காஞ்சித் துறை இங்ஙனம் சுருக்கமாகச் சொல்லப்பெற்றது.

8) தீப்பாய்தல்

இறந்த கணவனின் ஈம எரியில் தன்னைத் தியாகம் செய்து கொள்ளல். இதனைச் சதி என்பர். இதனைத் தொல்காப்பியர், 'நல்லோள் கணவனொடு... மாலைநிலை' என்றார். இப்பழக்கம் மறக்குடி மங்கையரிடையே காணப்பட்டது. இராசபுத்திரப் பெண்களிடமும் இப்பழக்கம் அண்மைக்காலம்வரை நிலவியது. வில்லியம் பெண்டிங்கு பிரபு, இராசாராம் மோகன்ராய் முயற்சியால் இக்கொடிய நிலை சட்டத்தினால் நீக்கப்பட்டது. எனின், தமிழக ஊர்ப்புறங்களில் தீப்பாய்ந்தார் கோயில் என்ற பெயரில் சிறு கோயில்கள் பல காணப்படுகின்றன. கணவனுடன் உடன்கட்டை ஏறித் தீயில் வெந்து மடிந்த மற மங்கையரை மதித்துப் பரவும் பாங்கில் இவை எழுப்பப் பெற்றன எனலாம்.

9) சுரத்தில் கணவனை இழத்தல்

பாலைவழியில் தலைவனை இழந்த தலைவி துயர் உறுதல். இத்துறை முன்னைய நூல்களில் முதுபாலை என்று மொழியப் பெறும்.

10) தனியே இரங்கல்

துணைவியை இழந்த தலைவன் புலம்புதல். இது தொல் காப்பியத்தில் கூறப்படவில்லை. முன்னைத் துறையினை ஒட்டியே இது கற்பித்துக் கொள்ளப்பெற்றது எனலாம்.

11) சுலையார் மனைவி

களத்தில் வீழ்ந்த தலைவனைத் தலைவிகாத்த பெருமையினை இத்துறை சுட்டுகின்றது என்பர். இதனை முன்னையோர் குறித்த தொடாக்காஞ்சித் துறையுடன் இணைத்து நோக்கலாம். இஃது செருக்களத்துப் பேதையைப் பற்றிப் புணர்தல் என்றும் கூறப் பெற்றது.

12) சூளுறவு

இது வஞ்சினமுரைத்தலாகும். மங்கையரை நோக்கிய கண்ணையும் அவர்தம் தோளைப் பிணித்த கையையும் பருந்திற்கு இரையாகக் கொடேனாயின், இறந்தவர் துன்பத்தை மாற்றாத வனாக ஆகக்கடவேன் என்று சூளுரைத்தலை இத்துறைக்கு உதாரணமாகக் கூறினார்.

மேற்சுட்டிய துறைகளில் மகிழ்ச்சி, தனியே இரங்கல் என்பன இரண்டும் தொல்காப்பியர் கூறாதவை. புத்தமித்திரனார் இவற்றைத் தாமே வகுத்துக் கூறியிருக்கலாம். அல்லது, இவை வழங்கிய வேறொரு மூலநூலினின்றும் எடுத்துக் கொண்டிருக்க லாம். எஞ்சிய துறைகளைத் தொல்காப்பியத்தினைப் பின்பற்றிச் சுட்டியிருப்பினும், யாப்பு வசதிக்காக அவற்றின் பெயர்களில் சிறு மாற்றம் செய்துள்ளார் எனத் தோன்றுகிறது.

இனி, இலக்கண விளக்கத்தில்காஞ்சித்திணைக்குரிய துறைகள் எங்ஙனம் எடுத்துரைக்கப்பெற்றன என்பதை ஒப்பியல்நோக்கில் காண்போம்.

(இ) தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்

வைத்தியநாத நாவலர் தொல்காப்பியரைப் பின்பற்றி முதற் கண் நிலையாமைக்காஞ்சிக்குரிய விளக்கத்தைக் கூறியுள்ளார். ''காஞ்சிதானே'' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பா இவர் இலக்கண நூலில் பொன்னே போல் போற்றப்பெற்றுள்ளது.

எனினும், காஞ்சிக்குரிய துறைகளைத் தொகுத்துக்கூறும் வகையில் முற்றிலும் புறப்பொருள் வெண்பா மாலையைப் பின்பற்றியிருத்தல் குறிப்பிடத்தக்கது. காஞ்சி சூடுதல், காஞ்சி அதிர்வு, தழிஞ்சி, படைவழக்கு முதலாக முன்னிருப்பு வரை 25 துறைகள் இவரால் கூறப்பெற்றன. எதிரூன்றுதலை மேற்கொண்ட அரசன் காஞ்சிப் பூவினைச் சூடுதலை முதல் துறையாகக் குறித்தார். காஞ்சி அதிர்வு என்ற பு. வெ. மாலைத் துறை இந்நூலில் காஞ்சி எதிர்வு என்று காணப்பெறுகிறது இது பொருத்தமுடையதாகவும் தோன்றுகிறது. படை வழக்கு என்ற ஒரு துறையை இவர் படை வழக்கு என்றும் படை வழக்கின் பக்கம் என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறுகின்றார். இவ்விரு துறைகளுக்குரிய உதாரணங்கள் பு. வெ. மாலையில் காணப்பெற்றவையே ஆகும். இவ்வாறே மறக்காஞ்சி என்ற துறையை மறக்காஞ்சி என்றும், அதன் பக்கம் என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறினும் இவற்றிற்குரிய உதாரணங்களை பு. வெ. மாலையிலிருந்து எடுத்துக் கொண்டார். பேய் நிலை என்ற துறையை இவர் பேய் ஒப்புதல் என்று மாற்றிக் கூறினார். இது ஒரு புதுமையன்று; பு. வெ. மாலைக் கொளுவில் இத்தொடர் காணப்பெறுகின்றது. ஆஞ்சிக்காஞ்சி என்ற ஒரு துறையை அதுவாகவும் அதன் பக்கமாகவும் எண்ணினார். முனைகடி முன்னிருப்பு என்ற துறையினை முன்னிருப்பு என்று சுருக்கமாகச் சொல்லி வைத்தார். பெரும்பாலும், அக்காலத்து மாணாக்கர்க்குப் பாடம் சொல்வதைக் கொள்கையாகக் கொண்ட பின்னூலார் பழைய நூல்களில் பரவலாகக் கூறப்பெற்ற செய்திகளையே தொகுத்துக் கூறினாரே தவிர தம் காலத்துப் போர்முறைகளையும் அவற்றுக்குரிய துறைகளையும் இலக்கணத்தில் எடுத்துரைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. பழமைப் பிடிப்பினின்றும் விலகுவது அவ்வளவு எளிய காரியமல்ல என்பதற்கு இவர்தம் இலக்கண விளக்கம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

(ஈ) இலக்கண விளக்கமும் சுவாமி நாதமும்

சாமிகவிராயர் சிறந்த சைவர். சைவராகிய வைத்திய நாத நாவலரின் வாரிசுபோல இலக்கணம் செய்துள்ளார். காஞ்சித் திணையினையும் அதற்குரிய துறைகளையும் இலக்கண விளக்கத்தை ஒட்டியும் புறப்பொருள் வெண்பா மாலையைப் பின் பற்றியும் இவர் இயம்பியிருக்கிறார். விருத்தயாப்பில் துறைகளை கூறவேண்டிய நெருக்கடியால் துறைகளின் பெயர்களில் சிற்சில அடைகளை விடுத்தும், கொடுத்தும் படைத்திருக்கிறார் என்பது

கருதத்தக்கது. சான்றாகப் படை வழக்கு என்ற தொடரினைப் படை வழங்கல் என்றும் பெருங்காஞ்சி என்பதனை முரண் புகறல் என்றும் சுட்டியிருத்தலைக் கூறலாம்.

இவ்வியலில் மேற்கண்ட ஆய்வின் விளைவாகப் பின்வரும் முடிபுகளைத் தொகுத்துரைத்தல் கூடும்.

ஆய்வின் முடிபுகள்

1) தொல்காப்பியர் காலத்தில் காஞ்சித்திணை நிலையாமை பொருள் குறித்தது; எதிரூன்றுதல் என்ற பொருளில் பயிலப்பெறவில்லை.

2) சங்க இலக்கியத்திலும் இதேநிலை காணப்படுவதால், சங்கம் மருவிய காலத்தில்தான் தடுத்தூன்றுதல் பொருண்மையில் வஞ்சிக்குரிய எதிர் வினையாகக் காஞ்சி கருதப் பெற்றது.

3) புறநானூற்றில் எதிரூன்றுதலாகிய காஞ்சித்திணைக் குரியவை என்று குறிக்கப் பெற்ற துறைகள் உண்மையில் தொல்காப்பியர் சுட்டிய நிலையாமைப் பொருள் உணர்த்தும் காஞ்சித்திணைக்கு உரியவை.

4) சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில் காஞ்சி, வஞ்சிக்கு மறுதலையாகிய போர்த்திணையாகக் கருதப்பெற்றது.

5) திவாகரம், பிங்கலந்தை நிகண்டுகளிலும் 'வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே' என்ற கருதது நிலைபெற்றது.

6) அகத்திணையியலில் நிலையாமையினைச் சுட்டுதற்கும், புறத்திணையியலில் காஞ்சியாகிய நிலையாமை சுட்டு தற்கும் வாழ்வியல் நோக்கில் வேறுபாடு உண்டு.

7) வெற்றிப் பெருமிதத்தில் மனிதனுக்குச் செருக்கு வந்து விடக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில் தொல் காப்பியர் வாகைத்திணைக்குப் பின்னர்க் காஞ்சித் திணையினைக் கூறியிருத்தல் வேண்டும்.

8) நிலையாமை என்ற கோட்பாடு அனைத்திந்தியச் சிந்தனையாக விளங்கினும், அதற்குக் காஞ்சி என்ற ஒரு பெயர் கொடுத்து, அதன் பல கூறுகளையும் ஆலசி

ஆராய்ந்து மக்களை நெறிப்படுத்த முற்பட்ட சிறப்பு தொல்காப்பியர்க்கு உண்டு.

9) தொல்காப்பியர் சுட்டிய துறைகளில் வஞ்சினக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி என்ற துறைகள் மட்டுமே போர்த் தொடர்புடைய துறைகள் ஆகும். எஞ்சியவை நிலை யாமைப்பொருளில் வருவன.

10) பெருங்காஞ்சி, மறககாஞ்சி, பேய்க்காஞ்சி, தொடாக் காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி என்ற துறைகள் தொல்காப்பியத் திலும் பு. வெ. மாலையிலும் காணப்பெறினும், அவற்றுக் குப் பின்னூலில் கூறப்பெறும் விளக்கம் வேறுபடுகிறது.

11) காஞ்சி, காஞ்கி அதிர்வு, தழிஞ்சி படைவழக்கு, வாள்செலவு, குடைசெலவு, பூக்கோள்நிலை, தலைக் காஞ்சி, தலைமாராயம், தொட்டகாஞ்சி, கட்காஞ்சி, முனைகடி முன்னிருப்பு என்பன பு.வெ. மாலையில் காணப்படும் புதிய துறைகள்.

12) வீரசோழியம் சுட்டிய துறைகளில் மகிழ்ச்சி, தனியே இரங்கல் என்பன இரண்டும் தொன்னூல்களில் கூறப் பெறாத புதிய தூறைகள்.

13) இலக்கணவிளக்கம், 'காஞ்சிதானே' என்ற தொல். நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. எனின், காஞ்சித்திணைக்குரிய துறைகளைத் தொகுத்துக் கூறும் வகையில் முற்றிலும் பு. வெ. மாலையினைப் பின்பற்றி யது.

14) சுவாமிநாதம் விருத்தயாப்பில் துறைகளைக் கூற வேண்டிய காரணத்தால், யாப்புச் செப்பம் கருதித் துறைகளின் பெயரை அமைத்துக் கொண்டுள்ளார்.

15) காஞ்சி பற்றிய இருவேறுமரபுகளும் பிற்கால இலக்கணங் களில் விரவி வந்துள்ளன.

---

7. நொச்சியும் உழிஞையும்

1. திணைவிளக்கம்

வெட்சி, வஞ்சி ஆகிய திணைகளை அடுத்துத் தொல்காப்பியர் உழிஞைத்திணை பற்றிய இலக்கணத்தைக் கூறியுள்ளார். மதிற் போரினைத்தான் 'உழிஞை' என்ற குறியீட்டினால் சுட்டினார். மாற்று வேந்தனின் மாபெரும் மதிலை அழித்து நகர்க்குள் சென்று செல்வத்தைக் கவர்தல் உழிஞைப் போரின் நோக்கம் ஆகும். இப் போர் புரிவோர் உழிஞை சூடுதல் மரபு. இதனைத் தொல் காப்பியர் சுட்டவில்லை. எனின், ஐயனாரிதனார் தெளிவாகக் குறித்துள்ளார். புறநானூற்றில்,

''மன்ற வேம்பின் மாச்சினை ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து'' (76)

''குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்குடி உழிஞைப் பவரொடு மிலைந்து'' (77)

என்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் சுட்டப்பெறுகிறான். பாண்டியன் குடிக்குரிய வேம்பின் தளிரை முடியில் சூடிக்கொண்டதுடன், உழிஞைக் கொடியையும் அணிந்து கொண்டான் என்று அறிகிறோம். எனவே, உழிஞை மாலை சூடுவதைப் பு. வெ. மா. சுட்டியிருப்பினும் (95) அது கொடிதான் என்பது மேற்சுட்டிய செய்யுட் பகுதிகளில் அறியலாம்.

மதிலை வளைப்பது, முற்றுகையிடும் போர்த் தொழிலுக்கு உழிஞை என்பது ஒரு குறியீடு. முற்றுகையிடும் வேந்தனைப் புறத்தோன் என்பர். உள்ளிருந்து மதிலைக் காக்கும் நோக்கில் போர் புரிவோன் நொச்சி சூடுதல் மரபு (86). நொச்சி ஒருவகைப் பூ. பின்னர் அது காவலுக்கும் பெயராயிற்று. இதனை,

''நொச்சி வேலித் தித்தன் உறந்தை
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால் தோழிநம் களவே''.

எனவரும் அகநானூற்றுப் பாடலால் அறியலாம். எனவே, மதிலைக் காக்கும்பொருட்டு உள்ளிருந்து போர் புரிபவனை நொச்சி வேந்தன் என்றும், அகத்தோன் என்றும் சுட்டுதல் புறத் திணை மரபாகும். இன்றும் ஊர்ப்புறங்களில் நொச்சியைத் தோட்டத்திற்கும் வயலுக்கும் வேலியாக அமைத்து வளர்க்கும் பழக்கம் காணப்படுகிறது.

தொல்காப்பியர் உழிஞைத் திணையினை மட்டுமே விரிவாகக் கூறியுள்ளார். அவர் வகுத்துக்கொண்ட புறத்திணை ஏழனுள் நொச்சி எண்ணப்பெறவில்லை. எனினும், உழிஞைத் திணையின் பொதுவிலக்கணம் கூறும் பகுதியில்,

''முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப''

என்று பேரரணைச் சென்ற வேந்தன் வளைத்தலும், இருந்த வேந்தன் விட்டுக் கொடுக்காது காத்தலும் ஆகிய இரு நெறிகளை மரபாக உடையது உழிஞைத்திணை என்று குறித்தல் நுணுகி நோக்கத்தக்கது. முற்றுதல், கோடல் ஆகிய இருவேறு தொழில்கள் சுட்டப்பெறினும் நாணயத்தின் இரு மருங்கு போன்றிருத்தலின், அவ்விரண்டிற்கும் உழிஞை என்ற ஒரு திணைப் பெயரே ஓதினார். ஆயினும், உள்ளிருந்து பொருவோனை அகத்தோன் என்றும், அவனுக்கு அடையாளம் நொச்சி என்றும், மதிலுக்குப் புறத்திருந்து பொருவோனைப் புறத்தோன் என்றும் தம் நூற்பாக்களில் சுட்டி யுள்ளார். அப்பகுதிகள் இங்குக் கூறத் தகுவன :

1) ''அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும்'' (நூ. 10)

2) ''அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்'' (நூ. 11)

எனவே, தொல்காப்பியர் மதிற்போரின் இரு பகுதியையும் நன்கு தெரிந்தவர் என்பது தெளிவு. ஆயினும், வெட்சி, கரந்தை என்ற குறியீடுகளை வழங்கியிருப்பினும், இரண்டினையும் வெட்சி என்ற ஒன்றின்கீழ் அடக்கி இலக்கணம் சொல்லியதுபோல உழிஞை, நொச்சி என்ற குறியீடுகளை வழங்கியிருப்பினும், இரண்டையும் உழிஞை என்ற ஒரு திணைக்குள் செறித்துக் கூறினார். தாம்

வகுத்துக்கொண்ட புறத்திணை ஏழ் என்ற கோட்பாட்டிற்குப் பொருத்தமாக இவ்வாறு அமைத்தனர் என்றே தெரிகிறது.

எனின், வேற்றுப் பூச் சூடுதலினாலும் வேற்றுத் தொழில் களாக முற்றுதலும் காத்தலும் இருத்தலானும் உழிஞை, நொச்சி என்ற இரண்டினையும் தொடர்புடைய இருவேறு திணைகளாகவே பன்னிருபடலம், பு. வெ. மாலை ஆசிரியர்கள் எண்ணினர். இக்கருத்து,

''அகத்திணைத் தொழிலும் அத்திணைப் பூவும்
அப்பெயர் பெறுதல் அந்நிலத் துரிய'' (2689)

எனவரும் சேந்தன் திவாகர நிகண்டிலும் தெளிவாக உணர்த்தப் பெற்றிருத்தல் இங்குச் சுட்டுதற்கு உரியது.

புறத்திரண்டில் காணப்பெறும் பெரும்பொருள் விளக்கம் என்ற நூல் இவ்விரு போர்களையும் முறையே எயில்கோடல் என்றும், எயில்காத்தல் என்றும் கொண்டன. இந் நூலினின்றும் பல பாடல் களை நச்சினார்க்கினியர் மேற்கோளாக எடுத்தாளுதல் எண்ணற் பாலது.

2. மதிலின் மாண்பு

அரசு என்ற நிறுவனம் நன்கு வளர்ச்சி பெற்ற நாகரிகம் முற்றிய காலத்தில்தான் கோட்டை, கொத்தளங்கள் அமைத்து நாட்டைக் காவல் புரியும் மேனிலை ஏற்பட்டிருத்தல் வேண்டும். அரசியல் உறுப்புகள் ஏழனுள் ஒன்றாக அரண் எணணப்பெற்றதை திருக்குறள், கௌடலீயம் உள்ளிட்ட பிற பொருள் நூல்களில் காணலாம். அரு+அண்+அரண் என்றாகும். இவண், அவண் என்ற சொற்களில் உள்ள சுட்டு நீங்கின் எஞ்சியுள்ள அண் இடப் பொருள் உணர்த்தக் காணலாம். ஆதலின் அரண் என்ற சொல்லிற் குப்பகைவர் நெருங்குதற்கு அரிய இடம் என்று பொருள் செய்தல் பொருந்தும். திருக்குறளில் அரண் என்ற தனியதிகாரம் அரணின் மாண்புகளையும் வகைகளையும் விரித்துக் கூறும். சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் உள்ளிட்ட காப்பியங்களில் மதில்களின் அமைப்பும் அருமையும் விரியாக வருணிக்கப்பெறுதல் குறிப்பிடத்தக்கது. மதிலின் சிறப்பினால்தான் மதில் மதிர் மதிரை மதுரை என்ற பெயர் வந்திருக்கவேண்டும் என்பதனைத் தக்க சான்றுகளினால் இலக்கியச் சோலையிலே என்ற நூலில் 'மதுரைமூதூர்' என்ற கட்டுரையில் விளக்கியுள்ளேன் கல்வெட்டுக்களில் மதிரை கொண்ட

கோப்பரகேசரிவர்மன் முதலிய பெயர்களில் மதிரை என்ற சொல்லே காணப்படுதல் சுட்டத்தக்கது.

தொல்காப்பியர், 'முழுமுதல் அரணம்' என்று சுட்டியதால், தலையாய அரணிடத்து நிகழ்வதே மதிற்போர் என்று இளம் பூரணர் எண்ணினார். இவர் உரையில்,

> ''முதல் அரண் என்றதனான், தலையும் இடையும் கடையும் என மூவகைப் படுமவற்றுள் தலையரண், அஃதாவது, அரணிற்குக் கூறுகின்ற இலக்கணம் பலவும் உடைத்தாதல்''

என்று வரும் பகுதியினால், அக்காலத்து நிறுவப்பெற்றிருந்த அரண்களின் வலிமை புலனாகும்.

மேற்சுட்டிய தொல்காப்பியத் தொடருக்கு நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் மேலும் தெளிவைத் தருவதால் அதனை இங்குக் காண்போம் :

> ''முழு அரணாவது மலையும் காடும் நீரும் அல்லாத அகநாட்டுட் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்து, தோட்டி, முள் முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்ததனுள்ளே இடங்கர்முதலிய உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும் ஏனைய பொறிகளும் பதணமும் ஏப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து, எழுவும் சீப்பும் முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற் கோபுரமும் பிற எந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம்''.

இவ்விளக்கம் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அரண் பற்றிய குறிப்புக்களைக் கருத்திற்கொண்டு அவரால் வழங்கப் பெற்றது எனலாம்.

வேந்தர்களின் தலைநகர்களில் பெருங்கோட்டைகள் அமை தலின், உழிஞைப்போர் என்பது நகரைத் தாக்கும் போர் என்று முடிபு செய்யலாம். முற்றுகையிடும் உழிஞைமறவரை எதிர்த்துத் தற்காப்புக்காகப் போர் புரியாது, கோட்டைக்குள் அச்சத்தால் பதுங்கியிருத்தல் போர் அறம் அன்று. இதனை,

''துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்
அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்

அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே'' (புறம். 44)

எனவரும் கோவூர்கிழாரின் பாடல் தெளிவுறுத்தும். நெடுங்கிள்ளிக் குரிய ஆவுரின் மதிலை அடைத்துக்கிடநத அகத்தோன் ஆகிய நெடுங்கிள்ளியை அணுகிப், புலவர் போர் அறத்தினை எடுத்துப் பேசுதலை இப்பாடல் உணர்த்துகிறது. பாரிவேளின் பறம்பு மலையினை மூவேந்தர் முற்றுகை இட்ட நிலையில், புறத்தோர் ஆகிய அவ்வேந்தரை அணுகிக் கபிலர் கூறிய அறிவுரைகள் கருதற்பாலன. இக்குறிப்புக்களினால், உழிஞை வேந்தனை எதிர்த்து அகத்தோன் ஆகிய நொச்சிவேந்தன் போரிடுதல் உண்டு என்பது தெளிவு. சென்ற நூற்றாண்டில் தோன்றிய மனோன்மணீ யத்தில் தமிழ் மரபினை நன்குணர்ந்த பெ. சுந்தரம்பிள்ளை, சீவகவழுதி சேரன் புருடோத்தமனுக்கு உணர்த்தக் கூறும் பகுதியில் ''உழிஞையால் குளதெனில் வழுதிபால் பழுதில் நொச்சியும் உண்டென நிச்சயம் கூறே'' எனவரும் தொடர் எண்ணற்பாலது.

பகைவர் நாட்டெல்லையின் அழிப்பு பெரிதாக இருப்பின் உழிஞைத் திணைக்கு உரியது என்றும், சிறிதாயின் வெட்சித் திணைக்கு ஓதப்பெற்ற ஊர்க்கொலை என்ற துறையின்கண் அடக்கி ஓதப்பெறும் என்றும் இளம்பூரணர் குறித்துள்ளார். எனின், நூற்பாவில் இடம்பெறும் 'முற்றலும் கோடலும்' என்ற தொடர்க்கு முற்றுதலும் காத்தலும் என்பது நேர்பொருள். கோடல் என்பதற்கு அழித்தல் என்று பின் வந்தோர் ஒருவர் பிழைபட உரை எழுதிய தால், இங்ஙனம் அவர் உரையில் விளக்கம் எழுதிச் சேர்க்கப் பெற்றிருத்தல் வேண்டும். நச்சினார்க்கினியர்,

''சென்ற வேந்தன் வளைத்தலும் இருந்தவேந்தன்
கைக்கொண்டு காத்தலும்''

என்று வரையும் பொருள் பொருத்தம் மிக்கதாகத் தோன்றுகிறது. எனவே உழிஞை, நொச்சி ஆகிய இருவகைப் போர் முறைகளையும் தொல்காப்பியர் அறிந்து சுட்டியுள்ளார் என்பது புலனாகும்.

இனி, மருதம் என்ற அகத்திணைக்கு ஏற்ற புறத்திணையாக உழிஞை அமைதலை,

''உழிஞை தானே மருதத்துப் புறனே''

என்ற நூற்பாவினால் தொல்காப்பியர் உணர்த்தியுள்ளார். அங்ஙனம் புறனாதற்கு உரிய காரணங்களை உரையாசிரியர்கள் கற்பனைத்திறத்தினால் கண்டு உணர்த்தியுள்ளனர். அவற்றை இங்குக் காண்போம்.

3. மருதத்தின் புறம் உழிஞை

(அ) இளம்பூரணர் இயம்பும் காரணங்கள்

மருதத்திற்கு உழிஞை புறனாவதற்கு இளம்பூரணர் பின் வருமாறு விளக்கம் தந்துள்ளார் :

> ''வஞ்சியிற் சென்ற வேந்தனொடு போர் செய்தல் ஆற்றாது உடைந்து மாற்றுவேந்தன் அரண்வலியாகப் போர் செய்யும் ஆகலானும், அவர் நாட்டகத்ததாகலானும், அவ்வழிப் பொருவார்க்கு விடியற்பொழுது காலம் ஆகலானும் அதற்கு இது புறனாயிற்று'' (ப.95).

இவ்வுரைப் பகுதியினால், வஞ்சிப்போரின் தொடர்ச்சியாகவே உழிஞைப்போர் அமையும் என்ற ஒரு பழைய மரபு புலனாகிறது. வஞ்சிப்போரினில் தோல்வியடைந்த வேந்தன் தனக்குரிய அரண் சேர்ந்து அங்கிருந்தபடியே போர் புரிவான் என்பதும் அத்தகைய அரண் மருத நிலத்தில் எழுப்பப்பெற்றிருக்கும் என்பதும் தெளிவா கிறது. இவர் உரையில் நாட்டகம் என்று சுட்டப்பெற்றது மருதத் திணை ஆகும். மதிலின் புறத்திருந்து தாக்குவோர்க்கும் அகத் திருந்து தடுப்போர்க்கும் மருத ஒழுக்கத்திற்கு ஓதப்பெற்ற விடியற் காலம் ஏற்றபொழுது என்பது உழிஞைக்கும் (நொச்சிக்குமாம்) மருதத்திற்கும் இவர் காட்டும் மற்றொரு இயைபாகும். மருதத் திற்குரிய ஒழுகலாற்றின்படி பரத்தையிடமிருந்து மீண்டுவரும் தலைவன் தனக்குரிய இல்லத்திற்கு விடியற்பொழுதில் திரும்பு வான் என்பதும் ஒரு புலனெறி வழக்கமாகவே உள்ளது. எனவே, அகத்தொழுக்கத்திற்கு ஏற்ற விடியற்பொழுது அதற்கு ஒத்த புறத் தொழுக்கம் ஆகிய உழிஞைப்போரிற்கும் ஏற்றதாக இயைபுறுத்தப் பெற்றது. இதுவும் ஒரு புலனெறி வழக்காகவே கொள்ளுதற்கு உரியது.

(ஆ) நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம்

இளம்பூரணரின் கருத்தினை ஏற்றுக்கொண்டு, அதற்கு மேலும் விளக்கம் தரும் வகையில் நச்சினார்க்கினியர் நவிலும் கருத்துக் களைக் காண்போம் :

''இருபெரு வேந்தர் தம்முள் மாறுகொண்டவழி எதிர்செலற்கு ஆற்றாதுபோய் மதிலகத்து இருந்த வேந்தன் மதில், பெரும் பான்மையும் மருதத்து இடத்தாதலானும், அம்மதிலை முற்றுவோனும் அந்நிலத் திருத்தலானும், ஒருவன் வாயில் வேணடத்திறவாது அடைத்திருந்த ஒப்புமையானும், உள்ளிருந்தவனும் புறப்பட விரும்புதலானும், மருதம்போல இதற்கும் பெரும்பொழுது வரைவின்மையானும், சிறு பொழுதினும் விடியற்காலமே போர் செய்தற்குக் காலம் ஆதலானும் உழிஞை மருதத்திற்குப் புறனாயிற்று''.

(ப. 173-4)

இவர் கருத்தின்படியும் பெரிய கோட்டை, கொத்தளங்கள் ஒரு நாட்டின் வளம்மிக்க மருதப்பகுதியில்தான் கட்டப்பட்டிருக்கும் என்று தெரிகிறது. தம் கருத்திற்கு ஆதரவாக,

''அகநாடு புக்கவர் அருப்பம் வெளவி'' (மதுரை. 149)

''பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று
உணங்குகலன் ஆழியிற் றோன்றும் ஓரெயில் மன்னன்''
புறம்-338)

''கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாசி அகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்'' (குறள்)

எனவரும் பழைய இலக்கியப் பகுதிகளை மேற்கோள் காட்டினார்.

கலித்தொகையில்,

''வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்''
(67:3-5)

''புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர'' (68:4-5)

எனவரும் பகுதிகளில் மருதவளம் கொழிக்கும் மதுரையில் விளங்கிய மதிலின் மாண்பு சுட்டப்பெற்றது. இப்பாடல் அடிகளில் ஊர் இன்னது என்று தெளிவாகக் குறிக்கப்பெறாவிடினும், புரிசைச் சிறப்பினால் மதில் மதிரை மதுரை எனப் பெயர் பெற்ற நகரையே குறித்தது என்ற கருத்தில் நச்சினார்க்கினியர் உணர்ந்து கூறுதல் பாராட்டத்தக்கது.

எனின், ஏனைய திணைகளில் மதில் இருக்காது என்று முடிபு கட்டி விடுதல் கூடாது. நல்லியக் கோடனின் எயிற்பட்டினம குறித்து.

''மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம்''

என்று சிறுபாணாற்றுப்படை சுட்டுதலின், நெய்தல் நிலத்திலும் மதில்கள் எழுப்பப் பெற்றன என்பது புலனாகும். மருதமும் நெய்தலும் மருவிய காவிரிப் பூம்பட்டினத்தின் மதிற் பெருமையினைச் சங்கப்பாக்களும் சிலப்பதிகாரமும் சிறப்பாகப் பொறித்துள்ளன. எனவே, மருதத்திற்கும் உழிஞைக்கும் ஓரியைபு கூறுதற்கு முற்பட்ட உரையாசிரியர்கள், அந்த நிலத்தில் பெரிய மதில்கள் எழுப்பப்பெற்றிருக்கும் என்று புலனெறி வழக்கம் பற்றிக் கூறி வைத்தனர் எனவே தோன்றுகிறது. அல்லாக்கால், தொடக்க நிலைக்கண் கோநகர்கள் மருத வளம் மிக்க மென்புலத்தில் அமைக்கப்பெற்றன என்பதும், பின்னர் தலைநகர் எந்தநிலத்திற்கு மாற்றப்பட்டதோ, அங்குக் கோட்டைகள் கட்டும் மரபு தோன்றியிருத்தல் வேண்டும் என்பதும் அறிந்து கொள்ளுதற்கு உரியன.

ஊடலில் புறத்திருந்து தலைவன் வேண்டவும், அகத்திருந்து தலைவி அடைத்திருத்தல்போல், உழிஞையோன் வேண்டவும் நொச்சியோன் அடைத்திருத்தலும் ஆகிய இயைபு நச்சினார்க்கினியரின் ஆக்கக் கற்பனைத் திறனுக்குச் சான்றாகிறது.

மருதத்திற்குப் பெரும் பொழுது வரையறை இல்லை; எல்லாப் பருவங்களும் உரியன. அங்ஙனமே உழிஞைப் போருக்கும் அப் பருவங்கள் யாவும் உரியன என்று மற்றொரு பொருத்தத்தையும் இவர் உரை சுட்டுகிறது.

இதுகாறும் மருதத்திற்கு உழிஞை புறமாதற்குரிய காரணங்களைக் கண்டோம். இனி, மதிலைத் தாக்குவது ஆகிய உழிஞையினை முதலிற் சுட்டுவதா? மதிலைக் காப்பதாகிய நொச்சியை முதலிற் குறிப்பதா? என்பது பற்றி இருவேறு கருத்துக்கள் காணப் படுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

4. நொச்சிக்குப்பின் உழிஞை

நொச்சிக்குப்பின்னர் உழிஞையினைச் சுட்டும் மரபு சில நூல்களிலும் உரைகளிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில்,

1) ''அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும்'' (நூ. 9)

2) ''அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்'' (நூ. 10)

என்று முதலில் நொச்சி வீரனும், அடுத்து உழிஞை வீரனும் குறிக்கப் பெற்றனர்.

இளங்கோவடிகளும் இம்மரபினைக் குறித்துள்ளார். கானல் வரியில், 'உள்ளாற்றா வேந்தன்' (7.49.3), 'எயிற்புறத்து வேந்தன்' (7.49.4) என்று இயம்பும் பகுதிக்கு, அரும்பதவுரை யாசிரியர் முறையே நொச்சியான், உழிஞையான் என்று பொருள் குறித்தல் கூர்ந்து நோக்கத்தக்கது.

திவாகர நிகண்டிலும்,

''ஏயில்கரத்தல் நொச்சி.
அது வளைத்த லாகும் உழிஞை''

என்று திணை வரிசை காணப்படுகிறது. இதுவே வீரசோழிய உரைப்புறத்தும் இடம் பெறுதல் சுட்டுதற்கு உரியது. (ப.122)

யாப்பருங்கல விருத்தியில்,

''வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை என்றாங்கு
இத்திறம் ஏழும் புறன்என மொழிப'' (ப.571)

என்று நொச்சிக்குப்பின் உழிஞை இடம்பெறுதல் காணலாம்.

வீரசோழிய உரைமேற்கோள் நூற்பா.

''வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை வாகை
எச்சப் படலமோ டிவையென மொழிப '. (ப. 117)

என்று மேற்சுட்டிய வரிசையினைப் பின்பற்றியது.

மாறன் அலங்கார உரையிலும் (நூ.76) நொச்சிக்குப் பின்னர் உழிஞைத்திணையினைப் பு. வெ. மாலை சுட்டியதாக ஒரு குறிப்பு காணப்படுகிறது.

எனவே, மதிலை அழிக்கவரும்பொழுதுதான் மதிலைக் காக்கும் தொழில் நடைபெறும் என்பதில்லை; தாக்காத காலத்தும் வீரர்கள் மதிலைக் காப்பர் ஆதலின், நொச்சி முன் கூறப்பட்டது எனலாம். சிலப்பதிகாரத்தில் அடல் வாள் யவனர் நகர் வாயிலைக் காத்த செய்தி காணப்படுகிறது (14:66-67).

பு. வெ. மாலையினைப் பதிப்பித்த டாக்டர் உ. வெ. சா. அவர்கள் ஏட்டுப்பிரதிகளில் நொச்சிப்படலம் முன்பும் உழிஞைப் படலம் பின்பும் காணப்பெற்றமையால், ஒரு சாராரைப் பின்பற்றி வரிசையை மாற்றாது அப்படியே பதிப்பித்துள்ளதாகக் குறித்துள்ளார்.

எனின்,ஒரு சாரார் உழிஞைக்கு முதன்மை கொடுத்துள்ளனர்.

5. உழிஞைக்குப்பின் நொச்சி

தொல்காப்பியர் நொச்சிக்கு முதன்மை வழங்கினும் அதனை உழிஞைக்குள் அடக்கிவிட்டார். பன்னிருபடலம்,

''உழிஞையும் நொச்சியும் தம்முள் மாறே''

என்று இயம்பியது.

பு. வெ. மாலையில் காணப்படும் இறுதி நூற்பா,

''உட்குடை உழிஞை நொச்சி தும்பை''

என்று எண்ணுகிறது.

யா. வி. உரையில்,

''உழிஞை ஆரெயில் முற்றலானும், நொச்சி
விழுமிதின் அவ்வெயில் காத்தலானும்'' (ப.571)

என்று உழிஞை முதலிற் சுட்டப்பெற்றது.

வீரசோழியத்தில்,

''வெட்சி கரந்தை விறல்வஞ்சி காஞ்சி உழிஞை நொச்சி'' (96)

எனவருதல் காணத்தக்கது.

எனவே, உழிஞை, நொச்சி ஆகிய இரண்டும் ஒன்றற்கு ஒன்று இயைபுடையதாகலின் ஓரொரு காரணம் பற்றி ஒவ்வொன்றை முதலிற் கூறினர் என்று தெளியலாம்.

இனி, தொல்காப்பியர் உழிஞைத் திணைக்கு ஓதிய நூற்பாக் களில் நொச்சிக்குரியனவாகக் காணப்பெறும் துறைகளை முதலில் நோக்குவோம்.

6. நொச்சித்திணை — துறைவிளக்கம்

1) தொல்காப்பியர், 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்' என்ற முதல் நூற்பாவில் (9) கூறிய எட்டுத் துறைகளுள் 'அகத்தோன் செல்வம்' என்ற ஒரு துறை மட்டுமே நொச்சிக்கு உரியது. இத்துறை அகத்தரசனது செல்வத்தைக் குறிக்கும் என்றார் இளம்பூரணர். மூவேந்தரால் முற்றுகையிடப்பட்ட பாரிவேளின் பறம்புமலையில் உழவர் உழாமலே கிடைக்கும் வளங்களைக் கபிலர் புனைந்து பாடும் புறப்பாடல் (109:3-10) இத் துறைக்கு உரியதாக எடுத்துக் காட்டினார்.

அகத்து உழிஞையோனின் குறைவில்லாத பெருஞ் செல்வத்தைச் சிறப்பித்துக் கூறுதல் இத்துறைப் பொருள் என்றார் நச்சி. அகத்தோனை நொச்சியான் என்று சொல்லுதற்குக் கூசி இங்ஙனம் அகத்துழிஞையோன் என்றார். உழிஞையோன் என்ற பெயர் அகத்து, புறத்து என்ற முன் ஒட்டுடன் மாறுபட்ட இரு சாரார்க்கும் வழங்கும் என்பது அவர் கருத்து. அகத்தோனின் பெருஞ்செல்வங்கள் ஆவன: படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு ஆகிய உறுப்புக்களின் சிறப்பும், நீர்நிலையும் ஏமப்பொருள் மேம்படு பண்டங்களும் உள்ளிட்டவை என்றார் நச்சி. புறத்திரட்டு என்ற தொகை நூலிலிருந்து எயில்காத்தல் என்னும் துறைக்குரிய ஒரு பாடலையும் இளம்பூரணர் எடுத்துக் காட்டிய ''அளிதோ தானே பாரியது பறம்பே'' என்ற புறப்பாடலையும் இத்துறையின் விளக்கத்திற்கு மேற்கோளாகக் காட்டினார்.

'அகத்தோன் செல்வம்' என்ற தொல்காப்பியத் துறைக்கு ஒத்ததாகப் பு.வெ.மா. நொச்சிப்படலத்தில் ஒரு துறையும் காணப் படவில்லை.

இனி,

''குடையும் வாளும் நாள்கோள் அன்றி'' (நூ 10)

என்ற இரண்டாவது நூற்பாவில் எண்ணப்பெற்ற பன்னிரு துறைகளில் தெளிவாக இரு துறைகள் நொச்சித்திணைக்கு உரியவை. அவை வருமாறு :

1) ஊர்ச்செரு வீழ்ந்த அதன்மறன்

'ஊர்ச்செருவின்கண் வீழ்ந்த பாசி மறனும்' என்பதற்குமேல் இத்துறையினை இளம்பூரணர் விளக்கவில்லை. இத்துறைக்கு முன்

நீர்ச்செரு சுட்டப்பட்டது. அது அகழி அரண் பற்றிய போர். அதனைத் தாண்டிச் சென்று உள்ளே ஊர்க்குள் நுழைந்துவிட்ட உழிஞை மறவரை எதிர்த்துப்பொருதல் பாசிமறன் எனப்பட்டது. நச்சினார்க்கினியர் ஒவ்வொரு துறைக்கும் பெரும்பாலும் இரு சாரார்க்கும் இயைபுமாறு உரைசெய்தலின், அவர் விளக்கத்தை நொச்சிக்கு மட்டுமே வரைந்து எடுத்துக்கொள்ளுதல் சரியன்று. எனின், அவரும் இத்துறையினைப் பாசிமறன் என்றார். மறனுடைப் பாசி என்ற பெயரில் இத்துறை பு. வெ. மா. நொச்சிப் படலத்தில் காணப்படுகிறது (87). அகத்தோராகிய நொச்சி வீரர்கள், மதிலை முற்றுகையிட்ட உழிஞை வீரர்களை எதிர்த்துப் போரிடும்பொழுது வீரசுவர்க்கம் புகுதலை இத்துறை குறிக்கும் என்பர் ஐயனாரிதனார். இதற்குரிய ''பாயினார் மாயும் வகையால்'' என்ற உதாரண வெண்பாவையே இளம்பூரணர் பாசிமறனுக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

இத்துறையுடன் பு. வெ. மாலையில் தொடர்ந்து வரும் ஊர்ச்செரு (88), செருவிடை வீழ்தல் (89) ஆகிய இரு துறைகள் தொடர்புடையவை. தொல்காப்பியத் தொடரிலேயே ஊர்ச்செரு என்ற பெயர் முதற்கண் அமைந்தமையால் பு. வெ. மா. சுட்டிய ஊர்ச்செருவினை இயைபுறுத்திப் பார்த்தல் தக்கதே. பகைவரால் நுழைதற்கரிய காவற்காட்டுடன் அகழியும் சிதையாதபடி போர் புரிந்த நொச்சி வீரர்களின் மறச்சிறப்பினைக் கூறுதல் ஊர்ச்செரு எனப்படும். கிடங்கினையும் காவற்காட்டையும் காத்து நின்று உயிர்நீத்த நொச்சி வீரர்களின் வெற்றியை சொல்வது செருவிடை வீழ்தல் என்னும் துறையாகும். 'வீழ்தல்' என்ற சொல்லும் மேலே சுட்டிய தொல்காப்பியத் தொடரில் வரும் 'வீழ்ந்த' என்ற சொல்லும் இயைத்து எண்ணத்தக்கவை.

எனின், நச்சினார்க்கினியர் வேறொரு விளக்கத்தினைத் தந்துள்ளார். மதிற்புறத்தில் அன்றி, ஊரகத்தில் நிகழ்த்தும் போரை விரும்பிய வீரர்களின் மறச்செயலை ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறன் என்ற துறை சுட்டியது என்றார். இவர் கருத்தின் படி புறத்தோன், அகத்தோன் ஆகிய இருவர்க்கும் பாசிமறம் என்ற துறை அமைவது ஆகும்.

2) மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கம்

இளம்பூரணர், ''மதின்மேற்கோடற்குப் பரந்த மதிலோர் பக்கம்'' என்று உரை வரைந்தனர். ''அகமிசைக்கு இவர்ந்தோன்

பக்கமும்'' என்று பாடம் படித்தனர் நச்சி. ''புறஞ்சேரி மதிலும் ஊரமர் மதிலும் அல்லாத கோயிற் புரிசைகளின் மேலும் நின்று போர் செய்தற்குப் பரந்து சென்றோன் கூறுபாடும்'' என்பது அவர் கூறும் உரை. புறத்தோன் அகமிசைக்கு இவர்தல், அகத்தோன் அகமிசைக்கு இவர்தல் என இருசாரார்க்கும் பொருந்த இருவெண் பாக்களை மேற்கோள் காட்டினார். கோயில் புரிசை என்பது அரசனுறையும் அரண்மனையினைக் குறிக்கும்.

இத்துறை பு. வெ. மா. சுட்டிய எயில்தனை அழித்தல் (92) என்ற துறையுடன் இயைத்து நோக்கத்தக்கது. மதிலின் மேல் நின்று போர்புரியும் உழிஞை வீரர்கள் நொச்சி வீரர்களால் தாக்கப் பட்டு, அவர்தம் உடல் உறுப்புக்கள் மதிலுக்குப் புறத்திலும் அகத்திலும் சிதறி விழுதலை இத்துறைக்குரிய பொருளாக ஐயனாரிதனார் வெண்பாவிற் குறித்தனர். ''அகத்தன வார்கழல்'' எனத் தொடங்கும் அதே உதாரணச் செய்யுளை இளம்பூரணர் மதிலோர் பக்கம் என்ற துறைக்கு மேற்கோள் காட்டினார்.

இதுகாறும் தொல்காப்பியத்தில் சுட்டப்பெறுவனவற்றுள் மூன்று துறைகளில் இரண்டு மட்டுமே பு. வெ. மா. நொச்சிப் படலத்துள் கூறப்பெற்ற துறைகள் சிலவற்றுடன் இயைபு பெறுதலைக் கண்டோம். இனி, பு. வெ. மாலை நொச்சித் திணைக்குக் கூறிய கூடுதலான துறைகள் ஐந்தாகும். அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

7. கூடுதல் துறைகள்

1) நொச்சி (8€)

ஒவ்வொரு போரின் துவக்கத்திலும் அதற்கு அடையாள மாகிய பூவைச் சூடுதல் அக்காலத்து மரபு. ஆதலின், மறத்திணை யின் இலக்கணம் கூறுமிடத்து முதன்முதல் சுட்டப்படுவது அதற்குரிய பூவினைச் சூடுதல் ஆகும். திங்கள் தவழும் உயர்ந்த மதிலைப் புரத்தற் பொருட்டு வேல் மறவர்கள் சூடும் நொச்சிப் பூவினைப் புகழ்தல் நொச்சி என்னும் துறைக்குரிய பொருளாகும்.

2) குதிரைமறம் (90)

நொச்சித் திணையில் மட்டுமன்றித் தும்பைத் திணையிலும் குதிரைமறம் என்ற துறையினை ஐயனாரிதனார் குறித்துள்ளார் (133). பெரிய மதில்களையும் தாண்டிப் பாய்ந்து செல்லும்

குதிரையின் வீரத்தைப் போற்றுவது குதிரைமறம் எனப்படும். மதிற்போரில் மட்டுமன்றித் தரைப்போரிலும் பாய்ந்து சென்று போர்புரிதற்கு உதவும் குதிரையின் ஆற்றலைப் பாராட்டுவது தும்பைத் திணைக்குரியதாகக் கருதப்பெற்றது. எனின், தொல்காப்பியர் குதிரைநிலை என்ற பெயருடன் ஒரு துறையினைக் குறித்துள்ளார். அது தும்பைத்திணையில் மட்டுமே காணப் படுகிறது. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை ஆகிய சங்க இலக்கியங்களில் அயல்நாட்டுக் குதிரைகள் கடல்வழி தமிழகத் திற்கு இறக்குமதியாகிய செய்தி காணப்படுகிறது. இவை குதிரைப்போர்க்குப் பயன்பட்டிருக்கலாம். துருக்கர் நாட்டிலிருந்து குதிரைகள் வந்த வரலாற்றைக் கம்பரும் குறித்துள்ளார். தமிழ் வேந்தர்கள் அரபு நாட்டுக் குதிரைகளை மிகுதியாக வாங்கினர் என்ற செய்தி மார்க்கோபோலோ எழுதியுள்ள பயணக்குறிப் பினால் அறியலாம்.

3) எயிற்போர் (91)

அரணைக் காவல்புரியும் நொச்சி வீரர்தம் இகலைச் சிறப்பித்தல் இத்துறையாகும். இம்மறவர்கள், உழிஞை வீரர்கள் விடுக்கும் அம்பினால் மார்பினின்றும் குருதி பெருகியபொழுதும் பொருட்படுத்தாது மான உணர்ச்சி மிகுதியால் புறத்தேபோந்து அடுவதை விரும்புவர். இப்பொருண்மையும் இத்துறைக்கு உரியது.

4) அழிபடைதாங்கல் (93)

அழிக்கும் படையாகிய உழிஞை வீரர்களைத் தடுத்து நிறுத்துதல் இத்துறைப் பொருளாகும். கிடுகுபடை பலவற்றையும் வென்று பகைவாகிய உழிஞையர் எதிர்த்தனர். அரணைக் காக்கும் நோக்கில் அகத்தே அவர்கள் அடிஎடுத்து வைக்காதபடி நொச்சி மறவர்கள் வாளோச்சித் தடிதலை விரித்துரைப்பது இத்துறையின் பாற்படும்.

இத்துறை தொல்காப்பியத்தில் உழிஞைத் திணைக்குரிய பகுதியில் இடம் பெறவில்லை. எனினும், வஞ்சித்திணைக்குரிய ''அழிபடை தட்டோர்த் தழிஞ்சி'' என்ற துறையிலும், வாகைத் திணைக்குரிய ''அரும்பகை தாங்கும் ஆற்றல்' என்ற துறையிலும் பொதிந்துள்ள பொருண்மையுடன் இத்துறையின் பொருண்மை ஒத்ததாகத் தோன்றுகிறது.

5) மகள்மறுத்து மொழிதல் (94)

நொச்சியானின் மகளை மணக்கும் கருத்துடனும் உழிஞைப் போர் தொடங்கும். அவன் வேண்டுகோளை நொச்சியான் மறுத்துரைத்தலும், திரும்பிச் செல்லாது போரிடுவோனை அழித்தலும் இத்துறைப் பொருள் ஆகும். பொருத உழிஞை யானுக்குரிய மழகவிற்றையும் கொன்று அதன் கொம்பினைத் தன் மகளுக்குக் கட்டிற் காலாக ஆக்கிக்கொள்ளுதலை இத்துறைக் குரிய மேற்கோள் வெண்பா உணர்த்துகிறது.

நொச்சித்திணையில் மட்டுமன்றிக் காஞ்சித் திணையிலும் மகட்பாற்காஞ்சி (84) என்ற துறை காணப்படுகிறது. இரண் டிற்கும் உள்ள வேறுபாட்டினைச் சாமுண்டி தேவநாயகர் குறித்துள்ளார். இவர் கருத்தின்படி மகட்பாற்காஞ்சி மன்னர்க் குரியது. இதற்கு, ''ஆயிரு திணையும் அரசர்க்குரிய'' என்ற நூற்பாவை ஆதாரமாகக் காட்டினார். இந்நூற்பா எந்த நூலில் இடம்பெற்றது என்பது அறியப்படவில்லை, நொச்சித் திணையில் வரும் மகள்மறுத்து மொழிதல் மறவர்க்குரியது என்று வேறுபிரித்துக் காட்டினார் (ப. 46).

உழிஞைப் படலத்திலும் மகட்பால் இகல் (123)பேசப்பட்டது. அதன் பொருண்மையினைப் பின்னர்க் காண்போம்.

இதுகாறும் நொச்சித்திணைக்குரிய ஐந்து புதிய துறைகள் பு. வெ. மாலையில் இடம்பெற்ற திறம் கண்டோம்.

இனி, தொல்காப்பியர் சுட்டும் உழிஞைத் திணைக்கு மட்டுமே உரிய துறைகளின் பொருள் விளக்கமும், அவை எந்த அளவில் பு. வெ. மாலையில் இடம் பெற்றன என்ற நிலையும் பற்றிச் சிந்திப்போம்.

8. உழிஞைத்திணை—துறைவிளக்கம்

தொல்காப்பியர் ''கொள்ளார் தேஎம்'' என்ற நூற்பாவில் முதன்மைமிக்கனவாகக் கருதப்பெறும் எட்டுத் துறைகளைச் சுட்டியுள்ளார். அவற்றுள் ஏழு துறைகள் உழிஞைத் திணைக்கு உரியவை. அவற்றுக்குரிய விளக்கத்தை முதற்கண் காண்போம்.

(அ) 1) கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்

கொள்ளார் என்பது

(அ) தன்னை இறை என்று கொள்ளாரையும்

(ஆ) தன் ஆணையைக் கொள்ளாரையும் குறிக்கும் என்றார் இளம்பூரணர்.

(அ) தன்னை இகழ்ந்தவர்களையும்,

(ஆ) தான் இகழ்ந்தவர்களையும் குறிக்கும் என்றார் நச்சினார்க்கினியர்.

பகைவர் தேயத்தைக் கொள்ளக் கருதிய வேந்தரின் கொற்றத்தைப் பாடுதல் இத்துறைக்கு உரிய பொருள் என்பர் இளம். கோவூர்கிழார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பற்றி,

''ஆனா ஈகை அடுபோர் அண்ணல் ...
மாற்றிடு வேந்தர் மண்நோக்கினையே''—(புறம்-42)

என்று பாடிய புறப்பாடலை இத்துறைக்கு மேற்கோள் காட்டினார் இளம். எனின், இப்பாடல் வாகைத்திணையில் அரசவாகை என்னும் துறைக்குரியதாகத் தொகுக்கப்பெற்றுள்ளது.

இத்துறையினை நச்சினார்க்கினியர் வேறு வகையில் விளக்குதல் காணத்தக்கது. ''பகைவர் நாட்டினைத்தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான்போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றி' என்பது இவர்தரும் விளக்கம் ஆகும். இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் இதன்பாற் படும் என்றார். இதுவும் பொருத்தமாகத் தோன்றுகிறது. பேராற்றல் காரணமாக வெற்றி பெறுதல் உறுதி என்ற உள்ளத்தால் பெருவேந்தர் இங்ஙனம் செயல்புரிதல் நடைமுறையிலும் காணப்படுவதே ஆகும்.

பு. வெ. மா. சுட்டும் கொற்ற உழிஞை (99) என்னும் துறை தொடர் ஒப்புமையினால் இதனுடன் இணைத்து நோக்குதற்கு உரியது. ''அடையாதார் அரண் கொளீஇய, படையொடு பரந்தெழுந் தன்று'' என்பது இத்துறைக்குரிய கொளு.

2) உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு

நினைத்ததை முடிக்கும் வேந்தன் சிறப்பினைக் கூறுதலும் உழிஞைக்குரிய துறை என்பர் இளம்பூரணர். வேந்தனுக்குரிய தனிப்பெரும் தகுதியும் சிறப்பும் நினைத்ததை முடிப்பதில் அடங்கியுள்ளன. ''முருகு ஒத்தியே முன்னியது முடித்தலின்'' (புறம்-56) எனப்போற்றப் பெறுதல் காண்க. பாண்டியன் நன்மாறன் நினைத்ததை முடிப்பவன். அவனுக்கு, முன்னியது முடிக்கும் முருகனை உவமை கூறினார் நக்கீரர். பகைவர் அரணைக் கைக்கொள்ள நினைத்தலே 'உள்ளியது' என்று இங்குச் சுட்டப் பெற்றது. அகத்தரசனை அழித்தலும் இத்துறையின்பாற்படும் என்றார் இளம்.

குறித்த குறிப்பினை முடிக்கின்ற வேந்தனின் சிறப்பினை அவன் படைத்தலைவன் முதலியோரும் வேற்று வேந்தன்பால் தூது செல்வோரும் எடுத்துரைத்தல் இத்துறைக்குரியது என்பர் நச்சினார்க்கினியர்.

பு. வெ. மா. சுட்டும் அரசு உழிஞை (100) என்ற துறை இதனுடன் ஒத்தது. காவலன் புகழ் விளம்புதல் இத்துறையின் கருத்தாகும்.

3) தொல்லெயிற்று இவர்தல்

'தொல்லெயிற்கு இவர்தல்' என்று பாடம் கொண்டார் நச்சி. ''தொல் எயிலின்கண பரத்தல்'' என்று பொருள்கண்டார் இளம். பரத்தல் என்பது உழிஞை வீரர்கள் பரவியிருத்தலைக் குறித்தது. இந்தத் துறைக்கு உதாரணமாக, ''புல்லார் புகலொடு'' எனவரும் பு. வெ. மா. பாடலை இளம்பூரணர் எடுத்துக் காட்டினார். இதனைப் புறத்திறை என்ற ஐயனாரிதனார் சுட்டினார். 'புறத்தே தங்குதல்' புறத்திறை ஆகும். உழிஞை சூடிய வீரர்கள் மதிலின் புறத்தே பொருதற்குத் தங்கியிருத்தலை இது குறிக்கிறது. இக்குறியீடு தொல்காப்பியர் அறியாததன்று. வெட்சித்திணைக்குரிய துறைகளைக் கூறும் நூற்பாவில், ''வேயப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை'' என்று குறித்துள்ளார் (நூ. 61). அங்கு, புறத்திருக்கை என்று உரைகண்டார் இளம்.

எனின், நச்சினார்க்கினியர் வேறு விளக்கம் தருகிறார். 'ஒருகாலத்தும் அழிவில்லாத மதில்' தொல்எயில் எனப்பட்டது. அத்தகைய அரிய மதிலை இந்தப் பகலுக்குள் அழித்து விடுவேன்

என்று வஞ்சினம்கூறி, அங்ஙனம் அழித்தற்கு விருப்பம் செய்தல் என்பர்.

4) தோலது பெருக்கம்

தோல் என்பது கவசத்தைக் (Shield) குறிக்கும். புறநானூற்றில், ''தோல், துவைத்தம்பிற் றுன்ளி தோன்றுவ''(4:5) என்றும், ''தோல்தா, தோல்தா என்றி'' (300.1) என்றும் வருதல் காணலாம். கவசப்படையினது பெருக்கத்தையும் பெருமையினையும் பாடுதல் இத்துறைக்குரிய பொருளாகும் என்பது இளம்பூரணரின் எண்ணம் இதனைப் பு. வெ. மா. தோலுழிஞை (106) என்று சுட்டியது. இதற்கு, ''நின்றபுகழ் ஒழிய'' எனத்தொடங்கும் அதே பாடலையே இளம்பூரணரும் உதாரணம் காட்டினர்.

நச்சினார்க்கினியர், ''மதின்மேற் சென்றுழி மதிலகத்தோர் அப்புமாரி விலக்குதற்குக் கிடுகும் கேடகமும் மிடையக் கொண்டு சேறலும்'' என்று இயம்புதல் கருதற் பாலது. போரின் வேகத்தை இவ்வுரை புலப்படுத்துகிறது.

இந்நான்கு துறைகளும் முற்றுகையிடும் உழிஞை வேந்தனுக்கு உரியவை என்பர் நச்சி.

5) புறத்தோன் அணங்கிய பக்கம்

பகைத்த புறத்தரசன் வருந்திய பகுதியைக் கூறுதல் இத்துறையின் பாற்படும். சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன், நீரரணையும் செம்பு ஒத்த மதிலையும் கொண்ட பகைவேந்தரின் மூதூரைச் சிதைத்தலைக் கூறும் மாறோக்கத்து நப்பசலையாரின் பாடலை (புறம். 37) இத்துறைக்கு உதாரணம் காட்டினார் இளம்பூரணர். அகத்தோனின் வளம் இப்பாடலில் சுட்டப்பெற்றது.

மாறுபட்ட புறத்தோனை, அகத்தோனாகிய நொச்சிவேந்தன் தன் செல்வப்பெருக்கினால் மட்டுமன்றிப் போர்த்தொழிலாலும் வருத்துதலைக் கூறுதல் இத்துறையின் பொருண்மை என்றார் நச்சினார்க்கினியர். இவர் கருத்தின்படி, பின்னர் பேசப்படும் நான்கு துறைகளும் உள்ளிருந்து பொரும் உரம்மிக்க வேந்தனின் செயல்களைக் குறிப்பன வாதலின், இவ்வாறு விளக்கம் கண்டனர் எனலாம். தகடூர் யாத்திரையிலிருந்து ஒரு பாடலை உதாரணம் காட்டினார்.

இத்துறைக்கும் நேரொத்ததாகப் பு. வெ. மாலையில் துறை காணப்படவில்லை. இந்நூலில் சுட்டப்பெறும் புறத்துழிஞை (110) அகழியின் புறத்தில் உழிஞையர் தங்குதலைக் குறித்தலின் வேறு துறையாக எண்ணுதற்குரியது.

6) ஒருதான் மண்டிய குறுமை

பகைவீரர்கள் பலரையும் தான் ஒருவனாக எதிர்த்து நின்று போரிடும் பேராற்றலையும் இத்தகைய வீரம் உழிஞைத்திணைக்கு மட்டுமே உரியதன்று. வெட்சித்திணைக்கு ஓதப்பெற்ற 'வருதார் தாங்கல்' என்ற துறையும்; வஞ்சித்திணைக்குக் கூறப்பெற்ற ''வருவிசைப் புனலைக் கற்சிறைபோல, ஒருவன் தாங்கிய பெருமை'' என்ற துறையும், உழிஞைத்திணைக்கு உரியதாக உரைக்கப்பெற்ற ''ஒருதான் மண்டியகுறுமை''என்ற துறையுடன் ஒருங்கு வைத்து எண்ணற்பாலவை. இவற்றுடன், பின்னர்த் தும்பைத் திணைக்கு ஓதப்பெறும் ''ஒருவன் தான்மீண்டெறிந்த தார்நிலை'', ''கூழை தாங்கிய பெருமை'' முதலிய துறைகளின் பொருண்மையும் இணைத்து எண்ணுதற்கு உரியவை. கூட்டு வீரத்தைப் புகழ்வதுடன், தனி மறவனின் வீரத்தையும் விதந்து கூறுதல் வீர இலக்கியம் படைப்பார்க்குக் குறிக்கோளாதலை இத் துறைகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. ''கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ'' என்ற கம்பன் சொல்லும் இங்குக் காணத் தக்கது.

மிகவும் இளைஞனாகிய பாண்டியன் நெடுஞ்செழியன் உழிஞை சூடித்தான் ஒருவனே வம்பமன்னரைப் பொருதழித்த திறம் கூறும் புறப்பாடலை (77) இளம்பூரணர் இத்துறைக்கு மேற்கோள் தந்தனர்.

இத்துறையினைப் பு. வெ. மா. குற்றுழிஞை (107,108,109) என்று சுட்டுகிறது. இத்துறைக்கு, ''கருதாதார் மதிற்குமரிமேல், ஒருதானாகி இகல் மிகுத்தன்று'' என்று விளக்கம் கூறினர் ஐயனாரிதனார். மேலும் சங்கம் முழங்கவும், கொம்பு ஊதவும் காவற் காட்டினைக் கடந்து உள்ளே செல்லுதலும் இத்துறையின் பாற்படும் என்றார். நொச்சியாரின் அரணைக் குறுகினும் குற்றுழிஞை என்றும் குறித்தனர்.

எனின், நச்சினார்க்கினியர் குறமை என்ற சொல்லிற்குச் சிறுமை என்று பொருள் கண்டார். அகத்திருந்தோன் தன்னரண் அழிவு தோன்றிய வழிப் புறத்துப்போர் செய்யும் சிறுமையினை

இத்துறை சுட்டும் என்று கருதினார், 'வருகதில் வல்லே' (புறம். 284) என்ற பாடலை மேற்கோள் காட்டினார். இதே பாடலை இவரே, 'ஒருவன் தாங்கி பெருமை' என்ற வஞ்சித்திணைக்குரிய துறைக்கும் எடுத்துக் கூறியிருத்தலின், இவ்விரு துறைகளின் பொதுமை புலனாகும்.

7) உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில்

வெகுண்டு வருகின்ற புறத்தோராகிய உழிஞை வீரர்களின் வருகையினை ஒரு பொருட்டாக மதியாதிருக்கும் அகத்தோராகிய நொச்சி வீரர்களின் மதிலரணின் மாண்பினைக் கூறுதல் இத்துறை என்பர் உரையாசிரியர்கள்.

இதனை ஆரெயில் உழிஞை என்பர் ஐயனாரிதனார். தம்மைப் பணியாதாரின் நீண்ட மதிலின் சிறப்பினையும் திண்மையினையும் சொல்லுதல் இத்துறையின் பாற்படும் என்றார் (105).

இளம்பூரணர், 'மயிற்கணத் தன்னார்' என்ற பு. வெ. மா. பாடலை உதாரணம் கூறினர். பொன்முடியார் பாடிய தகடூர் யாத்திரைப் பாடல் ஒன்றினை எடுத்துக்காட்டினார் நச்சி.

கூறியது கூறலா?

தொல்காப்பியர் உழிஞைத்திணைக்கு எட்டுத்துறைகள் உரியன என்ற ஒரே கருத்தினை.

''அதுவே தானும் இருநால் வகைத்தே'' (நூ.67)

''..... சொல்லப் பட்ட நாலிரு வனகத்தே'' (நூ.68)

என்று இரு நூற்பாக்களில் சுட்டியுள்ளார். இலக்கண நூற்பா கூறியது கூறல் என்று இயம்பப்பெறும் குற்றம் இன்றி யாக்கப் பெறுதல் வேண்டும் என்பது விதி. அதற்குப் புறம்பாக மேற் சுட்டியவை அமைந்தனவோ என்ற ஐயத்தை எழுப்பி, அமைதி காண்கிறார் இளம்பூரணர். ''பதினெட்டு இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்தும் தொகை கூறினார். இது கூறியது கூறலன்று; தொகை'' (ப.99). வேறொரு கருத்தினை விளக்குவதாயின் கூறியது கூறல் குற்றம் அன்று என்பது இலக்கணிகளின் எண்ணம். உழிஞைத்திணைக்கு 18 துறைகள் கூறியவர்களும் உண்டு; 29 துறைகள் கூறியவர்களும்

உண்டு. ஆனால், அவர்தம் கருத்து தொல்காப்பியர்க்கு உடன் பாடில்லை என்பது தோன்ற ஒரு முறைக்கு இரு முறையாக அழுத்தம் பெறுதற் பொருட்டு உழிஞைக்குத் துறைகள் எட்டே என்று உறுதிப்படுத்திக் கூறினார் என்பது இளம்பூரணரின் கருத்தாகும். 29 துறைகள் கூறியவர் ஐயனாரிதனார். பு. வெ. மாலையில்,

"......இழுமென் சீர்த்தி இருபத் தொன்பதும்
உழிஞை என்மனார் உணர்ந்திசி னோரே"

என்று சுட்டப்பெற்றமை காணத்தக்கது.

உழிஞைத்திணைக்கு உரியனவாக 18 துறைகள் கூறிய இலக்கண ஆசிரியர் இன்னார் என்று அறியப்படவில்லை. ஒருவேளை, இந்த உரைப் பகுதி இளம்பூரணத்தில் இடைச் செருகலாகக் கலந்து விட்டிருக்கலாம்.

நச்சினார்க்கினியர், இருமுறை துறைத்தொகை கூறப் பெற்றமைக்கு வேறொரு விளக்கம் கூறியுள்ளார் அது வருமாறு:

"முற்கூறிய தொகையேயன்றி ஈண்டும் தொகை கூறினார், அந்நாலிரண்டுமேயன்றி அவைபோல்வனவும் நாலிரண்டு துறை தோன்றும் என்றற்கு. அவை புறத்து வேந்தன் தன் துணையாகிய அரசனையாயினும் தன்படைத் தலைவரையாயினும் ஏவி, அகத்து வேந்தற்குத் துணையாகிய அரசரது முழுமுதல் அரண் முற்றலும் அவன்தான் அதனைக் காவல்கோடலும் நிகழ்ந்தவிடத்தும் இவ்விருநான்கு வகையும் இருவர்க்கும் உளவாதலாம்."

இவ்வுரையினால், உழிஞைப்போர் இரு சார்பிலும் துணை யாக வரும் வேந்தர் அல்லது படைத்தலைவர்களுக்கிடையேயும் நிகழ்தலும் உண்டு என்பதும், அப்போதும் இங்குச் சுட்டப்பெற்ற எட்டுத்துறைகளுக்குரிய செயல்களும் நிகழும் என்பதும் அறிவித் தற்குத் தொல்காப்பியர் இருமுறை தொகை கூறியதாக நச்சினார்க்கினியர் கருதினார் என்பது புலனாகும்.

வெட்சி, வஞ்சிப்போர்களுக்குச் சொல்லப்பட்ட படையியங்கு அரவம், பாக்கத்து விரிச்சி முதலியன உழிஞைப் போர்க்கும் கொள்ளுதல் வேண்டும் என்ற கருத்தில், "இத்திணைக்குப் படையியங்கரவம் முதலியனவும் அதிகாரத்தாற் கொள்க." என்று நச்சினார்க்கினியர் நவின்றனர்.

(ஆ) இரண்டாம் நூற்பாவில் கூறப்பெற்றவை (நு. 69)

தொல்காப்பியர், உழிஞைத் திணைக்குரிய துறைகள் எட்டு என்று கூறியிருப்பினும், தொடர்ந்து வரும் நூற்பாவில் மேலும் பன்னிரண்டு துறைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். இவற்றுள் பெரும்பாலன பு. வெ. மாலையில் நொச்சித் திணைக்கும், ஒருசில உழிஞைத்திணைக்கும் உரியனவாக உரைக்கப்பெற்றன. ஆதலின் இத்துறைகட்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கமும் ஐயனாரித னாரின் கருத்தும் குறித்து ஒப்பாய்வு செய்து உண்மை காண்போம்.

2) குடைநாட்கோளும் வாள்நாட்கோளும்

நாள், கோள் என்பன முறையே நாண்மீனாகிய நட்சத்திரத் தையும் கோள்மீனாகிய கிரகத்தையும் குறிப்பன. கிரகங்கள் நட்பு, ஆட்சி, உச்சம்பெற்றுள்ள ஓரையில் நல்ல நட்சத்திரத்தில் தனது கொற்றக் குடையினையும் வெற்றி வாளையும் உழிஞை வேந்தன் போர்முனை நோக்கிப் போக்குவான். பிறகுதான் களம் நோக்கிப் புறப்படுவான். இவ்விரு துறைகளையும் குடைநாட்கோள், வாள்நாட்கோள் என்றே பு. வெ. மாலையும் சுட்டும் (96, 97). இவற்றுக்கு எடுத்துக்காட்டாக இடம்பெறும் ''நெய்யணிக'' ''வாள்நாட் கோளலும்'' என்ற வெண்பாக் களையே இளம்பூரணரும் உதாரணம் கூறினர். நச்சினார்க் கினியிர், புறத்தோன் அகத்தோன் ஆகிய வேந்தர் இருவருமே குடை, வாள் முதலியவற்றைப் பகைவர் திசைநோக்கி நல்ல நாளில் புறவீடு செய்வர் என்று கூறி, அங்ஙனம் செய்தற்கு உரிய மேற்கோள்களைப் பெரும்பொருள் விளக்கம், தகடூர் யாத்திரை முதலியவற்றினின்றும் எடுத்துக்காட்டினார்.

தமிழர் வாழ்வியலில் நாளும் கோளும் சிறப்பிடம் பெற்றன என்பதற்கு இத்துறைகளும் சான்றாக விளங்குகின்றன.

3) மடையமை ஏணிமிசை மயக்கம்

மதிலில் மடுத்தலமைந்த ஏணி சார்த்தி அதன்மேல் பொரும் போர் மயக்கத்தினை இத்துறை சுட்டும் என்றார் இளம்பூரணர். மயக்கம் என்ற சொல் கூட்டத்தைக் குறிக்கும். ''தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து'' என்ற புறப்பாடல் வழக்கும் காணத்தக்கது. வீரர்கள் மதிலின்மிசை ஏணி சார்த்தி அம்பு

தொடுத்தல் அக்காலத்துப் போர் மரபாதலின், அதனைத் தொல்காப்பியர் ஏணிமிசை மயக்கம் என்று சுட்டினர் எனலாம்.

'மடையமை ஏணி' என்பது மீதிடு பலகையொடும் மடுத்துச் செய்யப்பட்ட ஏணி என்று உரைகாண்பர் நச்சி. ஏணிமிசை நின்று போர் புரிவோர் புறத்தோர் ஆகிய உழிஞையர் மட்டும் அல்லர்; அகத்தோரும் அவ்வாறே போரிடுவர் என்றும் அன்னார் விளக்கம் கூறினர். ஆதலின், புறத்தோர் ஏணிமயக்கம் என்றும் அகத்தோர் ஏணிமயக்கம் என்றும் இரு வகைப்படும் என்றார்.

தொல் சுட்டிய ஏணிமயக்கம் என்ற ஒரு துறையினை ஏணி நிலை (112), எயிற்பாசி (113) என்று இரு துறைகளாக ஐயனாரிதனார் விளக்கியுள்ளார். ஏவறைகளையுடைய பகைவரின் மதிலின்கண் ஏணியைச் சார்த்துதல் ஏணி நிலை எனப்படும். அங்ஙனம் சாத்துங்கால் மதிலில் பொருத்தப்பட்ட பல்வகைப் பொறிகளும் உழிஞை வீரர்களைத் தடுப்பினும். குதிரையும் யானையும் உடைய அவ்வீரர்கள் அஞ்சாராய் அரணில் பல இடத்தும் ஏணிகளைச் சார்த்துவர் (112). பகைவரின் காவற் குறும்பின் வலிகெடும்படி ஏணிமேல் பாம்பும் உடும்பும்போல ஏறுதலை எயிற்பாசி என்ற துறையாக ஐயனாரிதனார் குறித்தனர் (113).

தொல்காப்பியர் சுட்டிய ஏணிமிசை மயக்கத்திற்கு எயிற்பாசித் துறைக்குரிய பு. வெ. மா. வெண்பாவினையே இளம்பூரணர் மேற்கோள் காட்டியிருத்தலின், இவ்விரண்டும் ஒன்றையே சுட்டு மெனக் கொள்ளலாம். எனின், ஏணி சார்த்துதல், ஏணியில் நின்று பொருதல் ஆகிய இரு துறைகள் ஏணிமிசை மயக்கம் என்ற ஒன்றின் விரிவு என்று கொள்ளலாம்.

4) முற்றிய முதிர்வு

தன் படையைச் செலுத்திப் போர் முடியும்படி மதிலைக் கைக் கொண்டு உழிஞையோன் முற்றிய வினைமுதிர்ச்சியை இத்துறை சுட்டும் என்பர் இளம்பூரணர். பு. வெ. மா. இத்துறையினை ''முற்றுமுதிர்வு'' (117) என்றே கூறுகிறது. விடியற்காலத்து அகத்தோனின் முரசம் முழங்க, அதனாற் சினம் மிக்க புறத்தோன் சமையற் கலன்களை அவ்வரணுக்குள் எறிந்துவிட்டு, ''இன்று மாலைக்குள் இந்த மதிலைக் கைப்பற்றி உட்புகுந்த பின்னரே சமைத்துச் சாப்பிடுவோம்'' என்று வஞ்சினம் கொள்ளுதல் இத்

துறைக்குரிய பொருளாகும். இத்துறைக்கு ''காலை முரசம் மதில்இயம்ப'' என்ற பு. வெ. மா. பாடலையே இளம்பூரணரும் எடுத்துக் காட்டினார்.

புறத்தோன் முற்றிய முதிர்வினை மட்டுமே ஐயனாரிதனார் இளம்பூரணர் முதலியோர் கொண்டனர். எனின், அகத்தோன் முற்றிய முதிர்வும் இத்துறைக்கு உரியதாக நச்சினார்க்கினியர் நவின்றார். அகத்தோன் தன் படையைச் செலுத்திப் புறமதிற் செய்யும் போரின்றாகப் புறத்தோன் படையைத் தள்ளி வென்று அப்புறமதிலைக் கைக்கொண்டு வளைத்த வினை முதிர்ச்சியையும் இவர் குறித்தனர். உழிஞை வீரனுக்கு ஒப்பவே நொச்சி வீரனின் செயல்கள் அமையும் என்பது இவ்வுரையினால் புலனாகிறது.

5) முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சி

புறத்திருந்து முற்றுகையிடும் உழிஞை வேந்தனுடன் போரிட்டு வீழ்ந்த அகத்தோனின் நிலையை விளக்குவது நொச்சி என்னும் துறையாகும். தொல்காப்பியர் நொச்சியை ஒரு தனித் திணையாக அமைத்துக் கொள்ளாவிடினும், அகத்தோன், நொச்சி என்ற குறியீடுகளைப் பயின்றிருப்பதால், அந்தத் திணை அவருக்கு முற்றாக உடன்பாடில்லை என்று கூறிவிடுதல் இயலாது.

'வீழ்ந்த' என்ற சொல்லிற்கு விரும்பிய என்ற பொருளினைக் கொண்டார், நச்சினார்க்கினியர். ''நொச்சியாவது காவல். இதற்கு நொச்சி ஆண்டுச் சூடுதலும் கொள்க; அது மதிலைக் காத்தலும் உள்ளத்தைக் காத்தலும் என இருவர்க்கும் ஆயிற்று இக்கருத்தானே, 'நொச்சி வேலித் தித்தன் உறந்தை'(அகம்.122) என்றார் சான்றோரும்'', என்பது அவர் உரைப்பகுதி.

புறத்தோனால் முற்றப்பட்ட அகத்தோன் விரும்பின மதில் காவலும் நொச்சி எனப்படும். அவன் காத்தலின்றித் தான் சூழப் பட்ட இடத்திருந்த புறத்தோன் போர் செய்தலை விரும்பிய உள்ளத்தைக் காத்தலும் நொச்சி எனப்படும் என்பர்.

அகத்துழிஞையோன் எயிற்காத்த நொச்சித்துறைக்கும், புறத் துழிஞையோன் மானம் காத்த நொச்சித்துறைக்கும் தனித்தனி வெண்பாக்களை மேற்கோள் தந்தனர் நச்சி.

இத்துறைக்குப் பு.வெ.மாலையில் நேரொத்த துறை இல்லை. எனின், 'அகத்துழிஞை' என்ற துறையினைச் சுட்டுதல் கூடும். உழிஞையார் எயிலினுள் நொச்சியாரைவென்றது இத்துறைக்குரிய

பொருளாகும் (116). அகத்தோன் வீழ்தல் என்பது புறத்தோன் வென்றியின் விளைவேயாதலின் இரு துறைகளும் பொருள் நோக்கில் அதிகம் வேறுபடவில்லை எனலாம்.

6) புறத்தோன் வீழ்ந்த புதுமை

இதனை, 'நொச்சியின் புறத்தாகிய உழிஞையான் வீழ்ந்த புதுமை' என்று இளம்பூரணர் விளக்கினர். பெரும்பாலும் புறத்தோன் வீழ்ச்சி அடைதல் இல்லை. அங்ஙனம் வீழ்ச்சியுறுதல் ஒரு புதுமை என்று எண்ணினார் தொல்காப்பியர். எனின், வீழ்தல் விருப்பம் என்ற பொருளின் அடிப்படையில் உரையாசிரியர்கள் விளக்கம் கண்டனர். பு. வெ. மா. சுட்டும் முதுவுழிஞைத் துறைக் குரிய வெண்பாவினை மேற்கோள் காட்டி இத்துறையினை இளம்பூரணர் விளக்கினார். வரை உச்சியில் உள்ள பருந்தினம் தரையில் கிடக்கும் இரையைக் கொத்துதற்குத் தொகுதியாகப் பாய்தல்போல, உழிஞைவீரர்கள் அரணிடத்தில் பாய்ந்து இழிந்து ஆர்த்தலை முதுவுழிஞை என்றார் ஐயனாரிதனார் (114). செருமதிலோர் சிறப்புரைத்தலும் இத்துறை என்றார் (115).

முன்பு சுட்டப்பெற்றவை புறமதிலின்கண் நிகழும் போர் நிகழ்ச்சிகள். இத்துறையில் சுட்டப்பெறுவது இடைமதிற்போர். இடைமதிலைக் காக்கும் அகத்துழிஞையோன் நின்ற இடத்தினைப் பின்னை அம்மதிலின் புறத்திருந்தோன் விரும்பிக்கொண்ட புதுக் கோள் இத்துறையின் பாற்படும். அன்றியும், புறத்தோன் கொண்ட அவ்விடத்தினைப்பின்னை அகத்தோன் தான் விரும்பிக்கொண்ட புதுக்கோளும் இதன் பாற்படும் என்பர் நச்சினார்க்கினியர். ஆதலின், உள்ளிருப்போன் இடத்தினைப் புறத்தோன் பற்றுதலும், அங்ஙனம் அவன் பற்றியதை அகத்தோன் மீட்டுக்கோடலும் ஆகிய இரு நிகழ்ச்சிகளையுமே இத்துறை சுட்டும் என்பது இவர் கருத்து எனலாம்.

7) நீர்ச்செரு வீழ்ந்தபாசி

மதில் அரணைத்தாண்டி வரும் உழிஞை வீரர்கள் நீர்அரணைக் கடக்க நிகழ்த்தும் போரினை இத்துறை சுட்டுகிறது. நீர்ச்செரு என்பது கிடங்கில் நிகழும் போரைக் குறிக்கும் என்றும், அதில் வீழ்ந்து மடிந்த நொச்சியார் நிலையினை இத்துறை சுட்டுகிறது என்றும் இளம்பூரணர் எண்ணினார். இத்துறையினைப் பாசிநிலை என்று ஐயனாரிதனார் குறித்துள்ளார் (111). இங்கு வீழ்தல்

என்பது தோற்றலைக் குறித்தது. ''நாவாயும் தோணியும்... அகழி பரந்தொழுகும் அங்குருதிச் சேற்றுப் பகழிவாய் வீழ்ந்தார் பலர்'' என்ற பு. வெ. மா. வெண்பாவினையே இளம்பூரணரும் எடுத்துக்காட்டினார்.

இத்துறைக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள விளக்கம் சிந்திக்கத்தக்கது. வெற்றிகொண்ட மதிலகத்தை விட்டுப்போகாத புறத்தோரும் அவரை முற்றிலுமாகத் தாக்கமுடியாத அகத்தோரும் எயிலின் புறத்திலுள்ள அகழியின் இரு கரையிலும் நின்று நீரிடைப் படர்ந்த பாசி போன்று விட்டு நீங்காமல் போர் புரிதல் இத்துறைக் குரிய பொருளாகும். நீரில் பாசிபோல இரு திறத்து வீரர்களும் ஒதுங்கியும் தூர்ந்தும் போர் புரிதலின், இத்துறைக்குப் பாசி என்ற பெயர் வந்தது என்பர் நச்சி.

நீர்ச்செரு என்பது அகழிப்போரை மட்டும் சுட்டியதாகக் கொள்ளுவதைவிட நீரில் நிகழும் எவ்வகைப் போரையும் சுட்டிய தாகக் கொள்ளுதல் பொருத்தமாகத் தெரிகிறது. சேர வேந்தர்கள் கடலில் கடம்பர்களுடன் போர் நிகழ்த்திய வரலாற்றைப் பதிற்றுப் பத்தும் சிலப்பதிகாரமும் உணர்த்துகின்றன. கரிகாலனின் கப்பற் படை குறித்தும் புறநானூறு சுட்டுகிறது. பிற்காலச் சோழர்களில் முதலாம் இராசராசன் மேலைக் கடற்கரையில் காந்தளூர்ச்சாலை யில் கலமறுத்தருளிய செய்தியைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவன் பரம்பரையினர் இலங்கையிலும் கடாரத்திலும் கப்பற்படை யின் உதவியால் வெற்றிபெற்ற வீர வரலாற்றினைச் சரித்திர ஆசிரியர்கள் தெளிவுறுத்தியுள்ளனர். ஆதலின், தொல்காப்பியம் உள்ளிட்ட புறத்திணை இலக்கண நூல்கள் சுட்டும் நீர்ச்செரு என்பது அகழிப்போருடன் கடற்போரையும் குறிப்பதாகக் கருதுவதே வரலாற்று போக்கிற்கு வாய்த்ததாகத் தோன்றுகிறது.

8) மதில் குடுமி கொண்ட மண்ணு மங்கலம்

இத்துறையினை ஐயனாரிதனார் உழிஞைக்குரியதாகவே கருதினார் (122). இதற்கு அவர் வழங்கும் பெயர் மண்ணு மங்கலம் என்பது. பகைவரின் அரண் ஆகிய கன்னியுடன் மணம் பொருந்திய வெற்றியைச் சொல்வது இத்துறையின் பாற்படும். பு. வெ. மாலையில் இடம்பெறும் ''எங்கண் மலர'' என்ற வெண்பாவையே இளம்பூரணரும் இத்துறைக்கு எடுத்துக்காட்டி னார். மேலும் மதிலைப் பெறுவதோடு அப்பகை மன்னனின் முடிக்கலத்தையும் பெறுதலை இத்துறை சுட்டுகிறது என்பர் இளம்.

கல்வெட்டுக்களில் பகை வேந்தரின் மகுடங்களைக் கைப்பற்றுதல் பெரு வீரமாகப் பாராட்டப்பெறுதலைக் காணலாம்.

இத்துறையினை மேலும் நச்சினார்க்கினியர் விளக்குதல் நோக்கத்தக்கது. மண்ணுதல் என்ற சொல்லிற்கு நீராடுதல் என்பது பொருள். இகல் செய்த மதிற்கண் ஒருவன் ஒருவனைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியவற்றை வென்று, வீழ்ந்த வேந்தனின் பெயராலேயே முடிபுனைந்து நீராடும் மங்கல நிகழ்ச்சியை இத்துறை சுட்டுகின்றது என்பர். இதுவும் இரு திறத்தார்க்கும் பொதுத்துறையாகும் என்பது அவர் கருத்து.

இத்துறை மீண்டும் பாடாண் பகுதியில், ''மன்எயில் அழித்த மண்ணு மங்கலம்'' என்று சுட்டப்பெற்றது. இதற்கு அமைதி கூறும் வகையில் இளம்பூரணர்,

> ''இஃது உழிஞைப் படலத்துக் கூறப்பட்டதாயினும்,
> மண்ணு நீராடுதலின் இதற்கும் துறையாயிற்று''(ப.151)

என்று இயம்பினர். உழிஞைப் படலம் என்று இவர் கூறுவது தொல்காப்பியத்தில் உழிஞைத்திணை பற்றிவரும் நூற்பாக்களின் தொகுதியே ஆகும். பன்னிருபடலத்தின் தாக்கத்தால் உழிஞைத் திணை பற்றிய நூற்பாக்களின் தொகுதியை உழிஞைப்படலம் என்றார் இளம்.

9) வென்ற வாளின் மண்ணு மங்கலம்

இதனை ஐயனாரிதனார் வாள் மண்ணு நிலை என்று குறித்த னர் (121). உயர்ந்தோர் பாராட்ட தீர்த்த நீரும் மலரும் சொரிந்து மஞ்சனமாட்டிய வாளினது வீரச்செயலை எடுத்துரைத்தல் இத் துறையின் பாற்படும். இதற்கு பு. வெ. மா. காட்டிய ''தீர்த்த நீர்ப் பூவொடு'' என்ற வெண்பாவினையே இளம்பூரணர் மேற்கோள் தந்தனர்.

இருபெரு வேந்தருள் ஒருவன் ஒருவனை வென்ற பொழுது அவ்வெற்றியைத் தந்த கொற்ற வாளினைக் கொற்றவைமேல் நிறுத்தி நீராட்டும் நிகழ்ச்சியைக் கூறுவது இத்துறை என்பர் நச்சினார்க்கினியர். இச்செயலும் இருபாலார்க்கும் உரியது என்றார்.

10) தொகைநிலை

குறிப்பிட்ட பகைவேந்தனின் மதிலை அழித்தமையால் மற்றுமுள்ள மதில்களின் எல்லையில் மாறுபட்ட வேந்தர்களின் முரண் அழிதலை இத்துறை சுட்டிற்று என்றார் இளம். இதே குறியீட்டினால் ஐயனாரிதனார் இதனைக் குறித்தனர்(126). எல்லா அரண்களிலும் உள்ள பகைவேந்தர்கள் யாவரும் ஒரு தொகுதியாக வென்ற வேந்தனின் அடியினை அடைந்து மாறுபாடு நீங்கினர் என்ற கருத்தமைந்த வெண்பா, பு. வெ. மாலையில் இத்துறைக்கு மேற்கோளாக வந்தது.

எனின், வேறொருவகை விளக்கமும் நச்சினார்க்கினியர் உரையில் காணப்படுகிறது. வாண்மங்கலம் நிகழ்ந்தபின்னர், இருவருள் ஒருவர் படைஞர்க்கெல்லாம் சிறப்புச்செய்தல் பொருட்டு 'ஒருங்குவருக' எனத் தொகுத்தல் தொகைநிலை எனப்படும் என்றார் மேலும், தொடராற்றலாலும் இலேசு முதலியவற்றாலும் வேறுசில துறைகளையும் உழிஞைத்திணைக்கு உரியனவாகக் குறித்துள்ளார். சான்றாகச் சிலவற்றைச் சுட்டுதல் தகும். உழையரை அழைத்து நாட்கொள்க என்றல், அவர் அரசர்க்கு உரைப்பன, குடைச்சிறப்பு கூறுவன, முரசு முதலியன நாட்கோடல் புட்போல உட்பாய்தல் முதலியனவாம். இவை பிற நூல்களின் வாயிலாக இவர் அறிந்தனவாதல் கூடும். ஒருசில இவர்தம் கற்பனைத் திறத்தினால் உய்த்துணர்ந்து கூறியவையாகக் கொள்ளுதற்கு உரியன (ப. 189-90).

இனி. பு.வெ. மாலையிற் காணப்படும் கூடுதலான துறைகள் பற்றிக் காண்போம்.

(இ) மிகுந்த துறைகள்

உழிஞை (95). முரசஉழிஞை (98), கந்தழி (101), முற்றுழிஞை (102), காந்தள் (103), புறத்துழிஞை (110), யானை கைக்கோள் (118), வேற்றுப்படை வரவு (119), உழுது வித்திடுதல் (120), மகட்பாலிகல் (123), திறைகொண்டு பெயர்தல் (124), அடிப்படவிருத்தல் (125) என்பன பன்னிரண்டும் ஐயனாரிதனார் கூறிய புதிய துறைகள் ஆகும். இவற்றுள், உழிஞைமாலை சூடி, கொடியசையும் பகைவரின் மதிலைக் கொள்ள நினைத்தல் உழிஞைத்துறை எனப்படும். முரசிற்கும்

உழிஞைமாலை சூட்டிப் பலிகொடுத்தப்பின் அம்முரசம் முழங்கு தலைக் கூறும் துறை முரச உழிஞை எனப்படும்.

மணிவண்ணன் ஆகிய திருமால் அசுரர்க்குரிய சோ என்னும் அரணை அழித்த செயலைக் கூறுவது கந்தழி. கந்து - அரண்; அழி-அழித்தல் என்று பொருள் கொண்டு இங்ஙனம் தெய்வத் தொடர்பான உழிஞைத்துறையாக இதனைக் குறித்தனர் (101). சூரபன்மாவைக் கொன்ற செவ்வேளின் காந்தட்பூவின் சிறப்பு ரைத்தல் காந்தள் ஆகும் (103). இத்துறை உழிஞைப் படலத்தில் கூறப்பட்டதால் தேவசேனாபதியாகிய முருகனின் படைமறவர் சூரனின் கோட்டையை அழித்த கருத்தமைந்தது என்று கருதலாம். இவற்றுள் கந்தழியைப் பாடாண்திணைக்கும் (நூ. 85) காந்தளை வெட்சித்திணைக்கும் (நூ. 63) உரியனவாகத் தொல்காப்பியர் குறித்தனர் என்பதை முன்னர்க் கண்டோம். ஐயனாரிதனார் கந்தழியைப் பாடாண்திணைக்கும் கூறியிருத்தல் சுட்டுதற்கு உரியது (228).

முற்றுழிஞை என்பது சிவபிரானுடன் தொடர்புடையதாகச் சொல்லப் பெற்றது (102). உழிஞையைச் சூடிக்கொண்டுதான் முக்கண்ணான் அசுரர்களின் திரிபுரங்களையும எரித்தான் என்று இத்துறைக்குரிய மேற்கோள் வெண்பா போற்றுகிறது.

எனவே, மனிதத்தொடர்பான புறத்திணை நிகழ்வுகளுடன் தெய்வத்தொடர்பான போர் நிகழ்வுகளும் ஒருங்கு எண்ணப் பெற்றமையினை இத்தகு துறைப்பொருண்மையினால் உணரலாம்.

புறத்துழிஞை (110) என்ற துறை, விண்ணளாவிய காவற் காட்டைக் கடந்து ஆழ்ந்த கிடங்கின் (—நீர் அரண்) கரையில் உழிஞை மறவர் வந்து தங்குதலைப் புலப்படுத்தும். யானை கைக்கோள் (118) என்ற துறை, பகைவரின் அரணை அழித்து அவர்க்குரிய யானைகளைக் கைக்கொள்ளுதலை விரித்துரைக்கும். மதிற்போரில் பெரிய கதவுகளை இடிப்பதற்கு இந்த யானைகளை பயன்படுத்துதல் அக்காலத்துப் போர் மரபாகும்.

வேற்றுப்படை வரவு (119) மற்றொரு புதியதுறை. பகை வேந்தனின் மதிலை முற்றுகையிட்ட உழிஞை வேந்தன் தளர்ந்து அகலுதலும் அந்நிலையில் அவன் நண்பராகிய அரசரின்படை போருதற்கு வருதலும் இத்துறைக்குரிய பொருளாகும்.

பகைவரின் பல அரணையும் அழித்துக் கழுதை ஏர் பூட்டி உண்ணுதற்கு ஒவ்வாத வரகும்கொள்ளும் விதைத்தலைக் கூறுவது உழுது வித்திடுதல் என்ற துறையாகும் (120). இத்துறை. ஐயனாரிதனார் வஞ்சித்திணைக்கு ஓதிய உழபுல வஞ்சி (49), மழபுலவஞ்சி (50) என்ற துறைகளின் வேறாகக் கூறப்பட்டது.

நொச்சியான் மகள்பால் ஆசைவைத்து, அதனால் இகல் கொண்டு மதிலை வளைத்தல் மகட்பால் இகல் (123) எனப்படும்.

நொச்சியான் கொடுக்கும் திறைப்பொருளைப் பெற்றுக் கொண்டு திரு''புதல் திறைகொண்டு பெயர்தல் என்ற துறை யாகும். பதிற்றுப்பத்தில்,

> ''பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
> திறைகொண்டு பெயர்தி'' (71:23-24)

எனவரும் பகுதி இங்கு எண்ணத்தகுவது.

பகைவர் (—நொச்சியார்) உழிஞை வேந்தனின் ஆணையினை ஏற்றுக்கொண்டு ,அடிபணியினும், அவன்படை பாசறையினை விட்டுப்பெயராது இருத்தலைச் சுட்டுவது அடிப்பட இருத்தல் என்ற துறையாகும் (125).

இப்புதிய துறைகள் முதல் நூலாகிய பன்னிருபடலத்துள் கூறப் பெற்றனவாதல் வேண்டும். அவற்றை இடம் அறிந்து ஐயனாரி தனார் பு.வெ.மாலையில் எடுத்துக் கூறினார், என்றுகொள்ளுதல் தகும்.

இனி, வீரசோழியத்தில் இடம்பெறும் உழிஞை, நொச்சி பற்றிய திணை, துறை குறித்து நோக்குவோம்.

10. தொல்காப்பியமும் வீரசோழியமும்

புத்தமித்திரனார் 96 ஆம் காரிகையில்,

> ''வெட்சி கரந்தை விறல்வஞ்சி காஞ்சி உழிஞைநொச்சி
> உட்கிய தும்பைஎன் றேழும் புறம்''

என்று புறத்திணை ஏழினை எண்ணினார். இவற்றுள், வெட்சியின் மறுதலையாகிய கரந்தைக்கும் வஞ்சியின் மாறாகிய காஞ்சிக்கும் துறைகள் கூறியவர், உழிஞைத்திணைக்கு மட்டுமே துறைகள்

கூறி, நொச்சித் திணைக்குத் துறைகள் குறித்திலர். ஒருவேளை, நொச்சிக்குத் துறைகள் கூறிய காரிகை நூற்பா கிடைக்கவில்லை போலும். உரையாசிரியராகிய பெருந்தேவனார்,

''உழிஞை எல்லாம் அரண் பற்றியே வரும்''

என்று குறிப்பிடுவதால், உழிஞை ஆகிய ஒரே திணையின்கண் புறத்தோன், அகத்தோன் ஆகிய இரு சாராரின் வீரச் செயல்கள் கூறப்பட்டன என்று எண்ணுதல் வேண்டும்.

புத்தமித்திரனார் உழிஞைக்கு உரியவை என்று 14 துறைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். அவை பெரும்பாலும் தொல்காப்பியத்தைப்பின்பற்றிக் கூறப்பெற்றவை என்று தோன்றுகிறது.

	தொல்காப்பியம்	வீரசோழியம்
1)	உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு	வேந்தன் சிறப்பு
2)	தொல்லெயிற்றிவர்தல்	மதிலேறுதல்
3)	வாளின் மண்ணு மங்கலம்	வெற்றிவாட் சிறப்பு
4)	தோலது பெருக்கம்	படைமிகை
5)	வாள் நாட்கோள், குடைநாட்கோள்	நாட்கோள்
6)	அகத்தோன் வீழ்ந்த நொச்சி	காவல் ''அகத்தோனால் அமைக்கப்பட்ட அரண்காவல்' -பெருந்தேவனார். -இப்பொருள் நச்சினார்க்கினியர்க்கும் ஒத்தது.
7)	இகல்மதிற் குடுமிகொண்ட மண்ணு மங்கலம்	முடிகோள்
8)	தொகைநிலை	தொகைநிலை ''இருவர் சேனையும் தொக்கநிலை -பெருந்தேவனார். இக்கருத்து நச்சினார்க்கினியர்க்கும் ஒத்தது.

9) கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் — கொற்றம்

10) நீர்ச்செரு வீழ்ந்த பாசி — நீர்ப்போர்

11) அகத்தோன் செல்வம் — செல்வம்

12) ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன்மறன் — ஊர்ச்செரு

13) முற்றிய முதிர்வு — முதிர்வு

14) ஒருதான் மண்டிய குறுமை — குறுமை

இவ்வொப்புமையினை எண்ணுங்கால், புத்தமிட்திரனார் திணைப் பாகுபாடு செய்யும் வகையில் பன்னிருபடலம் சார்ந்த நூல்களைப் பின்பற்றி இருப்பினும், துறைகூறும் வகையில் தொல்காப்பியக் கருத்துக்களைப் பெரிதும் போற்றியுள்ளார் என்பது புலனாகிறது.

இனி, இலக்கண விளக்கத்தில் கூறப்பெறும் உழிஞை பற்றிய துறைகளைக் காண்போம்.

II. தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்

தொல்காப்பியத்தில் இடம்பெறும், ''உழிஞை தானே மருதத்துப் புறனே'' என்ற திணை விளக்க நூற்பாவை வைத்திய நாத நாவலர் அப்படியே எடுத்துக் கொண்டார். எனின், உழிஞையினை இரு கூறுகளாகப் பகுத்து முதற் கூற்றிற்குரிய நூற்பாவில் 32 துறைகளைத் தொகுத்துக் கூறினார். இவையாவும் புறப்பொருள் வெண்பா மாலையில் சொல்லப்பெற்றவை ஆகும். பு. வெ. மா. சுட்டும் 108, 109 ஆம் வெண்பாக்களை முறையே குற்றுழிஞைப்பக்கம், குற்றுழிஞையின் மற்றொரு பக்கம் என்றும், 115 ஆம் வெண்பாவை அகத்துழிஞைப்பக்கம் என்றும் பெயர் சுட்டிக் கூறினார். மேலும், பு. வெ. மா. சுட்டிய ஆறெயில் உழிஞை (105), தோலுழிஞை (106), ஏணிநிலை (112) என்பன வற்றை முறையே மதில்நிலை, தோல்மலிபுரைத்தல், ஏணிசாத்தல் என்ற புதுக்குறியீடுகளினால் சுட்டினார்.

உழிஞைத் திணையின் இரண்டாம் கூற்றுக்குரிய நூற்பாவில் (நூ.609) ஒன்பது துறைகளைக் குறித்துள்ளார். இவையாவும் ஐயனாரிதனார் இயம்பிய துறைகளே. எனின், புரிந்தமொழியினால்

அமைந்த குறியீடாகிய குதிரைமறம் என்ற துறையினை வைத்திய நாத நாவலர் இவுளிமறம் என்று வழக்கு வீழ்ந்த சொல்லினால் வழங்கினார். இதுவே புதுமை! இவ்வாறே எயில்தனை அழித்தல் என்ற துறையினை எயில்மிசை அழிந்த நொச்சி என்று பயின்றனர்.

எனவே, திணை விளக்கத்திற்கு மட்டும் தொல்காப்பியத்தைப் பின்பற்றிய நாவலர் துறை விளக்கத்திற்குப் பு. வெ. மாலையினை முழுமையாகப் பயன்படுத்தினார் என்பது தெளிவு.

இனி, சாமிகவிராயரின் கருத்துக்களைக் காண்போம்.

12. சுவாமிநாதம்

சாமிகவிராயர் நூற்றுக்கு நூறு நாவலரை அடியொற்றி உழிஞைக்குரிய இலக்கணத்தை எழுதியுள்ளார். ''அதிர்உழிஞை மருதத்தின் புறன்; அரண்முற்றுதலும் அரண்காப்பும் என இரண்டாம்'' என்று தெளிவுறுத்தினார். அரணை முற்றுதலும் உழிஞை, காத்தலும் உழிஞை என்று கூறும்பொழுது தொல்காப்பி யத்தைச் சார்ந்த சிந்தனை வட்டத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்கிறார் சாமிகவிராயர். இவ்விரண்டினுள், 'அரண் முற்றுதலே முதல்' என்றும், அப்பகுதி உழிஞை சூடல் முதல் 'பெருமதிலின் அடைதொகையொடு எண்ணான்கு' என்னும் 32 துறைகளைத் தொகுத்துக் கூறினார். இரண்டாவது பகுதி யாகிய அரண்காப்பு என்பது நொச்சி சூடல் முதல் மகட்கோள் மறுத்தல் முடிய ஒன்பது துறைகளைக் கொண்டது என்றார். இவையனைத்தும் இலக்கண விளக்கத்தினின்றும் எடுக்கப் பெற்றவை என்பது தெளிவு.

இவ்வியலிற் கண்டறிந்த உண்மைகளையும் தெளிந்த முடிபு களையும் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1) உழிஞைப் பூவுடன் கொடியினையும் அடையாளமாகச் சூடுதல் அக்காலத்து மரபு.

2) நொச்சி மறத்திணைத் தொல்காப்பியர் அறிந்தவர். எனினும், அதனைத் தனியொரு திணையாக எண்ணாது உழிஞையின் கீழ் அடக்கி ஓதினார்.

3) அகத்தோன், புறத்தோன் என்ற குறியீடுகளை முறையே நொச்சி வீரனையும் உழிஞை வீரனையும் சுட்டுதற்குத் தொல்காப்பியர் வழங்கியுள்ளார்.

4) வரலாற்று முறைப்படி நோக்கின், உழிஞைப் போர் என்பது நாகரிகம் நன்குபரவிக் கோட்டை,கொத்தளங்கள் மல்கிய காலத்து அறிமுகமானது என்று கருதலாம்.

5) நொச்சிக்குப்பின் உழிஞை கூறும் மரபும், உழிஞைக்குப் பின் நொச்சி கூறும் மரபும் என இருவகை இலக்கண மரபுகள் காணப்படுகின்றன.

6) 'அகத்தோன் செல்வம்' என்ற தொல்காப்பியத்துறைக்கு ஒத்ததாகப் பு.வெ.மா.நொச்சிப்படலத்தில் ஒரு துறையும் காணப்படவில்லை.

7) தொல். சுட்டிய ஊர்ச்செரு வீழ்ந்த அதன்மறம்,மேலோர் பக்கம் என்ற துறைகள் நொச்சித்திணைக்கு உரியவை.

8) நொச்சி, குதிரைமறம், எயிற்போர், அழிபடை தாங்கல், மகள்மறுத்து மொழிதல் என்பன தொல்காப்பியத்தில் சுட்டப்பெறாது பு. வெ. மா. சுட்டிய புதிய துறைகள் ஆகும்.

9) உழிஞைத் திணைக்குரிய துறைகளை எண்ணிய ஆசிரியர் களில் 18 என்று எண்ணியவரையும் இளம்பூரணர் குறித்துள்ளார். இவர் இன்னார் என்று அறியப் படவில்லை.

10) தமிழர் வாழ்வியலில் நாளும் கோளும் சிறப்பிடம் பெற்றன என்பதற்குக் குடைநாட்கோள்,வாள்நாட்கோள் என்ற துறைகளும் சான்றாகக் கருதுதற்குரியவை.

11) தொல். சுட்டிய ஏணிமயக்கம் என்ற ஒரு துறையினை ஏணிநிலை, எயிற்பாசி என்ற இருதுறைகளாக ஐயனாரி தனார் விளக்கியுள்ளார்.

12) நீர்ச்செரு என்பது அகழிப்போரை மட்டும் குறிக்காது, கடற்போரையும் குறிப்பதாகக் கொள்ளுதல் தக்கது.

13) உழிஞை, முரசவுழிஞை, கந்தழி, முற்றுழிஞை, காந்தள் முதலிய பன்னிரு துறைகள் பு. வெ. மா. சுட்டிய புதிய துறைகள் ஆகும்.

14) மனிதத் தொடர்பான போர் நிகழ்வுகளுக்கிடையில், தெய்வத் தொடர்பான போர் நிகழ்வுகளும் குறிக்கப் பெறுதலைப் பு. வெ. மா. சுட்டிய கந்தழி, முற்றுழிஞை முதலிய ஒருசில துறைகளினால் உணரலாம்.

15) நொச்சியைப் புறத்திணைகளில் ஒன்றாகப் புத்தமித்திர னார் எண்ணியிருப்பினும், அதற்குரிய துறைகளைக் கூறவில்லை. அல்லது, அவற்றைக் கூறிய நூற்பா கிடைக்கவில்லை என்று கருதவேண்டும்.

16) இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய இரு நூல்களும் பழைய துறைகள் சிலவற்றுக்குப் புதிய குறியீடுகள் வழங்கியுள்ளன.

8. தும்பைத்திணை

1. தும்பை—பொருள்விளக்கம்

ஐந்திணையுள் நெய்தல் திணைக்கு ஒத்த புறத்திணையாகத் தும்பைத்திணையினைத் தொல்காப்பியர் கூறினார். பொருட் பெருக்கம் நோக்கிப் புரியும் வெட்சிப்போரையும், ஆளும் நில எல்லையை அகலப்படுத்தும் நோக்கில் நிகழ்த்தும் வஞ்சிப் போரையும்விட, இருவருள் யார் வலியர் என்பதைத் தீர்மானிக்கும் நோக்கில் நிகழும் தும்பைப்போர் கொடுமை மிக்கதுதான். தொல்காப்பியர்,

''தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப'' (நூ. 70)

என்று இலக்கணம் செய்தனர். மைந்து பொருளாகப் படை எடுத்து வந்த வேந்தனையும் ஒருவகையால் வஞ்சிவேந்தன் என்று கொண்டு. அவனை எதிர்த்துப் பொருதழிக்கும் சிறப்புக்குரிய பெருவேந்தனைத் தும்பையான் என்று எண்ணிய இளம்பூரணர், ''இதனானே 'எதிரூன்றல் காஞ்சி' (பிங்க. அனுபோக. 1474) என்பாரை மறுத்தவாறு'' என்று எழுதியுள்ளார். எதிரூன்றல் ஆகிய போர்வினை வஞ்சிவேந்தனை நோக்கியது என்ற கருத்தில் பன்னிருபடலத்தார் தனித்திணையாக ஓதினர். பிங்கல முனிவரும் தம் நிகண்டு நூலில் இதனைக் குறித்தனர். (இக்கருத்து திவா கரத்திலும் சொல்லப்பட்டதே ஆகும்). இவர்தம் கருத்து தொல் காப்பியரால் கூறப்படவில்லை. எனவே, எடுத்துவரவாகிய வஞ்சிக்குத் தடுத்து நிறுத்தலாகிய போர்வினையைக் குறிப்பது தும்பைத்திணை என்று தொல்காப்பியர் கருதியதாக எண்ணிய இளம்பூரணர் மேற்கூறியவாறு பிறர் மதம் மறுத்தனர். தொல்

காப்பியர் எதிருன்றல் சொல்லாத குறையினை தும்மை கூறியதன் வாயிலாக நிறைவு செய்து விட்டார் என்பது உரையாசிரியரின் உள்ளம். இக்கருத்து பின்னூலார் பலர்க்கும் ஏற்புடையதன்று. இவர்கள் பலரும் எதிருன்றலாகிய காஞ்சித்திணைக்கு வேறாகத் தும்பைத் திணையும் கூறியிருத்தலின், இளம்பூரணரின் மறுப்பு வலிமை பெற்றதாகத் தெரியவில்லை. மேலும், வஞ்சிப்போரின் நோக்கம் மாற்றார் மண்ணரினைப் பெறுதலாகும். தும்பைப்போரின் நோக்கம் வலிமையினை முடிபுசெய்தல் ஆகும். முன்னது நிகழ்தற் குரிய இடம் முல்லைநிலம்; பின்னதற்குரிய இடம் நெய்தல் நிலம். இக்காரணங்களினாலும் வஞ்சித்திணைக்கு நேர் எதிர்த் திணை யாகத் தும்பையினைக் கொள்ளுதல் சரியன்று.

2. நெய்தலின் புறம் தும்பை

நெய்தலுக்குப் புறமாகத் தும்பையினைக் கூறியதற்கு உரை யாசிரியர்கள் கற்பித்துள்ள காரணங்களை நிரலே நோக்குவோம்.

இளம்பூரணர்,

''அதற்கு இது புறனாயவாறு என்னையெனின், இருபெரு வேந்தரும் ஒருகளத்துப் பொருதலின், அதற்கு இடம் காடும் (—முல்லை) மலையும் (—குறிஞ்சி) கழனியும் (—மருதம்) ஆகாமையானும். களரும் மணலும் பரந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுதலானும், அந்நிலம் கடல்சார்ந்த வழியல்லது இன்மையானும், நெய்தற்கு ஓதிய ஏற்பாடு போர்த் தொழிற்கு முடிவாதலானும் நெய்தற்குப் புறனாயிற்று''.

என்று இயைபு கூறினர். இவர்கூறும் காரணம்,புணர்ச்சி என்றால் மலையிருக்கும் இடம் தேடிப் போதல் வேண்டும் என்ற புலனெறி வழக்கினைப் போன்று அமைந்துள்ளது. இரவில் போர் புரிதல் இந்திய மரபில்லை. எல்படுகின்ற பொழுதினைத் தாண்டிப் பெரும் போர் புரிவதில்லை. ஆதலின், நெய்தலுக்குச் சொல்லப்பெற்ற ஏற்பாடு தும்பைக்கும் ஏற்றலின், கால இயைபினாலும் அதற்கு இது புறம் ஆயிற்று என்றார்.

இனி, நச்சினார்க்கினியர் கூறும் கூடுதலான காரணங்களைக் காண்போம். நெய்தல் ஒழுக்கத்திற்குப் பெரும்பொழுது வரையறை இல்லை. அதுபோலவே தும்பைப் போரும் இன்ன பருவத்தில்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரம்பில்லை. நெய்தற்கு இரக்கம்

உரிப்பொருள். போர்க்களத்தில் கணவனை இழந்தவர்கள் இரங்குவதுடன், வீரக்குறிப்பின் அருள் பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குவதாலும், ஒருவரும் ஒழியாமல் பட்டுழிக் கண்டோர் இரங்குவதாலும் நெய்தலுக்குத் தும்பை புறமாயிற்று என்றார்.

'தலையழிக்கும் சிறப்பிற்று' என்பதற்கு இவர்தரும் விளக்கம் எண்ணத்தக்கது. தலையழுத்தல் என்பது தலைமை தீர்த்தலைக் குறித்தது. வலிமையின் தலைமை யாருக்குரியது என்பதை முடிபு செய்தல் என்பது இதன் பொருளாகும். இருவரும் ஒரு களத்தே பொருதல் தும்பைத் திணையின் இலக்கணம். புறநானூற்றிலும், ''இருபெரு வேந்தரும் பொருதுகளத் தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தாய்'' என்று பாரதப்போர் சுட்டப் பெறுதல் காணலாம். வடவாரியருடன் செங்குட்டுவன் செய்த போர், ''தும்பை வெம்போர்'' (28.84) என்று சுட்டப்பெற்றது. இதனை வடமொழியில் துரோணம் என்பர். துரோணாச்சாரியர் என்ற பாரதத்தளபதியின் பெயரும் இயைபுறுத்துக் காணத்தக்கது. சிவபிரானுக்கு உகப்பாகிய பூக்களில் தும்பையும் ஒன்று. ''ஆற்றோடு தும்பை அணிந்தாரும் அம்பலவாணர்'' என்று வெண்காட்டடிகள் விளம்புதல் நோக்கத்தக்கது. தேவர் யாவரினும் பேராற்றல் படைத்த மூர்த்தியாகத் திகழ்தலின் இவர்க்கு உரியதாக இப்பூ ஓதப் பெற்றிருக்கலாம். ''தும்பை என்பது சூடும் பூவினாற் பெற்ற பெயர்'' என்று நச்சினார்க்கினியர் நவின்றனர்.

இனி, பாரதியார் கூறும் சிறப்பியைபினைச் சிறிது காண்போம். நெய்தலைப் போலவே, தும்பைப் போரிலும் ஆர்ப்பு, அலைப்பு, இரங்கல் உண்டு. நெய்தலில் புலம்பும் தலைவியர் இரங்கல் ஓயும்படி தலைவர் கார்காலத்தில் மீள்வர். தும்பைப் போரும் ஒருவாறு முடிவது கார்காலத்தில்தான். எனவே, நெய்தலுக்குத் தும்பை புறனாயிற்று என்பர்.

ஒருசில இயைபுகளை மையமாகக் கொண்டேனும் அகமும் புறமும் ஒன்றற்கொன்று தொடர்புடையதாகக் கூறுதற்கு உரையாசிரியர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் அவர்தம் நுண்ணறிவுக்கும் சிந்தனையாற்றலுக்கும் சான்றாக அமைவன. எவ்வகைப் பொருளையும் subjective, objective என்ற இருமைக்குள் (Dichotomy) அடக்கிக் காட்டி உலகியல் போக்கில் ஓர் ஒத்திசைவினையும் உயர் வனப்பினையும் பண்டையோர் கண்டனர்.

புராண இதிகாசங்களில் இடம்பெறும் போர்துறைகளையும் மனிதர்களிடையே நிகழும் போர் நிகழ்ச்சிகளுடன் பொருத்திப் பார்த்தவர்கள் உண்டு. பு. வெ. மாலையில் ஒருசில துறைகள் தெய்வத் தொடர்புடைய வீரம் குறித்து உருவாக்கப்பெற்றவை. எனின், நச்சினார்க்கினியர்.

''அறத்திற்றிரிந்து வஞ்சனையாற் கொல்வனவும்
தேவராற் பெற்ற
வரங்களாற் கொல்வனவும் கடையூழிக்கண்
தோன்றிய வாதலின் சிறப்பில'',

என்று குறித்தல் அறியத்தக்கது. புராணப் போர்களைப்போல் மண்ணின் மைந்தர்கள் வஞ்சனைப் போர்கள் புரிந்து வசையுறார் என்பது கருத்து.

8. தும்பைத்திணையின் சிறப்பியல்பு

நீர்வாழ் உயிரினமாகிய அட்டை என்னும் சிற்றுயிர் அறுபட்டு துண்டிக்கப்படினும் இயங்குதல்போல, போர்க்களத்தில் தும்பை வீரனின் உடம்பும் பகைவரின் அம்பு. வேல் முதலிய படைக்கருவி களினால் துண்டிக்கப்படினும் வீர உணர்வு உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் நிறைந்து இயக்குதலினால், அறுபட்ட அவன் உறுப்புக்கள் ஆடுதலை (—இயங்குதலை)த் தும்பைக்குரிய சிறப்பியல்பாகத் தொல்காப்பியர் குறித்தனர் (நூ. 71). போர்க் களத்தில் உடற்குறைகள் ஆடுதலைப் பரணி நூல்களில் காணலாம். இங்ஙனம் ஆடுதலை அட்டை ஆடல் என்று கூறுவர் என்பது நச்சினார்க்கினியரின் உரையினால் தெளியலாம். ஒருவாற்றான். பு. வெ. மா. சுட்டும் வெருவரு நிலை(149) என்னும் துறையினை இதனுடன் ஒப்பிடலாம்.

அம்பும் வேலும் செறிந்து அடர்தலின் பிரிந்த உயிரினின்றும் நீங்கிய பின்னும் வீழாது நிற்கும் உடலின் அருநிலை வகையும் அறுபட்ட தலை முதலிய உறுப்புக்கள் பெருநிலம்படியாது முறுகிய இகல் முனைப்பால் துடித்தியங்கும் அருநிலை வகையும் ஆகிய இருவகைப்பட்ட கூறுகடைக் கொண்ட சிறப்பினையுடையது தும்பைத்திணை என்பர் ச. சோ. பாரதியார்.

4. மூவகைத்தும்பை

தும்பைத்திணை மூன்றன் நிலைக்களத்துப் பிறக்கும் என்பது இவ்வுரையாசிரியரின் கருத்து. நிரைகவர்தல், நிரைமீட்டல் ஆகிய செயல்களைப் புரியும் இருசார் வேந்தரும் வீரர்களும் ஒரு குறிப்பிட்ட களத்தில் போர்செய்தல் வெட்சித்திணைப் புறத்துப் பிறந்த தும்பைத்திணை என்று கூறப்பெறும். ஆநிரை கருதியோர் அதனைக் கவர்ந்துவருதற்குரிய ஆற்றலை நிலைநாட்டப் பொருதலின், வெட்சிப் புறத்துத் தும்பை என்று இசைக்கப் பெற்றது. இங்ஙனமே, மண்நசை காரணமாகப் போரைத் தொடங்கிய இருசார் வஞ்சி வேந்தர்கள், வலிமையினை நிலை நாட்டித் துறக்கம் பெறக்கருதிப் பொருதல் வஞ்சிப் புறத்துத் தும்பை என்று பெயர்பெறும். மதிலை அழித்தலும் காத்தலும் கருதிப்போர் புரிந்தோர் அச்செயற்கு மேலாகக் களங்குறித்துப் போர் புரியக் கருதித் துறக்கம் பெறுதற்குப் பொருதல் உழிஞைப் புறத்துத் தும்பை என்று இசைக்கப்பெறும். நச்சினார்க்கினியர்,

''இவையெல்லாம் மண்ணசையும் அரண்கோடலுமன்றி மைந்து பொருளாகச் சென்று துறக்கம் வேட்டுப் பொரும் தும்பைச் சிறப்புக் கூறிற்று'' என்று எழுதுதல் எண்ணற்பாலது. வீரர்கள் விழைவது வீரமரணம்; அதனாற் பெறுவது துறக்கம் என்பது அவர்தம் நம்பிக்கை.

இனி, தும்பைத்திணைக்கு உரிய துறைகள் குறித்து நோக்கு வோம்.

5. துறைவிளக்கமும் ஒப்பீடும்

தொல்காப்பியர் தும்பைத்திணைக்கு உரியனவாகத் தானை நிலை முதல் நூழில் முடிய பன்னிரு துறைகளைக் குறித்தனர். ஐயனாரிதனார் தும்பை முதல் தொகைநிலை வரை இருபத்து நான்கு துறைகளைக் கூறினார். இருவர் கூறிய துறைகளையும் ஏற்றபெற்றியால் இயைத்து நோக்குதல் பயன்தரும்.

1) நோனார் உட்கும் தானை நிலை

பகைவரால் அஞ்சப்படும் தானைநிலை முதல் துறையாகும். தும்பை பெரும்போர் ஆதலின், படைப்பெருக்கம் பார்த்தே பகைவர் அஞ்சுவர் என்பது கருத்து. பு. வெ, மா. சுட்டும் தானைமறம் இதனுடன் ஒத்தது (129, 130, 131). இருவகைச் சேனையும்

பொருது மடியாமல் காப்பது வேந்தன் கடமை என்று கூறினும், காலம் கடவாமல் பொருவதால் உறுதி உண்டாகும் என்று இயம்பினும், படையின் வீர மிகுதியைப் பாராட்டிப் பகைவர் கெடுவரென இரங்கினும் தானை மறம் என்று இயம்பப்படும். மேலும், தானை நிலை என்ற ஒரு தனித்துறையினையும் ஐயனாரிதனார் சொல்லியுள்ளார். இதன்கொளு, ''இருபடையும் மறம் பழிச்சப், பொருகளத்துப் பொலிவெய்தின்று'' என்று இயப்புகிறது (148). இருவர் படைகளும் வீரத்தைப் போற்றும்படி போர்க்களம் பொலிவுபெறுதலை இத்துறை சுட்டியது.

2) நோனார் உட்கும் யானை நிலை

பகைவர் அஞ்சும்படியான யானையின் சிறப்பினையும், யானை வீரனின் மாண்பினையும் இத்துறை எடுத்துரைக்கும். பு.வெ.மா. சுட்டும் யானைமறம் (132) என்பது இதனுடன் ஒருபுடையான் ஒத்த துறை எனலாம். ஆர்ப்பரிக்கும் கடல்போன்ற சேனையினையுடையவனின் இளங்களிற்றின் மறத்தினை விதந்து கூறுதல் இதன் பொருண்மை எனலாம்.

3) நோனார் உட்கும் குதிரைநிலை

ஒன்னார் நடுங்கும்படியான குதிரையின் ஆற்றலையும் குதிரை மறவரின் சிறப்பினையும் இத்துறை சுட்டுகிறது. பு.வெ.மா. குறிப்பிடும் குதிரைமறம் (133) என்பது இத்துறையுடன் ஒருவாறு இயைபுடையது எனலாம். குதிரையின் ஆற்றலையும் வீரப்பொலிவினையும் இத்துறை விளக்கிக் கூறும் என்றார் ஐயனாரிதனார்.

தானை, யானை, குதிரை என்று வைத்த முறைமைக்கு ஒரு காரணம் கற்பிக்கிறார் நச்சினார்க்கினியர் :

> ''துறக்கம்புகும் வேட்கையுடைமையின் காலாளை முற்கூறி, அதன் பின்னர் மதத்தாற் கதஞ்சிறந்து தானும் போர் செய்யும் யானையைக்கூறி, மதஞ்சிறவாமையிற் கதஞ்சிறவாத குதிரையை அதன்பிற் கூறினார். குதிரையான் அன்றித் தேர் தானே செல்லாமையின் தேர் மறம் இன்று என்று அது கூறாராயினரர்''

தொல்காப்பியர் தேர்நிலை கூறாவிடினும், ஐயனரிதனர் தேர் மறம் கூறியுள்ளமை அறியத்தக்கது (136). போர்க்களத்தில்

பகைவர் பிணக்குவியலின் மேல் தேரோடும் காட்சியை வருணிப்பது இத்துறை ஆகும்.

மேலும், தானை, யானை, குதிரை ஆகிய அம்மூன்று நிலையும் தாமே மறம் சிறப்பப் பொருது வீழ்தலும், அரசன் ஏவலில் தானை பொருது வீழ்தலும், ஊர்ந்தார் ஏவுதலினால் யானையும் குதிரையும் தம்முள் தாம் பொருதலும், படையாளர் ஒருவர் ஒருவர் நிலை கூறலும் அவர்க்கு உதவுதலும் என்று வருவன எல்லாம் கொள்ளப்படும் என்று நச்சி. குறித்தனர். இவை தாமே கறுவுகொண்டு பொருவுழித் தானைமறம், யானைமறம், குதிரைமறம் என்று வேறுவேறு பெயர் பெறும் என்றார். இங்ஙனம் கூறியதற்குப் பு. வெ. மாலையில் கூறப்படும் இத்துறைகளே காரணம் ஆகும். இத்திறங்கள் எல்லாம் அக்காலந்துப் போர் நிகழ்ச்சிகளையும் இலக்கியக் காட்சிகளையும் கண்டு வகுத்துக் கூறப்பெற்றவை என்று கருதலாம். பிற்காலச் சோழர் வரலாற்றில் இராசாதிராசன் யானையின் மீதிருந்து மேலைச் சாளுக்கிய வேந்தனாகிய ஆகவமல்லனுடன் பொருது வீரசுவர்க்கம் புகுதலை, ''ஆனைமேல் துஞ்சிய தேவர்'' என்ற கல்வெட்டுத் தொடர் புலப்படுத்தக் காணலாம்.

தும்பைப் போரினைக் கண்டு சிறப்புச் செய்வோர் தேவர், பிணத்தின் பெண்டிர் (—பேய்கள்), வீரர்தம் தாயர், மனைவியர், கூத்தர், பாணர், பொருநர், விறலியர், கண்டோர் முதலியவர்கள் ஆவர். இவருள், தாயர் போற்றிக் கூறும் பகுதியை மூதின் முல்லை என்றும், மனைவியர் கூறுவனவற்றை இல்லாண் முல்லை என்றும், கண்டோர் உரைப்பனவற்றை வல்லாண் முல்லை என்றும், பாணர் கூறுவனவற்றைப் பாண்பாட்டு என்றும் நச்சி. குறித்துள்ளார். இவையனைத்தும் முதல் நூலில் தனித்துறைகளாகக் கூறப்படவில்லை என்றும், இன்னோரன்னவற்றைத் தொல்காப்பியர் தானை நிலை என்ற ஒரு துறையின்கண் அடக்கி ஓதினரர் என்றும் கூறினார். இவற்றுள், பாண்பாட்டு மட்டும் தும்பைப் படலத்திலும்(137), மூதின்முல்லை(175) வல்லாண்முல்லை(177) என்பன இரண்டும் வாகைப்படலத்திலும், இல்லாண்முல்லை(279 பொதுவியற் படலத்திலும் ஐயனாரிதனாரால் உணர்த்தப்பட்டன. இங்ஙனமே பின்னூல்களில் பேசப்பெறும் தானை சூடிய பூக்கூறல், அதன் எழுச்சி, அரவம், அதற்கு அரசன் செய்யும் சிறப்பு, இடை நின்றோர் போரை விலக்குதல், உடன்படாது போர் துணிதல் முதலியன பலவற்றைத் தொகுத்துக் கூறி, இவையாவும், தானை நிலை என்று தொல்காப்பியர் சுட்டிய ஒரே துறையின்கீழ் அடங்கு

வன என்று வாதிடுவர் நச்சினார்க்கினியர். இத்துறைகள் யாவும் பன்னிருபடலம் போன்ற பிற புறப்பொருள் இலக்கண நூல்களில் அக்காலத்து வழங்கினவாதல் கூடும்.

4) தார்நிலை

வேல்வென்றி மிகுதலையே குறிக்கோளாகக்கொண்டு களத்து முகப்பிற் சென்ற வேந்தனைப் பகைவர்கள் மொய்த்துக்கொண்ட பொழுது, அவ் வேந்தனின் நண்பனாகிய மற்றோர் தலைவன் தன்நிலை விடுத்து, தன்வேந்தனை அடுத்துத் துணையாய் நின்று பகைவரை வீழ்த்திய வீரச்செயலைக் கூறுவது தார்நிலை எனப் படும் என்பர் இளம்பூரணர். இது உழிஞைப் படலத்தில் ஐயனாரி தனார் கூறிய 'வேற்றுப்படை வரவு' என்ற துறைப் பொருண்மை யுடன் இணைத்துப் பார்த்தற்கு உரியது எனலாம்.

தார் என்பது முந்துற்றுப் பொரும்படையினைக் குறிக்கும் என்பர் நச்சி. இதனைத் தூசிப்படை என்றும் கூறுவர். புறநானூற்றில்,

'ஒண்படைக் கடுந்தார்' (15·14), 'வருதார் தாங்கி' (62·1) என்று தூசிப்படை சுட்டப்பெறுதல் காணத்தக்கது. தூசிப்படையை தடுப்பேன் என்று அரசற்கு ஒரு மறவன் தனது தறுகண்மையினை சொல்லுதல் தார்நிலை என்பர் ஐயனாரிதனார் (134). மேலும், இவரே தனி வீரன் போர்க்களததில் பலரைத் தடுத்து வீழ்த்து தலையும் தார்நிலை குறிக்கும் என்றார் (135).

5) இருவர் தலைவர் தபுதிப்பக்கம்

இருதிறத்துப் படைத்தலைவர்களும் தம்முள் பொருது மாய்தலைச் சுட்டுவது இத்துறையாகும். இதனை ஐயனாரிதனார் இருவரும் தபுநிலை என்று சுருக்கவிளக்கமாகச் சொல்லியுள்ளார் (138). ''காய்ந்து கடுங்களிறு'' எனத் தொடங்கும் பு.வெ.மா. பாடலையே இளம்பூரணரும் இத்துறைக்கு எடுத்துக் காட்டிவார். தலைவர் என்ற சொல்லினைப் படைத்தலைவர் என்ற பொருளில் நச்சினார்க்கினியர் வழங்கினார். தலைவரேயன்றி ஏனைய வீரருள் இருவரும் அவ்வாறு இறப்பினும் இத்துறையின்பாற் படுத்துதல் வேண்டுமென்று இவர் எண்ணினார்.

6) கூழை தாங்கிய பெருமை

பெருமை என்ற சொல்லிற்கு மாறாக எருமை என்ற பாடத் தினை நச்சினார்க்கினியர் கொண்டனர். இதுவே தக்கதாகத்

தெரிகிறது. தனது உடைந்த படைக்கண்ணே ஒரு படைத் தலைவன் சென்று நின்று அங்ஙனம் கெடுத்த பகைவேந்தனின் படைத்தலைவனை எதிர்கொண்டு எருமைக்கடா போலச் சிறக்கணித்து நிற்றலை இத்துறை குறிக்கும் என்பர் நச்சி. பு. வெ. மாலையில் இத்துறை எருமைமறம் என்று காணப்படு கிறது (139). தம் சேனை புறம் கொடுத்துப் போகும் பொழுது மறவருள் சிலர் அதன் பின்னே நின்று, சேய்மையில் வரும் பகை வருடன் போர் புரிதலையும் இத்துறை சுட்டுகிறது. பகைவர் குழைந்து போதலின், குழை கூழை என்று ஆகியிருக்கலாம்.

7) ஏமம்

படைக் கருவியை அறுத்து வலிமையினால் வெற்றி கொள்ளும் திறத்தினை இத்துறை குறிக்கின்றது. இதனை ஐயனாரிதனார் ஏம எருமை என்று குறித்தனர் (140). வேந்தரின் குடைகள் தம்மில் தலை மயங்கிய வாட்போரில் தான் எறிந்த வேல் யானை யின் மத்தகத்தில் குளிப்பத் தன் தோளாற்றலால் வெற்றி கொள்ளுதலை இத்துறைக்குரிய பொருளாகக் கொண்டனர்.

8) களிறு எறிந்தோர் பாடு

பாடு என்பது பெருமையைக் குறிக்கும். பகைவேந்தனின் களிற்றினை வேலினால் வீழ்த்தி எதிர்ந்தோரின் பெருமையைச் சொல்வது இத்துறையாகும். பகைவேந்தன் ஊர்ந்து வந்த களிற்றைக் கையினால் அல்லது படைக் கருவியால் விலக்கி அவனையும் அக்களிற்றையும் எதிர்த்துப் போர் புரிவோரின் பெருமையைச் சொல்வது இத்துறை என்பர் நச்சி.

இத்துறையினை ஐயனாரிதனார் களிற்றுடனிலை (146) என்று குறித்தனர். வீரர் சிலரின் வேல்பட்டுச் சாய்ந்த யானை களின் கீழே அகப்பட்டு உயிர் நீத்தலை இத்துறை குறிப்பதாக இவர் எண்ணினார். களிறும் வீரரும் ஒருங்குடன் வீழ்வதை ஒரு வீரத்துறையாகப் போற்றினர்.

9) வாளோர் ஆடும் அமலை

களிறு ஊர்ந்து வந்து போர்க்களத்தில் வீழ்ந்த அரசனை வாகை சூடிய வேந்தனின் வீரர்கள் நெருங்கிநின்று அவன் சிறப் பினைப் பாடுதலை இத்துறை சுட்டுகிறது என்பர் இளம்பூரணர். எனின், அவர்களின் ஆடலைச் சுட்டுவதாக நச்சினார்க்கினியர்

கருதினர். இத்துறையினைப் பு. வெ. மா. ஔவாளமலை (147) என்று குறித்தது. வீரக் கழலணிந்த மறவரும் வேந்தருமாகப் போர்க்களத்தில் ஆடும் வெற்றிக் கூத்தாக இதனைக் கருதினர்.

10) தொகைநிலை

வாகைத் தொழில் முற்றி இருபெரு வேந்தரும் அவர்தம் சுற்றமும் ஒருவரும் விடுபடாமல் ஒரு தொகுதியாக அழிந்த நிலையைக் கூறும் துறையினைத் தொகைநிலை என்று குறித்தனர். இதனால் தும்பைப்போரின் கடுமையும் கொடுமையும் புலனாகும். இதில் வெற்றிபெற்றவர் ஒருவருமிலர். அங்ஙனமே தோல்வியுற்றவருமிலர். இத்துறையினைப் பு. வெ. மா. தும்பைத் திணையின் இறுதித் துறையாகக் குறிப்பதில் ஒரு சிறப்பு இருக்கிறது. இவர்கள் கீர்த்தியை நிலைநாட்டிவிட்டு ஒருங்கு மடிந்தவர்கள். உழிஞைத்திணையின் இறுதித் துறையாகவும் இப்பெயரமைந்த துறை இடம்பெற்றமையினை முன்னர்க் கண்டோம். பாண்டவர், கௌரவர் வரலாறு இத்துறைக்கு நல்ல எடுத்துக்காட்டு.

11) நல்லிசை நிலை

போர்க்களத்தில் தன் வேந்தன் வீழ்ந்திடக்கண்டு கூறுத்தெழுந்து படைத்தலைவன் வீரனொருவனை நேருங்கிப் பொருத செயலை இத்துறை சுட்டுகிறது.

தன் வேந்தன் வஞ்சத்தால் கொல்லப்பட்டதைக் கண்ட படைத்தலைவன் சினமிக்குப் பொருதலை நல்லிசைநிலை என்றார் நச்சினார்க்கினியர். இத்துறைக்கு அச்சுவத்தாமனின் போர்த்தொழிலை இவர் உதாரணம் கூறினர் (ப. 204).

இத்துறையினைப் பு. வெ. மா. தன்னைவேட்டல் என்று சுட்டியது (152). இதற்குக் கூறப்படும் விளக்கம் தொல்காப்பியர் நல்லிசைநிலைக்குச் சுட்டியதினின்றும் வேறுபடுகிறது. தன் வேந்தன் வீர சுவர்க்கம் புகுந்த பின் வாட்போராகிய யாகத்தீயில் தன் உயிரை ஆகுதி செய்தலை இது சுட்டுகிறது. இதற்கு ''வானம் இறைவன்'' என்ற பாடலைப் பு. வெ. மா. வழங்கியது. இதனையே இளம்பூரணர் நல்லிசை நிலைக்கு மேற்கோளாக எடுத்துக் கூறினார்.

12) நூழில்

இச்சொல் நீறுதல் என்பதிலிருந்து தோன்றியிருத்தல் வேண்டும். நீறுபோல் பகைவர்களை ஒருவன் தானே வாள் வீச்சினால் அழித்தலை இது சுட்டுகிறது. பல வீரர்களை ஒருவன் கொல்லுதல் நூழில் என்று இளம்பூரணர் விளக்கினர். இதனைப் பு. வெ. மா. நூழில் என்றும் (141) நூழிலாட்டு என்றும் (142) இரு துறைகளாக எடுத்துரைத்தது. பகை வேந்தரின் படையை அழித்து வேலைத் திரித்தாடுதல் நூழில் என்ற துறையின் பொருண்மையாகும். தன் மார்பில் பாய்ந்திருந்த வேலைப் பறித்தெடுத்துப் பகைவர்மேல் வீசியெறிந்து, அவர்களை அழித்தலை நூலிலாட்டு என்றார். மதுரைக் காஞ்சியிலும் இத்தொடர் காணப்படுகிறது. (255-7).

திருக்குறளில்,

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்''

என்ற பாடலை நூழிலாட்டு என்ற துறைக்குரியதாகப் பரிமேலழகர் குறித்திருத்தலும் இங்கு எண்ணுதற்குரியது. பகைவர்களைக் கொன்று குவித்தற்குத் தும்பை சூடிய செங்குட்டுவனின் வீரச்செயலை,

''நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்
போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மலைய'' (26.218-20)

என்று இளங்கோ எழிலுறப் பாடியுள்ளார்.

இனி, பு. வெ. மாலையில் கூடுதலாகக் காணப்படும் துறைகள் பற்றிக் காண்போம்.

6. புதிய துறைகள்

தொல்காப்பியர் தும்பைத் திணைக்குக் கூறிய துறைகள் யாவும் பு. வெ. மாலையில் கூறப்பட்டுள்ளன. முன்னூலிற் சுட்டப் பெறாமல் பின்னூலில் மட்டுமே காணப்படும் துறைகள் ஒன்பதாகும். ஒவ்வொரு துறை குறித்தும் சிறிது நோக்குவோம்.

1. 2) தும்பையும துமபை அரவமும

தும்பைப் போருக்குப் புறப்படும் வீரர்கள் அத்திணைக்கு அடையாளமாகிய தும்பைப் பூவினைச் சூடுதலை ஒரு துறையாக ஐயனாரிதனார் எண்ணினர் (127). இவ்வீரர்களுக்குப் படைக் கருவிகளும் நிலமும், விழுப்பொருள்களும், மருத வயலும், யானை குதிரை முதலியனவும் வேந்தன் வழங்குதலைத் தும்பை அரவம் என்றார் (128). அவர்கள் போர்க்களம் நோக்கிப் புறப்படும்போது ஏற்படும் ஆரவாரத்தையும் இத்துறை சுட்டியதெனலாம்.

3. 4) தேர்மறமும் பாணர்பாட்டும்

தும்பை வேந்தன் ஊர்ந்து வரும் தேரின் சிறப்பினைச் சொல்லுதல் தேர்மறம் என்ற துறையாகும் (136). போர்க்களத்தில் களிறுகளை வீழ்த்தி வீரமரணம் அடைந்தவர்தம் அருஞ் செயலைப் பாராட்டிப் பாணர் யாழ்மீட்டிப்பாடுதல் பாண்பாட்டு என்ற துறையாகும் (137).

5. 6. 7) மூவகைக் குரவை

குரவை என்பது ஒருவகைக் கூத்து. வெற்றி பெற்ற வேந்தனின் தேர்க்கு முன்பாக நின்று வீரர்கள் ஆடுவது முன்தேர்க் குரவை என்று கூறப்படும்(144). அத்தேரின் பின் நின்று விறலியர் ஆடுவது பின்தேர்க் குரவை ஆகும்(144). இவ்விரு ஆடல்களையும் சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் வெற்றியைக் கூறும் பகுதியில் இளங்கோவடிகள் எழிலுற எடுத்துப் பாடியுள்ளார் :

> ''முன்தேர்க் குரவை முதல்வனை வாழ்த்திப்
> பின்தேர்க் குரவைப் பேயாடு பறந்தலை''
>
> (26:240-241)

இத்துறைத்தொடர்கள் பன்னிருபடலம் போன்ற நூல்களில் பயிலப் பெற்றனவாதல் வேண்டும். இவ்விரண்டினையும் தொல்காப்பியர் தும்பைத் திணையில் கூறவில்லையே தவிர, வாகைத்திணையில் குறித்துள்ளார்.

பேய்க்குரவை என்ற ஒரு துறையினையும் பு. வெ, மா. புகன்றது. (145). வேந்தன் ஊர்ந்து வரும் தேரின் முன்னரும் பின்னரும் பேய்கள் நிழல்போல் நுடங்கியாடுதலைப் பேய்க்குரவை

என்றனர். மேற்சுட்டிய சிலப்பதிகாரப்பகுதியில், ''பேயாடு பறந்தலை' இக்குரவையினைக் குறித்ததாகக் கொள்ளலாம்.

8) சிருங்கார நிலை

பகைவர்கள் போற்றும் பாடியாகப் போர்க்களத்தில் வீரம் விளைத்து வீழ்ந்து கிடந்த கணவனை அவன் மனைவியர் தழுவி உரிமை கொண்டாடுதலை இத்துறை குறித்தது (150). சிருங்காரம் என்பது காதலைச் சுட்டியது. இங்கு மணாளன் இடத்து மனைவியர் கொண்டிருந்த மட்டிலாக் காதல் சுட்டப் பெற்றது. வீர புருஷனைக் கணவனாகப் பெற்றதற்கு அவர்கள் மனம் நிறைவுறுதலை இத்துறை குறிப்பாக உணர்த்துகிறது.

9) உவகைக்கலுழ்ச்சி

போர்க்களத்தில் வாளினால் விழுப்புண் பட்டு வீழ்ந்து கிடக்கும் கணவனைக் கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர்ச் சொரிதலை இத்துறைக்குரிய பொருளாகக் கூறுவர் (151). போர்ச்செயல்களில் பெண்களுக்கு நேரிடையான பங்கில்லை. என்றாலும் இல்லம் என்ற எல்லையை விட்டுக் களம் புகுந்து கணவரின் வீரத்தைக் கண்ணாரல்கண்டு பெருமிதம் அடைந்த சிறப்பினை ஒரு சில துறைகளாவது குறிப்பது நோக்கத்தக்கது.

போர்க்களக் கடமையினைவிட இல்லறக் கடமையினைப் பெரிதும் மதித்த பண்டைத் தமிழ்ப் பெண்களைப்போலவே உரோமாபுரி மகளிரும் விளங்கினர். எபிகூரியச் சிந்தனைக் குழுவிற்குரிய யூரிபிடஸ் என்ற நாடக ஆசிரியர் நவிலும் கருத்து இங்குச் சுட்டுதற்குரியது.

''போர்க்களம் நோக்கி ஆண்கள் மட்டுமே போவதாகவும், பெண்களாகிய நாங்கள் வீட்டிற்குள் அடைந்து கிடப்பதாகவும் ஆடவர் கூறுவது பொருளற்றது. ஒரு குழந்தையைப் பெறுவதை விட மூன்றுமுறை போர்க்களத்திற்குப் போகத் தயாராக உள்ளேன்'', என்று ஒரு குடும்பப்பெண் கூறுவதாக இந்நாடக ஆசிரியர் குறித்தல் காணத்தக்கது. மேலைநாட்டினைப் போலவே தமிழகத்திலும் பெண்கள் வீராங்கனைகளாக விளங்கியுள்ளனர்.

இனி, பு.வெ. மாலைக்குப் பின்னர்த் தோன்றிய வீரசோழியத்தில் காணப்பெறும் தும்பைத்திணைக்குரிய துறைகளைப் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

7. வீரசோழியம்

யுத்தமித்திரனார் ஐந்து துறைகளை மட்டுமே தும்பைத் திணைக்கு உரியவை என்று பெயர் சுட்டிக் கூறினார். (நூ.103)

அவையாவன:

1) நிலை
2) பாழிகோள்
3) வாளாட்டு
4) உடைபடை
5) களிற்றின்தொலையார்மலைவு

இவற்றைப் பெருந்தேவனார் பெரும்பாலும் தொல்காப்பிய நெறி நின்று விளக்கியிருத்தல் அறியத்தக்கது. இவர் கருத்தின்படி நிலை என்பது தொல். சுட்டிய தானை, யானை, குதிரை ஆகியவற்றின் நிலையும் பு. வெ. மா. சுட்டிய தேர்நிலையும் (மறம்) ஆகும். பாழிகோள் என்பது தொல், சுட்டிய படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம் ஆகும். இதனைப் பெருந்தேவனார் கைப்படை விடுத்து மெய்கொண்டு பொரும் தறுகணாளரின் ஏமபெருமை என்று விளக்கினார். தொல். சுட்டிய வளோராடும் அமலை என்ற துறையினைப் புத்தமித்திரனார் வாளாட்டு என்றார். உடைபடை என்பதனை, ''ஒருவர்க்குப் பல படைத்தலைவன் வாளினால் ஒச்சப் பட்ட உடைபடைத்தொகுதி'' என்று எழுதினர். அதற்கு நூழில் என்றும் பெயராம் என்று தொல்காப்பிய நெறியையும் குறித்தனர். ஈற்றில் சொல்லப்பட்ட துறை களிற்றொடு மலைதலும் படுதலும் குறிக்கும் என்றார். இதனைக் களிற்றெறிந்தோர் பாடு என்றும், களிற்றுடன் நிலை என்றும் முன்னை நூல்கள் மொழிந்தன.

இவர் கூறாமல் விட்ட துறைகள் பல. அவை அனைத்தையும்,

''......தொன்மை மிக்க
தலையாய நூலவை தன்னினுங் கண்டிங்கொழிந்த வெல்லாம்
சிலையாரும் நன்னுதல் மாதே! அறிந்துகொள் செப்பிடவே''
(103)

என்று கூறுவதன் வாயிலாக ஏற்றுக்கொண்டனர் எனலாம். உழிஞைத் திணைக்குப்பின்னர் தும்பையினை ஓதாமல், வாகைத் திணைக்குப் பின்னர் வீரசோழியம் தும்பைத்திணைக்கு இலக்கணம்

கூறியிருத்தல் சிந்திக்கத்தக்கது. எனவே, ஏடெழுதுவோரால் இந் நூற்பா இடமாற்றம் ஆகியிருக்குமோ என்று எண்ணத் தோன்று கிறது. இனி, இலக்கண விளக்கம் தும்பைத் திணை பற்றிக் கூறும் கருத்துக்களைக் காண்போம்.

8. இலக்கண விளக்கம்

தும்பைத் திணைக்குரிய ''தும்பைதானே நெய்தலது புறனே' என்ற தொல்காப்பிய விளக்க நூற்பாவை இந்நூலார் அப்படியே ஏற்றுக்கொண்டார். ஆயினும், தும்பைத் துறைகளைக் கூறும் முறையில் ஐயனாரிதனாரை அடியொற்றிச் சென்றுள்ளார். பு. வெ. மாலையில் சுட்டப்பெற்ற 24 துறைகளையும் இவரும் எடுத்தோதினார். கூடுதலாக நான்கு துறைகளை இவர் கூறியுள்ளார். அவையும் பு. வெ. மாலையில் காணப்பெறும் ஒரு சில துறைகளின் கிளைகளாகக் கொள்ளப்பெற்றனவே. தானை மறம் என்ற துறைக்குப் பு. வெ. மா. மூன்று பாடல்களை உதாரணம் காட்டியது. இவற்றுள் நாவலர் முதற் பாடலை மட்டும் தானை மறம் என்னும் துறைக்கு எடுத்துக்கொண்டார். ஏனைய இரண்டினையும் தானை மறப்பக்கம், தானை மறமற்றொரு பக்கம் என்றும் பெயரிட்டுக் கொண்டார். தார்நிலை என்பதற்குப் பு. வெ, மாலையில் இரு பாடல்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றினைத் தார்நிலை என்றும் மற்றதனைத் தார்நிலைப்பக்கம் என்றும் கொண்டனர். அன்றியும், தார் என்ற சொல்லிற்குப் பதிலாகத் தூசி என்ற சொல்லை நாவலர் பயின்றார். தன்னைவேட்டல் என்ற துறைக்குப் பு. வெ. மா. இரு வெண்பாக களை உதாரணம் தந்தது. அவற்றுள் இறுதிப்பாடலை இவர் தன்னை வேட்டலின் பக்கம் என்று எடுத்துக் கொண்டார். எனவே, தும்பைக்குரிய துறைகள் இருபத்தெட்டாகப் பெருகி விட்டன.

இனி, சாமிகவிராயர் இத்திணை பற்றி இயம்பியுள்ள கருத்துக் களைக் கருதுவோம்.

9. சுவாமிநாதம்

இந்நூலார் நூற்றுக்கு நூறு வைத்தியநாத நாவலரைப் பின்பற்றிச் செல்பவர். இவர், ''தாங்கு நெய்தற்புறம் தும்பை'' என்று பழைய நெறியினைப் பாடினார். சமர்க்கு ஆயத்தப் படுதலைத் தும்பை குறித்தது என்றார். தும்பை தரித்தல் முதல்

இருகோன் சுற்றம் முற்றும் இறத்தலாகிய தொகை நிலை வரை 28 துறைகளை எண்ணியுள்ளார். இருசாரார் சுற்றம் இறத்தற்குப் பாண்டவகௌரவர் போர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்பதை முன்னர்க் குறித்துள்ளோம். சுவாமிநாதம் சுட்டுவன அனைத்தும் இலக்கண விளக்கத்தில் இடம்பெற்றவையேயாகும். எண்சீர் விருத்தயாப்பில் துறைகளைக் கூறவேண்டிய கட்டாயத்தினால் பரியாயச் சொற்களை ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளார். வேறு சுட்டத்தக்க பெருமை இவர் இலக்கண நூலில் இடம் பெற்றதாக இயம்புவதற்கில்லை.

பல்வேறு இலக்கண நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் இலக்கியங்களிலும் தும்பைத்திணை பற்றிய செய்திகள் நிரம்பப் பேசப்பெற்ற திறத்தினைக் கண்டோம். இவற்றை ஆராய்ந்ததன் வாயிலாக அறியப்பெற்ற உண்மைகளையும் முடிபுகளையும் இங்குத் தொகுத்துக் கூறுதல் தகும்.

ஆய்வின் முடிபுகள்

1) தொல்காப்பியர் எதிரூன்றுதல் சொல்லாத குறையினைத் தும்பை கூறியதால் நிறைவு செய்துவிட்டார் என்பது உரையாசிரியரின் உள்ளம்.

2) பேராற்றலைத் தீர்மானித்தற் பொருட்டு நிகழ்த்தும் தும்பைப்போரினை, தும்பைவெம்போர் என்று இளங்கோ சுட்டியுள்ளார்.

3) தனிநிலையில் நிகழ்வதோடு வெட்சி, வஞ்சி, உழிஞை ஆகிய மூவகைத் திணைப்புறத்தும் தும்பைப்போர் நிகழும்.

4) தொல்காப்பியர் சுட்டாத தேர்மறம் என்ற துறையினை ஐயனாரிதனார் குறித்துள்ளார்.

5) தானைநிலை, யானைநிலை, குதிரைநிலை எனத் தொல்காப்பியர் சுட்டிய துறைகளுடன் பு. வெ. மா. சுட்டிய தானைமறம், யானைமறம், குதிரைமறம் என்ற துறைகள் தொடர்புடையவை.

6) 'கைவேல் களிற்றொடு' என்ற திருக்குறள் நூழிலாட்டு என்ற துறைக்குரியது எனப் பரிமேலழகர் குறித்திருத்த

லான், அவர் புறப்பொருள் மரபினை நன்கு உணர்ந்தவர் என்பது தெளிவு.

7) தும்பை, தும்பையரவம், தேர்மறம், பாணர்பாட்டு, மூவகைக்குரவை, சிருங்காரநிலை, உவகைக் கலுழ்ச்சி என்ற ஒன்பதும் தொல்காப்பியர்சுட்டாது ஐயனாரிதனார் குறித்துள்ள புதிய துறைகள் ஆகும்.

8) உழிஞைத்திணையினை அடுத்துத் தும்பைத்திணைக்கு இலக்கணம் ஓதாமல், வாகைக்குப்பின்னர் அதன் இலக்கணத்தை வீரசோழியம் விளம்பியுள்ளது. ஏடெழுது வோரால் இம்மாற்றம் நிகழ்ந்திருக்கக் கூடும்.

9) பு. வெ. மா. ஒரு சில துறைகளுக்குக் கூடுதலாகக் கூறிய வெண்பாக்களை, அவ்வத்துறைகள் பக்கம் பற்றியவை என்று இலக்கண விளக்கம் எண்ணியது.

10) இலக்கண விளக்கத்தை அடியொற்றியே சுவாமிநாதம் தும்பைத்திணைக்குரிய துறைகளைத் தொகுத்துக் கூறி யுள்ளது.

---

9. வாகைத்திணை

1. வாகை—பொருள்விளக்கம்

வாகை என்பது வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை போலப் போர்த்திணை அன்று. இங்குச் சுட்டப்பெற்ற போர்களிலும் மற்றும் வாழ்வியலின் ஒவ்வொரு பகுதியிலும் பணியிலும் ஒருவர் பெறும் வெற்றியினைக் குறிக்கும் ஒரு குறியீடாக வாகை என்ற சொல் வழங்குகிறது. இக்காலத்திலும் ஏதாவதொரு துறையில் வெற்றி பெற்றவர்க்கும் சிறப்புற்றோர்க்கும் மாலை போட்டு மரியாதை செய்யும் மரபு தொடர்ந்து காணப்படுகிறது.

தொல்காப்பியர் வாகைத்திணைக்குக் கூறும் வரையறை விளக்கத்தினை,

''தாலில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப''. (புறத். 73)

எனவரும் நூற்பா தெளிவுறுத்துகிறது. ''கேடில்லாத கோட்பாட்டினையுடைய தத்தமக்குள்ள இயல்பை வேறுபட மிகுதிப்படுத்தல் வாகை ஒழுகலாறு'' என்று உரை வரைந்தனர் இளம்பூரணர். இக்கருத்தினை மேலும் விளக்கமாகக் கூற முற்பட்டவர் நச்சினார்க்கினியர் :

'வலியும் வருத்தமும் இன்றி இயல்பாகிய ஒழுக்கத்தானே நான்கு வருணத்தோரும் அறிவரும் தாபதர் முதலியோரும் தம்முடைய கூறுபாடுகளை இருவகைப்பட மிகுதிப்படுத்தல்'

என்பது அவர் உரைப்பகுதி.

பல்வேறு பதவியில் உள்ளவர்களும், தொழில்களைச் செய்பவர்களும் வருத்தப்படாதும், வலியின்றியும் தத்தம் செயல்களில்

சிறந்து விளங்குவதை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கடைப்பிடித்து, அதனைப் பெறுதற்குரிய வகையில் தம் ஆற்றலை மிகுதிப்படுத்தியும் காட்டுதலினால் விளையும் சிறப்பும் வெற்றியும் வாகை என்று போற்றப்படுகிறது. நச்சினார்க்கினியர், இங்ஙனம் மிகுதிப்படுத்தல் இரு வகைப்படும் என்றார். அவை வருமாறு :

1) தன்னைத் தானே மிகுதிப்படுத்தல்
(—இது தற்புகழ்ச்சி அன்று)

2) பிறர் மீக்கூறு படுத்தல்
(—மற்றவர் தன்னை உயர்த்துக் கூறுதல்)

இவ்விரண்டனுள், முதலிற் சொல்லப்பட்டது தன்முயற்சியால், தன் உழைப்பால் வாகை புனைதலைக் குறித்தது. இரண்டாவதாக கூறப்பட்டது, தன் முயற்சி ஒருபுறம் இருப்பினும், தூண்டு கோலாகப் பிறரும் விளங்கித்தான் உயர்தற்கு உதவுதலைக் குறித்தது.

2. இருவகை வெற்றி

மேலும், வெற்றிக் குறியீடாக வழங்கப்பெறும் வாகை, முல்லை என்ற இரண்டின் பொருண்மை பற்றியும் நச்சினார்க்கினியர் தெளிவுறுத்தியுள்ளார். உறழ்ச்சியாற் பெற்ற வெற்றி வாகை என்றும், இயல்பாகப் பெற்ற வெற்றி முல்லை என்றும் வேறு பிரித்துக் காட்டினார். உறழ்தல் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையே ஆகும். விளையாட்டுக்களில் இடம்பெறும் இரு குழுவினர் சிறப்பாக ஆடினும் உறழ்ந்து காணுமிடத்து ஒரு குழுவினர் வெற்றி பெறுதல் போல, ஒத்ததுறை ஒன்றில் பணி புரியும் பலருள் ஒருவர் தகுதி மிகுதி காரணமாக ஈட்டும் வெற்றி உறழ்ச்சிவகையாற் பெற்றது என்று எண்ணப்பெறும். போட்டியில் தோன்றும் வெற்றியை இது குறித்தது. போட்டி இன்றிப் பெறும் வெற்றி இயல்பானதாக, இருந்த இருப்பில் அடைவதாக இருத்தலின் முல்லை என்று சொல்லப்பெற்றது என்பதே நச்சினார்க்கினியர் எண்ணம்.

ஒருவன் தன்னைப் பிறருடன் உறழ்ந்துகாண முற்படாது விடினும், பிறர் அவனை ஏனையோருடன் ஒப்பிட்டும் உறழ்ந்தும் இன்ன இன்ன காரணங்களினால் இவன் மற்றவரைவிட மேம்பட்டவன் என்று உயர்த்துக் கூறுதலும் வாகையே ஆகும். நூற்பாவில் 'மிகுதிப் படுதல்' என்னாது, 'மிகுதிப்படுத்தல்' எனப் பிறவினையினாற் கூறியதால் இவ்வாறு ஒரு விளக்கம்

கூறினார் நச்சி. அன்றியும், ஏனைய கற்களினின்றும் இயல்பாவே வேறுபட்டு விளங்கும் மாணிக்கத்தினை நன்றென்றாற்போல், உலக முழுதும் அறியும் உயர்ச்சியுடைமையும் வாகை என்றார். ஊர்த்தலைவர், நகர்த்தலைவர், துறைத்தலைவர் போலாது நாட்டுத்தலைவர், உலகத்தலைவர் என்று உயர் மாந்தர் அனைவ ராலும் போற்றப்பெறும் மாட்சியும் வாகையில் உயர்நிலையைக் குறிக்கும்.

இனி, வாகைத்திணை பாலைத்திணைக்குப் புறமாதலைப் பார்ப்போம்.

3. பாலையின்புறம் வாகை

தொல்காப்பியர் வகுத்துக்கொண்ட புறத்திணை ஒவ்வொன் றும் அவரால் வகுத்துக் கொள்ளப்பெற்ற அகத்திணை ஒவ்வொன் றின் புறமாகக் கூறப்பட்டது. அவ்வகையில்,

''வாகை தானே பாலையது புறனே'' (நூ. 73)

என்று பாலைத்திணைக்குப் புறமாக வாகைத்திணையினை அமைத்தனர். இத்தகைய கூற்றுக்கள் தம் கூற்றாகவே அமைவதால் இப்படி ஓர் இயைபினைக் கண்டுகாட்டிய முதல் வராகவும் அவரை மதிக்கலாம்.

பாலைக்குப் புறமாக வாகை அமைதற்கு இளம்பூரணர் கூறும் காரணங்களைக் காண்போம்.

''பாலையாவது தனக்கென ஒரு நிலம் இன்றி எல்லா நிலத் திலும் காலம் பற்றிப் பிறப்பது போல, இதுவும் எல்லா நிலத்தினும் எல்லாக் குலத்தினும் காலம் பற்றி நிகழ்வது ஆதலினானும் ஒத்தார் இருவர் புணர்ச்சியினின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறு போலத் தன்னோடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப் படுதலானும் அதற்கு இது புறனாயிற்று'' (ப. 109).

இவர் சுட்டும் இரு காரணங்களைப் பின்வருமாறு விளக்கிக் கூறலாம்.

1) பாலைக்கென்று ஒரு தனி நிலம் இல்லை; எல்லா நிலத் திலும் வறட்சிக் காலம் பற்றிப் பாலையாகத் தோன்றும். அதுபோல, வாகை ஒரு குறிப்பிட்ட நிலத்திற்கு மட்டுமே

உரியதன்று. எல்லா நிலத்தார்க்கும் குலத்தார்க்கும் பொது.

2) பாலைத்திணைக்கு உரிப்பொருள் பிரிவு. பத்துவகை ஒப்பினாலும் கூடிய தலைமக்கள் இருவருள், தலைவன் பொருளீட்டுதலின்வழி புகழ் ஈட்டுதற் பொருட்டுத் தலைவியைப் பிரிகிறான். அதுபோல, தகுதியால் தன்னொடு ஒத்தாரினின்றும் தனிவீறு படைத்த ஒருவனைப் பிரித்துப் புகழ் பெறுதலை வாகையில் காண்கிறோம். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட பிரிவு என்பது ஒத்தாராகிய ஏனையோரினின்றும் ஒருவன் பிரிவு படுதலைச் சுட்டியது. எனவே, பாலையிலும் வாகையிலும் பிரிவு உண்டு. பிரிவிற்கு நோக்கம் புகழே என்பது புலனாகும்.

இவ்விருகாரணங்களும் முதற்பொருளும் உரிப்பொருளும் பற்றி அமைவன. மற்றும் ஒரு காரணத்தையும் நாம் கூறலாம். அது கருப்பொருள் பற்றி அமைவது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, தும்பை என்பன தாவரங்கள். இவைபோலவே வாகையும் ஒரு தாவரம். இது பாலை நிலத்தில் தோன்றுவது என்பதற்குப் பாலைத்திணைக்குரிய குறுந்தொகைப் பாட்டினுள்,

''வாகை வெண்ணெற் றொலிக்கும்'' (7.5)

எனவரும் பகுதியே சான்றாகும்.

இவ்வாறே வெட்சி கரந்தை என்பன குறிஞ்சி நிலத்திலும், வஞ்சி காஞ்சி என்பன முல்லை நிலத்திலும், உழிஞை நொச்சி என்பன மருத நிலத்திலும், தும்பை நெய்தல் நிலத்திலும் தொடக்கத்தில் தோன்றிய தாவரங்கள் என்று கருதவேண்டும். எனவே, அந்த அந்த நிலத்தில் நடக்கும் போருக்கு அவை அடையாளமாக அமைந்தன என்று எண்ணலாம்.

இனி, நச்சினார்க்கினியர் கூறும் கூடுதலான சில காரணங்களைக் காண்போம்.

1) சிற்றெட்டகம் என்ற நூலில்,

''நாளும் நாளும் ஆள்வினை அழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லை யால்புகழ்''

என்று ஆள்வினைச் சிறப்புக் கூறிப் பிரிதல் சுட்டப்பட்டது. முயற்சிமேற்கொள்ளுதல் ஆகிய ஒழுகலாறு பாலைத்திணைக்கு

உரியது. அதுபோல, வாகைத்திணையிலும் ஆள்வினைச் சிறப்புத்தான் கூறப்பட்டது. பாலையில் மேற்கொள்ளும் முயற்சிக்குப் புகழ் குறிக்கோளாதல்போல், வாகைக்குரிய முயற்சிக்குத் துறக்கம் இறுதிக் குறிக்கோள் ஆயிற்று.

2) தொகை நூல்களில் பாலை மிகுதியாக இடம்பெறுதல் போல, வாகையும் மிகுதியாகப் பேசப்பட்டது.

இவ்விரு காரணங்களில் முதற்காரணம் பாலை வாகை ஆகிய இரண்டிலும் காணப்பெறும் ஆள்வினையுடைமையினைப் பொதுமைப்பண்பாக அமைதலைப் பற்றியது. இரண்டாவது காரணம் சிந்திக்கத்தக்கது. தொகை நூல்கள் தோன்றுவதற்கு முன்னமே இலக்கணம் செய்தவர் தொல்காப்பியர் என்ற கருத்து நச்சினார்க்கினியர்க்கு உண்டு. ஆதலின், தொகை நூல்களில் இவ்விரு திணைக்கும் மிகுதியாகப் பாடப்பெறுதலை ஒரு காரணமாக எடுத்துக்காட்டுதல் அவ்வளவு பொருத்தம் உடையதாக இல்லை. எனினும், அவருக்குக் கிடைத்த இலக்கியங்களில் தொகை நூல்களே தொல்காப்பிய மரபுகளைப் பேணிக் காக்கும் தொன்மைப் பனுவல்களாக விளங்குதலின், தம் கருத்திற்கு அவற்றை மேற்கோளாகச் சுட்டுதல் தக்கதே.

இனி, நாவலர் ச. சோ. பாரதியார்,

''பாலை ஆறக்காதலை வளர்த்து மீட்டும் இன்பத்தை
மிகுவித்தல்போல, வாகை மறக்காதலை வளர்த்து
வெற்றியின்பம் விளைவிப்பதால் அதற்கு இது புறனாயிற்று''

என்று புதியதொரு இயைபினைப் புலப்படுத்தியுள்ளார்.

கொடிய பாலை நிலத்தைக் கடந்துசென்று குறுக்கிடும் துன்பங்களைத் தாங்கி நின்று ஒருவன் பொருளும் புகழும் சிறப்பும் இன்பமும் பெறுகிறான். அதுபோல வாகையினைப் பெறுதற்கும் பெருமுயற்சியும் இடையூறு தாண்டிச் செல்லுதலும், தடையின்றி உழைத்தலும் வேண்டப்பெறுவன. முடிவில் வாகையினால் அனைத்துச் சிறப்பும் அடைகிறான். இந்த அருமை நோக்கியும் பாலைக்குப் புறமாக வாகை கூறப்பட்டது என்று கொள்ளலாம்.

இதுகாறும் வாகைபற்றிய வரையறையும் விளக்கமும் பாலைக்குப் புறனாதற் பாங்கும் கண்டோம். இனி, வாகைத்திணைக்குத் தொல்காப்பியர் ஓதிய துறைகள் பற்றிய விளக்கமும் ஐயனாரிதனார் சுட்டியுள்ள துறைவகை விளக்கமும் குறித்துச் சற்று உற்று நோக்குவோம்.

4. துறைவிளக்கமும் ஒப்பீடும்

தொல்காப்பியமும் பு. வெ. மாலையும்

தொல்காப்பியர் இருநூற்பாக்களில் வாகைத்திணைக்கு உரிய பாகுபாடுகளையும் துறைகளும் வகை செய்து வழங்கியுள்ளார். இவற்றுள், ''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்'' என்ற நூற்பாவில் வாகையினை ஏழுவகையாகத் தொகை செய்தனர். ''கூதிர் வேனில் என்றிரு பாசறை'' என்ற நூற்பாவில் இத் திணைக்கு உரியனவாகப் பதினெட்டுத் துறைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

ஐயனாரிதனார், ''சீர்சால் வாகை'' எனவரும் ஒரே நூற்பா வில் (நூ.8) வாகைத்திணையினையும் துறைகளையும் தொகுத்துச் சுட்டினார். வாகை, வாகை அரவம், அரசவாகை முதலாக அருளொடு நீங்கல் முடிய உள்ள முப்பத்து மூன்று துறைகள் வாகைக்கு உரியன என்றார். இவற்றுள் பல தொல்காப்பியர் கூறியவை. சிலவே புதியவை. முதலில் இருவரும் ஏற்றுக்கொண்ட வாகைத்துறைகளை வரிசைப் படுத்தி ஆராய்வோம்.

1) அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்

இந்தத் தொடர் மயக்கம் உடையது. அறுவகைப்பட்ட பார்ப்பனரா அன்றி, பார்ப்பனரின் அறுவகைப்பட்ட பக்கமா? என்பதே மயக்கம். இளம்பூரணர் அறுவகைப்பட்ட பக்கம் பார்ப் பனர்க்கு உரியவை என்று பொருள் செய்தார். ''அறுவகைப்பட்ட பக்கம் எனக்கூட்டுக'' என்பது அவர் உரை. இதுவே பொருத்தம் மிக்கதாகத் தெரிகிறது. பக்கம் என்பது திறனைக் குறிக்கும் என்றார். பார்ப்பனர் வாழ்வில் சுட்டப்பெறும் அறுவகைத் திறன்கள் ஆவன :

1) ஓதல்	2) ஓதுவித்தல்	3) வேட்டல்
4) வேட்பித்தல்	5) ஈதல்	6) ஏற்றல்

என்பன. இவ்வொழுக்கத்தால் ஏனைய அந்தணரினின்றும் மேம்பட்டு உயர்தல் வாகை எனப்படும். இத்துறைகளில் வல்ல பிற இனத்தாரினின்றும் உயர்தலும் வாகையே. அந்தணர் என்பவர்கள் ஓதுதற்குரிய நூல்களையும் கலைகளையும் சாத்திரங் களையும் குறைவறப் பயிலுதலும், குறைவறப் பிறர்க்குச் சொல்லிக் கொடுத்தலும், மறை விதித்த வேள்விகளைத் தாம்

புரிதலும், பிறரைப் புரியச் செய்தலும், இரப்போர்க்குக் கரவாது ஈகை புரிதலும், வேள்விக்களம், அரசவை முதலிய இடங்களில் ஈகை நிகழும் பொழுது விலக்காது ஏற்றலும் ஆகிய ஆறு தொழில் களில் முனைந்து நிற்றலைப் பார்ப்பன வாகை என்றார். இக் கருத்தினால்தான் திருவள்ளுவர், ''அறுதொழிலோர்'' என்று அந்தணரைச் சுட்டினார். பதிற்றுப்பத்தில்,

''ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல்என் றாறுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகி'' (24:6-8)

என்று இயம்பப்பெறுதல் தொல்காப்பியரின் கருத்தினைப் புரிந்து கொள்ளுதற்கு ஒருவகையில் உதவுகிறது எனலாம்.

அறுவகைத் தொழில்களுக்கும் ஏற்ற சான்றுகளைப் புறநானூறு, திருக்குறள், நாலடியார், பழமொழி ஆகிய இலக்கியங் களினின்றும் இளம்பூரணர் எடுத்துக் காட்டினர்.

நச்சினார்க்கினியர் விளக்கம்

இனி, நச்சினார்க்கினியர் கூறியுள்ள விளக்கத்தினைக் காண்போம். ''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்'' என்ற நூற்பா வாகைத்திணைக்குப் பொது விலக்கணம் கூறுகிறது என்றார். இரண்டாவது நூற்பாவில் வருவன போலத் துறைப் படுத்திக் கூறுதற்கு ஏலாத பரப்புடைய செயல்கள் பலவற்றையும் தொகுத்து ஒரோ ஒன்றாக்கி ஏழுவகைப் படுத்தி இந்த முதல் நூற்பாவில் தொல்காப்பியர் சுட்டியுள்ளார் என்பது இவர் கருத்து. எனின், பின்னூலார் இவற்றையும் பிரித்தெடுத்துத் துறைகளின் வரிசையில் சேர்த்துக் கூறியுள்ளனர் என்பதையும் இங்குச் சுட்டுதல் தக்கது. 'பார்ப்பனப்பக்கம்' என்பதைப் 'பார்ப்பியல்' என்று நச்சி குறித்தார். பார்ப்பியலைத் தலை இடை கடை என்று மூன்றாகப்பிரித்து ஒவ்வொன்றும் மூவகைப்படும் என்று பெருக்கிக் காட்டினார். இவர் கூறுவன பலவும் வேதவழக்கொடு பொருந்தி யவை. தமிழ் நூல்களிலும் அந்தணர் ஓதி வாகை புனைதற்கு உரியன உண்டு என்றார் :

''இனித் தமிழ்ச் செய்யுட்கண்ணும் இறையனாரும் அகத்திய னாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாரும் கவுதமனாரும் போல்வார் செய்தன தலையும், இடைச்சங்கத்தார் செய்தன

இடையும், கடைச்சங்கத்தார் செய்தன கடையுமாகக் கொள்க''. இன்ன இன்ன நூல்களை இன்னார்தான் ஓத வேண்டும், ஓதுவித்தல் வேண்டும் என்ற வரம்புகளையும் இவர் உரை குறிப்பிடுகிறது. வைதிக நெறிக்கு ஏற்ப இவர் உரை இங்கு அமைந்தது. இளம்பூரணரைப் போலவே இவரும் அறு தொழில்களைச் சுட்டியுள்ளார்.

பாரதி அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்பதற்கு கூறும் பொருள் கூர்ந்து நோக்கத்தக்கது. இவர் அறுவகைப்பட்ட பக்கம் என்று எடுத்துக் கொள்ளாது, அறுவகைப்பட்ட பார்ப்பனர் என்று பொருள் காண்கிறார். தொல்காப்பியர் காலத்தில் பார்ப்பனர் மரபால் ஆறுவேறு பிரிவினராக விளங்கினர் என்று எண்ணுகிறார். இவர்கள் இக்காலத்தில் எண்ணாயிரவர், மூவாயிரத்தவர், வடமர், சோழியர் என்று பல்வேறு பகுப்பினராக இருத்தல்போல், பண்டும் ஆறு பிரிவினராக இருந்தனர் என்கிறார். இதற்கு வலிமைமிக்க சான்று ஒன்றும் கூறவில்லையாதலின், இவர் கருத்து ஏற்பதற்கில்லை.

ஐயனாரிதனார் பார்ப்பனவாகை (163), பார்ப்பன முல்லை (172) என்று இரு துறைகளை குறித்துள்ளார். இவற்றுள், முன்னது நான்மறை பயின்ற அத்தணர் வேள்வி செய்து விறல் மிகுத்தலைச் சுட்டுவது. பின்னது, இரு வேந்தர்களிடையே நிலவும் மாறுபாட்டை நீக்கும் பொருட்டுத் தூது செல்லுதலைக் குறிக்கும். எனவே, வேள்வி, தூது ஆகிய இரண்டினாலும் அந்தணர் மேம்படுதலை இவ்விரு துறைகளும் குறித்தன எனலாம்.

பழைய பனுவல்களில்

புறநானூற்றில் இரு பாடல்கள் வாகைத்திணையில் பார்ப்பன வாகைக்கு உரியனவாகத் தொகுக்கப்பெற்றுள்ளன (166, 305). எண் நாணும்படி பல வேள்விகள் புரிந்து மண் நாணும்படி புகழ் பரப்பிய சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடிய ''நன்றாய்ந்த நீள்நிமிர்சடை'' என்ற பாடல் இத்துறைக்கு உரியது (166). இந்த அந்தணன், புத்தர் முதலிய புறச்சமயத்தார்க்கும் உண்மைப் பொருளை ஏற்பச் சொல்லி இருபத்தொரு வேள்விகளைக் குறைவின்றிச் செய்த உரவோர் மரபில் வந்தவன். இத்தகையோன் தன் துணைவியருடன் பல்வேள்விகள் புரிந்தும் அறங்கள் ஆற்றியும் மேம்பட்டதைப் புலவர் போற்றுகிறார். இந்தப் பாடலின் (166)

கீழ், பார்ப்பன வாகைக்குப் பு. வெ. மா. கூறும் இலக்கணக் கொளு பழைய உரையாசிரியரால் கொடுக்கப்பட்டிருத்தலின் இவ்வுரை ஐயனாரிதனாரின் காலத்திற்குப் பிற்பட்டது என்பது புலனாகும்.

சிலப்பதிகாரத்தில் பார்ப்பனவாகை சுட்டப்பெற்றது. (23.72). சேரழநாட்டுப் பார்ப்பனன் ஆகிய பராசரன் சேரவேந்தன் அவைக்களம் சென்று மறைவல்லாருடன் தருக்கம் செய்து பெற்ற வெற்றியைப் பார்ப்பன வாகை என்ற குறியீட்டினால் இளங்கோ சுட்டினார். இத்துறை பன்னிரு படலத்தில் இடம் பெற்றதாதல் வேண்டும்.

மதுரை வேளாசரன் பாடிய ''வயலைக் கொடியின் வாடிய மருங்குல்'' என்ற பாடலும் (305) இந்தத் துறைக்கு உரியது. அந்தணன் தூது சென்றதற்கு இப்பாடலை இளம்பூரணர் அகத்திணையியலுள் (நூ. 28) எடுத்துக் காட்டினார். ஆதலின், அந்தணர்க்கு உரியன என்று மேலே சுட்டப்பெற்ற அறுவகைத் தொழிலுடன் அரசியல் தூது போதலும் சேர்த்து எழுவகைத் தொழில்கள் உரியன என்பது புலனாகும். ''ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன'' என்ற நூற்பாவினால், இவர்கள் 'உயர்ந்தோர் என்றும் எண்ணப பெற்றனர். அன்றியும், அகம்புகல் மரபின் வாயில்கள் என்று எண்ணப்பெற்ற பன்னிருவருள் இவரும் இடம் பெற்றனர். (தொல். பொருள், 191). அரசியல் தூதே யன்றித் அகத்திணை தூதுக்கும் உரியவராக எண்ணப்பெற்றனர். இவர்கள் தமக்குரிய அறுவகைத் தொழிலே தவிர பிறபிற பணி களும் ஆற்றினர் என்பதற்குக் காலந்தொறும் எழுந்த இலக்கியங் களில் சான்றுகள் காணப்படுகின்றன.

கோசிகமாணி என்னும் அந்தணன் மாதவி வீட்டில் குற்றேவல் புரிந்த செய்தியை இளங்கோ குறிப்பதால், சமுதாயத்தில் அந்தணர்கள் தத்தம் தகுதிக்கு ஏற்பப் பல நிலைகளிலும் பணி புரிந்தனர் என்பது போதரும்.

இனி, அரசர்க்குரியனவாகக் கூறப்பெறும் தொழில்களையும் அவற்றில் அவர்கள் மேம்படுதலையும் பற்றிய செய்தியை நோக்குவோம்.

2) ஐவகை மரபின் அரசர் பக்கம்

அரசர்க்குரிய ஐவகை மரபின் பக்கம் என்பன ஓதலும், வேட்டலும், ஈதலும், படை வழங்குதலும் குடியோம்புதலும்

ஆகிய ஐந்தொழில்களைக் குறிக்கும் என்பர் இளம்பூரணர். திருக்குறளில் அரசனுக்குரிய இலக்கணங்களைக் கூறியுள்ள இருபத்தைந்து அதிகாரங்களில் பல குறள்களில் ஓதல், ஈதல், படை வழங்குதல் குடியோம்புதல் என்பன சுட்டப்பெற்றன. சான்றாக,

1) தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

2) அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.

3) கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.

எனவரும் பாடல்களைச் சுட்டலாம். எனின், வேட்டல் என்பது அருள் உள்ளம் கொண்ட திருவள்ளுவர்க்கு உடன்பாடில்லை யாதலின் கூறவில்லை. சங்க இலக்கியங்களில் அரசர்கள் பல்யாகங் களைப் புரிந்துள்ளமையில் வேட்டலையும் வேந்தர்க்குரியதாக்கி, அதில் மேம்படுதலையும் வாகை என்றனர் தொல்காப்பியர்.

இளம்பூரணர் கூறியவற்றுள் படை வழங்குதல். குடியோம்புதல் என்பனவற்றுக்குப் பதிலாகக் காத்தல். தண்டம் செய்தல் என்பன வற்றை நச்சினார்க்கினியர் வேந்தர்க்குரியனவாகக் குறித்தனர். இவர்கட்கு இராசசூயம், துரங்கவேள்வி போல்வன உரியன, என்றார். கொடைப்பொருள் இவை என்றும், காத்தல் முறை இது என்றும் காட்டினார். இவர் கூறியனவற்றுட் சில தமிழகத்தில் வழங்காதவை என்று தோன்றுகிறது. உயிர்க்கு ஏதம் செய்யும் மக்கள். விலங்கு, பகைவர் கொடுங்கோலன் முதலியோரை விதிவழி தண்டித்தலைக் குறித்தனர். இதனால் அரசர்க்கு அறம், பொருள் இன்பம் பயக்கும் என்றனர். மன்னன் மன்பதையினைக் காவல் புரியும் கடமையவும் குறித்துச் சேக்கிழார்,

''மாநிலம்கா வலன்ஆவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த் தறங்காப்பான் அல்லனோ''.

என்று இயம்புதல் இங்கு எண்ணுதற்குரியது. அனபாயகுலோத்துங் கனின் தலைமை அமைச்சராக விளங்கிய அனுபவத்தால் இவ்வாறு

வேந்தனின் காவல் திறத்தைச் சேக்கிழார் அறிந்து கூறினார் என்று கருதலாம்.

இனி, அரசர்க்கு உரிய வருவாய் வாயில்களையும் நூற்பாவில் உள்ள மிகைச் சொல்லினால் சுட்டினார் நச்சி.

எனின், ச. சோ. பாரதியார் ஐவகை மரபின் அரசன் என்றது சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரையும், வேளிர், குறுநில மன்னர் ஆகியவரையும் உளப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பர். வேளிர் முதலியோர்க்கு அரசர் என்பது பெயரன்மையானும், ஐவகை மரபின் பக்கங்களினால் (—திறங்களினால்) அரசர் வாகை சூடுதலைக் குறித்தலே தொல்காப்பியர் கருத்தாதலானும் இவர் கூறும் உரை மேலும் ஆராய்தற்குரியது.

இத்துறையுடன் ஒத்ததாக அரசவாகை (157), அரசமுல்லை (171) என்று இருதுறைகளை ஐயனாரிதனார் சொல்லியுள்ளார். நுகத்திற் பகலாணி போன்ற நடுநிலைமையும் வாய்மொழியும் உடைய இகல்வேந்தனின் இயல்பினைக் கூறுதல் அரசவாகை எனப்படும். புறநானூற்றில் பல பாடல்கள் அரசவாகைத்துறையில் அமைந்தவை (19-23, 25, 26, 31, 33, 37, 42-4, 51-4, 61, 66, 76-9, 81.2, 93-4. 98-100, 104, 125, 167-8, 174). பெரும்பாலும் அரசனின் வெற்றியைக் கூறுவனவாக இவை உள்ளன இவருள் வேளிரும் படைத்தலைவரும் இடம்பெறுதலின், துறைவகுத்த காலத்தில் அரசர் என்ற சொல்லிற்கு இப்புதுப் பொருள்கள் கொள்ளப்பெற்றன வாதல் கூடும். அரச முல்லை என்பது, பகைவரை வருத்தும் நெடுவேல் வேந்தன் இருநிலங் காத்தலின் இயல்பினைக் கூறும் துறையாகும். இது புறநானூற்றில் சுட்டப்பெறவில்லை.

3) இது மூன்று மரபின் ஏனோர் பக்கம்

ஏனோர் என்று சுட்டப்பெற்றோர் நால்வகைப்பிரிவில் எஞ்சிய வணிகரும் வேளாளரும் ஆவர். வணிகர்க்கு உரிய இருமூன்று தொழில்கள் : ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரை யோம்பல் என்பனவாகும். இவற்றில் மேம்பட்டு விளங்குதல் இவர்க்குரிய வாகையாகும்.

வேளாண் மாந்தர்க்குரிய அறுவகைத் தொழில்கள் : உழவு, உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடுபுறந்தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த கல்வி என்பனவாகும். இத்தொழில்

களைச் சிறப்புறச் செய்து மேம்படுதல் வேளாளர்க்குரிய வாகை யாகும் என்பர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் வணிகர்க்குக் கூறப்பெற்றவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டார். எனின், வேளாளர்க்குச் சொல்லப்பெற்ற உழவொழிந்த தொழிலை வாணிபம் என்று கொண்டனர். இதனால், வணிகரே அன்றி வேளாளரும் வாணிகம் புரிதல் உண்டு என்ற உலகியல் உண்மை தெளிவாகும். அன்றியும் நெய்தல், தச்சு, உலோகத்தொழில், கட்டிடத் தொழில் என்று எண்ணப்பெறுவன பிறவும் அக்காலத்து வேளாளர்கள் புரிந்த தொழில்கள் என்று கொள்ளுதற்குரியன என்பது, 'உழவொழிந்த தொழில்' என்பதால் உய்த்துணரப்படும்.

ச. சோ. பாரதியார், இருமூன்று மரபின் ஏனோர் என்று கொண்டார். ஆறுவேறு மரபினராகிய தமிழ் மக்களை இத்தொடர் சுட்டியது என்றார். ஆயர், குறவர், பரவர் என்ற நானில மக்களுடன், விளைவலர், ஏவல் மரபினர் என்ற இருவகையினரைச் சேர்த்து அறுவகை மரபினைக் கருதினர். பின்னர்ச் சுட்டப் பெற்றோர் எல்லா நிலத்திலும் இருத்தலின், அவர்களை நிலச் சுட்டி னின்றும் பிரித்துக் கூறி எண்ணுதல் சரியில்லை. மேற் கூறப்பெற்ற அந்தணர் அரசர் ஆகியோர்க்குக் கூறப்பெற்ற வாகைக்குரிய தொழில்களைப் போலவே, விடுபட்ட வணிகர், வேளாளர்க்கு உரிய இருமூன்று தொழில்கள் இயம்பப்பெற்றன என்று கொள்ளு தலே ஏற்புடையது.

பு. வெ. மாலையில் வாணிகவாகை (164), வேளாண்வாகை (165) என்பன இரண்டும் கூறப்பட்டன.

தொல்காப்பியரே நால்வகைப் பிரிவினர்க்கும் இன்ன தொழில் கள் உரியவை என்று இந்நூற்பாவில் வெளிப்படையாகச் சுட்டி யிருப்பின் சிக்கல் எழுவதற்கு இடம் இராது. மரபியல் நூற்பாக் களில் (71—85) நால்வர்க்கும் உரிய பொருள்கள், உடைமைகள், சின்னங்கள், பட்டங்கள் முதலியன பேசப்பெற்றன. அறுவகைத் தொழில், ஐவகைத் தொழில் என்பன கூறப்படவில்லை. எனின், வைசிகனுக்கு வாணிகமும் வேளாளர்க்கு உழவுத் தொழிலும் விதந்து கூறப்பெற்றன. திடீரென்று, "அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே" (நூ. 83) என்று ஒரு நூற்பா அறுவகைத் தொழிலின் வேறாக அரசுத் தொழிலையும் சுட்டியது. மரபு என்பது சாதியைக் குறிக்கும் என்று எடுத்துக்கொண்டு நால்வகைச் சாதி மரபுகளைப் பற்றிய இந்த நூற்பாக்கள் பின்வந்தோரால் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

இனி. குறிப்பிட்ட தனி நபர்களின் ஒப்பற்ற திறனால் பெறும் வாகையினைக் குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களைக் கூர்ந்து நோக்குவோம்.

4) மறுவில் செய்தி... அறிவன்தேயம்

அறிவன் என்ற குறியீடு முக்காலத்திலும் நிகழும் செயல்களை உள்ளுணர்வினால் அறியும் ஆற்றல் படைத்த அறிஞனைக் குறிக்கும். எனின், 'மூவகைக்காலம்' என்ற தொடர் மழை, பனி, வெயில் என்ற மூன்று பருவகாலங்களைக் குறிக்கும் என்றும், ஆற்றுதல் என்பது பொறுத்தலைக் குறிக்கும் என்றும் இளம்பூரணர் பொருள் கண்டனர். 'மறுவில் செய்தி அறிவன்' என்றதால் இவர்கள் குற்றமற்றவர்கள் என்பது தெளிவு. தவம் மேற்கொள்ளும் இவர்கள் பனியென மடியாது, வெயிலென முனியாது, மழையெனத் தளராது தம் கருமமே கருதியிருப்பாராதலின், வாகைக்குரியராவர். பன்னிரு படலத்துள்,

''பனியும் வெயிலும் கூதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு நோன்மை எய்திய
தணிவுற் றறிந்த கணிவன் முல்லை''

என்று கூறப்பெறும் கணிவன் முல்லையும் தொல்காப்பியர் சுட்டிய அறிவன் முல்லையும் ஒன்றுதான் என்று இளம்பூரணர் துணிந்தனர். எனின், பன்னிரு படலத்தைப் பின்பற்றி எழுதப்பெற்றதாக எண்ணப்பெறும் பு. வெ. மாலையில், கணிவன் முல்லை என்ற துறை,

''துணிபுணரும் தொல்கேள்விக்
கணிவனது புகழ்கிளந்தன்று'' (174)

என்று கூறப்பெற்றது. இதற்குக் கூறப்பெறும் வெண்பாவிலும் பனி, வெயில், மழை ஆகிய மூன்று காலத்தையும் தாங்கும் கணிவனின் நோன்மை சொல்லப்படவில்லை. விண்இவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம், கண்ணி உரைப்பான் கணி'' என்று ஐயனாரிதனார் அறிவிப்பதால், இத்துறையைப் பொறுத்தமட்டில் ஐயனாரிதனார் பன்னிருபடலத்தின் கருத்தினைக் கூறவில்லை என்பது தெளிவாகும்.

இளம்பூரணர், 'இறந்தகாலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றாலோ எனின், அது முழுதுணர்ந் தோர்க்கல்லது புலப்படாமையின், அது

பொருளன்று என்க'' என்றும் குறித்துள்ளார். இது பொருந்துமா என்பது மேலும் ஆராயத்தக்கது. முக்கால ஞானமும் கொண்டவர் கணியர் என்பதால் இளம்பூரணர் எழுதியிருப்பது ஏற்புடையதன்று என்றே தோன்றுகிறது.

பு. வெ. மா. சுட்டும் அறிவன் வாகை என்ற துறையும் தொல்காப்பியர் சுட்டிய அறிவன் தேயமும் ஒத்துள்ளமை காணத்தக்கது. அறிவன் வாகை என்பது,

''புகழ்நுவல முக்காலமும்
நிகழ்பறிபவன் இயல்புரைத்தன்று'' (167)

என்று ஐயனாரிதனாரால் கூறப்பெற்றது. மூன்றுலகின் இருளைப் போக்கும் கதிரவன் போல், இறப்பு, நிகழ்வு, எதிர்வெனும் மூன்று காலத்தையும் முடிய அறிபவர் அறிவர் எனப்பெற்றார். பகற்பொழுதில் உலகில் அடங்கியுள்ள பொருள்களைப் பகலவனின் கதிரொளி கண்டுகொள்ளும். இராப்பொழுதில் அவற்றைத் திங்களின் கதிர்தேடிப் பிடிக்கும். திங்கள், ஞாயிறு ஆகிய இருபெருஞ்சுடர்களின் கதிர்க்கற்றையினால் காணப்பெறாத பொருள்களைக்கூட, கணிதம் துருவிச்சென்று நோக்கி உண்மையினைப் புலப்படுத்தும் என்ற உயரிய கருத்தினை,

''சுதைமதி சூரியன் காணாத இடங்கள் எல்லாம்
கண்டுசொல்லும்
கணிதர் ஆராய்ந்ததிப் பொருளே''

எனவரும் சாதக சிந்தாமணிப்பாடல் தெளிவுறுத்துகிறது. எனவே, எப்பொருளையும் அறியும் ஆற்றல் அறிவர்க்கு (கணியர்க்கு) உண்டு என்பது தெளிவு.

இவர்கள் பால்புளிப்பினும், பகல் இருளினும் தப்பாத மெய்ம்மொழி கூறுபவர். ஆதலின், ''மறுவில் செய்தி நெறியின் ஆற்றிய மூவகைக்காலம்'' என்று தொல்காப்பியர் சுட்டியது, இளம்பூரணர் காட்டிய பன்னிருபடலத்தில் கூறப்பெற்ற மூவகைப் பருவங்களை அன்று என்றும், தொல்காப்பியரால் சுட்டப் பெற்றவை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலங்களையே என்றும் ஐயனாரிதனார் அறிந்து கொண்டு இலக்கணம் கூறினார் என்றும், முன்னூல் சுட்டும் அறிவன்தேயமும், பின்னூல் குறிக்கும் அறிவன் வாகையும் ஒன்றே என்றும் உணர்தற்குரியன. பன்னிரு படலத்தார் சொல்லும் கணிவன் முல்லையும் ஐயனாரிதனார்

சொல்லும் கணிவன் முல்லையும் வேறுவேறு என்பதை மீண்டும் நினைவில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

எனின், தாம் கொண்ட கருத்தை இளம்பூரணர் வலியுறுத்தும் பொருட்டு மேலும் கூறுகிறார்:

> ''அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது, பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப்பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மின் விழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன்கூறல்''

இங்ஙனம் கூறியபின், பு. வெ. மா. கணிவன் முல்லைக்குக் கூறிய, ''புரிவின்றி யாக்கை'' என்ற வெண்பாவினைத் தம் உரையில் மேற்கோள் காட்டினார்.

கணிவன் முல்லைக்குப் பன்னிருபடலம் சொல்லும் விளக்கமும் பு. வெ. மா. கூறும் வெண்பாவும் தம்முள் இயையாமையின் இளம்பூரணர் அறிவன் தேயத்தை அறிவன் வாகையுடன் இயைபுறுத்தாது கிணிவன் முல்லையுடன் தொடர்புறுத்தல் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. இது குறித்து முன்னரும் குறித்துள்ளோம்.

இனி, நச்சினார்க்கினியர் கூறும் விளக்கத்தினை எண்ணிப் பார்ப்போம். 'மறுவில்செய்தி' என்பதில் சுட்டப்பெறும் மறு என்பது அறிவின் விரிவினைத் தடைப்படுத்தும் மூன்று மாசுகளைக் குறிக்கும். இவை காமம், வெகுளி, மயக்கம் என்பனவாகும். இம்மூன்றின் நீங்கிய ஒழுகலாற்றினைப் பெற்றதால், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்தையும் நெறியினால் அறியும் முழுதுணர்வு உடையவன் அறிவன் என்றார். குடமுனியாகிய அகத்தியர் முதலியோர் அறிவர் என்று கூறத்தக்கவர் என்று உதாரணமும் தந்தனர். இவர் கூறும் விளக்கம் பொருத்தம் மிக்கதாகத் தோன்றுகிறது. இவர்களுக்குக் கூறப்பெறும் வாகை, மாணிக்கத்திற்குக் கூறப்பெறும் சிறப்பினைப்போல் உலகறிய இயல்பாக வருவது எனலாம்.

5) நாலிரு வழக்கின் தாபதப்பக்கம்

தாபதர் என்பார் தவசிகள். நற்றிணையில்,

> ''நீடிய சடையோ டாடா மேனி
> குன்றுறை தவசியர்''

என்று சல்லியங்குமரனார் சுட்டுதல் காணலாம். ஆடா மேனி என்பது அசையாத உடம்பினைக் குறிப்பின் வைதிகத் தவசியர் என்றும், நீராடா மேனியைக் குறிப்பின் சமணத்துறவியர் என்றும் அறிதல் வேண்டும். தொல்காப்பியத்தில் சுட்டப்பெறும் தாபதர் பொதுவானவர். காஞ்சித்திணையுள், "காதலன் இழந்த தாபதநிலை'' சொல்லப்பெற்றது. அங்குத் தாபதநிலை என்பது கைம்மை நோன்பியற்றும் தவக்கோலத்தைக் குறித்தது. மேற்சுட்டப் பெற்ற, 'நாலிரு வழக்கின்' என்ற தொகைச் சொல்லிற்குப் பொருள் காணும் வகையில் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர். இளம்பூரணர் நீராடல், நிலத்திடை கிடத்தல், தோலுடுத்தல், சடைபுனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டில் உள்ள உணவு கோடல், தெய்வபூசை, அதிதிபூசை முதலியன செய்தல் என்று எட்டு வழக்கத்தினைச் சுட்டினார். தாபதர்கள் சமுதாயத்திற்குள் நுழையாது, பிரிந்து சென்று கானகத்தில் கடுந்தவம் புரிபவர்கள் என்ற கருத்தில் இந்த எண்வகைப் பழக்கங்களைக் கூறினார். இவற்றில் முடிபுபோக முயன்றவர் வாகை பெறுபவர் என்பது கருத்து. இப்பழக்கங்களை ஊன்றி நோக்கின், இவை வைதிகத்தாபதர்க்கு உரியவை என்பது புலனாகும். சமணர் நீராடார், எரியோம்பார், சடைபுனையார். பௌத்தர் நீராடினும் ஏனைய இரண்டும் புரியார்.

இளம்பூரணர் தம் கருத்திற்கு அரணாகப் பு. வெ. மா. சுட்டும் தாபதவாகைக்குரிய 'நீர்பலகால் மூழ்கி' எனத் தொடங்கும் வெண்பாவினை சான்று காட்டினார் (168). புறநானூற்றில் இருபாடல்கள் இந்தத் துறையில் அமைந்துள்ளன (251, 252). குறுந்தொடி மகளிர் இழைநெகிழும்படி துறவுமேற்கொண்டு, அருவிநீராடி, காட்டுயானை கொண்டுவந்த விறகினால் தீமூட்டி, புறந்தாழ்பரிசடை புலர்த்துவோனாகிய தாபதன் செயலைப் புறம் 215 ஆம் பாடலில் மாற்பித்தியார் குறித்துள்ளார். அடுத்த பாடலும் அள்ளிலைத் தாளி கொய்யும் புல்லென் சடையோனைப் பற்றியது. முன்பு மடமயில் அனைய மனையாளைப் பிணிக்கும் சொல்வலை வேட்டுவனாக இருந்தவன், இப்போது துறந்து சடை முடி தாங்கிக் காட்டில் கிடைப்பதை உண்டு கடுந்தவம் புரிதலை உறழ்ந்து காட்டுகிறார் (252). இங்ஙனம் தவக்கோலம் தாங்கியோர் பெறும் அரிய ஆற்றலையும் வெற்றியையும் குறிப்பது தாபதப்பக்கம் என்னும் வாகைத்திணைக் கூறாகும்.

இனி, நச்சினார்க்கினியர் கூறும் கருத்தினைக் காண்போம்:

''அவ் அறிவர் கூறிய ஆகமத்தின் வழி நின்று வீடுபெற

முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்துத் தவம்புரியும் கூறும்''

என்று குறித்தனர். இம்மார்க்கங்கள் எட்டும் தவம் புரிவார்க்கு உரியன ஒருவகை; தவம் செய்து யோகம் பயில்வார்க்கு உரியன மற்றொருவகை என்றார்.

(அ) தவஞ்செய்வார்க்கு உரிய எண் வகை :

1)	ஊண் நசையின்மை	—சாப்பாட்டில் நாட்டம் இன்மை; சுவை பார்த்துச் சாப்பிடாமையுமாம்
2)	நீர் நசையின்மை	—நீர் பருகுதலில் நாட்டம் இன்மை; பால், தயிர், மோர், தேன், சாறு முதலியன நீர்ப்பொருள் பருகாமையுமாம்.
3)	வெப்பம் பொறுத்தல்	—வெயிலில் நின்று தவம்புரிதல்; வெயிலில் நீண்டவழி பயணம் செல்லுதல்.
4)	தட்பம் பொறுத்தல்	—மழை, பனி முதலியவற்றைத் தாங்கிக் கொள்ளுதல்
5)	இடம் வரையறுத்தல்	—குறிப்பிட்ட எல்லைக்குள் இயங்குதலை வரையறை செய்து கொள்ளுதல்
6)	ஆசனம் வரையறுத்தல்	—யோக நூல்களில் கூறப்படும் பல்வேறு ஆசனங்களில் தன்னாற் செய்தற்குரியவற்றை மட்டுப் படுத்திக் கொள்ளுதல்
7)	இடையிட்டு மொழிதல்	—இது கூறிட்டு மொழிதல் என்று இருத்தல் வேண்டும். (மணிமேகலை, 30:240-3) வினாவின் பகுதியைப் பாகுபடுத்தித் தனித்தனி கூறுகட்கு விடையிறுத்தலைக் குறிக்கும்.

கானுறை வாழ்வில் குரு, சீடர்க்கிடையே உரையாடல் நிகழ்தல் இயல்பாதலின் இதனைக் கூறியிருக்கலாம்.

8) வாய்வாளாமை — இதுவும் மணிமேகலையில் இடம் பெற்றது (30 247-9). இதனைத் தாபனீயம் என்று கூறுவர் பௌத்தர்.

பேசாதிருத்தல் பல பொருள்தருவது. ''மௌனம் சர்வார்த்த சாதகம்'' என்பர் வட நூலார். மோனம் என்பது ஞானவரம்பு என்ற வகையினால் இது கூறப்பட்டிருக்கலாம். பொருந்தாத வினாக்களுக்கு விடை கூறாமையினையும் இது குறித்தது.

இந்த எண்வகைக்கும் நச்சினார்க்கினியர் தரும் பொருள் காண்போம்:

''உணவினும் நீரினும் சென்ற மனத்தைத் தடுத்தலும், ஐந்தீநாப்பணும், நீர்நிலையினும் நிற்றலும், கடலும் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றலும், தாமரையும் ஆம்பலும் யாமையும் முதலிய ஆசனத்திருத்தலும், உண்டற்காலை உரையாடாமையும், துறந்தகாலம் தொட்டும் வாய்வாளாமையும் பொருள் என்றுணர்க.''

இனி, தவஞ்செய்து வாகை பெற்றவர் யோகம் பயில்தற்கு உரியர். அவர்க்குரிய எண்வகை மார்க்கங்களையும் நச்சினார்க்கினியர் நவின்றுள்ளார். அவை பின்வருவன:

(ஆ) யோகம் செய்வார்க்குரிய எண்வகை

1) இமயம் : பொய், கொலை, களவு, காமம், பொருள்நசை (வெஃகல்) ஆகிய ஐந்தினையும் அகற்றுதல்.

2) நியமம் : பெற்றதற்கு உவத்தல், பிழம்புநனி வெறுத்தல், கற்பன கற்றல், கழிகடும்தூய்மை, பூசனைப் பெரும்பயம் ஆசாற்கு அளித்தல் ஆகிய ஐந்தும் ஆகும்.

3) ஆசனம் : நிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல் முதலியவற்றை உள்ளடக்கிய இருப்பு நிலைகளைப் பயிலுதல்.

4) வளிநிலை : பிராணாயாமம் புரிதல்.

5) தொகைநிலை : இதனைப் பிரத்தியாகாரம் என்பர். புலத்தின் வழியே பொறியுணர்வுகள் வழுவிச்செல்லாது இழுத்தல்.

6) பொறைநிலை : புறத்தில்போகும் மனத்தினை இழுத்ததும்; ஒருவழியில் நிறுத்துதல். இதனைத் தாரணை என்பர்.

7) நினைதல் : நிறுத்திய அம்மனம் நிலைதிரியாமல் குறித்தபொருளொடு பொருத்துதல். இதனைத் தியானம் என்பர்.

8) சமாதி : முழுமுதற்பொருளொடு தான்பிறன் ஆகா அத்துவிதம் பெறுதல் சமாதி. இதனை நொசிப்பு என்றும் கூறுப.

பரிபாடலில் கடுவனிளவெயினனார் நொசிப்பு என்ற சொல்லினை இப்பொருளில் பயின்றுள்ளார்.

எனவே, 'நாலிரு வழக்கு' என்ற தொகைச் சொல் யோக நூலிற் கூறப்பெறும் அட்டாங்கங்களையும் (எண் உறுப்புக்கள்) சுட்டும் என்று கொண்டு நச்சினார்க்கினியர் கூறும் பொருள் பொருத்தமாகத் தோன்றுகிறது. இளம்பூரணர் சுட்டிய நீராடல், நிலத்திடை கிடத்தல் என்பன எல்லாம், யோக உறுப்புக்களை ஒப்புநோக்குமிடத்து அருஞ்செயல்கள் என்று கூறுதற்கு இல்லை. தமிழில் பழைய யோக நூல்கள் பல வழங்கியிருத்தல் வேண்டும் என்பதற்கு, நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள் நூற்பாக்கள் சான்றாகக் கருதுதற்குரியன. யோக நூல் செய்த பதஞ்சலியும் தில்லைப் பதியினர் என்பர். சிந்துவெளி நாகரிகத்தின் கால அளவிற்கு யோகநெறி பழைமை வாய்ந்தது. ஆதலின், தொல்காப்பியர் சுட்டிய 'நாலிரு வழக்கு' யோக உறுப்புக்களை உணர்த்துவதாகக் கொள்ளுதல் ஏற்புடையது. அந்நெறி நின்று வென்றோரின் செயலை வாகையுள் ஒன்று என்று போற்றினர் எனலாம்.

இனி, இளம்பூரணர் சுட்டிய எட்டினையும் ஒருவாற்றான் ஏற்றுக் கொண்ட நச்சினார்க்கினியர்,

''நீஇர் ஆடல் நிலக்கிடை கோடல்
தோஒல் உடுத்தல் தொல்எரி ஓம்பல்
ஊர் அடை யாமை உறுசடை புனைதல்
காட்டில் உணவு கடவுட் பூசை
ஏற்ற தவத்தின் இயல்பென மொழிப''.

என்ற பாடலை எடுத்துக்காட்டினார். இது எந்நூலில் இடம் பெற்றது என்று அறிதற்கு இல்லை. ஒருவேளை உதாரணம் கூற வேண்டும் என்னும் நோக்கத்தில் உரையாசிரியரே எழுதியும் இருத்தல் கூடும்.

தொல்காப்பியர் சுட்டும் வாகையின் அடுத்த பகுதியைக் காண்போம்.

6) பொருநர் பக்கம்

இதனை, ''பாலறி மரபின் பொருநர் கண்ணும்'' என்று சுட்டினார். பாகுபாடு அறிந்த மரபினையுடைய பொருநர் பக்கம் என்று பொருள் வரைந்தனர் இளம்பூரணர். அஃதாவது வாளானும் தோளானும்பொருதலும் வென்றிகூறுதலும் வாகையாகும்என்றார் இத்துறைக்கு உதாரணமாகப் பு.வெ.மா. பேராண்முல்லை (180) என்ற துறைக்குச் சுட்டிய ''ஏந்துவாள் தானை இரிய'' என்ற வெண்பாவினை இளம்பூரணர் மேற்கோள் காட்டினார். வாளால் மிகுதலுக்கு இது கூறப்பட்டது. எனின், உளம்புகல மறவேந்தன் களம்கொண்ட சிறப்புரைத்தலை ஐயனாரிதனார் பேராண்முல்லை என்றார். இவர் சுட்டும் பொருத வாகை என்ற துறையும் (166) பெயர் ஒற்றுமை கருதி இயைபுறுத்திப் பார்த்தற்கு உரியது. யாவரையும் இகழாமையினை இது சுட்டுகிறது. பெருவீரர்க்குச் சிறந்த வெற்றியாவது பிறரை (-பகைவரை)இகழாமை என்பதால் ஒரு பெரிய பண்பாட்டினை ஐயனாரிதனார் உணர்த்தியுள்ளார்.

பொருநர் பக்கத்திற்கு மல்வென்றியையும் குறித்தனர் இளம்பூரணர். ஆமூர் மல்லனை மற்போரில் வென்ற சோழன் போர்வை கோப்பெருநற் கிள்ளியைச் சாத்தந்தையார் பாடிய புறப்பாடலையும் (80) உதாரணம் காட்டினார். பு.வெ. மாலையில் மல்வென்றி ஒழிபில் சுட்டப்பெற்றது (315). இது ஆசிரியர் பாடியதா என்பது ஆய்வுக்குரியது.

தொல்காப்பியத்தொடரை, ''அறிமரபிற் பொருநர்கட் பாலும்'' என்று வேண்டியவாறே அமைத்துக்கொண்ட நச்சினார்க் கினியர், பொருநர் என்ற சொல்லிற்குப் போர் செய்வோர் என்றே பொருள் கண்டார். ''தாம்தாம் அறியும் இலக்கணங்களாலே போர் செய்வோரிடத்துக் கூறுபாடும்'' என்று இத்தொடரை விளக்கினார். அவை சொல்லானும், பாட்டானும், கூத்தானும் மல்லானும் சூதானும் பிறவற்றானும் வெல்லுதல் என்றார். இவை இளம்பூரணரால், ''அனைநிலை வகை'' என்பதற்குக் கொடுக்கப்பட்ட விளக்கத்தை அடியொற்றிக் கூறப்பட்டன.

பரிபாடலில்,

''அடும்போராள நின்குன்றின்மிசை
ஆடல் நவின்றோர் அவர்போர் செறுப்பவும்
பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்
வல்லாரை வல்லார் செறுப்பவும்
அல்லாரை அல்லார் செறுப்பவும் ஓர்சொல்லாய்'',
(9: 71-5)

''புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடல்''

எனவரும் பகுதிகள் பல்வகை வாகைக் கூறுகளையும் தெளி வுறுத்துவன.

எனவே, வாகையின் கூறுகளாகச் சொல்வென்றி, பாடல் வென்றி, ஆடல்வென்றி, மல்வென்றி, சூதுவென்றி என்பன பலவும் கூறினார். மேலும், துறைதோறும் தொழில்தோறும் ஒருவன் பெறும் பிறவென்றிகளுக்கும் இதுவே இலக்கணமாகக் கொள்ளும் வகையில் அமைத்தனர். இவற்றுள் பாடல்வென்றி, ஆடல்வென்றி, சூதுவென்றி என்பன பு. வெ. மாலையில் ஒழிபில் (360, 359, 358) கூறப்பெற்றன.

7. 8) அனைநிலைவகை

வாளினாலும் தோளினாலும் பொருது வேறலன்றி, அத்தன் மைத்தாகிய நிலைவகையினால் பொறும் வாகைக் கூறுகளை இத் தொடர் சுட்டுவது என்று கூறப்பெற்ற பார்ப்பனப்பக்கம் முதலாகப் பொருநர்பக்கம் முடிவாகக் கூறப்பெற்ற ஆறுவகைக்குள் அடங்காத எஞ்சிய வாகைக் கூறுபாடுகளை, ''அனைநிலை வகை'' என்றார் எனக் கொள்ளலாம். சொல்வென்றி முதலியனவும் தகர்ப்போர், பூழ்ப்போர் முதலியவற்றில் வெல்லுதலும் இதனால் சுட்டப்பெற்றன என்பர் இளம்பூரணர்.

முன் சுட்டப்பெற்ற ஆறு கூறுகளில் ஒவ்வொன்றிற்கும் அனை நிலை வகை உண்டு என்பர் நச்சினார்க்கினியர். யோகிகளாய் உபாயங்களான் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்தேயத்து அனைநிலை வகையோர் ஆவர். அவர்க்கு மாணாக்கராகித் தவம் செய்வோர் தாபதப் பக்கத்தார் ஆவர். தகர்வென்றி, பூழ்வென்றி, கோழிவென்றி முதலியனவற்றைப் ''பாலறி மரபிற் பொருநர்கண் அனைநிலை வகை'' என்று குறித்தனர் எனலாம்.

தொல்காப்பியர் சர்வாதிகாரியாக இருந்து இலக்கணம் கூற வில்லை. தன் தரவுகளில் அகப்படாத வரவுகளுக்கும் வருங் காலத்தில் தோன்றுதற்குரிய புதுமைகளுக்கும் தம் இலக்கணத்தில் இடம்வைத்துச் சென்றுள்ள சனநாயகவாதி ஆவார். ஆதலின், ''அனைநிலை வகை'' எனபது அத்தகைய தொரு வாய்ப்பு. இதன்கண் அவரவர் அறிவிலும் அனுபவத்திலும்பட்ட வாகைத் திணைக்குரிய கூறுகளைத் திரட்டிக் கொண்டுவந்து கூறிக் கொள்ளலாம் என்பது புலனாகும்.

இங்ஙனம் முதற் சூத்திரத்தில் வாகைத்திணைக்கு உரிய எழு வகைக் கூறுகளைத் தொல்காப்பியர் வரையறைசெய்து உணர்த்தி யுள்ளார். இனி, இரண்டாம் சூத்திரத்தில் கூறப்படும் வாகைத் திணைக்கு உரிய துறைகளை ஒவ்வொன்றாகக் காண்போம்.

வாகைத் திணைக்குரிய துறைகள் (நூ. 75)

வாகைத்திணை பற்றிய இரண்டாவது நூற்பாவில் சுட்டப் பெறும் துறைகளை இங்கு ஒவ்வொன்றாகஆராய்ந்து காண்போம்.

1) இருவகைப் பாசறை

பாசறை என்பது பசுமை அறை. போர்க்களத்தின் பாங்கரில் படைமறவர்கள் தங்கியிருத்தற்கு உரிய பச்சைத் தழைகளினால் வேயப்பெற்ற போர் முகாம் (War camp) பழைய தமிழில் பாசறை எனப்படும். மழைக்காலத்தில் அமைக்கப்பெறுவது வேனிற் பாசறை என்றும் பெயர்பெறும். இவ்விரண்டும் தண்மைக்கும் வெம்மைக்கும் தலைமைபெற்ற காலத்தில் நிறுவப்பெறுவன. இவ்விரு காலத்திலும் போகத்தில் பற்றற்றுத் தலைவியைப் பிரிந் திருத்தல் அரிதாதல் பற்றி இது வென்றியாயிற்று. தலைவியின் மேல் காதலை மறந்து போரின்மேல் காதல் பொருந்துதலின்,

வீரனின் கடமை உணர்ச்சியும் அதனால் பெறும் வாகையும் குறிக்கப்பெற்றன.

மேற்சுட்டிய இரு வகைப் பாசறைகளில் முதல் வகையினை மட்டும் பு. வெ. மா. சுட்டியது (169). வேனிற் பாசறையினை இந்நூல் சுட்டவில்லை. எனின், வாடைப்பாசறை என்ற பெயரி னால் ஒரு துறையினை ஐயனாரிதனார் வழங்கினார் (170). பாசறைக்கண் தங்கியுள்ள மறவர்களை வருத்தும் வாடைக் காற்றின் மிகுதியைச் சொல்லுவதால் இப்பெயர் பெற்றது.

இளம்பூரணர் கூதிர்ப்பாசறைக்கு, ''கவலைமறுகின்'' எனத் தொடங்கும் பு. வெ. மா. வெண்பாவினை மேற்கோள் தந்தனர்.

இருத்தற்பொருள் முல்லைக்கு உரியது என்பதால், தலைவன் இருவகைப் பாசறைக் கண்ணும் இருத்தலைப் பாசறை முல்லை என்று பெயரிட்டு வழங்குவாரும் உளர் என்றார் நச்சி. இத்துறை பு. வெ. மாலையில் காணப்படவில்லை. ஆதலின் வேறொருவர் செய்த புறத்திணை பற்றிய இலக்கணநூலில் இத்துறை சுட்டப் பெற்றிருத்தல் வேண்டும். அந்நூல் நமக்கு இப்போது அகப்பட விலலை என்று கருத வேண்டியுள்ளது.

2) ஏரோர் களவழி... தேரோர் வென்றி

ஏரோர் என்று சுட்டப்பெறுபவர் உழவர்களே. எனின், இங்கு நெல் விளைவிக்கும் அவர்களைப் போல், வீரத்தை விளைவிக்கும் வென்றி மறவர்களைக் குறித்தது இச்சொல். இவர்கள் போர்க் களத்தில் தேரூர்ந்து நிகழ்த்தியவீரச் செயல்களைப் பாராட்டிப் புகழ்தல் இத்துறையின் பொருளாகும். இது களம்பாடுதல், கள வேள்வி பாடுதல் என்று இரு வகைப்படும் என்றார் இளம்பூரணர். புறநானூறும் (369 : 26). களவழியும் (26) இத்துறைக்கு மேற்கோள் காட்டப் பெற்றன.

நச்சி. இத்துறைக்கு மேலும் தெளிவானவிளக்கம் தந்துள்ளார். நெற்கதிர்களைக் கொண்டு களத்தில் குவித்துப்போர் அடித்து, அதரி திரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட்பலி கொடுத்து, பின்னர் பரிசிலாளர் முகந்துகொள்ள வரிசையின் அளிப்பது ஏரோர் ஆகிய உழவரின் களத்தில் நிகழ்த்தும் செயலாகும். அதுபோல, அரசனும் பகைவேந்தனின் நாற்படை யினையும் கொன்று, களத்தில் குவித்து, எருது களிறாக, வாள்பட ஒச்சி, அதரி திரித்துப் பிணக்குவியலை நிலாச்சோற்றோடு உதிரப்

பேருலையில் எற்றி, ஈனாவேண்மான் இடத்துழந்தட்ட கூழ்ப் பலியைப் பலியாக்க் கொடுத்து, எஞ்சி நின்ற யானை, குதிரைகள் முதலியவற்றையும் பகை நாட்டில் பெற்ற நிதிக்குவை, பல்வகை மணிக்குவியல் முதலியவற்றையும் பாணர், புலவர் முதலிய பரிசிலர்கள் தாமே முகந்துகொள்ளுமாறு கொடுத்தல் இந்துறைக் குரிய பொருளாகும்.

பு வெ. மாலையில் மறக்களவேள்வி (159) களவேள்வி(160) என்ற துறைகள் இப்பொருண்மையினைப் புலப்படுத்தும் வாகைத் துறைகள் ஆகும்.

பிற்காலத்துப் பெருகிய பரணிப் பனுவல்களின் உள்ளடக்கத் திற்கு மேலே சுட்டப்பெற்ற குறிப்புக்கள் பெரிதும் உதவின.

3) நோமுன் குரவை

தேரில் ஊர்ந்துவந்த அரசர் பலரையும் வென்று வாகை சூடிய வேந்தன், வெற்றிப்பெருமிதத்தில் தேர்த்தட்டில் நின்று போர்த் தலைவனோடு கைபிணைத்தாடும் குரவைக் கூத்தினை இத்துறை சுட்டியது என்றார் நச்சி.

இத்துறையினைப் பு வெ. மா. முன்தேர்க்குரவை என்று மொழிந்தது (161). வெற்றிபெற்ற வேந்தனின் தேரின் முன்பாகப் பேய், குரவைக் கூத்தாடுவதை இத்துறை சுட்டுவதாக ஐயனாரி தனார் பாடியுள்ளார்.

4) தேர்பின் குரவை

முற்சுட்டிய வேந்தனின் வெற்றியைப் போற்றும் வகையில், அவன் தேருக்குப் பின்னே நின்று குரவை ஆடுதலை இத்துறை குறித்தது என்றார் இளம்பூரணர். அங்ஙனம் ஆடுவது கூழுண்ட கொற்றவைக் கூளிச்சுற்றம் என்றார் நச்சி.

இத்துறையினை பு. வெ. மா. பின்தேர்க்குரவை என்று பேசியது (162). விறலியர் வீரருடன் கூடித் தேரின் பின்னிருந்து குரவை ஆடுதலை இத்துறை குறித்தது என்பர் பின்னூலார்.

5) பெரும்பகை தாங்கும் வேல்

பெரிய பகைவரைத் தடுத்து நிறுத்தும் வேலின் ஆற்றலை வாகைத் திணைக்குரிய துறையாக எண்ணினர். இதற்கு,

''இவ்வே, பீலி யணிந்து'' என்ற புறப்பாடலை மேற்கோள் காட்டினர் இளம். வீரகடவுளாகிய முருகனுக்கு வேற்படை உரிய தாதலானும்; சான்றோர் செய்யுட்களில் வேற்படை சிறப்பிக்கப் பெறுதலானும், இத்துறையினை அமைத்தனர் எனலாம். 'மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின், மொழியாததனையும் முட்டின்றி முடித்தல்' என்னும் உத்தியினால் ஏனைய படைக்கலன் களின் சிறப்புரைத்தலையும் இத்துறைக்கண் தொல்காப்பியர் அடக்கினார் என்பர் நச்சி.

இதற்கு நேரொத்த துறை பு. வெ. மாலையில் சொல்லப்பட வில்லை.

6) அரும்பகை தாங்கும் ஆற்றல்

பொருதற்கு அரிய பகைவரைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலால் விளையும் வெற்றியை இத்துறை சுட்டுகிறது. இதனை விளக்கும் பொருட்டு, ''களம்புகல் ஓம்புமின் தெவ்விர்'' என்ற புறப்பாடலை மேற்கோள் காட்டினார் இளம். திருக்குறளில்,

''என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர்என்னை
முன்னின்று கல்நின் றவர்'',

எனவரும் பாடலையும் எடுத்துக் காட்டினார்.

இத்துறைக்கும் ஒத்ததுறை பின்னூலில் பேசப்படவில்லை.

7) வல்லாண் பக்கம்

உயிர்வாழ்க்கையைப் பொருந்தாத வல்லமை பெற்ற ஆண் மகன் துறக்கம் வேண்டிப் போர்புரிந்து சிறப்புறுதலை இத்துறை குறித்தது.

பு. வெ. மாலையில் சுட்டப்பெறும் ஏறாண் முல்லை (176), வல்லாண் முல்லை (177) என்ற துறைகளை இதனுடன் ஒருபுடை ஒப்புமையாகக் கூறலாம்.

8) அவிப்பலி

போர் தொடங்குவதற்கு முன் பகைவர் நாணும்படியும், உயர்ந்தோர் பாராட்டும்படியும் 'இன்னது செய்யேனாயின் இன்னது ஆகக்கடவேன்' என்று தான் கூறிய வஞ்சின மொழியை நிலைநாட்டும் பொருட்டுத், தொன்று தொட்டுவரும் தன்உயிரைப்

போர்க்களத்தில் வழங்கிய அவிப்பலியினை இத்துறை குறித்தது. இதுவும் ஒருவகையில் வாகையே ஆகும்.

பகைவர் நாணுதல் என்பது, அவர் அறப்போர் ஆற்றாது வஞ்சனையால் வென்றதால், வீரன் தன் உயிரை அவிப்பலி கொடுத்தானே என்று எண்ணி வெட்கம் அடைதலைச் சுட்டியது என்பர் நச்சி. திருக்குறளில்,

''இழைத்த (து) இகலாமை சாவாரை யாரே
பிழைத்த (து) ஒறுக்கிற் பவர்''.

எனவரும் பாடலை இவர் எடுத்துக் காட்டினார்.

இத்துறை இதே பெயரில் பு. வெ. மாலையில் வழங்குதல் காணலாம் (184). இதற்குரிய ''சிறந்த திருவென்ன'' என்று உதாரண வெண்பாவை இத்துறைக்கு மேற்கோள் காட்டினார் இளம்.

9) ஒல்லார் இடவயிற் புல்லியபாங்கு

ஒல்லார் என்பது பகைவரைக் குறிக்கும். அவரைப் பொருந்துதல் என்பது, அவராயினும் அவர் சுற்றமாயினும் தன்னை அடைந்து உயிரும் உடப்பும் போல்வனவற்றை இரந்து நிற்பின், அவற்றை அவர்க்கு உளம் உவந்து கொடுத்தலை இத்துறை குறித்தது என்பர் நச்சி. பகைவனால் படுதல் அறிந்தும் தன் கவச குண்டலங்களைக் கொடுத்த கன்னனின் செயலை உதாரணம் காட்டினார் நச்சி. இச்செயல் வீரம் பற்றிய கருணை யாதலின் வாகை ஆயிற்று என்றார்.

இத்துறைக்குப் போரில்லாத வழி ஒல்லாரின் நாடு கையகப் பட்டது என்று உவந்திருத்தலைக் குறிக்கும் என்றார் இளம்.

இதற்கு ஒத்த ஒருதுறை பு.வெ. மாலையில் காணப்படவில்லை.

இதுகாறும் வீரம் குறித்து விளையும் வாகைத்திணைக்கு உரிய துறைகள் கூறப்பட்டன.

இனி, வேறு வகையினால் உண்டாகும் வாகைக் கூறுபாடு களைக் காண்போம்.

10) சான்றோர் பக்கம்

பகடு (—காளை), ஆக்கள் முதலியவற்றால் குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய சான்றோரின் திறத்தினை இத்துறை குறித்தது என்பர் இளம்.

ஆவினானும் என்பதற்குப் பதிலாக மாவினானும் என்று பதச்சேதம் செய்தனர் நச்சி, யானை குதிரை முதலிய மாவினாலும் குற்றமற்ற சிறப்புடைய சான்றோர் என்று பொருள் உரைத்தார். பகட்டால் குறைதீர்ந்தவர் வேளாளர் என்றும், ஆனால் குற்றம் தீர்ந்தவர் வணிகர் என்றும் விளக்கினார், இளம். இவற்றால், உழவஞ்சாமையும் பகையஞ்சாமையும் ஆகிய வெற்றி கூறப்பட்டது என்றார் நச்சி. வணிகர் பெருஞ்செல்வத்திற்கு உரியராதலானும், 'செருநர் செருக்கறுக்கும் எஃகு' என்று செல்வம் சுட்டப்பெற்றதானும் பகையஞ்சாமை அவர்க்குரியதாயிற்று.

சான்றோர் என்ற சொல்லிற்கு வேளாளர், வணிகர் என்று இளம்பூரணர் பொருள் கண்டார்.

இத்துறையினை ஒரு வகையினால் பு. வெ. மாலை சுட்டும் சால்பு முல்லை என்ற துறையுடன் (185) தொடர்புபடுத்திக் காணலாம். சால்பு என்பது ஆன்றவிந்து அடங்குதல் ஆகிய உயர் பண்பு. இப்பண்பு வாய்ந்த சான்றோர்கள் வான்முட்டும் வரை போன்ற உயர்ச்சியும் விளக்கமும் திட்பமும் புகழ்தற்குரிய துறை சால்பு முல்லை எனப்படும். முந்நீர் வளம்பெறினும் சான்றோர் பண்பிற் குறைவுபடார். 'உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்று பழிக்கு அஞ்சும் சான்றோரின் பண்பினைப்புறநானூறு போற்றியது.

11) கடிமனை நீத்தபால்

கடிமனை என்பது பிறர் மனையைக் கடிதல்; அதாவது பிறனில் நயவாமை ஆகும், பின்வரச் சுட்டப்பெறும் காமம் நீத்தப் பால் என்பது முற்றத்துறந்த முனிவர்க்கு உரியது. கடிமனை நீத்த பால் என்பது இல்லறத்தார்க்கு உரியது. பிறர் மனை நோக்காமையினைப் பேராண்மை என்றும், சான்றோர்க்கு அறம் என்றும், அன்பு ஒழுக்கம் என்றும் திருவள்ளுவர் அறம் உரைத்தலைச் சுட்டினர் இளம். ஆயிரம் யானைகளை வென்றவனை விடத் தன் ஐம்புலனை வென்றவனை மகாவீரன் என்று சமண, பௌத்த நூல்கள் பாராட்டிப் பேசுகின்றன. ஆதலின், புலன்வெற்றியும் வாகையின் ஒரு கூறாகக் கொள்ளுதல் மிகவும் பொருத்தம் உடையது.

இத்தொடருக்குக் கட்டில் நீத்தபால் என்ற பாடபேதம் கொண்டார் நச்சி. கட்டில் என்பது அரசுகட்டில்; அதனைத் துறத்தல் அரிதாதலின், அதனையும் வாகை என்று ஆசிரியர் குறித்ததாக இவர் கருதினார். அதிகார ஆசைகளைக் கடத்தல் என்பதும் ஒரு பெரும் வெற்றியே. புத்தர், இளங்கோவடிகள் ஆகிய ஆன்றோரின் துறவு இங்கு எண்ணற்பாலது.

இத்துறைக்கு நேரொத்த துறை பு. வெ. மாலையில் வாகைப் படலத்தில் காணப்படவில்லை.

12) எட்டுவகை நுதலிய அவையகம்

குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவு நிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்ற எட்டு பண்பு களினால் மேம்பட்டு விளங்கும் அவை, மற்ற அவைகளை விட, சிறப்புடையது என்பர் இளம். இப்பண்புகள் வாய்க்கப்பெற்றோர் அவைக்கண் முந்தியிருக்கப்பெறுவர். இவர்தம் வெற்றியைக் குறிப்பது இத்துறை என்பர் நச்சி. இதற்கு மேற்கோளாக, "குடிப்பிறப்பு உடுத்துப் பனுவல் சூடி" எனத் தொடங்கும் ஆசிரிய மலைப்பாடலை வழங்கியுள்ளார்.

இதற்கு ஒத்ததாக அவையமுல்லை என்ற துறை பு. வெ. மாலையில் கூறப்பெற்றது (173). நவைநீங்க நடுவு கூறும் அவை மாந்தரின் இயல்புரைத்தல் இத்துறைக்குரிய பொருளாகும்.

13) கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை

கட்டுப்பாடுடைய ஒழுக்கத்தினால் பெறும் வாகையினை இத் துறை கட்டுகிறது என்ற கருத்து இளம். உரையினால் அறியப் படுகிறது. எனின், வேறு விளக்கம் தருகிறார் நச்சி. கண்ணினது தன்மை கண்மை எனப்படும். என்மை, வன்மை, வல்லார் என்ற சொற்கள எளுமை வலிமை (—வலுமை), வல்லுவோர் என்று வருதல் போல், கண்மை என்பது கண்ணுமை என்று வந்தது என்றார். இங்ஙனம் அவர்தம் உரையில் சொல்லாராய்ச்சி நிகழ்த்திய இடங்கள் சுவைமிக்கவை, இல்லறத்தார்க்கு ஓதப்பெற்ற அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை பொறையுடைமை என்ற குணங்கள் மேம்பட்டு நிற்றலின் வாகை யாயின என்பர். மனத்தினால் இவ்வொழுக்கங்களைக் குறிக் கொண்டு ஐம்பொறியினையும் வென்று தடுத்தல் என்றார் நச்சி.

இவையனைத்தும் திருக்குறள் பயிற்சியினால் இவர்கள் தந்த விளக்கமாகக் கொள்ளுதற்கு உரியன.

பு. வெ. மாலையில் இத்துறை சுட்டப் பெறவில்லை.

14) இடையில் வண்புகழ்க்கொடை

இடையீடில்லாத வளலிய புகழைத் தரும் கொடையின் திறத்தினை இத்துறை சுட்டுகிறது. அஃதாவது கொடுத்தற்கு அரியனவற்றைக் கொடுத்தல் என்றும், பாகுபாடு மிகுதிப் படுதலின் வாகையாயிற்று என்றும் கருதினர். இளம். இக்கொடைப்புகழ் உடையோன் மூப்பு, பிணி, சாக்காட்டுக்கு அஞ்சாமையின் அது வாகையாம் என்பர் நச்சி. உலக முழுதும் பிறர் புகழ் வாராதபடி தன்புகழ் பரவிநிற்றலின் இடையில் வண்புகழ் என்று தொல் காப்பியர் சுட்டினார்.

பு. வெ. மாலையில் இத்துறை சுட்டப்படவில்லை.

15) பிழைத்தோர்த் தாங்கும் காவல்

தம்மிடம் பிழை செய்தவர்களைப் பொறுத்துக்கொண்டு அவர் களுக்குத் தீங்கு வாராதவாறு பாதுகாத்தலை இத்துறை சுட்டிற்று. பிழை செய்தவரைத் தண்டிக்கவே முந்தும் மனித உள்ளம். அதனைப் பொறுப்பதுடன் பிழை புரிந்தவர்க்குத் தீங்கு வாராது காப்பதும், நன்மை புரிவதும் சாதாரண நிலைக்கு. சராசரி மனித நிலைக்கு அப்பாற்பட்ட அருஞ்செயலாகக் கருதப் பெறுதலின், வாகையாகத் தொல்காப்பியரால் தெளியப்பெற்றது.

வாழ்வியல் கூறுகளை நுனித்தும் நுணுகியும் நோக்கி, மனித சமுதாயம் மேம்படுதற்பொருட்டும் பண்பாடு வளர்தற்பொருட்டும் உயர் குணங்கள் மனிதனுக்கு வெற்றியைத் தரும் பெற்றியை வாழ்வியல் இலக்கணக் குறியீடுகளினால் தெளிவுறுத்தும் தொல் காப்பியர் சிறந்த சமூக விஞ்ஞானியாகப் போற்றுதற்குரியவர்.

பு. வெ. மாலையில் காவல்முலை (178, 179) என்ற துறை சுட்டப் பெறுகிறது. தொல். சுட்டிய துறையுடன் இது ஓரளவு தொடர்புடையது. கமழ்தார் மன்னனின் காவற் சிறப்பினைக் கூறுதல் இத்துறை என்பர் ஐயனாரிதனார்.

16) பொருளொடு புணர்ந்த பக்கம்

'மெய்ப்பொருள் உணர்ந்த பக்கம்' என்று உரை வரைந்தனர் இளம். இங்குவரும் 'பொருள்' என்ற சொல்லிற்கு மூவகைப் பொருள் தருகிறார் இவ்வுரையாசிரியர் :

1) மெய்ப்பொருள்

2) பொருட்பாலில் சுட்டப்பெறும் அரச உறுப்புக்கள்

3) மக்கட்பேறாகிய பொருள்

இம்மூவகையினாலும் ஒருவன் பெறும் வாகையினை இத்துறை சுட்டியது என்ற கருத்தில் இவர் உரை அமைந்துள்ளது. இவ்வுரையினைத் தழுவியே விளக்கம் தந்தனர் நச்சி.

பு. வெ. மாலை பொருளொடு புகறல் என்று இத்துறையினைக் குறித்தது (187). உலகப் பற்றினை நீக்கி, மெய்ப்பொருளை நயந்தமையினை இத்துறை சுட்டுகிறது, இதுவே தொல்காப்பியத் துறைக்கு இளம்பூரணர் முதலில் குறித்துள்ள உரையுடன் ஒத்துக் காணப்படுகிறது.

17) அருளொடு புணர்ந்த அகற்சி

அகற்சி என்பது இல்லறத்தினின்றும் அகன்று போதலாகிய துறவினைக் குறித்தது. அகலுதல் என்னும் பொழுது நீங்குதல், நீத்தல் என்ற கருத்து வெளிப்படுகிறது. 'அருளொடு பொருந்தின துறவும்' என்று இயம்பினார் இளம். இத்துறவு உலக உயிர்களை ஒப்பநோக்கும் அருள் உள்ளத்தால் விளைவது. அருளுடைமை, கொல்லாமை. பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள் உண்ணாமை, துறவு என்பனவற்றைப் பொருந்துதல் என்றார். கொல்லுதல், பொய்த்தல், களவு, புணர்ச்சி விழைவு, கள்உண்டல் முதலியவை தவிரத்தக்கவை. தம்மைவிட்டு நீங்காத உயர் பண்பு அருள் என்பதால், 'அருளொடு பொருந்திய அகற்சி' என்றார் தொல். துறவறவியலில் திருவள்ளுவர் வகுத்துக்கூறிய அறங் களையெல்லாம் இத்துறைக்குப் பொருத்திக் காட்டி, இப்பண்புகள் பொருந்திய துறவுதான் மனிதனுக்குப் பெரும் வெற்றியைத்தரும் என்றும், அவ்வெற்றியைச் சுட்டும் இலக்கணக் குறியீடுதான் இத்துறை என்றும் அறிதல் வேண்டும்... இதனை அறவெற்றி என்பர் நச்சி.

பு. வெ. மாலையில் இத்துறை அருளொடு நீங்கல் என்று குறிக்கப்பெற்றது (188). உலகத்தின் நலிவு கண்டு பற்றொழிதல் வேண்டும். நோய்க்கிடமாகிய யாக்கை ஒடிவதற்கு முன், மயக்கும் உலகாகிய வலைக்குட்படாமல், நன்னெறி நிற்றலை இத்துறை சுட்டியது. இத்தகு அருஞ்செயலுக்கு மெய்யுணர்வும் கடைப்பிடியும் உரமும் வேண்டப்பெறும். இவற்றால் விளையும் வெற்றியை இத்துறை குறிக்கும்.

18) காமம் நீத்தபால்

வாகைத் திணைக்கு ஓதப்பெற்ற துறைகளில் இதுவே இறுதியாகத் தொல்காப்பியரால் சொல்லப் பெற்றது. ஆசை அவிந்தபக்கத்தை இது சுட்டியது. எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் காமம் எனப்படும் ஆசையே. இது நிறைவுறாத பொழுது வெகுளியும், வெகுளியின் விளைவாக மதி மயக்கமும் ஒன்றன்பின் ஒன்றாக வருதலின் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றையுமே கடிதற்குரிய குற்றங்களாக ஞானிகள் கூறி வைத்தனர்.

திருக்குறளில்,

''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்'',

என்று அறிவுறுத்தப் பெற்றது. பிறவிநோய் நீங்குதற்கு இம்மூக் குற்றங்களையும் முனிதல் வேண்டும். அதுவும் வாகையின் ஒரு பகுதியாகப் பாராட்டப்பெறும்.

துறவியான பிறகுதான் இம்மூன்றையும் வெல்ல வேண்டும் என்ற நியதி இல்லை துறவியானவரில் பலர் காமத்தைத் துறவாது அல்லற்பட்டு உழன்ற செய்தி கதைகளினால் அறியப்படும்.

நாலடியாரில்,

''ஊரில் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீரில் குளித்தும் உயலாகும்—நீரில்
குளிக்கினும் காமம் கடுமே குன்றேறி
ஒளிக்கினும் காமம் சுடும்''.

என்று காமத்தின் கடுமையும் பொல்லாங்கும் சுட்டப் பெற்றன. ஆதலின், அதனை நீத்தல் என்பது உலகியலில் நின்றபடியே ஒருவன் மனப் பயிற்சியால் புரிதல் கூடும் என்ற கருத்தினைக் குறித்தனர் நச்சி.

இனி, தொல்காப்பியத்தில் கூறப்பெற்றுப் பு. வெ. மாலையில் விடுபட்ட துறைகளையும், இப்பின்னூலில் மட்டுமே இடம்பெறும் துறைகளையும் தொகுத்துக் காண்போம்.

5. விடுபட்டவை

பு.வெ. மாலை புகலும் வாகை, வாகை அரவம், முரசவாகை, குடை முல்லை, கண்படைநிலை, கிணைநிலை என்பன தொல்காப்பியர் கூறாதவை. வாகைமாலையினைச் சூடிக்கொண்டு அலைகடல்தானை அரசை அடுதலை வாகை என்றார் (155). வெற்றிக்குப்பின் சூடிக்கொள்வதும் வாகையே. வெற்றி பெற்றவனின் கண்ணி, கழல், கச்சு ஆகிய மூன்றையும் புனைந்துரைத்தல் வாகை அரவம் (158) எனப்படும். அரசனின் முரசினைப் பரசுதல் முரசவாகை (158). வாகை பெற்ற வேந்தனின் குடையினைப் புனைந்து போற்றுதல் குடைமுல்லை (182).

கிணைநிலை என்பது அரசனுடன் தொடர்புடைய துறையன்று. மருதவளம் மிக்க வேளாளனின் சிறப்பினைக் கிணைப் பொருநன் பாராட்டுதலை இத்துறை சுட்டியது (186).

வெற்றி பெற்ற வேந்தனின் அமைதியான உறக்கத்தைக் கூறுவது கண்படை நிலை என்ற துறையாகும் (183). இது தொல்காப்பியத்தில் பாடாண்திணைக்கு உரியதாகக்கூறப்பட்டது.

தொல்காப்பியர் சுட்டிய பெரும்பகை தாங்கும் வேல், அரும்பகை தாங்கும் ஆற்றல், ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கு, கடிமனை நீத்தபால், கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை, வண்புகழ்க் கொடை, காமம் நீத்தபால் என்பன பு. வெ. மாலையில் வாகைப் படலத்தில் சொல்லப்படவில்லை.

இத்தகைய வேறுபாடுகளினால், புறத்திணை இலக்கணம் கூறிய வகையில் தொல்காப்பியம் ஒரு தனிப்பட்ட சிந்தனைப் பள்ளியில் தோன்றியது என்பதும், பு. வெ. மாலை பிறிதொரு சிந்தனைக்குழுவின் வழிப்பட்டது என்பதும் புலனாகும்.

இரு நூல்களிலும் காணப்பெறும் ஒத்ததுறைகள், இவை பேசுதற்கு எடுத்துக்கொண்ட பொருளின் பொதுமை பற்றி அமைந்தன என்று எண்ணுதல் தகும்.

இனி, புத்தமித்திரனார் புகலும் வாகைத் திணைக்குரிய துறைகளைத் தொன்னூலுடன் ஒப்பீடு செய்வோம்.

6. தொல்காப்பியமும் வீரசோழியமும்

புத்தமித்திரனார் வாகைத் திணைக்கு உரியனவாக 14 துறைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார் (கா. 102). அவற்றுட் பலவும் தொல்காப்பியர் முன்பே வகுத்துரைத்தவை. அவற்றைப் பின்வரும் அடைவில் பார்த்தல் தகும்.

வீரசோழியம்	தொல்காப்பியம்
1) நாற்குலப் பக்கம்	அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கம் முதல் ஏனோர்பக்கம் வரை அமைவன.
2) முக்காலம்	மூவகைக்காலம் .. அறிவன் தேயம்
3) களவழி	ஏரோர் களவழி, தேரோர் களவழி
4) குரவை	இருவகைக் குரவை
5) ஆற்றல்	அரும்பகை தாங்கும் ஆற்றல்
6) வல்லாண்பக்கம்	வல்லாண்பக்கம்
7) அரும்பொருள்	பொருளொடு புணர்ந்தபக்கம்
3) காவல்	பிழைத்தோர்த்தாங்கும் காவல்
9) துறவு	அகற்சி
10) கொடை	வாண்புகழ்க்கொடை
11) படையாளர் பக்கம்	பாலறி மரபின் பொருநர் பக்கம்

எஞ்சிய மூன்று துறைகளும் புதியனவாக வீரசோழியத்தில் பயிலப் பெற்றன. அவை வருமாறு :

1) வேட்கையார் பக்கம்

பெருந்தேவனார் இத்துறைக்கு விளக்கம் தருகிறார். விருந்தோம்புதலும் அழல் ஓம்புதலும் உள்ளிட்ட எண்வகைப் பக்கம் என்றார். வேள், வேள்வி வேட்டல் என்ற சொற்களின் அடிப்படையில் இவர் விளக்கம் அமைகிறது. எண்வகை என்பது, 'எட்டுவகை நுதலிய அவையகம்' என்ற தொடரில் வரும் எட்டினைப்போல் ஒருதொகுதிக் குணங்களையும் செயல்களையும் சுட்டியதாகக் கொள்ளுதல் வேண்டும். அவற்றில் இரண்டினை மட்டும் விதந்து எடுத்துக் கூறினார். இவ்விரண்டினாலும் மீக்கூர்ந்து மேம்படும் திறமும் வாகையின் கூறாகக் கருதப்பெறும்.

2) மேன்மை

இத்துறை தன்னளவில் மேம்பாட்டினையும் மேன்மைப் பண்புகளையும் குறிக்கும். பண்புகளினால் ஈட்டும் வாகையினை இத்துறை குறித்ததாகக் கொள்ளலாம். ஆயின், பெருந்தேவனார் வேறுவகையில் விளக்கம் தந்துள்ளார். "பெரும்பகை தாங்கும் மேன்மை; அது அருளொடு புணர்ந்த அகறசியாம்". இவ்விளக்கம் இத்துறையினைத் தொல்காப்பியர் கூறிய துறையுடன் தொடர் புறுத்துகிறது. அதனைவிட மேம்பட்டது பிறிதில்லை. இத்துறைக்குப் புத்தர்பிரான் அருள்மிகுதியால் புனிறுதீராப் புலி, பசியினால் தன் குழவியைத் தின்றுவிடாதபடி தானே அதன் வாயிற் பாய்ந்து பசி தணித்த சிறப்புரைக்கும் ஒரு பாடலை மேற்கோள் காட்டியுள்ளார்.

"புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனாது
முலைமறா அக் குழவி வாங்கி வாய்ப்படுத்து
இரையெனக் கவர்ந்தது நோக்கி ஆங்க
ஏரிளங் குழவின் சென்று காண
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் துடங்கிய
வாள்எயிற்றுக் கொள்ளையிற் றங்கினன் கதுவப்
பாசிலைப் போதி மேவிய பெருந்தகை
ஆருயிர் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சி பெருமை தானே".

3) ஒற்றுமை

அலைபாயும் மனத்தை ஒருவழிப்படுத்தலை இத்துறை சுட்டிய தாகக் கருதலாம். எனின், "சிறியோர் நாணப் பெரியோர் கூறிய கூறுபாட்டிற் கழிமனத்தை ஒற்றுமை கொள்ளல்" என்று உரை வரைந்தார் பெருந்தேவனார். ஒற்றுமை என்பதற்குரிய தெளிவான பொருளும், அது எவ்வகையில் வாகையாகும் என்பதும் உரையில் விளக்கப்பெறவில்லை.

இனி, மேலே ஒப்புமை காட்டப்பெற்ற துறைகளில் துறவு, கொடை என்ற துறைகளுக்குப் புத்தர்பிரானின் கருணைச் செயல் களைப் பரவும் இனிய அகவற்பாக்கள் இரண்டினைப் பெருந் தேவனார் எடுத்துக்காட்டியிருத்தல் இந்நூலாசிரியரின் பௌத்தச் சார்பிற்குத்தக உரைவரையும் இவர்தம் திறத்திற்குச் சான்று

பகர்கிறது. தமிழ் இலக்கணத்தைத் தமிழக அளவில் மட்டும் சுருக்கிவிடாது, மன்பதைப்பொதுமை சுட்டும் மாபெரும் வையகம் அளவிற்குப் பொருத்திப் பார்க்கவேண்டும். அப்போதுதான், தமிழர் வகுத்துக்கூறிய வாழ்வியல் இலக்கணத்தின் உலகளாவிய நோக்கு புலனாகும். இவ்வகையில் பெருந்தேவனார் எடுத்துக் காட்டிய மேற்கோள்கள் ஆய்வாளரைச் சிந்திக்கத் தூண்டுவன எனலாம். 'மற்றும்' என்ற மிகையினால், எட்டியல் சான்றோர் பக்கம், அஞ்சாச்சிறப்பு என்ற துறைகளையும் உரையாசிரியர் குறித்துள்ளார்.

இனி, வைத்தியநாதநாவலர் வாகைத்திணையினை வகுத்துக் கூறும் வகையில் முன்னூல்களை ஒட்டிச்செல்லும் பாங்கினைப் பார்ப்போம்.

7. தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்

தொல்காப்பியர் கூறிய "வாகை தானே........என்ப" என்ற திணை விளக்க நூற்பாவை நாவலர் பொன்னேபோல் போற்றி எடுத்தாண்டனர். "அலைகடல் தானை" (நூ. 613) என்ற ஒரே நூற்பாவில் இத்திணைக்கு உரிமை பூண்ட 32 துறைகளையும் தொகுத்து வழங்கினார். இவை பு. வெ. மாலையின் புகலப் பெற்றவையே. எனின், பு. வெ. மா. பிரித்துச் சுட்டிய வாணிக வாகை, வேளாண் வாகை என்ற இரு துறைகளையும் நாவலர், 'ஏனோர் வாகை' என்று தொல்காப்பிய நெறியை ஒட்டி ஒன்றாகவே எண்ணினார். காவல்முல்லை என்ற துறைக்குப் பு. வெ. மா. இரு வெண்பாக்கள் உதாரணம் தந்தது. ஆதலின் இரண்டாவது வெண்பாவை மட்டும் காவல்முல்லைப் பக்கம் என்று பெயரிட்டுக்கொண்டார் நாவலர். பு. வெ. மா. சுட்டும் கிணைநிலையைக் களவழி என்ற புதுப்பெயரினால் வழங்கினார். இரண்டிற்கும் பொருள் அளவில் வேறுபாடில்லை. மருத நிலத்துக் குரிய வேளாளன் இரவலரின்வறுமையைப் போக்குதற்குக் காரணம் ஆகிய அவன் செல்வம் மேன்மேலும் சிறப்பதாக என்று மருதநிலப் பறையாகிய கிணைகொட்டும் பாணனின் புகழ்ச்சியைக் களவழி என்ற துறை சுட்டியது.

பு. வெ. மா. இ. வி. சுட்டும் முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை என்ற துறைகள் தும்பைத் திணைக்குரியவை, எனின், இவை தொல்காப்பியத்தில் வாகைத்திணைக்கு உரியனவாகக் கூறப்பெற்றன. இது ஒரு வேறுபாடு.

இனி, சாமிகவிராயர் இத்திணை பற்றிக் கூறுதலைச் சுருங்கக் கூறுவோம்.

8 சுவாமிநாதம்

இந்நூலில் வழக்கம்போல் இலக்கண விளக்கத்தை அடியொற்றி இத்திணைக்குரிய துறைகளைக் கூறுகிறது. தொல்காப்பியர் கூறிய திணை விளக்க நூற்பாவை நாவலர் எடுத்தாண்டதுபோல, அதன் சாரத்தைச் சாமிகவிராயர் எடுத்துக் கொடுத்துள்ளார்.

''பாலைக்கு, ஆள்புறமே வாகை பகை முடித்திடும் வெற்றியதாம்'' (139). தொடர்ந்து, 'அமர்முடித்து வாகை சூடுதல்' முதல் 'அருளான் நீங்கல்' முடியவுள்ள 31 துறைகளும் இலக்கண விளக்கத்தில் இடம் பெற்றவையே. யாப்பு வசதிக்கு ஏற்ப ஒரு சில குறியீடுகளை மாற்றி அமைத்துக்கொண்டார்.

சாமிகவிராயர் தொல்காப்பியத்தையும் பு. வெ. மாலையினையும் இலக்கண விளக்கத்தையும் பயின்று மாணவர்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில் வாகைத்திணைக்குரிய இலக்கணத்தைத் தொகுத்துக் கூறியுள்ளார்என்பது தெளிவு.

இவ்வியலில் மேற்கொள்ளப்பெற்ற ஆய்வின் பயனாக அறியப் பெறும் உண்மைகளையும் முடிபுகளையும் இங்கு தொகுத்து நோக்குவோம்.

ஆய்வின் முடிபுகள்

1) போரில் மட்டுமின்றி வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் ஒருவர் உழைப்பினால் பெறும் வெற்றியை வாகை என்றனர்.

2) உறழ்ச்சியால் பெறும் வெற்றியை வாகை என்றும், இயல்பாகப் பெறும் வெற்றியை முல்லை என்றும் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.

3) அறுவகை, ஐவகை, இருமூன்று மரபு என்ற தொல்காப்பியத் தொடர்கள் தொழில் வகைகளைக் குறிப்பன எனப் பழைய உரையாசிரியர்கள் கருதினர். இவை இனவகைகளைக் குறிப்பன என்பது இக்காலத்து அறிஞர்கள் கருத்து.

4) பார்ப்பன வாகை பற்றிய புறநானூற்றின் பாடல்கள் அக்காலச் சமுதாயத்தில் அந்தணர்கள் அடைந்திருந்த மேனிலையினைச் சுட்டுகின்றன.

5) அரசர்க்குப் கூறப்பெறும் ஐவகைத் தொழில்களில் திருவள்ளுவர் வேள்விபுரிதலைக் கூறாமைக்கு அவர்தம் அருள் உள்ளமே காரணம் எனலாம்.

6) புறநானூற்றில் அரசவாகை என்னும் துறையில் அமைந்த பாடல்களில் சில வேளிர், தலைவர்முதலியோர் பற்றி வருதலின், அரசு என்ற சொல் வேந்தரை மட்டுமே குறித்த நிலை நெகிழ்ந்து, குறுநிலங்களை உரிமையுடன் ஆட்சிபுரிவோர்க்கும் உரியதாகப் பின்னர் விரிபொருட் பேறு எய்தியது என்று கருதலாம்.

7) மூவகைக் காலம் என்பது மழை, பனி, வெயில் ஆகிய பருவங்களைக் குறித்ததாகக் கொள்வதைவிட, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலங்களைக் குறித்ததாகக் கொள்ளுதல் தக்கது.

8) கணிவன் முல்லை என்ற துறைக்குப் பன்னிருபடலம் கூறும் கருத்தும் இதன்வழி நூலாகிய பு. வெ. மாலை கூறும் கருத்தும் வேறுபடுதலின், பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி நூல் செய்தற்கு வழிநூலாசிரியர்க்கு உரிமை உண்டு என்பது புலனாகும்.

9) தொல். சுட்டும் அறிவன்தேயமும் பு. வெ. மா. சுட்டும் அறிவன் வாகையும் ஒரு துறையினையே சுட்டுவன.

10) நாலிருவழக்கு என்பது, நீராடல் முதலிய எண்வகைச் செயல்களைச் குறிக்கும் என்று கூறுவதைவிட, யோக நெறியில் சுட்டப்பெறும் இயமம் முதலிய எண்ணுறுப்புக் களைக் குறிக்கும் என்று கொள்ளுதல் ஏற்புடையது. யோகநெறி சிந்துவெளி நாகரிகத்தின் கால அளவிற்குப் பழமை வாய்ந்ததாக அறிஞர் முடிவு செய்தலின், இக் கருத்து பொருத்தம் மிக்கதாக உள்ளது.

11) பு. வெ. மா. சுட்டும் பொருநவாகை என்ற துறை பிறரை இகழாமையினைப் பெருவீரர்க்குரிய சிறந்த வெற்றி யாகக் குறித்தலின், மறவரிடம் விளங்கிய மாபெரும் பண்பாடு தெளிவாகிறது.

12) பு. வெ. மா. தொல்காப்பியர் சுட்டிய வேனிற்பாசறை யினைச் சுட்டவில்லை. எனின், வாடைப்பாசறை என்ற பெயரினால் ஒரு துறையினைச் சுட்டியுள்ளது.

13) நச்சினார்க்கினியர் குறிப்பிடும் பாசறை முல்லை என்ற துறை பு. வெ. மா. முதலிய நூல்களில் காணப்பெற வில்லை. இத்துறையினைக் குறித்த புறப்பொருள் இலக்கண நூல் அவர்காலத்தில் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும் என்று அனுமானிக்க இடம் உண்டு.

14) தொல்காப்பியர் சுட்டும் பெரும்பகைதாங்கும்வேல், அரும்பகை தாங்கும் ஆற்றல், ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கு, சுடிமனை நீத்தபால், கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை, கொடை முதலிய துறைகள் பு. வெ. மாலையில் இடம்பெறவில்லை.

15) வாகை, வாகை அரவம், முரசவாகை, குடைமுல்லை கண்படை நிலை, கிணைநிலை என்பன தொல் காப்பியத்தில் இடம்பெறாது பு. வெ. மா. சுட்டும் புதிய துறைகள் ஆகும்.

16) மேன்மை, துறவு, கொடை முதலிய துறைகளுக்குப் புத்தர்பிரானின் அருட்செயல்களைக் குறிக்கும் அகவல் பாட்டுகளைப் பெருந்தேவனார் மேற்கோள் தந்துள்ளார். இவை உதாரணத்திற்காக என்று எழுதப்பெறாமல் அக்காலத்து வழங்கிய தமிழ்ப் புத்த நூல்களிலிருந்து எடுத்தாளப்பெற்றிருக்கலாம்.

17) வேட்கையார் பக்கம், மேன்மை, ஒற்றுமை என்பன மூன்றும் வீரசோழியத்தில் விளம்பப்பெற்ற புதிய துறைகள் ஆகும்.

18) தொல்காப்பியர் வாகைத்திணைக்குக் கூறிய முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை என்ற துறைகள் பு. வெ. மா. இ. வி. ஆகிய நூல்களில் தும்பைத்திணைக்கு உரியவை யாகக் கூறப்பெற்றன.

10. பாடாண் திணை

1. பாடாண் — பொருள் விளக்கம்

புறத்திணைகள் ஏழனுள்ளும் இறுதிக்கண் நிறுவப்பெற்றது பாடாண் திணை ஆகும். உரிப்பொருள் உடைய அன்பின் ஐந் திணைக்குப் புறமாக ஓதப்பட்ட வெட்சிமுதலிய புறவொழுக்கத்தில் அடையாளப் பூச்சூடுதல் உண்டு. உரிப்பொருள் பெறாத அக வொழுக்கம் ஆகிய பெருந்திணை, கைக்கிளை என்பன இரண்டும் முன்னைய ஐந்தையும் போல் தாவர அடிப்படையில் பெயர் பெறாமையின், இவ்விரண்டிற்கும் புறமாக எண்ணப்பெற்ற நிலையாமைக் காஞ்சிக்கும் பாடாணுக்கும் அடையாளப்பூச் சுட்டப் பெறவில்லை. பாடாண்திணை என்பதற்குரிய பொருள் குறித்துத் தொல்காப்பிய நூற்பாவிலும் பு. வெ. மாலையிலும் வீரசோழியத்தி லும் ஒன்றும் கூறப்படாமை வியப்பாக உள்ளது. எனின் இலக்கண விளக்கம்,

> "..................
> பாடுதற் குரிய ஆண்மகன் தனாது
> பாடமை ஒழுக்கம் பாடும்அந் நெறித்தே". (நூ. 616)

என்று பாடாண் பொருள் குறித்துச் சுட்டுதல் பார்க்கத்தக்கது. பாடாண்திணை என்ற குறியீடு பாடு + ஆண் + திணை என்ற முச் சொற்களினால் அமைந்தது. இக்குறியீட்டுச் சொல்லின் ஒவ்வொரு உறுப்பினையும் விளக்குவதுபோல் இந்நூற்பா காணப்படுகிறது. பாடுதற்குரிய ஆண் மகனது ஒழுக்கத்தைப் பற்றியது இத்திணை. பாடு என்ற சொல்லிற்குப் பெருமை என்றும் பொருள். எனவே, பெருமை பெருந்திய ஆண்மகனின் அருஞ்செயல்களையும் ஒழுக லாறுகளையும் விரித்துரைப்பது இத்திணை என்றும் கொள்ளலாம்.

நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் நோக்கற்பாலது :

> ''பாடாண் என்பது பாடுதல் வினையையும் பாடப்படும் ஆண் மகனையும் நோக்காது, அவனது ஒழுகலாறு ஆகிய திணை உணர்த்தினமையின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை''.

பாடாண் என்ற சொல்லே பாடாண்திணையினை உணர்த்தும் என்பதும், அங்ஙனம் உணர்த்துங்கால் அஃது அன்மொழித்தொழி தொகை ஆகும் என்றும் கருதினார் நச்சி. பாடாண் என்பதில் 'பாடு' என்பது பெருமை என்ற பெயர்ப்பொருள் குறிப்பதாயினும் இவர் பாடுதல் என்ற வினைப்பொருண்மை கொண்டார். ஒரு வேளை பாடுதற்கு ஆண்மகனின் பெருமைபொருளாக அமைதலின் இங்ஙனம் பொருள் கொண்டனர் எனலாம். திருத்தக்கதேவர் தலைமகனுக்குச் சுட்டிய,

> ''அருள்வலி ஆண்மை கல்வி அழகுஅறிவு இளமை ஊக்கம்
> திருமலி ஈகை போகம் திண்புகழ் நண்பு சுற்றம்''

முதலிய பொருள்கள் பற்றிச் சிறப்புற்று விளங்கும் ஆண்மகனின் ஒகலாறுகளைத் தனிப்பாடலிலும் தொடர்நிலைச் செய்யுளிலும் பாடுதல் பாடாண்திணைக்கு உரியது. இல்லச்சிறப்பும், வெட்சி முதலிய மறத்துறை மாண்பும், கல்வி, தறுகண்மை, இசைமை, கொடை முதலிய பெருமிதப் பண்புகளும் அமைந்த ஒருவர் ஆடவர் பலருள்ளும் பொதுநீக்கி எண்ணப்பெறுதலின், அவர்தம் ஒழுக லாற்றினை வாய்மைப் புலவர்கள் வழக்கறிந்து பாடுதல் பாடாண் திணை எனப்படும்.

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,

> ''நல்லறிவுடைய புலமைச் செல்வர் பலரும் உரையினாலும் பாட்டினாலும் உயர்த்துப் புகழும் வண்ணம் ஆற்றல்மிக்க போர்த்துறையிலும் அன்பின் மிக்க மணவாழ்க்கையிலும் புகழுடன்வாழும் நன்மக்களது பண்பின்ஆளுதல் தன்மையே பாடாண்திணை''. (ப. 264)

என்று விளக்குதல் மிகவும் பொருத்தம் உடையதாகும். ஆளுதல் தன்மை ஆளுமை (Personality) எனப்படும். இதுவே மனித மேம் பாட்டிற்கு அடிப்படை. அருஞ்சாதனைகளும் உயர்பண்புகளும் ஒருவன் ஆளுமையை உயர்த்திக் காட்டிப் புலவர் பாடுதற்குப் பொருளாக அமைகின்றன. ஆதலின் பாடு + ஆண் + திணை

பாடாண்திணை என்றொரு சொல்லமைப்பும் சிந்தனைக்கு உரியது.

ஆண் மேலாதிக்கச் சமுதாயத்தில் பாடாண்திணை பெரும் பாலும் ஆண்களைப் பற்றியே அமைந்திருப்பினும், அவர்தம் இல்லத்தரசிகளும் சார்புவகையினால் போற்றப் பெறுதலை இலக்கியங்களில் காண்கிறோம். 'பாடாண்' என்ற சொற்பொருள் ஆண்மகனைப் பாடுதலைக் குறிப்பினும், ''ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும், வருவகை தானே வழக்கென மொழிய'' என்று தொல்காப்பியர் சுட்டுவதால், பெண்களும் பாடுதற்குரிய பெருமைக்கு உரியவர்களே என்பது தெளிவு. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் முதலிய காப்பியங்களும் பெண்ணின் பெருமை பேசுதல் எண்ணற்பாலது. அன்றியும், புலன்கடந்த தெய்வப்பொருளும் இத்திணைக்கு உரிய பாடுபொருளே. மக்கள், புலவர்தம் அனுபவங்கள் இங்ஙனம் தெய்வப்பொருள் எல்லாம் பாடாண் ஆதற்குக் காரணங்கள் ஆகின்றன.

இதுகாறும் 'பாடாண்' என்ற சொற்பொருள் விளக்கம் கண்டோம். இனி, பாடாண்திணை கைக்கிளைக்கும் புறம் என்ற தொல்காப்பியர் கருத்தினை உரையாசிரியர்கள் எவ்வாறு தெளிவுறுத்துகின்றனர் என்பது குறித்து நோக்குவோம.

2. கைக்கிளைக்குப் புறம் பாடாண்

கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் பாடாண்திணை புறம் ஆவதற்கு இளம்பூரணர் கூறும் காரணங்களைப் பின்வருமாறு அடைவு செய்து கொள்ளலாம்.

1) ஒரு நிலத்திற்கு உரித்தன்றி ஒருதலைக் காமம் ஆகி வருவது கைக்கிளை. அதுபோல, ஒருபாற்கு உரித்தன்றி ஒருவனை ஒருவன் யாதானும் ஓர் பயன்பெறுதல் கருதிய வழி மொழிந்து நிற்பது பாடாண்.

2) கைக்கிளை ஆகிய அகத்திணையில் இயற்பெயர் சுட்டிக் கூறப்பெறும். அதுபோல, பாடாண் ஆகிய புறத்திணையிலும் இயற்பெயர் சுட்டிக் கூறப்பெறும்.

3) இன்பியலாகிய செந்நிறம் பற்றி வருதல் இருவகைத் திணைக்கும் ஒத்தது.

மேற்சுட்டிய பொதுமைப் பண்புகள் ஆகிய காரணங்களினால் கைக்கிளைக்குப் புறமாகப் பாடாண் வகுக்கப் பெற்றது.

இனி நச்சினார்க்கினியர் நவிலு ம காரணங்களை நோக்குவோம்.

"ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின், அவைதம்மின் வேறாகிய ஒருதலைக் காமம் ஆகிய கைக்கிளையோடொத்த பாடாண்திணை கைக்கிளைப் புறனாயிற்று''.

கைக்கிளையில் ஒருமருங்கு பற்றிய காதல் காணப்படுகிறது. பாடுதற்குரிய தலைமகன் புகழ்ச்சியை விரும்புகிறான். அவனைப் பாடும் புலவன்பரிசிலை விரும்புகிறான். இங்ஙனம் இருதிறத்தாரும் ஒருமருங்கு பற்றிய விருப்பத்துடன் உள்ளனர். எனவே கைக்கிளைக்குப் பாடாண் புறனாயிற்று என்பது அவர் கருத்து. கைக்கிளையில் முதலில் ஒருபக்கமே காதல் தோன்றும். அதுபோல, பரவல், புகழ்ச்சி, பரிசில் ஆகியவற்றில் முதற்கண் ஒருபக்கமே விழைவு தோன்றும் என்று காட்டப்பெறும் இயைபு அவர்தம் கூர்த்த மதித் திறத்திற்குச் சான்றாகும்.

இனி, நாவலர் ச. சோ. பாரதியார் கூறும் காரணங்களைக் காண்போம் :

1) கைக்கிளையிற் காதற் சிறப்பு ஒருவர்க்கே ஆதல்போல், பாடாண் சிறப்பும் பொதுமையின்றித் தகவுடையார் ஒருவர்க்கே உரியது.

2) கைக்கிளையில் காதற் கூற்று பாராட்டும் தலைவன் மாட்டு ஆவதுபோல் பாடாண்கூற்றும் புகழ்வார்தம் பக்கலில் அமையும்.

3) இரண்டிற்கும் நிலம், பொழுது வரையறை இல்லை.

4) கைக்கிளையில் இழுக்கு நீக்கித் தருக்கியே சொல்லி இன்புறுதல் போல், பாடாணில் பழிதழுவாப் புகழ்மை ஒன்றே பயில்வது.

5) இருதிணையும் ஒருதலையாகச் செந்திறமாய் அமைவது.

இக் காரணங்களினால் கைக்கிளைக்குப் புறமாகப் பாடாண் அமைந்தது என்றார்.

வெட்சி முதலிய பிற திணைகளும் புலவராற் பாடப் பெறுவனவே. எனின், அவற்றுக்குப் பாடாண் என்ற பெயர் அமைவதில்லை என்றார் நச்சி. அதற்கு அவர் கூறும் காரணங்கள் இரண்டு :

1) ஒருவனை ஒன்று நச்சிக் கூறுதல் பாடாண் திணையில் உண்டு. மற்றவற்றில் இல்லை.

2) ஏனைய திணைக்குரியோர் பெறுப்புகழ் பிறரை வேண்டிப் பெறுவதன்று; தாமே ஈட்டுவது. எனின், பாடாணில் பெறும் புகழ் புலவரை வேண்டிப் பெறுவது என்றார்.

இனி, பாடாண் வகை குறித்து நூலாசிரியரும் உரையாசிரியர் களும் நுவலும் கருத்துக்களை நோக்குவோம.

3. பாடாண் வகை

கைக்கிளைக்குப் புறனாகிய பாடாண் ஆராயுமிடத்து எட்டு வகைப்படும் என்று தொல்காப்பியர் குறித்துள்ளார்.

''பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே''.

இந்நூற்பாவில் தொகை கொடுத்துச் சொல்லப்பெறும் எட்டு வகைப் பாடாணையும் இளம்பூரணர் பின்வருமாறு அடைவு செய்னதர்.

இளம்பூரணர் அடைவு	தொல்காப்பிய விதி
1) கடவுள் வாழ்த்து வகை	''கொடிநிலை கந்தழி வள்ளி..... கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'' நூ. 85
2) வாழ்த்தியல் வகை	இயல்மொழி வாழ்த்து, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து முதலியன. நூ. 87
3) மங்கல வகை	பெருமங்கலம், மண்ணுமங்கலம் முதலியன. நூ. 88
4) செவியறிவுறுத்தல்	செவியறிவு நூ. 2 நூ. 87

5) ஆற்றுப்படை வகை — கூத்தரும் பாணரும்... ஆற்றிடைக் காட்சி... பக்கமும் நூ. 88

6) பரிசில் துறை வகை — பரிசில்... நிலை முதலியன நூ. 88

7) கைக்கிளை வகை — கைக்கிளை வகை நூ. 87

8) வசைவகை — கொடாஅர்ப் பழித்தல் நூ. 87

இவ்வெட்டின் வகைக்குள் பாடாண் திணைக்கு உரிய கூறுபாடு களை எல்லாம் அடக்கி விடலாம்என்பதுஇளம்பூரணர் கருத்தாகும். இவற்றுக்கு இயைந்த துறைகள் பலவும் பு. வெ. மாலையிலும் காணப்படுகிறன்றன. அவற்றை இங்கே நோக்குவோம்.

1) சடவுள் வாழ்த்து 191

2) இயன்மொழி வாழ்த்து 194, நாடு வாழ்த்து 205, களவழி வாழ்த்து, வாயுறை வாழ்த்து 220, புறநிலை வாழ்த்து 226.

3) மங்கலநிலை 198, 199; வீற்றினிதிருந்த பெருமங்கலம் 208, மணமங்கலம் 210, பொலிவு மங்கலம் 211, நாண்மங்கலம் 212, குடை மங்கலம் 222, வாண்மங்கலம் 223, மண்ணுமங்கலம் 224.

4) செவியறிவு நூஉ 221.

5) பாணாற்றுப்படை 216, கூத்தராற்றுப்படை 217, பொருநராற்றுப்படை 218, விறலியாற்றுப்படை 219.

6) பரிசில்துறை 193

7) கைக்கிளை 233

இனி, நச்சினார்க்கினியர் நவிலும் எட்டுவகைப் பாடாண் பற்றிக் காண்போம்.

> "இப்பாடாண் திணைக்கு ஓதுகின்ற பொருட்பகுதி பலவும் கூட்டி ஒன்றும், இருவகை வெட்சியும் பொதுவியலும் வஞ்சியும் உழிஞையும் தும்பையும் வாகையும் ஆகிய பொருள்கள் ஏழும் ஆகிய எட்டும்" (ப. 252)

நாலிரண்டு என்ற தொகையினால் சுட்டப்பெற்றவை என்றார். இவர் கருத்தின்படி வெட்சித்திணையின் நிலைக் களத்துப் பிறந்த

பாடாண், பொதுவியல் புறத்துப் பிறந்த பாடாண் முதலாக வாகைத் திணைப் புறத்துப் பிறந்த பாடாண் வரை ஏழு பகுதியும், இவை தவிர எஞ்சியவையாகப் பாடாண் திணைக்கு ஓதப் பெறும் பொருட்பகுதி ஒன்றும் சேர்ந்து எட்டாயின என்று தெளியலாம்.

இவர் கருத்தினைப் பின்பற்றியே ச. சோ. பாரதியார் எழுதியுள்ளார். வெட்சிப் பாடாண், வஞ்சிப்பாடாண், உழிஞைப் பாடாண், தும்பைப்பாடாண், வாகைப்பாடாண், காஞ்சிப்பாடாண், புரைதீர் காமம் புல்லிய பாடாண் என்றெழு வகையிற் பாடாண் பிறத்தலின், அவ்வத்திணைப் பகுதி நீக்கிப் புகழ்ச்சிக்குரிய ஒவ்வொரு பகுதியே பாடாணாகும் என்றார். புறத்திணை வகை ஆறும், அன்பின் ஐந்திணை, கைக்கிளையாகிய அகத்திணை இரண்டும் ஆக இவ்வெட்டும் பாடாண் திணையின் வகை எனவும் கூறினார். நாலிரண்டு என்று தொகை கொடுக்கப் பெற்றவை பாடாண் திணையின் வகைகள் என்பர்.

பாடாண் திணையின் பாடுதல் வினை புலவர் பாலும், அவ் வினைக்குக் காரணம்ஆகிய பண்பும் செயலும் பாட்டுடைத்தலைவர் பாலும் நிகழ்வன. வெட்சிமுதலிய ஆறு திணைகளும் தலைமக்களுக்குரிய பண்புகளையும் செயல்களையும் நிலைக் களமாகக் கொண்டு தோன்றும் தனிநிலைத் திணைகள் என்றும், இத்திணைகளை நிலைக்களமாகக் கொண்டு தோன்றும் சார்புநிலைத் திணையே பாடாண் திணை என்றும் கருதுவர் க. வெள்ளைவாரணனார் (ப. 263).

''நாலிரண்டு'' என்பன அடுத்துவரும் நூற்பாவில் (நூ. 79) சுட்டப்பெறும் அமரர்கள் முடியும் அறுவகை, புரைதீர்காமம் புல்லிய வகை, ஒன்றன் பகுதி என்பன மட்டுமே என்று எண்ணுதற்கும் இடம் உண்டு.

அமரர்கள் முடியும் அறுவகை

அமரப் பாடாணாக முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் என்பனவற்றை அறுவகை எனக் குறிப்பர் இளம்பூரணர். இவை பு.வெ. மாலையிலும் இடம் பெற்றவையே. புகழ்ச்சி, பரவல், குறிப்பு, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பன ஆறினையும் புத்தமித்திரனார் சுட்டினர் (நூ.104). அமரர்கள் வந்து முடியும் எனவே, அமரர் வேறு என்றும் அவர்கண் வந்து முடிவன வேறு என்னும் நச்சினார்க்கினியர் எண்ணினர். அவை முனிவர், பார்ப்பார், ஆனிரை, மழை, வேந்தர், உலகு

என்ற ஆறும் என்றார். இவை பிறப்பு வகையினால் அமரர் அல்ல; சிறப்பு வகையால் அமரருள் வைத்து மதித்தற்குரியவை என்பது அவர் கருத்து. திருஞான சம்பந்தர் தேவாரத்தில், ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்ற பாடலில் இவை சுட்டப் பெறுதலின் இப்படி எண்ணும் ஒரு மரபு இடைக்காலத் தமிழ கத்தில் இருந்ததாதல் வேண்டும். எனில், தொல்காப்பியர் காலச் சமுதாயத்தின் நிலை இதனின்றும் வேறுபட்டிருத்தலும் கூடும்.

பாரதியார் இத்தொடர்க்குக் கூறும் விளக்கம் சிந்திக்கத் தக்கது. அமரர் என்ற சொல்லினை அமர்+அர் என்று பிரித்துப் போரினை விரும்பிச் செய்யும் வீரரைக் குறித்தது என்றார். பெருங் கதையில், ''எமர னாயின் இறைகொடுத்தகல்க, அமரனாயின் அமைவொடு நிற்க'' எனவரும் பகுதி இங்ஙனம் இவர் பொருள் செய்வதற்கு அரண் செய்கிறது. ஆதலின், ''போர் மறவர் பாற் சென்றமைவனவாக முன் இவ்வியலில் விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சி ஈறான புறத்திணை வகை ஆறினை'' அமரர்கண் முடியும் அறுவகை சுட்டியதென்று கூறியுள்ளார். இக்காலத்தும் அமரர் என்பதன் பரிபாலப் பெயராகிய தேவர் என்ற சொல் அமரரையும் மறவரையும் குறித்தல் காணலாம். வானவர் என்ற சொல் தேவரையும் சேர வீரரையும் குறித்தல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. எனின், தொல்காப்பியம், சங்க இலக்கியம முதலிய பனுவல்களில் அமரர் என்ற சொல் வீரர் என்ற பொருளில் பயிலப்பெறவில்லை என்பதும் தேவர் என்ற பொருளில் பயிலப் பெற்றுள்ளது என்பதும் எண்ணற்பாலன.

இனி, அடுத்துச் சுட்டப்பெறும் பாடாண் பொருண்மை பற்றிக் காண்போம்.

புரைதீர் காமம் புல்லிய வகை

குற்றம் தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகை என்பர் இளம் பூரணர். புரைதீர் காமம் என்பது ஐந்திணை தழுவிய அக ஒழுக்கத்தைக் குறித்தது என்றார். ஆதலின், இல்லற வாழ்வில் இடம்பெறும் அருஞ்செயல்களும் பண்புகளும் பாடுதற்குரியன என்பது கருத்து. புரை என்ற சொல்லிற்கு நச்சினார்க்கினியர் உயர்ச்சிப் பொருள் கொண்டார். உயர்ச்சியுடைய காமம் என்பது மறுமைப் பயன் பற்றியது. இது கடவுள் வாழ்த்து முதலியவற்றால் சுட்டப் பெற்றது. உயர்ச்சி நீங்கிய காமமே இங்குக் குறிக்கப் பெற்றது என்று கூறி, இம்மையில் பெறும் பயன் கருதி,

இழிபொருள்களிற் செல்லும் வேட்கை என்று எழுதினார். இதுபற்றி வருவதும் பாடாண் பகுதி என்றார். இவர் கருத்து வலிந்து கூறப் பெற்றதாக உள்ளது.

எனின், பாரதியார் இளம்பூரணர் கருத்தையே வழிமொழிந்தனர்.

ஒன்றன் பகுதி

மேற்சுட்டப் பெற்றவற்றுள் ஒரு கூற்றின் பாகுபாடு பாடாண் திணையாதற்குப் பொருந்தும் என்பர் இளம்பூரணர். கொடிநிலை முதலிய ஆறும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல், காமப் பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இவ்விரு வகையினாலும் ஒருவனைப் புகழ்தல் பாடாண் பாட்டின் நோக்கம் ஆகும். மேலும், அன்பின் ஐந்திணைப் பகுதியில் ஊடற் பொருண்மை பாடாண் பகுதிக்கு ஒன்றும் (—பொருந்தும்) என்றும் கூறினார். ஆக இலக்கியத்தில் இயற்பெயர் சுட்டாது, நாடும் ஊரும் இதுவெனச் சுட்டிவரும் ஊரன், சேர்ப்பன், வெற்பன் என்ற பெயரினால் ஒரு கூறு (—ஒன்றன் பகுதி) குறிப்புப்பற்றி வருதலும் இதன்பாற் கருதப்படும் என்றார்.

நச்சினார்க்கினியர், மேற்பாடாண் பகுதியெனப் பகுத்து வாங்கிக் கொண்ட ஒன்றனுள், தேவரும் மக்களும் எனப் பகுத்த இரண்டனுள் தேவர்க்கு உரித்தாம் பகுதியெல்லாம் தொக்கு ஒருங்குவருதலை, 'ஒன்றன் பகுதி' சுட்டியது என்பர்.

பாரதியார், வெட்சி முதல் காஞ்சி ஈறாகிய புறத்திணை வாகை ஆறும் ஐந்திணைக் காதல் ஒன்றும்ஆகிய எழுவகைத் திணைகளில் இயல்பாக ஏற்புடைய ஒவ்வொன்றின் கூறே பாடாணாய் அமையும் என்று கருதினார்.

ஆதலின், ஒன்றன் பகுதியைத் தனியே எண்ணாது. அமரர்கண் முடியும் அறுவகை, புரைதீர் காமம் புல்லிய வகை, ஆகிய ஏழினை மட்டும் எண்ணி, அடுத்து வரும் நூற்பாவிற் சுட்டப்பெறும் 'செந்துறை வண்ணப் பகுதியை' எட்டாவதாக எண்ணி, பாடாண் பகுதி 'நாலிரண்டு' என்ற தொகைக்கு விளக்கம் கண்டனர். எனவே, பாடாணிற்குரிய செந்துறை வண்ணப்பகுதி பற்றி நூலும் உரைகளும் நுவலும் கருத்துக்களை நோக்குவோம்.

செந்துறை வண்ணப் பகுதியைச் சுட்டும், 'வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇ'' என்ற நூற்பா (80). ''இது, சில பொருட்கண் வரும் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று'' என்று இளம்பூரணரும், ''இது மேல் 'ஒன்றன் பகுதி என்புழித் தோற்றுவாயாகச் செய்த இருபகுதியுள் மக்கள் பகுதி கூறுகின்றது'' என்று நச்சினார்க்கினியரும் எண்ணினர். எனின் பாரதியார், ''இது, சில பாடாண் துறைகளில் இயற்பாவிடத்துப் பயிலும் இசைப்பா வகை கூறுகிறது'' என்று எழுதினார். பாடாண் துறைகள் பலவும் இயற்பாக்களினால் (—வெண்பா முதலியவை) பாடப் பெறுவன என்றும், ஒரு சில இசைப்பாக்களினால் (—வரிப்பாடல் போன்றவை) பாடுதற்குரியன என்றும் தொல்காப்பியர் கருதினார் என்பது பாரதியாரின் கருத்தாகும். பாடுபொருளுக்கு ஏற்ற யாப்பினை இச்சூத்திரம் கூறுகிறது என்று இவர் சிந்தித்தார். வெள்ளைவாரணனார், ''பாடாண் பகுதி எட்டினுள் கூறப்படாது எஞ்சிய ஒருசார் பொருட் பகுதியாகிய செத்துறை வண்ணப் பகுதியினைப் பகுத்து விளக்குகின்றது'' என்று தெளிந்தனர்.

எனவே, பாடாண் திணைக்கு உரிய எட்டாவது பகுதியை இந்த நூற்பா தெளிவுறுத்துவதாகக் கொள்ளுதல் பொருத்தம் ஆகும். செந்துறை வண்ணப்பகுதி என்ற தொல்காப்பியத் தொடர்க்கு அறிஞர்கள்கூறும் விளக்கங்களை முதலில் தொகுத்துக் காண்பது பயன் தரும்.

இளம்பூரணர், ''செந்துறைப் பாட்டின்கண் வரும் வண்ணப் பகுதி'' என்று பொருள் கண்டார். மேலும், ''தேவபாணியும் அகப்பொருள் பாடும் பாட்டும் இசைத்தமிழில் வரைந்து ஓதினாற் போலச் செந்துறைப் பாட்டிற்கு உரிய செய்யுள் இவை என்று உரைத்தல் இல்லை பாடாண் பாட்டின்கண் வருங்காலத்தென்பது. எனவே, எல்லாச் செய்யுளும் ஆம்'' என்று எழுதினார். தேவபாணி என்பது தெய்வத்தைப் பரவும் பாட்டு. இது ஒருவகை ஒத்தாழிசைக் கலியினால் பாடப்பெறும் என்று தொல்காப்பியர் செய்யுளியலில் வரையறுத்துக் கூறியுள்ளார். அங்ஙனம் பாடப்பெறுதலின், அதனைத் தேவர்ப்பராஅய ஒத்தாழிசைக் கலி என்றே கூறும் மரபு அக்காலத்தே தோன்றியது. அகப்பொருளைப் பாடுதற்குக் கலிப்பாவும் பரிபாடலும் ஏற்ற யாப்புக்கள் என்பது தொல்காப்பியரின் வரையறையாகும். அந்த வகையில், செந்துறைப் பாடாண் பாட்டு

நால்வகைப்பாக்களில் இன்னஇன்ன பாக்களினால் பாடப்பெறுதல் வேண்டும் என்று அவர் வரையறை செய்து கூறவில்லை. எனவே தான், எல்லாச் செய்யுளும் செந்துறைப் பாடாண் பாட்டாகப் பாடப்பெறுவன என்று இளம்பூரணர் கருதினார்.

நச்சினார்க்கினியர், ''செந்துறையாவது விகாரவகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப் போலாது. உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்'', என்று விளக்கம் கண்டனர். இவ் விளக்கத்தினால் ஓர் உண்மை புலன் ஆகிறது. அறுமுறை வாழ்த்து புனைந்துரை வகையால் அமைவது என்பதும் செந்துறை வாழ்த்து இயற்கைக்கும் நடைமுறைக்கும் பொருந்து மாறு ஒருவரின் சாதனைகளையும் சிறப்புக்களையும் உள்ளவாறு புகழ்வது என்பதும் நச்சினார்க்கினியரின் உள்ளக் கிடக்கை ஆகும். இங்ஙனம் இவர் எண்ணுதற்கு, ''வழங்கியல் மருங்கின் வகைபட நிலைஇ'' என்ற தொல்காப்பியத் தொடர் வழிகாட்டியது எனலாம்.

ஆயினும், வண்ணம் என்ற சொல்லிற்கு இவர் கூறும் வேர்ப் பொருள் சிந்திக்கத்தக்கது. வண்ணம் என்பது நிறத்தைக்குறிக்கும் தமிழ்ச் சொல் என்றும், இதுவே வடமொழியில் வருணம் என்று திரிபடைந்தது என்றும் குறித்தனர். இது ஒரு புதுமை. எனினும், இங்ஙனம் பொருள் கொள்வது நூற்பாவின் போக்கிற்கும் ஆசிரியர் நோக்கிற்கும் பொருந்துவதாகத் தோன்றவில்லை.

நச்சினார்க்கினியர் தம் காலத்து நிலவிய மற்றொரு கருத்தினை யும் குறித்துள்ளார். பரவல், புகழ்ச்சி, குறிப்பு முதலிய பாடாண் கூறுகள் செந்துறை மார்க்கத்து வண்ணப் பகுதியாகிய பாடல் பற்றி வரும் என்பதும், இவையே வெண்டுறை மார்க்கம் ஆகிய நாடகத்துள் அவிநயத்துக்கு உரியவாகி வரும் என்பதும் அவர் காலத்து வழங்கிய ஒரு கருத்தாகும். பாடல்துறை ஆகிய இசைத் துறைக்குரிய பாடலைச் செந்துறை மார்க்கம் என்றும், ஆடல் துறையாகிய நாடகத்துறைக்குரிய பாடலை வெண்டுறை மார்க்கம் என்றும் கூறுதல் மரபு.

பாடாண் பகுதியவாகிய பரவல், புகழ்ச்சி முதலியவற்றைச் செந்துறை, வெண்டுறை மார்க்கங்களினால் பாடுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர்க்குக் கருத்தாக இருப்பின், ஏனைய அறுவகைத் திணைக்கும் இன்ன மார்க்கத்தால் பாட வேண்டும் என்று வரையறுத்துக் கூறியிருத்தல் வேண்டுமே என்று நச்சினார்க்

கினியர் வாதிடுவர். இவ்வாதமே நாவலர் பாரதியார் புதிய உரை எழுதுவதற்கு வேண்டிய கருத்தினை வழங்கியது எனலாம்.

செந்துறையாவது இசைத் தமிழ்ப் பாட்டுவகை என்றும், வண்ணம் என்பது இசைக்குரிய ஓசை வேறுபாடு என்றும் விளக்கிய பாரதியார், ஏனைய திணைகளைப் போலவே பாடாண் திணையும் இயற்பாக்களால் பாடப்பெறும் என்றும், இங்குச் சுட்டப் பெற்ற பரவல், புகழ்ச்சி முதலிய கூறுகள் மட்டும் இசைப்பாக்களாலும் பாடப் பெறும் என்றும் தொல்காப்பியர் சுட்டியதாகத் தெளிவுறுத்தினார்.

எனவே பரவல், புகழ்ச்சி, குறிப்பு ஆகிய பாடாண் திணைக் கூறுகள் மூன்றும் செந்துறை வண்ணப்பாடல் ஆகிய இசைநலம் கெழுமிய பா வகையினால் பாடுதற்குரியன என்பது புலனாகும். வண்ணம் என்பது ஒலிநயம் என்பதும், தொல்காப்பியர் இருபது வண்ணங்களின் இயல்பினைச் செய்யுளியலில் சுட்டியுள்ளார் என்பதும் இங்கு இணைத்து எண்ணுதற்குரியன. ஜெர்மன் மொழியில் கூட வண்ணம் என்பது செய்யுளுக்குரிய சிறப்பியல்பாக எண்ணப் பெறுகிறது. அதனை, ''Painting with sounds'' என்று அம்மொழிவல்லார் கூறுவர்.

பதிற்றுப் பத்துப் பாடல்கள் பல்வகை வண்ணங்கள் அமைந்த செந்துறைப் பாடாண் பாடல்களாக அமைந்திருத்தல் இங்குச் சுட்டுதற்கு உரியது.

இனி, செந்துறை வண்ணப் பாடல்களுக்குரிய பொருட் கூறுகளாகிய பரவல், புகழ்ச்சி, குறிப்பு என்ற பாடாண் துறைகள் குறித்து உரையாசிரியர்களும் பிற்காலத்துத் தோன்றிய நூலாசிரியர்களும் வழங்கியுள்ள கருத்து விளக்கங்களைக் காண்பது தொல்காப்பியத்தினைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைசெய்யும். முதலில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் சிந்தனைகளைக் காண்போம்.

1. 2. பரவல், புகழ்தல்

பரவுதல் முன்னிலைக்கண்ணும் புகழ்தல் படர்க்கைக் கண்ணும் வரும் என்பது இளம்பூரணர் கருத்து. தொல்காப்பியர், 'தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே' (பொருள் நூ. 442) என்று கூறுதலின், பரவுதல் என்பது இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடுவது என்பது பொருத்தமான கருத்தே எனலாம். ஆயினும்,

சிலப்பதிகாரத்தில் படர்க்கைப் பரவலாகவும் சில பாடல்கள் காணப்பெறும். இப் பிற்காலத்து வழக்கினை நன்கு உணர்ந்த நச்சினார்க்கினியர், 'பரவல் முன்னிலைக்கண் பெரும்பான்மை வரும்' என்று குறித்தல் பாராட்டத்தக்கது. தேவர், மக்கள் ஆகிய இருவரைக் குறித்தும் இவை வரும். பரவலும் புகழ்ச்சியும் பாட்டுடைய தலைவன் கண்ணவாய்ப், பரிசில் பெறுதல் பாடுவான் கண்ணதாகலின் ஒருதலைக் காமம் ஆகிய கைக்கிளைக்குப் புறன் ஆயிற்று என்றும் அதற்கு இது புறம் ஆகிய பாங்கினையும் புலப்படுத்தினார்.

பரவல் என்பது வாழ்த்துதல் என்று பொருள் படும். பதிற்றுப் பத்தில் ''பைம்பொற் றாமரைப் பாணர்ச் சூட்டி'' (48) என்ற பாடலும், ''அட்டானானே குட்டுவன்'' (47) என்ற பாடலும் முறையே பரவுதல், புகழ்தல் ஆகிய பாடாண் கூறுகளுக்கு உரிய வண்ணச் செந்துறைப் பாக்கள் என்று பாரதியார் மேற்கோள் காட்டினார். குறிப்புவினை, வினைக்குறிப்பு என்று வருதல் போல், செந்துறை வண்ணம், வண்ணச் செந்துறை எனவரும். ஐயனாரி தனார், தொல். சுட்டிய பரவல்,புகழ்ச்சி என்பனவற்றை முறையே புகழ்ந்தனர் பரவல் (பு. வெ. மா. பாடாண். 231) என்றும், பழிச்சினர் பணிதல் (பு. வெ. மா. பாடாண் 232) என்றும் சற்று விரித்துச் சுட்டினார். உய்தி கருதிச் சிவபிரானை முன்னிலைக்கண் பரவும் பாடலை முதல்வகைத் துறைக்குப் பு. வெ. மா. காட்டும். படர்க்கைக்கண் இறைவனை ஏத்துவதாக இரண்டாவது துறைக் குரிய வெண்பா அமைந்துள்ளது.

புத்தமித்திரனார், பாடாண் துறைகளைக் கூறும் காரிகையில் (வீ. சோ. 104) புகட்சி, பரவல் என்பனவற்றை முதலில் சுட்டி யுள்ளார். புகழ்ச்சி என்ற சொல் புகட்சி என்று ஒலிமாற்றம் பெற்றது. இவ்வாறு மக்கள் வழக்கில் இடம் பெற்றிருக்கலாம். சோழர் காலக் கல்வெட்டுக்களில் இத்தகைய ஒலி மாற்றம் காணப் படுகிறது. பெருந்தேவனார், புகட்சியாவது புகழ் என்று குறித்த னர். பரவலாவது,

''எனவாங்கு,

ஆகலி லாங்கின் றடியினை பரவுதும்
பொலிதரு சேந்தன பொன்பற்றி காவலன்
மலர்தரு பார்மிசை மன்னுவோன் எனவே''

என்று வரும் புத்தரைப்போற்றும் ஒரு பாடற்பகுதியை உதாரணம் காட்டினார். முன்னிலைப் பரவலையே இவர் பரவல் என்று கருதினார்.

வைத்தியநாத நாவலர் புகழ்ந்தனர் பரவல், பழிச்சினர் பரவல் என்று ஐயனாரிதனாரைப் பின்பற்றிக் கூறினர் (நூ. 617). அவர் பாடிய வெண்பாக்களையே இவரும் மேற்கோள் காட்டினார்.

சாமி கவிராயர், ''கடவுள் வணக்கம், கடவுளை வணங்கிப் பயன் கூறும் கூற்று'' என்று இவ்விரு துறைகளையும் குறித்தனர்.

தொகுத்து நோக்கின், பரவல், புகழ்ச்சி என்பன முறையே முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களில் நிகழ்வன என்பதும், இவ்விரண்டிற்கும் தெய்வங்களே அன்றி, தெய்வத்தொடு வைத்து மதிக்கப்பெறும் செங்கோல் வேந்தன், சீர்திகழ்மாந்தன் ஆகியவரும் உரியர் என்பதும் தெளிவாகும்.

இனி, 'முன்னோர் கூறிய குறிப்பு' என்னும் பாடாண் திணைக்குரிய பொருளைக் காண்போம்.

3) குறிப்பு

இளம்பூரணர், 'முதலாசிரியர் கூறிய காமக் குறிப்பினும்' என்று பொருள் கண்டார். 'முன்னோர்' என்ற சொல் தொல்காப்பியர்க்கு முன்னர் புறத்திணைப் பொருள் இலக்கணம் எழுதிய ஆசிரியர்களைக் குறித்தது. அவர்களால் சுட்டப்பெற்ற பாடாண் துறை காமக்குறிப்பு என்பது, ''காமப்பகுதி கடவுளும் வரையார்'' என்று தொடர்ந்து வரும் நூற்பாவினால் தெளிவுறுத்தப் பெற்றது என்று எண்ணினார். கடவுள் மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பகுதியும் மானிடப் பெண்டிர் நயந்த பகுதியும் குறிப்பு என்ற பாடாண் திணைக்கு உரிய பாடற் பொருள்கள் என்பது இளம்பூரணர் கருத்து. இவ்விருவகைக்கும் பு. வெ. மா. வெண்பாக்களையே இவர் மேற்கோள் காட்டினார். தெய்வம் மானிடப் பெண்ணை நயந்த பகுதியையும் நச்சினார்க்கினியர் அந்நூற்பா உரையில் சுட்டினார்.

'குறிப்பு' என்பதற்கு நச்சினார்க்கினியர் வேறுபட்ட விளக்கம் தருகிறார். அறம், பொருள், இன்பம் பயப்பச் செய்த செய்யுளைக் கேட்டோர்க்கும் அஃது உறுதி பயத்தலைக் குறித்துச் செய்தலின், குறிப்பு என்று தொல்காப்பியர் சுட்டினார் என்பது அவர் கருத்து.

புறநானூற்றில், ''உண்டா லம்ம இவ்வுலகம்'' எனவரும் பாடலைக் குறிப்பிற்கு உதாரணம் காட்டினார்.

பாடாண் திணைக்குரிய மூன்றாவது துறையாகக்குறிப்பினைப் புத்தமித்திரனார் எண்ணினர் (104). பெருந்தேவனார், ''நன்மை வேண்டின் தெய்வத்தை வழிபடும் என்பது'' என்று உரை எழுதினார். இப்பொருள் பரவல், புகழ்ச்சி ஆகிய முற்கூறிய துறைகளினால் பெறப்படுதலின், குறிப்பு என்பதற்கு இவர் எழுதிய உரை தெளிவாக இல்லை. அன்றியும், தெளிவாக எழுதிய உரைப் பகுதி நமக்குக் கிடைக்கவில்லை என்று கருதலாம்.

ஏனைய நூல்களில் ''குறிப்பு'' என்ற பெயரில் இத்துறை இடம் பெறவில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இனி, 'காமப்பகுதி கடவுளும் வரையார்'என்ற நூற்பாவிற்கு இளம்பூரணர் கண்ட உரை விளக்கம் முன்பு எடுத்துக் காட்டப் பெற்றது. அப்பகுதி, ''கடவுள் பக்கத்தும் ஏனோர் பக்கத்தும், மடவரல் மகளிர் நயந்த பக்கமும்'' என்ற பு. வெ. மா. சுட்டிய துறைகளை அடிப்படையாகக் கொண்டது என்பது இங்குக் கூறுதற்கு உரியது. நச்சினார்க்கினியர் திருமுறைகளையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தையும் நன்கு பயின்றவர். ஆதலின், இப் பத்திப் பனுவல்களில் நாயகன் நாயகி பாவத்தில் இடம்பெறும் காதலையும் (Bridal Mysticism) இந்நூற்பா சுட்டுவதாக விளக்கம் கண்டார். இதனை,

> ''இன்னும் பகுதி என்றதனானே எழுதிணைக்குரிய காமமும், ''காமம் சாலா இளமையோள்வயிற்' காமமும் அன்றி இது வேறொரு காமம் என்று கொள்க''.

என்று இடம்பெறும் அவர்உரை உய்த்துணரச்செய்கிறது. ஆயினும், இறைவனை இங்ஙனம் பாடும் மரபு பத்தி இலக்கியம் எழுந்த காலத்தில் காணப்பெறுவதாலும் பழைய சங்கப் பாக்களில் காணப் பெறாமையானும் தொல்காப்பியர் கருத்தினை நச்சினார்க்கினியர் உணர்ந்து கூறியதாகத் தோன்றவில்லை.

இனி, குழவிப்பருவத்தும், காமப்பகுதி பாடப்பெறுதல் பற்றிய தொல்காப்பிய நூற்பாவிற்கு வழங்கப்பெறும் விளக்கம் காண்போம்.

குழவிப்பாடாண்

பாடாண் திணைக்குரிய காமப்பகுதி குழவிப் பருவத்தும் கூறப் பெறும் என்ற கருத்தில்,

''குழவி மருங்கினும் கிழவ தாகும்'' (நூ. 82)

எனவரும் தொல்காப்பிய நூற்பா அமைந்துள்ளது. இதனைப் பு. வெ. மாலையில்,

''மாதர் மகிழ்ந்த குழவியும்'' (நூ. 9 : 30)

என்று ஐயனாரிதனார் குறித்தனர். இதற்குரிய கொளு,

''இளமைந்தர் நலம்வேட்ட
வளமங்கையர் வகையுரைத்தன்று'' (238)

என்று அமைந்துள்ளது. குழவிப்பருவத்து மைந்தரின் பொலிவினால் ஈர்க்கப்பெற்ற எந்திழையார் அவரை விரும்புவதாகப் பாடப் பெறும் பாடாண் பகுதியை இத்துறை சுட்டியது. இளம்பூரணர், ''வரிப் பந்து கொண்டொளித்தாய்'' என்ற பு.வெ.மா.உதாரணச் செய்யுளை மேற்கோள் காட்டியிருத்தல் காணத்தக்கது. விளையாட்டு மகளிரொடு அம்மைந்தர் பொருந்திய பொழுது இத்தகைய காமப்பகுதி தோன்றும் என்பதும் அவர் கருத்து. பு, வெ. மாலையினை இலக்கண விளக்கமும் பின்பற்றியுள்ளது.

இந்நூற்பா பிற்காலத்தில் பெருகிய பிள்ளைத்தமிழ் என்னும் பாடாண் பிரபந்தத்திற்குரிய இலக்கணத்தைக் கூறுவதாக நச்சினார்க்கினியர் எண்ணினார். அவர் உரைப்பகுதி இதுவே :

''மருங்கு என்றதனான் மக்கட்குழவியாகிய ஒருமருங்கே கொள்க.தெய்வக்குழவி இன்மையின் இதனை மேலவற்றோ டொன்றாது வேறு கூறினார். தந்தையரிடத்தன்றி ஒரு திங்களிற் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலானும், பாராட்டுமிடத்துச் செங்கீரையும் தாலும் சப்பாணியும் முத்தமும் வரவுரைத்தலும் அம்புலியும் சிற்றிலும் சிறுதேரும் சிறுபறையும் எனப் பெயரிட்டு வழங்குதலானும் என்பது''.

இப்பருவங்கள் அனைத்தும் அமைத்துப் பாடும் மரபு சங்க காலத்தில் எழவில்லை. ஒருசில கூறுகள் சங்கப்பாக்களில் உள்ளன. ஆதலின், அவர் உரையில் உண்மை இல்லை எனில் ஒவ்வாது.

குழவிக்குக் காதல் உணர்வு இல்லை. எனின், அந்தக் குழவி யின்பால் தூய நேயம் கொண்டார், அன்புப் பெருக்கின் காரண மாகக் கூறும் பாடாண் பகுதியை இந்நூற்பா சுட்டியதாகப் பாரதியார் கருதினார்.

உலாப் பாடாண்

தொல்காப்பியர்,

> ''ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
> வழக்கொடு சிவணிய வகைமை யான'' (நூ. 83)

என்று கூறும் நூற்பா பிற்காலத்தில் தோன்றிய உலா என்னும் இலக்கிய வகைக்கு வித்து என்று எண்ணுவர்.

வழக்கொடு பொருந்தி நடக்கும் வகைமையின்கண் ஊரின்கண் காமப்பகுதி தோற்றம் கொள்ளுதலும்உண்டு என்பர் இளம்பூரணர் மேலும்.

> ''ஊரொடு தோற்றம் என்பது பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக வருவது. 'வழக்கு' என்பது சொல்லுதற்கு ஏற்ற நிலைமை. 'வகை' என்பது அவரவர் பருவத்திற்கு ஏற்கக் கூறும் வகைச் செய்யுள் ''

என்று கூறி, ''உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க'' என்றும் எழுதினார். செய்யுளியல் உரையில் இவர் பதினோராம் திருமுறை யில் இடம்பெறும் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையி லிருந்து கட்டளைக் கலித்துறைக்கு இருபாடல்களை மேற்கோளாக எடுத்தாண்டவர் என்பதால், அதே திருமுறையில் உள்ள திருக் கைலாய ஞானஉலா எனப்படும் ஆதிஉலாவினையும் அறிந்தவ ராதல் வேண்டும். அங்ஙனம் இருந்தும், ''உதாரணம் வந்தவழிக் காண்க' என்றது இடைச் செருகலாக இருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது.

இந்த நூற்பாவினை நச்சினார்க்கினியர் இருகூறாகப் பிரித்தனர். முதற்பகுதிக்கு இளம்பூரணர் கூறிய உரையினைத் தழுவி விளக்கம் கண்டார். ''ஊரிற் பொதுமகளிரோடு கூடிவந்த விளக்கமும் பாடாண் திணைக்கு உரியது'' என்று கூறி, ''அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச்செய்யுளாம்' என்று தெளிந்தனர்.

நச்சினார்க்கினியரின் உரைக்குறிப்புக்களினால் ஓர் உண்மை புலனாகிறது. இடைக்காலத்தில் முழு வடிவத்துடன் வளர்ச்சி பெற்று விளங்கும் இலக்கிய வகைகள் ஆகிய பிள்ளைத்தமிழ், உலா என்பன திடீர் என்று தோன்றிவிடவில்லை. அவற்றுக்கு மூலக் கூறுகள் மேற் சுட்டிய தொல்காப்பிய நூற்பாக்களினால் அறியப் பெறுவன என்பது தெளிவு.

ஐயனாரிதனார், ''ஊரின் கண்ணே தோன்றிய காமப்பகுதி'' என்று சுட்டினார் (9 : 30-31). எனின், உலாப்பிரபந்தத்தை அவர் கருதவில்லை. ''நீங்காக் காதல் மைந்தரும் மகளிரும், பாங்குறக் கூடும் பதிஉரைத் தன்று'' என்று கொளு கூறுதல் காணலாம். அன்புடைய தலைவனும் தலைவியும் மெய்யுறு புணர்ச்சி மேற்கொண்ட ஊரில் சிறப்பினைக் குறிப்பது இத்துறை. அத்தகு ஊரில் அவர் இருவரிடம் தோன்றிய காமப்பகுதியைக் கூறுதல் இத்துறைக்குரிய பொருளாகும்.

வைத்தியநாத நாவலரும் இவரை அடியொற்றி இத்துறையினைக் கூறினார். பாரதியார், தலைமக்களின் ஊர்ச்சிறப்பும் குடிச்சிறப்பும் கூறுதலை, 'ஊரொடு தோற்றம்' என்ற நூற்பாவின் பொருளாகக் கூறினார். இவ்வாறு உரை கூறுதற்கு, ''இச்சூத்திரத்திற்குத் தலைவர் பிறந்த ஊரும் அவர் பிறப்பும் என்று பொருள்கூறின், மரபியற்கண்ணே 'ஊரும் பெயரும்' என்னும் சூத்திரத்தை ஊர் பெறுதலானும் ... ...கூறியது கூறலாம் என்றுணர்க'' எனவரும் நச்சி. உரையே அடிப்படை எனலாம்.

நச்சினார்க்கினியர்,

'வழக்கொடு சிவணிய வகைமை யான'

என்பதைத் தனி நூற்பாவாகக் கொண்டனர். கடவுள் வாழ்த்தும் அறுமுறை வாழ்த்தும் முதலாக ஊரொடு தோற்றம் ஈறாகக் கூறப்பெற்ற துறைகள் யாவும் புலனெறி வழக்குடன் பொருந்தி வருதலை இந்த நூற்பா சுட்டியது என்று எண்ணினார்.

புலனெறி வழக்கிற்கு வேறாகச் செய்யுள் செய்தலை இந்த நூற்பா ஏற்றுக் கொள்ளாது என்பது அவர் கருத்து. ''புத்தர், சமணர் முதலியோரரையும் கூறப்படாது'' என்று எழுதினார். சமண மூல நூல்களைப் பயின்று சீவக சிந்தாமணியாகிய சமணக் காப்பியத்திற்குப் பேருரை எழுதியிருப்பினும், வைதீகப் பிடிப்பினின்றும் அவரால் விடுபட முடியவில்லை என்று தோன்று

கிறது. அல்லது, தொல்காப்பியர் நூல் எழுதிய காலத்தில் இப்புறச்சமயங்கள் தமிழகத்தில் தலைமைபெறவில்லை என்று கருதவும் இடம் உண்டு.

பிற்காலத்துப் பாட்டியல் நூல்கள் பகரும் தசாங்கம் என்ற இலக்கிய வகையினையும் இந்தப் புறனடை நூற்பாவின் உரையில் கொண்டு வருகிறார் நச்சி:

"இன்னும் 'சிவணிய வகைமை' என்றதனானே முற்கூறிய வற்றோடே நாடும் ஊரும் மலையும் யாறும் படையும் கொடியும் குடையும் முரசும் நடைநவில் புரவியும் களிறும் தேரும் தாரும் பிறவும் வருவன எல்லாம் கொள்க".

இப்பகுதியில் பன்னிரு உறுப்புக்கள் குறிக்கப்பெறினும், இவை இறைவன் அல்லது அரசனுக்குரியவையாகத் தசாங்கத்தில் இடம் பெறுதல் காணலாம். இவ்வுறுப்புக்களில் சில குறைந்து வருதல் சின்னப்பூ என்னும் பிரபந்தம் ஆகும். இதனையும் அறிந்த நச்சினார்க்கினியர்,

"இவற்றுள் சிலவற்றை வரைந்துகொண்டு சின்னப்பூ என்று பெயரிட்டு இக்காலத்தார் கூறுமாறு உணர்க"

என வரைதல் எண்ணற்பாலது.

பாடாண் திணைக்குரிய துறைகள் பிற்காலத்தில் எழுந்து பல்கிய இலக்கிய வகைகள் பலவற்றிற்கு வித்தாகவும் வேராகவும் விளங்குகின்றன என்பதில் ஐயம் இல்லை.

காமப்பகுதி பற்றிய பாடாண் திணைக்குரிய தலைமக்களின் இயற்பெயர் இடம்பெறுதலைத் தொல்காப்பியர் பழைய மரபாகவே குறித்துள்ளார். (புறத். 84).

4. கடவுள் வாழ்த்தொடு வருவன

இனி, கடவுள் வாழ்த்தொடு பொருந்திவரும் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றினையும் குறித்து இலக்கண ஆசிரியர் கள் கூறும் பொருளையும் விளக்கத்தையும் காண்போம்.

இளம்பூரணர்

குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய கொடிநிலை முதலாக சொல்லப்பட்ட முற்பட்ட மூன்றும் பாட்டுடைத் தலைமகனை

சார்த்தி வருங்காலத்து கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும் என்று பொருள் கண்டார் இளம்பூரணர். (புறத். 85).

கொடிநிலை என்பது வேந்தனின் கொடிச் சிறப்பினைக் கூறும் பாடாண்திணைத் துறை ஆகும். அங்ஙனம் கூறும்பொழுது, இறைவனின் கொடியைப்போல் வேந்தனின் கொடி விளங்குக என்று வாழ்த்துவதாக அமைதல் வேண்டும். இத்துறைக்குப் பு. வெ. மாலையில் பாடாண்திணைப் பகுதியில் இடம்பெறும் கொடிநிலை என்னும் துறைக்கு உரிய ''பூங்கண் நெடுமுடி'' என்ற பாடலையே இளம்பூரணர் எடுத்துக்காட்டினார்.

கந்தழி என்ற துறையினை இவர் விளக்கவில்லை. பு. வெ. மாலையில் உழிஞைப்படலத்திலும் (101), பாடாண் படலத்திலும் (228) கந்தழி என்ற துறை காணப்படுகிறது. இவ்விரண்டினுள், முன்னதற்கு உதாரணம காட்டப்பெறும், ''அன்றெறிந்தானும் இவனால்'' என்ற பாடலையே கந்தழிக்கு இலக்கியமாக இளம்பூரணர் எடுத்துக் கூறினார். பின்னதற்கு உதாரணமாக வருவது ''மாயவன் மாயம் அதுவால்'' என்ற பாடலாகும். இரண்டுமே அசுரர்க்குரிய சோ என்னும் அரணை அழித்த திருமாலின் வீரத்தினைச் சிறப்புறக் கூறுவனவாகும். இவ்விரு உதாரண வெண்பாக்களின் வெளிச்சத்தில், கந்தழி என்ற சொல்லின் வேர்ப்பொருளைக் காண்பது தக்கது. கந்து—பற்றுக் கோடு, அரண், அழி—அழிவு. எனவே, பகைவர்க்குரிய அரணை அழித்த வேந்தனின் சிறப்பினைக் கூறுதல் கந்தழி என்னும் துறைக்குரிய பொருளாகும். அங்ஙனம் கூறுமிடத்து, திருமால் சோ அரணை அழித்ததுபோல் இவ்வேந்தனும் பகைவரின் அரணை அழித்தான் என்று இயைபு படுத்திக் கூறுதல் வேண்டும் என்பது கருத்து. அரண் பேசப்படுதலால் இத்துறை உழிஞைத் திணைப் புறத்துப் பிறந்த பாடாணாகக் கொள்ளுதற்குரியது என்று இளம்பூரணர் எண்ணி, அப்படலத்தில் பேசப்படும் கந்தழிக் குரிய பாடலை எடுத்துக் காட்டினார் என்று தோன்றுகிறது.

'வள்ளி' என்ற துறைக்கும் இவர் விளக்கம் கூறாது, ''வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்தவழிக் கண்டு கொள்க'' என்று எழுதிவிட்டார். முன்னிரு துறைகளுக்கும் பு. வெ. மாலையினை மேற்கோள் காட்டிய இவ்வுரையாசிரியர், இந்தத் துறைக்கு அந்த நூலில் உதாரணம் இருந்தும் எடுத்துக் கூறாது விட்டது புதிராக உள்ளது.

இனி, கொடிநிலை முதலிய மூன்றற்கும் நச்சினார்க்கினியர் கூறும் விளக்கத்தைக் காண்போம்.

நச்சினார்க்கினியர்

கொடிநிலை என்பது கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் ஆகிய ஞாயிற்றைக் குறிக்கும். கந்தழி என்பது ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருளைக் குறிக்கும். வள்ளி என்பது தண்கதிர் மண்டிலம் ஆகிய திங்களைச் சுட்டும். இம் மூன்று தெய்வமும் (—ஞாயிறு, பரம்பொருள், திங்கள்) முற்கூறப்பெற்ற அமரரொடு கருதுமாற்றால் தோன்றும் என்றார். தம் கருத்திற்கு இலக்கியச் சான்றுகள் சிலவற்றை வலிந்து கூறினார்.

எனின் கொடிநிலை, வள்ளி என்ற சொற்களுக்கு முறையே ஞாயிறு, திங்கள் என்ற பொருள் இலக்கியத்தில் எங்கும் காணப் படவில்லை. இவ்விரண்டையும் குறிப்பதே ஆசிரியர் கருத்தாக இருப்பின், ''ஞாயிறு திங்கள் சொல் என வருஉம்'' என்று கிளவி யாக்கத்தில் கூறியதுபோல் வெளிப்படையாகவே இங்கும் கூறி யிருப்பார். கந்தழி என்பதற்கும் இவர் கூறும் பொருள் பிற்காலத்து வளர்ச்சிபெற்ற ஒரு கருத்தின் தாக்கமாகவே தெரிகிறது. தத்துவம் கடந்த பரம்பொருட்கொள்கை திணைத்தெய்வம்பற்றிப் பேசப்படும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றதாகத் தோன்றவில்லை. அன்றி யும், அத்தகைய மேனிலைக் கடவுள், மீண்டும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும் என்று கொள்வது பொருள் பொருத்தம் உடைய தாகத் தெரியவில்லை. எனவே, நச்சினார்க்கினியர் கூறும் பொருள் விளக்கம் இளம்பூரணர் கூறுவதிலிருந்து விலகிச் செல்வதுடன் நூலாசிரியர் நோக்கத்திலிருந்தும் விலகிச் செல்வதாகத் தோன்று கிறது.

பாரதியார்

இவர் 'கந்தழி' என்பதற்குப் பதிலாகக் காந்தள் என்ற பாடம் கொண்டார். இவரே இப்பாடத்தைப் படைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. கொடிநிலை, காந்தள். வள்ளி என்பன மூன்றும் வெட்சிப் படாணாகவரும் முதல் மூன்று துறைகள் ஆகும். நிரை கருதிச் செல்லும் வெட்சிப்போரில் கொடி எடுத்து முன் செல்லுதல் கொடிநிலை என்னும் துறை என்றார். இதற்கு

''புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும் காலைக்
கொள்ளும் கொடிஎடுத்துக் கொற்றவையும் கொடுமரமுன்
சொல்லும் போலும்''

என்று சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் இடம்பெறும் பாடலை எடுத்துக் காட்டினர்.

காந்தள் முருகக் கடவுளுக்குரிய மலராதலின், போர்தொடங்கு முன் அப்பெருமானை வாழ்த்துதல் காந்தள் என்ற பாடாண் துறை என்றார்.

முருகனைப் பெண்டிர் பாடிப்பரவும் வெட்சிவகை வள்ளி என்று வழங்கப்பெறும் என்பது பாரதியார் எண்ணம்.

இவர்தரும் விளக்கங்கள் யாவும் அவர்தம் கற்பனைக் கருத்துக் களாக இருப்பதாலும், இலக்கண இலக்கிய வழக்கில் அவற்றுக்கு ஆதரவு காணப் பெறாமையாலும் ஏற்பதற்கு அறிஞர்கள் தயங்குவர்.

மறைமலையடிகள்

நச்சினார்க்கினியர் கொடிநிலை, வள்ளி என்பனவற்றிற்குக் கொள்ளும் ஞாயிறு, திங்கள் என்ற பொருளை இவர் ஏற்றுக் கொள்கிறார். கந்தழி என்பது தான்பற்றி நின்றதனை அழிக்கும் தீ என்று பொருள் கண்டார். ஆதலின் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பன மூன்றும் முத்தீவழிபாட்டினைக் குறிக்கும் என்றார். வடமொழிவாணர் சுட்டும் முத்தீவழிபாட்டின் வேறுபட்டதாய்த் திகழும் இது தமிழர்களினால் பின்பற்றப்பட்டது என்பது இவர்தம் கருத்து. இது சிந்திக்கத்தக்கது.

ரா. இராகவையங்கார்

தொல்காப்பியர் படிம வழிபாட்டினை உடன்பட்டவர். அப் படிமைகள் எழுந்தருளியிருக்கும் கோயில்களின் முன்றிலில் நாட்டப் பெற்ற கொடிக் கம்பத்தையும் அக்கம்பத்தின் உச்சியில் அவ்வத் தெய்வங்கட்குரிய ஊர்திகளைக் கிழியில் எழுதிய கொடியையும் அக் கம்பத்தோடு அக்கொடியைப் பிணிக்கும் கயிறாகிய வள்ளியையும் கொடிநிலை முதலிய இம்மூன்றும் முறையே குறிப்பன என்றார்.

இவர் கருத்து வலிந்து கூறப்பெற்றது என்று தோன்றுகிறது.

மு. இராகவையங்கார்

கொடிநிலை மேகத்தையும், கந்தழி பற்றறுத்த நீத்தாரையும், வள்ளி வண்மை பற்றிச் செய்யப்பெறும் அறத்தையும் குறிப்பன என்றார் இவர். இவை மூன்றும் கடவுள் வாழ்த்தொடு வரும் என்று தொல்காப்பியர் கருதினார் என்றும், இவர் வழியில் திருவள்ளுவர் பாயிரத்தின் முதல் நான்கு அதிகாரங்களையும் முறையே கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்று அமைத்துக் கொண்டார் என்றும் கருதினார். இக்கருத்து வள்ளுவர்க்கு ஏற்புடையது என்றால், தெளிவாகவே கொடிநிலைச் சிறப்பு, கந்தழிப் பெருமை, வள்ளி வலியுறுத்தல் என்று அதிகாரப் பெயர்களை அமைத்துக் கொண்டிருப்பர். அங்ஙனம் அமையாமையின், மு. இரா. அவர்களின் சமற்காரமாகவே இவ்விளக்கம் காணப்படுகிறது.

உ. வே. சாமிநாதையர்

1) கொடிநிலை-அரி, அயன், அரன், என்ற மூவர் கொடியுள் ஒன்றோடு உவமித்து வேந்தன் கொடியைப் புகழ்வது.

2) கந்தழி—திருமால் சோவரணம் அழித்த வெற்றியைச் சிறப்பிப்பது.

3) வள்ளி—வெறி என்னும் கூத்தை ஆடியது.

இவை மூன்றும் பு. வெ. மாலையில் கூறப்பெற்றவை ஆகும்.

தி. சு. பாலசுந்தரம் பிள்ளை

1) கொடிநிலை—கீழ்த்திசை

2) கந்தழி—பற்றுக் கோட்டினை அழிப்பது

3) வள்ளி—வழங்குவது

இவர் கருத்து ஒருவகையில் நச்சினார்க்கினியர் உரையினைத் தழுவியது எனலாம்.

க. வெள்ளைவாரணனார்

பகைவரை வென்றுயர்த்த கொடியின் சிறப்பினைக் கூறுவது கொடிநிலை. அவர்தம் அரணை அழித்த வெற்றித் திறத்தினைப்

பாடுவது கந்தழி. அஞ்சா நெஞ்சுரத்துடன் ஆண்மை விளைத்த வீரர்க்கும் பரிசிலர்க்கும் வரையாது வழங்கும் வண்மையே வள்ளி என்று விளக்கினார். வள்ளி என்பது வேந்தர்க்கு வெற்றி வேண்டிப் பாடி ஆடும் கூத்தினையும் குறிக்கும் என்று இவரே பிறிதோர் இடத்தில் சுட்டினர்.

பெரும்பாலும் ஐயனாரிதனார், இளம்பூரணர் ஆகியோர் கூறிய கருத்துக்களையே மேலும் தெளிவு செய்துகூறுதல் இவர்தம் இயல்பு. இவர் கருத்து கூடுதலான பொருத்தம் வாய்ந்ததாகத் தோன்றுகிறது.

ஏனைய நூல்களில்

ஐயனாரிதனார் கொடிநிலை, கந்தழி, வள்ளி (227, 228, 229) என்ற பாடாண் துறைகளை நிரல்படக் கூறினார். எனின், கடவுள் வாழ்த்து என்பதனையும் ஒருதுறையாகக் கொண்டு, பாடாண் படலத்தின் மூன்றாவது துறையாக (191) அமைத்துக் கூறினார். இத்துறைக்கு, ''காவல் கண்ணிய கழலோன் கைதொழும், மூவரில் ஒருவனை எடுத்துரைத்தன்று'' என்பது கொளு. நிலம் ஆளும் வேந்தனால் வணங்கப்பெறும் மூவருள் ஒரு தெய்வத்தின் சிறப்பினை உரைப்பது இத்துறை என்றார்.

வீரசோழியத்தில் இம்மூன்று துறைகளும் சுட்டப்பெற்றன (நூ. 104). இதன் உரையாசிரியர்,

> ''கொடிநிலையாவது, கொடியது தன்மை கூறுவது. கந்தழி யாவது செருவில் தெட்பம் உடைமை. வள்ளியாவது முருக வேளைக் குறித்தது''.

என்று விளக்கம் கூறினார். கந்தழிக்கு இவர் கூறும் பொருள் புதிதாக உள்ளது.

இலக்கண விளக்கம் பு. வெ. மாலையினை அடியொற்றி இம் மூன்றிற்கும் இலக்கணம் கூறுதல் எண்ணற்பாலது.

சுவாமிநாதத்தில் இவை நிரலே கூறப்படவில்லை. கொடியின் சிறப்புரைத்தல் காணப்படுகிறது (நூ. 145).

இனி, வஞ்சிப் பாடாணாக வரும் கொற்றவள்ளை பற்றித் தொல்காப்பியரும் பிறரும் கூறும் கருத்துக்களைத் தொகுத்து நோக்குவோம்.

5. கொற்றவள்ளை — இருவகை

வஞ்சித்திணைக்குரிய துறைகளில் ஒன்றாகச் சுட்டப்பெற்ற கொற்றவள்ளை பாடாண் திணைக்கு உரியதாகவும் வரும் (நூ. 86). "சந்து கூறுதல் கருத்தாயின் வஞ்சியாம்; புகழ்தல் கருத்தாயின் பாடாண் திணையாம்" என்று இத்துறை இருவகைத் திணைக்கும் உரிமையுடைய திறத்தினை இளம்பூரணர் விளக்கினார்.

வஞ்சித்திணைக்குரிய துறைகளை எண்ணுமிடத்து இதனை, "குன்றாச் சிறப்பிற் கொற்றவள்ளை" என்று தொல்காப்பியர் சுட்டினார். வள்ளை என்பது வள்ளைப்பாட்டு (—உரல் பாட்டு). வேந்தனது குறைவிலா வெற்றி மேம்பாட்டினால் பகைவர் நாடு அழிதற்கு இரங்கித் தோற்றோனை விளங்கக் கூறும் வள்ளைப் பாட்டு என்று நச்சினார்க்கினியர் தெளிவுறுத்தினார். ஐயனாரி தனார், "குற்றமில் சிறப்பிற் கொற்ற வள்ளை" (3:4) என்று தொல்காப்பியத் தொடரினை அடியொற்றியே வஞ்சித்திணைக் குரியதாக இத்துறையினைக் குறித்தனர். எனின், இவர் இத்துறை பாடாணாதற்குரிய நிலையினைக் குறிப்பிடவில்லை.

வெட்சி முதல் வஞ்சி ஈறாகிய பாடாண் கொற்றவள்ளை தேவர் பகுதிக்கு வாராது என்பதும், மக்கட் பகுதிக்கு மட்டுமே அமையும் என்பதும் உழிஞை முதலிய பாடாண் கொற்ற வள்ளை இருசாராருக்கும் ஒப்ப உரியது என்பதும் நச்சினார்க்கினியரின் கருத்து.

பாரதியார், வஞ்சிவகைக் கொற்றவள்ளை பாடாணாங்கால் ஒரோவிடத்து மட்டும் கடவுள் வாழ்த்தைத் தழுவி வரும் என்றார். வள்ளைப்பாடாணுக்கு,

> "நேரார் நிலம்அழிய நீள்மதிலூர் தாம்எரியப்
> போர்மேல் வழுதிபடை போவதற்குக்—கார்குறுதும்
> நெற்றி விழியோனை நேர்ந்தவன்தாள் பாடுதும்நாம்
> கொற்றத் தரவுலக்கை கொண்டு".

என்ற பாடலை எடுத்துரைத்தனர்.

இதுகாறும் எட்டு நூற்பாக்களில் (நூ. 79-86) பாடாண் திணைக்குரியனவாக இடம்பெறும் பொருண்மை பற்றித் தொல் காப்பியர் கூறிய கருத்துக்களையும் அவற்றுக்கு உரையாசிரியர் கள் வழங்கிய விளக்கத்தையும் கண்டோம். இனி, பாடாண்

திணைக்கு உரியனவாகத் தொகுத்துக் கூறும் இருநூற்பாக்களில் (புறத். 87, 88) இடம்பெறும் துறைகளைப் பற்றி ஒவ்வொன்றாக நோக்குவோம். முதலில் 87 ஆம் நூற்பாவில் சுட்டப்பெறுவன வற்றை ஆராய்வோம்.

6. பாடாண்திணைத் துறைகள்

1) கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்

பண்டைக்காலத்தில் கவிஞர்கள், பல்வேறு கலைஞர்கள் முதலியோரைப் பேணும் பொறுப்பு வேந்தர், வேளிர், தலைவர்கள் முதலிய புரவலர்களுக்கு உரியதாயிற்று. கலை வளர்ச்சிக்கும் கவிதை வளர்ச்சிக்கும் புரவலர்கள் பெரும்பொருள் வழங்கி ஆதரித் தனர். நன்றியைப் புலப்படுத்தும் பாங்கில் புரவலரைப் போற்றுதல் இரவலராகிய புலவர் முதலியோர்க்கு உரியதாயிற்று.

பிறர்க்கு ஈவோரைப் பிறரின் உயர்த்துக் கூறி, ஈயாதாரை இழித்துக் கூறுதல் பாடாண்திணைக்கு உரிய முதல் துறையாக எண்ணப்பெற்றது. பிறரை இழித்துக் கூறுதல் சான்றோர்க்குத் தக்கது அன்றுதான். எனினும், நன்மக்கள் பயன்பட வாழ்தலும், தீயோர் பிறர்க்குச் சிறிதும் பயனின்றி வாழ்தலும் கூறக்கேட்டு, ஏனையோரும் பயன்பட வாழ்தலை விரும்புவர் என்ற காரணத் தினால் கொடுப்போரை ஏத்திக் கொடாரைப் பழித்தலும் சான்றோர்க்குத் தக்க செயலாகவே கருதப்பெற்றது என்பர் நச்சினார்க்கினியர். பரிசிலர்க்கு நிரந்தரச் சம்பள முறை அக்காலத்து இல்லாத காரணத்தால் பொருள் வசதி படைத்தவர் கள் அவர்களைக் காக்க முன்வருதல் வேண்டும் என்று எதிர் பார்க்கப்பெற்றனர். வாராக்கால், அவர்கள் தம் எதிர்ப்புக் குரலைக் கண்டனப் பாடல்களின் வழியே புலப்படுத்துதல் மரபு. புலவரால் பாடப்பெறுதலையே புகழாகக் கருதிய சமுதாயத்தில் இத்துறை, புலவர்களுக்கு ஒரு கவசமாகப் பயன்பட்டது எனலாம். இத்துறையினை,

1) கொடுப்போரை ஏத்துதல்
2) கொடாரைப் பழித்தல்
3) கொடுப்போரைப் பாராட்டிக் கொடாதாரை இகழ்தல்

என்று மூன்று வகையாகப் பகுத்துக் கூறுவர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆவர். புறநானூற்றுப் பாடல்கள் பல இத்துறைகளுக்கு ஏற்ற இலக்கியமாகத் திகழ்தலைக் காணலாம்.

பாரதியார், 'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல்' என்ற குறளில் இடம் பெறும் கற்றறிதல் என்ற தொடரைக் கற்றலும் அறிதலும் என்று பிரித்து எண்ணியிருத்தலை எடுத்துக் காட்டி, கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தலை முறையே ஏத்துதலும் பழித்தலும் என்று எண்ணுதல் வேண்டும் என்று இயம்பினார்.

பு. வெ. மாலையில் இதற்கு ஒத்த துறை இடம்பெறவில்லை. எனின், பரிசில் துறையினை (193) ஒருவாறு இத்துறையுடன் இயைத்துக் கூறுதல் சாலும். ஒழிபு என்ற நூற்பாவில் இத்துறை சுட்டப்பெறினும் அந்நூற்பா பிற்சேர்க்கையாகவே தோன்றுகிறது.

2) அடுத்தூர்ந்தேத்திய இயன்மொழி வாழ்த்து

வென்றியும் குணனும் அடுத்துப் பரந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்து என்று இத்துறையினை இளம்பூரணர் விளக்கினர். தலைவன் முன்னிலையில் சென்று அவன் சாதனைகளையும் அவன் குலத்தோர் சாதனைகளையும் போற்றிப் புகழ்தல் இயன்மொழி வாழ்த்து எனப்படும் என்பர் நச்சி.

இத்தொடர் இயல்மொழி எனவும், வாழ்த்து எனவும், இயல் மொழி வாழ்த்தெனவும் மூவகைப்படும் என்று இளம்பூரணரும், இயன்மொழியும் வாழ்த்தும் என இருவகைப்படும் என்று நச்சினார்க்கினியரும் எண்ணினர். இவை அனைத்திற்கும் புறப் பாடல்கள் பல சான்றாக விளங்குதலை இருவரும் எடுத்துக் காட்டினர்.

இயன்மொழி பெரும்பாலும் புனைந்துரையாகாது உள்ளது கூறிப்புகழ்தலைக் குறிக்கும். எனவேதான் பாரதியார், உள்ள சால்பு உரைப்பது இயன்மொழி என்றும், பிற்காலத்தில் இதுவே மெய்க்கீர்த்தியாக வடிவம் பெற்றது என்றும் தெளிவுறுத்தினார்.

பு.வெ.மா. இத்துறையினை இருவகைகளில் விளக்கியுள்ளது. ''இன்ன இயல்பினர் இன்னவை வழங்கினர்; நீயும் அவர்போல் எமக்கு ஈதல் வேண்டும்'' என்று யாவரும் உணரும்படி எடுத்துரைப்பது ஆகிய இயன்மொழி வாழ்த்து ஒருவகை ஆகும்.

இதற்கு வரும் எடுத்துக்காட்டு,

''முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்''

என்ற வெண்பாவாக அமைந்தது (194).

சீர்மிக்க வேந்தனின் இயல்பினை எடுத்துரைப்பதும் இத்துறையே ஆகும் (195). பெரும்பாலும் தன்மை நவிற்சியாக இஃது அமைதல் வேண்டும்.

3) சேய்வரல் ... கடை நிலை

சேய்மையிலிருந்து வரும் பயணக்களைப்பு தீரும்படி அரண்மனை வாயிலில் காவல்புரியும் காவலரை நோக்கிப் புரவலனுக்குத் தன் வருகையை உணர்த்தும்படி புலவர் நிகழ்த்தும் மானம்மிக்க உரை கடைநிலை எனப்படும் துறையாகும். கடைநிலை—வாயில் நிலையினைக் குறிக்கும். ஈண்டு வாயில் காப்போரைச் சுட்டியது. வாயிலோனை நோக்கிக் கூறப்பெறினும், அவ்வருத்தம் தீர்க்கும் பாடாண் தலைவனதே இத்துறை என்பர் நச்சி. புறநானூற்றில், ''வாயிலோயே வாயிலோயே'' (206) எனவரும் ஔவையார் பாடல் இத்துறைக்கு இலக்கியமாகக் காட்டப்பெற்றது.

இத்துறையினை வாயினிலை என்ற பெயரினால் வழங்கினார் ஐயனாரிதனார். இதனை,

''புரவலன் நெடுங்கடை குறுகிய என்நிலை
கரவின் றுரைஎனக் காவலர்க்கு உரைத்தன்று'' (190)

என்று விளக்கிக் கூறினர்.

ஒவ்வொரு துறைக்கும் பெரும்பாலும் அடைகொடுத்துச் சொல்லுதல் முன்னூல் இயல்பு என்பதும் அடை கொடாது சுருக்கமாகக் கூறுதல் பின்னூலின் போக்கு என்பதும் இங்குச் சுட்டுதற்குரியன.

4) கண்படை கண்ணிய கண்படைநிலை

படை என்பது படுத்தல் எனப் பொருள்படும். எடு, விடு, தொடு என்ற முதனிலைத் தொழிற்பெயர்கள் முறையே எடுத்தல், விடுத்தல், தொடுத்தல், எடை, விடை, தொடை என்று வருதல் போல், படு என்ற முதனிலைத் தொழிற் பெயரும் படுத்தல், படை என்று வழங்கும். கண்படுத்தல் என்பது இமை மூடுதலைக் குறிக்கும். அரசன் இனிது துயின்றது கூறல் இத்துறைப்பொருள் என்பர் இளம்.பெரும்பொறுப்பும் அரச பாரமும் மிக்க வேந்தனுக்கு

நல்ல தூக்கம் வருவது அரிது. அரசன் அவைக்கண் நெடிது நேரம் சூழ்ச்சியில் கருத்தூன்றி வைகியவழி மருத்துவரும் அமைச்சரும் முதலியோர் அவனுக்குக் கண்துயில் கோடலைக் கருதியது இத்துறை என்பர் நச்சி.

ஐயனாரிதனார் கண்படைநிலை என்றே அடையின்றி இத் துறையினைக் குறித்தனர் (196). கடமை முடியும்வரை பசி நோக்கானாகவும் கண்துஞ்சானாகவும் உள்ள வேந்தன் கடமை முற்றியதும் மனநிறைவுற்றதால் விழிகள் உறக்கத்தை மேவின என்பர்.

பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தத்தில் இடம் பெறும் தாலப் பருவம் பாடுதற்கு இத்துறை முன்னோடி எனலாம்.

5) கபிலை கண்ணிய வேள்விநிலை

கபிலை என்பது அந்நிறம் உடைய ஆவிற்கு ஆகுபெயர். வேள்வி என்பது கொடை. எனவே, சிவந்த பசுவினை அந்தணர்க் குக் கொடுத்தலை இத்துறை குறித்தது என்பர் நச்சி.

பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் காட்டுப்பசு ஏழுவகையும், நாட்டுப் பசு ஏழுவகையுமாகப் பதினாலு வகைப் பசுவால் வேட்ட புகழினைப் புறநானூற்றில் (166) மூலங் கிழார் பாடுதல் இத்துறைக்குரியது என்பர் பாரதியார். வேள்வி நாகரிகம் சங்ககாலத்துச் சமுதாயத்தில் பரவி விட்டது என்பது இதனால் புலனாகும்.

ஐயனாரிதனார், இத்துறையினைக்கபிலை கண்ணிய புண்ணிய நிலை என்று குறித்துள்ளார் (202). அரசன் அந்தணர்க்குக் கோதானம் புரிததை இத்துறை சுட்டியது என்பது அவர் கருத்து. வேள்விநிலை என்பதை இவர் வேறு பிரித்துத் தனித்துறையாக எண்ணியுள்ளார் (203). பெரும் புகழ் படைத்த அரசன் புரிந்த வேள்வியின் சிறப்புரைத்தல் இதற்குரிய பொருளாகும்.

6) வேலை நோக்கிய விளக்குநிலை

விளக்கு ஏதுவாக வேலின் வெற்றியைக் காட்டுதலைச் சுட்டுவது இத்துறை என்பர் இளம். நோக்கிய என்பதற்குப் பதிலாக ஒக்கிய என்ற பாடம் கொண்ட நச்சினார்க்கினியர்,

''வேலும் வேல்தலையும் விலங்காது ஓங்கியவாறுபோலக் கோலோடு
விளக்கும் ஒன்றுபட்டு ஓங்குமாறு ஓங்குவித்த விளக்குநிலை''

என்று விளக்கம் நல்கினர். கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு கீழும் மேலும் வலமும் இடமும் திரிபரந்து சுடர் ஓங்கிக் கொழுந்து விட்டெழுந்தமையினை ஆக்கத்திற்கு அறிகுறியாக அறிவோர் கூறுதலாக இத்துறை அமையும் என்றார். இவரே, நோக்கிய என்ற பாடத்தையும் உடன் பட்டு, ''வேலின் வெற்றியை நோக்கி நின்ற விளக்கு நிலை' எனப் பொருள் கூறி, ''வளிதுரந்தக் கண்ணும்'' என்று இளம்பூரணர் காட்டிய பு.வெ.மா பாடலையே மேற்கோள் தந்தனர். இதனை நிச்சம் (-நாள்தோறும்) இடும் விளக்கு என்று கூறுவர் என்றார். கல்வெட்டுக்களில் சுட்டப் பெறும் நுந்தா விளக்கு இதனுடன் இணைந்து நோக்கத்தக்கது.

இருள் ஒழித்து ஒளி உதவும் விளக்குப்போல நாட்டில் வேந்தரின் வேலும் கோலும் தீதகற்றி நலம் தருவதை விளக்கும் துறை இஃது என்பர் பாரதியார்.

பு. வெ. மா. இத்துறையினை இருவகையாகக் கொண்டு கூறும். காற்று கடுமையாக வீசும்பொழுது கூட அரண்மனை விளக்கு அணையாது ஒளிசிறந்து விட்டெரிவது ஒரு நல்ல நிமித்தமாகக் கருதப்பட்டது. விளக்கின் ஒளிபோல வேந்தனின் புகழ்ஒளி எங்கும் வீசும் என்பது குறிப்பாகக் கொள்ளத்தக்கது (200). சூரியனுக்குமுன் மற்ற கோள்களும் நாள்களும் ஒளி அவிந்து அடங்குதல் போல், வேந்தனுக்குமுன் மற்ற மன்னர்களும் தலைவர்களும் ஆற்றல் அடங்கிப் பனிதலைச் சுட்டுதல் இத்துறையின் இன்னொருவகை என்பர் ஐயனாரிதனார் (201). கம்பரும்,

''வெயிலிடைத் தந்த விளக்கென''

என்று கூறுதல் எண்ணிப் பார்த்தற்கு உரியது.

7) வாயுறை வாழ்த்து

வாயுறை என்பது மருந்தைக் குறிக்கும்' மகார்க்கு வழங்கும் உறை மருந்து பற்றிய உலக வழக்கு உண்மையும் காண்க. உறைத்துக் கொடுப்பது உறை மருந்தாகும். தப்பாத மருந்து போன்ற சொற்களினால் வாழ்த்துதல் வாயுறை வாழ்த்து

எனப்படும். சொல் அளவில் வேம்பும் கடுவும் போல் கடுமையும் கசப்பும் காட்டினும், பின்னர்ப் பெரும்பயன் விளைத்தல் கருதி ஓம்படைச் சொல்லினால் மெய்யறிவித்தல் வாயுறை வாழ்த்து எனப்படும். ''காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே'' என்ற புறப்பாடலை இளம்பூரணர் இத்துறைக்கு மேற்கோள் தந்தனர். ''அருளும் அன்பும் நீக்கி நீங்கா, நிரயம் கொள்பவரொ டொன்றாது காவல். குழவி கொள்பவரின் ஓம்புமதி'' (புறம். 5) என்ற பாடலை எடுத்துக் காட்டுவர் நச்சி.

பு. வெ. மா. இப்பெயரினால் இத்துறையினைச் சுட்டியது (220). ''பிற்பயக்கும் எம்சொல்என, முற்படர்ந்த மொழி மிகுத்தன்று'' என்பது இந்நூல் தரும் விளக்கம் ஆகும்.

சான்றோர்கள் அறிவுரைகள் கூறும்பொழுது இனிக்கும் சொற்களினால்தான் கூறுதல் வேண்டும் என்று எண்ணுதல் சரியன்று. நலனில் அக்கறை கொண்டவர்கள் வைதுரைக்கும் வார்த்தைகள் கூட நலம் பயத்தல் உறுதி. வருத்தும் நோக்கி லன்றித் திருத்தும் நோக்கில் கூறப்படும் நல்லுரைகளின் புறத் தோற்றம் நோக்காது அகத்தோற்றம் நோக்கி வாழ்த்தாகக் கொள்ளுதல் வழக்கு.

8) செவியறிவுறூஉ

செவியிற் செல்லுமாறு உறுத்துக் கூறும் அறிவுரைகள் செவி யறிவுறூஉ எனப்படும். உயர்ந்தோர் மாட்டு அவிந்து ஒழுகுதல் வேண்டும் என்ற வாய்பாட்டினால் இவ்வுரை அமையும்.

ஒருவுதலை ஒரூஉதல், ஒரூஉ எனக் கூறுதல் போல், உறவு என்பது உறூஉதல், உறூஉ எனக் கூறப்பெறும் என்பர் நச்சி. இத்துறைக்கு, 'வடாஅது பனிபடு வடவரை வடக்கும்' (புறம். 6) என்ற பாடலை இவர் மேற்கோள் தந்தனர்.

பு. வெ. மா. இத்துறையினைக் குறித்துள்ளது (221). அந்தணர், சான்றோர், தவத்தோர் தமையன்மார், தந்தை, தாய் ஆகியோர் கூறும் சொற்களை ஏற்றுப் பின்பு உலகமொழியையும் கேட்டொழுகுதல் முறையாகும். இங்ஙனம் அறிவுறுத்தலே செவியறிவுறூஉ எனப்படும்.

9) புறநிலை வாழ்த்து

வழிபடு தெய்வம் புறம் காப்பக் குறைவற்ற செல்வத்துடன் வழிவழியாகச் சிறந்து பொலிக என்னும் பொருண்மையில் அமைவது இத்துறை ஆகும். 'இனிது வாழ்மின்' என்னும் பொருள் மேல் வரும் என்றார் இளம். பாட்டுடைத் தலைவன் முன்னிலையாகத் தெய்வம் படர்க்கையாக வாழ்த்தும் பொருண்மை இத்துறைக்கு உரியது என்பர் நச்சி.

வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ ஆகியவற்றை அடுத்துப் புறநிலை வாழ்த்தினைக் கூறாது இடையில் வேறு சில துறைகளை கூறிப்பின் இதனைக் குறித்தனர் பு. வெ. மாலையார் (226). தொல்காப்பியத் தொடரினால் இத்துறைக்குரிய கொளுவினை அமைத்துள்ளார் என்பது எண்ணற்பாலது.

10) கைக்கிளை வகை

அகத்திணை ஏழனுள் ஒன்றாகிய கைக்கிளை இங்குச் சுட்டப் பெறவில்லை. தலைமக்களின் பெயர் சுட்டிவரும் கைக்கிளை புறத் திணைக்கு உரியது என்பதும் தொல்காப்பியர் கருத்தாகும் (அகத். 58). வகை என்றதால், ஆண்பாற் கூற்றுக் கைக்கிளையும் பெண்பால் கூற்றுக் கைக்கிளையும் கொள்ளப்படும் என்றார் இளம்.

பல்வேறு கைக்கிளை வகைகளை எண்ணிக்காட்டுகிறார் நச்சி:

1) 'காமஞ்சாலா இளமையோள்வயின்' (அகத். 50) என்ற நூற்பாவிற் சுட்டப் பெறுவது அகத்திணைக்குரிய கைக்கிளை.

2) 'முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப' (52) என்பதும் அகத்திணைக்குரியது.

3) 'காமப்பகுதி கடவுளும் வரையார்' (புறத். 28) என்ற கைக்கிளை தெய்வக்காதலாய் நாயக நாயகி பாவத்துடன் தொடர்புற்றது.

4) 'முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே' (கள. 14) என்ற கைக்கிளை வடவர்தம் எண்வகை மன்றலுள் அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்றைக் குறிக்கும்.

இன் நான்கினின்றும் வேறுபட்டது பாடாண் திணைக்கு உரியதாகக் கூறப்பெறும் கைக்கிளை வகை. ஒத்த அன்பினால் கூடி, யாதொரு காரணம் பற்றி ஒருவன் ஒருத்தியைத் துறக்க, அவளை எப்படியும் அவனுடன் இணைத்து வைக்க வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தில் சான்றோர் கூறும் அறிவுரை கெழுமிய கைக்கிளைப் பாடாண் பாட்டினை இத்துறைக்கு இலக்கியமாக நச்சி. காட்டினார். கண்ணகி காரணமாக வையாவிக் கோப்பெரும்பேகனைப் பரணர் உள்ளிட்டோர் பாடிய புறப்பாடல்கள் இவ்வகைக் கைக்கிளைத் துறைக்குரியவை என்பதும் இவர் கருத்து. ஒரு நோக்கில் காணுங்கால், இவை பெருந் திணைக்கும் உரியனவாகக் கொள்ளத்தகுவன.

கைக்கிளைக்குப் புறனாக அமையும் பாடாண் திணையில் கைக்கிளையும் ஒருதுறையாக வந்து சேர்தல் எண்ணுதற்கு உரியது.

பு.வெ. மாலையார் கைக்கிளை என்ற துறையினைப் பாடாண் திணைக்கு உரியதாக ஏற்றுக் கொண்டார் (233). எனின், கொளுவும் வெண்பாவும் வெண்பாற் கைக்கிளையினைச் சுட்டுதல் காணத்தக்கது. தவிர, புறத்திணைகள் பன்னிரண்டனுள் கைக்கிளையினை ஒரு தனித் திணையாக எண்ணி இலக்கணம் கூறியிருத்தலும் சுட்டத்தக்கது.

கைக்கிளையே தவிர, பெருந்திணையினையும் பாடாண் திணைக்கு உரிய ஒரு துறையாக ஐயனாரிதனார் எண்ணினார் (234). இது தொல்காப்பியத்தில் பாடாண் பகுதியில் இடம் பெறாத செய்தியாகும்.

தொல்காப்பியர் வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து, கைக்கிளை ஆகிய நான்கினையும் பாடாண் திணைக்குரிய துறைகளாக எண்ணினார். இவற்றுக்குரிய பொருண்மையும் யாப்பும் பற்றி விரிவாகச் செய்யுளியலில் பேசியிருக்கிறார். அங்கு இவற்றை எண்ணிய நிரல் முறையில் மாற்றம் காணப்படுகிறது. இவற்றுடன் அவையடக்கியல் என்பதும் அங்குச் சேர்த்துக் கூறப்பெற்றது (நூ. 415-19; நூ. 462-3). இவையாவும் வெண்பா, ஆசிரியப்பா, இவ்விரண்டும் கலந்த மருட்பாவினால் பாடப்பெறும் என்பது தொல்காப்பிய விதியாகும் (நூ. 415-16). கைக்கிளை வெண்பா யாப்பினால் பாடப் பெறுதலைச் சுட்டும் தொல்காப்பியர் (நூ. 423).

''கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே'' (நூ. 424)

என்று சிறப்புவிதி கூறியுள்ளார். எனவே, வாயுறை வாழ்த்து முதல் கைக்கிளை ஈறாகிய இறுதி நான்கு துறைகளும் மருட்பாவினால் பாடப்பெறுதல் சிறப்பு என்று எண்ணினார் எனலாம். ஆயினும், புறநானூற்றில் இவை ஆசிரிய யாப்பினால் அமைந்திருத்தல் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. தொல்காப்பியர் விதிக்கும் இந்த யாப்பு மரபு, புறநானூறு எழுந்த பொழுது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது உய்த்துணரப்படும். இதனாலும் தொல்காப்பியர் புறநானூறு தோன்றிய காலத்திற்கு முற்பட்டவர் என்பது புலனாகும்.

மருட்பா என்பது ஒருவகைக் கலவைப் பாட்டு அல்லது ஒட்டு மாஞ்செடி போன்ற யாப்பு முயற்சியே. இந்தச் சோதனை முயற்சியைத் தொல்காப்பியர் அறிமுகம் செய்து வைத்தும் கூட, படைப்பாசிரியர்கள் அந்த யாப்பினைப் போற்றவில்லை என்று தெரிகிறது. உதாரணத்திற்காகக் காட்டப்பெறும் ஒரு சில பாடல்களைத் தவிர, இவ்வகை யாப்பில் ஒரு பனுவல் கூட எழுதப்படவில்லை என்பது கருதற்பாலது.

இனி, ''தாவில் நல்லிசை'' எனத் தொடங்கும் நூற்பாவில் தொகுத்துக் கூறப்பெறும் பாடாண் துறைகள் பற்றிப் பார்ப்போம்.

(அ) 1) துயில் எடை நிலை

கண்படை நிலையினைக் கூறிய ஆசிரியர், துயிலெடை நிலையினையும் பாடாண் திணைக்கு உரிய ஒரு துறையாக எண்ணியுள்ளார். துயிலெடை என்பது பள்ளி எழுச்சி. வேந்தன் இனிது துயில வேண்டும் என்று கூறுபவர் இன்னவர் என்ற குறிப்பு நூற்பாவில் இல்லை. எனின், துயிலினின்றும் எழுதலைப் பாடுவோர் சூதர் என்ற குறிப்பு வெளிப்படையாகக் காணப்படுகிறது. ''தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச், சூதர் ஏத்திய துயிலெடை நிலை'' என்பது தொல்காப்பிய வாசகம். கிடந்தோர் என்பது படுக்கையில் கிடந்த மன்னரைக் குறித்தது. அங்ஙனம் துயிலும்பொழுது கூட, கெடாத நல்ல புகழை ஈட்ட வேண்டும் என்ற கருத்து அவர் உள்ளத்தில் பொதிந்திருக்கும் என்பது 'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்' என்பதால் புலனாகும். இங்ஙனம் கிடக்கை முறையினால் உரை கூறாது, கிடந்தோராகிய வேந்தர்க்குத் தாவில் நல்லிசை கருதிய சூதர் ஏத்திய துயிலெடை நிலை என்று பொருள் கொண்டனர் இளம். வைகறையில் அரசனுக்

குப் பள்ளி எழுச்சி பாடும் சூதர்கள் கெடாத நல்லிசை பொருந்த வேண்டும் என்று வாழ்த்துவர் என்பது அவர் தரும் விளக்கம்.

நச்சினார்க்கினியர் தரும் விளக்கமும் நோக்கத்தக்கது. தமது வலிமையால் பாசறைக்கண் மனக்கவலையின்றித் துயின்ற அரசருக்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயி லெடுப்பின் ஏத்தின துயிலெடை நிலை என்றார்.

இந்நூற்பாவில் சுட்டப்பெறும் சூதர் யார்? திருக்குறளில் சுட்டப்பெறும்'ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும்'என்பவரினின்றும் இவர் உறுதியாக வேறுபட்டவர். புராணங்கள் காட்டும் நைமி சாரணியத்தில் தங்கியுள்ள முனிபுங்கவர்களுக்கு புராணச் செய்தி களைப் புகலவரும் சூதர்களை இங்குத் தொல்காப்பியர் சுட்டினர். கல்பசூத்திரங்களில் அரசனுக்கும் அந்தணப் பெண்ணிற்கும் பிறந்த பிரதிலோமனைச் சூதன் என்று சுட்டப்பெறுதல் காணலாம். எனவே, தொல்காப்பியர் சுட்டும் சூதர் இவ்வகைக் கலவைப் பிறப்பினராதல் வேண்டும்.

நச்சினார்க்கினியர் சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலிய பல்வகைப் பிறப்பினரைக் கூறி, இவருள் வீரத்தால் மிக்க சூதர்கள்தாம் வேந்தரைத் துயிலெழுப்புவர் என்றும் சுட்டியுள்ளார். மதுரைக் காஞ்சியில் (670-1).

> ''சூதர் வாழ்த்த மாகதர் நுவல
> வேதா ளிகரொடு நாழிகை இசைப்ப''

என்று இசைக்கப் பெறுதல் காணலாம். சிலப்பதிகாரத்திலும் இவர்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன (5 48, 26. 74, 75). தொல்காப்பியர் காலத்தில் சூதர் மட்டுமே சுட்டப் பெற்றனர் என்பதும், அவர்க்குப் பிற்காலத்து மேலும் கூடுதலான கலவை இனத்தவர் சமுதாயத்தில் காணப்பட்டனர் என்பதும் ''தொல் காப்பியத் தெளிவு'' என்னும் நம் நூலில் கண்டு கொள்க (ப. 30-33). இதனால் பண்டைத் தமிழ்ச் சமுதாயம் அண்மை அயலாரையும் உறவு பாராட்டி ஏற்றுக் கொண்ட திறந்த நிலைச் சமுதாயம் (Open Society) என்பது அறியத்தக்கது.

பு. வெ. மா. இத்துறையினைக் குறித்துள்ளது. கப்பம் கட்டு தற்குக் காத்துக் கிடக்கும் காவலர்க்கு அருளும்பொருட்டு வேந்தனைத் துயில் எழுப்புதலை இத்துறைக்குரிய பொருளாகக் கூறினர் ஐயனாரிதனார் (197). இதுவே பக்தி இலக்கியங்களில் பள்ளிஎழுச்சி என்னும் பனுவல் வகையாக வளர்ச்சி பெற்றது.

2) ஆற்றுப்படை

புரவலரைத் தேடிச் செல்லும் கலைப் பறவைகளாகிய கூத்தர், பாணர், பொருநர், விறலி என்போர் தமது பயண அனுபவங் களையும் நெறியிடைக் கண்ட காட்சிகளையும் கூறுமுகத்தான், முன்பு உழந்த வறுமைநிலை பின்பு மாறிப்பெற்ற பெருவளங்களை வழிஎதிர் சந்தித்த சக கலைஞர்களுக்கும் கிடைக்கும் பாங்கினை எடுத்துக் கூறும் பாடாண் துறை ஆற்றுப்படை ஆகும். அவ்வக் கலைஞர் பெயரினால், கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை. விறலியாற்றுப்படை என்று வழங்கப் பெறும். பத்துப்பாட்டு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்கப் பனுவல்களில் இத்துறை அமைந்த பாடல்கள் பல உள்ளன.

வழிகாட்டி இலக்கியமாகிய ஆற்றுப்படையில் புரவலனின் புகழ், சிறப்பு, ஈகை முதலிய குணநலன்கள் பேசப்பெறுதலின், பாடாண் திணைக்கு உரியதாயிற்று.

இங்குச் சுட்டப்பெற்ற கலைஞர்களின் பல்வகை உட்பிரிவு களை நச்சினார்க்கினியர் உரையில் காணலாம். மேலும் இவர், "இல்லறத்தை விட்டுத் துறவறம் ஆகிய நெறியிடத்து நிற்றல் நன்றென்றும் கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகை யினாலே தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டும் திரிந்து பெறாதார்க்கு இன்ன இடத்தே சென்றால் பெறலாம் என்று அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று அக்கந்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும்" பாடாண் திணைக்குரிய துறையாகும் என்றார். இவ்வாறு எழுதும்போது இவர் கருத்தில் திருமுருகாற்றுப்படை பொருந்தியிருந்தது என்பதில் ஐயம் இல்லை. இதனைப் பின்வரும் உரைப்பகுதியில் அவரே வெளிப்படையாகவே குறித்துள்ளார்.

பு. வெ. மா. பாணாற்றுப்படை (216), கூத்தராற்றுப்படை (217), பொருநராற்றுப்படை (218), விறலியாற்றுப்படை (219) என்ற வரிசையில் இந்நான்கினையும் சுட்டியது. இவற்றுடன் புலவராற்றுப்படை (230) என்ற துறையினையும் இந்நூலில் காண்கிறோம். இறைவனிடம் புலவரை அருள் கருதி ஆற்றுப் படுத்தல் இதற்குப் பொருளாகும். இதுவும் திருமுருகாற்றுப்படை யினைக் கருத்திற் கொண்டு ஐயனாரிதனாரால் வகுத்துக் கொள்ளப்பெற்றதே ஆகும். எனின், புலவரை வள்ளலிடம் ஆற்றுப்படுத்தும் துறையில் சில பாடல்கள் புறநானூற்றில் காணப்

படுகின்றன. பிற்காலத்திலும் சில பனுவல்கள் இவ்வகையில் எழுந்தன. மேலும் பல்வகைப் பிரிவுகளாக ஆற்றுப்படை வளர்ந் திருத்தல் பின்னெழுந்த இலக்கியங்களில் காணலாம்.

3) பிறந்த நாள் பெருமங்கலம்

மங்கலம் என்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியைக் குறிக்கும். இது சுத்த பிடகத்தில் காணப்படுதலைத் திருக்குறள் கூறும் உறுதிப்பொருள் என்ற நம் நூலில் குறித்துள்ளோம். வேந்தன் பிறந்தநாள் விழாவினைப் பற்றியது இத்துறை ஆகும். வேந்தன் பிறந்த நாளினை யாவர்க்கும் இன்பம் தரும் நாளாகக் கொண்டா டுதல் மரபு. சிறந்த நாள்களில் உண்டாகிய செற்றத்தை நீக்கிப் பிறந்த நாள் பெருமங்கலத்தைக் கொண்டாடுவான். இந்த நாளில் அந்தணர், அறவோர், பரிசிலர் யாவர்க்கும் பரிசில்கள் வரையாது வழங்குதலும் உண்டு.

அரசன் நாள்தோறும் மேற்கொள்ளும் செற்றம் ஆகிய சிறை செய்தல், செருச்செய்தல், கொலை புரிதல் முதலியவற்றைப் பிறந்த நாளில் தவிர்தலை நச்சினார்க்கினியர் சுட்டியுள்ளார். சிறைவிடுதல், செருவொழிதல், கொலை தவிர்தல், இறை தவிர்தல், ஈகை புரிதல் முதலியன அந்த நாளில் அவன் செயற் பாலன என்றார்.

மங்கலவண்ணம் ஆகிய வெள்ளணியும் அணிந்து எவ்வுயிர்க்கும் அருளே நிகழ்தலின், பிறந்த நாள் விழாவினை வெள்ளணிவிழா என்று விளம்புவர். ஆண்டுக்கு ஒரு முறை வரும் பிறந்த நாளே இங்குச் சுட்டப் பெற்றது என்பதும், திங்கள்தோறும் வரும் சென்ம நட்சத்திரம் இங்குக் குறிக்கப்படவில்லை என்பதும் நச்சினார்க் கினியரின் கருத்து.

இத்துறையினை நாண்மங்கலம் என்ற பெயர் கொடுத்து ஐயனாரிதனார் வழங்கினார் (212). அறந்தரு செங்கோலையும் அருளையும் விரும்பிய வேந்தனின் பிறந்த நாளின் சிறப்புரைத்தல் இத்துறைக்குரிய பொருள் என்றார்.

ஒருவரின் பிறப்பு தமக்கும் பிறர்க்கும் பயன்தருவதாய்த் திகழ்தல் வேண்டும். ஆதலின், பயன்தருதல் பற்றிப் பிறந்த நாளினைச் சிறந்த நாளாகக் கொண்டாடுதல் மரபு. பயன்படாத ாளைப் பிறவாநாளாகக் கருதும் மர பினை,

''பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே''

என்று அப்பர் அடிகள் குறிப்பதால் அறியலாம். வேந்தரின் பிறப்பு ஏனைய மாந்தரின் பிறப்பினைவிட விழுமியதாக எண்ணப் பெற்றதால், அவர்தம் பிறந்தநாள் விழாவினைப் பாடாண் துறைக்குப் பொருளாகத் தொல்காப்பியர் குறித்துள்ளார். மக்களரசு நிலவும் இக்காலத்தில், தலைவர் பிறந்த நாளைச் சிறந்த நாளாகக் கொண்டாடி வருதல் பழைய மரபின் தொடர்ச்சியாகக் கொள்ளுதல் வேண்டும்.

4) சிறந்த சீர்த்தி மண்ணுமங்கலம்

அரசன் முடிசூடிக் கொண்ட நாளினை ஆண்டுதோறும் கொண்டாடுதலை இத்துறை குறித்தது. அன்று அவன் புண்ணிய நீராடுதலை மண்ணுதல் என்ற சொல் சுட்டியது. இதற்குரிய செய்யுள் வந்தவழிக் காண்க என்றார் இளம். இதனால், ஆட்சியாண்டு அரசனுக்கு இவ்வளவு சென்றது என்று எழுதும் நாண்மங்கலமும் கொள்ளப்படும் என்றார் நச்சி. கல்வெட்டு, செப்பேடு முதலியவற்றில் இத்தகைய மரபு காணப்பெறுதலைக் கருத்திற்கொண்டு இவர் இங்ஙனம் எழுதினார். எனின், பு. வெ. மா. சுட்டும் நாண்மங்கலத்தினின்றும் இது வேறுபட்டது என்க.

வடநூல்களில் சுட்டப்பெறும் பட்டாபிடேக உற்சவம் இதனுடன் ஒருங்குவைத்து எண்ணுதற்குரியது.

நேர்நேர்த்தி என்றாதல்போல், சீர் என்ற சொல் சீர்த்தி என்றாயிற்று. இது தமிழ்ச்சொல். புறநானூற்றுள், 'அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை' என்று இச்சொல் பயிலப்பெற்றது. சோழன் மாவண்கிள்ளியின் பெருந்தேவிக்குச் சீர்த்தி என்பது பெயர். இதனைச் சாத்தனார் மணிமேகலையில் குறித்துள்ளார். கீர்த்தி என்ற வடசொல் இத்தமிழ்ச் சொல்லிலிருந்து வேறுபட்டது என்க. பொருள் அளவில் இருசொற்களும் பெரும்பாலும் ஒன்றையே குறிப்பன. சேரலன், செவி என்பன முறையே கேரளன், கெவி என்றாதல்போல், சீர்த்தி என்பது கீர்த்தி ஆகியிருக்கக்கூடும். எனின், திராவிட ஒப்பியலார், க→ச ஆகும் என்று கூறுவர்.

பு. வெ. மா. இத்துறையினை மண்ணுமங்கலம் (224) என்ற பெயரினால் சுட்டுதல் அறியத்தக்கது.

5) குடை நிழல் மரபு

உலக ஒழுக்கத்தை மிகுதியாகப் புகழ்ந்து கூறப்பட்ட குடைநிழல் மரபு பாடாண்திணைக்குரிய ஒரு துறையாகக் கருதப் பெறும். சென்னியின் (--சோழனின்) குளிர்ந்த வெண்கொற்றக் குடை போன்று உலகிற்குத் தண்ணளி செய்தலால், திங்களைப் போற்றுவோம் என்ற சிலப்பதிகாரத்து மங்கலவாழ்த்துப் பாடலை இளம்பூரணர் இத்துறைக்கு உதாரணம் கூறினர். முத்தொள் ளாயிரம், புறநானூறு. சிலப்பதிகாரம் முதலியவற்றினின்றும் சில கூடுதலான மேற்கோள்களைத் தந்தனர் நச்சி. வேந்தனின் குடையினையன்றி, அவன் செங்கோல், திகிரி (—ஆணைச்சக்கரம்) முதலியவற்றின் மரபினைக் கூறுதலையும் ஒருங்கெடுத்துக் கூறுவர்.

இதனைக் குடைமங்கலம் என்று பு. வெ. மா. சுட்டியது (222). ''நாற்றிசையும் புகழ்பெருக, வீற்றிருந்தான் குடை புகழ்ந்தன்று'' என்பது இத்துறைக்குரிய கொளு.

6) வாண்மங்கலம்

பகைவரைக் கருதிய மன்னனின் வாளின் சிறப்பினை வாழ்த்துதல் இத்துறைக்குரிய பொருண்மையாகும். வாள்வென்றி யால் பசி நீங்கிய பேய்ச் சுற்றமும் பிறரும் வேந்தனின் வாளினை வாழ்த்துதல் வாண்மங்கலம் என்றார் நச்சி. இது பரணியில் பயின்றுவரும் என்றார். இத்துறை உழிஞைத்திணையிலும் வந்துள்ளது. கொற்றவாளினைக் கொற்றவைமேல் நிறுத்தி அவ் வெற்றி மடந்தையைப் பரவுவதாக வரும். எனின், இங்கு பேய்ச் சுற்றம் பசி நீங்கி வாளினைப் பாராட்டுவதாக வரும். இவ்வேறு பாட்டினை நச்சி நன்கு தெளிவுறுத்தியுள்ளார். உடன் எண்ணத் தகும் வேல், வில் முதலியவற்றின் சிறப்பினைக் கூறும் பகுதிகளும் இதனுள் அடக்கிக் கூறப்படும்.

7) மன்எயில் அழித்த மண்ணுமங்கலம்

பகை வேந்தரின் எயிலை அழித்துப் புண்ணிய நீராடும் நிகழ்ச்சியை இத்துறை குறித்தது. உழிஞைத் திணையிலும் இகல் மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலம் சொல்லப்பட்டது. அத்தகைய வெற்றியைப்பாராட்டுதல் கருத்தாதலின் அத்துறையே பாடாண் திணைக்கும் உரியதாயிற்று. இங்ஙனம் ஏனைய மறத்

துறைகள் பாடாண் திணைக்கும் புகழ்தல் காரணமாக வருதலை இளம்பூரணர் அறிந்து உணர்த்தியுள்ளார்.

மாற்றரசனின் மதிலை அழித்துக் கழுதை ஏரினால் உழுது, வெள்ளை வரகும் கொள்ளும் விதைத்து, மங்கலம் அல்லாதன செய்தவன் மங்கலமாக நீராடுமங்கலம் என்று இத்துறைக்கு விளக்கம் தந்தனர் நச்சி. இத்துறைக்கு, ''கடுந்தோர் குழித்த ஞெள்ளல்'' என்ற புறப்பாடலை மேற்கோள் காட்டினார்.

உழிஞைக்குக் கூறப்பட்ட குடுமி கொண்ட மண்ணுமங்கலம் எயிலைச் சிதைக்காமல் கைப்பற்றிய வெற்றியைக் குறிப்பது என்றும், பாடாண் திணைக்குரிய இத்துறை மதிலை அழித்துப் பெற்ற வெற்றியைக் குறிப்பது என்றும் வேறுபிரித்துக் கூறுவர் நச்சி.

பு. வெ. மா. சுட்டும் மங்கலநிலை (198, 199) தொல். சுட்டும் மண்ணுமங்கலத்தினின்றும் வேறுபட்டதாக விளங்குகிறது. துயிலெழுந்ததும் மங்கலமான மரபுகளைக் கூறுவதாக இந்நூல் இதனைச் சுட்டியது.

8) பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலை

பரிசில் கடவுதல் ஆகிய கடைக்கூட்டு நிலை என்றார் இளம். இதனை,

(அ) பரிசில் கடைஇய நிலை

(ஆ) கடைக் கூட்டு நிலை

என்று இரு துறைகளாகப் பிரித்து விளக்குவர் நச்சி. பரிசில் கொடுத்துவிட்டால் புலவர் தன்னை விட்டுப் போய் விடுவார் என்ற எண்ணத்தில், அவரைப் பிரிய மனம் இன்றி ஒழுகிய தலைவனுக்கு புலவர் தம் குடும்ப இடும்பை கூறிப் பரிசில் கேட்டலைச் சுட்டுவது முதல் துறை ஆகும். வாயிலிலிருந்து கொண்டு தான் எண்ணிய கருமத்தினை முடிக்கும் நிலையினைச் சுட்டுவது இரண்டாவது துறை ஆகும். இவற்றைப் பரிசில் கடாநிலை, பரிசினிலை என்றும் கூறுவர். புறநானூற்றில் இப்படி அமைந்த பாடல்கள் சில உள்ளன. பரிசில் பெறப் போகவேண்டும் என்ற குறிப்புடைய துறையினையும் இதன்கண் அடக்குவர்.

பு. வெ. மா. இதனைப் பரிசினிலை (213) என்று குறித்தது. பொற்றேரைக் கொடுத்த பின்னும் புரவலன் விடை தாழ்ப்ப, தன்

துயருறு சுற்றத்தைக் காணப் புலவர் புறப்படுதற்கு ஒருவாறு இசைந்தமையினை இத்துறை குறித்தது.

9, 10) இருவகை விடை

பரிசில் பெற்ற பின்னரும் புரவலன் வழங்கிய பெருவளத்தைப் பாராட்டித் தான் போதல் வேண்டும் என்று புலவர் கூறுதலும், அரசன் விடுப்பப் போதலும் ஆகிய இருவகை விடையும் பாடாண் திணைக்கு உரியவை. 'தென்பரதவர் மிடல் சாய'(378), 'ஊனும் ஊணும்' (381) என்ற புறப்பாடல்களை இவற்றுக்கு மேற்கோள் காட்டினர் இளம். அரசன் விடை கொடுப்பப் பரிசு பெற்று வந்த புலவர் மனைவியை நோக்கிக் கூறுதற்குப் பெருஞ்சித்திரனாரின், 'நின்னயந் துறைநர்க்கும்' என்ற பாடலை எடுத்துக் கூறினர். பரிசில் பெற்ற வழிக்கூறுதல், பெயர்ந்தவழிக் கூறுதல் என்று இரு வகை விடைகளையும் சுட்டுதல் உண்டு.

பு. வெ. மா. பரிசில் விடை என்று ஒன்றாகவே இத்துறை யினைக் கொண்டது (214). அரசனின் வெற்றி மேம்பாட்டினைப் புகழ்ந்த புலவர்க்குக் களிறு, தேர், புரவி முதலிய பரிசில் வழங்கிப் பின் நடந்து வந்து இன்புற விடுத்தலை இத்துறைக்குரிய பொரு ளாகக் கூறினர்.

11) ஓம்படை

ஆசியுரையினை ஓம்படை என்ற பழந்தமிழினாற் கூறுவர். தீமை வரும் என்ற அச்சமும், நன்மை வரும் என்று மகிழ்தலும் இன்றி, நாள், புள், நிமித்தம் முதலியவற்றினால் வேந்தனுக்குத் தீங்கு வாராமை கருதிப் புலவர் பாதுகாவற் சொல்லினால் கூறும் நல்லுரை பாடாண் திணைக்கு உரிய ஓம்படை என்னும் துறைப் பொருளாகக் கூறப் பெற்றது.

தீய நாள் நிமித்தம், புள்நிமித்தம் முதலியவற்றால் பாடாண் தலைவர்க்குத் தோன்றிய தீங்கு கண்டு அஞ்சிய அச்சமும், அது பிறத்தற்குக் காரணம் ஆகிய அன்பும் ஒழிவின்றிப் புலவர்க்கு நிகழும் என்று விளக்குவர் நச்சி. எனவேதான், ஓம்படை கூறித் தீங்கின்றி நெடிது வாழ அன்னார் வாழ்த்துவர் என்றார். புறநா னூற்றில் காணப்படும் சில பாடல்கள் இவ்வகை விளக்கத்திற்கு ஏதுவாதலை இருவர் உரைகளின் மேற்கோள்களினால் எளிதில் உணரலாம்.

பு. வெ. மா. இதனை ஓம்படை என்றே சுட்டியது (225) 'இன்னது செய்தல் இயல்பு' என்ற வாய்பாட்டினால் அறிவன் கூறும் அறிவுரை ஓம்படை என்றார் இந்நூலார். அறிவன் ஞானி ஆவான்.

கால வேற்றுமை பற்றி இங்குச் சுட்டப்பெற்ற பாடாண் பொருண்மை வேறுபடா என்றும், முக்காலத்திற்கும் பொருந்தி வரும் என்றும் முடிபாகக் குறித்தனர் தொல்காப்பியர். இவர் கூறுவன உலகியல் நடப்பினை அடிப்படையாகக் கொண்டு கூறப் பெற்றமையின், எக்காலத்துக்கும் பொருந்தும் பாங்கில் இத் துறைகளை விளங்கிக் கொள்ளுதல் அறிஞரின் கடமை ஆகும்.

இதுகாறும் பாடாண் திணை பற்றியும் அதற்குரிய துறைகள் பற்றியும் தொல்காப்பியம், அதன் உரைகள், பு. வெ. மாலை முதலிய பின்னூல்கள் சுட்டிய கருத்துக்களை ஒருவாறு கண்டோம். இனி, பின்னர் எழுந்த புறத்திணை நூல்களின் கூறப்பெறும் பாடாண் திணைக்குரிய துறைகளைத் தொல்காப்பியத் துறைகளுடன் இணைத்து நோக்கி விடுபட்டன எவை, புதியன எவை என்பதைச் சுட்டுதற்குத் துணிகின்றோம்.

7. (அ) தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பா மாலையும்

1) தொல்காப்பியப் புறத்திணையின் நூற்பாக்களை முப்பதாக இளம்பூரணரும், முப்பத்தாறாக நச்சினார்க்கினியரும் கொண்டனர். நூ. 78—86 வரை அகத்திணையாகிய கைக்கிளைக்குப் புறமாகிய பாடாண்திணைக்குரிய பொருண்மை பற்றிய கருத்துக்கள் புகலப்பெற்றன. இவை பின்னர்த் தோன்றிய நூல்களில் துறைகளாகப் போற்றப் பெற்றன. நூ. 87, 88 ஆகிய இரு நூற்பாக்களில் பாடாண் திணைக்குரிய துறைகள் தொகுத்து எண்ணப் பெற்றன.

2) தொல்காப்பியம் சுட்டிய குறிப்பு, செந்துறை வண்ணப் பகுதி என்பன பு. வெ. மா. பாடாண் பகுதியில் இடம் பெறவில்லை.

3) தொல். சுட்டும் கொற்றவள்ளை என்னும் துறை நாடழிவிற்கு இரங்குதல் கருத்தாயின் வஞ்சித்திணைக்கு உரியது என்றும், புகழ்தல் கருத்தாயின் பாடாண்

திணைக்கு உரியது என்றும் இளம்பூரணர் சுட்டினார். இத்துறை பு. வெ. மா. பாடாண் பகுதியில் சுட்டப் பெறவில்லை.

4) தொல். சுட்டும் கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் என்னும் துறை பு. வெ. மாலையில் பாடாண் படலத்தில் சொல்லப் பெறவில்லை. எனின், ஒழிபு கூறும் பகுதியில் இத்துறை இடம் பெற்றது (343). இப்பகுதி ஐயனாரி தனார் பாடியதன்று என்பது முன்னரும் தெளியப் பெற்றது.

5) தொல். சுட்டிய கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆற்றுப் படைகளைப் பு. வெ. மா. சுட்டியது (216-219). பின் இடையிட்டு இந்நூல் புலவராற்றுப்படை என்ற ஒன்றையும் கூடுதலாகக் கூறியது (230).

6) கைக்கிளை மட்டுமே தொல். சுட்டும் பாடாண் திணைக் குரிய துறைகளில் வைத்து எண்ணப் பெற்றது. எனின், பு. வெ. மாலையில் கைக்கிளையுடன், பெருந்திணையும் சேர்த்துக் கூறப்பெற்றன. இவ்விரண்டிற்கும் பின்னர்த் தனித்தனி படலங்களும் இந்நூலில் இடம் பெற்றன.

7) தொல். பாடாண் பகுதியில் பிறந்த நாள் மங்கலம், சீர்த்தி மண்ணுமங்கலம், வாண்மங்கலம், எயிலழித்த மண்ணு மங்கலம் என்ற நான்கு மங்கலத்துறைகள் மட்டுமே கூறப் பெற்றன. உழிஞைத்திணைக்கு உரியவையாக இகல்மதிற் குடுமி கொண்ட மண்ணுமங்கலம், வாளின் மண்ணு மங்கலம் என்பன இரண்டும் வகுக்கப் பெற்றன.

எனின், பு. வெ. மாலையில் பாடாண் படலத்தில் மங்கலநிலை (198,199), வீற்றினிதிருந்த பெருமங்கலம் (208), குடுமி களைந்த புகழ் சாற்று நிலை (209), மண மங்கலம் (210), பொலிவு மங்கலம் (211), நாண் மங் கலம் (212), குடைமங்கலம் (222), வாண் மங்கலம் (223), மண்ணுமங்கலம் (224) என்பன கூறப்பெற்றன. உழிஞைப் படலத்தில் வாள்மண்ணு நிலை (122), மண்ணு மங்கலம் (122) இடம் பெற்றன. இவற்றுள், காலையில் துயில் எழுந்த மன்னர் முன்னர் மங்கலம் கூறி மலிவு ரைத்தல் மங்கலநிலை எனப்படும். மாற்று மன்னர் வாழ்த்த அரியாசனத்தில் வீற்றிருந்த வேந்தனின்

வெற்றியைச் சிறப்பித்தல் பெருமங்கலம் ஆகும். பகை வேந்தரின் அரண் கைக்கொண்டு தன் முடியை முடித்துக் கொண்ட வெற்றியின் பெற்றி கூறுவது குடுமிகளைந்த புகழ் சாற்று நிலை. இதனைக் குடுமி களைந்த மண்ணு மங்கலம் எனலாம். மகளிரொடு மன்னன் புணர்ந்த மங்கலம் மொழிவது மணமங்கலம். மன்னன் உவப்பப் புதல்வன் பிறப்பினைக் கொண்டாடுதல் பொலிவு மங்கலம், எஞ்சியவை தொல். சுட்டியவை.

8) தொல். சுட்டும் கடைக்கூட்டுநிலை என்னும் துறை பு. வெ. மா. சுட்டும் பரிசில் நிலை என்பது அதன் கொளுவினால் (213) அறியப்படும்.

9) பு.வெ.மா.சுட்டிய பாடாண்பாட்டு (189). வெள்ளிநிலை (204), நாடு வாழ்த்து (205), கிணை நிலை (206), களவழி வாழ்த்து (20), ஆள்வினை வேள்வி (215) என்பன தொல். பாடாண் பகுதியில் காணப்பெறவில்லை. இவை புதியவை. இவற்றுள், தலைவனின் (-வேந்தனின்) ஒளி, ஆற்றல், ஈகை, தண்ணளி முதலிய பண்புகளைப் பாராட்டிக் கூறுதல் பாடாண்பாட்டு என்னும் துறைக் குரியது. மழைக்குரிய கோள் வெள்ளி. நாடு வளம் பெற மழை தேவை. துயர்தீர மழைதரும் வெள்ளியின் உயர் நிலையினைப் பாடுதல் வெள்ளிநிலை எனப்படும் துறைக் குரியது. வேந்தனின் நாட்டின் வளப்பத்தைப் பாடுதல் நாடு வாழ்த்து எனப்படும். இக்காலத்துத் தேச வாழ்த் துடன் இஃது ஒருபுடை ஒத்தது. திருக்கிளரும் வேந்தனின் கோயில் வாயிலில் வைகறைப் பொழுதில் கிணை கொட்டு வோனின் வளம் உரைத்த பகுதி கிணை நிலை என்று கூறப்படும். போர்க்களத்தில் பெற்ற செழுஞ்செல்வத்தைக் குறித்து யாழ்ப்பாணர் பாடுதல் களவழி வாழ்த்தாகும். வினை முற்றிய கனைகழற் காவலனின் இல்லறத்தின் நிறைவினைப் பாடுதல் ஆள்வினை வேள்வி ஆயிற்று. ஆள்வினை—முயற்சி, வேள்வி-விருந்தோம்புதல் முதலியன.

10) பு. வெ. மா. பூவைநிலை (192) என்னும் துறையினைக் கடவுள் வாழ்த்து என்னும் துறையினைச் சார்ந்து பாடாண்திணைக்கு உரியதாகச் சுட்டியது. எனின், இதனைத் தொல். வெட்சித்திணைக்குரிய துறைகளில் ஒன்றாக எண்ணியது.

11) பு. வெ. மா. பாடாண் படலத்தில் சுட்டிய கிணைநிலை (206), கந்தழி (228) என்பன இரண்டும் முறையே வாகைப்படலத்திலும் (186), உழிஞைப்படலத்திலும் (101) வந்தன. இவற்றுள் கந்தழி ஈரிடத்தும் மணி வண்ணன் சோ என்னும் அரணை அழித்ததைச்சுட்டுவதாக அமைதல் காணலாம். எனின், அரணழித்த மறத்தைக் கூறின் உழிஞை என்றும், அதனைப் பாராட்டிப் புகழின் பாடாண் என்றும் கொள்ளுதல் வேண்டும். வாகையில் வரும் கிணைநிலை, நெற்களத்தில் வேளாளனின் விழுப்புகழைக் கிணைவன் கூறுவதாகவும், பாடாண் பகுதியில் வருவது போர்க்களத்தில் வேந்தனின் மேம்பாடு உரைப்பதாகவும் அமைதல் சுட்டத்தக்கது.

இனி, பு. வெ. மாலைக்குப் பின்னர் எழுந்த இலக்கண நூல் களில் பாடாண் திணைக்குரிய துறைகள் இடம் பெறுமாற்றைச் சிந்திப்போம்.

(ஆ) பின்னூல்களில்

வீரசோழியத்தில், புகழ்ச்சி முதல் வள்ளி ஈறாக ஆறு துறை களை மட்டுமே சுட்டிச் சொல்லி, ''செப்பாதனவும், இகட்சி உண்டாகா வகை தேர்ந்தறிதல் இயல்புடைத்தே'' (104) என்று உளப்படுத்தி ஓதப்பெற்றது. உரையாசிரியரும், 'பிறவும் அன்ன' என்று சுட்டிச் சென்றார். மேலும்

இலக்கண விளக்கம் பெரும்பாலும் பு. வெ. மாலையினைப் பின்பற்றியே செல்வது. எனின், தொல். நெறிநின்று,

''பாடாண் திணையே கைக்கிளைப் புறனே'' (616) என்று இயம்பி, அதன் விளக்கமாக,

''பாடுதற் குரிய ஆடவன் தனாது
பாடமை ஒழுக்கம் பாடும்அந் நெறித்தே''

என்ற வரையறையும் வழங்கியது. துறைகளை எண்ணுங்கால் ஒரோவழி தொல்காப்பியத் தொடர்கள் அப்படியே எடுத்தாளப் பெறுதல் காணலாம். பு. வெ. மா. சுட்டும் வாயினிலை என்னும் துறையினைக் கடைநிலை என்னும் பழைய குறியீட்டினால் சுட்டினார் இந்நூலார்.

மாயவன் நிறத்துடன் ஒத்த பூவைப் புகழ்தல் பூவைநிலை என்னும் துறை என்பர் ஐயனாரிதனார். இதனை ஏற்றுக் கொண்ட வைத்தியநாத நாவலர், கூடுதலாகப் பூவை நிலைப் பக்கம் என்ற ஒருதுறையினை எண்ணியுள்ளார். அரசன் ஒருவனைத் திருமாலுடனும் அன்றிப் பிற தெய்வங்களுடனும் உவமித்துப் போற்றுதல் பூவைநிலைப் பக்கம் என்று கொள்ளப் பட்டது.

பு. வெ. மா. இயல்மொழி வாழ்த்தின் ஒருவகையாகக் கூறிய பகுதியை (195), இ. வி. இயல்மொழி வாழ்த்துப்பக்கம் என்று புதுப்பெயர் தந்து வழங்கியது. அவ்வாறே மங்கலநிலையின் இரண்டாம் பகுதியை (199) மங்கல நிலைப்பக்கம் என்றும், விளக்குநிலையின் இரண்டாம் கூற்றினை (201) விளக்குநிலைப் பக்கம் என்றும் இந்நூல் எண்ணியது. துறைகளின் நீண்ட பெயர் களைச் சுருக்கிச் சொல்லுதலும் இந்நூலின் நெறியாகத் தோன்று கிறது. சான்றாகக் கபிலைநிலை, புலவி முதலிய துறைப் பெயர் களைக் கூறலாம். ஊரின்கண் தோன்றிய காமப்பகுதியைப் (239) பதிநிலை என்ற பெயரினால் இந்நூல் குறித்தது.

சுவாமிநாதம் பெரும்பாலும் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றிச் செல்லுவது. பாடாண்திணைக்குக் கடைநிலை முதல் ஓம்படை நிலை வரை ஓதப்பெற்ற துறைகள் உரியன. இவற்றைக் கூறும் வரிசையிலும், வழங்கும் பெயர்களிலும் சிறுமாற்றம் காணப் படுகிறது. மடலேறுதல் என்பதை ஒரு துறையாகச் சுட்டி யுள்ளார் இந்நூலார். இது பெருந்திணையினைக் குறிக்கவே வழங்கப்பெற்றது எனலாம். மழைக்குறி என்ற புதுத்துறை தோன்றினும், அது வெள்ளி நிலையின் பக்கமாகக் கொள்ளப்படும். தாம் மேற்கொண்ட விருத்த யாப்பில் நூற்பா யாப்புக்குரிய துறை களை எடுத்துக் கூறும்பொழுது எதிர்ப்பட்ட சிரமங்களைத் தவிர்க்கவே சாமிகவிராயர் மேற்சுட்டிய சிறுமாற்றங்களைச் செய்துள்ளார் எனலாம்.

இதுகாறும் பாடாண்திணை பற்றியும் அதற்குரிய துறைகள் பற்றியும் தொன்னூல் முதல் பின்னூல்கள் வரை தோன்றி வளர்ந் துள்ள கருத்துக்களைக் குறித்து விரிவாக ஆராய்ந்தோம்.

ஆய்வின் முடிபுகள்

பாடாண்திணை பற்றி இவ்வியலில் மேற்கொள்ளப்பெற்ற ஆய்விற் கண்டறிந்த இன்றியமையாத சில உண்மைகளையும் முடிபுகளையும் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1) அக ஒழுகலாறாகிய ஐந்திணையும், அவற்றுக்குப் புறமாக எண்ணப்பெறும் வெட்சி முதல் வாகையீறாக உள்ள புறத்திணை ஐந்தும் மட்டும் அடையாளப் பூக்களினால் பெயர் பெற்றன. அகத்தில் எஞ்சிய பெருந்திணை, கைக்கிளை என்பன இரண்டும், அவற்றின் புறமாக எண்ணப்பெறும் நிலையாமைக் காஞ்சியும் பாடாணும் அடையாளப் பூக்களினால் சுட்டப் பெறவில்லை.

2) புறப்பொருள் இலக்கண நூல்களில், பாடாண் என்பதன் பொருண்மையினை நூற்பா வடிவில், இலக்கண விளக்கம் மட்டுமே வரையறை செய்துள்ளது.

3) மனிதமேம்பாட்டிற்கு அடிப்படையாகவுள்ள ஒருவனின் அருஞ்சாதனைகளையும் விழுமிய பண்புகளையும் பாடுபொருளாகக் கொண்டவை பாடாண்திணைப் பாடல்கள் எனக் கருதலாம்.

4) அமரர் என்ற சொல்லிற்குப் போர்வீரர் என்று நாவலர் பாரதியார் பகரும் கருத்திற்குப் பெருங்கதை சான்று பகர்கிறது. இதற்குப் பரியாயப் பெயர்களாக வழங்கும் தேவர், வானவர் என்ற சொற்கள் மறவரையும் குறித்தல் அறியத்தக்கது.

5) பாடாண்துறையாகிய இசைத்துறைக்குரிய பாடலைச் செந்துறை மார்க்கம் என்றும் ஆடல் துறையாகிய நாடகத்துறைக்குரிய பாடலை வெண்டுறை மார்க்கம் என்றும் வழங்குதல் மரபு.

6) 'முன்னோர் கூறிய குறிப்பு' என்ற தொல்காப்பியத் தொடரில், முன்னோர் என்ற சொல் தொல்காப்பியர்க்கு நெடுங்காலத்திற்கு முன்னர்ப் புறத்திணைப் பொருள் இலக்கணம் எழுதிய ஆசிரியர்களைக் குறித்தது.

7) பாடாண்திணைக்கு ஓதப்பெற்ற சில துறைகள் பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ், உலா, தசாங்கம், சின்னப்பூ, இயன்மொழி, கடைநிலை, கண்படைநிலை, பள்ளியெழுச்சி, வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து, அவையடக்கியல், ஆற்றுப்படை, நாண்மங்கலம் முதலிய இலக்கிய வகைகளாக வளர்ச்சி பெற்றன.

8) கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பனவற்றிற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்பெறினும், இவை மூன்றும் பகைவரை வென்றுயர்த்த வேந்தனின் கொடிச்சிறப் பினைக் கூறுதல், பகைவர்தம் அரணை அழித்த வெற்றி யைப் பாடுதல், கொற்றம் விளைத்த வீரர்களுக்குப் பரிசில் வழங்குதல் என்ற பொருள் பயப்பன என்று கொள்ளும் விளக்கமே ஏற்புடையது.

9) தொல்காப்பியர் பாடாண்திணைக்கு உரியன என்று சுட்டிக்கூறிய குறிப்பு, செந்துறை வண்ணப்பகுதி, கொற்றவள்ளை என்பன பு. வெ. மாலையில் பாடாண் படலத்தில் பகரப்படவில்லை.

10) பு. வெ. மா. புகன்றுள்ள புலவராற்றுப்படை, பெருந் திணை, வெள்ளிநிலை, நாடுவாழ்த்து, கிணைநிலை, களவழி வாழ்த்து, ஆள்வினை வேள்வி என்பன புதிய துறைகள் என்று எண்ணுதற்குரியவை.

11) இலக்கண விளக்கம் பாடாண்திணைக்கு விளக்கம் கூறும் வகையில் தொல்காப்பியத்தைப் பின்பற்றியிருப்பினும், துறைகளை எண்ணிய வகையில் பு. வெ. மாலையினை அடியொற்றிச் சென்றுள்ளது.

12) சுவாமிநாதம் மடலேறுதல், மழைக்குறி என்பனவற்றைப் புதுத்துறைகள் போலக் கூறியிருப்பினும், அவை முறையே பு. வெ. மாலை. சுட்டிய பெருந்திணை, வெள்ளிநிலை என்பனவற்றைக் குறிப்பன என்று கொள்ளுதல் வேண்டும்.

11. கைக்கிளையும் பெருந்திணையும்

I. அகமா? புறமா?

பாந்தரின் ஒழுகலாறுகள் அனைத்தையும் (1) அகம் (2) புறம் என்ற இருபெரும் பிரிவிற்குள் அடைவு செய்து வரையறைப்படுத்தி அவற்றின் நெறிமுறைகளைப் பொருள் இலக்கணமாகச் செய்தவர் தொல்காப்பியர். அகத்திணை, புறத்திணை ஆகிய இரு தொகுதி ஒழுகலாறுகளையும் ஏழ் ஏழாகப் பாகுபடுத்தியவர், அகத்திற்கும் புறத்திற்கும் இயைபுகண்டு, இதற்கு இது புறம் என்று புறத்திணை இயலில் தெளிவுறுத்தினார். அகத்திணை ஏழென்று எண்ணப் பெறும்பொழுது, அன்பின் ஐந்திணையுடன் கைக்கிளையும் பெருந் திணையும் சேர்த்துத்தான் அகத்திணை ஏழென்று கொள்ளப்படும். தெளிவாக இரண்டிடங்களில் இதனை ஆசிரியர் சுட்டியுள்ளார்.

1) கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப. (பொருள். நூ. 1)

2) கைக்கிளை முதலா ஏழ்பெருந் திணையும்
முற்கிளந் தனவே முறையி னான. (பொருள். நூ. 486)

மேலும், புறத்திணையியலில், 'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே' என்றும் 'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே' என்றும் ஆசிரியர் சுட்டியதால் இவ்விரு திணைகளும் அகத்திணைகளே என்பது அறியப்படும்.

எனின், பன்னிருபடலம்,

''கைக்கிளை என்றா பெருந்திணை என்றாங்கு
அத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே'',
(யா.வி.ப. 570)

என்று இவ்விரு திணைகளையும் அகத்திணை என்று கொள்ளாது அகத்திணைக்குப் புறமாக, —அகப்புறத்திணையாக எண்ணி யிருத்தல் நோக்கத்தக்கது.

தொல்காப்பியர் காதல் ஒழுக்கத்தை மூன்று வகையாகப் பகுத்துக் கூறியவர் :

1) கைக்கிளை 2) ஐந்திணை 3) பெருந்திணை இவற்றுள் ஐந்திணைக்கு மட்டுமே உரிப்பொருள் கூறினார்; நிலம், காலம் என்ற முதற்பொருள் கூறினார்; தெய்வம், உணவு முதலிய கருப்பொருளும் கூறினார். ஐந்திணைக் காதல் ஒத்த அன்புடைய தலைமகன் தலைமகள் ஆகியோரிடம் நிகழ்வது. பத்து வகைப் பொருத்தங்கள் இவர்களுக்கு வரையறுத்துக் கூறப்பட்டன (தொல். பொருள். நூ. 269). பிறப்பு, குடிமை, ஆண்மை (பெண்மை), ஆண்டு, உரு, காதல், நிறை, அருள், உணர்வு, திரு ஆகிய பத்தும் இருவர்க்கும் ஒத்து அமைதல் வேண்டும். அத்தகையோரிடம் நிகழும் காதல் ஒழுக்கம் இலட்சியமானது; புனிதமானது; போற்றத் தகுவது: புலவர்கள் பாட்டிற்குப் பொருளாய் விளங்குவது. எனின், நடைமுறை வாழ்க்கையில் இத்தகு காதலர் அரியராக வேகாணப்பெறுவர். இவ்வுலகியல் உண்மையினை நன்றாக அறிந்தவராகிய இளம்பூரணர்,

> ''அஃதேல், நடுவண் ஐந்திணையாகிய ஒத்த கூட்டம் பெரு வழக்கிற்றன்றோ எனின், அஃது அன்பும் குலனும் முதலாயின ஒத்துவருவது உலகினுள் அரிதாகலின் அருகி யல்லது வாராது என்க''. (ப, 6)

என்று தெரிந்துரைத்தல் பாராட்டற்பாலது. எனினும், இலக்கியங்களில் இலட்சியக் காதலாகிய ஐந்திணை அன்புதான் மிகுதியும் இடம் பெற்றது.

இந்நிலையில், கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் தூய அகத்திணையாகக் கொள்ளுதற்கு உரையாசிரியர் தயாராக இல்லை. இவ்விரு குறியீட்டிற்கும் இளம்பூரணர் தரும் விளக்கம் இதனை உறுதிப்படுத்துகிறது,

2. கைக்கிளை விளக்கம்

கைக்கிளை என்பதில் கை என்பது சிறுமை. கிளை என்பது உறவு. ஆதலின், கைக்கிளை என்பதற்குப் பெருமை இல்லாத

தலைமக்கள் உறவு என்று விளக்கம் எழுதினார்: இது ஒருதலைக் காமத்தைக் குறிக்கும். ஆண் விரும்பிப் பெண் விரும்பாத நிலையில் ஆண்பாற் கைக்கிளை என்றும், பெண் விரும்பி ஆண் விரும்பாத நிலையில் பெண்பாற் கைக்கிளை என்றும் பன்னிரு படல மரபினர் பாகுபடுத்திக் கூறினர். இதில் ஒருபக்கமும் அன்பு அறவே இல்லை எனின், அகத்திணையாக எண்ணுதற்கு அறவே இடம் இல்லை. ஒரு பக்கம் அன்பு அமைந்து, மறுபக்கம் அன்பு இல்லையாதலின் அகமாகவும் அதற்குப் புறமாகவும் கருதப்பெறுதலின் அகப்புறம் என்னும் பகுப்பிற்குள் கூறத் தருவதாயிற்று.

தொல்காப்பியர்,

''காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே'' (நூ. 53)

என்று கைக்கிளையின் இலக்கணத்தைச் சுட்டினார். இந்நூற்பா ஆண்பாற் கைக்கிளையினை மட்டுமே சுட்டுவது. காமக் குறிப்பிற்குப் பக்குவப்படாத சிறுமியுடன் ஒரு தலைவன் இவளை மனைவியாகக் கொள்ளவேண்டும் எனக்காதல் பெருகி மருந்து பிறிதில்லாப் பெருந்துயர் எய்துகிறான். தனது நன்மையும் அவளது தீங்கையும் குறித்த சொற்களைத் தன்னொடும் அவளொடும் பெருக்கிச் சொல்லி, அதற்கு இசைவாக எதிர்மொழி பெறாது பின்னும் தானே சொல்லி, அச்சொல் அளவினால் மட்டுமே இன்புறுதல் கைக்கிளைக் குறிப்பு என்று சொல்லப்படும். எனவே, இதில் ஒருமருங்கு பற்றிய காதலே காணப்படுதலின், அகப்புறமாகக் கருதப்பெற்றது.

இனி, இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர் நிகழும் காட்சி, ஐயம், தெரிதல், தேறல் என்ற நான்கும் கைக்கிளைக்கு உரியவை என்பர் நச்சி. கைக்கிளை வெற்றிபெறின் ஐந்திணையாகப் பொலிவு பெறும்.

மறையோர் மன்றல் எட்டனுள் ஒருபுடை ஒப்புமையான் அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன மூன்றும் கைக்கிளைக்கு உரிய என்பர்.

3. பெருந்திணை விளக்கம்

இனி, பெருந்திணைக்கு உரிய பொருண்மையினை நோக்கு வோம். சொல்லளவில் பார்த்தால் பெருமைக்குரிய ஒழுக்கம் என்று கொள்ளத் தோன்றும். எனின், பொருந்தா ஒழுக்கமாக இது காணப்படுதலின் இதனை மங்கல வழக்கமாகக் கொள்ளுதல் வேண்டும். இளம்பூரணர் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

1) நடுவண் ஐந்திணை ஆகிய ஒத்த காமத்தில் மிக்கும் குறைந்தும் வருவது பெருந்திணை.

2) பெரும்பான்மையான மணங்கள் இதன்கண் அடங்குதலின் இப்பெயர் எய்திற்று. மறையோர் மன்றல் எட்டினுள், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கு மணங்கள் இதன் பாற்படும்.

3) இந்நான்கு மணங்களும் பெருமையுடையோராகிய மேன்மக்கள்மாட்டு நிகழ்தலின் பெருந்திணை ஆயிற்று.

4) இவை உலகினுள் பெருவழக்கு. எனவே இப்பெயர் பெற்றது, இதுவே கூடுதலான பொருத்தம் வாய்ந்த காரணம் எனலாம்.

கைக்கிளையினை ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை யினை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிது என்றும் இவர் குறித்துள்ளார் (ப. 6).

பெருந்திணைக்குரிய இலக்கணத்தை,

''ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே'' (நூ. 54)

எனவரும் நூற்பாவில் தொல்காப்பியர் தெளிவாகக் குறித்துள்ளார் பெருந்திணை என்பது பெருகிய காமம். அது நான்கு திறமாக வெளிப்படும். அவையாவன:

1) ஏறியமடல்திறம்

தான் விரும்பிய தலைவியைக் கூடுதற்கு மடல் ஏறுவேன் என்று சொல் அளவில் கூறுதல் ஐந்திணையின்பாற்படும். செயல்

அளவில் வெளிப்படுதல் பெருந்திணை. இங்குச் சுட்டப்பெறும் ஏறிய மடலதிறம் பெருந்திணைக்கு உரியது.

2) இளமை தீர்ந்த திறம்

காதல் வாழ்க்கைக்கும் இளமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனின், இளமை தீர்ந்த பிற்பாடும் காமம் தொடர்தல் பெருந்திணையாகும். இளமை தீர்தல் மூன்று வகை:

அ) தலைமகன் முதியவனாகித் தலைமகள் இளையவளாக இருத்தல். இப்படிச் சில பொருந்தாமணம் நிகழின், அது பெருந்திணை எனப்படும்.

ஆ) தலைமகள் முதியவளாகித் தலைமகன் இளையவனாதல். இதுவும் பொருந்தாக் கூட்டமே.

இ) இருவருமே இளமைப் பருவம் நீங்கியவழி, அறத்தின் மேல் மனம் செல்லாமல் காமத்தின்மேல் மனம் செல்லுதல் ஒருவகையில் பெருந்திணையே.

பெருந்திணையின் இவ்வகைமைகளை விளக்கும் பொருட்டு இளம் பூரணர் பு. வெ. மாலையில் உள்ள பெருந்திணைப் படலத்திலிருந்தும் மற்ற இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள் செய்யுட்கள் வழங்கியுள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது.

3) தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதி

தெளிவு நீங்கிய காமத்தின்கண் மிகுதல் என்றார் இளம். இது பெரும்பான்மையும் தலைமகனிடம் நிகழ்வது என்பது அவர் கருத்து. இருபாலார்க்குமே இது நிகழ்வதற்கு உரியது எனலாம்.

4) மிக்க காமத்து மிடல்

ஐந்திணைக்கண் நிகழும் தூய காதலின் மாறுபட்டு வருவது இது. இதனை இளம்பூரணர்,

(அ) ஆண்பாற் குரியவை

(ஆ) பெண்பாற் உரியவை

என்று இரு பகுதியாகப் பிரித்து விளக்கினார். கைக்கிளை எங்ஙனம் ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என்று

இருவகைப் பட்டனவோ, அங்ஙனமே பெருந்திணையினையும் ஆண்பாற் பெருந்திணை, பெண்பாற் பெருந்திணை என்று இரண்டாகப் பகுத்துக் காண்கிறார் உரையாசிரியர்.

இவற்றுள், முதற் பிரிவிற்குள் வற்புறுத்தும் துணையின்றிச் செலவழுங்குதல், ஆற்றருமை கூறுதல், இடையூறு கிளத்தல், அஞ்சிக்கூறுதல். மனைவி விடுத்தலின் பிறள் வயிற் சேறல் முதலிய கிளவிகளை அடக்கினார்.

இரண்டாம் வகைக்குள் முன்னுறச் செப்பல், பின்னிலை முயல்தல், கணவனைத் தேடி இரவிற் சேறல், பருவம் மயங்கல் முதலியவற்றை எடுத்துரைத்தனர். மேலும், குற்றிசையும், குறுங்கலியும் இன்னோரன்ன பிறவுமாகி ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன எல்லாம் பெருந்திணை என்று கொள்ளப்படும் என்றார்.

இவற்றுள் ஓரிரு கிளவிகட்கு மட்டுமே பு. வெ. மாலையின் வெண்பாக்களை மேற்கோள் காட்டினார் (பு. வெ. மா. 325,330, 331) இவர் சுட்டிய துறைகளில் பல புறப்பொருள் இலக்கணம் உணர்த்தும் வெவ்வேறு நூல்களில் வழங்கினவாதல் வேண்டும்.

4. கைக்கிளை, பெருந்திணை—தலைமக்கள்

இதுகாறும் சுட்டப்பெற்ற கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டிற்கும் உரிய தலைமக்கள் அடியோர் (Servants) வினைவலர் (—பல்வேறு தொழில்களைத் செய்வோர்), ஏவலர் (—பணிமக்கள்) ஆகிய மூவருமே என்பர் தொல்காப்பியர் (நூ. 25, 26). இவர்கள் அன்பின் ஐந்திணைக்கு உரியர் அல்லர் என்பது இளம்பூரணர் கருத்து.

> ''அகத்திணையாவன அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றின்வழாமல் இயலல் வேண்டும். அவை எல்லாம் மற்றவர்க்குக் குற்றேவல் புரிவார்க்குச் செய்தல் அரிது. மேலும், இவர்கள் நாணம் அற்றவர்கள், வேட்கைவழியே சாரக் கருதுபவர்கள்... இவர் புறப்பொருட்டு உரியராயினார்.''

இவ்வாறு இவர் எழுதுவது இவர் காலத்தில் நிலவிய சமூகப் பிரிவுகள் பற்றிய ஒரு மனப்பான்மையினைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ளல் வேண்டும். தொழிலாளிகள், பணிமக்களிடம் தூயகாதல் (ஐந்திணை) துலங்குதலும், நன்மக்களிடம் பொருந்தாக்

காமம் காணப்படுதலும் உண்டு. பெருந்திணை என்னும் ஒழுகலாறு மேன்மக்களிடம் காணப்பெறுவது என்று இளம்பூரணரே எழுதியுள்ள பகுதியை முன்பு பார்த்தோம்.

தொல்காப்பியத்தில்,

> ''அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்'' (நூ. 25)

எனவரும் நூற்பாவின் கீழ்க்குறிப்பில், 'இது நடுவண் ஐந்திணைக் குரிய தலைமக்களைக் கூறி, அதன் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணைக்குரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று'' என்று வரையப் பெற்றுள்ளது. இந்நூற்பாவில் புறத்து என்ற சொல் கவனிக்கத்தக்கது. இளம்பூரணர், ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணைக்கண்'' என்று உரை எழுதினார். (ப. 27) மேலும், ''எனவே, இவ்வெழுவகைத் திணையும் அகம் புறம் என இருவகையாயின'' (ப. 28) என்றும் எழுதியிருத்தல் எண்ணற்பாலது.

நச்சினார்க்கினியர், 'புறத்து' என்ழ சொல்லிற்கு,

> ''நடுவண் ஐந்திணைப் புறத்து நின்ற
> கைக்கிளை பெருந்திணைகளுள்'' (ப. 52)

என்று உரை கூறினார். 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய், என்ற முதல் நூற்பாவில் ஐந்திணை நடுவணதாகவும், அதற்கு அப்புறத்தும் இப்புறத்தும் முறையே கைக்கிளையும் பெருந்திணையும் இடம்பெறுதலின், அவ்விரண்டினையும் 'புறத்து' என்றார் ஆசிரியர் என்பது இவர் எண்ணம். இவரும் இளம் பூரணரைப் பின்பற்றி,

> ''அறம்பொருள் இன்பம் வழாமை நிகழ்த்துதல் அவர்க்கரிது என்பது பற்றி இவற்றை அகப்புறம் என்றார்'' (ப. 54)

என்று எழுதியிருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. இவர் அகத்திணையியலில் 54 ஆம் நூற்பாவுரையில்,

> ''அகனைந்திணை எனவே அகம் என்பது நடுவுநின்ற ஐந்திணையாதலின், கைக்கிளையும் பெருந்திணையும் அவற்றின் புறத்து நிற்றலின் அகப்புறம் என்றும் பெயர் பெறுதலும் பெற்றாம்'' (ப. 124).

என்று இயம்புதலின், அவர் காலத்தில் கைக்கிளை பெருந்திணை என்பன இரண்டும் அகப்புறம் என்று எண்ணப்பெற்றன என்பது அறியப்படும்.

எனவே, தொல்காப்பிய உரையாசிரியர்கள் இருவருமே அகப்புறம் என்ற பொருட் பாகுபாட்டினைத் தொல்காப்பியர் முத்திரையில் வலியுறுத்தற்கு முயன்றுள்ளனர் என்பது புலனாகும்.

5. பெயர் சுட்டுதல்

ஐந்திணை ஒழுகலாற்றின் தலைமக்கள் பெயரைச் சுட்டிச் சொல்லிப்பாடல் புனைதல் மரபன்று (அகத். 57). அங்ஙனம் சுட்டப்பெறின், அப்பாடல் அகத்திற்குரியதாகாது; புறப்பாட லாகவே கருதப்பெறும் என்பது ஒரு பழைய கருத்து. எனின், கைக்கிளை, பெருந்திணைத் தலைமக்கள் பெயர் சுட்டப் பெறுதலும், பெறாமையும் உண்டு என்றார் நச்சி. பெயர் சுட்டப் பெறா நிலையில் அகத்திணை என்றும், சுட்டப்பெறின் அகப்புறத் திணை என்றும் கொள்ளப்பெறும். அகத்திணை இயலின் இறுதி நூற்பா,

> ''புறத்திணை மருங்கிற் பொருந்தின் அல்லது
> அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே'' (நூ. 58)

என்று அமைகிறது. புறம், அகம் என்ற குறியீடுகளின் வேறாகப் புறத்திணை மருங்கு, அகத்திணை மருங்கு என்ற வழக்குகள் காணப்படுகின்றன. அகன் ஐந்திணைக்குப் புறமாகக் கருதப் பெறும் கைக்கிளை. பெருந்திணை ஆகிய இரண்டும் தலைமக்கள் பெயர் சுட்டப்பெறா நிலையில் அகத்திணை மருங்கு என்று அழைககப்பெறும். எனின். அவர்தம் பெயர் சுட்டப்பெறுதலின், அவ்விரண்டும் புறத்திணை மருங்கு என்று குறிக்கப்பெறும் என்பது பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் கருத்து. (ப. 356),

எனவே, தலைமக்கள் பெயர் சுட்டப்பெறும் ஐந்திணை அகம் ஆகாது புறமாதல்போல, பெயர் சுட்டப்பெறும் கைக்கிளை, பெருந்திணை என்பன இரண்டும் அகம் ஆகாது அகத்திணை மருங்கு அல்லது அகப்புறம் என்று சுட்டப்பெறும் எனலாம்.

அகம், அகத்திணை மருங்கு, புறம், புறத்திணை மருங்கு என்பனவே அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காக எண்ணப்பெற்றன என்பார். இக்கருத்து மேலும் ஆய்விற்கு உரியது.

6. ஏனைய இயல்களில்

கைக்கிளை, பெருந்திணை குறித்துக் களவியலிலும் தொல்காப்பியர் பேசியுள்ளார்:

1) ''முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே''

2) ''பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே''.

இந்நூற்பாக்கள், மறையோர் மன்றல் எட்டனுள் முதல் மூன்றும் (அசுரம், இராக்கதம், பைசாசம்) கைக்கிளைக்கும், பின்னைய நான்கும் (பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம்) பெருந் திணைக்கும் உரியன என்ற கருத்துடையவை என்பர் உரையாசிரியர்.

மெய்ப்பாட்டியலில், கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண் டிற்கும் உரிய மெய்ப்பாடுகள் தொகுத்துரைக்கப்பெற்றன. (நூ. 265, நூ. 266). ஏழாம் அவத்தை நாண் நீங்கிய காதலில் தேறுதல் ஒழிந்தகாமத்து மிகுதியாகிய பெருந்திணையின் பாற்படும் என்றார் இளம்பூரணர். (நூ. 263).

செய்யுளியலில் செய்யுளுக்குரிய உறுப்புக்களில் ஒன்றாகத் திணை பேசப்படுகிறது. சிறப்பாக, 'கைக்கிளை முதலா ஏழ்பெருந் திணையும் (நூ. 486) என்று அகத்திணைகளே சுட்டப்பெற்றன.

பொருள்வகையால் வெண்பாவிற்குரியதாகக் கைக்கிளை யினைக் குறித்திருப்பினும் (நூ. 423), கைக்கிளை ஒழுகலாற்றி னைப்பாடுதற்கு மருட்பாயாப்பு உரியது என்பதைத் தெளிவாகத் தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார் (நூ. 424). அன்றி, தனி வெண்பாவாலும் பாடப்பெற்றிருக்கலாம். எனினும், பு. வெ. மாலையில் கைக்கிளைப் படலத்தின் இடம்பெறும் உதாரணப் பாடல்கள் யாவும் மருட்பா யாப்பில் அமைந்தவையே.

புறத்திணை இயலில், கைக்கிளைக்குப் புறமாகப் பாடாண் திணை சுட்டப்பெற்றதை முன்னர்க் குறிப்பிட்டோம். பாடாண் திணைக்குரிய துறைகளை வகுத்துக் கூறும் நூற்பாவிலும், ''கைக்கிளை வகையொடு உளப்படத் தொகைஇ'' (நூ. 29) என்று ஆசிரியர் கூறியுள்ளார். கைக்கிளை என்னும் திணையின் வேறாகச் சுட்டப்பெறும் கைக்கிளைவகை பாடாண்திணைக்குரிய ஒரு துறையாகவும் எண்ணப்பெற்றது. இளம்பூரணர், ''ஆண்பால்

கூற்றுக் கைக்கிளையும், பெண்பால் கூற்றுக் கைக்கிளையும்'', என்று பொருள் வரைந்து, இவ்விரண்டும் பாடாண்பட்டால் வரும் என்றும் குறித்தனர். நச்சினார்க்கினியர், கைக்கிளை என்னாது கைக்கிளைவகை என்றதால், 'காமப்பகுதி', 'முன்னைய மூன்றும்' என்ற நூற்பாக்களில் சுட்டப்பெற்றவை போலன்றி, தொடக்கத்தில் அன்புடையராய் வாழ்ந்து, பின்னர் யாதானும் ஒரு குறைபாட்டினால் ஒருவரை ஒருவர் துறந்தபின்னர் நிகழும் ஒருதலைக் காமம் என்று விரித்துரைத்தனர். ஐந்திணைக்காதலில் ஏற்படும் முறிவுகள் இருவரையும் பிரித்த பின்னரும், கடந்த காலத்தில் இருவருக்கும் ஏற்பட்ட இன்ப அனுபவங்கள் சிலவற்றை இப்போது எண்ணிப்பார்த்துத் தமக்குள் ஒரு பக்கமாகக் கொள்ளும் காமமே இங்குக் கைக்கிளை வகை என்று சுட்டப்பெற்றதாகக் கொள்ளுதல் வேண்டும். இதுவும் நடப்பியலுடன் ஒத்ததாகக் கருதப்பெறுதற்கு உரியது. இதுவும் புலவரால் பாடுதற்கு உரிய துறை என்ற கருத்தின் பாடாண்திணையில் சேர்க்கப்பெற்றது. இதனை நாம் அகம் என்று கொள்ளாது அகப்புறம் என்றே கருதல் வேண்டும்.

இனி, சங்க இலக்கியங்களில் இவ்விருதிணைகள் இடம் பெற்ற திறத்தினைச் சிறிது நோக்குவோம்.

7. புறநானூற்றில் கைக்கிளையும் பெருந்திணையும்

தலைமக்களின் பெயர் சுட்டப்பெறுமாயின் அகத்திணைக்குரிய கைக்கிளை, பெருந்திணை என்பன இரண்டு அகப்புறம் என்று எண்ணப்பெறும். அவ்வாறே பெயர் சுட்டப்பெற்ற அன்பின் ஐந்திணையும் அகமாகக் கருதப்படாது; வெளிப்படையாகச் சொல்லப்பெறுதல் அகத்திணை இலக்கியதிற்கு ஒவ்வாத ஒரு செயலே. எனவே, பெயர் சுட்டப்பெற்ற கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை ஆகிய மூன்றிற்கும் உரிய பாடல்கள் புறநானூற்றில் தொகுக்கப்பெற்றிருத்தல் தொல்காப்பிய விதிகளை வழுவாது பின்பற்றிய ஒழுங்கினைக் காட்டுகிறது. இங்குக் கைக்கிளை, பெருந்திணை என்பன இரண்டும் பற்றிய குறிப்புக்களை முதலில் நோக்குவோம்.

நக்கண்ணையின் கைக்கிளை

சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளியை நக்கண்ணையார் என்ற பெண்பாற்புலவர் காதலித்தார். அவர் தந்தை பெருங்கோழி

நாய்கன். சிலப்பதிகாரத்தில் சுட்டப்பெறும் கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கன் போல் இவன் வணிகனாதல் வேண்டும். வணிகக் குடியில் வந்த வனிதை, அரசக் குடியில் தோன்றிய சோழனைக் காதலித்தாள். எனின், அக்காதல் ஒருதலைக் காதலாக முடிந்தது. முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைப் பெருநற்கிள்ளி பலரறிய மற்போரில் தோல்வியுறச் செய்த காட்சிகளைக் கவின்மிகு சொல்லோவியமாக நக்கண்ணையார் புனைந்துள்ள பாடல்களினால், அச்சோழனிடம் அப்பெண் கொண்டிருந்த அளவற்ற காதல் வெளிப்படுகிறது. அவன்பால் கொண்ட காதலுக்கு அடையாளமாக அணிந்துள்ள தொடியினைக் களையின், அன்னையின் கடுஞ்சினத்திற்கு ஆளாகவேண்டும். ஓடிப்போய் அவன் தோளைக் கட்டிக்கொண்டு முயங்கலாம் எனின், அவையோர்க்கு நாணுதல் வேண்டும், ஒரு வழியும் செல்ல முடியாமல் துன்புறும் தன்னைப் போலவே ஊரும் விதுப்புறுக என்று சபிக்கிறாள் நக்கண்ணை (புறம். 83). இவள் பாடிய மூன்று பாடல்களும் பெண்பாற் கைக்கிளைக்கு உரிய இனிய கவிதைகள் (83, 84, 85). இவை சுயசரிதையாகக் கொள்ளற்கு உரியவை. தலைவனின் ஆற்றலையும் அருங்குணங்களையும் இப்பாடல்கள் எடுத்துரைப்பதால் இவை பழிச்சுதல் என்னும் துறைக்குரியவை என்று சுட்டப்பெற்றன.

கண்ணகியின் பெருந்திணை

சங்ககாலத்துப் பெரு வள்ளல்களில் ஒருவனாகத் திகழ்ந்த பேகன் யாது காரணம் பற்றியோ தன் மனைவி கண்ணகியைத் துறந்துவிட்டான். காப்பியத்தில் கண்ணகியைத்துறந்து மாதவியை அடைந்த கோவலன் செயல் குறிக்கப்படுதல் போல் பேகன் மற்றொரு மங்கையை அடைந்து கொண்டவளை மறந்த செய்தி குறிக்கப்பட்டது. ஐத்திணைக் காதலர்தம் வாழ்வில் இப்படி திடீரென்று திருப்பங்களும் மாற்றங்களும் ஏற்படுதற்கு உடம்பில் மிகையாக ஏற்படும் பாலுணர்வும், ஐயமும், புரிந்துணராமையும், விட்டுக் கொடாமையும், பொறுத்தல் இன்மையும் ஆகியவற்றில் சிலவோ பலவோ காரணங்களாக அமையலாம். எனினும், பிரிந்திருக்கும் நிலையில் அவர்கள் காதலை ஐந்திணைக்கண் அடக்காமல் பொருந்தாக்காமம் ஆகிய பெருந்திணைக்கண் அடக்குதல் புறநானூற்று மரபாகத் தோன்றுகிறது. கண்ணகியை மீண்டும் பேகனிடம் இணைக்கவேண்டும் என்ற அருள் உள்ளத்துடன் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய நால்வரும் பாடிய சமுதாய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

பாடல்கள் பெருந்திணைக்கு உரியனவாகப் புறநானூற்றில் தொகுக்கப் பெற்றுள்ளன. தலைவன் தன்னைத் துறந்து மறந்ததை எண்ணி எண்ணி நைந்துருகிக் கண்ணகி அழுது புலம்பிய அவலத்தினை,

''இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
குழல்இனை வதுபோல் அழுதனள் பெரிதே''.
(புறம். 143 : 13-15)

என்ற கபிலர் சொல்லோவியம் புலப்படுத்துகிறது. பேகன் மற்றொருத்தியை நாடிச் சென்றதைக் கண்ணகி பரணர்க்குக் கண்ணீர் வடித்துக் கூறியதை,

''..........................
நீல்நறு நெய்தலின் பொலிந்த உண்கண்
கலுழ்ந்துவார் அரிப்பனி பூண்அகம் நனைப்ப
இனைதல் ஆனா ளாக, இளையோய்!
கிளையைமன் எம்கேள் வெய்யோற் கென
யாம்தற் றொழுதனம் வினவக் காந்தள்
முகைபுரை விரலின் கண்ணீர் துடையா
யாம்அவன் இளைஞரேம் அல்லேம்; கேளினி
எம்போல் ஒருத்தி நலன்நயந் தென்றும்
வருஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென ஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே''. (144 : 4-14)

என்ற பாடல் தெளிவாகப் புலப்படுத்துகிறது. புலவர்கள் தமக்கு எப்பரிசிலும் தேவையில்லை; கண்ணகிக்கு மீண்டும் வாழ்வு தருதல் வேண்டும் என்று பேகனிடம் முறையிடுவதை இப்பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன (145, 146, 147).

போர் நிகழும் பொழுது அமைதிப்படுத்துவதற்கு விரையும் சங்கப் புலவர்கள், குடும்பத்தில் நிகழும் போரையும் களைந்து அமைதி ஏற்படுத்தற்குப் பெரிதும் முயன்றுள்ள அருள் உள்ளத்தை இப்பாடல்கள் உணர்த்துகின்றன. எனினும், பேகன் தன்போக்கை மாற்றிக் கொண்டதாகக் குறிப்பில்லை. மேற்சுட்டிய ஐந்து பாடல்களும் பெருந்திணைக்கு உரியனவாகத் தொகுக்கப் பெற்றன. இவை குறுங்கலி என்னும் துறைக்கு உரியவை. பண்ணவாம் தீஞ்

சொல்லும், பவளச் செவ்வாயும் பெண்ணவாம் பேரல்குற் பெய்வளையாகிய தலைவின் தொன்னலம் உண்ட தலைமகன் தொடர்பினை விடுவது சால்போ என்று கூறும் பொருண்மை குறுங்கலி என்னும் துறைக்கு உரியது என்பர் ஐயனாரிதனார் (பு. வெ. மா. 342). தாபதநிலையும் இப்புறப் பாடலுக்குரிய துறையாகச் சுட்டப்பெற்றது. துறந்த தலைவனையே தொடர்ந்து பெறுதல்வேண்டும் என்று தவமிருக்கும் தையலின் நிலை தாபதநிலை எனப்படும்.

எனவே, புறநானூற்றில் இடம்பெறும் கைக்கிளை, பெருந்திணை என்பன இரண்டும் பன்னிருபடலத்தார் சுட்டும் புறத்திணைகளில் எண்ணப்பெறுவன என்பது தெளிவு.

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடிய சில பாடல்கள் இருவர்க்கும் இருந்த நெருங்கிய காதலைக் குறிப்பனவாகக் கொள்ளுதற்குரியன (எ. டு. புறம். 235) ஐந்திணைப் பொருண்மை இருப்பினும் இயற்பெயர் வருதலின் இப்பாடல்கள் புறமாக எண்ணப் பெற்றன.

இனி, ஐந்திணைக் காதலைப் பாடும் கலித்தொகையில் சுட்டப் பெறும் கைக்கிளை, பெருந்திணை பற்றிச் சிந்திப்போம்.

௨. கலித்தொகையில் கைக்கிளை, பெருந்திணை

கலித்தொகை திணை அடிப்படையில் பாடப்பெற்ற 150பாடல்களைக் கொண்ட காதல் இலக்கியம். பாலைக்கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக் கலியைக் கபிலரும், மருதக்கலியை மதுரை மருதனிளநாகனாரும், முல்லைக் கலியைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தற்கலியை மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் பாடியுள்ளார். இங்ஙனம் ஐந்திணையும் ஐவரால் பாடப்பெற்றிருப்பினும், இவற்றைக் கலித்தொகை என்ற பெயரில் தொகுத்தவர் நல்லந்துவனார் என்பது நச்சினார்க்கினியரின் உரைக்குறிப்புக்களினால் அறியலாம். அன்பின் ஐந்திணை பற்றிய இந்தப் பனுவலில், அகப்புறம் ஆகிய கைககிளை, பெருந்திணை குறித்த பாடல்களும் விரலிக் கோக்கப் பெற்றுள்ளன. இக்கருத்தினை,

> ''ஆயின், 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய், முற்படக் கிளந்த எழுதிணை என்ப' என்றலின் கைக்கிளையும் பெருந்திணையும் கோத்தல் வேண்டும் எனின், அஃது 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்பதனால், அவை உரிப்பொருள் அன்மையின் நால்வகை நிலத்தினும்

மயங்கி வரப்பெறும் என்றார். ஆகலின், இத்தொகைக கண்ணும் அவை மயங்கிவரக் கோத்தாரென்று விடுக்க. அவை வரவரப் பாட்டுக்கள் வந்துழி அவற்றுட் காட்டுதும்'' (ப. 7).

என்று நச்சினார்க்கினியர் சுட்டுதலினால் பெறப்படும். அகத்திணையில் உரையிலும் கலித்தொகைப் பாடல்கள் சிலவற்றைக் கைக்கிளை, பெருந்திணைக்கு மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

முதலில் கலித்தொகையில் காணப்பெறும் கைக்கிளைப் பாடல்கள் பற்றிக் காண்போம்.

கைக்கிளைப் பாடல்கள்

1) ''ஊர்க்கால் நிவந்தபொதும்பருள்'' எனத் தொடங்கும் குறிஞ்சிக்கலி (56), காமஞ்சாலா இளமையோளைக் காமுற்ற தலைவன் கூற்றாக இளம்பூரணர் உரையில் எடுத்தாளப் பெற்றது (ப. 64). இப்பாடலின்கீழ், கைக்கிளைக்குரிய தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்காட்டி, ''தருக்கிச் சொல்லிச்சொல்லெதிர் பெறான் இன்புற்றது'' என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார் (ப. 164). இங்ஙனம் கைக்கிளைக்குரிய பாடலைக் குறிஞ்சித்திணையில் சேர்த்தல் சரிதானா என்ற வினாவிற்கும் இவர் பின்வருமாறு விடையிறுத்தார் :

'இது புணர்தல் நிமித்தம் ஆதலின் குறிஞ்சியுள் கோத்தார்'' (ப. 167)

கைக்கிளை வெற்றிபெற்றால் குறிஞ்சிக்குரிய கூடுதல் நிகழும் என்பது கருத்து. இங்ஙனம் இவர் உரையில் பல இடங்களிலும் 'கோத்தார்' என்ற சொல் பயின்று வருதலின், உதிரியாகக் கிடந்த பாடல்களைத் திணைப்படுத்தி அடைவு செய்து தொகையாக்கிய பணியைச் செய்து முடித்தவர் நல்லந்துவனார் என்று எண்ண வேண்டியுள்ளது.

2) ''வேயெனத் திரண்ட தோள்'' என்ற குறிஞ்சிக்கலி 57ஆம் பாடலும் கைக்கிளைக்கு உரியது என்றார். இஃது 'ஏமம் சாலா இடும்பை எய்திக்' கூறியது என்றார்.

3) '' வாருறு வணர்ஐம்பால் '' என்ற 58 ஆம் பாடல், '' சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புற்ற '' கைக்கிளை என்றார்.

இங்ஙனம் குறிஞ்சித்திணை பற்றிய பகுதியில் கைக்கிளைக்கு உரியனவாக மூன்று பாடல்கள் வந்தன.

4) முல்லைக் கலியில், "காராரப் பெய்த" எனத் தொடங்கும் பாடலும் (109) இத்திணைக்கு உரியது என்றார். இது, காமஞ்சாலா இளமையோளவயின், ஏமஞ்சாலா இடும்பை எய்திக் கூறியது.

5) 'யாரிவன்' எனத்தொடங்கும் 112 ஆம் பாடலும் கைக்கிளைக்கு உரியது என்றார். வினைவலராகிய தொழிலாளிகளைத் தலைமக்களாகக் கொண்டு பாடப் பெற்றது இப்பாடல். இங்ஙனம் வருதல் அகப்புறத்திற்கு உரியது என்பது தொல்காப்பியர் கருத்து (அகத். நூ. 25).

6) 'நலமிக' எனத் தொடங்கும் அடுத்த பாடலும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்தம் எளிய காதலைப் பேசுதலின் கைக்கிளை என்று குறிக்கப்பெற்றது.

இங்ஙனம் முல்லைத்திணை பற்றிய பகுதியிலும் கைக்கிளைக்கு உரிய பாடல்கள் விரவி வந்தன.

இனி, கலித்தொகையில் பெருந்திணைப் பாடல்கள் கலந்து வந்த திறத்தையும் காண்போம்.

பெருந்திணைப்பாடல்கள்

1) "ஏஎ இஃதொத்தன்" என்ற குறிஞ்சிக்கலிப் பாடல் பெருந்திணைக்கு உரியது (62). இஃது, "ஏறிய மடல் திறம்" என்னும் சூத்திரத்து, 'மிக்க காமத்து மிடல்' என்றதனால் தலைவனும் தலைவியும் உறழ்ந்து கூறித் தலைவி கூடக் கருதிய பெருந்திணை என்று விளக்கக் குறிப்பும் கொடுக்கப்பெற்றுள்ளது. இதனை அகத்திணையியல் உரையிலும் எடுத்துக்காட்டி இவ்வாறே சுட்டினார் நச்சி.

எனின், இளம்பூரணர் இதே பாடலைக் கைக்கிளைக்கு உரியதாகக் கொண்டனர்:

"இதனுள், 'வெளலிக் கொளலும் அறன்எனக் கண்டன்று' எனவும், 'நீர்க்கினிதென் றுண்பவோ நீருண் பவர்' எனவும் தலைமகன் கூறுதலானும், தலைமகள் முன்இழித்துரைத்

தலானும், ஊடியுணர்வாள்போல உடன்பட்டமை யானும், இஃது உயர்ந்தோர் மாட்டு வந்த கைக்கிளை'' (அகத் நூ. 26. உரை).

எனவரும் உரைப்பகுதி எண்ணுதற்கு உரியது. இவர்க்குச் சில நூற்றாண்டுகள் பிற்பட்டு வந்த நச்சினார்க்கினியர் இதே பாடலைப் பெருந்திணைக்கு உரியது என்ற விளக்குதலினால், அவரவர்தரும் விளக்கத்திற்கு ஏற்பத் திணை நிலை கொள்ளப்படும் என்று கருதலாம்.

2) 'என்னோற்றனை கொல்லோ' என்ற மருதக்கலிப்பாடல் (94) சுட்டும் திணை பற்றி இளம்பூரணர் கொண்ட கருத்தினை நோக்குவோம்:

''இதனுள் ஒருவரை ஒருவர் இழித்துக் கூறினமையால் அடியார் என்பதூஉம், மிக்க காமத்தில் வேறுபட்டு வருதலான் பெருந்திணைப்பாற்படும் என்பதூஉம் கண்டு கொள்க. இதுதானே கைக்கிளைக்கும் உதாரணமாம் (நூ. 25 உரை).

ஒரு பாடலையே ஒருவகையால் பெருந்திணைக்கு உரியதென்றும், பிறிதொரு நோக்கில் கைக்கிளைக்கு உரியதென்றும் இருவேறு உரையாசிரியர்கள் எண்ணினர் என்பதை முன்னர்ப் பார்த்தோம். ஆயின், இங்கு ஒரே உரையாசிரியர் அத்தகு கருத்துக்கொண்டிருக் கிறார் என்பதை நோக்க வியப்பாகவே உள்ளது.

அடியோர் (Servants) ஆகிய கூனும் குறளும் உறழ்ந்து கூறு வதாக அமையும் இப்பாடல் (94), 'கொக்குரித் தன்ன' எனத் தோல் திரைந்தமை கூறுதலின், இளமைதீர்திறம் ஆகிய பெருந் திணை யாயிற்று என்று நச்சி. கூறுதல் பொருத்தம் மிக்கதாகத் தோன்றுகிறது.

3) 'நறவினை வரைந்தார்க்கும்' என்ற மருதப்பாடல் (99) புறநானூற்றில் வரும் பேகன் மனைவி பற்றிப் புலவர்கள் பாடிய பாக்களைப் போல் பெருந்திணைக்குரியதாகக் கொள்ளப்பெற்றது. ''இஃது அரசன் தலைவனானவன் தலைவியை நீக்கி இருந்ததற்குத்தலைவி புலவி நீட்டித்து ஆற்றாளாயவழி அவட்கு நிகழ்ந்த காமத்து மிகுதிறந்தை அவ்வரசனை நோக்கிச் சான்றோர் கூறியது. இது பெருந்திணை'' என்று எழுதப்பெற்றுள்ள குறிப்பு சுட்டத் தக்கது.

4) இவ்வாறே 100ஆவது பாடலும் பெருந்திணைக்கு உரிய தாகச் சுட்டப்பெற்றுள்ளது.

5) முல்லைக்கலியில், 'கடிகொள் இருங்காப்பில்' என்ற பாடல்(110) அகப்புறக் கலிவெண்பாட்டு என்று குறிக்கப் பெற்றது. வெண்ணெய் விற்கச்சென்ற இடைப்பெண்ணை, அவளை ஒத்த சமுதாய அந்தஸ்து உடைய தலைவன் ஒருவன் அடங்கா வேட்கையால் அவள் மெய்யைத் தீண்டித் தனது ஆற்றாமையினை அறிவித்தான். அவள் வெட்கம் கெட்டவள் அல்லள்; அவனை விடவும் மனம் இல்லை. எனவே, நாளை கன்று மேய்த்தற்கு வரும் புலத்தில் கண்டுபேசலாம் என்று இடம் கூறியதாக வரும் இப்பாடலைப் பெருந்திணை என்று கொண்டனர். இரு மருங்கும் அன்பு இருப்பினும், பொது இடத்தில் கூடுவதற்கு முற்படுதலும், வெளிப்படையாக வேட்கைப் பெருக்கைக் கொட்டுதலும் அகம் ஆகாது, அகப்புறம் ஆகும் என்பது அக்காலத்து வாழ்வியற் கொள்கை.

6) மடலேறுகின்ற தலைமகன் சான்றோரை விளித்துக் கூறுவதாக அமைந்த 139ஆம் நெய்தற் பாடலும் பெருந் திணைக்கு உரியது.

7) 'புரிவுண்ட புணர்ச்சியுள்' (142) என்ற நெய்தற்கலி, மிக்க காமத்து மிடலாகிய பெருந்திணை பற்றியது என்பர் இளம்பூரணர் (தொல். பொருள். ப. 97-9). இவரைப் பின்பற்றி இன்னும் விரிவாக விளக்கினர் நச்சி.

(கலி. ப. 439-440)

8—12) இவ்வாறே நெய்தற்கலி (143—147) என்ற பாடல்கள் ஐந்தும் பெருந்திணைக்கு உரியவை என்பது நச்சி. கருத்து.

இதுகாறும் ஐந்திணைக் காதல் இலக்கியமாகிய கலித் தொகையில் கைக்கிளை, பெருந்திணை பற்றிய பாடல்களும் இடம் பெற்ற உண்மையினைக் கண்டோம். இவை பெயர் சுட்டப் பெறாமையின் அக இலக்கியமாகிய கலித்தொகையில் தொகுக்கப் பெற்றன. பெயர் சுட்டப் பெற்றிருப்பின், புறத்தில் சேர்க்கப் பெற்றிருக்கும். இவ்வாறே குறுந்தொகை, அகநானூறு முதலிய அக இலக்கியங்களையும் ஆராய்ந்து பார்க்கின், இவ்விரு திணை கட்கும் உரிய பாடல்கள் ஒரு சிலவேனும் உண்மையினை

அறியலாம். ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், ஔவையார் முதலியோர் பாடல்கள் பெயர் சுட்டப் பெறாமையின் அன்பின் ஐந் திணையாக எண்ணப் பெறுகின்றன. இவற்றுட் பலவும் சுயசரிதை யாக எண்ண இடம் உண்டு.

9. பரிபாடலில் கைக்கிளையும் பெருந்திணையும்

சங்க இலக்கியங்களில் நடைமுறை வாழ்வியலை ஒட்டி அகப் பொருள் கருத்துக்களை கூறுவன பரிபாடலும் கலித்தொகையும் ஆகும். பரிபாடலில் அகத்திணை மரபுகள் பல வையை, பரங் குன்றம் ஆகிய இயற்கைப் பின்னணியில் அழகுறப் புனையப்பெற் றுள்ளன. கைக்கிளை, பெருந்திணைக் காட்சிகள் பல பரிபாடலில் காணப்படுகின்றன. முதலில் கைக்கிளை பற்றிய குறிப்புக்களை நோக்குவோம்.

வையையில் பெருக்கெடுத்து வரும் வெள்ளத்தில் குளிப்பதற்குப் பல நிலைப்பருவத்தினரும் வருகின்றனர். ஆண்களே யன்றிப் பெண்களும் புனலாடி மகிழ்தல் அக்காலத்துப் பழக்கம். தைந்நீரா டல் என்று புனலாடல் போற்றப் பட்டது. கரையோரம் நிற்பான் ஒருவன், நீராடும் காட்சியைத் தன் நண்பர்க்குக் கூறும் வகையில் சில கற்பனைகளை நல்லந்துவனார் இயல்புநலம் சிறக்கப் பாடி யுள்ளார். ஒரு சிலவற்றை இங்குக் காண்போம்.

''இக்காரிகை தன்னைக்கண்டாரைத் தீண்டிவருத்தும் தெய்வம்;
ஆதலால் இவளைக் காண்மின்,
இவள் கண்கள் காமனின் கருவூலமும் படைக்கருவியுமாகும்;
அவற்றின் தன்மை காண்மின்—......
அம்மங்கையர் கூந்தலில் மொய்க்கும் வண்டினம் காண்மின்;
அவற்றின் இசை கேண்மின்'' (11:122-132).

இங்ஙனம் காமஞ்சாலா இளையோராகிய கன்னிப்பெண்களின் கவினில் ஈடுபட்டு, மனம்சோர்ந்து சொல்லெதிர் பெறாது சொல்லி யின்புறும் கைக்கிளைக் காதலர்களை ஆசிரியர் படைத்துள்ளார். கன்னிமை கனியாத இளம் பெண்களைப் பார்த்துக் கைக்கிளைக் காமம் விளைவதற்கு வையை காரணமாதலை எண்ணி வியந்து போற்றுகிறார். (11:134-146). வையை பற்றிய இப்பாடலில்,

''இன்ன பண்பின் இன்தைந் நீராடல்
மின்னிழை நறுநுதல் மகள்மேம் பட்ட
கன்னிமை கனியாக் கைக்கிளைக் காமம்'' (11:134-6)

என்ற பகுதியில் கைக்கிளைக் காமம் என்ற குறியீடு நோக்கத் தக்கது.

வையையில் நீராடும் மகளிர் கூட்டத்தில் குறிப்பிட்ட அழகி ஒருத்தியின் குவிந்துள்ள கொங்கையினை ஒருவன் விடாமல் பார்த்துக்கொண்டிருக்கும் காட்சியை நல்வழுதியார் சுட்டுகிறார். அத்தகைய ஆண்மகனை நெஞ்சுரம் அற்றவன் என்றும் திட்பம் அற்ற ஒட்டை மனத்தன் என்றும் அடுத்து நிற்போர் பேசுவதையும் குறிப்பிடுகிறார்:

"கோட்டியுள் கொம்பர் குவிமுலை நோக்குவோன்
ஒட்டை மனவன் உரமிலி என்மரும்" (12:50-51)

இங்கு ஆண்பாற் கைக்கிளை சுட்டப்பெறுகிறது. 'ஒட்டைமனவன்' என்பது கவிதைத் தொடராகக் காட்சி தருகிறது.

இனி, பெருந்திணைக் காமத்திற்கும் சில சான்றுகளைக் காண்போம். நாணம் குன்றாத நங்கை ஒருத்தியின் தோளைத் துய்த்துப்பின் பரத்தையிற் பிரிந்த தலைவனுடன் கூடாது ஊடினாள். இப்போது ஊடலை மறந்து வையைப் புனலில் நீராடும் விருப்பத்தால் தலைவனுடன் பிடியின் முதுகில் ஏறி அமர்ந்தாள். இத்தகையாள் நாணம் என்னாயிற்று என்று கூறி வியந்தனர் மக்கள் (12:45-49). நாணத்தின் எல்லையினையும் காமம் கடந்து போதலின், இப்பகுதியில் பெண்பாற் பெருந்திணை பேசப்பட்டது எனலாம்.

நங்கை ஒருத்தி முன்பு தனக்குக் கையுறை வழங்கியும் காதல் மொழி உரைத்தும் அன்பினை வெளிப்படுத்திய நம்பியை மறந்து, வழிப்போகும் அயலான் ஒருவனிடம் நெஞ்சைப்போக்கி நிறம் திரிந்து நின்றாள். அவள் நிலையினை நோக்கியோர், புது வோன்பால் அன்புற்றாலும், நிறை அழிவதற்கு அஞ்சியேனும் அவள் காமத்தைக் களைய வேண்டாமா என்று பேசினர். (12 : 52 - 54). இதனைக் கைக்கிளையாகவும் கருதலாம். ஒருவனைப் புறக்கணித்து அயலான்பால் காமம் கையிகந்து செல்லு தலின் பெருந்திணை என்றும் எண்ணலாம்.

மடந்தை ஒருத்தியின் மார்பில் அணிந்துள்ள முத்தாரத்தைப் பார்ப்பதுபோல் நெருங்கிய நகில்களையே நோக்கிநிற்கிறான் ஒருவன். அவன் அப்படி பார்ப்பதற்குச் சிறிதும் நாணாது அந் நாரிகை நிற்பதைக் கண்டோர் நகையாடினர் (12 : 55—56). ஒரு வகையில் ஐந்திணை அன்பாகக் கருதப்பெறும் எனினும்,

பலரறிய வெளிப்படையாக நடைபெறுதலின் பெருந்திணையின் பாற்படும்.

மிகையான பல ஊடற்காட்சிகளையும் பரிபாடலில் காண் கிறோம். அவை வரம்பிகந்து செல்லினும் முடிவில் அன்பில் முடிவன (12:57-76). எனவே அவற்றை ஒருவகையால் பெருந்திணை என்று கொள்ளினும், அன்பின் பிணைப்பு நோக்கிச் சற்று மிகைப்பட்ட ஐந்திணைக்காகம் என்று கருதவும் இடம் உண்டு.

எனவே, பரிபாடலில் இடம்பெறும், கைக்கிளை, பெருந்திணை அகத்திணை என்று கருதப்பெரினும், ஐந்திணை அன்பினை நோக்கச் சற்றுப் புறத்து இருத்தலின், அகப்புறம் என்று பன்னிரு படல மரபின் வழி நின்று எண்ணுதல் ஏற்புடையது.

எனவே, தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டினையும் அகத்திணையாக எண்ணியிருப்பினும், நுணுகி நோக்கின் அவற்றை அகப்புறமாகவே கொள்ளுதல் வேண்டும் என்பதற்கு, 'கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்' (அகத். 25) என்ற நூற்பாவும் அதன் உரைகளும் ஆதாரமாக அமைகின்றன என்பது தெளிவு. புறநானூற்றிலும், கலித்தொகையிலும் இவ்விரு திணைகட்கும் உரிய பாடல்கள் போதிய அளவு காணப்படுகின்றன, முன்னூலில் பெயர் சுட்டி வருதலும், பின்னூலில் பெயர் சுட்டாது வருதலும் குறித்தற்குரிய ஒரு வேறுபாடாகும். எங்ஙனமாயினும், ஐந்திணைக்குப் புறமாக வைக்கப்பெற்ற கைக்கிளை, பெருந் திணை என்பன இரண்டும் பன்னிருபடலச் சிந்தனைப் பள்ளியில் புறத்திற்கு உரிய திணைகள் பன்னிரண்டில் இறுதியில் வைத்து இலக்கணம் சொல்லப் பெற்றன என்று கருதலாம்.

இனி, பு.வெ.மாலையில் இவ்விரு திணைகளுக்குரிய கிளவிகள் வகுத்து விளக்கப்பெறும் பாங்கினைத் தொகுத்து நோக்குவோம்.

கைக்கிளைப் படலம்

கைக்கிளைபற்றி இலக்கணம் கூறும் பகுதி கைக்கிளைப்படலம் எனப்பட்டது. ஒரு மருங்கு பற்றிய காதல் கைக்கிளை எனப்படும். பெண் நயந்து ஆண் நயவாத நிலையில் இது பெண்பாற் கைக்கிளை என்றும், ஆண் நயந்து பெண் நயவாத நிலையில் ஆண்பாற் கைக்கிளை என்றும் வழங்கும் மரபினைப் பு. வெ. மா. பின்பற்று கிறது. நக்கண்ணையாரின் காதல் பெண்பாற் கைக்கிளை.

மணிமேகலை புறக்கணித்தும் விடாது விழையும் உதயகுமரனின் காதல் ஆண்பாற் கைக்கிளையின் பாற்படும். இருவகையும் சமனிலை பெறாது நிறைவுறாது நிற்றலின் அகம் என்றும் கொள்ளாது. புறம் என்றும் தள்ளாது அகப்புறம் என்று கொண்டனர்.

ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை ஒன்பது துறைகளைக் கொண்டது என்றார் ஐயனாரிதனார். சோலையினிடத்துக் கருந்தடங் கண்ணியைக் காண்டல், அவள் அழகில் மயங்கி அவள் தெய்வமகளோ என்று ஐயுறுதல், நுதல் வியர்த்தல் முதலிய குறிகளால் அவள் மானுடப் பெண்ணே எனத் தெளிதல், என்னுள்ளத் திருந்தும் என்னை அறியாள் எனத் தலைவன் எண்ணுதல் (—உட்கோள்), அவளைப் பெற்றோரை புகழ்தல், நலம் பாராட்டல் நயப்புற்று இரங்குதல், புணராமை காரணமாகத் தோன்றும் இரக்கநிலை, வெளிப்பட இரத்தல் என்பன ஒன்பதும் ஆண்பாற் கைக்கிளைக்கு உரிய துறைகள் (285-293) என்று பு. வெ. மா. தெளிவுறுத்தக் காணலாம்.

பெண்பாற் கூற்றுக் கைக்கிளைக்குப் பத்துத் துறைகள் கூறப் பட்டன. தலைவனைக் கண்டு நங்கை வருந்துதல், நயத்தல், உள்ளத்துத் துயருறுதல், மெலிதல், மெலிவொடு வைகல், மீண்டும் அவனைக் காண்பதற்குத் துணிதல், பகற்பொழுதை முனிந்துரைத் தல், இரவில் பருவரல் மிகுதல், கனவு கண்டு அரற்றுதல், நெஞ் சொடு மெலிதல் என்பன பத்தும் பெண்பாற் கைக்கிளைக்கு உரிய துறைகளாக எண்ணப்பெற்றன (294-305). இவற்றுக்குரிய பாடல் கள் யாவும் மருட்பாவினால் அமைந்தன. இம்மரபு தொல்காப்பிய விதிக்கு உட்பட்டது என்பது முன்னரும் கூறப்பட்டது.

இனி, பெருந்திணைக்குக் கூறப்படும் துறைகளையும் இரு பாற்கும் அடைவு செய்து கூறல் பு.வெ. மாலையிற் காணப்பெறும் நெறியாகும். இத்திறம் குறித்து இளம்பூரணர் சுட்டிய கருத்துக் களை முன்னர்க் குறித்துள்ளோம். இங்கு, பு. வெ. மா. கூறும் கருத்துக்களைத் தொகுத்து நோக்குவோம்.

10. பெருந்திணைப் படலம்

பெருந்திணை பற்றிய துறைகளின் இயல்புரைக்கும் பகுதி பெருந்திணைப் படலம் ஆயிற்று. பெருந்திணை என்பது பெருகிய காமம் அல்லது மிக்க காமம்.

முதலில், பெண்பால் கூற்றுப் பெருந்திணைக்குரிய துறைகளைப் பற்றிப் பார்ப்போம் (306-324). காமம் மிகுதலால் பெண் முதலில் தலைவனைப் பார்த்துத்தீராக் காதலை வெளிப்படுத்துதல் வேட்கை முந்துறுத்தல் என்னும் துறையாகும். முன்னிழந்த வனப்பினைப் பெரிதும் விரும்பிப்பின் நிற்றலைக் கூறுவது பின்னிலை முயறல் எனப்படும், பிரிவிடையாற்றல், வரவு எதிர் பார்த்திருத்தல், வாராமைக்கு அழிதல், தலைவனைக் காணும் வேட்கையுடன் இரவில் இல்லினின்றும் புறப்பட்டு ஏகுதல், இல்லவை சொல்லி ஏந்திழை நகுதல், புலவியுள்புலம்பல், பொழுது கண்டிரங்குதல், பரத்தையை ஏசல், தலைவனைக்கண்டு கண் சிவத்தல், அவன் மார்பிற் பொருந்திக் களித்தல், அவனைக் கோதையால் பிணித்து மனையகம் போதல், புணர்ச்சியிற் குழைதல், ஊடலில் நெகிழ்தல், தலைவனின் உரைகேட்டு நகுத்தல், அவன் அவள் அடியில் பணிந்தபின் ஊடல் தணிதற்கு இரங்குதல், பள்ளிமிசைத்தொடர்தல், செல்கெனவிடுத்தல் என்பன பத்தொன்பதும் பெண்ணிற்குரிய பெருந்திணைத்துறைகள் ஆகும்.

இவற்றுள் பிரிவிடையாற்றல், வரவெதிர்ந்திருத்தல், பொழுது கண்டிரங்கல், காதலிற் களித்தல், பணிந்தபின் இரங்கல் என்பன ஐந்திணை அன்பிற்கும் உரியவை. இத்துறைகளின் பொருண்மை நோக்கின், வெளிப்படையாகவும் விரைவாகவும் பெருக்கெடுக்கும் காதல் நிலைகள் பெருந்திணைக்குரியன என்று எண்ணப்பெற்றன என்று கருதலாம்.

இனி, பதினேழு துறைகள் இருபாற் பெருந்திணையின் பாற்படும் என்பர் (325-42). தலைவன், தலைவி, தோழி, பரத்தை, விறலி ஆகியோர் பேச்சுக்களாக இவை அமைந்துள்ளன.

செலவழுங்கல் (325) மடலூர்தல் (326) ஆண்பாற்கிளவி (332) என்பன தலைவனின் கூற்றுக்கள். இவற்றுள் முன்னது அகத் திணைக்கும் உரியது, ஆண்பாற்கிளவி என்பது மிக்க காமத்து மிடலால் மயங்கிய தலைவனின் பேச்சு.

பருவ மயங்கல் (331), பெண்பாற்கிளவி (333), வெறியாட்டு (334) என்பன தலைவிக்கு உரியவை. தாய்க்குத் தெரியாமல் முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்துதல் தலைவனைப் பெறும் பொருட்டே ஆகும். தாய்க்குத் தெரிந்து நடைபெறும் வெறி யாட்டு ஐந்திணைப் பாற்படும் என்பது கருதலாம்.

தூதிடையாடல்(327), துயரவற்குஉரைத்தல்(328), கண்டுகை சோர்தல் (329), பருவமயங்கல்(330), பாண்வரவுரைத்தல்(335), விறலிகேட்பத் தோழி விளம்புதல் (337), பரத்தை வாயில் பாங்கி கண்டுரைத்தல் என்பன தோழிக்கு உரியவை. தலைவனிடம் தலைவியின் மிகு காமத்தைப் புலப்படுத்தும் பொருட்டுத் தோழி தூதுபோதல் முதலியன பெருந்திணைக்கு உரியவேனும், பருவ மயங்கல், பாண்வரவுரைத்தல் முதலியன இயல்பான ஐந்திணைக் குரிய துறைகளே எனலாம்.

தலைவன் தமக்கு எளியன் என்று பாங்காயினார் கேட்பப் பரத்தை கூறுதல் (336), தலைவனின் மூப்பு பரத்தையர்க்கு மகிழ்ச்சிதரும் என இற்பரத்தை தோழி கேட்ப விறலி விளம்புதல் (338), பரத்தையர் சேரியில் தலைவன் உறைந்தமையினை விறலி கூறுதல் (340) என்பனவும் பெருந்திணைக்கு உரிய துறைகள் ஆகும்.

குற்றிசை, குறுங்கலி என்ற இரு துறைகள் இறுதியில் கூறப் பெற்றன. இவற்றுள், முன்னது, பொற்றார் அகலம் பொருந்திய மகளிருடன் முடிவுபோக வாழாது மறத்தலைக் குறிப்பது (341). பின்னது, உரிமை மகளிரிடம் கொண்ட வேட்கை அழிவதைச் சொல்லுவது (342). இவ்விரண்டும் இயலாமை காரணமாக நிகழ்வதா? அன்றி உலகநாட்டம் நீங்கித் தெய்வநாட்டம் காரண மாக மெய்ப்பொருள் நாட்டத்தினால் நிகழ்வதா? என்பது தனிப் பட்ட நபர்களின் அனுபவங்களைப் பொறுத்தே தீர்மானித்தற்கு உரியது. அன்பின் அகவாழ்விற்கு அப்பாற்படுதலின் இவ்விரண்டும் ஒவ்வாக் காமம் என்பதைவிட இல்லாக்காமம் ஆகிய நிலையில் ஒருவாறு பெருந்திணையின்கீழ் அடங்கும் எனலாம்.

இனி, வீரசோழியத்தில் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டினையும் அகப்புறம் என்றடக்கி ஒருசில துறைகள் தொகுத்துக் கூறப்பெற்றன. அவற்றைச் சுருக்கமாக இங்குக் காண்போம்.

II. வீரசோழியத்தில்

புத்தமித்திரனார் அகப்புறம் என்ற திணைப்பாகுபாட்டின்கண் பன்னிரு பொருளைச் சுட்டியுள்ளார். அவையாவன :

1) முதுபாலை	3) முல்லை
2) பாசறை	4) வள்ளி

5) சுரநடை 9) தாபதம்
6) இல்லவண் முல்லை 10) குற்றிசை
7) காந்தள் 11) கைக்கிளை
8) குறுங்கலி 12) பெருந்திணையாகிய தபுதாரம் என்பன.

உரையாசிரியர் பெருந்தேவனார், இவற்றுள் முதல் பத்தினையும் விளக்கும் வகையில், ''ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்'' எனத் தொடங்கும் ஒரு நீண்ட பாடலை மேற்கோள் தந்துள்ளார். அதில் ஒவ்வொரு துறைக்கும் விளக்கம் கூறப் பெற்றுள்ளது. அவை கீழே சுட்டப்பெறுவன.

1) காந்தள் : கலிமடமா வேறுதல். 'காந்தள் என்பதனை மடலேறுதற்குப் பெயராகக் கூறுவார் உளர் ஆதலின், வெறியாட்டயர்ந்த காந்தள் என்றார்' எனவரும் இளம்பூரணர் உரையும் இங்குக் காணத்தக்கது (புறத். 63 உரை).

2) வள்ளி : காமமிக்கமையால் நிகழும் வெறியாட்டு.

3) சுரநடை : மாதர் வருத்தம். இதனை மாதரால் வரும் வருத்தம் என்று பொருள்கொள்ள வேண்டும். மாதரைப் பிரிந்ததால் தலைவனுக்கு ஏற்பட்ட வருத்தம். பாலை வழிப்பயணம் போகும்போது திடீரென்று தலைவி இறக்க, அவள் பிரிவுக்கு ஆற்றாது அவலித்துப் புலம்புதல் சுரநடை எனப்படும்.

4) முதுபாலை: சுரத்திடை பாலை நிலத்தில் உடன்போக்கின்கண் தலைமகன் மடியத் தலைமகள் கவன்றது கூறும் துறை. இது காஞ்சித்திணைக்கு உரியதாகத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டது.

5) பாசறை முல்லை : போர்வயிற் பிரிந்து சென்ற தலைவன் பாசறைக்கண் தங்கியிருக்கும் வேளையில், தலைவியை எண்ணுதல். மேற்கொண்ட கடமையில் கருத்தூன்றாமல், வீட்டுநினைவில் நாட்டம் செலுத்தலின் பெருந்திணை ஆயிற்றுப் போலும்.

6) இல்லவள் முல்லை : போர்வயிற் சென்ற தலைவனை வீட்டில் இருக்கும் தலைவி எண்ணுதல். குடும்பக் கடமைகளைக் கருதாது, காதற் பெருக்கினால் இங்ஙனம் எண்ணுதல் மட்டுமே பெருந்திணை எனப்படும்.

7) குற்றிசை : கோல்வளையாளைத் தலைமகன் முற்றத் துறந்த துறவு. கண்ணகியைத் துறந்த பேகன் செயல் இதன்பாற்படும்.

8) குறுங்கலி : ''முற்றத் துறந்த தலைமகனை முன்னின்று பொற்றொடி மாதர் பழிதூற்றாம்''.

தன்னைத் துறைந்த தலைவனின் எதிரில் நின்று அவன் பழிச் செயலைப் பலரறியத்தூற்றுதல் குறுங்கலி ஆகும். உண்மையை எடுத்துச் சொல்லும் தலைவியரின் உரிமைப்போராட்டம் பழிச்செயலாக எண்ணப்பெற்றமை ஆண் ஆதிக்கச் சமுதாயத்தின் கொடுமைக்குச் சான்று பகர்கிறது.

9) தாபதம் : ''காதற் தலைமகனை நீங்கிய மேவரு மாதர் நிலை'' தாபதம் எனப்படும். 'நீங்கிய' என்பது இங்குத் துறந்த என்று பொருள்படும். தொல்காப்பியத்தில் காஞ்சித்திணையில் சுட்டப்பெறும் தாபதநிலைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு நுனித்தறியப்படும். அங்கு 'இறந்த' என்ற பொருளில் வரும்.

10) தபுதாரம் :

''மேவருஞ்சீர், நீக்கப்பட்டாளை உவந்த தலைமகன் பார்த்துறுஉம் தன்மை'' தபுதாரம் ஆகும். தொல். சுட்டும் தபுதாரத்திற்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. தொல்காப்பியர் தாரம் இறந்தமையால் துயருறும் தலைவன் நிலையினைக் குறித்தார். இங்கு, ஒரு காரணம் பற்றித் தன்னால் துறக்கப்பட்ட தலைவியைப் பின்னரும் பழக்க வாசனையின் மோதுதலினால் நசையுற்றுப் பார்த்தாவது மகிழும் நிலை தபுதாரம் எனப்பட்டது.

இப்பத்துத் துறைகளும், கூறப்பெற்ற வரிசைமுறையில் வீரசோழியத்திற்கும் அதன் உரைமேற்கோள் நூற்பாவுக்கும்

இடையே வேறுபாடு உண்டு. வீ. சோ. பெருந்திணை ஆகிய தபுதாரம் என்று சுட்டியதால் இரண்டும் ஒன்றெனக் கொள்ளப் படும். எனின், மேற்கோள் நூற்பாவில் இவ்வாறு கூறப்பட வில்லை. 'இப்பத்தும்' 'அகத்தின்புறம்' என்பது வீரசோழியக் காரிகையிலும் உரைமேற்கோள் நூற்பாவிலும் இடம்பெறும் ஒத்த கருத்தாகும். இவற்றுள் சில துறைகள் பொதுவியலுக்கு உரியன வாகப் பு. வெ. மாலையில் புகலப்பெற்றமையினை முன்னர்க் கண்டோம்.

அகப்புறம் என்ற பொதுப் பாகுபாட்டின்கண் கைக்கிளையும் பெருந்திணையும் அடங்கும். கைக்கிளையாவது ஒரு தலைக்காமம் என்றும், பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் என்றும் பெருந்தேவனார் விளக்கினர். எனின், மேற்சுட்டிய பத்துத் துறை களில் கைக்கிளைக்கு உரியவை இவை, பெருந்திணைக்கு உரியவை இவை என்று புத்தமித்திரனாரும் உரைமேற்கோள் நூற்பாவினரும் பிரித்துக் கூறவில்லை என்பது கருதற்பாலது. அவற்றின் பொருள்நிலை நோக்கிப் பாகுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

12. இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும்

வைத்தியநாத நாவலர் தொல்காப்பிய மரபினைப் பின்பற்றிப் புறத்திணை என்பது வெட்சி முதல் பாடாண் வரை ஏழென்று எண்ணியவர். எனினும், பன்னிருபடல மரபினையும் தொன்மரபு டன் இயைத்துச் செல்லும் இயல்பினர். ஆதலின், பு. வெ. மா. விரித்துக் கூறிய கரந்தை, காஞ்சி, நொச்சி, என்பனவற்றை முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை ஆகிய திணைகளுக்குள் அடக்கி இலக்கணம் ஓதிய பாங்கினை முன்னர்க் கண்டோம். எஞ்சிய பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றுக் குரிய இலக்கணத்தையும் ஒழிபு என்ற இறுதி நூற்பாவில், ஓதப் பெற்ற இலக்கணத்தையும் ஒருங்கே சொல்லுதற் பொருட்டு, 'வேந்திடை' எனத்தொடங்கும் இயல் இறுதி நூற்பாவை (619) அமைத்துள்ளார். இதனுள் பொதுவியல், ஒழிபு ஆகிய பு.வெ.மா. நூற்பாக்களில் கூறப்பெற்ற துறைகளை எல்லாம் ஒழிவின்றி எடுத்துக்கூறிய நாவலர், கைக்கிளைப் படலம், பெருந்திணைப் படலம் ஆகிய இரு பகுதிகளில் கூறப்பெற்ற கிளவிகளைத் தெற்றென எடுத்துக் கூறாமை நோக்கத்தக்கது. இவ்விரு திணைகள் பற்றிய இலக்கணத்தைத் தாம் எழுத முற்பட்ட புறத் திணையியலில் புகலுதல் பொருத்தமாகுமா என்ற ஐயத்தினால்

நூற்பாவில் வரிசைப்படி அவ்விரண்டின் கிளவிகளைக் கூறாது விட்டனர். என்றாலும்,

"... ... ...
இன்னன பிறவும் எழுவகைத் திணையுள்
துன்னிய ஒழிபுஎனத் தூக்கினர் கொளலே" (நூ. 619)

என்று இறுதியில் சுட்டிய பகுதி எண்ணுதற்கு உரியது. அவர் வரைந்ததாகக் கூறப்படும் உரையில்,

"இனி, அகத்திணை ஒழிபாய், பொருட்பகுதிகளாகிய அகம் புறம் என்ற இரண்டிற்கும் இறுதியாகக் கூறப்படும் கைக்கிளை, பெருந்திணை என்பன 'இன்னனபிறவும்' என்பதனால் இவ்வொழிபில் கொள்ளப்பட்டுள்ளன."
(ப. 290).

என்று தெளிவுறுத்தப்பெறுதல் காணலாம். இங்ஙனம் எழுதிய பின்னர், பு. வெ. மாலையில் கைக்கிளைப் படலத்தில் சொல்லப் பெற்ற ஆண்பால் கூற்றுக் கைக்கிளைக்கும், பெண்பால் கூற்றுக் கைக்கிளைக்கும் ஓதப்பெற்ற எல்லாத் துறைகளையும் எடுத்தோதி னார். தொடர்ந்து, பெருந்திணைப் படலத்தில் கூறப்பெற்ற பெண்பால் கூற்றுப் பெருந்திணைக்கும் இருபால் பெருந்திணைக் கும் உரிய கூற்றுகளையும் துறைகளையும் விடுபடாது முறையாக எடுத்து மொழிந்துள்ளார்.

எனவே, ஒருவகையினால் பு. வெ. மா. சுட்டிய எஞ்சிய புறத்திணை மரபுகளை இவர் ஒழிபு கூறிய பகுதியில் ஒத்துக் கொண்டவர் என்று மதிக்கலாம்.

நாவலரை அடியொற்றிச் செல்பவர் சாமிகவிராயர் என்பதை முன்னரும் பல இடங்களில் குறித்துள்ளோம். அகப்புறம் ஆகிய கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டிற்குரிய இலக்கணம் கூறும் வகையில் அவரை முழுதுமாகப் பின்பற்றியிருத்தல் இங்குக் கூறத்தக்கது. பொதுவியல் படலத்தில் சொல்லப்பெற்றனவும் பாட்டியல் நூல்களில் பகரப்பெற்றனவுமாகிய செய்திகளை (நூ. 147-151) ஐந்து நூற்பாக்களில் தொகுத்துக் கூறுகிறார். எனின், கைக்கிளை, பெருந்திணை பற்றி விதந்து கூறாது நாவலரைப் போலவே,

"இவைகள் போல் பிறவும் ஒழிபாகும்" (நூ. 151)

என்று இயம்புதல் எண்ணற்பாலது. இத்தொடர் இலக்கண விளக்கத்தில் மேலே சுட்டப்பெற்ற 'இன்ன பிறவும்' என்பதன் மாற்றுவடிவமாக மதித்தற்குரியது.

இவ்வியலிற் கண்டறிந்த முடிபுகளையும் விளக்கங்களையும் இங்குத் தொகுத்து நோக்குதல் தகும்.

ஆய்வின் முடிபுகள்

1) கைக்கிளை, பெருந்திணை என்பன இரண்டையும் அகத் திணையாகத் தொல்காப்பியர் எண்ணியிருப்பினும், அகன் ஐந்திணைக்கு இவை இரண்டும் புறமாக இருத்தல் பற்றி அகப்புறம் என்றும் சுட்டியுள்ளார்.

2) பெருந்திணை என்பதற்குப் பல விளக்கங்கள் கூறப் படினும், உலகில் பெரும்பான்மை மக்களின் ஒழுக்கம் என்று இளம்பூரணர் கூறியுள்ள விளக்கமே உலகியல் நடைமுறைக்கு ஒத்ததாகத் தோன்றுகிறது.

3) கைக்கிளை எங்ஙனம் ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இரண்டாக வகைசெய்யப் பெற்றனவோ அங்ஙனமே பெருந்திணையும் ஆண்பாற் பெருந்திணை, பெண்பாற் பெருந்திணை என்று இரண்டாக வகைப் படுத்தப் பெற்றன.

4) கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டிற்கும் உரிய தலைமக்கள் அடியோர், வினைவலர் (—பல்வேறு தொழில் செய்வோர்), ஏவலர் (பணிமக்கள்) ஆகிய மூவருமே என்பது புலனெறி வழக்காகக் கொள்ளுதல் வேண்டும். நடைமுறையில் மேன்மக்களும் இவ்விரண் டிற்கும் உரியராவர். அங்ஙனமே அன்பின் ஐந்திணைக்கு மேற்சுட்டிய பணிமக்களும் உரியராவர்.

5) இவ்விருதிணைகளும் தலைமக்கள் பெயர் சுட்டப்படா விடின் அகம் என்றும், பெயர் சுட்டப்பெறின் அகத்திணை மருங்கு அல்லது அகப்புறம் என்றும் கருதப்பெற்றன.

6) கைக்கிளைப் பொருண்மைக்கு மருட்பாவினைத் தொல் காப்பியர் ஏற்ற யாப்புவடிவமாகக் கூறியதற்கு ஏற்ப, ஐயனாரிதனார் கைக்கிளைப் படலத்தில் உதாரணமாக வரும் பாடல்களை மருட்பா யாப்பில் புனைந்துள்ளார்.

ஆதலான், மிகுதி நோக்கி இவர் நூலிற்கு வெண்பா மாலை என்ற பெயர் அமைந்தது எனலாம்.

7) புறநானூற்றில் இடம்பெறும் நக்கண்ணையாரின் பாடல்கள் பெண்பாற் கைக்கிளையாகக் கொள்ளற்கு உரியன. எனின், இவை மருட்பா யாப்பில் அமையாது, அகவல் யாப்பில் அமைதலான், தொல்காப்பிய விதியை இவர் தாண்டிச் சென்றுள்ளார் எனக் கருதலாம். இதனாலும், புறநானூற்றிற்கு மிகவும் முற்பட்டது தொல்காப்பியம் என்று எண்ண இடம் உண்டு.

8) புறநானூற்றில் பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியின் நிலைக்கு இரங்கிப் புலவர்கள் பாடியவை பெருந்திணைக்கு உரிய பாடல்கள் ஆகும்.

9) ஐந்திணைக் காதலைப் பாடுதற்கு முற்பட்ட கலித்தொகை அகப்புறத் திணைகட்குரிய பாடல்களும் காணப்படுகின்றன.

10) பரிபாடலில் கைக்கிளை, பெருந்திணைக் காட்சிகள் புனையப் பெற்றுள்ளன.

11) சங்க இலக்கியப் பயிற்சியால் பன்னிரு படலத்தார் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் புறத்திற்குரியனவாக எண்ணி இலக்கணம் கூறினர் எனலாம்.

12) வீரசோழியம் சுட்டும் குறுங்கலி என்னும் துறை ஆண் ஆதிக்கச் சமுதாயத்தின் கொடுமைக்குச் சான்று பகர்கிறது.

13) இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் ஒழிபு கூறிய நூற்பாவில் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றை. 'இன்னபிறவும்', 'இவைகள் போல் பிறவும்' என்ற தொடர்களினால் அடக்கிக் கூறின.

---

12. பொதுவியலும் ஒழிபும்

பொதுவியல்

இலக்கண நூல்களில் 'பொது' என்ற சொல் தனித்ததொரு பொருளில் வழங்குகிறது. யாப்பிலக்கணத்தில் சுட்டப்பெறும் பொதுச்சீர் என்பது நாலசைச்சீரைக் குறிப்பது. ஏனைய சீர்வகைகளைப்போல் பொதுச்சீர் முதன்மை நிலையில் வைத்து எண்ணப்பெறுவதில்லை. பழமொழி நானூற்றில், 'பொதுமக்கள்' என்ற சொல் பயிற்சியைப் பார்க்கிறோம் (5). சிறப்புடைய மாந்தரின் வேறு பிரித்துக் காட்டவே இச்சொல் வழங்கப்பெற்றது. பொது என்ற சொல் சிறப்பில்லாதது என்ற பொருளில் பயிலப் பெற்றது என்பர் யா. வி. உரையாசிரியர் (ப. 66). புறப்பொருள் இலக்கணத்தைப் பன்னிரண்டாக வகுத்துக் கொண்ட ஒரு குறிப்பிட்ட சிந்தனைக் குழுவினர், பொதுவியல் என்ற பெயரில் ஒரு திணையை உருவாக்கி அதற்குரியதாகப் பல துறைகளைத் தொகை வகை செய்துள்ளனர். எத்தலைப்பின் கீழும் அடைவு செய்ய முடியாத துறைகளையும், எல்லாத் திணைகளுக்கும் பொதுவாக உள்ள துறைகளையும் ஒவ்வொரு திணையின் கீழும் சொல்லப்பெறாமல் விடுபட்ட துறைகளையும் பொதுவியல் என்ற ஒரு பொதுமைத் திணைக்கண் கொண்டு வந்து குவித்து இலக்கணம் கூறும் மரபினைப் பன்னிரு படலத்தின் வழிவந்த பு. வெ. மாலையில் காண்கிறோம். பொதுவியலைப் போலவே ஒருசில இலக்கண நூல்களில் எச்சஇயல், ஒழிபியல் என்பது சொல்லப்பெற்றுள்ளது. தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் எச்ச இயலும், யாப்பருங்கலக் காரிகையில் ஒழிவியலும், நன்னூலில் பொதுவியலும் இடம் பெற்றிருத்தல் இங்குச் சுட்டுதற்கு உரியது.

புறத்திணையினை ஏழென்று வரையறை செய்து கொண்ட தொல்காப்பியர் பொதுவியல் என்பதொரு திணையினை நினைத்துக் கூடப்பார்க்கவில்லை. ஆயினும், வெட்சித்திணையின் இரண்டாம் பகுதியாகிய கரந்தைக்கும், வாகை பாடாண் திணைகளுக்கும் அவரால் கூறப்பெற்றுள்ள நூற்பாக்களில் இடம்பெறும் ஒரு சில துறைகள், பன்னிருபடல மரபினால் பொதுவியலாக எண்ணப்பெற்றன என்பது ஒப்பீட்டாய்வினால் உணரப்படும்.

இளம்பூரணர் உரையில்,

''பல்லமர் செய்து படையுள் தப்பிய
நல்லாண் மாக்கள் எல்லாரும் பெறுதலின்
திறப்பட மொழிந்து தெரிய விரித்து
முதற்பட எண்ணிய எழுதிணைக்கும் உரித்தே''.

என்று மேற்கோளாக எடுத்தாண்ட நூற்பா பன்னிருபடலம் பொதுவியல் திணைக்கு உரியதாகக் கருதற்பாலது என்பதை முன்னர்க் கூறியுள்ளோம். தொல்காப்பியர் பொதுவியல் என்ற பெயரில் ஒரு திணையினைக் கூறாது போயினும், இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்'' என்ற நூற்பாவில் கூறப்பெற்றுள்ள துறைகளிற் பல பொது வியலுக்குப் பொருந்துவன என்ற கருத்தினர் என்பதை அனுவாதமாக மீண்டும் இங்குக் கூறுதல் வேண்டும்.

புறநானூற்றில் பல பாடல்கள் பொதுவியல் திணைக்கு உரியனவாகக் குறிக்கப்பெற்றுள்ளன, இலக்கண நூல்களில் பு. வெ. மா., வீ. சோ., இ. வி. சு. நா. என்பன பொதுவியல் திணையினை ஏற்றுக்கொண்டவை. எனவே, பொதுவியலை ஒரு தனித்திணையாக எண்ணும் மரபு பிற்காலத்தில் வலுப்பெற்றமை புலனாகும்.

முதற்கண் தொல்காப்பியத்தில் பொதுவியல் சுட்டப்பெற்ற பாங்கினை உரையாசிரியர் வழி நின்று நோக்குவோம்.

1. தொல்காப்பியமும் பொதுவியலும்

கரந்தைத்திணை பற்றிய தலைப்பில் பொதுவியல் பற்றிய சில செய்திகள் கூறப்பெற்றன. இருப்பினும், அதனைத் தனித் திணையாக எண்ணி ஆராயும் இத்தலைப்பின் கீழும் தொடர்புடைய கருத்துக்களை மீண்டும் எண்ணிப்பார்த்தல் ஏற்புடையது.

வெட்சி முதல் பாடாண் முடியவுள்ள புறத்திணைகளுக் கெல்லாம் பொதுவாக அமையும் துறைகளும், அவற்றிற் சொல்லப்பெறாமல் விடுபட்ட துறைகளும் பற்றிய இலக்கணங் களைக் கூறும் பகுதி பொதுவியல் என்று சுட்டப்பெறும் என்பது உரையாசிரியர்கள், பிற்காலத்தில் புறப்பொருள் இலக்கணிகள் பலரின் கருத்தாகும்.

நச்சினார்க்கினியர், ''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்'' என்ற நூற்பாவின் கீழ் எழுதியுள்ள குறிப்பினை இங்கு அப்படியே காண்போம்.

> ''இது முன் இருபெருவேந்தர்க்கும் போர் செயத் தொடங்கு தற்குரிய பொதுநிலைமை கூறிய அதிகாரத்தானே புறத் திணைக் கெல்லாம் பொதுவாகிய வழுஏழும் உணர்த்துதல் நுதலிற்று. இவை வேத்தியலின் வழிஇத் தன்னுறு தொழி லாய் வருதலின் வழுவாயின. இவை அகத்திற்கும் புறத் திற்கும் உரியவாய் வருவனவும் ஆதலிற் பொதுவியலும் ஆயின.''

இங்ஙனம் எழுதியவர், இந்நூற்பாவிற் சுட்டப்பெறும் துறைகளில் அகம், புறம் என்ற இரு திணைக்கும் பொதுவானவை பற்றியும், புறத்திணை ஏழற்கும் பொதுவாயுள்ளவை பற்றியும் குறித்துள் ளார். இதனாலும் பொதுவியல்திணை எனப் பெயர் பெற்றது என்றார். சான்றாக ஒன்றிரண்டினைக் குறிப்பிடலாம்.

வெறியாட்டயர்ந்த காந்தள் என்னும் துறை சிறப்பறியா மகளிராடுதல் பற்றிவரின் புறம் என்றும் வேலனாடுதல் பற்றிவரின் அகம் என்றும் பிரித்துக் காட்டினார். வேலன்தானே ஆடுதல் சிறுபான்மை புறத்திற்கும் வரும் என்றார் (ப. 143-4).

''ஏழகத்தகரும் யானையும் கோழியும் பூழும் (—காடை), வட்டும், வல்லும் சொல்லும் முதலியவற்றால் தமக்குவரும் புகழைத்தாம் எய்துதற்குத் தத்தம் வேந்தர் அறியாமல் படைத் தலைவர் தம்முள் மாறாய் வென்று ஆடுங்கால், இன்ன அரசனின் படையாளர் வென்றார் என்பதை அறிதற்கு அவரவர் பூச்சூடி ஆடுவர் என்பதும், அக்கூத்தும் வேத்தியல் கூத்தின் வழீஇயின கருங்கூத்து என்பதும், அது தன்னுறு தொழில் என்பதும் உணர்த்தியதாம். இதனை இங்ஙனம் தன்னுறு தொழில் ஆக்காமல் வேந்துறு தொழிலாக்கின் அது தும்பையாகும். புகழ்ந்து கூறியது எனின் பாடாண் திணையாம்'' (ப. 144).

எனவே, வேந்தர் தமக்குரிய பூச்சூடிமலைதல் பொதுவியலின் பாற்படாது, அவர் ஆணை பெறாது அவர்க்குக் கீழ்ப்பட்டோர் அங்ஙனம் அவர்க்குரிய மலர் புனைந்து மலைதல் தன்னுறு தொழிலாப் பொதுவியலுக்குரிய துறையாகக் கருதப்பெறும் என்பது நச்சினார்க்கினியரின் கருத்து. இனி, வேந்தர் தாமே பூச்சூடி மலைதல் தும்பை என்றும், அவ்வீரத்தைப் பாராட்டுதல் பாடாண் என்றும் வேறுவேறு குறிபெறுதலின், இவை யனைத்தையும் ஒரு சேரப் பொதுவியல் என்ற திணைக்கு உரியது என்று எண்ணினர். இவ்வாறு இவர் எண்ணுதற்கு அடிப்படை பு. வெ. மாலையில் போந்தை, வேம்பு, ஆர் என்னும் மாபெருந்தானையர் மலைந்த பூக்கள் பற்றிய துறைகள் பொதுவியலுக்கு உரியனவாகக் கூறப்பெற்றமையே எனலாம் (240, 241, 242). இவை முறையே சேரன், பாண்டியன், சோழன் ஆகிய மூவேந்தரின் அடையாளப் பூக்கள் ஆகும்.

இதே தொல். நூற்பாவில் சுட்டப்பெறும் கழனிலை, உன்ன நிலை என்பனவும் காட்சி முதல் வாழ்த்தல் வரை கூறப்பெற்றவையும் பு. வெ. மாலையில் பொதுவியல் திணைக்கு உரியவாகக் கூறப்பெற்றவையும் பு வெ. மாலையில் பொதுவியல் திணைக்கு உரியவாகக் கூறப்பெற்றன.

''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்'' என்ற நூற்பா பொதுவியல் பற்றியது என்பதை மேலும் வலியுறுத்துகிறார் நச்சி ''இப்பொதுவியலின்பின் வஞ்சி வைத்தார், வஞ்சிக்கண்ணும் பொதுவியல் வருவன உள என்றற்கு'' (ப. 190) என்று எழுதுதல் இங்கு எண்ணுதற்கு உரியது. மேலும், ''இக்கூறப்பட்ட பொதுவியல் இருபத்தொரு துறையினையுடையது'' என்றும் இந் நூற்பாவின் இறுதியிலும் எழுதியுள்ளார் (ப. 158).

பன்னிருபடலம், பு.வெ. மாலை முதலியவற்றைப் புறக்கணிக்கும் நச்சினார்க்கினியர் பொதுவியல் என்ற ஒரு திணையினை உடன்பட்டு இவ்விரு நூல்களின் வெளிச்சத்தில் மேற்சுட்டிய தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் காண முற்பட்டுள்ள உண்மையினை மறுத்தற்கு இல்லை.

இங்ஙனம் இவர் எழுதுவதற்கு அடிப்படை இளம்பூரணர் உரையில் காணப்படுகிறது.

''இவையெல்லாம் கரந்தைக்கு உரித்தாக ஓதப்பட்டன வேனும்... மறத்துறை ஏழற்கும் கொள்ளப்படும்... கற்கோள்நிலை

ஆறும் உண்ண நிலையும் முடியுடை வேந்தர் சூடும் பூவும் கழல் நிலையும் ஏனையவற்றிற்கும் பொது (ப. 86•7).

எனவே, உரையாசிரியர்கள் காலத்தில் பொதுவியலை ஒரு தனித் திணையாக எண்ணும் மரபு நிலைத்து விட்டது என்பது தெளிவு. தொல்காப்பியர் பொதுவியலை ஒரு தனித்திணையாகக் கூறாவிடினும், பன்னிரு படலத்தின் வழிவந்த பு. வெ. மாலையும் அதனையொத்த பிறநூல்களும் அதனைத் தனித்திணையாக வரையறை செய்து இலக்கணம் வகுத்துள்ள புதுமையினை முற்றிலும் தொல்காப்பிய உரையாசிரியர்களினால் தூக்கி எறிந்து விட முடியவில்லை. இந்நிலையில், தொல்காப்பியத்தில் அப்படி ஒரு பொதுத்திணை கூறப்படவில்லை எனின், அது தொல்காப்பியர்க்கு இழுக்கு என்றுகூட இவர்கள் கருதிப் பார்த்திருக்கலாம். மேலும், பொதுவியலுக்குப் பின்னூல்கள் கூறிய துறைகளில் பல, வெட்சிக் கரந்தை கூறும் ''வெறியறி சிறப்பின்'' என்ற தொல். நூற்பாவில் காணப்பெறுவதை அவர்கள் ஒப்புநோக்கில் பார்த்ததே அந்நூற்பா பொதுவியல் பற்றியது என்ற முடிவுக்கு வந்தனர். அவர்கள் கருத்திற்கு ஆதரவாகப் புறநானூற்றுப் பாடல்கள் பல அமைந்து விளங்குகின்றன. ஆதலின், முதற்கண் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள பாடல்களில் பொதுவியலுக்கு உரியவை பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

2. புறநானூறும் பொதுவியலும்

பழந்தமிழ் மக்களின் புறவாழ்வியல் பற்றி அமைந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த முதல் இலக்கியம் புறநானூறு. இந்நூலைத் தொகுத்தவர் காலத்திற்குப் பின் வந்த உரையாசிரியர் அல்லது அவரை ஒத்த ஒருவர்தான் இதன்கண் அடங்கியுள்ள ஒவ்வொரு பாட்டிற்கும் திணையும் துறையும் வகுத்துள்ளனர் என்று தெரிகிறது. இவர் பன்னிருபடல மரபின் வழி வந்தவர். பு.வெ.மாலையினை நன்றாகப் படித்தவர். அதன் கொளுக்களைக் கூட ஆங்காங்கே குறித்துள்ளார்.

புறநானூற்றில் பத்துப்பாடல்கள் திணை பெறவில்லை. (244, 267, 268, 282, 289, 323-25, 355, 361) இதற்குக் காரணம் இவற்றுட் சில முழுமையாகக் கிடைக்காமையும், ஒருசில முற்றிலுமாகக் கிடைக்காமையுமே ஆகும். கிடைத்தனவற்றுள் (390 பாடல்களில்) பொதுவியல் திணைக்கு உரியவை என்று காணப்பெறுவன 72 பாடல்கள். அதாவது, இந்நூலின் சுமார் 19%

பொதுவியலாக எண்ணப்பெற்றமை புலனாகும். இப்பாடல்கள் இத்திணையின் பாற்படும் ஏழு துறைகளுக்குள் அடங்குவனவாக வகை செய்யப் பெற்றுள்ளன. இவற்றைப் பு.வெ.மாலை சுட்டும் பொதுவியல் நெறியுடன் இணைத்துப் பின்வருமாறு அடைவு செய்தல் இயலும்.

புறநானூறு				பு. வெ. மாலை
திணை	துறைகள்	பாடல் எண்	மொத்த எண்	
1) பொது வியல்	முதுபாலை	253-256	4	சிறப்பிற் பொதுவியற்பால நூ. 11. 254
2) ,,	தாபதநிலை	248, 249, 250	3	,, ,, 257
3) ,,	ஆனந்தப் பையுள்	228, 226, 246, 247, 280	5	,, ,, 266
4) ,,	கையறு நிலை	65, 112-120, 217-27, 230-45	37	,, ,, 267, 268
5) ,,	முதுமொழிக் காஞ்சி	18, 27, 28, 29, 74	5	காஞ்சிப் பொதுவியற்பால நூ. 12. 269
6) ,,	பெருங் காஞ்சி	194, 362, 363, 364	4	,, ,, 270
7) ,,	பொருண் மொழிக் காஞ்சி	24, 75, 121, 182, 183, 185-193, 195, 210	14	,, ,, 271

மேற்சுட்டிய பாடல்களுக்குத் தொல்காப்பிய நெறி நின்றும் திணை துறைகள் வகுத்தல் இயலும். இப்பாடல்கள் காஞ்சித் திணைக்கு உரியனவாகக் கொண்டு அதற்குரிய துறைகளுடன் பொருத்திக் காட்டுதல் கூடும்.

புறப்பாடல் துறைகள்	தொல்காப்பியம் சுட்டும் காஞ்சித் துறைகள் (நூ. 77)
1) முதுபாலை	''தனிமகள் புலம்பிய முதுபாலை''
2) தாபத நிலை	''காதலன் இழந்த தாபதநிலை''
3) ஆனந்தப்பையுள்	''தாமே எய்திய தாங்கரும் பையுள்'' ''செல்வோர் செப்பிய மூதானந்தம்''
4) கையறுநிலை	''ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலை''
5) முதுமொழிக் காஞ்சி	''கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை''
6) பெருங்காஞ்சி	''மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை''
7) பொருண்மொழிக் காஞ்சி	இதனை முதுமொழிக்காஞ்சியில் அடக்கலாம்.

எனவே, பழைய இலக்கியமாகிய புறநானூற்றுப் பாடல்களுக்குத் தொல்காப்பிய விதி முறைகளை ஒட்டித் திணை துறை கூறுதல் கூடுதலான பொருத்தம் வாய்ந்ததாகத் தெரிகிறது.

இவ்வுண்மையினை,

> ''தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின், அவர் சூத்திரப்பொருளாகத் துறை கூறவேண்டும் என்றுணர்க'' (ந. ப. 277).

எனவரும் நச்சினார்க்கினியர் உரை தெளிவுறுத்தக் காணலாம்.

இனி, முறையாகப் பொதுவியல் பற்றிப் பு. வெ. மா. சுட்டும் துறைகள் பற்றித் தொகுத்து நோக்குவோம்.

3. பு. வெ. மாலையும் பொதுவியலும்

வெட்சி முதல் பாடாண்வரை ஒன்பது திணைகளுக்கு உரிய இலக்கணம் கூறிப் பத்தாவதாகப் பொதுவியல் திணைக்கு ஐயனாரிதனார் இலக்கணம் கூறினார். பொதுவியலைப் பொதுவியல், சிறப்பிற்பொதுவியல், காஞ்சிப் பொதுவியல்,

முல்லைப் பொதுவியல் என்று நான்கு பகுதியாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் உரிய துறைகள் இவை என்று நான்கு நூற்பாக்களில் எடுத்துரைத்தனர். அவற்றை வரிசையாகப் பார்ப்போம்.

1) பொதுவியல்

போந்தை முதல் இற்கொண்டு புகுதல் வரை எண்ணப்பெற்ற பன்னிரு துறைகளும் பொதுவியற்பாலன வாகும் (நூ. 10). இவற்றுட் பலவும் தொல்காப்பியர் வெட்சிக்கு ஒழிபாய் ஓதிய, ''போந்தை வேம்பே ஆரென வரூஉம்'' என்ற நூற்பாவிற் கூறப் பெற்றவையே ஆகும். இக்காரணத்தினாற் போலும் அந்த நூற்பாவினைப் பொதுவியல் திணைக்கு உரியது என்றார் நச்சி.

மூவேந்தர்க்குரிய அடையாளப் பூக்களாகிய போந்தை (—பனை), வேம்பு, ஆர் (—ஆத்தி) ஆகியவற்றைப் புகழும் துறைகள் முதலில் சொல்லப்பெற்றன (240—2). பின்னர், உன்னநிலை உரைக்கப்பட்டது (243). இதனை, 'ஓடா உடல் வேந்தடுக்கிய உன்னநிலை' என்றார் தொல்காப்பியர் (நூ. 63). உன்னம் ஒருவகை மரம். அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும் என்பர் இளம். வேந்தனுக்கு வெற்றி கொடுக்கும் படியும் பகைவேந்தனுக்குத் தோல்வி உண்டாக என்றும் உன்னமரத்தினை மறவர் வேண்டிக் கொள்ளுதலும், நிமித்தம் பார்த்தலும் பற்றி நச்சி. குறித்துள்ளார். எனின், ஐயனாரிதனார் உன்னநிலை பற்றிக் கூறும் விளக்கம் சற்று வேறுபட்டது. பகைவேந்தரெல்லாம் பட்டதால் உன்னமரமே நீயும் கிளை எல்லாம் தவிர்ப்பாயாக என்று கூறுவதாக இத்துறை அமைவது என்றார். இம்மரத்தின் செழுமைக்கும் மன்னனின் வெற்றிக்கும் ஒரு தொடர்பினை இவரும் கற்பித்தார்.

ஏழகத்தகரினை ஊர்ந்து போரிடினும் வேந்தன் தாழ்வில் ஊக்கமும் தகைமையும் கொண்டவன் என்று பாராட்டுதல் ஏழகநிலை எனப்படும் (244). ஆண்டில் இளையனாயினும் இவ்வேந்தன் பூமிகாவல் மேற்கொண்டான் என்று அவன் ஆற்றலை உரைப்பதும் இத்துறையின் ஒருவகையாகும் (245). இது தொல்காப்பியத்தில் சுட்டப்பெறவில்லை.

''வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை'' என்ற தொல்காப்பியத் துறை (நூ. 63), பு. வெ. மாலையில் கழனிலை என்று காணப்

படுகிறது. வீரனின் காவிற் கட்டிய கழலைப் புகழ்தல் இத்துறையின் பொருண்மை ஆகும் (246). இத்துறைக்கு, இளம்பூரணரும் பு. வெ. மா. வெண்பாவையே மேற்கோள் காட்டினார்.

போரில் வீரமரணம் அடைந்தவர்க்காக நடுகல் எடுத்து வழிபாடு செய்யும் வீர வணக்கம் பற்றிய காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல் என்ற தொல் சுட்டிய ஆறு துறைகள் (நூ. 63), கற்காண்டல், கற்கோள்நிலை, கல்நீர்ப்படுத்தல், கல்நடுதல், கல்முறை பழிச்சல், இற்கொண்டு புகுதல் என்ற வகையில் பு. வெ. மாலையில் கூறப்பெற்றன (247—253). வீரயுகம் விளங்கிய காலத்தில் தமிழ்மக்கள் போற்றிய இவ்வீர வணக்கம் இலக்கணத்திலும் இடம் பெற்றது. கண்ணகிக்கு இமயமலையில் கல் எடுத்து, கங்கையில் நீராட்டி, வஞ்சியில் கோயில் அமைத்துச் செங்குட்டுவனை உள்ளிட்ட வேந்தர் வாழ்த்துதலும், கண்ணகி அனைவர்க்கும் நல்வரம் தருதலும் தனித்தனி காதைக்குரிய நிகழ்ச்சியாகச் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றமையினை முன்னரும் சுட்டியுள்ளோம். வரந்தருதல் என்ற துறை சிலம்பில் புதிதாகக் காணப்பெறும்.

இங்ஙனம் பொதுவியற் பாலனவாகப் பன்னிரு துறைகளைக் குறித்த பு. வெ. மா. சிறப்பிற்பொதுவியற் பாலுக்குரியனவாகப் பதினொரு துறைகளைக் கூறுதல் காணத்தக்கது.

பால் என்ற சொல் பகல் என்பதன் நீட்சி; பகுதி என்ற பொருளைத் தருவது. முப்பால் என்புழி, முப்பகுதி என்று பொருள் தரும். அறம், பொருள், இன்பம் என்ற முப்பகுதியின் தொகுதிக்கு முப்பால் என்பது காரணப் பெயர். இங்கு, பொதுவியற்பால என்பது பொதுவியற் பகுதிக்குரியவை என்று பொருள் தருவது. பிறவும் அன்ன.

சிறப்பியற்பொதுவியல் (நூ. 11)

முதுபாலை என்பது நடந்துசெல்லும் கடத்திடைக் கணவனை இழந்த மடந்தை புலம்பும் தனிமை நிலையினைக்குறிப்பது (254). இதனைத்தொல்காப்பியர் காஞ்சித்திணையின் கூறாகச் சுட்டினார் (நூ. 77). அவ்வழியில், தலைவியை இழந்த தலைவன் நிலையினை உரைப்பது சுரநடை என்னும் துறை (255). தலைவியின் இறப்பிற்குப்பின் வருத்தத்துடன் தனித்துறையும் கணவனின் நிலையினைக் கூறுவது தபுதார நிலை (256). இதனைத் தொல்காப்பியர் 'காதலி இழந்த தபுதாரநிலை' என்றார். தபுதல்-கெடுதல்

தாரம்-மனைவி, கணவனை இழந்த தலைவியின் கைம்மை நிலையினைக் கூறுதல் தாபதநிலை எனப்படும் (257). இதனை, 'காதலன் இழந்த தாபதநிலை' என்பர் தொல். தாபதம் என்பது தவத்தைக் குறித்தது. அதாவது கைம்மை நோன்பியற்றல் ஆகும். மைந்தனைப் பெற்றெடுத்தபின் தாய் இறந்துபடுதலைக் குறிப்பது தலைப்பெயல் நிலை என்னும் துறையாகும் (258). 'தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலை' என்று இதனைச் சுட்டினர் தொல். பாலகன் மாய்ந்திடச் சுற்றத்தார் புலம்புதல் பூசல் மயக்கு எனப் படும் (259). அரசன் மாய்ந்திட அவனியோர் அரற்றுதலும் அதன் பாற்படும் (260). இதனைத் தொல். சுட்டவில்லை. இறந்த கணவனொடு தலைவி மாலைக்காலத்தில் எரிபுகுதல் மாலைநிலை என்னும் துறைக்குரியது (261). கணவனொடு தலைவி இறந்த நிலை நோக்கிச் செல்வோர் வியந்து கூறுதல் மூதானந்தம் (262). தான் எண்ணிய செயலை முடிக்கும் முன்பே தலைவன் இறந்துபடுதலும் இதன் பாற்படும் (263). இது ஒரு புதிய துறையாகும். தலைவன் வரவினை அறிதற் பொருட்டு எதிர்பார்த்து நிற்கும் நற்சொல் முதலிய நிமித்தங்கள் வேறுபடுதலைக் கண்டு நடுங்குதல் ஆனந்தம் எனப்படும் (264). பெரும்போர் கருதிச் சென்ற தலைவனை எண்ணி இரங்கினும் இத்துறையின் பாற்படும் (265). இவ்விரண்டும் புதிய துறைகள். தலைவன் போர்க்களத்தில் மரணமுறத் தலைவி மெலிந்து வருந்துதல் ஆனந்தப் பையுள் ஆகும் (266). மன்னன் மாய்ந்திட மற்றையோர் புலம்பினும், அவன்புகழ் போற்றினும் கையறுநிலை எனப்படும் (267, 268). இதனைக் ''கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ, ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலை'' என்பர் தொல்.

இப்பகுதியிற் கூறப்பெற்ற துறைகளில் ஒரு சில தவிர (255, 260, 263, 268) எஞ்சிய யாவும் தொல்காப்பியத்தில் காஞ்சித் திணைக்கு உரியனவாகக் கூறப்பெற்றவை என்பதை முன்னர்க் குறித்துள்ளோம். இங்குச் சுட்டப்பெறுதல் பெரும்பாலும் வீர மரணத்தால் விளையும் நிலையாமை ஆகும். வெட்சி முதலான எவ்வகைப் போரிலும் இவை நிகழ்தலினால் புறத்திணைகள் யாவற்றுக்கும் பொது எனக் கருதினர் எனலாம்.

காஞ்சிப்பொதுவியல் (நூ. 12)

இப்பகுதிக்கு உரியவை ஆறு துறைகள்.

பலர்புகழ்புலவர் தெரிந்துணத்தும் உலகியல் பொருள் முடிபாகிய அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருளை

உணர்த்துவது முதுமொழிக் காஞ்சி என்னும் துறை (269). உலகத்து நிலையாமையினை உரைப்பது பெருங்காஞ்சி (270). முனிவர்கள் விரும்பித் தெளிந்த பொருளைக் கூறுவது பொருண் மொழிக் காஞ்சி (271). புலன்வென்ற புன்மையில் காட்சியோர் விரும்பும் வீட்டின் இயல்பினை உரைப்பது புலவர் ஏத்தும் புத்தேள் நாடு (272) என்னும் துறையாகும். அன்மைச் சொல்லினால் வீடு பேற்றினை இத்துறை விளக்குதல் எண்ணத்தக்கது. எதிர்வரும் பொருளைத் தக்கபடி அறிவுறுத்தி நிலையாமையினை முறைப்படச் சொல்லுதல் முதுகாஞ்சி (273). அனைவருடைய நிலையாமை யினையும் அறிவிக்கும் நெய்தல் பறை ஒலிக்கும் இடு(சுடு)காட்டை வாழ்த்துதல் காடு வாழ்த்து எனப்படும் (274). இதனைத் தொல் காப்பியர் ''பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து'' என்று இறுதி யில் எண்ணினார்.

இங்குச் சுட்டப்பெற்ற ஆறு துறைகளில் பல தொல். சுட்டிய காஞ்சித் திணைக்குரியவை என்பதை முன்னர் மொழிந்துள்ளோம். ஏனையவையும் நிலையாமைப் பொருள் பற்றி நிகழ்பவை. புறத் திணை ஒழுகலாறுகட்கும் பொதுவாக இவை வருதலின் பொது வியலின் பாற்பட்டன.

இதுகாறும் ஒப்பு நோக்கியவற்றால், தொன்னூல் சுட்டிய வெட்சி(-கரந்தை)காஞ்சித்திணைகளுக்கு உரியவையாக எண்ணப் பெற்ற துறைகள் பல புறத்திணைகள் பலவற்றுக்கும் பொதுவாதல் பற்றிப் பொதுவியல் என்னும் திணைக்கு உரியனவாகக் கொள்ளப் பெற்றன என்பது புலனாகும்.

இனி, எஞ்சிய பொதுவியல் துறைகள் பற்றிப் பார்ப்போம்.

முல்லைப்பொதுவியல்

இப்பகுதிக்கு உரியவை எட்டுத்துறைகள். முல்லை என்பது இல்லிருத்தலைக் குறிக்கும். மடந்தையுடன் கூடிய மகிழ்ச்சியை மணாளன் கூறுதல் முல்லை என்னும் துறை (275). பாசறை யினின்றும் தலைவன் திரும்பி வருமுன் கருங்கடல் முகந்து கார் வரவினைக் கண்டு தலைவி ஆற்றாது கூறுதல் கார்முல்லை எனப் படும் (276). இஃது அகத்திணைக்கும் உரியது. போர்புரியச் சென்ற தலைவன் பகைவர் திறைகொடுப்பப் பெற்றுத் தேரில் மீண்டு வருதலைச் சிறப்பித்தல் தேர்முல்லை (277). போர்வயின் தலைவன் பிரிய, நாணே காவலாகத் தலைவி வாழ்த்தி இல்லறத்தைச் சிறப்புறச் செய்தலைக் கூறுவது இல்லாண்

முல்லை (279). ஊக்கத்துடன் உழைத்து இல்லறம் பேணும் ஆள்வினை மிக்க தலைவனுக்கு உழவுக் காளையினை உவமை கூறுதல் பகட்டுமுல்லை (280). ஆயிழையினை மணந்தவன் அதற்கு ஏதுவாகிய நல்வினைத் தெய்வத்தை வாழ்த்துதல் பால்முல்லை (281). பால் என்பது ஊழ். ''பால்வரை தெய்வம்'' என்பது தொல்காப்பியம். நன்மை அறியும் கொழுநனின் நல்லியல்புகளை நங்கை நவில்வது கற்பு முல்லை (282). தலைவன் பிரிய நிறைகாக்கும் தலைவியின் நிலை உரைப்பதும் அதன்பாற்படும் (283). கொழுநனின் பெருவளம் ஏத்துதலும் அத்துறையாகும் (284).

இங்குச் சுட்டப்பெற்ற துறைகள் யாவும் அன்பின் ஐந்திணைத் தலைமக்கட்கு உரியவை. சிறப்பாக முல்லைத்திணைக்குரியவை. இவற்றை வெளிப்படையாக எடுத்துக்கூறும் நிலையில் புறம் என்று எண்ணியிருத்தல் வேண்டும். சாமுண்டி தேவநாயகர், ''பெயரோடு அடுத்துக் கூறியவழிப் புறப்புறமாம்'' என்று சுட்டுதல் காணத்தக்கது.

இத்துறையில் முதலிற் சுட்டப்பட்டது தவிர எஞ்சியவை தலைவிக்குச் சிறப்பாக உரியவை. இல்லிருந்து ஒழுகும் இலட்சியத் தலைவியின் அன்பறம் பேசும் இத்துறைகள் தொல்காப்பியப் புறத் திணையியலில் இடம் பெறவில்லை. பு. வெ. மாலைக்கு மூல நூலாகிய பன்னிரு படத்தில் வழங்கியவையாதல் வேண்டும்.

இனி, பின்னர் எழுந்த புறத்திணை நூல்களில் பொதுவியல் திணை பற்றிக் காணப்படும் கருத்துக்களை நோக்குவோம்.

4. பின்னூல்களில் பொதுவியல்

1) வீரசோழியம்

பொருட் பகுதியை அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்று நான்காக எண்ணிய இலக்கண மரபினை ஏற்றுக்கொண்ட புத்த மித்திரனார்,

''வண்புகட்சி,
பற்றிய பாடாண் பொதுவியல் ஆதியும் பார்த்தறியே'' (86)

''பொதுவியல் பாடாண் புறப்புறம்'' (96).

என்று பொதுவியல் திணையினைச் சுட்டியுள்ளார். போருடன் நேரடித் தொடர்புகொள்ளாத பொதுவியல், பாடாண் என்பன இரண்டும் மறத்திணைகளாகிய புறத்திற்கும் புறமாதல் பற்றிப் புறப்புறம் என்று எண்ணினார். என்றாலும், பொதுவியல் திணைக்கு உரிய துறைகளைக் குறித்துக் காரிகை செய்யவில்லை. அல்லது செய்த நூற்பா கிடைத்திலது என்று கருதுதல் வேண்டும். எனின், உரையாசிரியராகிய பெருந்தேவனார்,

''ஐந்திணைக்குப் புறனும் ஆனந்தமும் அறநிலைத்திணையும் ஆவது பொதுவியற் படலம் எனக்கொள்க'' (ப. 118).

என்று இயம்புதல் நோக்கத்தக்கது. ஆனந்தம் என்பது நிலையாமைப் பொருண்மையினையும், அறநிலை என்பது உறுதிப்பொருள் உரைத்தலையும் கருத்திற்கொண்டு கூறப் பெற்றமை உய்த்துணரத் தக்கது. ஐந்திணைப்புறம் என்பது அன்பிற்குரிய இல்லறச் செயல்களைக் குறித்துக் கூறப்பெற்றது எனலாம்.

எனவே, ஐயனாரிதனார் கூறிய பொதுவியற் படலச் செய்தி களைக் கருத்தில் கொண்டு பெருந்தேவனார் மேற்சுட்டிய பகுதியைக் குறித்துள்ளார் என்று தோன்றுகிறது.

பொதுவியலை எச்சப்படலம் என்றும் வீ. சோ. உரைமேற் கோள் நூற்பா சுட்டியுள்ளது. (ப. 117).

இனி, இலக்கண விளக்கத்திற் காணப்பெறும் பொதுவியல் திணை பற்றி நோக்குவோம்.

2) இலக்கண விளக்கம்

வைத்தியநாதநாவலர் பொதுவியல் என்று சுட்டாது ஒழிபு என்று உரைத்தனர். முற்கூறிய திணைகளில் கூறாமல் விடுபட்டன வாகிய ஒழிபும், கூறிய திணைகளுக்குப் பொருந்திவரும் பொதுவும் என்ற இரு பகுதிகளையும் புறப்பொருள் ஒழிபு என்று இயம்பினார் (நூ. 618).

ஒழிபுதுறைகள் அறுபத்திரண்டு என்று தொகை கொடுத்தார். மலைந்தபூ, உன்னநிலை தொடங்கிக் கற்பு முல்லையின் மற்றொரு பக்கம் வரை எண்ணப்பெற்ற 43 துறைகள் பு. வெ. மாலையின் பொதுவியல் படலத்தினின்றும் பெயர்த்தெடுத்துக் கூறப்பெற்றவையாகும். பு. வெ. மா. ஒரு துறைக்கு மேலும் சில

வகைகள் கூறின், அவற்றை அத்துறையின் பக்கம், மற்றொரு பக்கம் என்று எண்ணும் மரபு இலக்கண விளக்கத்தில் இடம் பெற்றமை முன்னரும் மொழியப்பெற்றது. கல்நடுதல் என்பது கல்நாட்டல் என்றும் ஆனந்தம் என்பது விதுப்பானந்தம் என்றும் இ. வி. கொண்டது. இத்தகைய சிறு மாற்றம் தவிர, பொருள் அளவில் மாறுபாடில்லை. பு. வெ. மா. பொதுவியலை நான்கு பகுதியாகப் பிரித்தமையினை இ. வி. பின்பற்றவில்லை.

பு. வெ. மா. 18 ஆம் நூற்பாவில் ஒழிபு துறைகளைக் கூறுதல் காணலாம். இந்த நூற்பா ஐயனாரிதனார் பாடியதா என்பது ஆராய்ச்சிக்கு உரியது. இதில் சுட்டப்பெறும் 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப்பழித்தல்' முதல் பிடிவென்றி முடிய ஓதப் பெற்ற துறைகளையும் வைத்தியநாதநாவலர் ஒழிபு துறைகளாக (44—62) எடுத்துக் கூறினார். இந்த நூற்பாவில் (619), 'இன்னனபிறவும்' என்ற தொடரினால் அகப்புறம் ஆகிய கைக்கிளைப்படலம், பெருந்திணைப்படலம் ஆகிய அகப்புறத் துறைகளையும் ஐயனாரிதனார் கூறியபடியே ஒழிபு என்ற தலைப்பில் ஏற்றுக்கொண்டார்.

எனவே, தொல்காப்பிய நெறியை மாற்றக்கூடாது என்ற பழமைப்பிடிப்பு ஒருபுறமும், பன்னிருபடலம், பு. வெ. மா. முதலியன மரபுநிலை மாறாத்திரிபுடன் கூறுவனவற்றையும் ஒருவாறு ஏற்கவேண்டும் என்ற புதுமை முயற்சி ஒருபுறமும் இயக்க, வைத்தியநாத நாவலர் புறத்திணை இலக்கணத்தைப் பழமை புதுமை ஆகிய இரண்டிற்கும் ஒரு பாலமாக அமைத் துள்ளார் என்று தெரிகிறது. சிவஞானமுனிவரும் புதுக்கருத்தினை உடன்பட்டவர் என்பதில் ஐயம் இல்லை.

இனி, சுவாமிநாதத்தில் பொதுவியல் இடம்பெறும் பாங்கினைச் சற்று உற்று நோக்குவோம்.

3) சுவாமிநாதம்

சாமிகவிராயர் வைத்தியநாத நாவலரைப் பின்பற்றிப் பொது வியல் என்னாது, ஒழிபு என்றே கொள்கிறார்,

அ) ''இவ்வேழின், வரும்பொதுச்சொல் லாதனவும்
ஒழிபெனஉன் னுகவே''. (146)

ஆ) ''தொண்ணூ ற்றாறு, இவைகள் போல்பிறவும்
ஒழிபாகும் (151).

இவர் 'மலைந்தபூ' சுட்டவில்லை. உன்னநிலை முதலாக, 'ஈவார்துதித்து ஈயார் பழித்தல்' வரை 36 துறைகளை எண்ணினார். இவை ஒரோ வழி நிரல் மாறினும் இலக்கண விளக்கத்தைப் பெரிதும் பின்பற்றிச் செல்வனவாகும்.

எனின், 37 ஆவது முதல் 96 வரை கூறப்பெறுவன பலவும் பாட்டியல்களில் சொல்லப்பெறும் பிரபந்தங்களின் உறுப்புக்களாக உள்ளன. இவற்றுள் உந்தி (37) என்பது உந்திபறத்தலைக் குறிக்கும். இதுவே ஒரு பிரபந்தமாக உருக்கொண்டுள்ளது. கடைதிறப்பு (38) பரணிக்கு உரியது. இடைமை, வலைமை, குறம், தவம், சித்து (39-44) என்பன கலம்பக உறுப்புக்கள். உறுப்புக்களின் இயல்பு சொல்லல் என்பது (43) பாதாதிகேசம், கேசாதிபாதம், அங்கமாலை ஆகிய மூவகைப் பிரபந்தத்தையும் குறிக்கும் ஒரு பொதுக்குறியீடு. மல்லன் (45) என்பது மற்போரில் வெற்றிபெறுவோரின் சிறப்புரைத்தல். தகர், விடை, பூழ், யானை, பரி, கோழி, பூவை, சிவல், கிளி, கவி, சூது, பாடல் ஆடற் சிறப்பு (46 - 61) என்பன யாவும் பு. வெ. மாலையின் ஒழிபுப் பகுதியிலும், இ. விளக்கத்தின் ஒழிபிலும் கூறப்பெற் றவை. விடை என்பது இனம் பற்றிச் சாமிகவிராயரால் கூடுதலாக எண்ணப்பட்டது. இது காளையினைக் குறிக்கும். இதனால், காளை வென்றியைச் சுட்டினார்.

உலா என்பதையும் ஒரு துறையாகக் சுட்டினார். இது இந்நூலின் உரையில் சுட்டப்படாது விடுபட்டது.

இருசுடர்த்தோற்றம் (திங்களின் தோற்றமும் ஞாயிற்றின் தோற்றமும்), தூது தொழிற் சிறப்பு, காலம், முடிகவித்தல், அமைச்சியல், பூக்கொய்தல், நீராடுதல், பொழிலாடுதல், முதலி யன காப்பியத்திற்குரிய உறுப்புக்கள் (62-71).

சுண்ணம் இடித்தல், தோணோக்கம் ஆடுதல்,குயில்கூவித்தல், தெள்ளேணம் கொட்டுதல் (72-75) என்பன திருவாசகத்தில் காணப்பெறும் பதிகப் பெயர்கள். இவை மகளிர் விளையாட்டுக் கள் (குயில் கூவித்தல் தவிர). வரகனத்தின்திறம் (76) ஊர்தியின் சிறப்பை உரைப்பது. அரச அங்கங்களில் ஊர்தியும் ஒன்றாக எண்ணப்பெற்றது.

காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், அம்மானை, கழங்கு, ஊசல் என்பன (77-89) பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்திற்கு உரிய

துறைகள். சோபானம், கட்டியம், கொம்மை (—கும்மி), தத்தாங்கி (—கோணங்கி போன்றது), கப்பல், மதங்கு, ஏசல் (90–96) என்பன சிறு பிரபந்தவகைகளைக் குறிப்பன. இவற்றுள் பின்னிரண்டும் பிள்ளைத்தமிழ்க்கு ஓதப்பெற்றவை சிலவும் கலம்பகத்திலும் இடம்பெறுவன.

பொதுவியலாகிய ஒழிபியலில் இப்படி பிரபந்தத்துறைகளைப் புகுத்திச் சாமிகவிராயர் ஒரு புதுமை செய்துள்ளார். பாட்டியலில் இடம்பெறுவனவற்றை எல்லாம் இங்குக் கொண்டுவந்து சேர்த்து விட்டார். இவரும் நாவலரைப் பின்பற்றிக் கைக்கிளை, பெருந்திணை ஆகிய அகப்புறங்களை ஒழிபாகவே கொண்டனர். இதற்கு, ''இவைகள்போல் பிறவும் ஒழிபாகும்'' (நூ 151) என்ற உரைப்பகுதி சான்றாகும்.

ஆ ஒழிபு

ஐயனாரிதனார் பன்னிருபடலத்தைப் பின்பற்றியவர். புறப்பொருள் பற்றிய பன்னிரு திணைகளுக்கு விரிவாக இலக்கணம் கூறியவர். வெட்சிப் படலம் முதல் பெருந்திணைப் படலம் முடியக் கூறப்பெற்ற பன்னிரு திணைகளில் ஒன்றாகிய பொதுவியல் பற்றி ஒரு படலம் அமைத்தனர். அதற்குப் பிறகு ஒழிபு கூற வேண்டிய தேவை அவர்க்கு எப்படி ஏற்பட்டது என்று புரியவில்லை. புறப்பொருள் வெண்பாமாலை பொருள்நிலையில் முழுமையாக முற்றுப் பெற்ற பின்னர், 'ஒழிபு' என்ற தலைப்பில் ஒரு நூற்பா (18) காணப்படுகிறது.

''பாடாண் பகுதியுள் தொல்காப் பியமுதல்
கோடா மரபிற் குணனொடு நிலைஇக்
கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
விடுத்தல் அறியா விறல்புரி வாகையுள்
வாணிக வென்றியும் மல்ல வென்றியும்
நீணெறி உழவன் நிலன்உழு வென்றியும்
இகல்புரி ஏறொடு கோழியும் எதிர்வன்
தகருடன் யானை தணப்பில்வெம் பூழொடு
சிவல்கிளி பூவை செழும்பரி தேர்யாழ்
இவர்தரு சூதிடை ஆடல் பாடல்
பிடிஎன் கின்ற பெரும்பெயர் வென்றியொ
டுடையன பிறவும் உளப்படத் தொகைஇ
மெய்யி னார்தமிழ் வெண்பா மாலையுள்
ஐய னாரிதன் அமர்ந்துரைத் தனவே.''

உண்மையில் இந்த நூற்பா பாடாண் திணைக்கும் வாகைத் திணைக்கும் மட்டுமே ஒழிபாகக் கொள்ளவேண்டுமே தவிர, நூல் முழுமைக்கும் ஒழிபாகக் கொள்ளுதற்கு இல்லை. 'ஒழிபு' என்ற தலைப்பிற்குப் பதிலாக, ''பாடாண் பாட்டிலும் வாகையிலுமுள்ள புறத்தியல்'' என்ற பாடமும் இருப்பதாக டாக்டர் உ. வே. சா. அவர்கள் குறித்துள்ளார். இந்த நூற்பாவில் சுட்டப்பெற்றனவற்றுள் ஒருசிலவே தொல் காப்பிய மூல நூற்பாவில் வந்தன. எஞ்சியவற்றினுள் பல உரை களில் குறிக்கப்பெற்றவை. இவ்வுரைக் குறிப்புத் துறைகள் யாவும் ஐயனாரிதனார் காலத்துக்குப்பின் எழுதப் பெற்றவையாதல் வேண்டும். இந்நிலையில், இந்த ஒழிபு நூற்பாவின் செய்திகளைக் கூறுவதற்குப் பொருத்தமான இடம் பொதுவியல் படலமாகும். அது எழுதப்பட்ட காலத்தில் இந்த நூற்பாவில் கூறப்பட்ட உரைக் குறிப்புக்கள் ஐயனாரிதனார்க்குக் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே, பொதுவியலின் வேறாய் ஒரு ஒழிபியல் கூறுவது இலக்கணக் கட்டுக்கோட்புக்கு ஏற்றது அன்று. நுணுகி நோக்கின், இதனைப் பின்வந்தோர் எழுதி நூலின் பிற்சேர்க்கையாக இணைத் தனர் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

பு.வெ.மாலையில் பன்னிருபடலம் கூறி முடித்த பின்னர்,ஒழிபு கூறும் பகுதி பதின்மூன்றாவது படலம் போல் காட்சி தருதலின், இதனை ஐயனாரிதனார் பாடியிருப்பாரா என்ற ஐயம் எழுகிறது. இந்த ஒழிபு நூற்பாவில் பாடாண் திணைக்கு உரிய கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல் ஆகிய ஒரு துறைதான் உருமாற்றம் இன்றித் தொல்காப்பியத்திலிருந்து எடுத்தாளப்பெற்றது. வாகைத் திணைக்கு உரியனவாக 18 துறைகள் வந்தன. இவை அனைத்தை யும் விளக்கும் வெண்பாக்கள் வரிசையாகக் கொடுக்கப் பெற்றன. இவற்றுள் பாடல், ஆடல், சூது ஆகிய வென்றிகளுக்கு இந்த ஒழிபு பகுதியில் கொடுக்கப்பெற்ற வெண்பாக்களையே இளம்பூரணர் தம் உரைப் பகுதியில் மேற்கோள் காட்டியுள்ளார். இப்பாடல்கள் பெருந்திணைக்கு உரியவை என்ற தொல்காப்பியக் கழகப்பதிப்பில் பிழைபடப் பதிப்பிக்கப் பெற்றன. எவ்வாறாயினும், இவை இளம் பூரணர் வாழ்ந்த காலத்தில் (கி.பி 11 நூற்) பு. வெ. மாலையில் வழங்கின வாதல் வேண்டும் என்பதில் ஐயம் இல்லை. இவர் தகர், பூழ் ஆகிய வென்றிகளைக் குறிப்பினும், பு. வெ. மாலை யிலிருந்து உதாரண வெண்பாக்களைத் தரவில்லை. ''வந்தவழிக் காண்க'' என்று எழுதியிருப்பதால், அவர் காலத்தில் இவ்விரு வென்றிகளைச் சுட்டும் வெண்பாக்கள் (349, 351) பு.வெ. மாலை யில் இடம் பெறவில்லை என்று தோன்றுகிறது. அல்லது அவை

இளம்பூரணர் பார்வையில் படவில்லை என்று கருத வேண்டியுள்ளது. இவர் சுட்டியுள்ள சொல்வென்றியினைப் பு. வெ. மா. ஒழிபு நூற்பா சுட்டாமை குறித்துச் சிந்தித்தல் வேண்டும்.

சிறப்புப் பாயிரத்தில் ஐயனாரிதனார் பன்னிருபடலத்தைப் பழிப்பின்றுணர்ந்தவர் என்ற செய்தி கூறப்பெற்றதால், இவர் பன்னிரு படலத்தை முதல் நூலாகக் கொண்டு வழி நூல் செய்தவர் என்பதே யாவர்க்கும் துணிபு. ஆயின், ஒழிபு நூற்பாவில், ',பாடாண்பகுதியுள் தொல்காப்பியம் முதல், கோடா மரபிற் குணனொடு நிலைஇ'' என்று தொல்காப்பியத்தை முதல் நூல் போல் வைத்துப் பேசப்பட்டுள்ளது. இதுகாறும் பு. வெ. மாலை பற்றி வழங்கிவரும் மரபிற்கு (—சம்பிரதாயத்திற்கு) இந்த ஒழிபுச் செய்தி ஒவ்வாது காணப்படுதலின், இதனை ஐயனாரிதனார் செய்திருத்தற்கு இடம் இல்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது.

ஏனைய படலங்களில் ஒவ்வொரு துறைக்கும் கொளு கூறப் படும். ஆனால் ஒழிபு சுட்டும் ஒரு துறைக்குக் கூட கொளு கூறப் படவில்லை. பொதுவியல் புகன்றலின், ஒழிபியல் வேறு உரைக்க வேண்டிய தேவை ஐயனாரிதனார்க்கு ஏற்படுதற்குரிய ஏது யாது என்பது புரியவில்லை. பாடாண் திணையில் விடுபட்ட ஒரு துறையினை அப்படலத்தின்கண் அடக்கியும், வாகைத்திணையில் விடு பட்டவற்றை அப்படலத்தின்கண் அடக்கியும் ஓதி முடித்தலே இலக்கண முறைமைக்கு ஏற்றது. அல்லது. விடுபட்டனவெல்லாம் கூறுதற்கு உகந்தஇடம் ஆகிய பொதுவியற் படலத்தில் கூறுதல் வேண்டும். எனவே, ஐயனாரிதனார் காலத்தை ஒட்டி வாழ்ந்த அறிஞர் ஒருவர் இட்டு நிரப்பியதாக இந்த ஒழிபு நூற்பாவை (18) எண்ணுதல் வேண்டும்.

இந்த ஒழிபு நூற்பாவின் உரையும், துறை விளக்க வெண்பாவின் உரையும் சாமுண்டி தேவநாயகரால் எழுதப்பெற்றனவா என்பதும் ஆராய்ச்சிக்கு உரியது. இந்த உரையாசிரியர் காலத்திற்கு முன்பே இந்த நூற்பா மூலநூலில் சேர்க்கப்பெற்றிருப்பின், இதனையும் நூலாசிரியரே செய்தனர் என்று எண்ணிக்கொண்டு இவரே உரை செய்திருத்தலும் கூடும். அல்லது, இவர் உரைப் போக்கினை அனுசரித்துப் பின் வந்தவர் ஒருவர் கூட எழுதியிருக்கலாம். இறுதியில் சுட்டப்பெற்ற பிடிவென்றிக்குரிய வெண்பாவின் உரையில்,

> ''இனிப்பெயர்த்தாள் என்ற பாடம் ஓதிப்பிடியை நடத்தினாள் என்பாரும் உளர்''

என்று சுட்டப்பெறுவதால், இந்த உரையாசிரியர்கட்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பும், ஆசிரியர் காலத்திற்குப் பின்பும் ஒழிபு நூற்பாவும் உதாரண வெண்பாக்களும் முன்னர் வந்துள்ள நூற்பாக்களையும் வெண்பாக்களையும் பார்த்து அவற்றின் போக்கிலேயே எழுதப்பெற்றனவாதல் வேண்டும்.

ஒழிபு முடிந்தபின்னரும் கூட இந்நூலில் ஒரு நூற்பா பிற்சேர்க்கையாகக் காணப்படுகிறது.

''வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குடை உழிஞை நொச்சி தும்பையென்
றித்திறம் ஏழும் புறம்என மொழிப
வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புறம் ஆகும்''.

இந்நூற்பாவில் பத்துத்திணைகளே கூறப்பெற்றமையானும் எஞ்சிய கைக்கிளை பெருந்திணை விடுபட்டமையானும், பன்னிரு திணை பாடிய ஐயனாரிதனார் இதனைச் செய்திருக்க இயலாது. இதற்கு உரை பின்வந்தவரால்கூட எழுதப்படவில்லை என்பதும் கருதற்பாலது. மேலும், இதே நூற்பா சிறுவேறுபாட்டுடன் இரண்டாகப் பிரிக்கப்பெற்று வீ. சோ. உரையில் ஆளப்பெறுதல் அறியத்தக்கது (ப. 122). இவை இரண்டும் மேலும் சில பாட பேதங்களுடன் யா.வி. உரையிலும் முன்னரே ஆளப்பெற்றிருத்தல் நோக்கத்தக்கது (571). ஆதலின், மிகப்பழைய புறப் பொருள் இலக்கண நூல் ஒன்றில் வழங்கிவந்த நூற்பா காலப்போக்கில் பு. வெ. மா. யா. வி. வீ. சோ. ஆகியவற்றில் பயிலப் பெற்றன என்று எண்ணுதல் ஏற்புடையது.

இலக்கண விளக்கத்திலும் 'ஒழிபு' கூறப்பெற்றது என்பதை முன்னர்க்கண்டோம். பு. வெ. மாலையின் இறுதில் ஒட்டப்பட்ட 'ஒழிபு' பற்றிய நூற்பா அவர் காலத்தில் மூல நூலின் முடிபுப் பகுதியாகவே எண்ணப்பெற்றதாதல் வேண்டும். எனவே, 'ஒழிபு' நூற்பா சுட்டிய 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்' முதல் 'பிடிவென்றி' முடிய நின்ற 19 துறைகளையும் அப்படியே தாம் கூறப்புகுந்த ஒழிபு நூற்பாவில் (619) எடுத்துக்கூறியிருத்தல் காணத்தக்கது. வைத்தியநாத நாவலர்,

''சாற்றாது ஒழிந்தவும் சாற்றிய திணைவயின்
ஏற்றன பொதுவும் எனஇரு திறனும்
ஓதிய புறப்பொருள் ஒழிபுஎனப் படுமே'' (618)

என்று ஒழிபுக்குக் கூறிய இலக்கணம் பொதுவியலுக்குப் பொருந்தியதாகத் திகழ்கிறது. இதனை அடுத்துவரும் நூற்பாவில் பு. வெ. மா. பொதுப்படலத்தில் சுட்டிய துறைகளே முதல் 43 துறைகளாக ஓதப்பெற்றன என்பதும், உதாரண வெண்பாக்கள் இரண்டு அல்லது மூன்று பெற்ற துறைகள், அத்துறையின் பக்கம், மற்றொருபக்கம் என்று எண்ணப்பெற்றன என்பதும் சுட்டுதற்கு உரியன. 44 முதல் 62 வரை உள்ள 19 துறைகள் பு. வெ. மா. ஒழிபு நூற்பா நுவன்றவையாகும்.

இனி, சுவாமிநாதத்தில் பொதுவியல் பற்றிய நூற்பா 149 இல், ''ஈவார் துதித்து ஈயார் பழித்தல்'' என்ற துறையும் தகர்வென்றி முதல் ஆடற்சிறப்பு வரை வந்தனவும் (46-61) ஒழிபு நூற்பாவினின்றும் பெயர்த்துக் கூறப் பெற்றவை ஆகும். மேல் வருவன யாவும் பாட்டியல் செய்திகள் என்பதை முன்பே கூறியிருக்கிறோம்.

எங்ஙனம் பார்க்கினும், பொதுவியல்திணை கூறிய நூல் முடிந்த பிறகும் ஒழிபு கூறுதல் சரியில்லை என்பதும், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்பன இரண்டும் பொதுவியலின் கண்ணே பொதுவியல் ஒழிபியல் ஆகிய இரண்டையும் அடக்கிக் கூறியுள்ளன என்பதும் அறியத்தக்கவை ஆகும். ஆதலின், பு.வெ. மாலையில் ஒழிபு என்ற பகுதியில் இடம் பெற்ற நூற்பாவும், அதனைச் சார்ந்து வரும் மற்றொரு நூற்பாவும் ஐயனாரிதனார் காலத்திற்குப் பின்னர் வந்தோரால் இணைக்கப்பெற்றவை என்பது தெளிவு.

ஆய்வின் முடிபுகள்

இவ்வியலிற் கூறப்பெற்ற கருத்துக்களின் சாரத்தைப் பின் வருமாறு தொகுத்துரைக்கலாம்.

1) போருடன் நேரடித் தொடர்பு கொள்ளாத பொதுவியல், பாடாண் என்பன இரண்டும் மறத்திணைகள் ஆகிய புறத்திற்கும் புறமாதல் பற்றிப் புறப்புறம் என்று எண்ணப்பெற்றன.

2) இளம்பூரணர் உரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்ற 'பல்லமர் செய்து' என்ற நூற்பா பன்னிருபடத்தில் பொதுவியல் திணைக்குரியது.

3) வெட்சிப்புறநடையாகத் தொல்காப்பியர் ஓதிய 'வெறியறி சிறப்பின்' என்ற நூற்பா பொதுவியல் திணைக்குரியது என்பது உரையாசிரியர்கள் கருத்து.

4) புறநானூற்றில் 72 பாடல்கள் பொதுவியல் திணைக்கு உரியவை என்று குறிக்கப்பெற்றன. இவற்றுக்கு முது பாலை முதலிய துறைகள் வகுக்கப்பெற்றன. நுணுகி நோக்கின், தொல்காப்பியர் சுட்டிய காஞ்சித்திணைக் குரியனவாக இத்துறைகள் காணப்படுகின்றன.

5) பு. வெ. மா. சுட்டிய ஏழகநிலை, மூதானந்தம் (263) ஆனந்தம் (264), முல்லை, கார்முல்லை, தேர்முல்லை, இல்லாண் முல்லை, பகட்டுமுல்லை, பால் முல்லை, தொல்காப்பியர் சுட்டாத புதிய துறைகள்.

6) ஐயனாரிதனார் கூறிய பொதுவியற் படலக் கருத்துக் களைப் பின்பற்றிப் பெருந்தேவனார் உரைவிளக்கம் செய்தனர்.

7) முற்கூறிய திணைகளில் கூறாமல் விடுபட்டனவாகிய ஒழிபினையும், கூறிய திணைகள் பலவற்றுக்கும் பொருந்திவரும் பொதுவான துறைகளையும் இலக்கண விளக்கத்தார் 'புறப்பொருள் ஒழிபு' என்று கொண்டனர்.

8) பு. வெ. மாலையில் இறுதியில் காணப்பெறும் ' ஒழிபு ' என்ற நூற்பாவில் கூறப்பெற்ற துறைகளையும் இ. வி. ஒழிபு என்ற பகுதியில் தொகுத்துக் கூறியது.

9) சுவாமிநாதத்தில் உந்தி, கடைதிறப்பு, இடைமை, வலைமை, குறம், தவம், சித்து முதலிய பல்வேறு பிரபந்தவகைகளும் உறுப்புக்களும் ஒழிபியலில் இணைத் துக் கூறி ஒரு புதுமை செய்துள்ளார் சாமிகவிராயர்.

10) பன்னிருபடலம் பகரவந்த பு. வெ. மாலையில் பதின் மூன்றாவது படலம்போல் ஒட்டப்பெற்றுள்ள ஒழிபு நூற்பா ஐயனாரிதனார் காலத்திற்குப் பின்னும் உரையாசிரியர் காலத்திற்கும் முன்னும் ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

11) ஒழிபு கூறிய பின்னரும் கூடுதலாகப் பு. வெ. மாலையின் இறுதியில் இணைக்கப்பெற்ற 'வெட்சி கரந்தை' என வரும் நூற்பா பின்வந்தோரால் யாக்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

முடிவுரை

''புறத்திணை வாழ்வியல்'' என்னும் தலைப்பில் அமைந்த இந்நூலின் ஒவ்வொரு இயலும் எடுத்துக்கொண்ட பொருளைத் தீர்க்கமாகச் சிந்தித்துள்ளது. முதல் இயலில் தொல்காப்பியருக்கு முற்பட்ட புறத்திணை மரபுகள் இனங்கண்டு உணர்த்தப்பெற்றன. அகத்திணை ஏழிற்கும் புறத்திணை ஏழும் இயைபுபெறும் பாங்கினை முதன்முதல் குறித்தவர் தொல்காப்பியர் என்ற உண்மை தெளியப் பெற்றது. தொல்காப்பியத்திலுள்ள புறத்திணை இயலும், பன்னிருபடலமும் வேறு வேறு சிந்தனைக்குழுவைச் சேர்ந்தவை என்பது உறுதி செய்யப்பெற்றது. வெட்சித்திணைக்குத் தொல்காப்பியர் கூறிய இலக்கணமும், பன்னிருபடலத்தில் முதற் பகுதியாகிய வெட்சிப்படலத்தில் கூறப்பெற்ற இலக்கணமும் மிகப் பெரிதும் வேறுபடுதலின் இவ்விரண்டையும் ஒருவர் எழுதியிருத்தல் இயலாது என்ற இளம்பூரணர் கருத்து ஆராய்ச்சி அறிஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

தொல்காப்பியருக்குப் பின்னர், பன்னிருபடலம் தோன்றி யிருத்தல் வேண்டும். இதன் காலம் கி. பி. 300-600 ஆகலாம். உரையாசிரியர்கள் தொல்காப்பியக் கருத்துக்களையே போற்றி யிருப்பினும், பன்னிருபடலத்தின் தாக்கம் அவர்களை அறியாம லேயே அவர்கள் எழுதிய உரைகளில் காணப்பெறுகிறது.

கைக்கிளை, பெருந்திணை என்பன இரண்டையும் அகப்புற மாகக் கருதும் மரபு தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றி யிருத்தல் வேண்டும்.

பன்னிருபடலத்தின் வழிவந்த புறப்பொருள் வெண்பாமாலை ஒரு சில இடங்களில் தொல்காப்பியத் தொடர்களை ஆட்சி செய்துள்ளது. இவை பன்னிரு படல ஆசிரியர்களாலும் பயிலப்

பெற்றிருத்தல் கூடும். வீரசோழியம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் முதலிய நூல்கள் மாணவர்களுக்குப் பாடம்சொல்லும் பாங்கில் புறப்பொருள் இலக்கணத்தைத் தொகுத்தும் வகுத்தும் கூறியுள்ளன.

பண்டைய போர் முறைகள் புறத்திணை நூல்களினால் புலனாகின்றன. ஒரு சில கருத்துக்களைக் கல்வெட்டுச் சான்றுகளும், இலக்கிய வழக்குகளும் உறுதிப்படுத்துகின்றன.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மனிதன் தன் ஆளுமையால் வெற்றி பெறுவதைக் குறிக்கோளாகக் கொள்ளுதல்வேண்டும். அனைவராலும் புகழ்பெறுதல் வேண்டும். இந்நோக்கத்தில் வாகைத்திணையும் பாடாண் திணையும் தோன்றியுள்ளன.

கைக்கிளையும், பெருந்திணையும் அகப்புறமாகக் கருதப் பெறினும் அவற்றைப் புறத்திணைகளின் வரிசையில் வைத்து எண்ணுவது பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. எனினும், இருமருங்கும் ஒத்த இலட்சியக்காதலாகிய அன்பின் ஐந்திணையை நோக்க அவை இரண்டும் அகப்புறமாக எண்ணப்பட்டன.

பொதுவியல் கூறிய பின்னர் ஐயனாரிதனார் ஒழிபு நூற்பாவும் வெட்சி கரந்தை என்ற கடைசி நூற்பாவும் செய்திருக்கமாட்டார் என்றே தோன்றுகிறது.

இலக்கண மரபாக அறியப்பெறும் தமிழர்தம் புறத்திணை வாழ்வியல் நடைமுறை வாழ்வியலுடன் இணைந்து செல்வது. எனினும் புலநெறி வழக்காகக் கற்பனைச் சுவையும் கலந்து குறிக்கோள் நெறியினைக் கற்பிப்பதாக அமைதலும் கருதற்பாலது.

மேற்கோள் நூல்கள் அகரநிரல்

1)	அகநானூறு	கழக வெளியீடு, சென்னை-1, 1964
2)	அமிதசாகரர்	யாப்பருங்கலம் (விருத்தியுரை யுடன்) கழகப் பதிப்பு, சென்னை-1. 1976
2)	இராகவையங்கார், மு.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.
4)	இராகவையங்கார், ரா.	தமிழ்மொழி வரலாறு, அண்ணா மலைப் பல்கலைக்கழக வெளியீடு அண்ணாமலைநகர்.
5)	இராசமாணிக்கனார்.மா.	பல்லவர் வரலாறு. கழக வெளியீடு, சென்னை-1.
6)	இளங்கோவடிகள்,	சிலப்பதிகாரம். உ.வே.சா. பதிப்பு, சென்னை 1950
7)	இளம்பூரணர்	தொல்காப்பியம், பொருளதிகார உரை, கழகப்பதிப்பு, சென்னை.
8)	இறையனார் களவியல்	கழகப்பதிப்பு, சென்னை
9)	ஐயனாரிதனார்	புறப்பொருள் வெண்பாமாலை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1963

10) கந்தசாமி, சோ. ந.
1. இலக்கியச்சோலையிலே, கற்பகம் வெளியீடு, அண்ணாமலை நகர், 1966
2. தொல்காப்பியத்தெளிவு, அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர், 1977
3. திருக்குறள் கூறும் உறுதிப் பொருள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1978

11) கலித்தொகை — கழக வெளியீடு, சென்னை-1 1955

12) களவியல் காரிகை — கழகப் பதிப்பு, சென்னை.

13) குறுந்தொகை — உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1955

14) கொங்குவேளிர் — பெருங்கதை, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1968

15) சங்க இலக்கியம் தொகுதி - 1 & 2 — பாரி நிலையம், சென்னை-1, 1967

16) சதாசிவப்பண்டாரத்தார் தி. வை. — பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர்

17) சாத்தனார் — மணிமேகலை, உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1949

18) சாமி கவிராயர் — சுவாமிநாதம், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர். 1975

19) சிவஞானமுனிவர் — தொல்காப்பியப் பாயிர விருத்தி

20) சுந்தரம்பிள்ளை — மனோன்மணியம், கழகப்பதிப்பு, சென்னை.

21)	சோமசுந்தரபாரதியார்	தொல்காப்பியம், புறத்திணை இயல் உரை, மதுரை.
22)	தண்டபாணிசுவாமிகள்	அறுவகை இலக்கணம், பேரூர் ஆதீன வெளியீடு, 1978
23)	திருக்குருகைப்பெருமாள் கவிராயர்	மாறன் அலங்காரம், மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு, 1913
24)	திவாகரநிகண்டு	கழகப்பதிப்பு, சென்னை
25)	நச்சினார்க்கினியர்	தொல்காப்பியம்,பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, கழகப்பதிப்பு, சென்னை, 1980
26)	நற்றிணை	கழக வெளியீடு, சென்னை-1, 1976
27)	பதிற்றுப்பாட்டு	உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1931
28)	பதிற்றுப்பத்து	உ. வே. சா. நூல்நிலைய வெளியீடு, சென்னை-41, 1980
29)	பதினெண்கீழ்க்கணக்கு	கழகப்பதிப்பு, சென்னை-1,1955
30)	பரிபாடல்	உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1956
31)	பன்னிருபாட்டியல்	கழகப்பதிப்பு, சென்னை
32)	பிங்கலநிகண்டு	கழகப்பதிப்பு, சென்னை
33)	புத்தமித்திரனார்	கழக வெளியீடு, சென்னை-1, 1970
34)	புறநானூறு	உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1950
35)	பேராசிரியர்	தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, கழகப்பதிப்பு, சென்னை 1975

36)	மறைமலையடிகள்	மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், கழகப் பதிப்பு, சென்னை.
37)	முத்துவீரஉபாத்தியாயர்	முத்துவீரியம், கழகப் பதிப்பு. சென்னை-1 1972
38)	வீரமாமுனிவர்	தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20 1978
39)	வெள்ளைவாரணர், க.	தொல்காப்பியம், புறத்திணை யியல், உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழக வெளியீடு, மதுரை, 1983
40)	வைத்தியநாதநாவலர்	இலக்கண விளக்கம், பொருளதி காரம், புறத்திணையியல், தஞ்சை சரசுவதிமஹால் வெளியீடு, 1972.

1.	Inscriptions of the Pallavas	Edited by T. V. Mahalingam
2.	Royston Pike	Ethics of the Great Religions.